# எமது பங்கினை நிறைவேற்றல்...

எங்கள் வார்த்தைகளுக்கு உண்மையாக
உங்கள் இதயங்களுக்கு அன்பாக

## தேசிய சேமிப்பு வங்கி

ஆண்டறிக்கை 2020



# எமது பங்கினை நிறைவேற்றல்...

## எங்கள் வார்த்தைகளுக்கு உண்மையாக... உங்கள் இதயங்களுக்கு அன்பாக...

உலகளாவிய கொவிட்-19 பெரும் தொற்று நிலைமை காரணமாக, மிக அண்மைய காலங்களில் எப்போதும் இருந்திராத வகையில் கடந்த ஆண்டின் போது நிறுவனம் மற்றும் அதனுடைய தொழில் நிலைதரம் ஆகியன கடுமையாக பாதிப்படைந்து இருந்தன.

தேசிய சேமிப்பு வங்கி எமது வாடிக்கையாளர்களுக்கு முழுமையான ஆதரவினை வழங்குவதற்காக முன்னகர்வுகளை மேற்கொண்டு இருந்தது. வங்கிச் சேவையை வாடிக்கையாளர்களது வீட்டு வாசலிற்கே சென்று வழங்குவதற்கான ஏனைய செயன்முறைகளை நடைமுறைப்படுத்தி இருந்ததுடன், நாட்டின் முடக்க நிலை உயர்வாக காணப்பட்ட போதிலும் கூட வாடிக்கையாளர்கள் வங்கி மற்றும் அதன் சேவைகளுக்கான அணுகையினைக் கொண்டு இருப்பதனை வங்கி உறுதி செய்தது. இத்தகைய முன்னகர்வுகளை தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்கள் சவால்களை எதிர்கொண்டு நடைமுறைப்படுத்திய விதம் அசாதாரண சூழ்நிலையிலும் போற்றுதலுக்கும் பாராட்டுக்கும் உரியதாக அமைந்திருந்தது.

90 சதவீதத்திற்கும் அதிகமான வாடிக்கையாளர் கடன்கள் கடன் தயவு காலத்தினை பெற்றிருந்தமை வாடிக்கையாளர்களுக்கான மற்றொரு முக்கிய விடயமாக அமைந்திருந்தது. எமது வைப்புத் தளங்கள் மற்றும் கடன் சேர்க்கை ஆகியவற்றிலான முக்கிய வளர்ச்சியின் மூலமாக வங்கியின் பலத்தின் மீது வாடிக்கையாளர் கொண்டிருந்த நம்பகத்தன்மை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த கொவிட் யுகத்தின் போதும், வாடிக்கையாளர்களுடனான தொடர்பு மற்றும் வங்கியின் உற்பத்தி மற்றும் சேவை விநியோகத்திலான தாக்கங்களை முடிந்த வரையில் குறைத்துக் கொள்ளும் வகையில் வங்கி தனது எண்ணியலாக்க வங்கி தளத்தின் மூலமாக நகர்வுகளை மேற்கொண்டிருந்தது.

2022ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கி தனது 50ஆவது ஆண்டு தொழிற்பாட்டினை பூர்த்தி செய்கிறது. உருவாகும் புதிய வாடிக்கையாளர்கள் மற்றும் எதிர்காலத்துக்கான பொருளாதாரம் ஆகியவற்றுடன் இணைவாக எமது வணிகத்தை விருத்தியடைய மேற்கொள்ளும் வகையில் நாம் சிறப்பாக நிலைப்படுத்தப்பட்டுள்ளதாக நாம் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்.

எமது வார்த்தைகளுக்கு உண்மையான வகையிலும், வாடிக்கையாளர்களது இதயங்களுக்கு அன்பான வகையிலும் நிலைத்திருந்து நாம் எமது பங்கினை தொடர்ந்தும் நிறைவேற்றுவோம்.

NSB

# உள்ளடக்கங்கள்


## 04

### கண்ணோட்டம்

முக்கிய தரவுகள் – 04

தலைவரின் செய்தி – 06

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு – 08

தொழிற்பாட்டு சூழல் – 11

தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு – 19

நிதியியல் மூலதன மீளாய்வு – 24

## 39

### ஆளுகை

பணிப்பாளர் சபை – 40

கூட்டாண்மை முகாமை – 45

நிறைவேற்று முகாமை – 46

பிரதம முகாமையாளர்கள் – 48

கூட்டாண்மை ஆளுகை – 49

சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை – 78

சபை மனிதவள மற்றும் ஊதியக் குழுவின் அறிக்கை – 80

சபை நியமனக் குழுவின் அறிக்கை – 82

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் அறிக்கை – 84

சபை கடன் குழுவின் அறிக்கை – 86

சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழுவின் அறிக்கை – 88

சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுவின் அறிக்கை – 90

இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம் – 92


### எமது தூரநோக்கு

சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளுக்கான மிகவும் நம்பகமான மற்றும் அதிகம் தேடப்படும் தெரிவாக இருத்தல்.

### எமது இலட்சிய நோக்கு

எமது அனைத்து அக்கறையுள்ள தரப்பினர்களதும் எதிர்பார்ப்புகளை திருப்தி செய்வதுடன், சேமிப்பு மற்றும் முதலீட்டுத் தேவைகளை உச்சப்படுத்தும் வகையில் எமது வாடிக்கையாளர்களுக்கு மொத்த நிதிசார் தீர்வுகளை வழங்குதல்.

# உள்ளடக்கங்கள்

## 115

### நிதியியல் அறிக்கைகள்


நிதி நாட்காட்டி – 116

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை – 117

நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று – 123

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று – 125

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம் – 127

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று – 128

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 130

நிதியியல் கூற்றுக்களின் உள்ளடக்கம் – 133

வருமானக் கூற்று – 134

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று – 135

நிதி நிலைமைக் கூற்று – 136

பங்குரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று – 138

காசுப் பாய்ச்சல்கள் கூற்று – 142

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – 144


## 283

### பிற்சேர்க்கைத் தகவல்


ஐ.அ. டொலர்களிலான வருமானக் கூற்று – 284

ஐ.அ. டொலர்களிலான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று – 285

ஐ.அ. டொலர்களிலான நிதி நிலைமைக் கூற்று – 286

2016 இன் 1ஆம் இலக்க வங்கித் தொழில் சட்ட பணிப்புரைகளின் III ஆம் அட்டவணைக்கு அமைய பாசல் III வெளிப்படுத்தல்கள் – 287

உள்நாட்டில் – முறையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கி மதிப்பீட்டுச் செயன்முறை – 2020 – 301

இலங்கை மத்திய வங்கியினால் வேண்டப்பட்ட ஏனைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் – 303

புள்ளிவிபரக் குறிகாட்டிகள் 2011-2020 – 310

தொடர்புடைய வங்கிகள் – 312

பரிமாற்றுக் கம்பனிகள் – 313

Eurogiro உறுப்பினர்கள் – 315

கூட்டாண்மை தகவல்கள் – 316


### எமது பெறுமதிகள்

எமது நாளாந்த வணிகத்தை நடத்திச் செல்வதில் நாம் நம்பிக்கை, பரஸ்பர மரியாதை மற்றும் நேர்மையுடன் கூடிய வகையில் முறையான துலங்கலை வழங்குவதுடன் ஆக்கபூர்வமாக செயற்படுவோம்.

# முக்கிய தரவுகள்

## நிதிசார் முக்கிய தரவுகள்

அட்டவணை 01

| | வங்கி | | | தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | **2020** | 2019 | மாற்ற % | **2020** | 2019 | மாற்ற % |
| **ஆண்டுக்கான பெறுபேறுகள் (ரூபா மில்லியன்)** | | | | | | |
| மொத்த வருமானம் | **127,547** | 121,929 | 4.61 | **130,039** | 125,810 | 3.36 |
| நிதிசார் பெ.சே.வரி மற்றும் வரிக்கு முன்பான இலாபம் | **19,431** | 15,659 | 24.09 | **20,798** | 18,487 | 12.50 |
| வரிக்கு முன்பான இலாபம் (PBT) | **15,645** | 10,462 | 49.54 | **16,791** | 13,092 | 28.26 |
| வருமானவரி செலவினங்கள் | **5,537** | 4,080 | 35.69 | **5,970** | 4,379 | 36.34 |
| வரிக்கு பின்னரான இலாபம் (PAT) | **10,108** | 6,381 | 58.40 | **10,821** | 8,713 | 24.20 |
| **ஆண்டு முடிவிலான நிலைமை (ரூபா மில்லியன்)** | | | | | | |
| பங்குதாரர்களது நிதி (மொத்த உரிமையாண்மை) | **51,897** | 45,925 | 13.00 | **57,449** | 49,382 | 16.34 |
| வாடிக்கையாளர் சென்மதி/வாடிக்கையாளர் வைப்பு | **1,237,124** | 1,016,574 | 21.70 | **1,237,669** | 1,015,635 | 21.86 |
| நிதிச் சொத்துகள் காலத் தேய்விட்ட கிரயத்தில் - கடன் மற்றும் இயந்திர சாதனங்கள் (மொத்த) | **798,916** | 647,777 | 23.33 | **816,029** | 662,272 | 23.22 |
| மொத்த கடன்கள் மற்றும் வருமதிகள் | **525,787** | 458,662 | 14.63 | **528,405** | 462,440 | 14.26 |
| மொத்த சொத்துக்கள் | **1,363,808** | 1,157,967 | 17.78 | **1,383,221** | 1,175,575 | 17.66 |
| **சாதாரண பங்கு ஒன்றுக்கான தகவல்கள் (ரூபா)** | | | | | | |
| உழைப்புக்கள் (அடிப்படை) | **10.75** | 6.79 | 58.40 | **11.51** | 9.27 | 24.20 |
| உழைப்புகள் (ஐதாக்கப்பட்ட) | **10.75** | 6.79 | 58.40 | **11.51** | 9.27 | 24.20 |
| நிகர சொத்துக்களின் பெறுமதி | **55.21** | 48.86 | 13.00 | **61.12** | 52.53 | 16.34 |
| **விகிதங்கள் (%)** | | | | | | |
| நிகர வட்டி எல்லை (NIM) | **2.77** | 2.63 | 5.32 | **2.83** | 2.65 | 6.80 |
| சராசரி பங்குதாரர் நிதிக்கான திரும்பல் (ROE) | **20.67** | 14.25 | 45.07 | **20.26** | 18.52 | 9.36 |
| சராசரி சொத்துக்களுக்கான திரும்பல் (ROA) | **1.24** | 0.95 | 30.15 | **1.31** | 1.18 | 11.62 |
| ஆண்டு ரீதியான உழைப்புக்களிலான வளர்ச்சி | **58.40** | 41.80 | 39.72 | **24.20** | 93.61 | (74.15) |
| **ஒழுங்குமுறைசார் திரவத் தன்மை விகிதம் (%)** | | | | | | |
| சட்ட நியதிப்படியான திரவ சொத்துக்கள் – குறைந்தபட்ச தேவைப்பாடு 20% | **69.10** | 60.2 | 14.78 | **N/A** | N/A | – |
| ரூபா - குறைந்தபட்ச தேவைப்பாடு (2020 - 90%, 2019 - 100%) | **311.02** | 278.12 | 11.83 | **N/A** | N/A | – |
| அனைத்து நாணயங்கள் – குறைந்தபட்ச தேவைப்பாடு (2020-90%, 2019-100%) | **307.22** | 276.64 | 11.05 | **N/A** | N/A | – |
| நிகர நிலைத்த நிதியிடல் விகிதம் - குறைந்தபட்ச தேவைப்பாடு (90%) | **168.54** | 175.18 | (3.79) | **N/A** | N/A | – |
| **ஒழுங்குமுறை சார் மூலதன தேவைப்பாடுகள்: பாசல் III (%)** | | | | | | |
| அடுக்கு 1 – குறைந்தபட்ச தேவைப்பாடு (2020 - 8%, 2019 - 8.5%) | **13.65** | 13.49 | 1.16 | **15.57** | 15.37 | 1.30 |
| மொத்த மூலதனம் – குறைந்தபட்ச தேவைப்பாடு (2020 -12%, 2019 -12.5%) | **16.45** | 15.82 | 3.95 | **18.30** | 17.74 | 3.16 |
| முடுக்கு விகிதம் – குறைந்தபட்ச தேவைப்பாடு (3%) | **6.64** | 5.76 | 15.35 | **7.21** | 6.16 | 17.05 |

## நிதிசார் இலக்குகள் மற்றும் அடைவுகள் - வங்கி

| நிதிசார் குறிகாட்டி | இலக்குகள் | அடைவுகள் | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | **2020** | 2019 | 2018 | 2017 | 2016 |
| நிகர வட்டி எல்லை (NIM) (%) | 2.65 | **2.77** | 2.63 | 2.43 | 2.61 | 2.89 |
| சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் (ROA) (%) | 0.95 | **1.24** | 0.95 | 0.78 | 1.47 | 1.51 |
| சராசரி பங்குதாரர் நிதி மீதான திரும்பல் (ROE) (%) | 15.82 | **20.67** | 14.25 | 10.95 | 27.24 | 29.37 |
| வருமான வளர்ச்சி (%) | 2.76 | **4.61** | 8.96 | 3.62 | 23.57 | 10.24 |
| ஆண்டுக்கான இலாப வளர்ச்சி (PAT) | 6.86 | **58.40** | 41.80 | (53.68) | 2.30 | 9.52 |
| மொத்த சொத்துக்களின் வளர்ச்சி (%) | 14.22 | **17.78** | 11.68 | 2.56 | 10.89 | 7.50 |
| **ஒழுங்குமுறை சார் மூலதன தேவைப்பாடுகள்: பாசல் III (%)** | | | | | | |
| அடுக்கு 1 – குறைந்தபட்ச தேவைப்பாடு (2020 - 8%, 2019 -8.5%) | 8%க்கு மேல் | **13.65** | 13.49 | 13.08 | 11.93 | 11.31 |
| மொத்த மூலதனம் – குறைந்தபட்ச தேவைப்பாடு (2020 -12%, 2019 -15%) | 8%க்கு மேல் | **16.45** | 15.82 | 15.90 | 15.31 | 13.86 |

# முக்கிய தரவுகள்

### நிகர வட்டி வருமானம்




### நிகர வட்டி எல்லை




### வரிக்கு முன் இலாபம்




### மொத்த சொத்துக்கள்




### மொத்த வைப்புக்கள்




### கடன்கள் மற்றும் முற்பணங்கள்




### மொத்த தொழிற்படா சொத்துக்கள் விகிதம்




### சொத்துக்கள் மீதான திரும்பல்




### உரிமையாண்மை மீதான திரும்பல்




### வருமானத்துக்கான செலவு




### மொத்த மூலதன போதுமை விகிதம்




### திரவத்தன்மை காப்பு விகிதம்




உரு 01

# தலைவரின் செய்தி



2020இல், ஓர் தலைமுறைக்கான இடர் நிலைமையினை உலகம் எதிர் கொண்டிருந்தது. 2019 இன் இறுதிப் பகுதியில் உருவான கொவிட்-19 வைரஸ் மீளாய்வு செய்யப்படும் ஆண்டு காலத்தின் போது உலகம் முழுவதும் பரம்பல் அடைந்து, எமது ஞாபகத்துக்கு உட்பட்ட காலப்பகுதியில் எப்போதும் இருந்திராத ஓர் தொற்று நிலைமையை உருவாக்கியது. 2021 மார்ச்சில் உள்ளவாறு, இந்த வைரஸினால் 115 மில்லியனுக்கு மேலானவர்கள் தொற்று அடைந்துள்ளதுடன், 2.5 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் இறந்ததாகவும் கூறப்படுகிறது. இந்தப் பூகோள தொற்று நிலைமை பொருளாதார ரீதியான ஓர் மந்த நிலையை உருவாக்கியதுடன் இந் நிலைமை ஏற்கனவே 2019 இல் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த இலங்கையின் பொருளாதாரத்திற்கும் தாக்கத்தை ஏற்படுத்தியது. 2020 இன் முதலாம் காலாண்டின் போது 1.8% ஆல் வீழ்ச்சியடைந்த பொருளாதார வளர்ச்சி இரண்டாம் காலாண்டின் போது என்றும் இருந்திராத வகையில் 16.4%ஆல் வீழ்ச்சி கண்டது. இருந்தபோதிலும், பொருளாதார நடவடிக்கைகள் மூன்றாம் காலாண்டில் வழமைக்குத் திரும்பியதால் 1.3%ஆல் வளர்ச்சியடைந்து, மீட்சி நிலையை குறித்த காலாண்டில் பதிவு செய்தது. ஆண்டின் இறுதி காலப் பகுதியில் நேர்க்கணிய குறிகாட்டிகள் காணப்பட்டு இருந்த போதிலும், 2020 ஆண்டின் பொருளாதாரம் 3.6% ஆல் வீழ்ச்சியடைந்தது. உண்மையில் இது நாட்டிற்கு ஓர் இக்கட்டான காலப்பகுதியாக அமைந்து இருந்ததுடன் இந்த சவால்கள் இன்னமும் காணப்படுகின்றன.

இடர் நிலைமைகளின் போது, எமது அடையாளம் மற்றும் இலட்சிய நோக்கு ஆகியன முக்கியத்துவப்படுத்தப்பட்டன. தேசிய சேமிப்பு வங்கி, ஐம்பதாவது ஆண்டு நிறைவினை அடைந்து கொண்டிருக்கும் ஓர் நிறுவனம் என்ற வகையில், இலங்கையின் மிகப் பாரிய மற்றும் பாதுகாப்பான சிறப்பியல்பு வாய்ந்த வங்கியாக மிளிர்ந்ததுடன் 100% வெளிப்படை அரச உத்தரவாதத்துடன் இயங்கும் ஒரே ஒரு வங்கியாகவும் காணப்படுகின்றது. சேமிப்பு பழக்கத்தினை ஊக்கப்படுத்தி, வங்கி தனிப்பட்ட செல்வச் சேர்க்கையினை ஊக்குவித்ததுடன், தேசிய அளவிலான ஓர் நிதி இடைநிலையாளராகத் தொழிற்பட்டு நாட்டின் பொருளாதாரத்தின் விருத்திக்கான முதலீடுகளை நோக்கி சேமிப்புக்களை வினைத்திறனுடன் வழிப்படுத்துகின்றது. இலங்கையின் வீடமைப்புத் துறையில் பாரிய கடன் வழங்குனரில் ஒருவர் என்ற வகையில், வங்கி தேசிய வீட்டுரிமை வளர்ச்சிக்கு வழி வகுப்பதுடன், நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான வாடிக்கையாளர்களது பொருளாதார பாதுகாப்பு மற்றும் நகர்திறன் ஆகியவற்றுக்கும் வழி வகுத்திருக்கிறது. வரிகள், தீர்வைகள், கட்டணங்கள் மற்றும் பங்கு இலாபங்கள் ஆகிய வழிகளில் பொதுத் திறைசேரிக்கு பங்களிப்பு செய்வதுடன், இரண்டாவது பாரிய அரசுப்பிணையங்களின் வைத்திருப்பாளர் என்ற வகையில் அரசாங்கத்துக்கான பாரிய கடன் வழங்குனராகவும் அரசின் நீண்ட கால உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி செயற்திட்டங்களின் உத்வேகம் மிக்க பங்காளர் ஆகவும் விளங்குகிறது.

எமது அடையாளத்திற்கான மூலக் கூறுகள் நமது பெருமைக்கான அடித்தளமாக உள்ளன. அத்தகைய பெருமையுடன், கொவிட்-19 பெரும் தொற்று நிலைமையின் தாக்கங்களிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்பதுடன் எமது சொந்த நடவடிக்கைகளையும்

**பெரும் தொற்று நிலைமையின் அடிப்படையான தன்மை வங்கித் துறையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. பாதுகாப்பான ஒழுங்குமுறைசார் தேவைப்பாடுகளை அமுல்படுத்தியதன் விளைவாக, பெரும் தொற்று நிலைமையின் போது வங்கி மூலதன மற்றும் திரவத்தன்மை மிகைகளுடன் சிறப்பாக நிலைப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 2020ஆம் ஆண்டு முழுவதும் ஒழுங்குமுறைசார் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமான நிலைகளைப் பேணியிருந்தது**

# தலைவரின் செய்தி

மேற்கொள்ளும் வகையில் எமது வாடிக்கையாளர்கள், அக்கறை உள்ள தரப்பினர்கள் மற்றும் பரந்துபட்ட சமூகத்துக்கான எங்களுடைய பொறுப்பை நிறைவேற்றும் உணர்வினை நாங்கள் கொண்டிருக்கிறோம்.

கொவிட்-19 காரணமான இந்த பின்னடைவு நிலைமையிலும், நிறைவடைந்த ஆண்டின் போதான வங்கியின் பெறுபேறுகள் அதன் பலம் மற்றும் நிலைத்த தன்மை காரணமாக உருவாக்கப்பட்டு இருக்கின்றன. எமது மொத்த சொத்துத் தளம் 31 டிசம்பர் 2019 இல் ரூபா 1.2 திரில்லியனில் இருந்து, 31 டிசம்பர் 2020 இல் ரூபா 1.4 திரில்லியன் ஆக 18.0% இனால் வளர்ச்சி அடைந்துள்ளது. 2019 இறுதிப் பகுதியில் அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மேம்படுத்தல் நடவடிக்கைகள் காரணமாக 2020 ஆண்டின் போது முன்னைய காலங்களை விட மிக உயர்வான வரிக்கு முன்னான இலாபம் மற்றும் வரிக்கு பின்னான இலாபங்களை வங்கி பதிவு செய்திருக்கிறது. இதன் விளைவாக, வங்கியின் வரிக்கு முன்னான இலாபம் 2019 இல் காணப்பட்ட ரூபா 10.5 பில்லியனில் இருந்து 2020 இல் ரூபா 15.6 பில்லியனாக, 49.5% இனால் அதிகரித்தற்கான காரணமாக, தேறிய வட்டி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் நிதிச் சேவைகள் மீதான தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT) மற்றும் கடன் மீள்செலுத்துகை தீர்வை (DRL) ஆகியவை நீக்கப்பட்டமையினைக் குறிப்பிட முடியும். இதன் பெறுபேறாக, வங்கியின் வரிக்கு பின்னான இலாபம் 2019 இல் காணப்பட்ட ரூபா 6.4 பில்லியனில் இருந்து 2020 இல் ரூபா 10.1 மில்லியன் ஆக 58.4% இனால் உயர்வடைந்தது. மீளாய்விற்கு உட்படும் நிதி ஆண்டின் போது ரூபா 1.0 பில்லியன் தொகை பங்கு இலாபங்களாக செலுத்தப்பட்டது.

எமது வாடிக்கையாளர்களது சேமிப்பின் பாதுகாப்பு மற்றும் இடரற்ற தன்மை ஆகியனவே எமது நிறுவனத்தின் அடித்தளமாகவும் எமது பெறுமதி உருவாக்கத்தின் பிரதான மூலகமாகவும் காணப்படுகிறது. இதன் விளைவாக, வங்கி நெறிமுறை மிக்க வகையில் ஒருங்கிணைந்த நோக்கில் தொழிற்படும், விளைதிறன் மிக்க கூட்டாண்மை ஆளுகை, பயனுறுதி மிக்க இடர் முகாமை மற்றும் மூலதனம் மற்றும் திரவத்தன்மை முகாமை ஆகிவை உள்ளடங்கலான ஒரு நீண்டகால கலாச்சாரத்தை கொண்டிருக்கிறது. மீளாய்விற்கு உட்படும் ஆண்டு காலப்பகுதியில், பெரும் தொற்று நிலைமையினால் ஏற்பட்டிருந்த சூழ்நிலையினை மிக விரைவாக மாற்றுவதற்கான முயற்சிகள் மீது பணிப்பாளர் சபை கவனத்தினை கொண்டிருந்ததுடன் நிச்சயமற்ற நிலைமைகளின் போது உரிய நேரத்திலான வழிகாட்டல் மற்றும் அவசிய உள்நோக்குகளை வழங்கியிருந்தது. “புதிய வழமைக்கு” வங்கி படிப்படியாக மாற்றம் அடைவதை பணிப்பாளர் சபை உறுதி செய்து கொண்ட அதேவேளையில், அகக் கட்டுப்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதி நியமங்களுக்கு இணக்கமான முறையில் அது நிறைவேற்றப்பட்டது. மிகக் குறிப்பாக, தொழிற்படாக் கடன்களை வங்கியின் இடர் பாதுகாப்பு எல்லைக்குள் முகாமை செய்வதுடன் தொழிற்துறையின் மிகக்குறைவான தொழிற்படாக் கடன் விகித மட்டத்தினை பேணக் கூடிய வகையில் முகாமை செய்யும் வழிகாட்டுதல்களை பணிப்பாளர் சபை வழங்கியிருந்தது.

பெரும் தொற்று நிலைமையின் அடிப்படையான தன்மை வங்கித் துறையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டது. பாதுகாப்பான ஒழுங்குமுறைசார் தேவைப்பாடுகளை அமுல்படுத்தியதன் விளைவாக, பெரும் தொற்று நிலைமையின் போது வங்கி மூலதன மற்றும் திரவத்தன்மை மிகைகளுடன் சிறப்பாக நிலைப்படுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், 2020ஆம் ஆண்டு முழுவதும் ஒழுங்குமுறைசார் குறைந்தபட்சத் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமான நிலைகளைப் பேணியிருந்தது, 2021 மற்றும் தொடர்ந்து வரும் ஆண்டுகளில், நாட்டில் உள்ள நிறுவனங்கள் மற்றும் முயற்சியாளர்களது பெருந்தொற்று நிலைக்குப் பிந்தைய மீட்பில் அரசின் முன்முயற்சிகளை முன்னெடுப்பதற்கான ஒரு இலட்சிய இடைக்கால தந்திரோபாயத்தில் வங்கி கவனம் செலுத்துவதுடன், மேலும், அதன் நிதி மூலங்களை பன்முகப்படுத்தவும் முயல்கிறது. மதிப்பாய்விற்குட்படும் வருடத்தின் போது, வங்கி நிலைத்த தொகுதிக்கடன்களை வழங்கியதன் மூலம் ரூபா 5.0 பில்லியன் தொகையினை நிதியீட்டம் செய்தது. ஒரு சேமிப்பு வங்கியின் வரலாற்றில் இத்தகைய இயல்பு மற்றும் அளவின் கலப்பின கடன் சாதனம் இலங்கை மூலதன சந்தையில் வெளியிடப்பட்டது இதுவே முதல் முறையாகும். இந்த வெளியீட்டின் வருமானம் வங்கியின் மேலதிக அடுக்கு 1 மூலதனத்தை அதிகரிப்பதுடன், உட்கட்டமைப்பு விருத்தித் திட்டங்களுக்கு நீண்டகால நிதியுதவியை வழங்கவும் வங்கிக்கு உதவும். மேலும் ஐக்கிய அமெரிக்க டொலர் 35 மில்லியன் தொகையான கடன் ஒன்றுக்காக 2020 ஆம் ஆண்டில் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு, பெப்ரவரி 2021 இல் அது நிறைவடைந்தது. ஐ.சி.ஆர்.ஏ. லங்காவின் [SL] AAA (நிலைத்த) கடன் மதிப்பீட்டை வங்கி தொடர்ந்து பேணியிருந்தது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்க விடயமாகும்.

எண்ணியல் மயமாக்கல் வங்கியின் முக்கிய கருதுபொருளாக இருந்து வந்துள்ளது. பெரும் தொற்று நிலைமைகளின் போது எண்ணியலாக்க உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான கேள்வி ஒரு தூண்டுதலாக தொழிற்பட்டு, எமது எண்ணியலாக்கம் நோக்கிய மாற்றத்தை முன்னோக்கி செலுத்தியிருக்கிறது. நாட்டின் முடக்கத்தின் போது, எமது எண்ணியல் சேவை வழங்கல்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வீடுகளிலேயே பாதுகாப்பாக இருந்தவாறு எமது சேவைகளைத் தடையின்றி அணுக அனுமதித்திருந்தன. ஆனால் பெரும் தொற்று நிலைமை மேலும் முன்னேற்றத்திற்கான பகுதிகளையும் வெளிப்படுத்தியுள்ளதுடன் இனிவரும் ஆண்டுகளில் எமது தந்திரோபாயத்தை நாம் அதற்கேற்ப வடிவமைக்கவுள்ளோம்.

எண்ணியல் மயமாக்கலுக்கான எமது வாக்குறுதி தொழிநுட்பத்தின் பொருட்டு தொழில்நுட்பத்தைப் பற்றியதானது மாத்திரம் அல்ல என்று நாம் நம்புகிறோம். தொழிற்பாடுகளை ஒழுங்குபடுத்துதல், உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் கிரய வினைத்திறனை ஏற்பிசைத்தல் ஆகியவற்றின் நன்மைகளுக்கு அப்பால் கூட, எண்ணியல் மயமாக்கலை எமது வர்த்தக நாமத்துடன் ஆழமாக பிரதிபலிக்கும் வகையில் அணுகுவோம்: இது எமது நிதிச் சேர்க்கை மற்றும் ஜனநாயக மயமாக்கலுக்கான கருவியாக அமையும். திறன் பேசிகளின் வருகையுடன், எண்ணியல் வெளியில் குடித் தொகையில் அதிகமான பகுதிகளை இணைத்து ஈடுபடுத்துவதற்கான சாத்தியங்கள் நிறைந்து உள்ளன. அணுகல் குறித்த இந்த வினா, வங்கியில் நாங்கள் கட்டமைக்கும் எண்ணியலாக்க பெறுமதி முன்மொழிவின் மையத்தில் உள்ளது - எங்களுடைய அனைத்து பங்குதாரர்களையும், எந்த மட்டம் அல்லது இருப்பிடமாக இருந்தாலும், விரைவான தொழில்நுட்ப விருத்திகள் மூலம் பயனடைய அனுமதிக்கும்.

அடுத்துவரும் ஆண்டு முக்கியமானதாக இருக்கும். எமது வாடிக்கையாளர்களுக்கு ஆதரவளிப்பதை உறுதி செய்வதற்காக நாம் அரசுடனும் ஒழுங்கு விதிமுறை அமைப்புகளுடனும் நெருக்கமாக பணியாற்றி, மேலும் பொருளாதார மீட்சியின் ஒரு பகுதியாக கடன் வளர்ச்சியையும் முதலீட்டையும் ஊக்குவிக்க உதவுவோம். சுவாலான தொழிற்பாட்டு சூழலையும் தாண்டி வளர்ச்சி வாய்ப்புகளை இலக்காகக் கொள்வதற்கும் எங்கள் வாடிக்கையாளர்களின் அபிலாஷை களை ஆதரிப்பதற்கும் எங்கள் ஐந்தொகைகளை பேணுவதில் பணிப்பாளர் சபை தொடர்ந்தும் கவனம் செலுத்தும். இடர் மற்றும் கூட்டாண்மை ஆளுகைப் பின்புலங்கள் வேகமாக மாறி வருவதுடன், மேலும் அது கூட்டுவணிக நடத்தை மீதான பரந்தளவான கவனத்துக்கு உட்பட்டுள்ளது. அடுத்துவரும் ஆண்டில் கடன் தயவு காலங்கள் காலாவதியாகி, வங்கித் துறையின் உண்மையான தொழிற்படாக் கடன்களின் நிலை வெளிப்படும் போது, கடன் தரம் மற்றும் இடர் முகாமை, எங்கள் முன்னுரிமைகளில் முதன்மையானதாக இருக்கும். இலாப எல்லைகள் சுருங்கி, வங்கித் துறை மிகவும் போட்டித்தன்மை மிக்கதாக மாறும் போது, நமது பெறுமதிகள் மற்றும் இலட்சிய நோக்குக்கு உண்மையாக இருப்பது மிகவும் அவசியம் ஆகும். அடுத்துவரும் ஆண்டை நாங்கள் திடசங்கற்பத்துடன் எதிர்கொள்வதால், சிறந்த நம்பிக்கைப் பொறுப்பையும் வழிகாட்டலையும் வழங்குவதில் சபை உத்வேகம் மிக்க வகிபாகத்தை வகிக்க முற்படுகிறது.

பணிப்பாளர் சபையில் உள்ள எனது சகாக்களுக்கு, மிகவும் சவாலான இந்த ஆண்டில் அவர்களின் நுண்ணறிவு மற்றும் ஆதரவுக்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். 2020 ஆம் ஆண்டில், எமது நிறுவன நிறைவேற்று முகாமைக் குழு மற்றும் ஊழியர்கள் விசுவாசமும் அர்ப்பணிப்பும் உண்மையிலேயே எதைக் குறிக்கின்றன என்பதை தெளிவாக வரையறுத்துள்ளனர். அழுத்தம் மிக்க மற்றும் இக்கட்டான சூழ்நிலைகளில், அவர்கள் எமது வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு தொடர்ந்து பதிலளித்ததன் மூலம், எமது அடையாளமாக இருக்கும் குணாதிசயங்களுடன் வங்கியை பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கிறார்கள். எமது ஊழியர்களே உண்மையில் எமது வெற்றியைக் கட்டியெழுப்ப அடித்தளமாக உள்ளனர், மேலும் 2021 ஆம் ஆண்டில் எங்கள் வெற்றியைத் தொடர்ந்தும் வழிநடாத்த நாம் அவர்களை நம்புவோம். எமது வாடிக்கையாளர்களுக்கும் எனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன், நம் மீது அவர்கள் தொடர்ந்து வைத்திருக்கும் நம்பிக்கை நம்முடைய நோக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

நமக்கான தொடர்ச்சியான ஆதரவு மற்றும் உதவிகளுக்காக, கௌரவ பிரதம மந்திரி மற்றும் நிதி அமைச்சர் மற்றும் கௌரவ நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கும் நான் நன்றியுடன் இருக்கிறேன். கொவிட்-19 தொற்றுநோயால் உருவான சிக்கலான நேரத்தில் மற்றும் முதலாவது முடக்கத்தின் போது வங்கியை சிறப்பாக வழிநடத்திய முன்னாள் பதில் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி தமித்த இரத்நாயக்க அவர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். திறைசேரியின் செயலாளர் மற்றும் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுனர் மற்றும் அதிகாரிகள் வழங்கிய ஆதரவையும் வழிகாட்டலையும் நான் பாராட்டுகிறேன். நாடு முழுவதும் தேசிய சேமிப்பு வங்கிக்கு வழங்கப்பட்ட முக்கிய உதவிகளுக்காக தபால் மா அதிபர் மற்றும் தபால் துறை அதிகாரிகளுக்கும் எனது ஆழ்ந்த பாராட்டுக்கள் உரித்தாகட்டும். அத்துடன் எனது பாராட்டுக்கள் சட்ட மா அதிபர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கும் இத்தால் வழங்கப்படுகிறது.



**கேசிலா ஜயவர்தன**

தலைவர்

19 மார்ச் 2021

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு



**வங்கி அதன் முன்னெப்போதும் இல்லாதவாறான மிக உயர்வான வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்கு பின்னரான இலாபம் ஆகியவற்றை பதிவு செய்திருக்கிறது. வரிக்கு முன்னரான இலாபமானது 2019 இல் காணப்பட்ட ரூபா 10.5 பில்லியனில் இருந்து 49.5% இனால் அதிகரித்து 2020 இல் ரூபா 15.6 பில்லியனாகவும் அத்துடன் வரிக்குப் பின்னரான இலாபம் 2019 இல் காணப்பட்ட ரூபா 6.4 பில்லியனில் இருந்து 58.4% இனால் அதிகரித்து ரூபா 10.1 பில்லியன் ஆக உயர்வடைந்துள்ளது.**

2020 முழுவதும் வழக்கத்துக்கு மாறான தொழிற்பாட்டு சூழ்நிலை காணப்பட்ட போதிலும், வங்கி அதன் தனித்துவமான பலம் மற்றும் இலட்சிய நோக்கினை பிரதிபலிக்கும் வகையில் ஒரு சிறப்பான பெறுபேற்றினை பதிவு செய்திருக்கிறது. மீளாய்விற்கு உட்படும் ஆண்டு காலப்பகுதியில், வங்கி அதன் முன்னெப்போதும் இல்லாதவாறான மிக உயர்வான வரிக்கு முன்னரான இலாபம் மற்றும் வரிக்கு பின்னரான இலாபம் ஆகியவற்றை பதிவு செய்திருக்கிறது. வரிக்கு முன்னரான இலாபமானது 2019 இல் காணப்பட்ட ரூபா 10.5 பில்லியனில் இருந்து 49.5% இனால் அதிகரித்து 2020 இல் ரூபா 15.6 பில்லியனாகவும் அத்துடன் வரிக்குப் பின்னரான இலாபம் 2019 இல் காணப்பட்ட ரூபா 6.4 பில்லியனில் இருந்து 58.4% இனால் அதிகரித்து ரூபா 10.1 பில்லியன் ஆக உயர்வடைந்துள்ளது. இந்த எண்ணிக்கைகள் நிதியியல் சேவைகள் மீதான தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் கடன் மீள் செலுத்துகை தீர்வை ஆகியவை நீக்கப்பட்டமையினாலும் தேறிய வட்டி வருமானத்தின் 21.0% அதிகரிப்பினாலும் ஏற்பட்டிருந்தது. இருந்த போதிலும், 2019 இல் காணப்பட்ட ரூபா 566 மில்லியனில் இருந்து 761.8% இனால் அதிகரித்து ரூபா 4.9 பில்லியன் சேத இழப்பு ஏற்பாட்டினை மேற்கொண்ட பின்னரே இந்த வரலாற்றின் உயர்வான இலாபம் அடையப்பட்டிருக்கிறது. இந்த உயர்ந்த தொகையிலான சேதமிழப்பு ஏற்பாடு கடன் மற்றும் முற்பணங்களின் சேர்க்கைகளிலான அதிகரித்த இடர் நிலைமை மற்றும் வங்கித் துறையின் சொத்தின் தரம் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது.

2019 இல் ரூபா 171.4 பில்லியன் ஆக காணப்பட்ட வைப்புத்திரட்டல் 29.5% சதவீதத்தினால் அதிகரித்து, ஆண்டின் போது ரூபா 221.9 பில்லியனாக அதிகரித்திருக்கிறது. இது வங்கியின் வைப்புத் தளம் ரூபா 1.2 திரில்லியன் ஆக உயர்வடைந்து, வங்கியின் முன்னெப்போதும் இல்லாதவாறு உயர்வான வருடாந்த வைப்புத்திரட்டலை பிரதிநிதித்துவம் செய்கிறது. குறைவடைந்த வட்டி வீதங்கள் மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்களிலிருந்து வங்கித் துறையை நோக்கி நகர்த்தப்பட்ட வைப்புகள் ஆகியவற்றின் மத்தியிலும், இந்த அதிகரிப்பானது பெரும் தொற்று நிலைமை காரணமாக குறைவடைந்த விருப்பத்துக்குரிய செலவினங்கள் காரணமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. சொத்துக்கள் 17.8% இனால் அதிகரித்து ரூபா 1.4 திரில்லியன் சொத்து தளத்தினை அடைந்திருக்கிறது.

சொத்துக்களுடன் ஒப்பிடும் வகையில் பொறுப்புக்களை உரிய நேரத்தில் மீள் விலையிட்டமையினால், வங்கியின் நிகர வட்டி வருமானம் அதிகரித்திருப்பதுடன் வங்கி நிகர கட்டணங்கள் மற்றும் தரகு வருமானத்திலும் ஓர் அதிகரிப்பை பதிவு செய்து இருக்கிறது. வங்கிக்கு ஒரு செலவு குறைந்த நிதியீட்ட மூலத்தை ஏற்படுத்தும் வகையில் 2019-ல் காணப்பட்ட 21.5% இல் இருந்து 2020 இல் 22.6% ஆக அதிகரிக்கப்பட்ட மொத்த வைப்புகளிலான சேமிப்பு வைப்புகளின்

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

விகிதாசாரம் மீது ஏற்பட்ட சாதகமான மாற்றம் காரணமாக வங்கியின் இலாபத் தன்மை மேலும் அதிகரிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட தரவுகள் வங்கியின் ஓர் திடமான பெறுபேற்றை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்ததுடன், இந்த எண்ணிக்கைகள் மீதான ஆழமான பார்வை ஆண்டு காலத்தின் சூழ் நிலைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். 2020 மார்ச் மாத காலப்பகுதியில் ஏற்பட்டிருந்த கொவிட்-19 பெரும் தொற்றின் முதலாவது அலை மற்றும் அதனைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட முடக்க நிலையின் போது வாடிக்கையாளர்களுக்கு ஓர் தடையற்ற சேவையினை வழங்கும் வகையில் வங்கியின் அனைத்து கிளைகளும் நாடு முழுவதும் திறந்து வைக்கப்பட்டன. மேலும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வீட்டு வாசலிலேயே சேவையை வழங்குவதற்காக மூன்று நடமாடும் சேவைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டது.

ஆண்டின் காலப்போக்கில், வங்கித் துறையின் கரிசனை நிதிசார் நிவாரணங்கள் மற்றும் மீட்பிற்கான ஆதரவை வழங்குவதை நோக்கி நகர்ந்ததால், வங்கி அதன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் கடனை காலம் தாழ்த்தி செலுத்தல் மற்றும் கொடுப்பனவு பிற்போடுதல்களை வழங்கியது (மேற்கண்ட சலுகைகளில் இருந்து வெளிப்படையாக விலகிய வாடிக்கையாளர்களைத் தவிர). இதன் விளைவாக, வங்கியின் மொத்த சில்லறை கடன் தொகுதியில் 90% க்கும் மேலான பகுதியானது தற்காலிக கடனை காலம் தாழ்த்தி செலுத்துதலுக்கு உட்பட்டிருந்தது. (சலுகை விகிதத்தில் 7.0%, கடன் காலம் முடிவடையும் வரை தவணை ஒத்திவைக்கப்பட்டது). நிவாரணம் கோரிய வாடிக்கையாளர்களுக்கு தங்களின் தற்போதைய கடன்களுக்கு 10% வரை வட்டி வீதக் குறைப்புகளுடன் வங்கி வழங்கியது. இந்த சலுகைகள் காரணமாக, வங்கி ரூபா 3.6 பில்லியன் வட்டி வருமானத்தை இழந்தது.

வங்கி ரூபா 124 பில்லியன் தொகையான வீடமைப்பு மற்றும் தனிநபர் கடன்களாக 2020 ஆம் ஆண்டில் 100,000 வாடிக்கையாளர்களுக்கு வழங்கியது. இது கடன்களின் எண்ணிக்கை மற்றும் மொத்தத் தொகை ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியின் மிக உயர்ந்த வருடாந்த கடன் வழங்கலைக் குறிப்பதுடன், மேலும் இது 2019 புள்ளிவிவரங்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை மற்றும் அளவு இரண்டிலும் ஒப்பிடுமிடத்து, 100% அதிகரிப்பு ஆகும்.

மேலும், இலங்கை மத்திய வங்கி வழங்கிய அறிவுறுத்தல்களின் பேரில், இலங்கை பொதுமக்களின் வீட்டு உரிமையை அதிகரிக்கும் திட்டத்திற்கு ஆதரவு வழங்கும் நோக்கில், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் நிரந்தர ஊழியர்களுக்காக ஆண்டுக்கு 7% குறைந்த வீதத்தில் சிறப்பு வீட்டுக் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. மேலும், இலங்கை அரசின் 2021 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளுக்கு இணங்க, வங்கி “சொந்துரு கெதெல்ல” வீட்டுக் கடனை, உரிய அரச அதிகாரசபைகளினால் உருவாக்கப்படும் வீட்டுத் திட்டங்களிலிருந்து வீட்டு அலகுகளை கொள்வனவு செய்யும் நோக்கத்திற்காக, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களுக்கு வீட்டுவசதி கடன் ஒன்றை அறிமுகம் செய்தது.

எமது செயற்திறனின் இந்த அம்சங்கள் ஒரு அரச வங்கியாக, மற்றும் நாட்டின் மிகப்பெரிய மற்றும் பாதுகாப்பான சிறப்பியல்பு வாய்ந்த வங்கி என்ற வகையில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு உதவ எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டிய கடமையை நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்ற உண்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. எனவே, தேசிய சேமிப்பு வங்கியின் நிலைத்த தன்மை பற்றிய கருத்து பரந்ததாகவும் மற்றும் பல பரிமாணங்களைக் கொண்டிருப்பதுடன், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால பெறுமதியை உருவாக்குவதற்கான எமது நிறுவனம்சார் தந்திரோபாயம் மற்றும் வணிக மாதிரியுடன் ஆழமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அத்தகைய கருத்து எமது சொந்த தொழிற்பாடுகளில் சமூக மற்றும் சுற்றுச்சூழல் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதை உள்ளடக்கியிருப்பினும், இது ஒரு தேசிய நிதி இடைத்தரகராக வங்கியின் பங்கைப் புரிந்துகொள்வதை உள்ளடக்கியது. இப்போது, முன்னெப்போதையும் விட, வங்கி அதன் அடிப்படை இலட்சிய நோக்கிற்கு வலுவாக உள்ள வகையில், சிறந்த மூலதனம் மற்றும் திரவத்தன்மை முகாமை, பொறுப்புணர்வு மிக்க கடன் வழங்கல், நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஒருமைப்பாட்டுடன் வணிகத்தை நடத்துதல், குறிப்பாக வங்கிச் சேவை கிடைக்காதவர்கள் அல்லது குறைந்த வங்கிச் சேவையை அடைந்தோருக்கு நிதி சேர்க்கையை ஊக்குவிப்பதன் மூலம் அர்த்தமுள்ள சமூக தாக்கத்தை உருவாக்குதல், முக்கிய திட்டங்களுக்கு அரசாங்கத்திற்கு அத்தியாவசிய நீண்டகால கடன் வழங்குதல் போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது. வங்கியைப் பொறுத்தவரை, நிலைபேறான தன்மை எண்ணக்கருவானது, நாட்டின் பெரும் தொற்று நிலைமையிலிருந்து மீள்வதில் முக்கிய பங்கு வகிப்பதாகும்.

மதிப்பீட்டுக்கு உட்படும் ஆண்டில், வங்கி ரூபா 31.4 பில்லியன் பெறுமதியான உட்கட்டமைப்பு விருத்தித் திட்டங்களுக்கான கடன்களை அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு, முக்கியமாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியவற்றுக்கு வழங்கியுள்ளது. வங்கி மேலும் 2020 ஆம் ஆண்டில் வங்கியின் நிதி மூலாதாரங்களை பன்முகப்படுத்திய இரண்டு முயற்சிகள் மூலம் எதிர்காலத்தில் நீண்டகாலத் திட்டங்களுக்கு நிதியீட்டம் செய்வதற்காகத் தன்னை நிலை நிறுத்தியுள்ளது. முதலில், வங்கி நிலைத்த தொகுதிக்கடன்களை வழங்குவதன் மூலம் ரூபா 5.0 பில்லியன் நிதியீட்டியுள்ளது. வங்கியின் மேலதிக அடுக்கு 1 மூலதனத்தை மேம்படுத்துவதன் மூலம், அரசு மற்றும் சில்லறை கடன்களுக்கான கடனாக்கத் திறன்களை அதிகரிக்க வங்கி நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இரண்டாவதாக, வங்கி ரூபா 35 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கடனுக்காக பூர்வாங்க வேலைகளை 2021 இன் ஆரம்பப் பகுதியில் நிறைவு செய்துள்ளதுடன், இது வங்கியின் சொத்து வளர்ச்சியை அதிகரிக்க உதவும்.

ஆண்டின் போது, தொலைதூர வங்கியியலுக்கான தேவை முன்பை விட அதிகமாக இருந்த போது, எண்ணியலாக்கத் தொழிநுட்பத்தின் மீதான தேசிய சேமிப்பு வங்கியின் தொடர்ச்சியான முதலீடுகள் வாடிக்கையாளர்களுக்கு தொடர்ந்து பயனளித்ததுடன் மேலும் வங்கியின் எண்ணியலாக்கத் தளம் மற்றும் பிற எண்ணியல் வங்கி சேவைகள் முன்பை விட விரிவாகப் பயன்படுத்தப்பட்டன. ஆனால் எண்ணியலாக்க உற்பத்திகள் மற்றும் சேவைகளின் அதிகரித்த தேவை மற்றும் பயன்பாடு உண்மைத் தன்மையின் சோதனையாக தொழிற்பட்டதுடன், அது வங்கி மேலும் முன்னேற்றம் காண்பதற்கான பகுதிகளையும் எதிர்காலத் தேவைகளை அடையாளம் காணவும் வங்கியை அனுமதித்தது. ஒரு சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவது என்பது சக்திவாய்ந்த முன்னலுவலக சேவை எண்ணியல் தளங்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், திறமையான இறுதி தீர்வுகளை உருவாக்குவதும் பின்-அலுவலக செயல்முறைகளை தன்னியக்கம் மற்றும் நெறிப்படுத்துவதாகும். ஆண்டின் தொடர்ச்சியான தன்மை சில முக்கிய மாற்ற அம்சங்களை அனுமதித்ததுடன், 2021 ஆம் ஆண்டிற்கான நான்கு முக்கிய தந்திரோபாய நோக்கங்களுக்கான அடித்தளத்தை அமைக்க வங்கி இந்த வாய்ப்பைப் பயன்படுத்தியது:

(அ) அனைத்து சேவைகளும் தொழிற்துறைத் தேவைப்பாடுகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைப்பாடுகளுடன் மறுசீரமைத்தல் மற்றும் புதிய மைய வங்கி முறையை நடைமுறைப்படுத்துதல்

(ஆ) தகவல் தொழிநுட்ப வங்கி சேவைகளின் நம்பகத்தன்மை மற்றும் கிடைக்கும் தன்மையை மேம்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் திருப்தி மற்றும் உள்ளக சேவை மேன்மைத்துவத்தை வழங்கும் வகையில், தரவு மையங்களுக்கான TIA 942 (மட்டம் III) சர்வதேச நியமத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அதிநவீன முதன்மை தரவு மையத்தை உருவாக்குதல்,

(இ) தொழிற்துறை முன்னோடியாக ஓர் கையடக்கத் தொலைபேசிக் கொடுப்பனவு செயலியை ஆரம்பித்தல், மற்றும்

(ஈ) முழுமையாகத் தன்னியக்கமான பாதுகாப்பான எண்ணியல் தளத்தை செயல்படுத்தல்

இந்த நான்கு நோக்கங்களையும் நிறைவேற்றி, அதனுடன் தொடர்புடைய உள்முக திறமை மற்றும் இயலளவு விருத்தியுடன், வங்கியானது எண்ணியல் வங்கியியலில் முன்னணியில் நிலைநிறுத்தப்பட்டு அதன் தனித்துவமான அடையாளத்தை மூலதனமாக்கிக் கொள்ள முடியும். எண்ணியலாக்கப் பின்பற்றுகையின் வீதம், பல காரணங்களுக்காக, இலங்கையின் வெவ்வேறு மட்டம் மற்றும் புவியியல் இடங்களில் மிகவும் மாறுபடுகிறது. எண்ணியல் வங்கியியலை ஊக்குவிக்க வங்கி விரும்பினாலும், இந்த மாற்றத்தைப் பற்றி மக்கள் அர்ப்பணிப்புடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும் என்பதை உணர வேண்டும். நாட்டின் பல பகுதிகளில், வங்கி கிளை அல்லது தொடுபுள்ளியுடன் பௌதீக ரீதியான தொடர்பு இருப்பது எண்ணியல் பின்பற்றுகைக்கான முக்கியமான படியாகும். பௌதீக கிளைகள், தபால் மற்றும் துணை அஞ்சல் அலுவலகங்கள் மற்றும் தன்னியக்க இயந்திரங்கள்/காசு மீள்சுழற்சி இயந்திர

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

தொடுபுள்ளிகள் உட்பட நாடு முழுவதும் 4,000 தொடுபுள்ளிகளுக்கு மேலாக ஒரு கிளை வலையமைப்பு காணப்படுவதால், எண்ணியல் மயமாக்கலை இயக்குவதற்கான ஒரு தனித்துவமான நிலையில் வங்கி உள்ளது.

மதிப்பாய்வுக்கு உட்படும் ஆண்டின் போது, வங்கியின் தரவு மையம் (N-able இனால் வடிவமைத்து கட்டப்பட்ட) மட்டம் III சான்றுப்படுத்தலைப் பெற்றதுடன், இதுவே நாட்டின் வங்கித் துறையில் முதற் தடவையாகும். தரவு மையமானது பரிவர்த்தனையை அதிகப்படுத்தல், நம்பகத்தன்மை மற்றும் வேகம் மற்றும் வங்கியின் அன்றாட தகவல் பரிமாற்றங்களுக்கான பூச்சிய தொழிற்பாடா நேரத்தை பேணுதல் ஆகிய நகர்வுகளிற்கான இன்னொரு படியாக உள்ளது. மட்டம் III சான்றளிக்கப்பட்ட தரவு மையம் எந்த நேரத்திலும் இறுதிப் பயனர்கள் மற்றும் ஊழியர்களுக்குக் கிடைக்கச் செய்வதன் மூலம் வங்கியின் எண்ணியல் வங்கி சேவைகளை கணிசமாக மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மட்டம் III சான்றுப்படுத்தல் தரவு மையத்தின் நிஜ உலக சவால்களை எதிர்கொள்ளும் திறனுக்கான சான்றாகவும், வரவிருக்கும் ஆண்டுகளில் வங்கியின் பல தகவல் தொழில்நுட்பத் தேவைகளை ஆதரிக்கவும் ஓர் சான்றாகவுள்ளது.

புதிய தொழிநுட்பங்கள் வாடிக்கையாளர் நடத்தை மற்றும் அவற்றின் வங்கி முறைகளை பாதிக்கின்றன. தொடர்ந்து கற்கும் ஊழியப்படை இந்த மாற்றங்களுக்கு ஏற்றதாக இருப்பது போட்டியிடும் தன்மைக்கு அனுகூலமாகவும் மற்றும் மறு திறனாக்கமாகவும், வங்கி பொருத்தப்பாடு மிக்கதாக இருப்பதற்குமான தந்திரோபயமாக விளங்குகிறது. நிதித் தொழிநுட்ப நிறுவனங்கள் (Fintech) போன்ற புதிய போட்டியாளர்களையும், தொலைதூர பணிக்கான புதிய எண்ணியல் தீர்வுகள் மற்றும் மையவங்கித் தீர்வுகளுக்கான முதலீடு மற்றும் செலவுகளை ஒதுக்குவது போன்றவற்றையும் வங்கி கருத்திற் கொள்கிறது. அடிப்படையில், தொழில்நுட்ப மாற்றங்களானவை உள்ளக செயன்முறைகள் மற்றும் அணுகுமுறைகளை மாற்றுவதற்கு பயனுறுதி மிக்க மற்றும் உள்நோக்குடைய மாற்ற முகாமையுடன் இருக்க வேண்டும். எமது எண்ணியல் தந்திரோபாயத்தில் முன்னோக்கி நகர்வதில் அடுத்த ஆண்டு முக்கியமானதாக இருக்கும்.

சந்தேகத்திற்கு இடமின்றி 2021 வங்கி மற்றும் நாட்டிற்கு ஒரு சவாலான ஆண்டாக இருக்கும். இந்த இக்கட்டான காலங்களில் எமது வாடிக்கையாளர்களுக்கு ஆதரவு கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்த வங்கி அரசு மற்றும் ஒழுங்கு விதிமுறையாளர்களுடன் இணைந்து செயற்படும். குறைந்த வட்டி விகித சூழல் மற்றும் புதிய கடன் திட்டங்கள், தடுப்பூசிகள் மூலம் தொற்றுநோயை கட்டுப்படுத்துதல் போன்றவை பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் கடன் வளர்ச்சியை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது குறுகிய கால கடன்களுக்கான கேள்வியை உருவாக்குவதுடன், மேலும் வைப்புத் திரட்டலை மேம்படுத்துவதற்கான வாய்ப்பும் உள்ளதால், இது வங்கியின் குறைந்த கிரய சேமிப்பு தளத்தை விரிவுபடுத்தும்.

ஆனால் இந்தத் துறையின் கடன் தரம் மற்றும் தொழிற்படாக் கடன்கள் நிலையைப் பற்றிய தெளிவான விம்பம் 2021 ஆம் ஆண்டில் மட்டுமே வெளிப்படும், மேலும் கடன் நட்டங்கள் மற்றும் பிற பாதகமான சூழ்நிலைகளை எதிர்கொள்ள வங்கி தயாராக இருக்கிறது. தொழிற்படாக் கடன்களின் அதிகரிப்பானது மீட்பு உத்திகள் வாடிக்கையாளர்களுக்கான ஆதரவை, வங்கியின் நன்மதிப்பு இடர், வளர்ந்து வரும் ஒழுங்குவிதிமுறைச் சூழல் மற்றும் வங்கியின் அடிமட்டத்தை கவனமாக சமப்படுத்த வேண்டும் என்பதைக் குறிக்கும். வட்டி விகிதங்கள் குறைவாக இருப்பதால் அல்லது மேலும் வீழ்ச்சியடைவதால் நிகர வட்டி எல்லைகள் சுருக்கப்பட்டிருக்கும், மேலும் விகிதங்களில் ஏதேனும் மாற்றங்களுடன் மறு விலையிடல் இடர்கள் ஏற்படக்கூடும். சில்லறை வணிகங்களில் குறைந்த நுகர்வோர் செலவினங்களின் விளைவாக கட்டண வருமானம் குறையக்கூடும் என்று சில கரிசனைகள் காணப்படுகின்றன, ஆனால், அதே நேரத்தில், நிதி அல்லாத வருமானத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் உள்ளார்ந்த வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு வங்கி அதன் வணிக மாதிரியை மாற்றியமைக்கும். எந்த வகையான இடர்நிலைகள் ஏற்பட்டாலும், வங்கி தனது வணிகம் மற்றும் செயற்பாட்டு பின்புலத்தை மேம்படுத்துதல் மற்றும் நீண்டகால செயல்திறனுக்கான திட்டமிடல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

இருப்பினும், முக்கியமான விடயம் என்னவென்றால், சூழலில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் புதிய இடர்கள் ஏறபடும் போது, தேசிய சேமிப்பு வங்கி நமது அவசிய பெறுமதிகள் மற்றும் இலட்சிய நோக்கினால் வழிநடாத்தப்படுகிறது. வங்கியியலின் வடிவம் மாறும் போது, நாம் அதற்கேற்ப மாறிக் கொள்வோம், ஆனால் எமது பொறுப்புகள் மற்றும் எமது நோக்கத்திற்கான எமது அர்ப்பணிப்பு உறுதியுடன் இருக்கும்.

பெரும் தொற்று நிலைமையினால் அவசியமான எமது செயல்பாடுகளின் மாற்றங்களின் போது எமது ஊழியர்களிடமிருந்து முழுமையான அர்ப்பணிப்பு தேவைப்படுகிறது, மேலும் ஆண்டு முழுவதும் எமது குழு காண்பித்த அர்ப்பணிப்பு மற்றும் மனப்பாங்கை இங்கே பாராட்ட விரும்புகிறேன். எந்தவொரு பொது உறுப்பினரையும் போலவே, எமது ஊழியர்களும் அவர்களின் வாழ்க்கை மற்றும் வேலை சீர்குலைந்ததால் கவலை மற்றும் நிச்சயமற்ற உணர்வுகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆயினும்கூட, அவர்கள் எமது வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்க உறுதியுடன் இருந்ததுடன், தேசிய சேமிப்பு வங்கியின் கௌரவம் மிக்க சேவையை தொடர்ந்தும் வழங்கினர்.

இதையொட்டி, எமது ஊழியர்களுக்கு அதிகாரமளிக்க மன அழுத்தமில்லாத ஒரு சூழலை உருவாக்க அதன் சக்தியால் எல்லாவற்றையும் செய்ய வேண்டியது அவசியம் என்று வங்கி உணர்ந்தது. சாத்தியமான இடங்களில், வங்கி தொலைநிலை வேலைத் தெரிவுகளை வழங்கியது. பௌதீக வருகை தேவைப்படும் போது, முடக்கத்துக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள கிளைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வங்கி போக்குவரத்து வகதிகளை வழங்கியது (அல்லது போக்குவரத்து செலவுகளை மீளளித்தது). வங்கி ஊழியர்களுக்கு முகக் கவசங்கள் மற்றும் சுத்திகரிப்புத் திரவங்களை வழங்கியதுடன், மேலும் அதன் கிளை வலையமைப்புக்கள் மூலம் சமூக இடைவெளி மற்றும் பிற சிறந்த சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை செயற்படுத்தியது. நேரடி ஆள்சார் பயிற்சி குறைக்கப்பட்டதுடன், வங்கி இணையவழிக் கருத்தரங்குகள் மற்றும் பிற நிகழ்நிலை பயிற்சி திட்டங்களை நடத்தியது. மேலும், வங்கி ஆண்டு முழுவதும் ஊழியர்களுக்கு முழு சம்பளம் மற்றும் சம்பளமற்ற சலுகைகளையும் வழங்கி, எமது ஊழியர்கள் எமது வெற்றிக்கு மையமாக இருப்பதை உறுதிப்படுத்தியிருந்ததுடன், நாம் அவர்களுக்கான எமது கடமைகளை தொடர்ந்தும் மதிக்கிறோம்.

இந்த மிகக் கடினமான ஆண்டில் எமது வாடிக்கையாளர்களின் விசுவாசத்திற்கும் ஆதரவிற்கும் நான் நன்றி கூறுகிறேன். இந்த நெருக்கடியின் போது இயக்குநர்கள் சபை ஆதரவாகவும் சிறப்பாகவும் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாகவும் இருந்ததுடன், அவர்களின் முயற்சிகள் மிகவும் பாராட்டப்படுகின்றன. வங்கிக்கு அளித்த மதிப்புமிக்க பங்களிப்புக்காக தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் பதில் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி தமித்த இரத்நாயக்கவுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது முகாமைக் குழு மற்றும் ஊழிய உறுப்பினர்கள் அனைவருக்கும் அவர்களது அயராத உழைப்பு மற்றும் முயற்சிகளுக்காக எனது பாராட்டுக்கள் உரித்தாகட்டும். தபால் மா அதிபர் மற்றும் தபால் திணைக்களத்தின் அனைத்து ஊழியர்களுக்கும், நாடு முழுவதும் தேசிய சேமிப்பு வங்கிக்கு வழங்கப்படும் உதவிகளுக்காக எனது ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கௌரவ பிரதமர் மற்றும் நிதி அமைச்சர், நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில்முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர், திறைசேரியின் செயலாளர் மற்றும் அதிகாரிகள், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் அதிகாரிகள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அவரது குழுவினர், பிற ஒழுங்குமுறை அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் அவர்களது குழு உறுப்பினர்களுக்கும் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் வழிகாட்டுதலுக்காக எனது நன்றியறிதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**எம்.பீ.ஏ. டபிள்யூ பீரிஸ்**

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

19 மார்ச் 2021

# தொழிற்பாட்டு சூழல்

## பூகோள பொருளாதாரம் ➔ முன்னெப்போதுமில்லாத நெருக்கடி →

2020 ஆம் ஆண்டு தலைமுறையில் ஒரு முறை நிகழும் பேரழிவு நிகழ்வுக்கு எவ்விதத்திலும் குறைவற்ற கொவிட்-19 உலகளாவிய தொற்றுநோயால் வரையறுக்கப்பட்டது. 2019 நவம்பரில் சீனாவில் தோன்றியதென நம்பப்படும் இந்த வைரஸ் பரம்பல் 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உலகம் முழுவதும் பரவியது. மார்ச் 2021 நிலவரப்படி, 115 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் வைரஸ் தொற்றுக்குள்ளாகி உள்ளதுடன், மேலும் இறப்பு எண்ணிக்கை 2.5 மில்லியனை தாண்டியுள்ளது என மதிப்பீடுகள் குறிப்பிட்டாலும், உண்மையான புள்ளிவிவரங்கள் மிக அதிகமாக இருக்கலாம் என்று கூறுகின்றன.

தொற்றுநோயால் ஏற்பட்ட சுகாதார நெருக்கடி உலகப் பொருளாதாரத்திற்கு ஒரு பாரிய, திடீர்ப்புற அதிர்ச்சியாக இருந்ததுடன், இரண்டு உலகப் போர்கள் மற்றும் முந்தைய நூற்றாண்டின் பெரும் மந்தநிலை ஆகியவற்றில் காணப்படாத அளவிலான மந்த நிலையைத் தூண்டியது. பரவலைத் தடுப்பதற்கு சமூக இடைவெளி மற்றும் நகர்வுக் கட்டுப்பாடுகள் போன்ற பொது சுகாதார நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன, ஆனால் அத்தகைய சூழலில் ஒட்டுமொத்த தேவையை அதிகரிப்பதற்கான முயற்சிகள் கடினமாக உள்ளதுடன், மேலும் சிக்கல்களை அதிகரிக்கும். மேலும், சில்லறை வர்த்தகம், கலை மற்றும் பொழுதுபோக்கு மற்றும் விருந்தோம்பல் போன்ற நேருக்கு நேர் சமூக தொடர்புகளின் அடிப்படையில் அமைந்த சேவைத் துறைகள் மிகவும் குறிப்பிடத்தக்களவு சுருக்கங்களை எதிர்கொண்டன. விமான நிலையங்கள் மூடப்பட்டு மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் உலகளாவிய போக்குவரத்து மற்றும் சுற்றுலா நிறுத்தப்பட்டது, சுற்றுலா மற்றும் சேவைகளைச் சார்ந்த பொருளாதாரங்களுக்கு இது பெரும் தாக்கத்தை உருவாக்கியது.

ஊழியர்களைத் தக்க வைத்துக் கொள்ள அரசாங்கங்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், தொற்றுநோய்களின் போது வேலைவாய்ப்பின்மை கடுமையாக உயர்ந்துள்ளது. சர்வதேச தொழிலாளர் அமைப்பு மதிப்பிட்டுள்ளவாறு, 2020 ஆம் ஆண்டு நிலவரப்படி, 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நெருக்கடிக்கு முந்தைய அடிப்படையுடன் ஒப்பிடும்போது, வேலை நேரத்தில் 8.8% இழப்பு ஏற்பட்டுள்ளதுடன், இது 255 மில்லியன் முழுநேர தொழிலாளர்களின் இழப்புக்கு சமமாகும்.

மீண்டும், பொருளாதாரங்களுக்கான திடீர், புற அதிர்ச்சிகள் தனித்துவமான விளைவுகளை ஏற்படுத்தின. முந்தைய மந்தநிலைகளில், பொருளாதார வீழ்ச்சியின் போது வேலையின்மை படிப்படியாக உயர்ந்து, பின்னர் மீட்பு நடவடிக்கைகளின் முன்பே உயர்ந்தது. ஆனால் தற்போதைய நெருக்கடியின் போது, அமெரிக்காவில், வேலையின்மை 2020 பிப்ரவரியில் 3.5% ஆக இருந்தது, முன்னெப்போதுமில்லாத வகையில் ஏப்ரல் மாதத்தில் 14.7% ஆக இது உயர்வடைந்தமை பெரும் மந்த நிலை காலப்பகுதியில் ஏற்பட்டதை விட (டிசம்பர் 2007 - ஜூன் 2009) மிக அதிகமாகும். இது டிசம்பர் மாதத்தில் 6.7% ஆக வீழ்ச்சியடைந்தது எனினும், இது தொற்றுநோய்க்கு முந்தைய அளவை விட இன்னும் அதிகமாகவே இருக்கிறது.

உலக மக்கள் தொகையில் ஏற்கனவே பாதிக்கப்படக்கூடிய பிரிவுகளான பெண்கள், இளைஞர்கள், அதிக தொடர்புத் துறைகளில் உள்ள தொழிலாளர்கள் மற்றும் முறைசாரா முறையில் பணியாற்றியவர்கள் (உலக தொழிலாளர் அமையத்தின் மதிப்பீடுகளின் படி, உலகளாவிய தொழிலாளர் தொகுப்பில் 60% ஆனோர்) நெருக்கடியின் தாக்கத்தை சந்தித்துள்ளதுடன் அவர்களது வாழ்வாதாரம் மற்றும் வருமானத்தில் மிகக் கடுமையான இழப்புகள் ஏற்பட்டுள்ளன. உலகின் பல பகுதிகளில் பரவலான பாடசாலைகளின் மூடுதல்கள் மனித மூலதன வளர்ச்சியில் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன, மேலும் இளம் தலைமுறை மீதான இதன் தாக்கம் இன்னும் தெரியவேண்டியுள்ளது. பொருளாதார மற்றும் கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளை மேலும் ஆழமாக்கும், மற்றும் வறுமை ஒழிப்பில் பல தசாப்த முன்னேற்றத்தை இல்லாதொழிக்கும் தீவிர வறுமையில் ஏறத்தாழ 100 மில்லியன் மக்கள் சிக்கலாம் என்று கணிப்புகள் தெரிவிக்கின்றன.

தடுப்பூசிகளின் வளர்ச்சி, உற்பத்தி மற்றும் பகிர்வு பற்றிய நேர்க்கணிய செய்திகள் 2021 ஆம் ஆண்டில் தொற்று நோய் விரைவாக முடிவுக்கு வருவதற்கான நம்பிக்கையை இந்த ஆண்டின் இறுதியில் உயர்த்தின. இத்தகைய உணர்வானது நுகர்வை அதிகரிக்க செய்வதுடன் மறுபுறம் அதிகரிக்கும் கேள்வியை ஈடு செய்யும் வகையில் முதலீடு மற்றும் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், கொவிட்-19 தடுப்பூசிகள் உலகளவில் ஒரு பொதுப் பண்டமாகக் கிடைக்கப் பெறுவதுடன், அனைத்து நாடுகளும் ஒரே நேரத்தில் தொற்று நோயைக் கட்டுப்படுத்த முடிந்தால் மட்டுமே பொருளாதாரத்தை வெற்றிகரமாக மீட்டெடுப்பது சாத்தியமாகும். தடுப்பூசிகளுக்கான சீரற்ற, விகிதாசார அணுகல், உலகெங்கிலும் பில்லியன் கணக்கான தடுப்பூசிகளை வழங்குவதற்கான விநியோக சவால்கள் மற்றும் பல்வேறு நாடுகளில் தடுப்பூசி திட்டங்களின் தரம் அனைத்தும் கடக்கப்பட வேண்டிய தடைகளாக உள்ளன. மேலும், தென்னாப்பிரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிற இடங்களில் கொவிட்-19 இன் புதிய விகாரங்கள் தோன்றுவதால் கணிப்புகள் சிக்கலானவையாக உள்ளது. இறுதியில், மீட்புக்கான காலவரிசை மற்றும் மந்தநிலையால் எஞ்சியிருக்கும் வடுக்களின் வடிவம் மற்றும் நிலைத்தன்மை ஆகியவை நிச்சயமற்ற தன்மையால் சூழப்பட்டதாகவே இருக்கின்றன.

# தொழிற்பாட்டு சூழல்



## உலகளாவிய வளர்ச்சி

2020 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் எதிர்பார்த்த வேகத்தை விட வலுவான பின்னர், சர்வதேச நாணய நிதியம் 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 3.5% சுருக்கமடைந்துள்ளதாக மதிப்பிட்டுள்ளது, இது கடந்த ஆண்டு மூன்றாம் காலாண்டு கணிப்புகளிலிருந்து 0.9% உயர்ந்துள்ளது. (இது 2020 ஆம் ஆண்டில் உலகப் பொருளாதாரம் 3.3% வளர்ச்சியடையும் என்று சர்வதேச நாணய நிதியத்தின் தொற்று நோய்க்கு முந்தைய சனவரி 2020 இன் எதிர்வுகூறல்கள் உலகப் பொருளாதாரம் 2021 ஆம் ஆண்டில் 5.5% வளர்ச்சியுடன் (0.3% மேல்நோக்கி திருத்தம்) மீண்டும் 2022 இல் 4.2% அளவில் மிதமானதாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு கோடை காலத்தில் பரவலாக தடுப்பூசிகள் கிடைப்பதற்கான எதிர்பார்ப்பு, வலுவான கொள்கை ஆதரவின் தொடர்ச்சியுடன், கொவிட்-19 முந்தைய கணிப்புடன் ஒப்பிடும்போது வெளியீட்டு இழப்புகள் மற்ற நாடுகளை விட அபிவிருத்தி அடைந்த பொருளாதாரங்களுக்கு சிறியதாக இருக்கும் என்று பரிந்துரைக்கப்பட்டு உள்ளது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட செயற்பாட்டு நிலைகளுக்கான மீட்பு பரவலாக வேறுபடும், அமெரிக்காவும் ஜப்பானும் 2021 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் அந்த நிலைகளை எட்டும் என்று எதிர்பார்க்கப்படும் அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியப் பகுதி மற்றும் இங்கிலாந்துக்கு அது 2022 வரை எடுக்கும். ஆயினும் கூட, அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களிடையே பொருளாதார நடவடிக்கைகளின் மீள் எழுச்சி வர்த்தக பங்காளிகளுக்கு சாதகமான சுழற்சி விளைவை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீனாவிற்கும் பிற நாடுகளுக்கும் இடையில் கணிசமான வேறுபாடு காணப்படும் என்பதுடன் வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்கள் வெவ்வேறு மீட்புப் பாதைகளைக் கண்டறியும் என்று கணிக்கப்பட்டுள்ளது. வலுவான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள், வலுவான பொது முதலீடு மற்றும் மத்திய வங்கியின் திரவத்தன்மை ஆதரவு ஆகியவற்றால் சீனாவின் மேம்பட்ட மீட்பு எளிதாக்கப்பட்டுள்ளது. இருப்பினும், உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் சுற்றுலா போன்ற வெளிப்புற வளர்ச்சியின் மூலங்களை பெரிதும் நம்பியுள்ள பொருளாதாரங்களில், மீட்பு மிதமானதாகக் காணப்படும்.

**பூகோள பொருளாதார வளர்ச்சி** வரைபடம் 01




மூலம்:உலக பொருளாதார முன்னோக்குத் தரவு - ஜனவரி 2021, சர்வதேச நாணய நிதியம்

## உலகளாவிய கடன்

உலகளவில், பொது நிதி 2020 ஆம் ஆண்டில் ஏற்றம்மிக்க சவாலை எதிர்கொண்டது. பொருளாதார நடவடிக்கைகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துவது பாதீட்டின் வருமானம் மற்றும் செலவினக் கூறுகள் இரண்டையும் பாதித்துள்ளது. சில காலமாக அதிகரித்திருக்கும் வளர்ந்து வரும் நாடுகளின் இறையியல் தளம்பல்கள் தொற்று நோயால் குறிப்பாக குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் மேலும் அதிகரித்துள்ளன.

உலகளாவிய அரசாங்கக் கடன் பிட்ச் மதிப்பீட்டின்படி சுமார் 10 திரில்லியன் அமெரிக்க டொலர்களால் 77.8 திரில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதுடன், இது 2020 ஆம் ஆண்டில் உலக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 94% க்கு சமமாகும். அரசாங்கங்கள் சுகாதாரத் துறைகளுக்கான செலவினங்களை உயர்த்தியதோடு, வீடுகளுக்கும் வணிகங்களுக்கும் ஆதரவை வழங்கியமை, கொரோனா வைரஸ் தொற்றுநோயால் ஏற்பட்ட வீழ்ச்சியில் இருந்து அவர்களின் பொருளாதாரங்களை உயர்த்தியது இதற்கான முக்கிய காரணமாகும். அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் கடனில் மிகப்பெரிய அதிகரிப்பை பதிவு செய்ததுடன், அவற்றைத் தொடர்ந்து வளர்ந்து வரும் சந்தை மற்றும் நடுத்தர வருமான பொருளாதாரங்கள் மற்றும் குறைந்த வருவாய் வளரும் நாடுகள் கடன்களைப் பதிவு செய்தன. தொற்றுநோய் தொடர்பான நடவடிக்கைகளின் அளவு மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மீட்டெடுப்பைக் கருத்தில் கொண்டு, பொதுக் கடன், சராசரியாக, 2021 ஆம் ஆண்டில் மிதமான அளவில் உயர்ந்து நடுத்தர காலத்தில் நிலைத்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பெரிய கடன் மட்டங்களானவை அரசாங்கங்கள், வணிகங்கள் மற்றும் குடும்பங்களை கடன் திருப்பி செலுத்த வேண்டி தேவைப்படுத்துவதால், பொருளாதார வீழ்ச்சியின் போது அதிக இடரை எதிர்கொள்ள செய்கின்றன.

கொவிட்-19 உலகளாவிய மந்தநிலை மற்றும் பொருளாதாரக் கொள்கை பதிலிறுக்கை என்பன வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களில் (EMDE) கடன் அளவினை உயரத் தூண்டியுள்ளது. தொற்றுநோய்க்கு முன்பே, நிலைமை ஆபத்தாக இருந்திருக்கிறது: உலகளாவிய கடன் 2019 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 230% ஆக உயர்ந்ததுடன் அரசாங்கக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 83% ஆக உயர்ந்தது. வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களில் மொத்த கடன் 2019 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 176%ஐ எட்டியது, இது பெரும்பாலும் தனியார் கடன்களால் இயக்கப்படுவதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 123% ஆக உயர்ந்தது. தொற்றுநோய் நிலைமை கடன் குவிப்பின் இந்த "நான்காவது அலையை" அதிகப்படுத்தியுள்ளதுடன், கடன் நிலைத்தன்மை மற்றும் நிதி நெருக்கடியின் சாத்தியம் குறித்த கவலைகளை எழுப்பியுள்ளது. 2020 ஆம் ஆண்டில், வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களில் அரசாங்கக் கடன் 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9% உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது 30 ஆண்டுகளில் மிகப்பெரிய அதிகரிப்பு ஆகும். அதிக கடன்பட்டுள்ள வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களின் இறையாண்மை முறிபரவலில் கூர்மையான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளமை மூலதன வெளியேற்றத்திற்கு வழிவகுக்கும்.

மூலம்: உலக வங்கியின் உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் ஜனவரி 2021.

# தொழிற்பாட்டு சூழல்

## ஆதரவுமிக்க நிதி நிலைமைகள்

விரைவான மற்றும் ஆக்கிரோஷமான தளர்வான நாணய, இறை மற்றும் நிதிக் கொள்கைகள் 2020 ஆம் ஆண்டில் அலைகளைத் தடுக்க பல வகையில் பங்களித்தன. இது போன்ற முன்கணிக்க முடியாத தொற்றுநோயால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மையும் திரவத்தன்மையின் தேவையை அதிகரித்துள்ளது. இந்த தேவைக்கு பதிலிறுக்கும் விதமாக, உலகளாவிய ரீதியில் மத்திய வங்கிகள் பொது அதிகாரங்களுடன் ஒருங்கிணைந்து நடவடிக்கை எடுப்பதன் மூலம் நிதிச் சந்தைகள் மற்றும் மெய்ப் பொருளாதாரத்துக்கு ஆதரவளிக்க முயற்சித்தன.

பல மத்திய வங்கிகள் நன்கு செயல்படும் சந்தைகளை உறுதிப்படுத்த போதுமான திரவத்தன்மையை வழங்குவதற்காக நாணய கொள்கைகளில் மேலும் தளர்வினை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளன. உலகளாவிய சந்தை தொற்றுநோயின் நோக்கில், கொள்கை விகிதங்களைக் குறைப்பதற்கும் பிணைப்பத்திர கொள்வனவுத் திட்டங்கள் மற்றும் சிறப்பு நெருக்கடி வசதிகளை விரிவாக்குவதற்கும் மத்திய வங்கிகளின் சமீபத்திய நடவடிக்கைகள் இந்த திரவத்தன்மை சவால்களை எதிர்கொள்ள முக்கியமான படிகளாக அமைந்தன. உலகம் “நீண்ட முடக்கத்தில்” வைக்கப்பட்டிருந்த போது ஒட்டுமொத்தமாக, 2020 ஆம் ஆண்டில் பொருளாதாரங்களை ஆதரிப்பதற்காக மத்திய வங்கிகளால் 207 கொள்கை விகிதக் குறைப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

உலகெங்கிலும், தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கான கடன் தயவு காலம், அரசாங்க மானியத்துடன் குறைந்த கட்டண கடன் வசதிகள் மற்றும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த விலை கட்டுப்பாடுகள் உள்ளடங்கிய பிற பொருளாதார தூண்டுதல் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன. சுருக்கமான வகையில், இந்த கொள்கைகள் வணிக நம்பிக்கையை அதிகரிக்கவும், கடன் விரிவாக்கத்தை ஏற்படுத்தவும், நுகர்வோர் செலவினங்களை நிர்வகிக்கவும், மற்றும் கடன்தீர்க்க அலைகளைத் தடுக்கவும் பங்களித்தன.

மேலும், சர்வதேச ஒழுங்கு விதிமுறை அமைப்புகள் தேசிய அதிகார சபைகளுக்கு மூலதனக் குறைப்பு இடையகங்களைக் குறைக்க அழைப்பு விடுத்ததுடன், மேலும் நெருக்கடிக்கு பிந்தைய ஒழுங்குவிதிமுறைக் கருவிகளை சரியான முறையில் நெகிழ்வான முறையில் பயன்படுத்தத் தூண்டின. இத்தகைய நடவடிக்கைகள் குறைக்கப்பட்ட மூலதன இடையகங்களிலிருந்து அதிகரித்த ஐந்தொகைக் கிடைப்பனவைப் பயன்படுத்த நிதித்துறைக்கு நம்பிக்கையை அளிப்பதுடன், கடன் - அரசாங்கத்தின் மூலம் கடன்கள், உத்தரவாதங்கள் அல்லது மத்திய வங்கி வசதிகள் - கொவிட்-19 இன் பொருளாதார விளைவுகளை சமாளிக்க சாத்தியமான வணிகங்களின் தீர்க்கமான கவலைகளை திறம்பட தீர்க்கத்தக்கதாக உள்ளது.

முக்கிய மத்திய வங்கிகள் தங்கள் தற்போதைய கொள்கை விகித நிலைப்பாடுகளை எதிர்வரும் காலங்களிலும் பேணும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் விளைவாக, வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்களுக்கு, நிதி நிலைமைகள் படிப்படியாக மேம்படும் அதே வேளையில் மேம்பட்ட அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களுக்கு நிலையானதாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

| பணவீக்கம் | பூகோள வர்த்தகம் |
|---|---|
| மிதமான பணவீக்கம் 2021-2022 முழுவதும் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படும் அதே வேளை, அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் 1.5% க்கும் குறைவாகவும், வளர்ந்து வரும் சந்தை மற்றும் வளரும் பொருளாதாரங்கள் வெறும் 4.0% க்கு அண்மித்து அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், இது பிந்தைய குழுவின் வரலாற்று சராசரியை விட குறைவாக உள்ளது. | உலகளாவிய பொருளாதாரம் மீண்டு வருவதால், 2021 ஆம் ஆண்டில் உலகளாவிய வர்த்தக அளவுகள் சுமார் 8.0% வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொவிட்-19 பரவல் குறைக்கப்படும் வரை எல்லை கடந்த சுற்றுலா மற்றும் வணிகப் பயணம் மிதமாக இருக்கும் என்பதால், சேவை வர்த்தக மீட்பு மெதுவாக இருக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. |

மூலம்: உலக பொருளாதார முன்னோக்குத் தரவு: ஜனவரி 2021, சர்வதேச நாணய நிதியம்

## பொருட் சந்தைகள்

வணிகங்கள் மூடப்பட்டு பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டில் எண்ணெய்க்கான கேள்வி வேகமாக சரிவடைந்தது. 2020 ஆம் ஆண்டின் முதல் பாதியில், கொவிட்-19 தொற்றுநோய்க்கான பதிலிறுப்புக்கள் உலகளாவிய பெட்ரோலிய கேள்வியைக் குறைத்து, பெட்ரோலிய எண்ணெய் சந்தைகளில் தளம்பல்களுக்கு வழிவகுத்தன. பெட்ரோலியத்தின் கேள்வி குறைந்து, அமெரிக்க பெட்ரோலிய எண்ணெய் இருப்புக்கள் அதிகரித்ததால், மேற்கு டெக்சாஸ் இடைநிலை (WTI) மசகு எண்ணெய் ஏப்ரல் 20 அன்று எதிர்மறை விலையில் வர்த்தகம் செய்யப்பட்டதுடன், WTI இன் எதிர்கால ஒப்பந்தத்திற்கான விலை 1983 இல் வர்த்தகம் தொடங்கியதிலிருந்து முதல் முறையாக பூஜ்ஜியத்தை விட குறைந்தது. அடுத்த நாள், மற்றொரு உலகளாவிய கச்சா எண்ணெய் விலை அளவுகோலான ப்ரெண்ட் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 9.12 அமெரிக்க டொலராக சரிவடைந்து, பல தசாப்தங்களில் அதன் மிகக் குறைந்த தினசரி விலையாகப் பதிவு செய்யப்பட்டது.

ஏப்ரல் மாதத்திற்குப் பிறகு கேள்வி திரும்பத் தொடங்கியவுடன், மசகு எண்ணெய் விலை அதிகரித்தது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில், பல கோவிட்-19 தடுப்பூசி பற்றிய செய்திகளுக்கும், பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு (ஒபெக்) மற்றும் கூட்டுறவு நாடுகளின் (ஒபெக் +) உறுப்பினர்களின் அறிவிப்பிற்கும் சந்தைகள் 2021 ஆம் ஆண்டில் உற்பத்தி அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் வகையில் பதிலிறுத்ததால் மசகு எண்ணெய் விலை அதிகரிக்கத் தொடங்கியது. 2021 ஆம் ஆண்டில் எண்ணெய் விலைகள் 2020 ஆம் ஆண்டிலிருந்து 20% க்கும் மேலாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஆனாலும் அவை 2019 ஆம் ஆண்டிற்கான சராசரியை விடவும் குறைவாகவே இருக்கும்.

தொற்றுநோயின் நிச்சயமற்ற தன்மைகள் பாதுகாப்பான புகலிட சொத்துக்களை நோக்கி மாறுவதற்கு வழிவகுத்தது. இதன் விளைவாக, தங்கத்தின் விலை 24% க்கும் மேலாக உயர்ந்து அவுன்சுக்கு ஐ.அ.டொ 1,769.64 ஆக சராசரியாக வர்த்தகம் செய்யப்பட்டது. எண்ணெய் அல்லாத பொருட்களின் விலைகள், குறிப்பாக உலோகங்கள் 2021 ஆம் ஆண்டில் பொருளாதார மீட்சி வேகம் அதிகரிப்பதால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பங்கு மூலதன சந்தைகள்

பங்கு மூலதன சந்தைகள் 2020 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்க எழுச்சியை சந்தித்தன. உலகளாவிய பங்குச் சந்தைகள் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் வரலாற்றில் மிக விரைவான சரிவைக் கண்டு, இறுதியில் முக்கிய மத்திய வங்கிகளின தளர்வான நாணயக் கொள்கையை பராமரிப்பதில் அர்ப்பணிப்பு காரணமாக, தக்க வைக்கப்பட்டு மீள்செயன்முறைப்படுத்தப்பட்டன.

அமெரிக்க பங்குசந்தைகள் ஐரோப்பிய சந்தைகளை விட சிறப்பாக செயற்பட்டன. Dow Jones 30 தொழிற்துறை டிசம்பரில் 3.3% (MoM) மற்றும் 2020யை விட 7.2% வளர்ச்சி பெற்றது. மேலும் NASDAQ Composite டிசம்பர் மாதத்தில் 5.7% (MoM) உயர்ந்து 2020 ஐ விட 43.6% ஆக உயர்ந்தது. யூரோ மண்டலத்தில், யூரோ STOXX 50 1.7%தால் டிசம்பரில் (MoM) அதிகரித்தது, ஆனால், ஆண்டு முடிவில், 2019 ஆம் ஆண்டின் இறுதியில் இருந்ததை விட 5.1% குறைவாக இருந்தது.

ஆசிய பசிபிக் சந்தைகள் 2020 ஆம் ஆண்டில் ஒரு கலப்பு ஆண்டைக் கொண்டிருந்தன. வளர்ந்து வரும் சந்தைகளின் மீட்பு 2020 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் கொவிட்-19 தடுப்பூசி முன்னேற்றங்கள் மற்றும் அமெரிக்க தேர்தலின் விளைவாக வேகம் எடுத்தது. மேலும், MCSI வளர்ந்து வரும் சந்தைகளின் குறியீடு 2020 ஆம் ஆண்டில் உலகளாவிய வளர்ந்த சந்தை பங்குகளை விட (14.9%) விருத்தி அடைந்தது.

(MoM – மாதாந்த வளர்ச்சி) (YoY – வருடாந்த வளர்ச்சி)

# தொழிற்பாட்டு சூழல்



## இலங்கைப் பொருளாதாரம்

கடந்த சில ஆண்டுகளில் இலங்கை பொருளாதாரம் 2019 ஆம் ஆண்டில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களால் நிலைமை மோசமடைந்து, செயல்திறனைக் காட்டிலும் குறைவாக பதிவு செய்துள்ளது. 2019 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் சில நம்பிக்கைகளை உருவாக்கியிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நடைபெறவிருந்த நாடாளுமன்றத் தேர்தல் ஆகஸ்ட் வரை ஒத்திவைக்கப்பட்டது. இது கொள்கை வகுப்பதில் நிலைத்தன்மையையும் முன்கணிப்பையும் மேம்படுத்தி, வணிக மற்றும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், புதிய நிர்வாகம் ஒட்டுமொத்த கேள்வி மற்றும் நுகர்வு, உற்பத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் ஒரு பாரிய நிதியியல் ஊக்குவிப்புப் பொதியை அறிமுகப்படுத்தியது. கூடுதலாக, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுக்குப் பின்னர் பாதிப்படைந்திருந்த கட்டுமானம், சுற்றுலா மற்றும் சிறிய மற்றும் நடுத்தர உரிமையாண்மைகள் உள்ளிட்டவற்றில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள துறைகளை புத்துயிர் பெறுவிப்பதற்காக தற்காலிக கடன் தயவு உள்ளிட்ட ஊக்குவிப்புக்கள் விரிவாக்கப்பட்டன.

ஆனால் 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் பொருளாதாரம் மீட்புக்கான அறிகுறிகளைக் காண்பித்ததைப் போலவே, தொற்றுநோயும் தாக்கியது. இலங்கை தனது முதல் கொவிட்-19 நோயாளியை 15 பிப்ரவரி 2020 அன்று அறிவித்ததுடன், மொத்த தொற்றாளர் எண்ணிக்கை 43,299 ஐ எட்டிய நிலையில் ஆண்டு முடிந்தது. முதல் அலையின் போது வைரஸ் பரவல் நோய்த்தொற்றுகளின் அலை மெதுவாக இருந்தது, ஆனால் இது 2020இன் நான்காம் காலாண்டில் இரண்டாவது அலைகளில் அதிவேகமாக வளர்ந்தது. முதல் அலையின் போது கொவிட்-19 பரவலைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அதாவது நாடு தழுவிய முடக்கம், நகர்வுக்கான கட்டுப்பாடுகள் மற்றும் சமூக இடைவெளி போன்ற கட்டாய உத்தரவுகள் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனைத் தடைக்குள்ளாக்கின. உலகளாவிய பொருளாதாரத்தில் கீழ்நோக்கிய போக்குகள் பரவியதன் மூலம் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளில் இடையூறுகள் தீவிரமடைந்துள்ளதுடன், இது இலங்கையின் பொருளாதாரம் 2020 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 16.4% என்ற மிகப் பாரிய வீழ்ச்சியை அனுபவிக்க வழிவகுத்தது. (முதலாம் காலாண்டின் 1.8% சுருக்கத்திற்குப் பிறகு).

அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியவற்றின் முன்னெப்போதுமில்லாத வகையிலான நிதிசார் தூண்டுதல் மற்றும் இறை தளர்த்தல் முயற்சிகள், புலம் பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து எதிர்பார்த்ததை விட அதிகமான பணம் அனுப்புதல் மற்றும் உலகளாவிய எண்ணெய் விலைகள் குறைந்தமை ஆகியவை எதிர்பார்த்ததை விட வலுவானதான 1.3% வளர்ச்சியை மீட்டெடுக்க வழிவகுத்ததுடன், மூன்றாம் காலாண்டில் அனைத்து துறைகளும் மீண்டும் முன்னேறின. ஆயினும், கொவிட்-19 நோய்த் தொற்றுகளின் எழுச்சி அலை, நான்காம் காலாண்டில் வேகத்தை குறைத்தது. 2019 ஆம் ஆண்டில் 2.3% விரிவாக்கத்துடன் ஒப்பிடும்போது, பொருளாதாரம் நான்காம் காலாண்டில் 1.3%தால் வளர்ச்சியடைந்துள்ளதுடன், ஒட்டுமொத்தமாக 2020 ஆம் ஆண்டில் 3.6% ஆக வீழ்ச்சியடைந்தது. இலங்கை மத்திய வங்கி 2021 ஆம் ஆண்டில் 6% வலுவான வளர்ச்சியை எதிர்பார்க்கிறது.

### பணவீக்கம்

மிதமான கேள்வி மற்றும் சிறப்பாக கடிவாளமிடப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் 2020 ஆம் ஆண்டில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டபடி, பணவீக்கத்தை 4%-6% க்கு இடையில் தக்க வைத்துக் கொள்ள உதவியது. 2019 ஆம் ஆண்டின் இறுதியில் 4.8% உடன் ஒப்பிடும் போது பணவீக்கமானது, கொழும்பு நுகர்வோர் விலைக் குறியீட்டால் (CCPI) அளவிடப்பட்டபடி 6.2% (YOY) உணவு விலைகள் அதிகரித்ததன் காரணமாக பெப்ரவரி காலத்தில் ஓர் விலகல் ஏற்பட்டது.

2020 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில், பணவீக்கம் பெரும்பாலும் 4% – 4.2% எல்லைக்குள் நிலையானதாக இருந்து (இது 2020 டிசம்பரின் முடிவில் 4.2% ஆக இருந்தது), பணவீக்க அழுத்தத்தைத் தளர்த்தியது. இலங்கை மத்திய வங்கியின் நடுத்தர கால பாரிய பொருளாதார சட்டகத்தின் படி, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான சராசரி ஆண்டு பணவீக்கம் முறையே 5% மற்றும் 5.8% ஆகும்.

**பணவீக்கம்** வரைபடம் 02




மூலம்: குடிசன தொகை மதிப்பீட்டுத் திணைக்களம்

### வெளிவாரித் துறை - வர்த்தக மீதி

இலங்கை ரூபாவைப் பாதுகாப்பதற்கும் அந்நிய செலாவணி நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும் ஒரு நடவடிக்கையாக, நிதி அமைச்சகம் ஏப்ரல் 2020 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பரவலான வர்த்தக இறக்குமதிகளுக்கு கட்டுப்பாடுகளை விதித்தது. இதன் விளைவாக, இறக்குமதி செலவினங்களின் சரிவு ஏற்றுமதி வருவாயின் வீழ்ச்சியை விட அதிகமாக இருந்தது (இறக்குமதி 2020 இல் 14.4% குறைந்துள்ளது, அதே நேரத்தில் ஏற்றுமதி 3.5% குறைந்துள்ளது). இது வர்த்தக பற்றாக்குறையில் 562 மில்லியன் அமெரிக்க டாலர்களாக கணிசமான சுருக்கத்திற்கு வழிவகுத்தது. 2019 ஆம் ஆண்டின் முடிவில் 784 மில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதியில் இது 222.29 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்தது (28.3%).

ஏப்ரல் மாதத்தில் அடிமட்டத்தை தொட்ட ஏற்றுமதியானது, நான்கு மாதங்களுக்குள் “V வடிவ மீட்பு” ஒன்றினைக் காட்டியதுடன் ஏற்றுமதி வருவாய் ஜீலை 2020இல் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களைத் தாண்டியது. இருப்பினும், அக்டோபர் 2020 முதல் கொவிட்-19 நோய்த் தொற்று மீண்டும் எழுந்ததைத் தொடர்ந்து உள்நாட்டு உற்பத்தி மற்றும் துணை சேவைகளுக்கு ஏற்பட்ட இடையூறுகள் மற்றும் வெளிநாட்டு கொள்வனவாளர்களிடமிருந்தான பலவீனமான கேள்வி காரணமாக, ஆண்டு காலப் பகுதியில் ஏற்றுமதியிலிருந்தான வருவாய் குறைந்தது. எவ்வாறாயினும், வர்த்தக மீதி ஆண்டின் இறுதியில் விரிவடையத் தொடங்கியது. சர்வதேச எண்ணெய் விலைகள் குறைதல், உள்நாட்டு கேள்வி குறைதல் மற்றும் அத்தியாவசியமற்ற பொருட்களின் மீதான இறக்குமதி கட்டுப்பாடுகள் மற்றும் தொழிலாளர்களின் பணம் அனுப்புதல் ஆகியவற்றால் வர்த்தக பற்றாக்குறையில் ஏற்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றமே வெளிவாரித் துறையின் மீதான அழுத்தம் குறைவடைந்தமைக்கான முக்கிய காரணமாக அமைந்தது.

இலங்கை மத்திய வங்கியின் நடுத்தர கால பேரினப் பொருளாதார கட்டமைப்பின் படி, சர்வதேச எண்ணெய் விலைகள், அரிசி இறக்குமதி மற்றும் இடைநிலை இறக்குமதி செலவுகள் (உற்பத்திக்கான உரங்கள் மற்றும் மூலப்பொருட்கள்) ஆகியவற்றால் வர்த்தக பற்றாக்குறை 2021 ஆம் ஆண்டில் 8.2% ஆக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் கூட, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகளை உந்தும் உலகளாவிய கேள்வி மீள் எழுச்சி, உள்நாட்டு கொள்கை சூழல், தொற்றுநோய் அச்சங்கள் குறைந்ததால் சுற்றுலா துறையின் மீட்சி, மற்றும் உள்நாட்டு சேவை (உ-ம்: போக்குவரத்து) மற்றும் சேவைகள் ஏற்றுமதி (உ-ம்: IT/BPO) ஆகிய இரு துறைகளிலும் ஏற்பட்ட ஊக்கம் என்பனவற்றால் இலங்கையின் வெளிவாரித் துறையானது நடுத்தர காலத்தில் நன்கு செயற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**வெளிவாரி வர்த்தகம்** வரைபடம் 03




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள்

நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட 7.6 பில்லியன் அமெரிக்க டொலர்களிலிருந்து 2020 ஆம் ஆண்டில் படிப்படியாக குறைந்துவிட்டன. ஆண்டு முடிவில் 5.7 பில்லியன் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட, இது 4.2 மாத இறக்குமதி அளவாக இருந்தது. பிற வளர்ந்து வரும் பொருளாதாரங்களைப் போலவே, இலங்கையின் அந்நிய நேரடி முதலீட்டு உள்வருகை குறைவாக இருந்ததுடன், அதே நேரத்தில் ரூபாக் கடன் அரச பத்திரங்கள் மற்றும் பங்குச் சந்தைகளில் இருந்தான வெளியேற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. மார்ச் 2020 முதல் ஜனவரி 2021 வரை சுற்றுலாப் பயணிகளுக்கு விமான நிலையங்கள் மூடப்பட்டதால் உல்லாசப் பிரயாண வருவாய்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டதுடன், இது 2020 ஆம் ஆண்டின் பெரும்பகுதிக்கு தொழிற்துறையை ஸ்தம்பிதம் அடையச் செய்தது. உல்லாசப் பிரயாண வருவாய் 2019 இல் காணப்பட்ட 3,607 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 73.5% வீழ்ச்சியடைந்து 2020 இல் 957 மில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. அக்டோபர் 2, 2020 அன்று மீள் செலுத்தப்பட்ட இறையாண்மை முறிகளுக்கான 1.0 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுக்குகளை மேலும் குறைத்தது. இறக்குமதியின் மாதங்களின் அடிப்படையில் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்குகள் 2021 ஆம் ஆண்டில் மேலும் 3.7 மாதங்களாக குறையும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

**ஒதுக்கு நிலவரம்** வரைபடம் 04




மூலம்: இலங்கை மத்திய வங்கி

# தொழிற்பாட்டு சூழல்



## அந்நிய செலாவணி

மார்ச் 2020 இல் தொற்று நோய்க்குப் பின்னர் ஏற்கனவே அழுத்தத்துக்குள்ளாகியுள்ள வெளிவாரித் துறை இலங்கை ரூபா நாணயத்தின் மீதும் அழுத்தம் கொடுத்தது. இருப்பினும், இறக்குமதி கட்டுப்பாடுகள் நாணயத்தின் மதிப்பிறக்க சரிவைத் தடுத்து தாங்கி நின்றன. ரூபாயின் மதிப்பு ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததைவிட 3.3% குறைந்துள்ளது. அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் உள்நாட்டு பரிவர்த்தனை சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடு ஆகியவை ரூபாயின் மீதான அழுத்தத்தைக் குறைத்து, 2020 டிசம்பரின் இறுதியில் செலாவணி மாற்று விகிதத்தை 187.18 அமெரிக்க டொலராக உறுதிப்படுத்தின.

## இறைத் துறை

தொற்றுநோயின் தாக்கத்தைத் தணிப்பதில் இலங்கை அரசின் இறையியல் கொள்கை கவனம் செலுத்தியதுடன், முந்தைய ஆண்டை விட செலுத்தப்படாத செலவினங்கள் பரவலடைந்து காணப்பட்டமை, அரசிறை ஒருங்கிணைப்பை உள்நாட்டு பொருளாதாரத்திற்கு சவால்மிக்கதாக்கியிருக்கிறது. 2020ஆம் ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில், அரசாங்க வருவாய் மற்றும் மானியங்கள் 2019 ஆம் ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 28% குறைந்து ரூபா 1,262.1 பில்லியனாகக் காணப்பட்டது. இந்த குறைவுக்கு முக்கிய காரணம் 2020 முதல் பதினொரு மாதங்களில் வரி வருவாயில் ஏற்பட்ட 30.0% வீழ்ச்சியாகும்.

அரச கடன் 2019 இல் காணப்பட்ட ரூபா 13,031.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 13.7% உயர்ந்து ரூபா 14,817.8 பில்லியனாக நவம்பர் 2020 இறுதியில் காணப்பட்டது. முக்கியமாக 2015 முதல் 2019 வரையிலான பின்தங்கிய பொருளாதார வளர்ச்சியிலிருந்து எழும் பொருளாதார நிலைமைகள் மற்றும் கொவிட்-19 தாக்கத்துடன், 2020 ஆம் ஆண்டின் இறுதியில் கடனானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 94.3% ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நடுத்தர கால பேரின அரசிறையியல் சட்டகத்தில் 2025ஆம் ஆண்டளவில், நிதிப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.0% ஆகவும், கடன் - மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 2025 க்குள் 75.5% ஆகவும் வரையறுக்க இலங்கை அரசு முயல்கிறது. மேலும், 6.0% அல்லது அதற்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சி, வேலையின்மையை 4.0% அல்லது அதற்கும் குறைவாக வைத்திருத்தல், வருவாய்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தை 14.0% க்கு மேல் அதிகரித்தல், முதன்மைக் கணக்க மிகையை அடைதல் மற்றும் ஒற்றை இலக்க வட்டி விகிதங்களை உறுதி செய்தல் ஆகியவை 2015-2021ஆம் ஆண்டிற்கான அரசின் முன்னுரிமைகளாகும்.

## கடன் தரப்படுத்தல்

கொவிட்-19 அதிர்ச்சிகளுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நாட்டின் இறையாண்மை கடன் விகிதத்தின் கூர்மையான உயர்வு மற்றும் குறைந்த நிதியிடலுக்கான தெரிவுகள், கடன் நிலைத்திருக்கும் தன்மை இடரை உயர்த்தும் என்ற வாதத்தில் 2020 ஆம் ஆண்டில் நாட்டின் கடன் தரப்படுத்தல் சர்வதேச தரப்படுத்தல் நிறுவனங்களால் தரமிறக்கப்பட்டது. அரசாங்கத்தின் வெளிவாரிக் கடன்கள் 2021 மற்றும் 2025க்கு இடையில் 23.2 பில்லியன் அமெரிக்க டாலர்களாக அல்லது ஆண்டுதோறும் சுமார் 4.0 பில்லியன் அமெரிக்க டாலர்களாக காணப்படும். மிக உயர்ந்தளவில் காணப்படும் அரச வட்டிக்கான வருவாய் விகிதங்களுக்கு ஏதுவாயிக்கின்ற தற்போதைய நிதியிடல் மாதிரியால் இலங்கையின் நிதியிடல் மற்றும் கடன் சவால்கள் பெரிதாக்கப்பட்டுள்ளன எனும் பொதுவான பார்வையை இந்த முகவர் அமைப்புக்கள் கொண்டுள்ளன. 2016 முதல் 2020 வரையிலான வருவாய்க்கான சராசரி வட்டி விகிதம் சுமார் 50% ஆகும். இலங்கையின் இறையாண்மை கடன் தரப்படுத்தலைக் குறைப்பது நாட்டின் வெளிவாரி கடன் செலவுகளை அதிகரிக்கும். எவ்வாறாயினும், இந்த தரக்குறையிடலை அரசாங்கம் சவாலுக்குட்படுத்தியிருக்கிறது. இந்த கரிசனைகள் எழுப்பப்பட்ட போதிலும், அரசாங்கம் அக்டோபர் 2020 இல் முதிர்ச்சியடைந்த சர்வதேச இறையாண்மை முறிகள் உட்பட அனைத்து முதிர்ச்சியடைந்த கடமைகளையும் உடனடியாக தீர்க்க நடவடிக்கை எடுத்திருந்தமை கவனிக்கப்பட வேண்டும்.

| தரப்படுத்தல் முகவர் | 2020 முடிவில் தரப்படுத்தல் | முன்னயை தரப்படுத்தல் |
|---|---|---|
| ∴பிட்ச் | நவம்பர் 2020 இல் CCC | B (-) (எதிர்க்கணிய) |
| எஸ் & பீ | டிசம்பர் 2020 இல் CCC + (நிலைத்த) | B (-) நிலைத்த |
| மூடி | செப்டம்பர் 2020 இல் CAA1 (நிலைத்த) | B2 (எதிர்க்கணிய) |

## நாணயத் துறை →

தனியார் துறைக்கு அதிக கடன் வழங்குவதற்கான ஒரு நடவடிக்கையாக, இலங்கை மத்திய வங்கி கொள்கை விகிதங்களை வரலாற்று ரீதியாக குறைந்த மட்டத்திற்குக் குறைப்பதன் மூலம் ஆண்டு முழுவதும் தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்தது. துணைநில் வைப்பு வசதி வீதம் (SDFR) மற்றும் துணைநில் கடன்வசதி வழங்கல் வீதம் (SLFR) ஆகிய இரண்டும் ஆண்டு முழுவதும் 5 தடவைகள் மொத்தம் 250 புள்ளிகளாலும் (முறையே 4.5% மற்றும் 5.5%, ஆண்டு முடிவில்) மற்றும் நியதி ஒதுக்கு விகிதம் (SRR) மொத்தம் 300 புள்ளிகளால் (ஆண்டு முடிவில் 2.0%) இரண்டு முறையும் குறைக்கப்பட்டது.

இது வங்கிகளுக்கு மிகவும் தேவையான ஆறுதலைக் கொடுத்ததுடன் வங்கி முறைமையில் அவர்களின் கடன் சேர்க்கைகளை அதிகரிக்க ஊக்குவித்தது. மேலும், வங்கி விகிதம் 650 புள்ளிகள் மூலம் 15% முதல் 8.5% வரை குறைக்கப்பட்டமை வங்கி முறைமைக்கு மேலும் குறைந்த செலவில் நிதி கிடைப்பதை உறுதி செய்தது. மேலும், இலங்கை மத்திய வங்கி கடன் தயவு காலம், சலுகை விகிதத்திலான சிறப்பு கடன் திட்டங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட கடன் உற்பத்திகளில் வட்டி வீத உச்ச எல்லைகள் நாணயக் கொள்கையின் பரவலை விரைவுபடுத்தியது. கடனட்டைகள் (18%), முன்பே ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக மேலதிகப் பற்றுக்கள் (16%), அடகு (10%) மற்றும் தண்ட வட்டி விகிதங்கள் (2 புள்ளிகளால்) போன்ற பிற வட்டி விகிதங்களும் ஆகஸ்ட் 2020 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் குறைக்கப்பட்டன. ஆண்டு முழுவதும், மத்திய உள்நாட்டு பொருளாதாரத்தை ஆதரிக்க சந்தை கடன் விகிதங்களை குறைக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வங்கி வலியுறுத்தியது. மேலும், விசேட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் விசேட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் விருப்பப்படி செலுத்தும் கொடுப்பனவுகளை கட்டுப்படுத்தும் உத்தரவை மத்திய வங்கி வெளியிட்டது.

எவ்வாறாயினும், 2020 ஆம் ஆண்டு முழுவதும் இந்த நிலையான பண தளர்த்தலுக்கு மத்தியில், தனியார் துறையின் கடன் வளர்ச்சி 2020 டிசம்பரின் இறுதியில் 6.5% ஆக இருந்தது. நாட்டின் பொருளாதார மீட்சிக்கு வழிவகுக்கும் வகையில் அதன் தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தொடர இலங்கை மத்திய வங்கி திட்டமிட்டுள்ளது. குறைந்த பணவீக்கம், குறைந்த வட்டி வீத சூழலில், தனியார் துறைக்கான கடன் 2021 ஆம் ஆண்டில் சுமார் 14.0% ஆகவும், நடுத்தர காலத்திற்கு ஆண்டுதோறும் 12.0%-12.5% ஆகவும் விரிவடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் பொருளாதாரத்தின் இயந்திரமான நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனத் (SME) துறைக்கு குறிப்பாக கவனம் செலுத்தப்படும்.

| நாணயக் கொள்கை மீளாய்வு விளைவுள்ள விகிதம் | துணைநில் வைப்பு வசதி வீதம் % | துணைநில் கடன்வசதி வழங்கல் வீதம் % | நியதி ஒதுக்கு விகிதம் % | வங்கி வீதம் % |
|---|---|---|---|---|
| 30 ஜனவரி 2020 | 6.50 | 7.50 | 5.00 | 15.00 |
| 17 மார்ச் 2020 | 6.25 | 7.25 | 4.00 | 15.00 |
| 03 ஏப்றல் 2020 | 6.00 | 7.00 | 4.00 | 15.00 |
| 16 ஏப்றல் 2020 | 6.00 | 7.00 | 4.00 | 10.00 |
| 06 மே 2020 | 5.50 | 6.50 | 4.00 | 9.50 |
| 16 ஜுன் 2020 | 5.50 | 6.50 | 2.00 | 9.50 |
| 09 ஜுலை 2020 | 4.50 | 5.50 | 2.00 | 8.50 |

அட்டவணை 02 நாணயக் கொள்கை மீளாய்வு

மூலம்: இலங்கை மத்திய வங்கி

இந்தப் பின்னணியில், அரசாங்கப் பிணையங்களின் விளைவும் இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவில் வீழ்ச்சியடைந்தது. திறைசேரி உண்டியல்களின் முதன்மை சந்தை விளைவானது 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் முதிர்ச்சிக்கு 282 புள்ளிகள், 322 புள்ளிகள் மற்றும் 340 புள்ளிகள் (ஆண்டுதோறும்) குறைந்து முறையே 2020 டிசம்பர் இறுதியில் 4.69%, 4.80% மற்றும் 5.05% ஆக குறைக்கப்பட்டது.

2020 ஆம் ஆண்டில் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிச் சந்தையில் வரலாற்றிலேயே குறைவான விளைவு விகிதங்கள் காணப்பட்டன. முதன்மை சந்தையில் அனைத்து முதிர்வுகளினதும் விளைவானது குறைவடைந்தமைக்கேற்ப, அரசாங்கப் பிணையங்களின் மீதான இரண்டாம் நிலை சந்தை விளைவு வளைவும் 2019 ஆம் ஆண்டின் இறுதியுடன் ஒப்பிடும்போது 2020 இறுதிக்குள் கீழ்நோக்கி சீராக்கப்பட்டது. குறுகிய கால முதிர்வுகளின் விளைவு வீழ்ச்சியானது நீண்ட கால விளைவு வீழ்ச்சியைக் காட்டிலும் அதிகமாக இருந்ததுடன், இது தொற்றுநோயுடன் தொடர்புடைய நிச்சயமற்ற தன்மையால் குறுகிய கால இடரற்ற சொத்துகளில் முதலீடு செய்வதற்கான அதிகரித்த விருப்பத்தைப் பிரதிபலிக்கிறது. பணச் சந்தையில், அழைப்பு மற்றும் மறுகொள்வனவு விகிதங்கள் 2020 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான தெளிவான கீழ்நோக்கிய போக்கைக் காட்டுகின்றன. டிசம்பர் 2020 இன் இறுதியில், விகிதங்கள் கடந்த வருடத்தின் 7.40%-7.55% உடன் ஒப்பிடும்போது 4.53%-4.55% ஆக உயர்ந்தன.

## இலங்கையின் வங்கித் துறை

2020 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கித் துறை 24 உரிமம் பெற்ற வணிக வங்கிகள் (LCB) மற்றும் 6 உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள் (LSB) ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. வங்கித் துறையின் மொத்த சொத்துத் தளம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 14.7 திரில்லியனாகவும், இது டிசம்பர் 2019 இன் இறுதியில் அறிக்கையிடப்பட்ட ரூபா 12.5 திரில்லியனுடன் ஒப்பிடும் போது 17.1% வளர்ச்சியை காட்டுவதாகவும் உள்ளது. சொத்துக்களின் அதிகரிப்பானது முக்கியமாக முதலீடுகளில் 39.7% விரிவாக்கம் மற்றும் கடன்கள் மற்றும் முன்னேற்றங்களின் 11.9% வளர்ச்சியால் உந்தப்பட்டு இருக்கிறது. ஆயினும் கூட, நலிந்த உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் அதிக கடன் இடர் காரணமாக 2020 ஆம் ஆண்டில் இலாபம் மற்றும் சொத்து தரம் மோசமடைந்துள்ளது.

### கடன் வளர்ச்சி

2020 ஆம் ஆண்டில் வங்கித் துறை ஒட்டுமொத்தமாக கடன் விரிவாக்கத்தை பதிவுசெய்தது, இருப்பினும் இந்த வளர்ச்சியின் பெரும்பகுதிக்கு அரசாங்கங்கள் மற்றும் அரசுடமை நிறுவனங்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களிலேற்பட்ட அதிகரிப்பு காரணமாக இருந்தது. வருடாந்த கடன் வளர்ச்சி 2019 டிசம்பரில் அதன் மிகக் குறைந்த விகிதமான 5.6 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 11.9 சதவீதமாக அதிகரித்தது.

ரூபாய் கடன்கள் மற்றும் வெளிநாட்டு நாணயக் கடன்கள் (அமெரிக்க டொலர் அடிப்படையில்) 2019 இன் முடிவில் பதிவு செய்யப்பட்ட 6.4% மற்றும் 5.4% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் முறையே 10.1% மற்றும் 12.4% ஆக அதிகரித்துள்ளன.

### கடன் தரம்

2020 ஆம் ஆண்டில் வங்கித் துறையில் ஆதிக்கம் செலுத்தும் பிரச்சினையாக கடன் தரம் மற்றும் அதன் கையாள்கை இடர் மோசமடைந்தமை காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் முடிவில் இருந்து, இந்தத் துறை கடன்களிலும் முற்பணங்களிலும் படிப்படியாக ஆனால் முற்போக்கான வளர்ச்சியைக் கண்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டில் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களாலும், 2020 இல் கொவிட்-19 தொற்று நோயினாலும் ஏற்பட்ட மோசமான வணிகச் சூழலால் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கான கடன் தயவின் கீழ், கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வகைப்பாடு முடக்கப்பட்டிருந்தாலும், வங்கித் துறையின் ஒட்டுமொத்த தொழிற்படாக் கடன் விகிதம் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 4.9 சதவீதத்தை எட்டியது, இது 2019 இல் பதிவு செய்யப்பட்ட 4.7 சதவீதத்திலிருந்து சற்று அதிகரித்துள்ளது. தயாரிப்புத் துறையானது மிக உயர்ந்த தொழிற்படாக் கடன் விகிதம் 8.7%ஐ பதிவுசெய்துள்ளதுடன், அதைத் தொடர்ந்து வர்த்தகத் துறை (7.4%), விவசாயம் (6.9%), சுற்றுலா (6.8%) மற்றும் கட்டுமானம் (6.4%) ஆகவும் பதிவுசெய்துள்ளது. விசேட ஏற்பாட்டுக் காப்பு விகிதம் செப்டம்பர் 2019 இன் இறுதியில் 38.2 சதவீதத்திலிருந்து 2020 செப்டம்பர் இறுதிக்குள் 45.9 சதவீதமாக அதிகரித்தது. சொத்து தரத்தில் தொற்றுநோயின் முழு தாக்கமும் 2021 ஆம் ஆண்டில் தயவு காலம் நீக்கப்படும்போது மட்டுமே முழுமையாக கண்டறியப்படும்.

# தொழிற்பாட்டு சூழல்

## நிதியீட்டம்

வைப்புக்கள் வங்கித் துறையின் நிதியீட்டத்தின் முக்கிய மூலாதாரமாகத் தொடர்ந்து இருப்பதுடன், மொத்த சொத்துக்களில் 76.0% பங்கைக் கொண்டிருந்ததுடன் கடந்த ஆண்டை விட குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டியது. இந்த அதிகரிப்பு தொற்றுநோய் காரணமாக ஏற்பட்ட விருப்பத்துக்குரிய செலவினங்களின் வீழ்ச்சியாலும், வங்கி சாரா நிதி நிறுவன (NBFI) துறையிலிருந்து வங்கித் துறைக்கு வைப்புத்தொகைகளின் நகர்த்தல் மூலமும் உந்தப்பட்டிருக்கலாம். வைப்புத் தொகையின் வளர்ச்சி 2019 இல் 7.9% இலிருந்து 2020 இல் 21.6% ஆக உயர்ந்துள்ளது. வைப்பு வளர்ச்சியின் இந்த எழுச்சியுடன், கடனுக்கான வைப்புக்களுக்கான விகிதம் 2019 டிசம்பரில் 88.7% இலிருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 81.6% ஆகக் குறைந்ததுடன், இது வைப்பு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் கடன் வளர்ச்சி குறைவதைக் குறித்து நிற்கின்றது.

## இலாபத் தன்மை

2020 ஆம் ஆண்டில் வங்கித் துறையின் ஒட்டுமொத்த இலாபத்தன்மை குறைவடைந்தது. இது பெரும்பாலும் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நியாயமான தளர்வுக் கொள்கை நடவடிக்கைகளின் விளைவாக வீழ்ச்சியடைந்த நிகர வட்டி எல்லையின் காரணமாக ஏற்பட்டு இருந்தது. இருப்பினும் இது வட்டி அல்லாத வருமானத்தின் அதிகரிப்பு மற்றும் முந்தைய ஆண்டை ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் வீழ்ச்சியடைந்த வட்டி அல்லாத செலவுகள் மற்றும் வரிகளினால் ஓரளவுக்கு எதிரீடு செய்யப்பட்டது. வட்டிச் செலவினங்கள், முந்தைய ஆண்டின் 8.1% வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது, நிகர வட்டி வருமானம் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் 0.9%ஆல் குறைந்துள்ளது. அதன்படி, நிகர வட்டி எல்லை 2019 இல் இருந்த 3.6 சதவீதத்திற்கு எதிராக 2020 ஆம் ஆண்டில் 3.1 சதவீதமாகக் குறைந்தது. இந்தத் துறையின் சொத்துக்கள் மீதான வருவாய் (ROA) 2019 ஆம் ஆண்டில் 0.9 சதவீதத்திலிருந்து 2020 ஆம் ஆண்டில் 1.0 சதவீதமாக ஓரளவு அதிகரித்தது, அதே நேரத்தில் உரிமையாண்மை மீதான வருமானம் (ROE) 10.3%லிருந்து 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 11.3%ஆக அதிகரித்தது.

## மூலதனம் மற்றும் திரவத்தன்மை

அடிப்படையில், தொற்றுநோயால் ஏற்பட்ட நிதித்துறைக்கு ஏற்பட்ட அதிர்ச்சிகள் இயற்கையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவையாக இருந்தன (உதாரணமாக, 2007-2008 உலக நிதி நெருக்கடியின் நிலைமை போலல்லாமல்). விவேகமான ஒழுங்குவிதிமுறை தேவைப்பாடுகளை அமுல்படுத்தியதன் விளைவாக, தொற்றுநோயின் ஆரம்பத்தில் வங்கித் துறை மூலதனம் மற்றும் திரவத்தன்மை இடையகங்களுடன் சிறப்பாக பேணப்பட்டது.

முன்னெப்போதுமில்லாத வகையில் நாணயத் தளர்வு, ஒழுங்குவிதிமுறை சகிப்புத்தன்மை மற்றும் கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கான குறைந்த கேள்வி மற்றும் குறிப்பிடத்தக்க வைப்பு வளர்ச்சி மற்றும் இலங்கை மத்திய வங்கி திரவ சொத்துக்களின் வரையறையைத் திருத்தியமை, அனைத்தும் 2020 ஆம் ஆண்டில் வங்கித் துறையில் போதுமான அளவு திரவத்தன்மையைக் கொண்டிருப்பதை உறுதிசெய்தன. இதன் விளைவாக, சட்டநியதிப் படியான திரவ சொத்து விகிதம் வங்கித் துறையின் உள்நாட்டு வங்கி அலகுகளில் 2020 டிசம்பர் மாத இறுதியில் 37.3% ஆக இருந்தது, இது குறைந்தபட்ச சட்டநியதிப்படியான தேவைப்பாடு 20.0%ஐ விட அதிகமாக இருந்தது.

வங்கித் துறை ஆரோக்கியமான மூலதன போதுமை விகிதங்களை (CAR) பேணியதுடன், அடுக்கு 1 மூலதன போதுமை விகிதத்தை 13.0% ஆகவும், 2020 ஆம் ஆண்டின் முடிவில் மொத்த மூலதன போதுமை விகிதத்தை 16.5% ஆகவும் பதிவு செய்தது, இது பாசல் III இன் உள்நாட்டு முறைமையில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான குறைந்தபட்ச தேவைகளான 8.5%/9% மற்றும் 12.5%/13.0%க்கும் உள்நாட்டு முறைமையில் முக்கியத்துவமற்ற வங்கிகளுக்கான முறையே 8.0% மற்றும் 12.0% ஆகியவற்றுக்கு மேலாகவும் பேணப்பட்டது.

## துறைசார் முன்நோக்கு

எதிர்வரும் ஆண்டு இந்தத் துறைக்கு சவாலானதாக இருக்கும். பொருளாதார நடவடிக்கைகளை புதுப்பிப்பதற்கான அரசாங்க தூண்டுதல் முயற்சிகள் மற்றும் தொடர்ச்சியாகக் குறைக்கப்பட்ட கடன் விகிதங்கள், சிறப்பு கடன் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் அதிகரித்துவரும் முதலீட்டாளர்களின் உணர்வு ஆகியவை கடன் கேள்விக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன், கடன் வளர்ச்சியானது குறுகிய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இந்தத் துறையின் தொழிற்படாக் கடன் மட்டத்தின் முழு விம்பம் 2021 இல் மட்டுமே வெளிப்படும். நீடித்த குறைந்த வட்டி வீத சூழல் தொடர்ந்து நிகர வட்டி எல்லைகளுக்கு அழுத்தம் கொடுக்கும், மேலும் வங்கிகளின் வணிக மாதிரிகள் அவற்றின் இலாபத்தின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

இலாபம் மற்றும் நெகிழ்திறனில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்ளக்கூடும் சிறிய வங்கிகளை ஒன்றிணைத்து அல்லது பெரிய வங்கிகளுடன் ஒன்றிணைந்து அதிக சாத்தியமான மற்றும் நீடித்த நிதி நிறுவனங்களை உருவாக்கும் நோக்கத்திற்காக, இலங்கை மத்திய வங்கி ஒரு சந்தை உந்துதல் ஒருங்கிணைப்பு செயன்முறையை எளிதாக்கும் நிலையை பராமரிக்கிறது. கொவிட்-19 தொற்றுநோய் நெருக்கடிக்கான தயார்நிலையின் அவசியத்தையும் வலியுறுத்தியதுடன், மேலும் அத்தகைய எதிர்பாராத நிலைமைகளைச் சமாளிக்க உரிமம் பெற்ற வங்கிகள் தங்கள் மீட்புத் திட்டங்களை புதுப்பிக்க வேண்டுகிறது. தொற்றுநோய்களின் போது தொலைதூர சேவைகளுக்கான அதிகரித்த தேவையை பூர்த்தி செய்ய எண்ணியல் வங்கியின் முடுக்கம் இந்த துறையில் ஒரு நேர்க்கணிய மாற்றமாகும். எண்ணியல் வங்கியை ஆதரிப்பதற்கான ஒழுங்குவிதிமுறை சூழலில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்கள், வங்கிகளின் இணைய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான மேற்பார்வை கட்டமைப்போடு, 2021 ஆம் ஆண்டில் எண்ணியல் மயமாக்கலை முன்னோக்கி நகர்த்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

வலுவான பெறுமதிகளில் கட்டமைக்கப்பட்டுள்ள எங்கள் தந்திரோபாயம், தொழிற்பாட்டு சூழலைப் பற்றிய நமது ஆழமான புரிதலைப் பிரதிபலிப்பதுடன், எங்கள் அனைத்து அக்கறையுள்ள தரப்பினருக்கும் நிலைபேறான பெறுபேறுகளை வழங்குவதுடன், ஆளுகை மற்றும் இடர் முகாமை திறன்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

## தந்திரோபாய திட்டமிடல் செயல்முறை

எங்கள் தந்திரோபாயம் எமது அடையாளம், எமது திறன்கள், நமது தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகள், எங்கள் பங்குதாரர்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் மற்றும் எங்கள் இயக்க சூழலை கருத்தில் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த சிந்தனை அணுகுமுறையின் மூலம் அடையப் பெறுகிறது. எமது ஒருங்கிணைந்த தந்திரோபாயத் திட்டத்தின் ஒரு பகுதி, ஆறு மூலதனங்களுக்கு இடையேயான இணைப்பு, ஒன்றுக்கொன்று சார்ந்திருத்தல் மற்றும் எதிரீடுகளை கருத்தில் கொள்வதுடன், இது குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட கால பெறுமதியை உருவாக்கும் எங்கள் வங்கியின் திறனில் தாக்கம் புரியும் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளல் செயன்முறையை பாதிக்கும். எங்கள் ஒருங்கிணைந்த தந்திரோபாய திட்டமிடல் செயல்முறை குறுகிய காலத்திலிருந்து நீண்ட கால எல்லைக்குள் தந்திரோபாய உருவாக்கம் மற்றும் செயலாக்கம் ஆகியவற்றை இயக்குகிறது.

எமது ஒருங்கிணைந்த தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறை கீழ்வருவனவற்றை உள்ளடக்கும்:



தந்திரோபாய உருவாக்கம்



தந்திரோபாய செயலாக்கம் மற்றும் வள ஒதுக்கீடு



கண்காணித்தல் கட்டம்

உரு 02

## தந்திரோபாய உருவாக்கம்

வங்கியின் தந்திரோபாயங்கள் அதன் தூரநோக்கு, இலட்சிய நோக்கு மற்றும் பெறுமதிகளுடன் தெளிவாக இணைக்கப்பட்டுள்ளன. விருத்தி செயல்முறை வெளிப்புற மற்றும் உள்ளக வணிகச் சூழலை அறிந்து கொள்வதோடு வாய்ப்புகள், சவால்கள் மற்றும் வரலாற்று கற்றல்களில் பொருத்தமான காரணிகளையும் எடுத்துக்கொள்கிறது.

எங்கள் தந்திரோபாய திட்டமிடல் செயற்பாட்டின் ஒரு பகுதியாக, போக்குகளுக்கான வெளிப்புற சூழலை ஆய்வு செய்து, இந்த போக்குகள் வங்கித் துறையை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை பகுப்பாய்வு செய்கிறோம். செயற்திறன் மிக்க அக்கறையுள்ள தரப்பினர் ஈடுபாட்டுடன் எங்கள் வணிக மாதிரி மற்றும் தொழிற்பாட்டு சூழலின் மதிப்பீடானது முக்கிய சிக்கல்கள் மற்றும் பெறுமதி சேர்க்கும் அல்லது கழிக்கும் அம்சங்களைப் பற்றிய நமது புரிதலை வடிவமைக்கிறது. இந்த சிக்கல்களின் விளைவாக ஏற்படும் இடர் மற்றும் வாய்ப்புகள், குறுகிய, நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கான எங்கள் தந்திரோபாயத்தை தெரிவிக்கின்றன.

## தந்திரோபாய செயலாக்கம் மற்றும் வள ஒதுக்கீடு

எங்கள் நிதி மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களில் எங்கள் தந்திரோபாயம் மற்றும் முக்கிய வளங்கள் ஒருங்கிணைக்கப்படுவதை எங்கள் திட்டமிடல் செயன்முறை உறுதி செய்கிறது. எதிர்கால வளர்ச்சி மற்றும் பொறுப்பான இடர் முகாமைக்கு இடையில் ஒரு சீரான அணுகுமுறையை உறுதி செய்வதற்கான சாத்தியமான வாய்ப்புகள் எங்கள் இடர் ஏற்புநிலைக் கட்டமைப்பிற்குள் மதிப்பிடப்படுகின்றன.

இந்த செயன்முறையின் மூலம் அடையாளம் காணப்பட்ட எங்கள் நீண்டகால தந்திரோபாய திட்டங்கள் இயக்குநர்கள் சபையினால் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டு பின்னர் அவை நிறைவேற்றுவதற்கான நீண்டகால திட்டமிடல் செயல்பாட்டில் சேர்க்கப்படுகின்றன. எங்கள் குறுகிய கால உத்திகள் மற்றும் இலக்குகள் எங்கள் நீண்டகால தந்திரோபாய இலக்குகளுடன் இணைக்கப்பட்டு அவை வங்கி முழுவதும் பயன்படுத்தப்படுகின்றன. ஒட்டுமொத்த உத்திகள் மற்றும் திட்டங்கள் தனிப்பட்ட பிரிவுகள்/துறைகளுக்கு தெளிவாக வரையறுக்கப்பட்ட பொறுப்புகளுடன் இணைக்கப்படுவதுடன், மேலும் ஊழியர்களின் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளுடன் கடைசி மைலுடன் இணைக்கப்பட்டுள்ளன.

எங்கள் தந்திரோபாய வணிக திட்டமிடல் கட்டமைப்பானது, எங்களது கூறப்பட்ட தந்திரோபாய நோக்கங்களை அடைவதற்குத் தேவையான வளங்களை (தகவல் தொழிநுட்ப, மனிதவள, நிதி) அடையாளம் காண உதவுகிறது. எங்கள் செயற்பாட்டுக் குழுக்கள் வளங்களின் கிடைப்பை உறுதி செய்வதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதுடன், இந்த வளங்கள் எங்கள் நடுத்தர கால செயல் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படுகின்றன. இது தேவையான திறன்களையும் எங்கள் இலட்சியங்களை அடைவதற்கு மேற்கொள்ளப்பட்ட கவனம் செலுத்தும் முயற்சிகளையும் கோடிட்டுக் காட்டுகிறது. வளக் கிடைப்பனவு மற்றும் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்பட்ட தேவைகளின் அடிப்படையில், மாற்ற முயற்சிகள் மற்றும் புதிய திட்டங்களுக்கு மீண்டும் முன்னுரிமை அளிக்கும் சில எதிரீடுகள் செய்யப்படுகின்றன.

## கண்காணிப்பு கட்டம்

சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு விரைந்து பதிலிறுக்க, வங்கியை செயற்படுத்த, தந்திரோபாயங்கள் மற்றும் திட்டங்களின் முன்னேற்றம் பல்வேறு அறிக்கைகள் மூலம் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு முகாமைக் குழு மற்றும் சபையினால் வரையறுக்கப்பட்ட இடைவெளியில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது. அடையப்பட்ட முன்னேற்றத்திற்கு எதிரான எங்கள் தந்திரோபாய முன்முயற்சிகளின் வலிமையைக் கண்டறிந்து சோதிக்கவும், எதிர்கால சூழ்நிலைகளை சோதிக்கவும் இந்த செயன்முறை நமக்கு உதவுகிறது.

மாதாந்த அடிப்படையில், பாதீடு மற்றும் வரலாற்றுடன் ஒப்பிடுகையில் எங்கள் மாத செயல்திறனை முகாமைத் தகவல் முறைமை முகப்புக்களுடன் மதிப்பாய்வு செய்கிறோம். காலாண்டு அடிப்படையில், எங்கள் இலக்குகள் மற்றும் முக்கிய திட்டங்களின் நிலைக்கு எதிரான எங்கள் தந்திரோபாய செயற்திறனை நாங்கள் கண்காணிக்கிறோம், தேவைப்படும்போது, செயற்திட்ட மதிப்பாய்வு மூலம் தந்திரோபாய கண்ணோட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை கணக்கில் எடுத்துக்கொண்டு அவற்றை திருத்துகிறோம்.

எங்கள் செயற்திறனை மதிப்பாய்வு செய்ய சமநிலையான மதிப்பெண் அட்டையின் அடிப்படையில் எங்கள் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை வரையறுத்துள்ளோம். அவை நிதி மற்றும் நிதி சாராத குறிகாட்டிகளையும் அளவு மற்றும் தரம்சார் காரணிகளையும் உள்ளடக்கியது. இந்த தொடர்ச்சியான கண்காணிப்பு செயன்முறை வாடிக்கையாளர் சிக்கல்களை விவாதிக்க மற்றும் சந்தை போக்குகளை மதிப்பாய்வு செய்ய எங்களுக்கு உதவுவதுடன் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள், வணிக முடிவுகள் மற்றும் முதன்மை மற்றும் முன்னுரிமைகள் பொருத்தமான மற்றும் போட்டித்தன்மையுடன் இருக்க எங்கள் தந்திரோபாயம் மற்றும் வணிக மாதிரியை மேம்படுத்துகிறது.

# தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

## எமது நீண்டகால தந்திரோபாய குறிக்கோள்கள்



### வாடிக்கையாளரால் இயக்கப்படுதல்

தேசிய சேமிப்பு வங்கியில், வாடிக்கையாளர்களே எமது “துருவ நட்சத்திரங்களாக” இருப்பதுடன், அவர்களின் வெளிப்பாடுகளே நாம் செய்யும் அனைத்தையும் வழிநடாத்துகின்றன. தெரிவுக்குரிய வங்கியாக மாறுவதற்கான எங்கள் முயற்சிகளில், எங்கள் வாடிக்கையாளர் தொடர்புகள் அனைத்திலும் ஒரு சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் வள ஒதுக்கீட்டு தந்திரோபாயத்தை வாடிக்கையாளர் தேவைப்பாடுகளுடன் இணைப்பதன் மூலம், நாங்கள் எப்போதும் வாடிக்கையாளர்களால் இயக்கப்படும் வங்கியாக இருப்போம், அது எங்கள் வாடிக்கையாளர்களை மதிப்பிடுவதுடன், அவர்களுடனான எமது உறவுகள் மற்றும் அவர்களுக்கான எங்கள் அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கும் பெறுமதி சேர்க்கும்.



### பலம் மற்றும் நிலைபேறான தன்மை

தொடர்ச்சியான, போட்டித் தன்மை வாய்ந்த, இலாபகரமான மற்றும் பொறுப்புமிக்க பெறுமதியில் கவனம் செலுத்துவதன் மூலம் வலுவான, நிலைபேறான மற்றும் சீரான வளர்ச்சியை நாங்கள் அடைகிறோம். இது சம்பந்தமாக, நிதித் தீர்வு, மூலதன நிலை, வருவாய் வழிமுறைகளை மேம்படுத்துதல், புதுமை மற்றும் நிலைத்ததன்மை ஆகியவற்றை வலுப்படுத்துவதன் மூலம் நீண்ட கால பெறுமதியை அதிகரிப்பதில் முக்கியத்துவம் அளிக்கிறோம்.



### ஆளுகையில் மேன்மைத்துவம்

கூட்டாண்மை ஆளுகையில் மிக உயர்ந்த தரத்தை பேண நாங்கள் முயற்சி செய்வதுடன், இணக்கப்பாடு மற்றும் இடர் முகாமைக் கலாச்சாரத்தை வளர்க்கிறோம். வங்கி முழுவதும் வணிக செயன்முறைகள் மற்றும் ஆளுகைச் சோதனைகள் திறமையானவையாக, விரைவானவையாக, வலுவானவையாக மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப இருப்பதை உறுதி செய்வதன் மூலம் ஆளுகையை ஒரு தந்திரோபாய மற்றும் போட்டி நன்மைக் காரணியாக நாங்கள் பயன்படுத்துகிறோம்.



### நிலைமாற்றத் தலைமை

தேசத்தில் முதன்மையான அரசுரிமை சிறப்பு வங்கியாக, செயற்பாட்டு மேன்மை, நிதி சேர்க்கை, வாடிக்கையாளர் சேவை மற்றும் வணிக நெறிமுறைகள் மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மட்டங்களை அமைப்பதன் மூலம், நாங்கள் எப்போதும் உதாரணங்கள் மூலம் வழிநடத்துகிறோம். எங்கள் சேவைகளின் மூலம், அனைத்து வணிக செயன்முறைகள் மற்றும் விநியோக வழிகளில் புதுமைகளை ஊக்குவிப்பதன் மூலமும், வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்துவதன் மூலமும் அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்துகிறோம்.

## குறுங்காலம் முதல் நடுத்தர காலத்துக்கான எமது தந்திரோபாய குறிக்கோள்கள்



### வாடிக்கையாளர் சேவை மற்றும் அனுபவத்தை உச்சமாக்கல்

வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவது எங்கள் முன்னுரிமைகளில் ஒன்றாகும். பல வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் நாங்கள் பல வழி அணுகுமுறையை எடுத்துக்கொள்கிறோம். ஒரு வாடிக்கையாளர் எங்கள் வர்த்தக நாமத்துடன் ஈடுபடும் ஒவ்வொரு கட்டத்திலும் ஒப்பிடமுடியாத வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். தொழிநுட்பம், மக்கள், செயன்முறைகள், உற்பத்திகள் மற்றும் சேவை முன்மொழிவுகளில் எங்கள் முதலீடுகள் ஒருங்கிணைந்த மற்றும் வேறுபட்ட வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குவதற்கான எங்கள் முயற்சிகளை உறுதிப்படுத்துகின்றன. எங்கள் எண்ணியல் உட்கட்டமைப்பை உருவாக்கும் போது, எங்கள் வாடிக்கையாளர்களின் வழிமுறைகளுக்கு இடையில் தடையற்ற மாற்றத்தை எளிதாக்கும் வகையில், எங்கள் பௌதீக ரீதியான தொடு புள்ளிகளையும் நாங்கள் மேம்படுத்துகிறோம்.



### ஊழியர் ஈடுபாட்டை மேம்படுத்துதல்

சிறந்த வாடிக்கையாளர் விளைவுகளையும் அனுபவங்களையும் வழங்க நாங்கள் எங்கள் ஊழியர்களைச் சார்ந்து இருக்கிறோம். எங்கள் தொழிலை திறம்பட செயற்படுத்துவதற்கும், எங்கள் அக்கறையுள்ள தரப்பினருக்கு பெறுமதியை உருவாக்குவதற்கும் சரியான திறன்களைக் கொண்ட ஈடுபாடு மற்றும் ஊக்கமுள்ள ஊழியர்களின் குழுவை உருவாக்குவது அவசியம். எனவே, பாதுகாப்பான மற்றும் பலனளிக்கும் சூழலை உருவாக்குவதன் மூலமும், அதிக திறமை வாய்ந்த, ஊக்குவிப்பு, பொறுப்பு மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, மற்றும் வலுவான தகவல்தொடர்பு திறன் மற்றும் உதாரணம் மூலம் வழிநடாத்தும் பணியாளர்களின் குழுவை வளர்ப்பதன் மூலமும் சரியான நபர்களை ஈர்ப்பதற்கும் தக்கவைத்துக்கொள்வதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

# தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு



## இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்துதல்

தொடர்ந்து வளர்ந்து வரும் வர்த்தகப் பரப்பில் எழும் ஏராளமான இடர்களை திறம்பட முற்துணியவும் முகாமை செய்யவும் ஆரோக்கியமான இடர் கலாச்சாரத்தை நிறுவ நாங்கள் முயற்சி செய்கிறோம். நாங்கள் தொடர்ந்தும் இடர்களை விவேகத்துடன் முகாமை செய்ய எங்கள் வலுவான வணிக மாதிரியுடன் எங்கள் உத்திகள் மற்றும் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கும் சீரமைப்பதற்கும் கிடைக்கக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் நாம் ஆராய்ச்சி செய்கின்றோம். பொருந்தக்கூடிய அனைத்து விதிமுறைகள், தரநிலைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுடன் முழுமையாக இணங்குவதன் மூலமும், எங்கள் இடர் திறன்களை வலுப்படுத்த புதிய தொழில்நுட்பங்களைத் தழுவுவதன் மூலமும் நெறிமுறையாக செயல்படுவதற்கும் ஆரோக்கியமான இடர் கலாச்சாரத்தை வலுப்படுத்துவதற்கும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.



## உதாரணம் மூலம் தலைமை வகித்தல்

சமூக-பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளும் தீர்வுகளுக்கு பங்களிப்பதன் மூலம் வங்கியின் நேர்மறையான தாக்கத்தை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.
வணிக நடவடிக்கைகளின் ஒவ்வொரு பகுதியிலும் நாங்கள் நிலைத்தன்மையை ஒருங்கிணைப்பதோடு, ஐக்கிய நாடுகளின் நிலைத்திருக்கும் அபிவிருத்திக்கான இலக்குகளை அடைவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் மீதான எங்கள் தாக்கத்தை நாங்கள் அறிவதுடன், மேலும் பொறுப்பான மற்றும் நிலைபேறான வணிக நடைமுறைகளில் ஈடுபடுவதன் மூலம் சமூக பெறுமதியை உருவாக்குவதில் நாம் உறுதியாக இருக்கிறோம். ஆழ்ந்த சமூக வேர்களைக் கொண்ட ஒரு அரசாங்க அமைப்பாக, முன்மாதிரியான கூட்டுவணிகப் பிரஜையாக இருப்பதற்கும், உதாரணம் மூலம் வழிநடத்துவதற்கும் தேசிய சேமிப்பு வங்கி பொறுப்புணர்வைக் கொண்டுள்ளது.



## இயல்பான வளர்ச்சியை ஊக்குவித்தல்

எங்கள் உருவாக்கத்திலிருந்தே, இலங்கையில் சேமிப்பு கலாச்சாரத்தை வளர்ப்பதற்கான எங்கள் ஆணையை அடைய எங்கள் அமைப்புகள், செயற்பாடுகள் மற்றும் தந்திரோபாய முன்னுரிமைகள் ஆகியவற்றை நாங்கள் இயக்கியுள்ளோம். எங்கள் 48 ஆண்டுகால நடவடிக்கைகளில், அனைத்து இலங்கையர்களும் நம்பும் ஒரு நிறுவனமாக நாங்கள் மாறிவிட்டோம்.
நிதி ஸ்திரத்தன்மை மற்றும் இயல்பான வளர்ச்சியை அடைய எங்கள் அமைப்புகள் மற்றும் செயன்முறைகளை நாங்கள் பயன்படுத்துகிறோம். எமது அக்கறைதாரர்களுக்கு நிலைத்திருக்கும் வருவாயை உருவாக்கவும் அதன் வளர்ச்சிக்காகவும் வங்கி அளவிலான, பல்லூடக முயற்சிகள் மூலம், வாடிக்கையாளர் அனுபவம், பணியாளர் ஈடுபாடு மற்றும் விவேகமான இடர் முகாமை ஆகியவற்றை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகிறோம்.



## எண்ணியலாக்கத்தைத் துரிதப்படுத்துதல்

எண்ணியல் கண்டுபிடிப்புகள் குறிப்பிடத்தக்க இடர்கள் மற்றும் வாய்ப்புகள் இரண்டையும் நமக்கு வழங்குகின்றன. வாடிக்கையாளர் அனுபவத்தையும் திருப்தியையும் மேம்படுத்துவதற்கும், புதிய வருவாய் மூலங்களை ஆராய்வதற்கும், செலவுகளைக் குறைப்பதற்கும் புதிய எண்ணியல் உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்குவதை துரிதப்படுத்துகிறோம்.
கொவிட்-19 தொற்றுநோயின் நடத்தை முடிவுகள் எண்ணியல் பின்பற்றுகையின் அதிகரித்த அளவைத் தூண்டக்கூடும், மேலும் அதிக அளவிலான நெகிழ்வான வேலை நடைமுறைகளை ஊக்குவிக்கும். எனவே, புதுமை, சீர்குலைவு மற்றும் இணைய பாதுகாப்பு ஆகியவற்றில் எங்கள் கவனம் அவசியமானதும் இன்றியமையாததும் ஆகும்.

# தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

## தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

அட்டவணை 03

| 2020 தந்திரோபாய குறிக்கோள்கள் | 2020 க்கான முன்னுரிமைகள் | 2020 க்கான முக்கிய வழங்கல்கள் | நிலைமை | குறிப்புக்கள் | எதிர்கால முன்னுரிமைகள் |
|---|---|---|---|---|---|
| வாடிக்கையாளர் அனுபவத்தை உச்சமாக்கல் | அணுகை மற்றும் வசதித் தன்மையை அதிகரித்தல் | இலக்கு வைக்கப்பட்ட இடங்களில் புதிய கிளைகளைத் திறத்தல் | பகுதியளவில் அடையப்பட்டது; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | கதிர்காமம், கட்டுவானை மற்றும் வெலிவேரியவில் மாத்திரம் மூன்று கிளைகள் திறக்கப்பட்டன. | • வாடிக்கையாளர் எதிர்பார்க்கை மற்றும் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப எமது உற்பத்திகள், சேவைகள் மற்றும் வழிமுறைகளை தொடர்ச்சியாக மேம்படுத்தல்<br>• எமது வழித் தடங்களை வலுப்படுத்தும் வகையில் அஞ்சல் வலையமைப்பை மேம்படுத்தல்<br>• கிளைகளில் வாடிக்கையாளர் அனுபவத்தை விருத்தி செய்யப் பாடுபடுதல்<br>• சுய சேவை வழிமுறைகளை ஏற்படுத்தி வாடிக்கையாளர் காத்திருக்கும் நேரத்தைக் குறைத்தல் |
| | சுய சேவை வழிமுறைகளை அதிகரித்தல் மற்றும் வாடிக்கையாளர் காத்திருக்கும் நேரத்தைக் குறைத்தல் | சன நெருக்கடி மிக்க இடங்களில் பண சுழற்சி இயந்திரங்களை அமைத்தல் | அடையப்படவில்லை; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | அடுத்து வரும் ஆண்டுகளுக்கு பிற்போடப்பட்டுள்ளது. | |
| | | கிளைகளில் பண சுழற்சி இயந்திரங்களை அமைத்தல் | அடையப்பட்டது | 24 பண சுழற்சி இயந்திரங்கள் பொருத்தப்பட்டன. | |
| | | வாடிக்கையாளர்களை இணைய வங்கியியலுக்கு உள்வாங்குதல் | அடையப்பட்டது | 100% க்கு அதிகமான வளர்ச்சி அடையப்பட்டது | |
| | உற்பத்தி விருத்தி | சிறுவர்களுக்கான புதிய உற்பத்தியை உருவாக்குதல் | அடையப்படவில்லை; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | அடுத்து வரும் ஆண்டுகளுக்கு பிற்போடப் பட்டுள்ளது. | |
| | வாடிக்கையாளர் அவதானம், ஒருங்கிணைவு மற்றும் விசுவாசத்தை உருவாக்குதல் | இலங்கையில் வர்த்தக நாமப் பெறுமதி தரப்படுத்தல் | அடையப்படவில்லை | 2020 - ஐ.அ.டொ 156 மில்லியன் (6 ஆம் நிலை)<br>2019 - ஐ.அ.டொ 215 மில்லியன் (5 ஆம் நிலை) | |
| இயல்பான வளர்ச்சியை மேம்படுத்தல் | மையப் பகுதிகளிலான வளர்ச்சி | தொழிற்துறையுடன் ஒப்பிடும் போது வைப்புக்களிலான வளர்ச்சி | அடையப்பட்டது | தே.சே.வ - 21.7%<br>தொழிற்துறை - 21.6% | • பல்வேறு எண்ணியல் முன்நகர்வுகள் மூலம் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்தல்<br>• கட்டண அடிப்படையில் அமைந்த வருமானத்தை மேம்படுத்த புதிய வாய்ப்புக்களைக் கண்டறிதல்<br>• ஐந்தொகைத் தரத்தை மேம்படுத்தல் மற்றும் தந்திரோபாயம் அற்ற வளங்களைக் குறைத்தல்<br>• நிதிக் கிரயத்தைக் குறைப்பதிலான நோக்கு<br>• சந்தைப் பங்கை அதிகரித்தல்<br>• மூலதனக் கிரயத்தை விஞ்சும் அளவுக்கு இலாபத் தன்மையை அதிகரித்தல்<br>• பின் அலுவலக செயன்முறை வினைத் திறனை அதிகரித்தல் |
| | | தொழிற்துறையுடன் ஒப்பிடும் போது கடன் வழங்கலிலான வளர்ச்சி | அடையப்பட்டது | தே.சே.வ - 13.7%<br>தொழிற்துறை - 11.3% | |
| | வீழ்ச்சியடையும் வைப்புச் சந்தைப் பங்கை தக்க வைத்தல் | சந்தைப் பங்கைத் தக்க வைத்தல் அல்லது அதிகரித்தல் | அடையப்பட்டது | 2020 - 10.82%<br>2019 - 10.75% | |
| | பங்குதாரரருக்கான பெறுமதியை அதிகரித்தல் | நடுத்தர கால முதலீட்டின் மீதான திரும்பலை 10%-15% வீச்சுக்கு அதிகரிப்பதன் மூலம் பங்குதாரருக்கான திரும்பலை அதிகரித்தல் | அடையப்பட்டது | 2020 - 20.67%<br>2019 - 14.34% | |
| | | கிரயங்களை வினைத் திறனான வகையில் முகாமை செய்தல் | அடையப்பட்டது | செலவு:வருமான விகிதம்<br>2020 - 39.12%<br>2019 - 49.35% | |
| | உழைப்புத் தளம்பல் மற்றும் வட்டி வருமானத்தில் தங்கியிருத்தலைக் குறைத்தல் | கட்டண அடிப்படை வருமானத்தை அதிகரித்தல் | அடையப்பட்டது | 2020 - ரூபா 2.7 பில்லியன்<br>2019 - ரூபா 1.3 பில்லியன்<br>(114.9% அதிகரிப்பு) | |
| எண்ணியலாக்கத்தை விரைவுபடுத்தல் | தகவல் தொழிநுட்ப செயற்றிட்டங்களை மேற்கொள்ளல் | கைத் தொலைபேசிக் கட்டண செயலியை அமுல்படுத்தல் | பகுதியளவில் அடையப்பட்டது; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | அடுத்த வருடத்துக்கு பிற்போடப் பட்டிருப்பதுடன், மீளாய்வு செய்யப்பட்ட இலக்குக் காலத்தினுள் அடைய முயற்சிக்கிறோம். | • வாடிக்கையாளர் தனிப்பட்ட தகவல் மற்றும் தனித்துவத்தை விட்டுக் கொடுக்காமல், புத்தாக்கம் மிக்க, அணுகத்தக்க மற்றும் தாங்க்க் கூடிய எண்ணியல் இயலுமைத் தீர்வுகளை விருத்தி செய்தல்<br>• தொலைதூர மற்றும் எண்ணியல் வாடிக்கையாளர் சேவை மாதிரியை மேம்படுத்தல் |
| | | மனிதவள முகாமை முறைமையை அமுல்படுத்தல் | பகுதியளவில் அடையப்பட்டது; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | | |
| | | மைய வங்கித் தீர்வை பிரத்தியேகமாக்குதல் மற்றும் பரிசோதித்தல் | பகுதியளவில் அடையப்பட்டது; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | | |
| | இணைய வழி இடர்களை குறைப்பதற்கான முறைமை அமுலாக்கம் | தரவு கசிவுத் தடுப்பு முறைமை, வலை அணுகை தீச்சுவர் மற்றும் சேவைக் கணினிகள் மற்றும் தரவுத் தளங்களுக்கான அந்தங்கள் இடையிலான பாதுகாப்பு ஆகியவற்றை அமுலாக்கல் | அடையப்பட்டது | | |

அடையப்பட்டது | பகுதியளவில் அடையப்பட்டது | அடையப்படவில்லை | கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது

# தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு

| 2020 தந்திரோபாய குறிக்கோள்கள் | 2020 க்கான முன்னுரிமைகள் | 2020 க்கான முக்கிய வழங்கல்கள் | நிலைமை | குறிப்புக்கள் | எதிர்கால முன்னுரிமைகள் |
|---|---|---|---|---|---|
| ஊழியர் ஈடுபாட்டை மேம்படுத்தல் | ஊழியர் பெறுமதி முன்மொழிவை அதிகரித்தல் | ஊழியர்கள் மீது செலவிடல் | பகுதியளவில் அடையப்பட்டது; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | 2020 - ரூபா 9.97 பில்.<br>2019 - ரூபா 10.16 பில். | • வாழ்க்கை - வேலை சமப்பாட்டுடன் கூடிய வகையில் வேலையில் ஊழியர் மகிழ்ச்சி மற்றும் விசுவாசத்தை மேம்படுத்தல்<br>• ஊழியர் விருத்தி மற்றும் ஈடுபாட்டில் விசேட நோக்கினைக் கொண்ட நேர்க்கணிய கலாச்சாரத்தை உருவாக்குதல்<br>• இலத்திரனியல் கற்றல் கலாச்சாரத்தை உருவாக்குதல்<br>• எண்ணியல் நிலைமாற்றத்தை நோக்கிய மாற்ற முகாமை<br>• உயர் தரமான வாடிக்கையாளர் சேவை மற்றும் ஊழியர் விருத்தி நோக்கிலான பயிற்சியளித்தல்<br>• தெரிவு செய்தல் மற்றும் உள்முக பதவியுயர்வு செயன்முறைகளில் தொழில்சார் விருத்தி மற்றும் திறன் அடிப்படையிலான பிரமாணத்தை மேம்படுத்தல் |
| | | நிரந்தர ஊழியர் பாலினப் பன்முகத்தன்மை | பகுதியளவில் அடையப்பட்டது | ஆண்கள் - 45%<br>பெண்கள் - 55% | |
| | | உற்பத்தித் திறன் மற்றும் ஊக்குவித்தலை மேம்படுத்தும் வகையில் இலக்கு அடிப்படையிலான செயற்திறன் மதிப்பீட்டு முறைமையை அறிமுகம் செய்தல் | பகுதியளவில் அடையப்பட்டது; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | பெரும் தொற்று காரணமாக மனிதவள முறைமையின் அமுலாக்கம் தாமதமாகிறது. | |
| | கற்றல் மற்றும் விருத்தி | கற்றல் மற்றும் அபிவிருத்தி மீதான செலவீடு | கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | 2020 - ரூபா 8.8 மில்லியன்<br>2019 - ரூபா 39.4 மில்லியன் | |
| | | நிகழ்நிலை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் | அடையப்பட்டது | 17 இணைய செயலமர்வுகளில் 1029 ஊழியர்கள் பங்குபற்றினர் (2019 - 9 இணைய செயலமர்வுகள்) | |
| | | மைய வங்கியியல் அமுலாக்கத்துடன் மாற்ற முகாமை தொடர்பான பயறிசியளித்தல் | அடையப்படவில்லை; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | | |
| இடர் கலாச்சாரத்தை மீள வலுப்படுத்தல் | பலமான மூலதனப் போதுமை மட்டங்களை நிலைப்படுத்தல் | மூலதனப் போதுமை விகிதம் - பாசல் III உடனான இணக்கப்பாடு | அடையப்பட்டது | 2020 - 13.65%<br>குறைந்தபட்ச ஒழுங்கு விதிமுறைசார் தேவைப்பாடு 8.00% | • விவேகமான மற்றும் ஒழுக்கமான வகையில் வணிக வளர்ச்சிக்கு வசதியளிப்பதற்காக பலமான மூலதனப் போதுமை விகிதங்களை நிலைபேறாகப் பேணுதல்<br>• சுற்றுச் சூழல், சமூக மற்றும் ஆளுகை கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை வணிக தொழிற்பாடுகளினுள் ஒருங்கிணைத்தல்<br>• ஒழுங்கு விதிமுறை மீறல்களை அடையாளம் காண்பதில் மற்றும் தடுப்பதில் எண்ணியல் இயலுமைகளை ஈடுபடுத்தல்<br>• இணையவழி இடர்ளை முறியடிப்பதில், முறைமைகள், செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் வலுவான தன்மையைப் பேணுதல்<br>• ஒழுக்கமான கடன் இடர் முகாமை மூலம் பலமான சொத்து தரத்தைப் பேணுதல் |
| | | மொத்த மூலதன விகிதங்கள் - பாசல் III உடனான இணக்கப்பாடு | அடையப்பட்டது | 2020 - 16.45%<br>குறைந்தபட்சத் தேவைப்பாடு 12.00% | |
| | விவேகமான முறையில் கடன் இடரை முகாமை செய்தல் | தொழிற்படாக் கடன்களை தொழிற்துறை சராசரியிலும் குறைவாகப் பேணுதல் | அடையப்பட்டது | 2020 - 2.79%<br>தொழிற்துறை சராசரி - 4.93% | |
| | இணையவழிப் பாதுகாப்பு | வங்கிக்கான 24/7 பாதுகாப்புத் தொழிற்பாட்டு நிலையத்தை நடைமுறைப்படுத்தல் | அடையப்பட்டது | | |
| | | 2019 இல் பெறப்பட்ட PCIDSS சான்றுப்படுத்தலைப் பேணுதல் | அடையப்பட்டது | | |
| | | ISO 27001 சான்றுப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளல் | அடையப்படவில்லை; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | | |
| | இணக்கப்பாடு இன்மைக்கான பூச்சிய சகிப்புத் தன்மை | ஒழுங்கு விதிமுறைசார் தண்டங்கள் மற்றும் விதிப்பனவுகள் | அடையப்பட்டது | பூச்சிய தண்டம் அல்லது விதிப்பனவு | |
| உதாரணம் மூலம் தலைமை வகித்தல் | உள்நாட்டு சமுதாயங்களை தரமுயர்த்தல் மற்றும் சமுதாய எழுச்சி முயற்சிகளுக்கு ஆதரவளித்தல் | சமூக ஈடுபாட்டு நிகழ்ச்சித் திட்டங்களிலான மொத்த முதலீடு | பகுதியளவில் அடையப்பட்டது; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | 2020 - ரூபா 18.1 மில்.<br>2019 - ரூபா 30 மில். | • நிதியியல் சேவைகளுக்கான அனுகல், வேலை வாய்ப்புக்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சி போன்ற சமூக சவால்களுக்கு முகம் கொடுத்தல்<br>• சமுதாய விருத்தி திட்டங்களுக்கான தந்திரோபாய பங்குடமைகளில் நிதியீடுகளை வழங்குதல்<br>• கடன் வழங்கல் நடைமுறைகளில் சுற்றுச் சூழல் மற்றும் சமூகத் தாக்கங்களை முகாமை செய்தல்<br>• எமது சுற்றுச் சூழல் தடங்களை முகாமை செய்தல்<br>• நிதியியல் உள்ளடக்கங்களுக்கான ஈடுபாட்டை நிறைவு செய்தல் |
| | | உள்நாட்டு வழங்குனர்கள் மீதான செலவீட்டின் விகிதாசாரம் (%) | அடையப்பட்டது | 100% | |
| | பொருளாதார ஆதரவளித்தல் | நேர் மற்றும் நேரில் வரிகளை செலுத்துதல் | அடையப்பட்டது | 2020 - ரூபா 9.32 பில்.<br>2019 - ரூபா 9.28 பில். | |
| | | பங்கிலாப செலுத்துகை | பகுதியளவில் அடையப்பட்டது | 2020 - ரூபா 1.0 பில்.<br>2019 - ரூபா 2.0 பில். | |
| | காபன் குறைவான பொருளாதாரத்துக்கு பங்களித்தல் | வழங்கப்பட்ட சுற்றுச்சூழல் கடன்களின் எண்ணிக்கை | அடையப்படவில்லை; கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது | 2020 - 222<br>2019 - 8 | |
| | | பொருத்தப்பட்ட சூரிய கலன்களின் எண்ணிக்கை - 42<br><br>வலை அளவீட்டு முறைமையுடன் இணைக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை - 40 | அடையப்பட்டது | | |

அடையப்பட்டது | பகுதியளவில் அடையப்பட்டது | அடையப்படவில்லை | கொவிட்-19 இனால் தடைப்பட்டுள்ளது அல்லது தாக்கமடைந்துள்ளது

# நிதியியல் மூலதன மீளாய்வு

## சுருக்கப்பட்ட வருமானக் கூற்று

அட்டவணை 04

| | | ஆண்டுசார் மாற்றம் (2020 எதிர் 2019) % | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். | 2018 ரூபா மில். |
|---|---|---|---|---|---|
| A | நிகர வட்டி வருமானம் | 21.01 | **34,890** | 28,832 | 24,885 |
| B | நிகர வட்டி அல்லாத வருமானம் | 59.11 | **4,881** | 3,067 | 1,254 |
| | **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | 24.68 | **39,771** | 31,899 | 26,139 |
| C | சேத இழப்பு அறவீடு | 761.80 | **4,874** | 565 | 871 |
| | **நிகர தொழிற்பாட்டு வருமானம்** | 11.37 | **34,897** | 31,334 | 25,268 |
| D | தொழிற்பாட்டு செலவினங்கள் | -1.34 | **15,466** | 15,675 | 14,097 |
| | **தொழிற்பாட்டு இலாபம்** | 24.09 | **19,431** | 15,659 | 11,171 |
| E | நிதிச் சேவைகள்மீதான வரி | -27.14 | **3,787** | 5,197 | 3,230 |
| F | **வருமான வரிக்கு முன்பான இலாபம்** | 49.54 | **15,645** | 10,462 | 7,941 |
| E | வருமான வரிச் செலவுகள் | 35.69 | **5,537** | 4,080 | 3,441 |
| F | **ஆண்டுக்கான இலாபம்** | 58.40 | **10,108** | 6,381 | 4,500 |

## A திடமான நிகர வட்டி வருமான வளர்ச்சி

**நிகர வட்டி வருமானம் மற்றும் நிகர வட்டி எல்லை**

வரைபடம் 05




வங்கியின் மொத்த வருமானம் ரூபா 127.5 பில்லியனாக 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டதுடன், இது 4.6% வளர்ச்சியாகும். இதில் மிகப்பெரிய அங்கமான வட்டி வருமானம், முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 118.7 பில்லியனில் இருந்து ரூபா 122.5 பில்லியனாக 3.2%ஆல் வளர்ச்சியடைந்துள்ளதுடன், கட்டணம் மற்றும் தரகு வருமானம் 2019 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 1.3 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து, 114.9% அதிகரித்து ரூபா 2.7 பில்லியனாக வளர்ச்சியடைந்துள்ளது.

வட்டி வருமானம் 2019 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 118.7 பில்லியனிலிருந்து 3.2% வளர்ச்சியைப் பதிவு செய்து, ரூ. 122.5 பில்லியனாக 2020 இல் பதிவு செய்யப்பட்டது. இது கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்தான வட்டி வருமானத்தில் 13.2% சரிவு இருந்த போதிலும், பெரும்பாலும் கடன் மற்றும் பிற சாதனங்களிலிருந்தான வட்டி வருமானம் 2019 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 58.0 பில்லியனிலிருந்து 21.1% வளர்ச்சியடைந்து ரூபா 70.3 பில்லயனாக அதிகரித்ததனால் ஏற்பட்டதாகும். வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகங்களின் மீதான கொவிட்-19 இன் தாக்கம் கடன்கள் மற்றும் முற்பணங்களில் இருந்தான வட்டி வருமானம் குறைய வழிவகுத்தது. மேலும், கடன்களை கடன் சாதனங்களாக மீள வகைப்படுத்துவதன் மூலம் கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து குறைந்த வட்டி வருமானம் கிடைத்ததுடன், மேலும் கடன் சாதனங்களின் வட்டி வருமானம் இந்த காலகட்டத்தில் அதிகரிக்கவும் காரணமாக அமைந்தது.

மறுபுறம், வட்டி செலவுகள் ரூபா 87.6 பில்லியனாக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் பதிவு செய்யப்பட்டதுடன், 2019இன் ரூபா 89.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இது 2.5% சரிவைப் பதிவு செய்துள்ளது. மீள் கொள்வனவு ஒப்பந்தத்தின் (REPO) கீழ் விற்கப்பட்ட பிணையங்களுக்கான வட்டி செலவுகள் 2019 இன் ரூபா 6.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 71.5% சரிந்து ரூபா 1.8 பில்லியனாக வங்கித் துறையில் ஆண்டு முழுவதும் நிலவிய அதிகப்படியான திரவத்தன்மை காரணமாக குறைவடைந்தது. கொவிட்-19 தொற்றுநோய் பரம்பலைத் தொடர்ந்து நாணய கொள்கை விகிதங்கள் குறைக்கப்பட்ட போதிலும், வைப்பாளர்களுக்கான. வட்டி செலவுகள் ஆண்டின் போது வைப்புத் தளத்தின் கணிசமான வளர்ச்சி காரணமாக 2019 இன் ரூபா 79.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 3.3% அதிகரித்து ரூபா 82.3 பில்லியனாக 2020 இல் பதிவு செய்யப்பட்டது. வட்டி வருமானத்தில் அதிகரிப்பு மற்றும் வட்டி செலவுகள் குறைதல் ஆகியவற்றின் விளைவாக நிகர வட்டி வருமானத்தில் 21.0% உயர்வு ஏற்பட்டு, கடந்த ஆண்டின் ரூபா 28.8 பில்லியனிலிருந்து 2020 இல் இது ரூபா 34.9 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது. இதன் விளைவாக, நிகர வட்டி எல்லை ஒரு வருடத்திற்கு முன்பு அறிக்கையிடப்பட்ட 2.63 சதவீதத்திலிருந்து 2.77 சதவீதமாக மேம்பட்டது.

## வட்டி வருமானத்தில் கடன் தயவின் தாக்கம்

கொவிட்-19 பரம்பல் மற்றும் கொவிட்-19 தாக்கம் இடம்பெற்ற வணிகங்களுக்கு கடன் பாய்ச்சலை அதிகரிப்பதன் மூலம் உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகளை ஆதரிக்க வேண்டிய அவசர தேவை காரணமாக, இலங்கை மத்திய வங்கி "சௌபாக்யா" கொவிட்-19 மீளெழுச்சி வசதி மற்றும் கொவிட்-19 இனால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் வணிகங்களுக்கான கடன் தயவு திட்டம் உள்ளிட்ட பரந்த அடிப்படையிலான தூண்டுதல் தொகுப்புகளை அறிமுகப்படுத்த வழிவகுத்தது. அதன்படி, கடன் தயவு அல்லது கொடுப்பனவு பிற்போடல்களை மறுத்தவர்களைத் தவிர மற்றைய அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வங்கி கடன் தயவு மற்றும் கொடுப்பனவு ஒத்திவைப்பை வழங்கியுள்ளது.

சில்லறை கடன் தொகுதியில் 90%க்கு 7.0% சலுகை விகிதத்தில் கடன் தயவு வழங்கப்பட்டுள்ளதுடன், கடன் காலம் முடியும் வரை கொடுப்பனவுகள் ஒத்திவைக்கப்பட்டன. தயவுக் காலம் இரண்டு மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை மாறுபட்டதுடன், மிகக் குறைந்த சூழ்நிலையில், இது ஆறு மாதங்களுக்கும் மேலாக நீட்டிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலின் படி கடன்களின் ஒப்பந்த விகிதங்களிலிருந்து 7% ஆக வட்டி வீதத்தை குறைத்ததன் காரணமாக வட்டி வருமானத்தில் வங்கி ரூபா 2.2 பில்லியன் இழப்பை எதிர்கொண்டது. மேலும், இவ் வழிகாட்டலைக் கடைப்பிடிக்கும் பொருட்டு, அத்தகைய வட்டி வருமதிகளை 7%இல் கடன் காலம் முடிவுவரை வங்கி வழங்கியது. எனவே, வங்கியானது வட்டி வருமானத்தில் "முதல் நாள் இழப்பு"ஆக ரூபா 1.4 பில்லியனையும், இலங்கை மத்திய வங்கியின் கடன் தயவு கால நடைமுறைப்படுத்தல் காரணமாக மொத்தமாக ரூபா 3.6 பில்லியனையும் இழப்பாக எதிர்கொண்டது.

## B வருவாய் வளர்ச்சிக்கு வழிவகுத்த நிகர வட்டி அல்லாத வருமானம்

வட்டி அல்லாத வருமானத்தின் பகுப்பாய்வு — வரைபடம் 06




நிகர கட்டணம் மற்றும் தரகு அடிப்படையிலான வருமானம், வர்த்தக நடவடிக்கைகளில் இருந்தான நிகர இலாபம்/நட்டங்கள், ஏனைய முற்றடக்க வருமானம் மூலமான சீர்மதிப்பில் அளவிடப்படும் நிதி சொத்துக்களை ஏற்பிசைவு நீக்கும் போதான நிகர இலாபம்/(நட்டம்) உள்ளிட்ட நிகர வட்டி அல்லாத வருமானமானது ரூபா 3.1 பில்லியனாக கடந்த ஆண்டில் அறிக்கையிடப்பட்டதில் இருந்து, 2020 ஆம் ஆண்டில் 59.1% அதிகரித்து ரூபா 4.9 பில்லியனாகக் காணப்பட்டது. இந்த வட்டி அல்லாத வருமானம் மொத்த தொழிற்பாட்டு வருமானத்தில் 12.3% (2019 இல் 9.6%) ஆகும்.

இறக்குமதிகள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் குறைந்த அளவிலான பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம் எதிர்மறையாக பாதிக்கப்பட்டது. ஆயினும் கூட, மறுசீரமைக்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மற்றும் எண்ணியல் தளங்களில் உருவாக்கப்படும் கட்டணங்கள், சமூக இடைவெளி மற்றும் சுகாதார வழிகாட்டுதல்களினால் வாடிக்கையாளர்கள் எண்ணியல்தளங்களுக்கு மாற்றப்பட்டதால் உருவாக்கப்பட்ட கட்டணங்கள், நிகர கட்டணம் மற்றும் தரகு வருமானம் மேம்பட வழிவகுத்தது.

2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் திறைசேரி முறி வீதங்களின் மிதமான அதிகரிப்புடன் நிலையான வருமானம் உழைக்கும் பத்திரங்களில் பெறமுடியாது போன ஆதாயங்களிலிருந்து வருமானம் குறைக்கப்பட்டதன் காரணமாக வர்த்தக நடவடிக்கைகள் மூலமான நிகர இலாபம் 2019 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 1.5 பில்லியனில் இருந்து 14.6% குறைந்து ரூபா 1.3 பில்லியனாக 2020 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டது. இருப்பினும், உரிமையாண்மை சாதனங்களில் இருந்தான இலாபம் 2019 இல் காணப்பட்ட ரூபா 0.2 பில்லியனில் இருந்து ஆண்டின் போது ரூபா 0.4 பில்லியனாக அதிகரித்தது.

நிகர ஏனைய தொழிற்பாட்டு வருமானம் 2019 இல் அறிக்கையிடப்பட்டிருந்த ரூபா 0.4 பில்லியனிலிருந்து 90.8% வளர்ச்சி அவதானிக்கப்பட்டு, ரூபா 0.8 பில்லியனாக பதிவு செய்யப்பட்டமையானது அந்நிய செலாவணியின் மீள்மதிப்பீடு மற்றும் துணை நிறுவனங்களின் பங்கு இலாப வருமானத்தின் விளைவாக 2019 ஆம் ஆண்டில் அடையப்பட்டதாகும்.

## C சேதமிழப்புத் தொகை குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது

ஏற்பாட்டுக் காப்பு — வரைபடம் 07




2020 ஆம் ஆண்டிற்கான சேதமிழப்புத்தொகை ரூபா 4.9 பில்லியனாக, 2019 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 0.6 பில்லியனுடன் ஒப்பிடும் போது, 8 மடங்கு அதிகரிப்பாகக் காணப்படுகிறது. பலவீனமான பொருளாதார நிலைமைகளின் தாக்கத்தின் காரணமாக, தனிநபர் மட்டத்திலும், கூட்டு மட்டத்திலும் கடன் மற்றும் முற்பண சேர்க்கையில் அதிகரித்த இடர் காரணமாக முந்தைய ஆண்டை விட கணிசமாக அதிக சேத இழப்பு ஏற்பாடுகள் ஏற்பட்டன. கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் காசுப்பாய்ச்சல் தாமதங்களை கருத்தில் கொண்டு மேலதிக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

மேலும், தனிநபர் கடன்களின் அதிகரித்த அளவு மற்றும் எதிர்பார்த்த கடன் இழப்புகளைக் கைப்பற்றுவதற்கான மோசமான பேரினப் பொருளாதார சூழ்நிலை மீதான அதிகரித்த நிகழ்தகவு நிறையளிப்பும் அதிக சேத இழப்பு தொகைக்குக் காரணமாக அமைந்தது. நாட்டின் இறையாண்மை முறிகளின் தரமிடலைக் குறைத்ததைத் தொடர்ந்து இலங்கை அபிவிருத்தி முறிகளின் முதலீடுகளுக்கு எதிராக வங்கி ஒப்பீட்டளவில் அதிக சேதமிழப்பு ஏற்பாடுகளைச் செய்தது.

## D முதலீடு செய்யும் அதேவேளை, சிறப்பாக நிர்வகிக்கப்பட்ட கிரயங்கள்

கிரயம் மற்றும் வருமான வளர்ச்சி — வரைபடம் 08




ஊழியர் செலவு, பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதிக் குறைப்பு மற்றும் ஏனைய மேந்தலைச் செலவுகள் அடங்கிய தொழிற்பாட்டு செலவுகள் 2019 ஆம் ஆண்டிற்காகப் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 15.7 பில்லியனில் இருந்து வேறுபட்ட கிரய சேமிப்பு தந்திரோபாயங்கள் மற்றும் முன்மொழிவுகளின் காரணமாக 1.3% வீழ்ச்சியடைந்து மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் ரூபா 15.15 பில்லியனாக குறைக்கப்பட்டது.

தொழிற்பாட்டு செலவினங்களில் 64.4%இனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஊழியர் செலவுகள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சம்பளம் அல்லாத கொடுப்பனவுகள் குறைக்கப்பட்டதன்

காரணமாக முந்தைய ஆண்டின் ரூபா 10.2 பில்லியன் உடன் ஒப்பிடும்போது 1.3% குறைந்து ரூ. 10.0 பில்லியனாக குறைவடைந்தது.

தொழிற்பாட்டு செலவினங்களில் 8.0% ஆன அளவிற்கு மாத்திரமே கணக்கிடப்பட்டிருந்தாலும், பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதிக் குறைப்புச் செலவுகள் கடந்த ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ரூபா 1.0 பில்லியனில் இருந்து 18.9% அதிகரித்து ரூபா 1.2 பில்லியனாக இவ்வாண்டில் அதிகரித்தது. எண்ணியல் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்துவதற்காக புதிய தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் இதற்குக் காரணமாக அமைந்ததுடன், இது இணைய பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு, மூன்று புதிய கிளைகளைத் திறந்து, தன்னியக்க இயந்திரங்கள் மற்றும் பண சுழற்சி இயந்திர வசதிகளின் வலையமைப்பை 27 ஆக வலுப்படுத்தியுள்ளது.

ஏனைய நிர்வாக மற்றும் ஸ்தாபன செலவுகள் மற்றும் இயக்குநர்களின் ஊதியம் உள்ளிட்ட பிற தொழிற்பாட்டு செலவுகள் ஆண்டு காலத்தின் போது 4.8% குறைவடைந்து ரூபா 4.3 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. அதன்படி, வங்கி அதன் வருமான செலவு விகிதத்தை (வரி நீங்கலான) 2020 ஆம் ஆண்டில் 39.1% ஆக வெற்றிகரமாக மேம்படுத்தியதுடன் இது 2019 ஆம் ஆண்டில் 49.4% ஆக இருந்தது.

## E வரி விளைதிறன் வீதம் ஒப்பீட்டளவில் அதிகமாக உள்ளது

**இலாபத் தன்மை மீதான வரியின் தாக்கம்** வரைபடம் 09




- செலுத்தப்பட்ட மொத்த வரி (ரூபா மில்லியன்)
- வரிக்குப் பின்னான இலாபம் (ரூபா மில்லியன்)
- வரி விளைதிறன் வீதம் (தொழிற்பாட்டு இலாபத்தின் அடிப்படையில்) (%)
- வருமான வரி விளைதிறன் வீதம் (வரிக்கு முன் இலாபத்தின் அடிப்படையில்) (%)

இந்த ஆண்டின் போது, வரி மூலமான தேசத்திற்கான வங்கியின் பங்களிப்பு ரூபா 9.3 பில்லியனாக, கடந்த ஆண்டைப் போலவே காணப்பட்டது. மொத்த வரிகளில் நிதிச் சேவைகளின் பெறுமதி கூட்டப்பட்ட வரி மற்றும் வருமான வரி ஆகியவை அடங்கும்.

வருமான வரி ரூபா 5.5 பில்லியனாக இந்த ஆண்டில், 35.7% அதிகரித்து காணப்படுவதுடன், ரூபா 4.1 பில்லியனாக முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்தது. நிதி சேவைகளுக்கான வரி 27.1% குறைந்து ரூபா 3.8 பில்லியனாக காணப்பட்டதுடன் ஒரு வருடம் முன்பு ரூபா 5.2 பில்லியனாக அறிக்கையிடப்பட்டது. நிதிச் சேவைகளுக்கான வரிக் குறைவிற்கான முக்கிய காரணமாக, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் நிதிச் சேவைகளுக்கான கடன் மீள் செலுத்துகைத் தீர்வை ஆகியவை நீக்கப்பட்டமையைக் குறிப்பிட முடியும். இதன் விளைவாக, வரி விளைதிறன் வீதம் (தொழிற்பாட்டு இலாபத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட) கடந்த ஆண்டில் 59.3% ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் 48.0% ஆக குறைவடைந்தது.

## F முன்னெப்போதும் இல்லாத அளவு உயர்வான வருவாய்

**உழைப்புக்கள் மீதான தாக்கம்** வரைபடம் 10




A வரிக்குப் பின் இலாபம் 2019
B நிகர வட்டி வருமானம்
C நிகர வட்டியல்லா வருமானம்
D சேத இழப்பு
E நிர்வாக மற்றும் ஏனைய மேந்தலை செலவுகள்
F வரிகள்
G வரிக்குப் பின் இலாபம் 2020

தேசிய சேமிப்பு வங்கி 2019 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 10.5 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து, நிகர வட்டி வருமானம் 21.0% அதிகரித்ததன் காரணமாகவும், நிதிச் சேவைகளின் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் கடன் மீள்செலுத்துகை மீதான தீர்வை ஆகியவை நீக்கப்பட்டதன் மூலமாகவும் 49.5% வளர்ச்சியுடன், மீளாய்வுக்கு உட்படும் ஆண்டுக் காலத்தில் வரிக்கு முன் இலாபமாக ரூபா 15.6 பில்லியனை உழைத்துள்ளது. கொவிட்-19 பொருளாதார நடவடிக்கைகளில் தாக்கத்தின் பின்னணியில் வங்கியானது ரூபா 10.1 பில்லியன் வரிக்குப் பின்னான இலாபத்தை, 2019 இல் காணப்பட்ட ரூபா 6.4 பில்லியனி-லிருந்து 58.4% வளர்ச்சியைப் பதிவு செய்ததன் மூலம் குறிப்பிடத்தக்க முடிவுகளை வெளியிட்டது. சாதாரண பங்குக்கான உழைப்பும் 2019 இல் ரூபா 6.8 இலிருந்து 2020 இல் ரூபா 10.7 ஆக அதிகரித்தது.

வங்கியின் செயற்திறனுக்கு ஏற்ப, ஆண்டிற்கான சொத்துக்களின் மீதான வருவாய் 2019 இல் அறிக்கையிடப்பட்ட 0.95% க்கு எதிராக ஆண்டில் 1.24% ஆக மேம்பட்டது. இதே போல், உரிமையாண்மை மீதான வருவாய் 2019 இன் 14.25% உடன் ஒப்பிடுமிடத்து, 2020 ஆம் ஆண்டில் 20.67% ஆக அதிகரித்துள்ளது.

வரிக்குப் பிந்தைய எமது இலாபம் வங்கியின் நிலையான தொழிற்பாட்டு செயற்திறனின் பொருத்தமான குறிகாட்டி என நாங்கள் கருதுகிறோம். 2019 உடன் ஒப்பிடும்போது 2020 ஆம் ஆண்டில் வருவாய் செயல்திறனைப் பெற்ற காரணிகளை கீழே உள்ள வரைபடம் சுருக்கமாகக் கூறுகிறது.

## முற்றடக்க வருமானக் கூற்றின் மாற்றங்கள்

முற்றடக்க வருமானக் கூற்றில் நட்டம் அதிகரிப்பதற்கான முக்கிய பங்களிப்புக் காரணி, வருமான அறிக்கையில் மீள வகைப்படுத்தப்படாத உருப்படிகளாகும். ரூபா 6.7 பில்லியன் நட்டமானது வேலைவாய்ப்புக்குப் பின்னான நலக் கடப்பாடுகளை மீள அளவிடுவதால் ஏற்பட்டது ஆகும். மீள் மதிப்பீட்டு மிகை மாற்றங்களிலிருந்து வங்கி ரூபா 1.5 பில்லியன் ஆதாயத்தைப் பதிவு செய்தது.

**பங்கொன்றுக்கான உழைப்பு** வரைபடம் 11



## சுருக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்று

| | | ஆண்டு ரீதியான மாற்றம் (2020 எதிர் 2019) % | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். | 2018 ரூபா மில். |
|---|---|---|---|---|---|
| A | **மொத்த சொத்துக்கள்** | 17.78 | **1,363,808** | 1,157,967 | 1,036,846 |
| E | காசு மற்றும் காசுக்கு சமமானவை | 20.74 | **6,492** | 5,377 | 3,435 |
| | வங்கிகளிலுள்ள வைப்புக்கள் | 7.19 | **13,253** | 12,364 | 17,588 |
| C | உய்த்தறி நிதி சாதனங்கள் | 71.20 | **20** | 12 | 4,740 |
| | இலாப நட்டங்கள் ஊடாக ஏற்பிசைவு செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் | | | | |
| | – சீர் மதிப்பில் அளவிடப்படுபவை | (2.08) | **11,222** | 11,460 | 16,680 |
| | காலத் தேய்விட்ட கிரயத்திலான சொத்துக்கள் | – | **–** | – | – |
| B | – கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 13.73 | **516,795** | 454,395 | 422,895 |
| C | – கடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் | 22.51 | **754,233** | 615,634 | 518,948 |
| | ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஊடாக சீர் மதிப்பில் அளவிடப்படும் நிதிச் சொத்துக்கள் | 339.00 | **15,272** | 3,479 | 6,184 |
| | சேய் நிறுவனங்களின் மீதான முதலீடுகள் | 0.00 | **4,811** | 4,811 | 1,700 |
| | ஆதனம் பொறி உபகரணம் | 12.99 | **16,004** | 14,163 | 13,466 |
| | சொத்துக்களின் பயன்பாட்டு உரிமை | 14.22 | **1,226** | 1,074 | – |
| D | பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 100.00 | **1,446** | – | – |
| | ஏனைய சொத்துக்கள் | (34.56) | **23,034** | 35,198 | 31,209 |
| F | **மொத்த பரிப்புகள்** | 17.97 | **1,311,911** | 1,112,041 | 993,750 |
| G | வங்கிகளுக்கான சென்மதிகள் | (63.30) | **12,862** | 35,045 | 77,119 |
| | உய்த்தறி நிதி சாதனங்கள் | – | **–** | – | 2 |
| | காலத் தேய்விட்ட கிரயத்திலான நிதிப் பரிப்புகள் | | | | |
| H | – வைப்பாளர்களுக்குரிய சென்மதிகள் | 21.70 | **1,237,124** | 1,016,574 | 839,574 |
| G | – கடன் தருனர்களுக்கான சென்மதிகள் | (61.52) | **8,160** | 21,203 | 14,805 |
| I | குத்தகைப் பரிப்புக்கள் | 19.48 | **1,275** | 1,067 | – |
| G | வழங்கப்பட்ட கடன் பிணைப்பத்திரங்கள் | 19.04 | **31,774** | 26,692 | 52,389 |
| I | இளைப்பாற்று நன்மைக் கடப்பாடுகள் | 116.59 | **10,885** | 5,026 | 3,831 |
| | பிற்போடப்பட்ட வரிப் பரிப்புக்கள் | (100.00) | **–** | 482 | 583 |
| | ஏனைய பரிப்புக்கள் | 12.56 | **6,699** | 5,951 | 5,447 |
| | சேய் உரிமங்களுக்கான சென்மதிகள் | 585.25 | **4** | 1 | 1 |
| J | **மொத்த பங்குதாரர் உரிமையாண்மை** | 13.00 | **51,897** | 45,925 | 43,095 |
| | கூறப்பட்ட மூலதனம்/ஒதுக்கிய மூலதனம் | 0.00 | **9,400** | 9,400 | 9,400 |
| | சட்ட நியதிப்படியான ஒதுக்கு நிதியம் | 14.19 | **4,068** | 3,563 | 3,228 |
| | நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புகள் | 45.01 | **11,883** | 8,195 | 3,985 |
| | ஏனைய ஒதுக்கங்கள் | 7.18 | **26,546** | 24,768 | 26,483 |
| | **மொத்த உரிமை மற்றும் பரிப்புகள்** | 17.78 | **1,363,808** | 1,157,967 | 1,036,846 |
| I | **நிகழத்தக்க பரிப்புகள் மற்றும் கடப்பாடுகள்** | 129.71 | **23,787** | 10,355 | 4,481 |

அட்டவணை 05

### A பலமான நிதியியல் கூற்றின் வளர்ச்சி

ஆண்டின் போது எதிர் கொள்ளப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும், வங்கியானது அதன் சொத்து தளத்தினை 2019 ஆம் ஆண்டின் முடிவில் காணப்பட்ட ரூபா 1.2 திரில்லியனில் இருந்து 17.8% இனால் அதிகரித்து 2020 டிசம்பர் 31 அன்று ரூபா 1.4 திரில்லியனாக உயர்த்தியது.

ஐந்தொகை வளர்ச்சியானது 2019 இல் காணப்பட்ட ரூபா 647.8 பில்லியனிலிருந்து 2020 இல் ரூபா 798.8 பில்லியனாக 23.3% இனால் உயர்ந்த முதலீடுகள் மற்றும் 2019 முடிவில் ரூபா 454.4 பில்லியனாக காணப்பட்டு 2020 இல் 13.7% இனால் உயர்வடைந்து ரூபா 516.8 மில்லியனாக அதிகரித்த கடன் மற்றும் முற்பணம் ஆகியவற்றின் அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டதாகும்.

### B சவால்களுக்கு மத்தியிலும் வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பினைப் பேணுதல்

கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பது வீடமைப்பு மற்றும் ஆதனக் கடன்கள், தனிப்பட்ட கடன்கள், வாகனக் கடன்கள், கல்விக் கடன்கள், ஒன்றிணைந்த கடன்கள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான கடன்கள், அடகு முற்பணங்கள், ஊழியர் கடன்கள், அரசாங்கத்துக்கான கடன்கள் மற்றும் மீள்விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

ஆண்டின் நான்காம் காலாண்டு காலப்பகுதியில் அரசாங்கத்தின் கொவிட்-19 மீள் எழுச்சி வசதிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் கொள்கை அளவிலான வட்டிவீதக் குறைப்புகள் ஆகியவற்றின் காரணமாக கடன் வசதிகளுக்கான கேள்வி அதிகரித்ததால் அறிக்கையிடல் காலப்பகுதியின் இறுதிப் பகுதியில் சில்லறைக் கடன் சேர்க்கைகள் கணிசமான அளவில் அதிகரித்தன. இருப்பினும், ரூபா 26.9 பில்லியன் தொகையான கூட்டு வணிக நிறுவனங்களுக்கான கடன்கள் கூட்டு வணிக கடன் சாதனங்களாக மாற்றப்பட்டமை காரணமாக 2020 டிசம்பர் காலப்பகுதியில் காணப்பட்ட மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் 2019 டிசம்பர் 31 அன்று காணப்பட்ட ரூபா 454.4 பில்லியன் கடன்கள் மற்றும் முற்பணங்களிலிருந்து 13.7%இனால் அதிகரித்து ரூபா 516.8 பில்லியனாக உயர்வடைந்தது. தனிநபர் நுகர்வு (41.0%), உட்கட்டமைப்பு (21.0%) மற்றும் அடகு (17.9%) ஆகியவை 2020 முடிவில் காணப்பட்ட கடன்கள் மற்றும் முற்பண சேர்க்கையின் மொத்த மட்டத்தின் அதிகரிப்பில் கூடுதலான ஆதிக்கம் செலுத்தி இருக்கின்றன.

# நிதியியல் மூலதன மீளாய்வு

அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார முயற்சி நிவாரணப் பொதிகளின் மத்தியிலும் கோவிட்-19 பரம்பலின் காரணமாக வாடிக்கையாளர்களின் கடன் மீள் செலுத்தும் இயலுமையில் ஏற்பட்ட பாதகமான தாக்கங்கள் காரணமாக, வங்கியின் மொத்த தொழிற்படாக் கடன்கள் விகிதம் 2019இன் முடிவில் காணப்பட்ட 1.57 சதவீதத்தில் இருந்து 122 புள்ளிகள் என்னும் கணிசமான அதிகரிப்பினால் 2.79 சதவீதமாக உயர்வடைந்தது. அத்துடன், 26.9 பில்லியன் பெறுமதியான கடன்கள் மற்றும் முற்பணங்கள் கடன் சாதனங்களாக மீள வகைப்படுத்தப்பட்டமை, தொழிற்படாக் கடன்கள் விகிதத்தில் ஒரு முக்கிய குறிகாட்டியாக கருதப்படும் கடன்கள் மற்றும் முற்பணங்களின் சேர்க்கையில் ஓர் குறைவை ஏற்படுத்தியது. எவ்வாறெனினும், 2020 முடிவில் தொழில்துறை சராசரியான 4.93 சதவீதத்துடன் ஒப்பிடுமிடத்து வங்கியின் கடன் தரம் நிலைத்த மட்டத்தில் பேணப்பட்டு இருக்கிறது.

## C முதலீடுகளுக்கான வாய்ப்புகளை ஒருங்கிணைத்தல்

### கடன் மற்றும் உரிமை பிணையங்களில் முதலீடு

வங்கியின் உரிமையாண்மை மற்றும் கடன் சாதனங்களின் சேர்க்கையிலான மொத்த முதலீடு 2019 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 620.9 பில்லியனில் இருந்து 22.9 சதவீதம் வளர்ச்சியை சான்றளித்து 2020 முடிவில் ரூபா 758.7 பில்லியனாக அதிகரித்தது. மொத்த சேர்க்கையில் 99.4 சதவீதத்தினை அரச பிணைப் பத்திரங்கள், இலங்கை அபிவிருத்தி முறிகள், கூட்டிணைத்த வணிகங்களின் கடன்பத்திரங்கள் மற்றும் நம்பிக்கை சான்றிதழ்கள் உள்ளடங்கலான கடன் பத்திரங்கள் பிரதிநிதித்துவம் செய்ய மிகுதிப் பகுதி உரிமைப் பிணையங்களாக காணப்பட்டது. வங்கியின் உரிமைப்பங்கு மூலதனத்தின் தொகுதி, பங்குமூலதனச் சந்தையிலான வீழ்ச்சி காரணமாக 2019இல் காணப்பட்ட 5.3 பில்லியனில் இருந்து 15.5 சதவீதம் வீழ்ச்சி அடைந்து ரூபா 4.4 பில்லியனாக 2020 இல் காணப்பட்டது.

கூட்டு வணிக கடன்களை “கடன்கள் மற்றும் முற்பணங்கள்” என்னும் வகுப்பிலிருந்து “கடன் மற்றும் ஏனைய சாதனங்கள்” என்னும் பகுதிக்கு மீள் வகைப்படுத்தியமை கடன்கள் மற்றும் ஏனைய சாதனங்களின் வளர்ச்சிக்கு பகுதியளவில் பங்களிப்பு செய்திருந்தாலும் கடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் கவர்ச்சிகரமான முதலீடுகளாகவும் வங்கியின் வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்பாளர்களாகவும் காணப்பட்டன. இதன் விளைவாக, 2019-ல் காணப்பட்ட 615.6 பில்லியன் உடன் ஒப்பிடும்போது 2020இல் 22.5% என்னும் அபரிதமான வளர்ச்சியை அடைந்து 754.2 பில்லியனாக அறிக்கையிடப்பட்டது.

அரசாங்கத்தின் தேவைகளுக்கு நிதியளிப்பதில் பங்களிப்பதன் மூலம் வங்கி தொடர்ந்து தனது ஆணையை நிறைவேற்றி வருகிறது. அதன்படி, மதிப்பாய்வு செய்யப்படும் ஆண்டில், அரசாங்க பிணையங்கள் தொகுப்பில் இலங்கை அபிவிருத்தி முறிகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளை உள்ளடக்கிய வங்கியின் முதலீடுகள் கடந்த ஆண்டில் காணப்பட்ட ரூபா 612.7 பில்லியனிலிருந்து ரூபா 128.1 பில்லியனால் அதிகரித்து ரூபா 740.8 பில்லியனாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்டது. வங்கி தனது அரசாங்க பிணையங்களில் மொத்த வைப்புக்களின் விகிதத்தை 2020 டிசம்பர் மாத இறுதியில் 62.7% ஆக உயர்த்தியதுடன், இது 2019 முடிவில் 60.9% ஆக இருந்தது. இதன் விளைவாக, வங்கி அதன் வட்டி ஈட்டும் முதலீடுகளை பல்வகைப்படுத்துவதன் மூலம் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, அதாவது வரவிருக்கும் ஆண்டில் இலாபத்தில் அது சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும்.

### உய்த்தறி நிதிச் சாதனங்கள்

டிசம்பர் 2020 நிலவரப்படி வங்கியின் உய்த்தறி நிதிச் சாதனங்கள் ரூபா 19.9 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இது கடந்த ஆண்டின் இறுதியில் ரூபா 11.6 மில்லியன் ஆகப் பதிவு செய்யப்பட்டது. இது ஸ்ரீ லங்கா டெலிகொம் பி.எல்.சிக்கு வழங்கப்பட்ட ரூபா 2.0 பில்லியன் பெறுமதியான கடனினால் உருவான வட்டிவீத இடரைக் காப்பு செய்யும் பொருட்டு DFCC வங்கியுடன் மேற்கொள்ளப்பட்ட வட்டிவீத மாற்று ஒப்பந்தத்தினைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

### ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

குறைத்தெழுதிய பெறுமதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ரூபா 16.0 பில்லியனாக 2020 இல் காணப்பட்டது, இது கடந்த ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 14.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 13.0% வளர்ச்சியாகும். இது முக்கியமாக மீள்மதிப்பீட்டு இலாபம் மற்றும் தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதிகளின் அதிகரிப்பு ஆகியவற்றால் உருவாக்கப்பட்டதாகும்.

### சொத்துக்களின் பயன்பாட்டு உரிமை

2019 இல் அமுலாக்கப்பட்ட இ.நி.அ.க16 “குத்தகைகள்” நியமம், குறித்த சில குறுங்காலக் குத்தகைகள் மற்றும் குறைவான பெறுமதியைக் கொண்ட குத்தகைகள் தவிர்ந்த அனைத்து குத்தகை ஒப்பந்தங்களையும் நிதி நிலைமைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யத் தேவைப்படுத்துகிறது. அந்த வகையில், வங்கி ரூபா 1.2 பில்லியன் பெறுமதியான அதன் அனைத்துக் குத்தகைச் சொத்துக்களையும் 31 டிசம்பர் 2020 நிலவரப்படியான நிதி நிலைமைக் கூற்றில் “சொத்துக்களின் பயன்பாட்டுக்கான உரிமை” என ஏற்பிசைவு செய்துள்ளது.

### சேய் நிறுவனங்களிலான முதலீடுகள்

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் புதிய கையகப்படுத்துதல்கள் அல்லது இணைப்புகள் எதுவும் இல்லாததால் சேய் நிறுவனங்களிலான முதலீடு தொடர்ந்தும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 4.8 பில்லியனாக காணப்பட்டது.. மீதமுள்ளவற்றில், ரூபா 1.7 பில்லியனான வரையறுத்த என.எஸ். பி நிதி முகாமைக் கம்பனி மீதான முதலீடு மற்றும் ரூபா 3.1 பில்லியனான முழுமையான உரிமை கொள்ளப்பட்ட சேய் நிறுவனமாகிய இலங்கை சேமிப்பு வங்கியிலான முதலீடு ஆகியவற்றை உள்ளடக்கும்.

## D பிற சொத்துக்களிலான குறைவு

### பிற சொத்துக்கள்

2020 ஆம் ஆண்டின் இறுதியில், வருமதிகள், முற்பண செலுத்துகைகள், மூத்த குடிமக்களுக்கான வட்டி செலுத்துகை தொடர்பான திறைசேரியிலிருந்தான வருமதிகள், திறைசேரிக்கான முற்பண செலுத்துகைகள் மற்றும் காலத் தேய்விடப்படாத ஊழியர் கடன்கள் மீதான கிரயங்கள் உள்ளிட்ட பிற சொத்துக்கள் ஒரு வருடம் முன்பு ரூபா 35.2 பில்லியனாகக் காணப்பட்ட திறைசேரியின் வருமதிக் கொடுப்பனவுகள் 34.6%ஆல் குறைவடைந்து ரூபா 23.0 பில்லியனாக 2020 முடிவில் பதிவு செய்யப்பட்டது. இது, 7.84% விளைவில் ரூபா 19.2 பில்லியன் பெறுமதியுடைய திறைசேரிமுறி வழங்கலின் மூலம் திறைசேரியிலிருந்தான வருமதிகள் குறைக்கப்பட்டதனாலாகும். இந்த வட்டி அல்லாத வருமானம் ஈட்டும் சொத்துக்கள் 2019 இல் மொத்த சொத்துகளில் 3% ஐக் குறிக்கும் அதே வேளையில், இது 2020 இறுதியில் 1.7% ஆகக் குறைக்கப்பட்டது.

## E காசு மற்றும் காசுக்கு சமமானவற்றை முகாமை செய்தல்

### காசு மற்றும் காசுக்கு சமமானவை மற்றும் வங்கிகளிலான வைப்புக்கள்

காசு மற்றும் காசுக்கு சமமானவை என்பது கையில் உள்ள பணம், வங்கிகளில் உள்ள இருப்பு மற்றும் குறுகிய அறிவிப்பில் மீட்கத்தக்கதாக உள்ள பணத்தை உள்ளடக்கியது ஆகும். 2020ஆம் ஆண்டின் இறுதியில், வங்கியில் கையில் பண மீதியின் அதிகரிப்பு காரணமாக 2019ஐ விட காசு மற்றும் காசுக்கு சமமானவை 20.7% அதிகரித்து, ரூபா 6.5 பில்லியனாக் காணப்பட்டது. வங்கிகளுடனான வைப்பு என்பது வங்கிகளில் வைக்கப்படும் குறுகிய கால வைப்பு ஆகும், இது கடந்த ஆண்டு அறிக்கையிடப்பட்ட ரூபா 12.4 பில்லியனிலிருந்து 7.2% அதிகரித்து

ரூபா 13.3 பில்லியனாக 2020 ல் காணப்பட்டுள்ளது. காசு மற்றும் காசுக்கு சமமானவை மற்றும் வங்கியிலுள்ள வைப்புக்கள் யாவும் வங்கியினால் அதன் குறுங்காலக் கடப்பாடுகளுக்காக பயன்படுத்தப்படுவதுடன், அவை திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை வசதியான முறையில் திருப்தி செய்வதற்காக பேணப்படுகின்றன.

## F மொத்த பரிப்புகள்

2019 இல் காணப்பட்ட 1.1 திரில்லியன் பரிப்புகளுடன் ஒப்பிடும்போது மொத்த பரிப்புகள் 18% இனால் அதிகரித்து ரூபா 1.3 திரில்லியன் ஆக உயர்வடைந்தது. இந்த அதிகரிப்புக்கான பிரதானமான காரணமாக கடந்த ஆண்டை விட மொத்த கடன் படுகைகள் 36.3% இனால் குறைவடைந்து இருந்த போதிலும் வாடிக்கையாளர் வைப்புகள் அதிகரித்து காணப்பட்டமை ஆகும்.

## G விவேகமான முறையில் எமது கடன் சேர்க்கையை முகாமை செய்தல்

நிதி நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட கடன்படுகைகள் மற்றும் மீள் கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள், வழங்கப்பட்ட கடன் பிணையங்கள் உள்ளடங்கலான வங்கியின் மொத்த கடன்படுகை கடந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்ட ரூபா 82.9 பில்லியன் உடன் ஒப்பிடும் போது 2020ஆம் ஆண்டில் 36.3% வீழ்ச்சியடைந்து ரூபா 52.8 பில்லியன் ஆக காணப்பட்டது. வங்கியின் அடுக்கு 1 மூலதனத்தை மேம்படுத்துவதற்காகவும் வங்கியின் கடன் வழங்கல் நடவடிக்கைகளை நிதியீட்டம் செய்வதற்காகவும் வங்கி ரூபா 5.0 பில்லியன் பெறுமதியான நிலைத்த தொகுதிக்கடன்களை வழங்கியிருந்த போதிலும், ஆண்டு முழுவதும் காணப்படும் மிகையான திரவத் தன்மை நிலைமையால் மீளச் செலுத்தப்பட்ட கடன்கள் காரணமாக இந்த கடன் தொகைகள் குறைவடைந்திருந்தன.

### வங்கிகளுக்கான சென்மதிகள்

மேலதிகப் பற்று, அழைப்புப் பணக் கடன், வங்கிகளிடமிருந்து பெற்ற கடன்கள் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்படும் பிணையங்கள் (REPO கடன்) ஆகியவற்றைப் பிரதிநிதித்துவம் செய்யும் வங்கிகளுக்கான சென்மதிகள் 2019 ஆம் ஆண்டின் ரூபா 35.0 பில்லியனில் இருந்து 63.3% குறைந்து ரூ. 12.9 பில்லியனாகக் காணப்பட்டது. வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கான தவணைகளை திருப்பிச் செலுத்துதல் மற்றும் மீள் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழான கடன்களின் முதிர்வு என்பன இதற்கான காரணங்களாக அமைந்திருந்தது.

### ஏனைய கடன் தருனர்களுக்கான சென்மதிகள்

வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவற்றைத் தவிர்த்து, மீள் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழான கடன்கள் உள்ளடங்கலான பிற கடன் தருனர்களது சென்மதிகள் கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 21.2 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து, 61.5% குறைந்து 2020 இல் ரூபா 21.2 பில்லியனாக பதிவு செய்யப்பட்டது.

### வழங்கப்பட்ட கடன் பிணையங்கள்

வழங்கப்பட்ட கடன் பிணையங்கள், பிணையற்ற இரண்டாம் நிலை மீட்கத்தக்க தொகுதிக்கடன்கள், சிரேஷ்ட பிணையற்ற மீட்கத்தக்க தொகுதிக்கடன்கள் மற்றும் பிணையற்ற இரண்டாம் நிலை நிலைத்த தொகுதிக்கடன்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. அடுக்கு 1 மூலதனத்தை மேம்படுத்துவதற்கும் வங்கியின் கடன் நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்குமென வழங்கப்பட்ட ரூபா 5.0 பில்லியன் பெறுமதியானது முதிர்வற்ற தொகுதிக்கடன்கள் காரணமாக, 2020 டிசம்பரின் இறுதியில் வழங்கப்பட்ட கடன் பிணையங்களின் சேர்க்கை 2019இன் ரூபா 26.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 19.0% அதிகரித்து ரூபா 31.8 பில்லியனாக உயர்ந்தது. மேலும், இச் சேர்க்கையில் ரூபா. 6.0 பில்லியன் பெறுமதியானது, மூலதன போதுமை விகிதத்தை மேம்படுத்துவதற்கும் வங்கியின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் சேர்க்கைகளுக்கு இடையிலான முதிர்வு பொருத்தமின்மையைக் குறைப்பதற்கும் வங்கியின் மூலதனத்தை அதிகரிப்பதற்காக 2016 இல் வழங்கப்பட்ட ஐந்தாண்டு தொகுதிக்கடன்களையும் உள்ளடக்கி இருந்தது. அதில் ரூபா 20.00 பில்லியன் இலங்கை மத்திய வங்கியுடனான அமெரிக்க டொலர் - இலங்கை ரூபா நாணயமாற்று ஒப்பந்தத்தை விலக்குவதற்கான நிதித் தேவைக்கு பகுதியளவில் நிதியளிப்பதற்காக 2019 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சிரேஷ்ட தொகுதிக்கடன்களும் இதனுள் உள்ளடங்கி இருந்தன.

## H வரலாற்றில் மிக உயர்ந்த வைப்புத் திரட்டலை அடைதல்

ஆண்டின் போது, ரூபா 221.9 பில்லியனை திரட்டுவதன் மூலம் வங்கி அதன் மிக உயர்ந்த வைப்புத் திரட்டலைப் பதிவு செய்தது. வங்கியின் வைப்புத் தளம் 2019 இன் ரூபா 1.0 திரில்லியனில் இருந்து 21.7% அதிகரித்து ரூபா 1.2 திரில்லியனை 2020 டிசம்பர் மாத இறுதியில் அடைந்து கொண்டது. இந்த ஆண்டில் குறைந்த வட்டி வீதம் நிலவிய போதிலும், தொற்று நோயால் தூண்டப்பட்ட அதிகரித்த வீட்டு சேமிப்பின் பின்னணியில் சேமிப்பு வைப்பு மற்றும் நிலையான வைப்புத் தளங்கள் 2020 டிசம்பர் இறுதியில் முறையே 28.1% மற்றும் 19.9% வளர்ச்சியை பதிவு செய்து முறையே ரூபா 280.0 பில்லியன் மற்றும் ரூபா 957.1 பில்லியனாகப் பதிவு செய்தது. அதன்படி, மொத்த வைப்புக்களில் சேமிப்பு வைப்பு 2020 ஆம் ஆண்டில் 22.6% ஆக உயர்ந்ததுடன், இது முந்தைய ஆண்டில் 21.5% ஆக இருந்தது. இது வைப்புச் சேர்க்கையிலான சாதகமான மாற்றத்தை நிரூபித்ததுடன், இதன் விளைவாக குறைந்த செலவிலான நிதியீட்டம் ஏற்பட்டது.

**வைப்பு வளர்ச்சி மற்றும் திரட்டல்** வரைபடம் 12




## I பிற பரிப்புக்களிலான உயர்வு

### இளைப்பாற்று நன்மை கடப்பாடு

இளைப்பாற்று பயன் கடப்பாடுகள் கடந்த ஆண்டு அறிக்கையிடப்பட்ட ரூபா 5.0 பில்லியனுடன் ஒப்பிடுமிடத்து, 2020 டிசம்பர் இறுதியில் 116.6% அதிகரித்து ரூபா 10.9 பில்லியனாகப் பதிவு செய்யப்பட்டது. இது முக்கியமாக கழிவீட்டு வீதத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், ஓய்வூதியதாரர்களின் மருத்துவ உதவித் திட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்களுடன் வழங்கப்பட்ட ஓய்வூதியங்களின் அளவு அதிகரிப்பு ஆகியவை காரணமாக ஏற்பட்டிருந்தன.

### குத்தகைப் பரிப்பு

ரூபா 1.3 பில்லியன் 2020 டிசம்பர் மாத இறுதியில் ஏற்பிசைக்கப் பட்டதுடன், இது 2019இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 1.1 பில்லியனுடன் ஒப்பிடும் போது, 19.5% வளர்ச்சியைக் கண்டுள்ளது.

### பிற பரிப்புகள்

கட்டணம் மற்றும் செலவுகள், நிதி சேவைகள் மீதான வரிகள் மற்றும் நானாவித கடன்கொடுநர் மீதான ஏற்பாடு மற்றும் சென்மதிகள் ஆகியவற்றை உள்ளடக்கிய பிற பொறுப்புகள் 12.6% அதிகரித்து 2019இல் காணப்பட்ட ரூபா 6.0 பில்லியனில் இருந்து 2020இல் ரூபா 6.7 பில்லியனாக உயர்வடைந்தன.

# நிதியியல் மூலதன மீளாய்வு

## நிகழத்தக்க பரிப்புகள் மற்றும் கடப்பாடுகள் →

இந்த ஆண்டில், வங்கி அதன் மொத்த கடப்பாடுகள் மற்றும் நிகழத் தக்கவைகளில் கடந்த ஆண்டின் ரூபா 10.4 பில்லியனிலிருந்து 129.7% அதிகரிப்புடன் ரூபா 23.8 பில்லியனாக உயர்த்திக் கொண்டதுடன், பயன்படுத்தப்படாத கடன் வசதிகளுக்கான கடப்பாடுகள் அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

## J வலுவாகவுள்ள எங்கள் மூலதனம்

## பங்குதாரர்களின் உரிமையாண்மை →

மொத்த பங்குதாரர்களின் உரிமையாண்மை முந்தைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 45.9 பில்லியனில் இருந்து ரூபா 51.9 பில்லியனாக அதிகரித்துள்ளது. ஆண்டின் போது, ஒரு பங்கிற்கான வருவாய் 2019 இன் ரூபா 6.79 இலிருந்து ரூபா 10.75 ஆக அதிகரித்து இருந்ததனால், பங்குதாரருக்கு அதிக லாபம் கிடைக்கத்தக்கதாகவுள்ளது. வங்கியின் மூலதன தளத்தை மேம்படுத்து-வதற்கான வரையறுக்கப்பட்ட வழிகளைக் கருத்தில் கொண்டு, பங்கு இலாப செலுத்துதலை 9.9% ஆகக் குறைக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதுடன். இது உள்முகமாக உருவாக்கப்படும் நிதியை ஆண்டு முழுவதும் அதிகரிக்க அனுமதிக்கிறது.

## மூலதன முகாமை

வங்கியின் மூலதன முகாமை வங்கியின் நீண்டகால மற்றும் குறுகிய கால இலக்குகளை அடைவதை வசதியளிப்பதனூடாக பங்குதாரருக்கு பெறுமதியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. எடுக்கப்பட்ட இடர் நிலையின் உள்ளக மதிப்பீடு, கடன் தரப்படுத்தல் முகவர்களின் எதிர்பார்ப்புகள், ஒழுங்கு விதிமுறையாளர்களின் தேவைப்பாடுகள் மற்றும் பங்குதாரர் எதிர்பார்க்கும் வருமானம் உள்ளிட்ட பல காரணிகளுக்கு ஏற்ப தேசிய சேமிப்பு வங்கி தனது மூலதன மட்டங்களை முகாமை செய்கின்றது. தேசிய சேமிப்பு வங்கி அதன் மூலதன கட்டமைப்பானது, அதன் மூலதன தளத்தின் நிதி செயற்திறன் மற்றும் நட்ட உறிஞ்சுதல் திறனை மேம்படுத்த ஏதுவாக இருக்கும் மூலதன கருவிகள் மற்றும் மூலதன முகாமை நடவடிக்கைகளின் வரம்பை முழுமையாகப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்த முயல்கிறது.

## மூலதன முகாமைக் குறிக்கோள்கள் →

மூலதன முகாமையின் முக்கிய நோக்கங்கள் வங்கியின் வணிக தந்திரோபாயத்தை ஆதரிப்பதும், கடுமையான சரிவு நிலைமைகளில் கூட ஒழுங்குமுறை தேவைகளை மீறாமல் தாங்குவதற்கு போதுமான அளவிலான மூலதனத்தை உறுதி செய்வதுமாகும்.

வங்கியின் மூலதன முகாமை நோக்கங்கள் பின்வருமாறு சுருக்கமாகக் கூறப்படலாம்:

- குறைந்தபட்ச மூலதன தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்ய போதுமான மூலதனத்தைப் பராமரித்தல்
- வங்கியின் இடர் தாங்குதிறனை ஆதரிக்க போதுமான மூலதனத்தை வைத்திருத்தல்
- வங்கியின் தந்திரோபாய நோக்கங்களை ஆதரிக்க வணிகங்களுக்கு மூலதனத்தை ஒதுக்குதல்
- கடன் தரமிடல் நோக்கங்களை அடைவதற்கும், அழுத்த நிகழ்வுகளின் தாக்கத்தை தாங்குவதற்கும் வங்கி மூலதனத்தை பராமரிப்பதை உறுதிப்படுத்தல்

## செயன்முறை

எமது மூலதன முகாமை நோக்கங்களை அமைப்பதற்கு இயக்குநர் சபை பொறுப்பாவதுடன், மேலும் சபை இந்த நோக்கத்தை மூலதன இலக்குகளின் வடிவத்தில் வெளிப்படுத்துகிறது. எமது தந்திரோபாயத் திட்டங்கள் மற்றும் இடர் இயல்திறனைக் கருத்தில் கொண்டு, பங்குதாரருக்கு வருமானத்தை வழங்குவதோடு, வணிக வளர்ச்சி மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் பாதகமான சூழ்நிலைகளுக்கும் போதுமான மூலதன வளங்கள் கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு இந்த நோக்கம் பின்பற்றப்படுகிறது. எமது பங்கு இலாபக் கொள்கையானது, எமது மூலதன முகாமை நோக்கங்களுக்கும் நீண்ட கால வளர்ச்சி வாய்ப்புகளுக்கும் இணக்கமாகும் வகையில் காலப்போக்கில் நிலையான பங்கு இலாபத்தை செலுத்துவதாகும். எமது பங்கு இலாபக் கொள்கைக்கு ஏற்ப, வங்கி ரூபா 1.0 பில்லியனை 2020 ஆம் ஆண்டில் செலுத்தியுள்ளது.

எமது மூலதன முகாமை நோக்கம், சொத்து மற்றும் பரிப்பு முகாமை குழு (ALCO) மேற்பார்வையிடும் மூலதன முகாமை மற்றும் திட்டமிடல் செயன்முறை மூலம் செயற்படுத்தப்படுகிறது. பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி சொத்து மற்றும் பரிப்பு முகாமை குழுவுக்கு தலைமை தாங்குகிறார். எமது தற்போதைய மற்றும் திட்டமிடப்பட்ட மூலதன மட்டம் குறித்த வழக்கமான இற்றைப்படுத்திய தகவல்களைக் குழு பெற்றுக் கொள்ளும். ஒழுங்குமுறை தேவைகள் மற்றும் எமது மூலதன இலக்குகளுக்கெதிராக எமது திட்டமிடப்பட்ட மூலதன கேள்வி மற்றும் நிரம்பலை மதிப்பிடும் மூலதனத் திட்டத்திற்கான ஒரு முக்கிய கருவியாக வருடாந்த உள்முக மூலதன போதுமை மதிப்பீட்டு செயன்முறை (ICAAP) காணப்படுகிறது. வருடாந்த உள்முக மூலதன போதுமை மதிப்பீட்டு செயன்முறை மூன்று ஆண்டு எல்லைகளைக் கொண்டுள்ளதுடன் மாறுபட்ட நோக்கெல்லை மற்றும் கடினத்தன்மை கொண்ட பல்வேறு சூழ்நிலைசார் விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வழிகாட்டப்பட்டபடியான தூண் 1 இன் கீழ், இந்த ஆண்டில், வங்கி அதன் மூலதனத் தேவைகளை வருடாந்த உள்முக மூலதன போதுமை மதிப்பீட்டு செயன்முறையின் கீழ் கடன் இடருக்கான தரப்படுத்தப்பட்ட அணுகுமுறை, சந்தை இடருக்கான தரப்படுத்தப்பட்ட அளவீட்டு அணுகுமுறை மற்றும் செயற்பாட்டு இடருக்கான அடிப்படை காட்டி அணுகுமுறை ஆகியவற்றைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்தது. தூண் 2 இடர்களை மதிப்பிடுவதற்கு, தொழிற்துறையின் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப உள்நாட்டில் உருவாக்கப்பட்ட மாதிரிகள் பயன்படுத்தப்பட்டன, இது பரந்த அளவிலான இடர்கள் மற்றும் வங்கியின் இடர் மற்றும் மூலதன முகாமை திறன்களை கணக்கில் எடுத்துக்கொண்டது. வணிக வரிசைகளின் மூலதன ஒதுக்கீடானது பாதீட்டு செயன்முறையின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டு ஆண்டு தோறும் கண்காணிக்கப்படுகிறது. மூலதன போதுமை தன்மை, பிற மூலதன விடயங்கள் தொடர்பான சிக்கல்களை மதிப்பிடுவதற்கும், உத்திகள் மூலம் செயற்படுத்துவதற்கான அதன் பரிந்துரைகளை வகுப்பதற்கும் விரிவாக்குவதற்கும் வங்கியின் கூட்டாண்மை முகாமை கிரம அடிப்படையில் சந்திப்புக்களை மேற்கொண்டது. இந்த காலகட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கி விரிவான மற்றும் முற்றடக்கமான அழுத்த சோதனைகளை மேற்கொண்டதுடன், வங்கி சபை ஒப்புதல் அளித்த தந்திரோபாயத் திட்டம், இடர் இயல் திறன், இடர் சுயவிவரம் மற்றும் அது செயற்படும் வெளிப்புற சூழல் வணிக நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது நன்கு மூலதனப்படுத்தப்பட்டுள்ளது.

## வசதியான மட்டங்களில் உள்ள மூலதன போதுமை விகிதங்கள் →

வங்கியின் இடர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்கள் 2019 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 255.6 பில்லியனிலிருந்து ரூபா 309.4 பில்லியனாக 21.0% அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு சொத்து வளர்ச்சிக்கு ஏற்ப இருந்ததுடன் பெரும்பாலும் கடன் நிறையளிக்கப்பட்ட சொத்துக்களின் 22.0% அதிகரிப்பு மற்றும் செயற்பாட்டு நிறையளிக்கப்பட்ட சொத்துக்களில் 18.2% அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டு இருந்தது. (இடர் எடையுள்ள சொத்துக்கள் பற்றிய விவரமான குறிப்பு 92 முதல் 114 பக்கங்களில் உள்ள இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவ அறிக்கையிலும், 287 முதல் 300 பக்கங்களில் உள்ள பாசல்IIIயின் கீழ் தூண் 3 வெளிப்பாடுகளிலும் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி 2019 டிசம்பரில் உள்நாட்டு முறைமையில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளை (D-SIB) கையாள்வதற்கான கட்டமைப்பில் ஒரு திசைமுகப்படுத்தலை வெளியிட்டதுடன், அத்தகைய வங்கிகளை ஒப்பீட்டு மதிப்பெண் அடிப்படையில் அடையாளம் கண்டுள்ளது. அதன்படி, ரூபா 1.0 திரில்லியன் சொத்துத் தளத்தை தாண்டிய போதும், வங்கியை இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு முறைமையில் முக்கியத்துவம் அல்லாத வங்கியாக (Non-D-SIB) இனங்கண்டுள்ளமையால் அடுக்கு 1 மற்றும் மொத்த மூலதனப் போதுகை விகிதத்துக்கான குறைந்தபட்ச தேவைகள் முறையே 8.5% மற்றும் 12.5% ஆகும். இருப்பினும், இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு முறைமையில் முக்கியத்துவம் அல்லாத வங்கிகளுக்கு கொவிட்-19 தொற்றுநோய்க்கான நிவாரணமாக ஒழுங்குமுறை மூலதனத் தேவையை 50 அடிப்படை புள்ளிகளால் குறைத்து, மேலும், உரிமம் பெற்ற வங்கிகள் 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்யவேண்டிய குறைந்த

# நிதியியல் மூலதன மீளாய்வு

பட்ச மூலதனத்தேவைக்கான மூலதனத்தை அதிகரிப்பதை இலங்கை மத்திய வங்கி 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை பிற்போட்டதுடன், விருப்பத்துக்குரிய செலவினங்களை மேற்கொள்வதில் கட்டுப்பாடுகளை விதித்தது. கொவிட்-19 நிவாரணத்திற்குப் பிறகு, ஒழுங்குமுறை அடுக்கு 1 விகிதம் 8.50% இலிருந்து 8.00% ஆகவும் மொத்த மூலதன விகிதம் 12.50% இலிருந்து 12.00% ஆகவும் குறைக்கப்பட்டது.

### இடர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்கள் — வரைபடம் 13




A – 31 டிசம்பர் 2019
B – கடன் இடர்
C – தொழிற்பாட்டு இடர்
D – சந்தை இடர்
E – 31 டிசம்பர் 2020

### பாசல் III மூலதனப் போதுமை — வரைபடம் 14




- சராசரி இடர் நிறையளிக்கப்பட்ட சொத்துக்கள் மீதான வருவாய்(வரிக்கு முன்)
- அடுக்கு 1 – மூலதனம்
- மொத்த மூலதனம்

கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக ஒழுங்கு விதிமுறையாளர்களால் விதிக்கப்பட்ட திருத்தப்பட்ட குறைந்தபட்ச சட்டரீதியான தேவைகளுக்கு மேலாக வங்கியின் மூலதன நிலை வலுவாக இருந்தது. அடுக்கு 1 மூலதனம் மற்றும் மொத்த மூலதன விகிதங்கள் முறையே 13.65% மற்றும் 16.45% ஆக டிசம்பர் 2020 இறுதியில் முறையே 8.00% மற்றும் 12.00% ஆக சட்டரீதியான தேவைகளுக்கு மேல் இருந்தன. 6.64% இன் முடுக்கு விகிதமும் குறைந்தபட்ச தேவையான 3.0% ஐ விட அதிகமாக இருந்தது.

## காசுப் பாய்ச்சல் முகாமை → 

அட்டவணை 06

| | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். |
|---|---|---|
| **ஆரம்ப காசு மீதிகள்** | **5,293.9** | 3,352.0 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப்பாய்ச்சல் | **20,835.3** | 16,462.8 |
| தொழிற்பாட்டு சொத்துக்களின் (அதிகரிப்பு)/குறைவு | **(193,524.2)** | (114,421.5) |
| தொழிற்பாட்டுப் பரிப்புக்களிலான அதிகரிப்பு/(குறைவு) | **186,754.7** | 108,707.7 |
| வரி செலுத்தப்பட்டது | **(2,889.0)** | (3,798.6) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான நிகர காசுப் பாய்ச்சல்** | **11,176.8** | 6,950.4 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | **(13,516.6)** | (2,228.5) |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்** | **3,220.0** | (2,780.0) |
| இறுதிக் காசு மீதி | **6,174.1** | 5,293.9 |

எமது காசு மற்றும் காசுக்கு சமமானவை 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 5.3 பில்லியனாக இருந்ததுடன், தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசுப் பாய்ச்சல்கள் அதிகரித்தமை மற்றும் ரூபா 5.0 பில்லியன் பெறுமதியானது நிலைத்திருக்கும் தொகுதிக்கடன்கள் வழங்கல் என்பவற்றின் விளைவாக 16.6% அதிகரித்து 31 டிசம்பர் 2020 நிலவரப்படி ரூபா 6.2 பில்லியனாகக் காணப்பட்டது.

## நிதி மூலாதாரங்கள் மற்றும் பயன்பாடு

கடன் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, வாடிக்கையாளர்களின் வைப்பு மற்றும் பிற மூலாதாரங்களின் நிதியிலிருந்து தொடர்ந்து வலுவான திரவத்தன்மை நிலை இருப்பதை உறுதி செய்து, எமது ஐந்தொகையை உத்வேகமாக முகாமை செய்து வருகிறோம்.

நிதிச் செலவினத்தைக் குறைக்கும் அதே வேளையில், அதன் தற்போதைய எதிர்வுகூறப்பட்ட சொத்து தளத்தை ஆதரிப்பதற்காக, தகுந்த தொகை, பற்றாக்குறை மற்றும் நிதியின் பன்முகப்படுத்தல் ஆகியவற்றை வங்கி தொடர்ந்து உறுதி செய்கிறது. போட்டி மற்றும் ஒழுங்குமுறை சூழல்களைப் பொறுத்து பொருத்தமான குழு நிதித் தந்திரோபாயங்கள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக நிதிச் சந்தைகள் தொடர்ந்து மதிப்பீடு செய்யப்படுகின்றன. நிதி கலவையின் முக்கிய அங்கமாக வங்கி தனது வைப்புத் தளத்தை உருவாக்குவதில் தொடர்ந்து கவனம் செலுத்தியது.

வங்கி அதன் முதன்மை நிதி மூலாதாரங்களாக, வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்பு, கடன் பிணையங்கள், தவணைக் கடன்கள், மறு கொள்முதல் ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்படும் பிணையங்கள் மற்றும் துணை கடன்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளது. வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்பு பொதுவாக குறுகிய முதிர்ச்சியைக் கொண்டிருக்கும், மேலும் அதில் பெரும்பகுதி தேவைக்கேற்ப திருப்பிச் செலுத்தப்படும். இந்த வைப்புகளின் குறுகிய கால தன்மை வங்கியின் திரவத்தன்மை இடரை அதிகரிப்பதுடன், போட்டி விலையை பராமரிப்பதன் மூலமும் சந்தை போக்குகளின் தொடர்ச்சியான கண்காணிப்பினாலும் வங்கி இந்த இடரைத் தீவிரமாக நிர்வகிக்கிறது.

# நிதியியல் மூலதன மீளாய்வு

## நிதிகளின் மூலாதாரம் வரைபடம் 15




- தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான வருமானம்
- வைப்புக்கள்
- கடன் படுகைகள்
- முதலீடுகளின் முதிர்வுகள்
- ஏனையவை

## நிதிகளின் பயன்பாடு வரைபடம் 16




- கடன்கள் மற்றும் முற்பணங்கள்
- கடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள்
- கடன் படுகைகளின் மீள்செலுத்துகை
- செலுத்தப்பட்ட வட்டி
- ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள்
- ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் கொடுப்பனவுகள்
- மூலதன செலவினங்கள்
- சேய் கம்பனிகள் மற்றும் துணை நிறுவனங்களின் மீதான முதலீடுகள்
- பங்கு இலாபம்
- செலுத்தப்பட்ட வரிகள்
- ஏனையவை

## நிதிகளின் மூலாதாரம் அட்டவணை 07

| | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். | 2018 ரூபா மில். |
|---|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான வருமானம் | **125,470** | 117,998 | 110,454 |
| வைப்புக்கள் | **221,910** | 170,677 | 101,634 |
| கடன் படுகைகள் | **5.000** | 6,288 | 31,086 |
| முதலீடுகளின் முதிர்வுகள் | **665** | 18,132 | 43,245 |
| ஏனையவை | **11,010** | 15 | 7 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான நிகர காசுப் பாய்வு | **364,055** | 313,110 | 286,426 |

## நிதிகளின் பயன்பாடு அட்டவணை 08

| | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். | 2018 ரூபா மில். |
|---|---|---|---|
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **96,178** | 31,734 | 48,291 |
| கடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் | **122,222** | 94,261 | 15,976 |
| கடன் படுகைகளின் மீள்செலுத்துகை | **35,016** | 67,873 | 107,553 |
| செலுத்தப்பட்ட வட்டி | **87,823** | 83,363 | 86,068 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | **9,574** | 9,576 | 8,944 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் கொடுப்பனவுகள் | **4,212** | 4,450 | 3,732 |
| மூலதன செலவினங்கள் | **1,366** | 1,505 | 1,742 |
| சேய் கம்பனிகள் மற்றும் துணை நிறுவனங்களின் மீதான முதலீடுகள் | **–** | 3,111 | 800 |
| பங்கு இலாபம் | **1,000** | 2,000 | 500 |
| செலுத்தப்பட்ட வரிகள் | **6,525** | 8,725 | 6,738 |
| ஏனையவை | **138** | 6,512 | 6,082 |
| | **364,055** | 313,110 | 286,426 |

மொத்த வைப்புகளுடன் ஒப்பீட்டு ரீதியான கடன்களின் விகிதாசாரம் 41.8% ஆக 2020 முடிவில் காணப்பட்டதுடன், இது கடந்த ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 44.7% க்கு குறைவானதாகும். இதன் பெரும்பகுதி ரூபா 26.9 பில்லியன் கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொகுதிக்கடன்களாக மீளவகைப்படுத்தப்பட்டமை காரணமாக அமைந்தது. அத்துடன், வங்கி மொத்த வைப்புத்திரட்டல்களில் 60% ஆன தொகையினை அரச பிணை பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்னும் கட்டாய தேவைப்பாடு காரணமாக இடரற்ற அரசு பத்திரங்களின் முதலீடானது குறைவானது வருமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. மொத்த வைப்புக்களிலான அரச பிணையங்கள் மீதான முதலீட்டின் விகிதம் 2019 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 60.9% உடன் ஒப்பிடும்போது, 2020 டிசம்பரில் 62.7% ஆக காணப்பட்டிருக்கிறது.

## கடன் விபரம் → அட்டவணை 09

| | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். | 2018 ரூபா மில். |
|---|---|---|---|
| குறுங்காலம் (ஒரு வருடத்துக்கு குறைவான) | **27,796** | 50,994 | 126,281 |
| நடுத்தர காலம் (1 முதல் 3 வருடங்கள்) | **13,677** | 25,623 | 12,032 |
| நீண்ட காலம் (3 வருடங்களுக்கு கூடுதலான) | **11,323** | 6,323 | 6,000 |
| | **52,796** | 82,940 | 144,313 |

எமது நீண்ட கால மூலதன விரிவாக்க செயற்திட்டங்கள் மாறும் மற்றும் நிலையான வீதத்திலான நீண்ட கால கடன்கள் மற்றும் உள்ளக ரீதியாக உழைக்கப்பட்ட நிதி ஆகியவற்றின் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டிருக்கிறது.

அட்டவணை 10 கடன் சேர்க்கையின் உள்ளடக்கம்

| | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். | 2018 ரூபா மில். |
|---|---|---|---|
| மீள் கொள்வனவு உடன்படிக்கை மீதான கடன் பெறுகைகள் | **14,532** | 44,142 | 73,658 |
| அந்நிய நாணய கடன் பெறுகைகள் | **6,173** | 12,023 | 64,566 |
| வழங்கப்பட்ட கடன் பத்திரங்கள் | **31,773** | 26,692 | 6,006 |
| ஏனையவை | **318** | 84 | 83 |
| | **52,796** | 82,940 | 144,313 |

## கடன் தரப்படுத்தல்

எங்கள் கடன் தரப்படுத்தல்கள் எமது சொந்த கணிசமான இடர்களால் மட்டுமன்றி, இலங்கையின் இறையாண்மை கடன் தரப்படுத்தல்களிலான நகர்வுகள் போன்ற முறைசார்ந்த இடர்களாலும் பாதிக்கப்படுகின்றன. இலங்கையின் பொருளாதாரத்தில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் தாக்கம் காரணமாக ஏப்ரல் 2020 இல் இலங்கை இறையாண்மை மதிப்பீட்டை தரமிறக்கியதைத் தொடர்ந்து, மே 2020 இல்,ஃபிட்ச் தரப்படுத்தல்கள் இறையாண்மையின் நீண்ட கால அந்நிய மற்றும் உள்ளூர் நாணய வழங்குநரின் இயல்புநிலை மதிப்பீட்டை “B” இலிருந்து “B-” க்கு எதிர்க்கணிய கண்ணோட்டத்துடன் தரமிறக்கியது.

இருப்பினும், ஐ.சி.ஆர்.ஏ லங்கா லிமிடெட் 2020 ஆம் ஆண்டில் 100% இலங்கை அரசின் உரிமையாண்மையின் பின்னணியில் மற்றும் வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணம் மற்றும் அதன் வட்டி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் மூலம் இலங்கை அரசு வழங்கிய 100% வெளிப்படையான உத்தரவாதத்தின் அடிப்படையில் [SL] AAA மதிப்பீட்டை வங்கிக்கு நிலையான கண்ணோட்டத்துடன் வழங்கியுள்ளது. மேலும், மொத்த வைப்புக்களில் குறைந்தபட்சம் 60% அரசாங்க பத்திரங்களில் முதலீடு செய்ய வங்கி கட்டாயப்படுத்தப்பட்டுமையினால் வங்கியின் முதலீட்டு தொகுதி குறைந்த இடரால் வகைப்படுத்தப் படுகிறது.

## பங்கு இலாபம்

வங்கி ரூபா 1.0 பில்லியனை 2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு பங்கு இலாபமாக வழங்கியுள்ளது. இது முன்னயை ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 2.0 பில்லியனிலும் குறைவானதாகும். ஒரு பங்கிற்கான பங்கு இலாபம் 2019இல் ரூபா 2.13 ஆகக் காணப்பட்டிருக்க, 2020இல் இது ரூபா 1.07 ஆகக் குறைவடைந்துள்ளது. பங்கு இலாப செலுத்துகை விகிதம் குறைந்து இருப்பதால், பங்கு இலாபக் காப்பு விகிதம் கடந்த ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 3 மடங்கிலிருந்து 2020இல் 10 மடங்காக அதிகரித்துள்ளது.

**பங்குக்கான பங்கு இலாபம் மற்றும் பங்கு இலாபக் காப்பு** வரைபடம் 17




## திரவத்தன்மை முகாமை

அழுத்தம் மிக்க சந்தை நிலைமைகளில் திரவத்தன்மை இடரை மதிப்பிடுவதற்கு ஏற்ப பொருத்தமான திரவத்தன்மை இடையகங்கள் பேணப்பட்டன. கொந்தளிப்பான மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட திரவத்தன்மை சூழல்கள் இருந்தபோதிலும், செயற்திறன் மிக்க திரவத்தன்மை முகாமை மூலம் ஐந்தொகை வளர்ச்சியை முழுமையாக ஆதரிக்க போதுமான திரவத்தன்மை மட்டம் பேணப்பட்டது.

காசுப் பாய்ச்சல்களில் ஏற்படத்தக்க எதிர்பாராத இடையூறுகளுக்கு எதிரான பாதுகாப்பாக, ஒழுங்குவிதிமுறை மற்றும் அழுத்த சூழ்நிலைகளை பூர்த்தி செய்வதற்கு சந்தைப்படுத்தக்கூடிய மற்றும் திரவத்தன்மைமிக்க சாதனங்கள் பேணப்படுகின்றன. இந்த சேர்க்கைகள் பல்வகைப்படுத்தல் மற்றும் திரவத்தன்மையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்குள் முகாமை செய்யப்படுகின்றன. முகாமை செய்யப்பட்ட திரவத்தன்மை என்பது பாசல் III திரவத்தன்மை காப்பு விகிதத்தின் (LCR) கீழ் தகுதிவாய்ந்த உயர் தர திரவ சொத்துக்கள் (HQLA) உள்ளிட்ட பிணைப்பொறுப்பளிக்கப்படாத சந்தைப்படுத்தக்கூடிய கருவிகளைக் குறிப்பதுடன், இது ஒரு அழுத்தம் மிக்க சூழ்நிலையில் திரவத்தன்மைக்கான ஆதாரங்களை வழங்கத்தக்கதாகும்.

பாசல் III இன் கீழ் திரவத்தன்மை காப்பு விகிதம் ஒரு அழுத்தம் மிக்க சூழலில் சாத்தியமான வெளிப்பாடுகளைச் சந்திக்க போதுமான உயர்தர திரவச் சொத்துக்கள் இருப்பதை உறுதிசெய்வதன் மூலம் வங்கியின் 30 நாட்காட்டி நாள் திரவத்தன்மை இடர் சுயவிவரத்தின் குறுகிய கால நெகிழ்வுத்தன்மையை ஊக்குவிக்கின்றது. பாசல் III தேறிய நிலையான நிதி விகிதத்தின் (NSFR) நோக்கம், சொத்துக்களின் உள்ளடக்கம் மற்றும் நிதிக் கூற்றுக்கு வெளியேயான நடவடிக்கைகள் தொடர்பில் நிலையான நிதியீட்டத்தை பேணுவதற்று வங்கிகளைத் தேவைப்படுத்துவதன் மூலம் வங்கித் துறையில் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் நெகிழ்வுத்தன்மையை மேம்படுத்துவதாகும். இதன் மூலம் வங்கிகள் சொத்துக்களின் சேர்க்கை மற்றும் ஐந்தொகை செயற்பாடுகள் தொடர்பாக நிலையான நிதி விவரங்களை பராமரிக்க வேண்டும். தேறிய நிலையான நிதி விகிதத்தால் கருதப்படும் கிடைக்கக்கூடிய நிலையான நிதி என்பது ஓராண்டுக்குட்பட்ட கால எல்லைக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் மூலதனம் மற்றும் பொறுப்புகளின் பகுதி என வரையறுக்கப்படுகிறது.

உள்நாட்டு வங்கி அலகுக்கான சட்டநியதிப்படியான திரவ சொத்து விகிதம் (SLAR) ஆண்டு முழுவதும் குறைந்தபட்ச தேவைப்பாடாகிய 20% ஐ விட அதிகமாக பராமரிக்கப்பட்டு அறிக்கையிடல் காலத்தின் முடிவில் 69.1% ஆக முடிவடைந்தது எமது திரவத்தன்மை சுயவிவரம் ஆரோக்கியமாக உள்ளமைக்கான சான்றாகும். 30 நாட்களுக்கான தேறிய காசுப்பாய்ச்சலுக்கான மொத்த உயர்தர திரவ சொத்துக்களால் அளவிடப்படும் திரவத்தன்மை காப்பு விகிதம், ஆண்டு முழுவதும் 90% க்கு மேல் தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வந்ததுடன், மேலும் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் அனைத்து நாணயங்களுக்குமான திரவத்தன்மை காப்பு விகிதம் 307.22% ஆக இருந்தது. கீழே கொடுக்கப்பட்டுள்ள 2019 ஆம் ஆண்டின் இறுதிக்கான எங்கள் திரவத்தன்மை பாதுகாப்பு விகிதங்கள் குறைந்தபட்ச தடைகளை விட மேலாக இருந்தன. வங்கியின் நீண்டகால நிதி ஸ்திரத்தன்மையை அளவிட பயன்படும் நிகர நிலையான நிதி விகிதம் (NSFR) 2020 ஆம் ஆண்டின் இறுதியில் 168.5% ஆக இருந்ததுடன், இது குறைந்தபட்ச தேவை 90%ஐ விட அதிகமாக இருந்தது.

# நிதியியல் மூலதன மீளாய்வு

## நிதியிடல் மற்றும் திரவத்தன்மை இடரை முகாமை செய்தல்

நிதி இடைநிலை அடிப்படையில் வங்கியின் முதன்மை நோக்கு குறுகிய கால வைப்புகளை நீண்ட கால கடன்களாக மாற்றுவதாகும். இந்த வகிபாகத்தை நிறைவேற்றும் போது, வங்கிகள் இயல்பாகவே திரவத் தன்மை பொருத்தமின்மைக்கு ஆளாவதுடன், தொடர்ந்து நிதி மற்றும் சந்தை திரவத் தன்மை இடர்களுக்கும் உள்ளாகின்றன. வலுவான திரவத் தன்மை இடர் முகாமை கட்டமைப்பின் மூலம், வங்கி செயற்பாடுகள் சாதாரண மற்றும் அழுத்த நிலைமைகளின் கீழ் தடையின்றி தொடர்கின்றன என்பதை உறுதிப்படுத்த அதன் நிதி மற்றும் சந்தை திரவத் தன்மை இடரை வங்கி முகாமை செய்கிறது. திரவத் தன்மை இடர் முகாமை கட்டமைப்பை ஆதரிக்கும் முக்கிய நோக்கங்கள், எல்லா நேரங்களிலும் நிதி சந்தை நம்பிக்கையை பராமரித்தல், முக்கிய பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் ஒழுங்குமுறை திரவத் தன்மைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

வங்கி மற்றும் நிதிச் சேவை முறை மீதான பொது நம்பிக்கையைப் பேணுவதற்கு வங்கி நிலையான நிதி ஆதாரங்களைக் கொண்டிருப்பதை உறுதி செய்வதற்கும், எல்லா நேரங்களிலும் போதுமான அளவு திரவத் தன்மையை பராமரிப்பதற்கும் வங்கி மூலதனத்தைப் பொறுத்தவரை நிதி மற்றும் திரவத் தன்மைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. பங்குதாரருக்கான வருவாயை உருவாக்குவதற்கான அதன் இயக்கத்தில் தேசிய சேமிப்பு வங்கி ஒருபோதும் அதன் திரவத் தன்மையில் விட்டுக் கொடுப்புக்களை செய்யாது.

திரவத் தன்மை இடர் முகாமை செயல்பாட்டில் சொத்து மற்றும் பரிப்பு குழுவினால் வழக்கமான பகுப்பாய்வு மற்றும் திரவத் தன்மை நிலையை கண்காணித்தல் மற்றும் சந்தை அணுகலை பராமரித்தல் ஆகியவை அடங்கும். வழக்கமான காசுப்பாய்ச்சல் எதிர்வுகூறல்கள், திரவத் தன்மை முன்னறிவிப்புகள், திரவத்தன்மை விகிதங்கள் மற்றும் முதிர்வு இடைவெளி பகுப்பாய்வு ஆகியவை இந்த நோக்கத்திற்காக பகுப்பாய்வு கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. திரவத்தன்மை மற்றும் நிதி இடர் ஆகியவை திரவத் தன்மை பாதுகாப்பு விகிதம் (LCR) மற்றும் நிகர நிலையான நிதி விகிதம் (NSFR) போன்ற பல்வேறு காட்டிகளை பயன்படுத்தி அளவிடப்படுகின்றன.

திரவத் தன்மை இடர் முகாமை குறித்த கூடுதல் விவரங்களுக்கு பக்கங்கள் 92 முதல் 114 வரையான இடர் மற்றும் மூலதன முகாமை அறிக்கையைப் பார்க்கவும்.

## பொருளாதார செயற்திறன் →

### உருவாக்கப்பட்ட மற்றும் பகிரப்பட்ட நேரடியான பொருளாதார பெறுமதி

அட்டவணை 11

| | 2020 ரூபா மில். | 2019 ரூபா மில். |
|---|---|---|
| **உருவாக்கப்பட்ட நேரடியான பொருளாதாரப் பெறுமதி** | **127,547** | 121,929 |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | **10,207** | 5,894 |
| வைப்பாளர்கள் | **87,622** | 89,898 |
| ஊழியர்கள் | **9,967** | 10,158 |
| மூலதன பங்காளிப்பாளர்கள் | **1,000** | 2,000 |
| பங்கு இலாபம் தவிர, அரசாங்கம் | **9,745** | 9,665 |
| **நிறுத்தி வைக்கப்பட்ட நேரடியான பொருளாதார பெறுமதி** | **9,007** | 4,314 |
| **பகிரப்பட்ட நேரடியான பொருளாதார பெறுமதி** | **118,540** | 117,615 |

**உருவாக்கப்பட்ட மற்றும் பகிரப்பட்ட நேரடியான பொருளாதார பெறுமதி (ரூபா மில்லியன்)**

வரைபடம் 18




| | 2020 | 2019 |
|---|---|---|
| A – தொழிற்பாட்டு செலவினங்கள் | **8.00%** | 4.83% |
| B – வைப்பாளர்கள் | **73.73%** | 68.70% |
| C – ஊழியர்கள் | **7.81%** | 8.33% |
| D – மூலதன வழங்குனர்கள் | **0.78%** | 1.64% |

| | 2020 | 2019 |
|---|---|---|
| E – பங்கு இலாபம் தவிர, அரசு | **14.71%** | 11.47% |
| F – நிறுத்தி வைத்த நேரடி பொருளாதார பெறுமதி | **7.07%** | 3.54% |
| G – பகிரப்பட்ட நேரடியான பொருளாதார பெறுமதி | **7.64%** | 7.93% |

அட்டவணை 12 ► சட்டநியதிப்படியான திரவத்தன்மை விகிதங்கள்

| விளக்கம் | வங்கி 2020 % | 2019 % | மாற்றம் % |
|---|---|---|---|
| சட்டநியதிப்படியான திரவ சொத்து விகிதம் (SLAR) – குறைந்தபட்ச தேவை 20% | **69.10** | 60.20 | 14.8 |
| ரூபா திரவத்தன்மை காப்பு விகிதம் – குறைந்தபட்ச தேவை (2019 - 100%, 2020 - 90%) | **311.02** | 278.12 | 11.8 |
| அனைத்து நாணய திரவத்தன்மை காப்பு விகிதம் – குறைந்தபட்ச தேவை (2019 - 100%, 2020 - 90%) | **307.22** | 276.64 | 11.1 |
| நிகர நிலையான நிதி விகிதம் – குறைந்தபட்ச தேவை (2019 - 100%, 2020 - 90%) | **168.54** | 175.18 | (-3.8) |

## வணிக வரிசைகள் மீளாய்வு



## கிளைத் தொழிற்பாடுகள்

**உற்பத்திகள் மற்றும் சேவைகள்**
வைப்புக்களை ஏற்றல், சில்லறைக் கடன் வழங்கல் தீர்வுகள், அட்டைத் தீர்வுகள் மற்றும் பரிவர்த்தனை வங்கியியல் உள்ளிட்ட முழு அளவிலான சேவைகள்.

**வாடிக்கையாளர்கள்**
இயற்கை நபர்கள் மற்றும் சட்ட ரீதியான நபர்கள்.

**விநியோக வழிகள்**
கிளைகள், தன்னியக்க இயந்திரங்கள், அஞ்சல் நிலையங்கள் மற்றும் உப அஞ்சல் அலுவலகங்கள், காசு வைப்பு/காசு மீள்சுழற்சி இயந்திரங்கள், இணைய வங்கியியல், தொலைபேசி, அழைப்பு மையம்.

**தொழிற்பாட்டு சூழல்**
- கொவிட்-19 பெரும் தொற்றுப் பரம்பல் மற்றும் அதன் தாக்கம்
- பெரும் தொற்றுப் பரம்பலால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வணிகங்களுக்கும் ஆதரவளிப்பதற்கான அரசாங்க நடவடிக்கைகள்
- கடனாக்க வளர்ச்சியின் விரிவாக்கம்

**தந்திரோபாய கவனம் செலுத்தும் பகுதிகள்**
- எமது வாடிக்கையாளர்களைத் தக்க வைத்துக் கொள்ளுவதுடன், புதிய வாடிக்கையாளர் கையகப்படுத்துதலில் கவனம் செலுத்துதல்
- வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்களின் பாதுகாப்பு மற்றும் இடரற்றநிலை
- தொழிற்பாட்டு நிலைத்தன்மை மற்றும் அரசாங்கத்தால் அறிவுறுத்தப்பட்ட அனைத்து சுகாதார நடவடிக்கைகளையும் பின்பற்றி தடையில்லா சேவை
- உற்பத்தி நோக்கிலிருந்து வாடிக்கையாளர் சேவைக்கு கவனத்தை மாற்றுதலும் அவர்களின் வாழ்க்கை படிநிலைகளில் சேவை செய்யும் உறவுமுறையில் கவனம் செலுத்துதலும்.
- நிகர வட்டி வருமானம் மற்றும் பரிவர்த்தனை எண்களில் வலுவான கவனம்
- பாதுகாப்பு மிக்க கடன் கொள்கை மற்றும் மீளப்பெறல் மற்றும் சேத இழப்புகளில் கவனம் செலுத்துதல்
- செலவு வினைத்திறனை இயக்குதல்
- சில வகைகளில் நியாயமான வளர்ச்சியுடன் சந்தை பங்கைப் பேணுதல்
- சேமிப்பு கலவையை அதிகரிப்பதன் மூலம் செலவு குறைந்த நிதியீட்டம்
- சொத்து தரத்தை தொடர்ச்சியாக மேம்படுத்துதல்

**2020 இல் முக்கிய அடைவுகள்**
- 2019இல் இருந்து 28.2% அதிகரித்த, இதுவரையில் உச்சமான ரூபா 218.4 பில்லியன் வைப்புத்திரட்டல் கிளைகள் மற்றும் அஞ்சல் வலையமைப்பு மூலம் அடையப்பட்டது.
- 3 புதிய கிளைகள் திறக்கப்பட்டதுடன், 3 தன்னியக்க இயந்திரங்கள் மற்றும் 24 காசு மீள்சுழற்சி இயந்திரங்கள் பொருத்தப்பட்டன.
- வருடத்தின் போது 9 கிளைகள் இடமாற்றம் செய்யப்பட்டன
- இணைய வங்கி வலையமைப்பில் 16,000க்கும் மேற்பட்ட புதிய வாடிக்கையாளர்கள் சேர்க்கப்பட்டனர்.
- முந்தைய ஆண்டுடன் ஒப்பிடும் போது காசு மீள்சுழற்சி இயந்திரங்கள் மூலம் வைப்பு பரிவர்த்தனைகள் 50% க்கும் அதிகமாக வளர்ச்சியடைந்தன.
- அஞ்சல் வைப்புத் திரட்டலில் 68.0% வளர்ச்சி
- சில்லறைக் கடன் வழங்கலில் 24.0% வளர்ச்சி
- வைப்புத் தொகைகளின் சந்தைப் பங்கு 2019இன் 10.75% இலிருந்து 10.82% ஆக அதிகரித்துள்ளது.
- தொழிற்துறையின் சராசரியான 4.9%ஐ விட குறைவான 2.79% தொழிற்படாக் கடன்கள் விகிதம்

**முன்னோக்கிய பாதை**
- எண்ணியல் நிலைமாற்றத்தை விரைவுபடுத்துதல் மற்றும் எண்ணியல் இயலுமைகளில் முதலீடு செய்தல்
- பாதுகாப்பு அம்சங்களில் இழப்பின்றி, சுய சேவை வழிமுறைகளில் எண்ணியல் வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல்
- அடையாளம் காணப்பட்ட பகுதிகள்/ உற்பத்திகளில் இலக்கு வளர்ச்சியை அடைந்து, சந்தைப் பங்கைப் பேணுதல்
- செலவு குறைத்தல் உத்திகள் மற்றும் தொழிற்பாட்டு வினைத்திறனை இயக்கத் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தல்
- கிரயம் குறைந்த நிதி மற்றும் கிராமப்புற வைப்புத் தொகையை அதிகரித்தல்
- வங்கித் துறை சராசரியை விட சில்லறை கடனாக்கத்துக்கான தொழிற்படாக் கடன் விகிதத்தை குறைந்தளவில் முகாமை செய்தல்

பிற்சேர்க்கைத் தகவல்
நிதியியல் அறிக்கைகள்
ஆளுகை
கண்ணோட்டம்

# நிதியியல் மூலதன மீளாய்வு

## கூட்டுவணிக நிதியீட்டம்

**உற்பத்திகள் மற்றும் சேவைகள்**

- நிதி நிறுவனங்கள் மற்றும் அவற்றின் துணை நிறுவனங்களுக்கான நேரடி கடன் வழங்கல்.
- நிதி வசதிகளை கட்டமைத்தல் (வாடிக்கையாளர்களுக்கான உய்த்தறி சாதன உற்பத்திகள்)
- கடன் வழங்குபவர்களுக்கும் கடன் வாங்குபவருக்கும் இடையிலான தீர்வு மற்றும் பரிவர்த்தனைகளை ஒருங்கிணைக்கும் ஒன்றிணைந்த கடன் வசதிகளுக்கான முகவராகப் பங்கு வகித்தல்
- நம்பிக்கை சான்றிதழ்கள், தனிப்பட்ட வைப்புக்கள் மற்றும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்தல்
- உட்கட்டமைப்பு திட்டங்களுக்கு நிதியளிப்பதில் முன்னணி தொழில் நிபுணத்துவம்
- ஒழுங்குவிதிமுறை மூலதனத்தை மேம்படுத்துவதற்கும் கடன் மற்றும் முதலீடுகளை எளிதாக்குவதற்கும் கடன் பத்திரங்களை வழங்குதல்

**வாடிக்கையாளர்கள்**

கூட்டிணைத்த வணிகங்கள், அரசுடமை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள்

**விநியோக வழிகள்**

நேரடி அணுகுமுறை

**தொழிற்பாட்டு சூழல்**

- பலவீனமாகும் பேரினப் பொருளாதார அடிப்படைகள் மற்றும் மெதுவான பொருளாதார வளர்ச்சி
- கட்டுமானம், சுற்றுலா மற்றும் போக்குவரத்து போன்ற சில துறைகளில் மீளமைப்பு இடர்பாடுகள்
- குறைந்த முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல்
- குறைந்த வட்டி வீத நிலைமை
- தொடர்ச்சியான ரூபாய் தேய்மானம்
- குறைந்த இறையாண்மை தரப்படுத்தல்

**தந்திரோபாய கவனம் செலுத்தும் பகுதிகள்**

- புதிய சேவைபெறுனர் கையகப்படுத்தல்
- கட்டண அடிப்படையிலான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் அதிகரித்த கவனம்
- வணிகமயமாக்கல் திறன்களின் மூலம் அதிக இடர்மிக்க துறைகளில் கவனத்தை செலுத்தி முக்கிய வளர்ச்சித் துறைகளில் (சக்தி, பயன்பாடுகள், உட்கட்டமைப்பு, மீளுருவாகும் சக்திவளம், பசுமை வணிகங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள்) கவனம் செலுத்துதல்
- இலங்கையில் எமது தடத்தை விரிவாக்கவும் உறவை வலுப்படுத்தவும் வணிகக் கூட்டாளர்களை பலப்படுத்தல்
- கடன் தரத்தை நிர்வகித்தல்
- விலையிடல் மாதிரிகளை மீளமைத்தல் மற்றும் மூலதன ஒதுக்கீட்டை உச்சப்படுத்தல்

**2020 இல் முக்கிய சாதனைகள்**

- ரூபா 5.0 பில்லியன் பெறுமதியானது பட்டியலிடப்படாத, பிணைகளற்ற இரண்டாம் நிலை முதிர்வற்ற தொகுதிக்கடன் வழங்கல்
- சுமார் ரூபா 35.0 பில்லியன் பெறுமதியான கடன்கள் கூட்டிணைத்த வணிக வாடிக்கையாளர்களுக்கு ஆண்டின் போது செயற்றிட்ட நிதியுதவியின் கீழ் வழங்கப்பட்டன
- மொத்தம் ரூபா 35.0 பில்லியனில், ரூபா 31.4 பில்லியன் பெறுமதியான கடன்கள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டங்களுக்கு பொது நிதிக்கு வழங்கப்பட்ட கடன்கள் உட்கட்டமைப்பு விருத்தி செயற்றிட்டத்தின் கீழ் பொதுநிதிக்கு வழங்கப்பட்டது.
- கூட்டிணைத்த வணிகங்களுக்கான கடன் வழங்கல்களில் 72.9% வளர்ச்சி

**முன்னோக்கிய பாதை**

- கடன் தொகுதி தரத்தைப் பாதுகாத்தல்
- செயல்முறை விருத்திகள் மற்றும் தன்னியக்கமாக்கல்
- சந்தைப் போக்குகளைக் கண்காணிப்பதன் மூலம் விவேகமான கடன் அணுகுமுறை
- அதிக வளர்ச்சியுடன், ஆனால் குறைந்த முதல் நடுத்தர இடர் சுயவிவரத்துடன் துறைகளுக்கு கடன் வழங்குதல்.
- உட்கட்டமைப்பு திட்டங்கள் கடன் வழங்குவதன் மூலம் அரசாங்க நிதியுதவிக்கு உதவுதல்

## சர்வதேச வங்கியியல்

### உற்பத்திகள் மற்றும் சேவைகள்

- ஐ.அ.டொலர், யூரோ, பவுண்ட்ஸ், அவுஸ். டொலர் மற்றும் ஜப்பான் யென் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் (சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு)
- உள்வருகை மற்றும் வெளிச்செல்லும் பண மாற்றல்கள்
- வெளிநாட்டு நாணய மாற்று
- இறக்குமதி நாணயக் கடிதம் வழங்குதல்
- இறக்குமதிப் பட்டியல்களைக் கையாளுதல் மற்றும்
- கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து உத்தரவாதங்களை வழங்குதல்

### வாடிக்கையாளர்கள்

இலங்கையின் வதிவுள்ளோர், நாட்டிற்கு வெளியே வசிக்கும் இலங்கை வதிவுள்ளோர், இலங்கையில் வசிக்கும் வெளிநாட்டவர்.

### விநியோக வழிமுறைகள்

கிளைகள், இணைய வங்கி, தொடர்புடைய வங்கிகள், பரிமாற்ற இல்லங்கள், உலகளாவிய பணப் பரிமாற்ற நிறுவனங்கள், யூரோகிரோ அஞ்சல் வலையமைப்பு மற்றும் நாடுகடந்த பிரதிநிதிகள், தொலைபேசி மற்றும் அழைப்பு மையம்.

### தொழிற்பாட்டு சூழல்

- உலகளாவிய வர்த்தக நடவடிக்கைகளில் மந்தநிலை
- இறக்குமதியைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்
- முக்கிய மூல சந்தைகளில் இருந்து அந்நிய செலாவணி வருவாய் குறைதல் (உ-ம்: மத்திய கிழக்கு)
- தொடர்ச்சியான ரூபாய் தேய்மானம்
- அந்நிய செலாவணி ஈட்டப்படும் நாடுகளில் கொவிட்-19 தாக்கம்
- ஏராளமான எண்ணியல் தொழிநுட்ப நிறுவனங்கள் மற்றும் பிற பணப் பரிமாற்றுகள

### தந்திரோபாய கவனம் செலுத்தும் பகுதிகள்

- பணம் அனுப்புவதற்கான முக்கிய மூல சந்தைகளில் சந்தை ஊடுருவல் மற்றும் சந்தை விருத்தி
- மத்திய கிழக்கு சந்தைகளின் சார்புநிலையைக் குறைக்க பிற சந்தை வாய்ப்புக்களைத் தேடுதல்
- அரச நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் புதிய வாகன விற்பனையாளர்களுடனான ஏற்பாடுகள் மூலம் வங்கிக்கு அனுமதிக்கப்பட்ட வர்த்தக சேவைகளுக்கான அணுகல் சந்தை
- கட்டண அடிப்படையிலான வருமானத்தை மேம்படுத்துதல்

### 2020 இன் முக்கிய அடைவுகள்

- வெளிநாட்டு பணமாற்றல்களாக ரூபா 56.2 பில்லியன் பதிவு செய்யப்பட்டது.
- ஜப்பான் ரெமிட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் மற்றும் வெஸ்டர்ன் யூனியன் எல்.எல்.சி. ஆகியவற்றுடன் புதிய பரிமாற்ற இல்ல உறவுமுறை உருவாக்கம்
- வெளிநாட்டு வைப்புத்தொகையில் 29.7% வளர்ச்சியை அடைந்து ரூபா 15.4 பில்லியனாக அதிகரிப்பு
- பணப் பரிமாற்ற சந்தைப் பங்கை 95 அடிப்படைப் புள்ளிகளால் அதிகரித்து 4.24 சதவீதமாக உயர்த்தியது

### முன்னோக்கிய பாதை

- தொழிற்பாட்டு மேன்மை (உ-ம்: வினைத்திறன் மிக்க பணப் பரிமாற்றம்)
- உயர் வளர்ச்சி கொண்ட பணப்ப பரிமாற்ற சந்தைகளுக்கான நுழைகை
- ஏற்றுமதி வர்த்தக நிதி வணிகத்தில் அதிக கவனம் செலுத்துதல்
- வாடிக்கையாளர் அனுபவத்தை மேம்படுத்தல்
- வெளிநாட்டு நாணய வைப்புகள் மற்றும் பணப் பரிமாற்றத்தில் இரட்டைத்தான வளர்ச்சியை அடைதல்
- பணப் பரிமாற்ற சந்தைகளில் சந்தை பங்கு வளர்ச்சியை மேம்படுத்துதல்

# நிதியியல் மூலதன மீளாய்வு

## திறைசேரி

**உற்பத்திகள் மற்றும் சேவைகள்**
அரச பிணையங்கள், மற்றும் பங்கு மூலதன முதலீடு, அந்நிய செலாவணி, மீள் கொள்வனவு உடன்படிக்கையின் மீது கடன் பெறுகை, மற்றும் நேர் மாற்று மீள் கொள்வனவு உடன்படிக்கைகள் மீதான கடன் வழங்கல்.

**வாடிக்கையாளர்கள்**
நிதி நிறுவனங்கள், நிதி சாரா நிறுவனங்கள், தனிநபர்கள், அரசுரிமை நிறுவனங்கள்.

**விநியோக வழிமுறைகள்**
நேரடி அணுகல், இணைய வர்த்தக தளங்கள்

**தொழிற்பாட்டு சூழல்**
- சந்தையிலான திரவத்தன்மை மிகை
- குறைந்த வட்டி வீத நிலைமை
- அரச பிணையங்களிலான குறைந்த விளைவு
- அரச பிணையங்கள் சந்தையிலிருந்தான முதலீட்டு வெளிப்பாய்வு

**தந்திரோபாய கவனம் செலுத்தும் பகுதிகள்**
- வருமானத்தை உச்சப்படுத்த, நிலையான வருமானம் மற்றும் பிணையங்கள் தொகுதியினை மறுசீரமைத்தல்
- அரச பத்திரங்களில் முதலீடு செய்வதற்கான சட்டநியதித் தேவைப்பாட்டைப் பேணுதல்
- திரவத்தன்மை மற்றும் முதலீட்டை பேணுதல்
- அரச பிணையங்களில் முதலீடு செய்வதற்கான கட்டாயத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் வாடிக்கையாளர் வைப்புகளைப் பயன்படுத்தி கடன் வழங்குதல் ஆகியவற்றுக்கிடையிலான சமநிலையைப் பேணுதல்
- மூலதன ஆதாயங்கள் மற்றும் கட்டண அடிப்படையிலான வருமானங்களை அதிகரிக்கும் நோக்குடன் நாணயமாற்று பரிமாற்றங்களை அதிகரித்தல்

**2020 இன் முக்கிய அடைவுகள்**
- அரச பிணையங்கள் - வைப்பு விகிதத்தினை உகந்த மட்டத்தில் 62.65% ஆக பேணுதல்
- மொத்த வட்டி வருமானத்தின் 55.0% இனை அரச பிணையங்களிலிருந்தான வட்டி வருமானத்திலிருந்து பங்களித்தல்
- அரச பிணையங்களிலிருந்து 10.16% திரும்பலை நிலையாகப் பேணுதல்

**முன்னோக்கிய பாதை**
- உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிகழ்வுகள் மற்றும் கொள்கைகள், முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் சந்தையில் முதலீடுகள் மற்றும் மூலதன பாய்வுகள் மீது கொண்டுள்ள தாக்கம்
- வங்கியின் ஐந்தொகையில் முதிர்வு பொருத்தமின்மையைக் குறைக்க பயனுறுதி மிக்க வகையில் திரவத்தன்மை முகாமையில் கவனம் செலுத்துதல்
- புதிய முறைமைகள் மற்றும் செயன்முறைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் முன்-நடுத்தர-பின் அலுவலகங்களில் தொழிற்பாட்டு மேன்மை
- முறிகள் (அரச பிணையங்கள்), பங்கு மூலதனம் மற்றும் அந்நிய நாணய சந்தைகளின் கவர்ச்சிகரமான வர்த்தக வாய்ப்புகள் மூலம் வருவாயை உச்சப்படுத்தல்
- உச்ச வருவாய்க்காக திரட்டப்பட்ட நிதியை முதலீடு செய்தல்

# ஆளுகை

# 39


பணிப்பாளர் சபை – **40**

கூட்டாண்மை முகாமை – **45**

நிறைவேற்று முகாமை – **46**

பிரதம முகாமையாளர்கள் – **48**

கூட்டாண்மை ஆளுகை – **49**

சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை – **78**

சபை மனிதவள மற்றும் ஊதியக் குழுவின் அறிக்கை – **80**

சபை நியமனக் குழுவின் அறிக்கை – **82**

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் அறிக்கை – **84**

சபை கடன் குழுவின் அறிக்கை – **86**

சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழுவின் அறிக்கை – **88**

சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுவின் அறிக்கை – **90**

இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம் – **92**

# பணிப்பாளர் சபை



### திருமதி கேசிலா ஜயவர்தன

**தலைவர்**
**சுயாதீனமற்ற**
**நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்**

**நியமனத் திகதி**

2 ஜனவரி 2020

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**

திருமதி ஜயவர்தன அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளராக 15 ஆண்டுகள் பணியாற்றியுள்ள ஒரு கல்வியியலாளர்/ பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆவார். அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இளமாணி (கௌரவ) மற்றும் முதுமாணி பட்டங்களைப் பெற்றவராவார். இவர் இரு அபிவிருத்தி வங்கிகளின் தலைவராக 8 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**

தலைவர் - வரையறுக்கப்பட்ட என்.எஸ். பி நிதி முகாமைத்துவக் கம்பனி, தலைவர் - இலங்கை சேமிப்பு வங்கி

**முன்னைய முக்கிய நியமனங்கள்**

தலைவர் - கந்துரட்ட அபிவிருத்தி வங்கி, தலைவர் - பிராந்திய அபிவிருத்தி வங்கி, மாகாண சபை உறுப்பினர்.

**சபை உபகுழுக்களின் உறுப்புரிமை**

தலைவர் - சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு (BHRRC), தலைவர் - சபைக் கடன் குழு (BCC)*, தலைவர் - சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு (BITSC)*, தலைவர் - சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு (BMSC)*

*8 பெப்ரவரி 2021 இல் விளைவுக்கு வரும் வகையில் கலைக்கப்பட்டுள்ளது.



### திரு எரங்க ஜயவர்தன

**சிரேஷ்ட பணிப்பாளர்**
**சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்**

**நியமனத் திகதி**

23 ஜனவரி 2020

**சிரேஷ்ட பணிப்பாளர்**

15 ஜூன் 2020

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**

திரு ஜயவர்தன அவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் Rensselaer Politechnic Institute இடமிருந்து விஞ்ஞான இளமாணி மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக் கழகத்திலிருந்து மின்சார பொறியியல் விஞ்ஞான முதுமாணி (M.Sc) பட்டத்தினையும் பெற்றுள்ளார்.

திரு. ஜயவர்தன அவர்கள் அப்பிள் இன்க். (Apple Inc.), கூப்பர்டினோ, சி.ஏ, யு.எஸ்ஏ (Cupertino, CA, USA) மற்றும் சிஸ்கோ சிஸ்டம்ஸ், சான் ஜோஸ், சி.ஏ, யு.எஸ்.ஏ. (Cisco Systems, San Jose, CA, USA) ஆகிய நிறுவனங்களிலான அவரது சேவைக் காலத்தின் போது பல்வேறு தலைமைத்துவ விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டிருந்தார்.

திரு. ஜயவர்தன அவர்கள் மெலின்டா கேட்ஸ் (Melinda Gates Fellowship) புலமைப் பரிசிலைப் பெற்ற முதலாவது இலங்கையராக இருப்பதுடன், இது மின் பொறியியலில் தமது கலாநிதிக் கற்கையினை முழுமையான புலமைப் பரிசிலில் ஐக்கிய அமெரிக்காவின் ஸ்ரான்போர்ட் பல்கலைக் கழகத்தில் கற்க வாய்ப்பாக, மேலும் அவரது கல்வி வாழ்க்கைக்கு உதவியது.

திரு. ஜயவர்தன பல பிரசுரங்களின் எழுத்தாளராக, அவரது ஆய்வுக் கட்டுரைகள் சர்வதேச கட்புல பொறியியல் அமைப்பின் வருடாந்த சர்வதேச மாநாடுகளில் வெளியிடப்பட்டன. அமெரிக்காவின் கெய்தெஸ்பர்க், எம்.டி., தேசிய நியமங்கள் மற்றும் தொழிநுட்ப நிறுவனத்தில் நடாத்தப்பட்ட இந்த ஆராய்ச்சி பிரதானமாக, நுண் கல்அச்சுக்கலை (Micro lithography) மீதான செயன்முறைக் கட்டுப்பாடுகள் மீது கவனம் செலுத்தியது.

அவர் 2010 இல் பேபால் புத்தாக்க விருதை வென்ற சிலிக்கான் வேலி அடிப்படையிலான ஆரம்ப நிறுவனத்தின் ஸ்தாபக உறுப்பினராக இருந்ததுடன், இது வயர்ட் (WIRED), நியூயோர்க் டைம்ஸ் (NY Times), பொஸ்டன் குளோப் (Boston Globe), சி.என். பி.சி (CNBC) மற்றும் சான்பிரான்சிஸ்கோ குரோனிக்கல் (San Francisco Chronicle) ஆகிய சர்வதேச ஊடகங்களின் வெளியீடுகளிலும் இடம்பெற்றது.

திரு. ஜயவர்தன அவர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச நிறுவனங்களில் தனது தொழிற்துறை அனுபவத்தினைக் கொண்டிருப்பதுடன், உள்நாட்டு மற்றும் சர்வதேச மாநாடுகளிலும் உரையாற்றியிருக்கிறார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**

பிரதம நிறைவேற்று அதிகாரி - வரையறுக்கப்பட்ட கிகா புட்ஸ் (தனியார்) கம்பனி

**முன்னைய முக்கிய நியமனங்கள்**

பணிப்பாளர் - எண்ணியலாக்கம் வரையறுத்த மாஸ் இன்டிமேட்ஸ் (தனியார்) கம்பனி, பிரதம நிறைவேற்று அதிகாரி - சிலூட்டா (தனியார்) கம்பனி, பொது முகாமையாளர்/ பணிப்பாளர் மாஸ் இனோவேஷன்ஸ், பொது முகாமையாளர், கொள்வனவுகள் மற்றும் வழங்கல் சங்கிலி, வரையறுத்த மாஸ் இன்டிமேட்ஸ் (தனியார்) கம்பனி, வழங்கல் சங்கிலி, திட்டமிடல் மற்றும் கொள்வனவு, அப்பிள் இன்க்., கூப்பர்டினோ, சி.ஏ, யு.எஸ்ஏ கேள்வித் திட்டமிடல் முகாமையாளர், சிஸ்கோ சிஸ்டம்ஸ், சான் ஜோஸ், சி.ஏ, யு.எஸ்.ஏ, ஆராய்ச்சி விஞ்ஞானி-தேசிய நியமங்கள் மற்றும் தொழிநுட்ப நிறுவகம், கெய்தெஸ்பர்க், எம்.டி., யு.எஸ்ஏ.

**சபை உபகுழுக்களின் உறுப்புரிமை**

உறுப்பினர் - சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC), உறுப்பினர் - சபை நியமனக் குழு (BNC), உறுப்பினர் - சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு (BITSC)*, உறுப்பினர் - சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு (BMSC)*.

*8 பெப்ரவரி 2021 முதல் விளைவுக்கு வரும் வகையில் கலைக்கப்பட்டுள்ளது.



## திரு. யூ ஜீ ஆர் ஆரியரத்ன

**பதவிவழிப் பணிப்பாளர்**
**சுயாதீனமற்ற**
**நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்**

**நியமனத் திகதி**

31 ஆகஸ்ட் 2018

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**

திரு ஆரியரத்ன அவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் 23 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட ஒரு இலங்கை நிர்வாக சேவையில் (SLAS) சிறப்பு வகுப்பு அதிகாரி ஆவார். அவர் களனிப் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் இளமாணி, சமூகவியல் முதுமாணி மற்றும் பட்டப் படிப்பின் பின்னான பிராந்திய திட்டமிடல் டிப்ளோமா பெற்றவர் ஆவார். அத்துடன் அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பட்டப் படிப்பின் பின்னான கல்வியியல் டிப்ளோமாவையும் பூர்த்தி செய்துள்ளார். திரு. ஆரியரத்ன அவர்கள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திடமிருந்து (SLIDA) இலங்கை நிர்வாக சேவை வகுப்பு I அலுவலர்களுக்கான பொது நிர்வாக சான்றிதழ் மற்றும் பொது முகாமைத்துவம் மற்றும் இயற்திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்ட சான்றிதழ் ஆகியவற்றையும் பெற்றிருக்கிறார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**

தபால் மா அதிபர், தபால் திணைக்களம், இயக்குனர் - வரையறுக்கப்பட்ட என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனி, பணிப்பாளர், கடன் தரவுப் பணியகம்.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**

மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், பொலன்னறுவை, மேலதிக செயலாளர் (சமூக அபிவிருத்தி), சமூக மேம்பாடு மற்றும் நலன்புரி அமைச்சின் மேலதிக செயலாளர் (கிராம அபிவிருத்தி), அரச அச்சகத் திணைக்களத்தில் மேலதிக அரச அச்சுப் பதிப்பாளர் (நிர்வாகம்), தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம், காணி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (காணி), இலங்கை மகாவலி அதிகார சபையின் நிறைவேற்று இயக்குநர்/துணைப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி), தபால் திணைக்களத்தின் பிரதித் தபால் மா அதிபர் (வடமேற்கு மாகாணம் மற்றும் மத்திய மாகாணம்), மாவத்தகமை பிரதேச செயலகப் பிரதேச செயலாளர், விவசாய சேவைகள் திணைக்களத்தின் உதவி/துணை ஆணையாளர் (குருநாகல்), கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளர், வடமேல் மாகாணம், நன்னடத்தை மற்றும் குழந்தை பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் (வட மத்திய மாகாணம்), உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், ராஜங்கனை, திரப்பனை, காணி உதவி ஆணையாளர், காணி ஆணையாளர் திணைக்களம்.

**சபை உபகுழுக்களின் உறுப்புரிமை**

சபை நியமனக் குழு (BNC) தலைவர், சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு (BHRRC) உறுப்பினர் மற்றும் சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு (BITSC)* உறுப்பினர்.

*8 பெப்ரவரி 2021 முதல் விளைவுக்கு வரும் வகையில் கலைக்கப்பட்டுள்ளது.



## கலாநிதி. எம் கே சி சேனநாயக்க

**பதவிவழிப் பணிப்பாளர்**
**சுயாதீனமற்ற**
**நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்**

**நியமனத் திகதி**

11 ஜனவரி 2020

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**

ஒரு பொதுத்துறைப் பணியாளரான தனது சேவை வாழ்க்கைக்கு மேலதிகமாக, ஒரு கல்வியாளராக இருக்கும் கலாநிதி சேனநாயக்க தனது நிபுணத்துவத்துடன் தொடர்புடைய பல சர்வதேச மற்றும் உள்நாட்டுப் பிரசுரங்களுக்குப் பங்களித்துள்ளார். உலகெங்கிலும் நடைபெற்ற பல சர்வதேச கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளில் தனது முன்னிலைப்படுத்தல்களை வழங்கியுள்ளார். அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் கற்பித்தல் அனுபவத்தைப் பெற்றுள்ளார். கலாநிதி சேனநாயக்க அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் பொருளியல் கலாநிதிப் பட்டம், ஜப்பானின் ஹிட்டோட்சுபாஷி பல்கலைக்கழகத்தின் வணிகத் தந்திரோபாயப் பள்ளியில் பொதுக் கொள்கைகள் முதுமாணிப் பட்டம் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் வணிகவியல் இளமாணி (சிறப்பு) பட்டம் (2 ஆம் வகுப்பு -மேல் பிரிவு) ஆகியவற்றைக் கொண்டிருக்கிறார். அவர் மேலும் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் (SLIDA) மற்றும் இலங்கை மன்ற நிறுவனம் ஆகியவற்றிலிருந்து முகாமை மற்றும் நிர்வாக உயர் டிப்ளோமாவினையும் கொண்டிருக்கிறார்.

# பணிப்பாளர் சபை

### ஏனைய தற்போதைய நியமனங்கள்

பணிப்பாளர் நாயகம், பாதீட்டுக் கொள்கைகள் திணைக்களம், நிதி அமைச்சு, இலங்கை முதலீட்டு சபையின் அவதானிப்பாளர் (திறைசேரிப் பிரதிநிதி), இலங்கைக் கொள்கைகள் கற்கை நிலையத்தின் ஆளுகைச் சபை உறுப்பினர்.

### முன்னைய முக்கிய நியமனங்கள்

பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் (பதில்) மற்றும் உதவிப் பணிப்பாளர், பாதீட்டுக் கொள்கைகள் திணைக்களம் மற்றும் உதவிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு ஆணைக்குழு உறுப்பினர் (திறைசேரி பிரதிநிதி), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் பட்டத்தின் பின்னான ஆங்கிலக் கல்வி நிறுவகத்தின் சபை உறுப்பினர், இலங்கை உள்ளாட்சி ஆளுகை நிறுவகம், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை மற்றும் தேசிய விஞ்ஞான மற்றும் தொழினுட்ப ஆணைக்குழு.

### சபைக் குழுவின் உறுப்புரிமை

தலைவர் - சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC), உறுப்பினர் - சபைக் கணக்காய்வுக் குழு (BAC) மற்றும் சபை நியமனக் குழு (BNC).



## திருமதி மனோஹரி அபயசேகர

**பணிப்பாளர்**
**சுயாதீனமற்ற**
**நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்**

### நியமனத் திகதி

14 ஜனவரி 2020

### திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

திருமதி அபயசேகர கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல் விஞ்ஞானத்தில் விஞ்ஞான இளமாணி (முதலாம் வகுப்பு கௌரவ) மற்றும் வணிக நிர்வாக முதுமாணி (MBA) பட்டங்களைப் பெற்று மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்றவர். அவர் பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவகத்தின் (CIMA – UK) முதுநிலை அங்கத்தவரும் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் (ICASL) முதுநிலை அங்கத்தவரும் ஆவார். பட்டய முகாமைக் கணக்காளர் இறுதிநிலை பரீட்சைகளில் அவர் ஓர் பரிசுபெற்ற வெற்றியாளரும், பட்டய முகாமைக் கணக்காளர் இலங்கை தேசிய வலையமைப்புக் குழுவின் 2019 ஆம் ஆண்டின் தலைவியும் ஆவார்.

திருமதி அபயசேகர அவர்கள் 2021 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கான பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவக பூகோள ஆளுகைக் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். திருமதி அபயசேகர கே.பி.எம். ஜியின் முன்னாள் ஊழியர் ஆவார். அவர் 20 ஆண்டுகள் பட்டத்தின் பின்பான அனுபவம் கொண்டவர் ஆவார். அவர் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனத்தின் வெர்னன் மெண்டிஸ் (Vernon Mendis) ஞாபகார்த்த விருதை வென்று சர்வதேச உறவுகளில் பட்டப் படிப்பின் பின்னான டிப்ளோமாவை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார். அவர் ஹைதராபாத் இந்திய வணிகப் பள்ளி (ISB), ஆசிய அபிவிருத்தி வங்கி, மணிலா மற்றும் ஜெர்மனியின் பி.எச்.எப் வங்கி ஆகியவற்றில் நிறைவேற்றுக் கல்வியைப் பெற்றுள்ளார். ஆவர் 2019-2020 காலப்பகுதிக்கான கொழும்புப் பல்கலைக் கழகத்தின் வணிக நிர்வாக முதுமாணி பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார். அவர் இலங்கை சர்வதேச வணிகர் கழகத்தில் ஒரு நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

### ஏனைய தற்போதைய நியமனங்கள்

இயக்குநர், வரையறுத்த என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனி , குழு உறுப்பினர், பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவக பூகோள அங்கத்தவர் ஈடுபாட்டுக் குழு.

### முன்னைய முக்கிய நியமனங்கள்

2002 முதல் 2020 வரையான 18 வருட தொழில் அனுபவத்தில் ஹேலீஸ் குழுமத்தில் பல்வேறு தலைமைத்துவப் பதவிகளை வகித்துள்ளார். தொலைநோக்குத் திட்டமிடல் பிரிவுக் கணக்காளர், தந்திரோபாய வணிக மேம்பாட்டு பிரிவு முகாமையாளர் மற்றும் தலைவர், பணிப்பாளர் - ஹேலீஸ் குழுச் சேவைகள் மற்றும் பென்டோன்ஸ் லிமிட்டட் 31 ஒக்டோபர் 2020 வரை.

### சபைக் குழுவின் உறுப்புரிமை

தலைவர் - சபைக் கணக்காய்வுக் குழு (BAC), உறுப்பினர் - சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC), சபை கடன் குழு (BCC)* மற்றும் சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு (BMSC)*.

*8 பெப்ரவரி 2021 இலிருந்து விளைவுக்கு வரும் வகையில் கலைக்கப்பட்டுள்ளது.



### திரு. எம் ரீ ஜே பெரேரா

**சுயாதீனமற்ற
நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்**

**நியமனத் திகதி**

11 ஏப்ரல் 2020

**திறன்சேர்க்கை மற்றும் அனுபவம்**

திரு. பெரேரா அவர்கள் தேசிய சேமிப்பு வங்கியில் நான்கு தசாப்தங்களுக்க மேற்பட்ட காலங்களுக்கு சேவையாற்றி 2016 இல் ஓர் பிரதம முகாமையாளராக இருந்து ஓய்வு பெற்றார். அவர் சேவை வழங்கலிலான தமது பரந்த அனுபவத்தை வெளிப்படுத்தும் வகையில் கூடுதலான அளவில் கிளைத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**

என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனியின் பணிப்பாளர். இலங்கை சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**

2010 முதல் 2013 வரை மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையின் (Janatha Estates Development Board) உறுப்பினர்.

**சபையின் உப குழுக்களின் உறுப்புரிமை**

சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவின் (BIRMC) உறுப்பினர், சபை கடன் குழுவின் (BCC)* உறுப்பினர், சபை சந்தைப்படுத்தல் மற்றும் உபாயமார்க்கக் (BMSC)* குழுவின் உறுப்பினர்.

*8 பெப்ரவரி 2021 முதல் விளைவுள்ள வகையில் கலைக்கப்பட்டுள்ளது.



### திரு. எச் கே டீ லக்ஷ்மன் காமினி

**சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரம் அற்ற
பணிப்பாளர்**

**நியமனத் திகதி**

07 ஜனவரி 2021

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**

திரு காமினி அவர்கள் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மக்கள் வங்கியில் சேவையாற்றி 2014 இல் ஓய்வு பெற்ற ஓர் அனுபவம் மிக்க வங்கியாளர் ஆவார். அவர் கூடுதலான அளவில் சர்வதேச வங்கியியல் மற்றும் கிளை வங்கியில் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

**ஏனைய தற்போதைய நியமனங்கள்**

த்ரீ ஸ்டார் லொஜிஸ்டிக்ஸ் (Three Star Logistics (Pvt) Ltd) தனியார் நிறுவனத்தின் பணிப்பாளர், என்.எஸ்.பி. நிதி முகாமைத்துவ கம்பெனியின் பணிப்பாளராக பிரேரிக்கப்பட்டு உள்ளார்.

**முன்னைய முக்கிய நியமனங்கள்**

அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் உப தவிசாளர், பணிப்பாளர் - திறன் விருத்தி நிதியம், திறன் விருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு.

**சபை குழுக்களின் உறுப்புரிமை**

சபை கணக்காய்வு குழுவின் (BAC) உறுப்பினர், சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் (BHRRC) உறுப்பினர், சபை சந்தைப்படுத்தல் மற்றும் உபாயமார்க்கக் குழுவின் (BMSC)* உறுப்பினர்.

*8 பெப்ரவரி 2021 முதல் விளைவுள்ள வகையில் கலைக்கப்பட்டுள்ளது.

### பிரிகேடியர் கலாநிதி திரான் டி சில்வா (ஓய்வுபெற்ற)

**பணிப்பாளர்
சுயாதீனமற்ற/நிறைவேற்று
அதிகாரம் அற்ற**

**பதவிக்காலம்**

17 ஜனவரி 2020 முதல் 9 அக்டோபர் 2020 வரை

**திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்**

கலாநிதி திரான் அவர்கள் இலங்கை இராணுவ வரலாற்றில் இளவயது பிரிகேடியர், இலங்கை இராணுவத்தில் மிக இள வயதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட அதிகாரி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் மிக இளவயது பணிப்பாளர் நாயகம் ஆகிய சாதனைகளுக்கு உரித்துடையவர் ஆவார். மேலும் இலங்கையின் வங்கித் துறையில் சேவையாற்றும் இளவயது பிரதம தகவல் அதிகாரியும் இவரேயாவார்.

அவர் அவுஸ்திரேலியாவின் மத்திய குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் கலாநிதிப் பட்டம் (2006), அவுஸ்திரேலியாவின் சார்ல்ஸ் ஸ்டுவர்ட் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்ப முதுமாணிப் பட்டம் (2004) அவுஸ்திரேலியாவின் ஸ்வின்பேர்ன் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தகவல் தொழிநுட்ப இளமாணிப் பட்டம் (கௌரவ) (2002) ஆகியவற்றைப் பெற்றவராவார். அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் தனது பூகோளத் தகவல் முறைமைத் தத்துவவியல் கலாநிதிப் பட்டத்தின் பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கிறார். கலாநிதி திரான் அவர்கள் அவர் சேவைக் கணினியியல் முகாமைத்துவத்தில் மைக்ரோசொப்ட் (அமெரிக்கா) சான்றளிக்கப்பட்ட நிபுணராகவும் மற்றும் இலங்கை சான்றளிக்கப்பட்ட செயற்கை நரம்பியல் வலையமைப்பு செயற்கை நுண்ணறிவுத் தொழிநுட்பவியலாளராகவும் உள்ளார்.

# பணிப்பாளர் சபை

கலாநிதி திரான் அவர்கள் பல்வேறு ஆராய்ச்சி பிரசுரங்களில் ஈடுபட்டுள்ளதுடன், பல்வேறு சர்வதேச செயலமர்வுகள் மற்றும் மாநாடுகளில் இணையவழி இடர்கள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பக் கல்வி, அனர்த்த இடர் ஆய்வு, மற்றும் பூகோள பிரஜைகள் தகவல் முறைமை ஆகியன தொடர்பாக பல செயலமர்வுகளில் கலந்து கொண்டு இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்து, விவாதக் குழு உறுப்பினர், வளவாளர், பேச்சாளர் ஆகிய நிலைகளை வகித்திருக்கிறார்.

#### ஏனைய தற்போதைய நியமனங்கள்

தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி வரையறுத்த செலாட்டா டெக் (தனியார்) கம்பனி.

#### முன்னைய முக்கிய நியமனங்கள்

பணிப்பாளர் - இலங்கை இராணுவத்தின் தகவல் தொழிநுட்பம், IT/GIS தலைவர், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு இணையவழிப் பாதுகாப்பு செயற்பாட்டு மையத்தின் நிறுவனர் மற்றும் தலைவர், பிரதம தகவல் அதிகாரி/தகவல் தொழிநுட்பத் தலைவர், தேசிய சேமிப்பு வங்கி, மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா சேமிப்பு வங்கியின் (MBSL) பணிப்பாளர், வரையறுத்த மேர்சன்ட் பேங்க் ஒப் ஸ்ரீலங்கா நிதிச் சேவைகள் கம்பனியின் (MCSL) பணிப்பாளர், ட்ரில்லியம் ரெசிடென்சிஸியின் பணிப்பாளர், மற்றும் பணிப்பாளர் நாயகம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையம், பாதுகாப்பு அமைச்சு.

#### சபைக் குழுவின் உறுப்புரிமை

உறுப்பினர் - சபை நியமனக் குழு (BNC) மற்றும் சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு (BHRRC), சபை கடன் குழு (BCC)*, சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு (BMSC)*

*8 பெப்ரவரி 2021 இலிருந்து விளைவுக்கு வரும் வகையில் கலைக்கப்பட்டுள்ளது

### திரு. எம் பி ஏ டபிள்யூ பீரிஸ்

**பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி**

#### நியமனத் திகதி

12 அக்டோபர் 2020

#### திறன் சேர்க்கை மற்றும் அனுபவம்

திரு. பீரிஸ் அவர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீக விஞ்ஞான இளமாணி (சிறப்பு), முதல் வகுப்பு பட்டம் பெற்றிருப்பதுடன், தொழில்சார் வங்கியாளர்கள் சங்கம், இலங்கை வங்கியாளர் நிறுவனம், இலங்கை கடன் முகாமை நிறுவகம் மற்றும் இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் ஆகியவற்றின் அங்கத்தவரும் ஆவார்.

#### ஏனைய தற்போதைய நியமனங்கள்

பணிப்பாளர் - என்.எஸ்.பி. நிதி முகாமைத்துவக் கம்பனி, பணிப்பாளர் - இலங்கை வங்கியியலாளர் சங்கம், பணிப்பாளர் - இலங்கையின் வங்கிகள் அமையம், பணிப்பாளர் - இலங்கை நிதி குறைகேள் அமையம், இலங்கை (FOSL).

#### முன்னைய நியமனங்கள்

திரு. பீரிஸ் அவர்கள் ஒரு தொழில்சார் தகுதி வாய்ந்த மற்றும் தகமைமிக்க சிறந்த செயற்பாட்டுத் தடம் மிக்க ஒரு வங்கியாளர் ஆவார். 1988 ஆம் ஆண்டில் தேசிய சேமிப்பு வங்கியில் ஒரு முகாமைப் பயிலுனராக சேர்ந்ததில் இருந்து அவரது வங்கி வாழ்க்கை தேசிய சேமிப்பு வங்கியில் 32 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது. அவர் கிளைத் தொழிற்பாடுகள், கிளை முகாமை, சில்லறைக் கடனாக்கம், சர்வதேச வங்கியியல் அஞ்சல் வங்கியியல் உள்ளிட்ட வங்கியின் பல துறைகளில் தொழிற்பாடுகளில் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமனம் பெற முன்னர் கிளை முகாமையாளர், வலய முகாமையாளர், உதவி பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர் ஆகிய பதவிநிலைகளை வகித்துள்ளார்.

### திருமதி அனுபமா முகாந்திரம்

**சபையின் செயலாளர்**

#### நியமனத் திகதி

6 டிசம்பர் 2016

#### திறன் தேர்ச்சி மற்றும் அனுபவம்

ஒரு வழக்கறிஞராகிய திருமதி அனுபமா முகாந்திரம் அவர்கள் இங்கிலாந்தின் கார்டி.்.ப் மெட்ரொபொலிடன் பல்கலைக்கழகத்தின் சட்ட முதுமாணிப் பட்டம் (LLM), மணிப்பால் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுமாணி (MBA) பட்டம் மற்றும் இலங்கை சட்டக் கல்வியின் கூட்டிணைத்த குழுமத்தின் வங்கி மற்றும் காப்புறுதி சட்டப் பட்டத்தின் பின்னான டிப்ளோமாவையும் பெற்றுள்ளார். தற்போது அவர் இலங்கை பட்டயம் பெற்ற கூட்டுவணிக செயலாளர் நிறுவகக் கற்கையினை மேற்கொண்டுள்ளார்.

6 டிசம்பர் 2016 அன்று தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையின் செயலாளராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, அவர் நவம்பர் 2015 முதல் டிசம்பர் 2016 வரை பணிப்பாளர் சபையின் உதவி செயலாளராக பணியாற்றியுள்ளார். அவர் வரையறுத்த என்.எஸ்.பி நிதி முகாமைத்துவக் கம்பனியின் கம்பனி செயலாளராக 2015 முதல் 2017 வரை பணியாற்றியுள்ளார். வங்கி மற்றும் நிதித் துறையிலான தனது 24 ஆண்டுகால அனுபவத்தில், மக்கள் வங்கியில் சட்ட அதிகாரி மற்றும் பணிப்பாளர் சபையின் உதவி செயலாளராக 18 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியுள்ளார். திருமதி முகாந்திரம் அவர்கள் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் பகுதிநேர விரிவுரையாளர் (வணிகச் சட்டம்) ஆவார். மேலும் அவர் இலங்கையின் வங்கி சபை/கம்பனி செயலாளர்கள் அமையத்தின் ஸ்தாபக செயலாளர் ஆவார்.

# கூட்டாண்மை முகாமைத்துவம்



**திரு எம் பி ஏ டபிள்யூ பீரிஸ்**
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி



**திரு. கே ரவீந்திரன்**
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்



**செல்வி. சீ எஸ் யேசுடியன்**
பிரதிப் பொது முகாமையாளர்
(கடன் மற்றும் சர்வதேசம்)



**செல்வி. ஜி வீ ஏ டி டி சில்வா**
பிரதிப் பொது முகாமையாளர் (திறைசேரி)



**திரு. கே கே வி வி எல் டபிள்யூ கருணாதிலக**
பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல், நிர்வாகம் மற்றும் மீட்பு)



**திரு. ஜீ டபிள்யூ ஈ ஜெயவீர**
பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)



**திருமதி. கே பீ டி எம் டீ சில்வா**
பிரதிப் பொது முகாமையாளர் (சில்லறைக் கடன் மற்றும் அஞ்சல் வங்கி)



**திரு. எம் டி ஏ ஜே எப் கோமிஸ்**
பிரதிப் பொது முகாமையாளர் (தொழிற்பாடுகள்)



**செல்வி. எம் என் ஏ பெர்னாண்டோ**
பிரதிப் பொது முகாமையாளர்
(மனித வள அபிவிருத்தி)



**கலாநிதி. ஏ கே எல் இளேசிங்க**
பதில் பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம் மற்றும் பிரதான தகவல் அதிகாரி)

# நிறைவேற்று முகாமைத்துவம்



**திரு கே எம் டபிள்யூ எச் கருணாரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்)



**திருமதி எம் ஏ கோமஸ்**
உதவிப் பொது முகாமையாளர் (திட்டமிடல்)



**திரு. ஜே எச் டி சந்திரரத்ன**
உதவிப் பொது முகாமையாளர் (பொறியியல்)



**திருமதி. எச் எம் எஸ் எல் பெர்னாண்டோ**
உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)



**திரு. ஏ எல் ஏ ஹலீம்**
உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)



**திருமதி. டபிள்யூ பி யூ ஏ டீ சில்வா**
உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)



**திருமதி. ஆர் ஏ என் என் விஜேசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்)



**திரு. கே எஸ் வீரசேன**
உதவிப் பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி)



**திருமதி. ஐ கே எல் சசி மகேந்திரன்**
இணக்குவிப்பு அலுவலர்



**திருமதி. ஆர் பி ஏ எம் பீ ராஜநாயக்க**
பிரதம இடர் அலுவலர்



**திரு. டபிள்யூ எம் ஆர் பீ வீரக்கோன்**
உதவிப் பொது முகாமையாளர் (கிளை அபிவிருத்தி)



**திருமதி. டீ டீ விக்ரமசிங்க**
உதவிப் பொது முகாமையாளர் (கிளைக் கடன்)

# நிறைவேற்று முகாமைத்துவம்



**திருமதி. சீ டபிள்யூ பத்திரன**

உதவிப் பொது முகாமையாளர் (துணைச் சேவைகள்)



**திரு. எம் சி ராஜபக்ஷ**

உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)



**திருமதி. எஸ் டபிள்யூ ஏ வீரசிங்க**

உதவிப் பொது முகாமையாளர் (திறைசேரி)



**திரு. எல் சீ சேனநாயக்க**

உதவிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)



**திருமதி. அனுபமா முகாந்திரம்**

சபை செயலாளர்



**திரு. எம் டீ சுரஞ்ஜன**

உதவிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)



**திரு. டி எச் எஸ் அத்தபத்து**

உதவிப் பொது முகாமையாளர் (நிதி)

# பிரதான முகாமையாளர்கள்

**திருமதி. எச் ஆர் கருணாமுனி**
பிராந்திய அலுவலகம் (மேற்கு 2)
பிராந்திய முகாமையாளர்

**திரு. டீ சி ஒலபொடுவ**
பிராந்திய அலுவலகம் (வடமேற்கு)
பிராந்திய முகாமையாளர்

**திருமதி. சீ என் ஏக்கநாயக்க**
பிராந்திய அலுவலகம் (மேற்கு 1)
பிராந்திய முகாமையாளர்

**திருமதி. ஏ எம் சி அத்தநாயக்க**
பிராந்திய அலுவலகம் (சப்ரகமுவ)
பிராந்திய முகாமையாளர்

**திரு. எஸ் சிவசொரூபன்**
பிராந்திய அலுவலகம் (கிழக்கு)
பிராந்திய முகாமையாளர்

**திரு. என் பகீரதன்**
பிராந்திய அலுவலகம் (வடக்கு)
பிராந்திய முகாமையாளர்

**திரு. எஸ் பீ சுரங்க**
பிராந்திய அலுவலகம் (தெற்கு)
பிராந்திய முகாமையாளர்

**திரு ஜீ ஹப்புஆராய்ச்சி**
பிராந்திய அலுவலகம் (மத்திய)
பிராந்திய முகாமையாளர்

**திரு. எச் எம் ஜீ பி ஜே ஹேரத்**
கடன் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. ஏ பீ சீ ஆர் விஜயபால**
கிளை முகாமைத்துவப் பிரிவு
பிரதான முகாமையாளர் – அடகு

**திரு. எம் வீ ஜீ சுசில் குமார**
சர்வதேச வங்கியியல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. கே டி எஸ் எஸ் குணவர்தன**
பாதுகாப்பு பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. டீ எல் பி அபயசிங்க**
வரையறுக்கப்பட்ட என் எஸ் பி நிதிய முகாமைத்துவக் கம்பனி
பிரதம நிறைவேற்று அதிகாரி

**திரு. எம் டபிள்யூ கே சி டீ சில்வா**
திறைசேதி பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. கே டீ கே கே விஜயவர்த்தன**
அட்டை நிலையம்
பிரதான முகாமையாளர்

**திரு. டீ எம் சி பி பீ திசாநாயக்க**
பொது முகாமையாளர் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. ஏ பி ஆர் டீ சொய்சா**
தகவல் தொழில்நுட்ப பிரிவு
பிரதான முகாமையாளர் (தகவல் முறைமைப் பாதுகாப்பு)

**திருமதி. எஸ் எஸ் ஜே பி எஸ் டீ சில்வா**
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. எச் எஸ் பி ரணவீர**
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. எஸ் ஏ எம் ஏ சீ ஜே எஸ் கே சேனரத்ன**
சட்டப் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. எஸ் ஏ ஏ பட்டுவந்துடாவ**
கடன் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. டீ ஏ வீ விஜேவந்த**
கிரிபத்கொட கிளை
கிளை முகாமையாளர்

**திருமதி. எஸ் எச் ஏ எஸ் குமாரி**
ஓய்வூதிய நிதியப் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. என் ஐ குணதிலக**
கடன் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. எச் டீ யூ சுசந்த குமார**
கண்டி கிளை
கிளை முகாமையாளர்

**திரு. பீ ஏ ஜீ எல் ஹேமால்**
வென்னப்புவ கிளை
கிளை முகாமையாளர்

**திருமதி ஜே எம் ஏ கே ஜெயசிங்க**
நகரக் கிளை
கிளை முகாமையாளர்

**திருமதி. கே பீ என் சீ குமாரி**
நிதி மற்றும் திட்டமிடல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. ஏ எம் ஜீ அழககோன் பண்டா**
கம்பஹா கிளை
கிளை முகாமையாளர்

**திரு. டி டீ பி பெரேரா**
மனிதவளப் பிரிவு
பிரதான முகாமையாளர் (பணியாளர்)

**திரு. எம் டி ஹுசைன்**
தகவல் தொழில்நுட்ப பிரிவு
பிரதான முகாமையாளர் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தொழிற்பாடுகள்)

**திருமதி. கே சீ தயானந்தன்**
சுன்னாகம் கிளை
கிளை முகாமையாளர்

**திருமதி. எம் டீ டி பெரேரா**
சந்தைப்படுத்தல் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. டபிள்யூ ஈ சீ பெரேரா**
இடர் முகாமைப் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திரு. ஜே எல் பி மஞ்சுள**
இடர் முகாமைப் பிரிவு
பிரதான முகாமையாளர்

**திருமதி. ஓ ஜீ டபிள்யூ எம் கௌரவவங்ச**
திறைசேரி பின் அலுவலக பிரிவு
பிரதான முகாமையாளர்

# கூட்டாண்மை ஆளுகை

## கூட்டிணைந்த ஆளுகைக்கான எங்கள் அணுகுமுறை

தேசிய சேமிப்பு வங்கியில் ஆளுகை மற்றும் தலைமைத்துவத்திற்கான எங்கள் அணுகுமுறை இணக்கத்திற்கு அப்பாற்பட்டது. எங்கள் வியாபாரத்தில் ஆளுகை மற்றும் தலைமைக்கான எங்கள் அணுகுமுறை மேம்பட்ட பொறுப்புக்கூறல், வினைத்திறனான தலைமைத்துவம், வலுவான இடர் முகாமைத்துவம், தெளிவான செயலாற்றுகை முகாமைத்துவம் மற்றும் பரந்தளவிலான வெளிப்படைத்தன்மை என்பவற்றின் ஊடாக பதிலளிக்கக்கூடிய சிந்தனை மற்றும் பொறுப்பான நடத்தை ஆகியவற்றின் மூலம் பகிரப்பட்ட மதிப்பை உருவாக்குகின்றது என நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். நிலையான மதிப்பை அடைவதற்காக முன்னோக்கி செல்லும் வழியில், இப்போதும் எதிர்காலத்திலும் எங்கள் நலன்விரும்பிகளுடன் நம்பிக்கையை தக்கவைத்துக்கொள்வதற்கு வியாபார இயலுனராக ஆளுகையை விரும்பி ஏற்றுக்கொள்கின்றோம்.

எப்போதும் உரு மலர்சியுறுகின்றதும் சிக்கலானதுமான ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலில், ஒழுங்குமுறை பரப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு முன்கூட்டியே செயல்படும் அதேவேளையில், சிறந்த ஆளுகை நடைமுறைகளைச் செயற்படுத்த வங்கிகள் அந்த மாற்றங்களை விரைவாக மாற்றியமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எங்கள் நலன்விரும்பிகளின் சிறந்த நலனுக்காக செயல்பட உலகத்தரம் வாய்ந்த வங்கி நடைமுறைகள் மற்றும் வலுவான நிறுவனக் கட்டமைப்பை நாங்கள் ஏற்றுக்கொண்டுள்ளோம் என்பதை உறுதிப்படுத்த எங்கள் நிர்வாக கட்டமைப்பை நாங்கள் தொடர்ந்து மதிப்பாய்வு செய்கின்றோம்.

நாங்கள் மிக உயர்ந்த ஆளுகையை மற்றும் அந்த பெறுமதிகளும் வெகுமதிகளும் முன்மாதிரியான நெறிமுறை நியமங்கள், தனிப்பட்ட மற்றும் கூட்டிணைந்த ஒருமைப்பாடு மற்றும் ஏனையவர்களுக்கு மதிப்பளிக்கும் ஒரு காலாச்சரரத்தை வளர்க்கும் முயற்சியை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடனுள்ளோம். பொறுப்பான கூட்டிணைந்த பிரஜையாக இருக்க வேண்டும் என்ற எங்கள் விருப்பத்தில், ஒழுங்குமுறைத் தேவைகள், தன்னார்வ ஒழுக்கநெறிகள் மற்றும் வங்கிக்கு பொருந்தக்கூடிய கூட்டிணைந்த ஆளுகையின் உள்ளக கூறுகளைப் பின்பற்றுகின்றோம்.

## ஆளுகை எங்கள் உபாயமார்க்கத்தை ஆதரிக்கின்றது

சிறந்த நடைமுறைகளைத் தழுவிய ஒரு நன்கு நிர்வகிக்கப்படும் வங்கி நலன்விரும்பிகளின் நம்பிக்கையைத் தூண்டுகின்றது, மூலதனங்களின் ஆகுசெலவைக் குறைக்கின்றது, அனைத்தையும் உள்ளடக்கிய ஆளுகை கட்டமைப்பை உருவாக்குகின்றது மற்றும் நிலையானதாக இருக்க விரும்புகின்றது என்பதை பணிப்பாளர் சபை அறிந்திருக்கின்றது.

வங்கியை வழிநடத்துவதில் பணிப்பாளர் சபை எடுக்கும் முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளால் வங்கியின் வடிவம் மற்றும் வாய்ப்புகள் மற்றும் நீண்டகால நம்பகத்தன்மை தீர்மானிக்கப்படும். பொருந்தக்கூடிய சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் ஆளுகை தொடர்பான சிறந்த நடைமுறைகளுக்கு இணங்கி வங்கி முழுமையாக உறுதியளித்திருப்பதை பணிப்பாளர் சபை உறுதி செய்கின்றது. இது உபாயமார்க்க அமுல்படுத்தலுடன் முன்னோக்கிச் செல்கையில் பொறுப்பான கூட்டிணைந்த பிரஜையாக இருக்க உதவும். செயற்திட்டத்தின் ஊடாக வங்கியின் உபாயமார்க்கத்தின் அமுலாக்கத்தை பணிப்பாளர் சபை கண்காணிக்கின்றது, இது உத்திகளை செயற்படுத்துகின்றதுடன் உபாயமார்க்கத்தை பூர்த்திசெய்தலினுள் தொடர்புடைய சாதனைகள் மற்றும் இடர்களைத் தவிர்த்துவிடுகின்றது. நீண்டகால நிலைத்திருப்பு என்பது பணிப்பாளர் சபையின் பிரதான முன்னிருத்தலாக இருப்பதுடன் இது பொருளாதார, சமூக, ஆளுகை மற்றும் சூழல் பெறுபேறுகளை தொடர்ச்சியான அடிப்படையில் கண்காணிக்கின்றது.

## கூட்டாண்மை ஆளுகை சட்டகத்தின் முக்கிய ஒழுங்கு விதிசார் தேவைப்பாடுகள், வங்கிக்கான தன்னிச்சையான விதிகள் மற்றும் உள்ளக கூறுகள்

வங்கியின் ஒழுங்கு விதிமுறை மற்றும் தன்னிச்சையான விதிகள் சார் சட்டத்தின் பிரகாரம் கூட்டாண்மை கோட்பாடானது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

### ஒழுங்கு விதிசார் தேவைப்பாடுகள்

- 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்.
- 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியியல் சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்.
- இலங்கை மத்திய வங்கியினால், மிகப் பிரத்தியோகமாக, 2007 ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வங்கியியல் சட்டத்தின் கூட்டிணைந்த ஆளுகை தொடர்பான உரிமம் பெற்ற விசேட வங்கிகளுக்கு வழங்கப்படும் அனைத்து வழிகாட்டல்களும்
- 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களச் சட்டம்
- 1954 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் காரியாலயங்கள் சட்டம் மற்றும் பிற்பட்ட காலத்திற்கான அதன் திருத்தங்கள்
- இலங்கையின் பொதுத் துறை உரிமங்களின் கூட்டிணைந்த ஆளுகைக்கான சிறந்த நடைமுறை விதிகள்.

### வங்கிக்கான தன்னிச்சையான விதிகள்

- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் கூட்டிணைந்த விதிகள் தொடர்பாக வழங்கப்பட்ட கூட்டிணைந்த ஆளுகை மீதான சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு.

### உள்ளக கூறுகள்

- பணிப்பாளர் சபை பட்டயம்
- சபையின் உப குழுக்களின் பட்டயம்
- ஒழுக்கநெறிக் கோவை
- சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நடைமுறைகள்

## ஆளுகைக் கட்டமைப்பு

நன்கு கட்டமைக்கப்பட்ட ஆளுகை கட்டமைப்பு மற்றும் செயன்முறைகள் வங்கி நன்கு நிர்வகிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படுவதை உறுதி செய்கின்றது. தெளிவாக வரையறுக்கப்பட்ட அதிகாரக் குழுவுடன் வங்கி நன்கு வரையறுக்கப்பட்ட நிர்வாக அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த ஆளுகை நடைமுறை இப்போதும் எதிர்காலத்திலும் நமக்கும் எங்கள் அக்கறைதாரர் பெறுமதிகளை உருவாக்குவதற்கு இந்த உபாயமார்க்கத்திற்கு எதிராக வழங்குவதை உறுதிசெய்கின்றது. பணிப்பாளர் சபையின் பொறுப்புகள் பணிப்பாளர் சபைக் குழுக்கள், முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் நிர்வாகத்திற்கு வழங்கப்படுகின்றன. பணிப்பாளர் சபைக் குழுக்களின் உதவியுடன் பணிப்பாளர் குழு வங்கியின் உபாயமார்க்கத்தை அடைவதற்கு நெறிமுறை மற்றும் பயனுள்ள தலைமையை ஒப்புக்கொள்ளப்பட்ட இடர் நாட்டத்திற்குள் வங்கி நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்கின்றது. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் வழிகாட்டப்பட்ட உபாயமார்க்கங்களை செயற்படுத்தும் பொறுப்பு முகாமைத்துவ மற்றும் முகாமைத்துவக் குழுக்களைச் சார்ந்ததாகும்.

வங்கியின் ஆளுகை கட்டமைப்பை 50 ஆம் பக்கத்தில் பார்க்கவும்.

## பணிப்பாளர் சபை

தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையானது வங்கியினுடைய உச்சமட்ட தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தை கொண்ட பகுதியாக இருப்பதுடன்,

# கூட்டாண்மை ஆளுகை

## தேசிய சேமிப்பு வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பு

Figure 03




நியமனப் பாய்வு
பொறுப்புப் பாய்வு
நிர்வாகப் பாய்வு
கலந்துரையாடல்

| | |
|---|---|
| CMC | கூட்டிணைந்த முகாமைத்துவக் குழு |
| ALCO | சொத்துக்கள் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு |
| CC | கடன் குழு |
| IC | முதலீட்டு குழு |
| EC | உரிமைப்பங்குக் குழு |
| TNIC | கேள்விமனு மற்றும் புதிய முதலீட்டுக் குழு |
| PRC | செயலாற்றுகை மீளாய்வுக் குழு |
| BOSC | கிளை தொழிற்பாட்டு உந்துதல் குழு |
| ITSC | தகவல் தொழில்நுட்ப உந்துதல் குழு |
| MKTC | சந்தைப்படுத்தல் குழு |
| ORMC | தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு |
| PDC | பண்ட அபிவிருத்திக் குழு |
| HRC | மனித வளக் குழு |
| CPC Major | கூட்டிணைந்த பெறுகைக் குழு - பாரிய |
| CPC Minor | கூட்டிணைந்த பெறுகைக் குழு - சிறிய |
| EPC | நிறைவேற்றுப் பெறுகைக் குழு |
| CSRSC | கூட்டிணைந்த சமூக பொறுப்பு மற்றும் நிலைத்திருத்தல் குழு |
| SMC | சிரேஷ்ட முகாமைத்துவக் குழு |

*8 பெப்ரவாரி 2021 முதல் இரத்து செய்யப்பட்டது.

இணைக்கப்பட்ட இடர் ஏற்பு மட்டத்தின் அடிப்படையில் உபாயமார்க்க திசைமுகப்படுத்தல் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் அத்தகைய தீர்மானங்களை தந்திரோபாயங்களை அடைந்து கொள்வதற்கான கொள்கை சட்டத்தினை உருவாக்கல் ஆகியவற்றுக்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கு பாதகம் ஏற்படுத்தாத வகையில் வங்கியினுடைய நாளாந்த தொழிற்பாடுகளை கொண்டு நடாத்துவதற்கும் உள்ளகக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி கண்காணிப்பதற்குமான பொறுப்பினை பணிப்பாளர் சபை கூட்டு வணிக முகாமைத்துவதற்கு பகிர்ந்தளித்து இருக்கின்றது. இந்த ஏற்பாடுகள் யாவும் பரஸ்பர கௌரவம் மற்றும் நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படுகின்றன.

இதற்கான கூட்டுப்பொறுப்பை பணிப்பாளர் சபை ஏற்றுக்கொள்கின்றது.




அதன் ஆளுகை வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் ஒரு நலன்விரும்புனர்களை உள்ளடக்கிய அணுகுமுறையை பின்பற்றியுள்ளது.

உரு 04

## பணிப்பாளர் சபையின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள்

பணிப்பாளர் சபை பட்டயத்தில் கொடுக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபைக்கான அதிகாரங்கள் மற்றும் அதன் வகிபாகங்களும் பொறுப்புகளும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

### சபைக்காக ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள்

- பணிப்பாளர் சபை பட்டயத்தில் செய்யப்பட்ட கட்டுப்பாடுகள் அல்லது நடைமுறையில் உள்ள வேறு ஏதேனும் சட்டங்கள்/விதிமுறைகளுக்கு உட்பட்டு வங்கி தொடர்பான எந்தவொரு விடயத்திலும் இறுதி முடிவெடுக்கும் அதிகாரமாக செயற்படுவது.
- வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பெறுகைக் கையேடு மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்கள்/விதிமுறைகளுக்கு உட்பட்டு நிதி தொடர்பான விடயங்களில் பொருத்தமான முடிவுகளுக்கு வருவது.
- அனைத்து மட்டங்களிலும் மிகவும் சாதகமான வணிக முயற்சிகள் எடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக வங்கியின் அனைத்து நடவடிக்கைகளையும் நிர்வகிப்பதற்கான கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குதல்.
- அறிக்கைகள், ஒரு குழுவை நியமித்தல் அல்லது பணிப்பாளர் சபை தீர்மானித்ததன் படி பொருத்தமான எந்தவொரு முறையினையும் அழைப்பதன் மூலம் வங்கியின் செயற்திறன், முகாமைத்துவம் அல்லது நிர்வாகம் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் விசாரித்தல்.

### பணிப்பாளர் சபையின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள்

- பணிப்பாளர் சபையிடமிருந்து பணிப்புரைகள்/வழிகாட்டல்களை கோரும் பாரிய மட்ட விடயங்களில் ஈடுபடுதல்.
- வங்கியின் முழுமையான தொழிற்பாடுகள் தொடர்பாக வழமையான கண்காணிப்பையும் மேற்பார்வையையும் பேணுதல்.
- எந்தவொரு பணிப்பாளர் சபை உப குழு, எந்தவொரு பணிப்பாளர், பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் அல்லது பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தும் வேறு எந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கைகளை எடுப்பது.
- வங்கியினதும் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்ற அலுவலர் உள்ளடங்களாக பிரதான முகாமைத்துவ நபர்களின் செயலாற்றுகைகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- சபையின் மனித வள ஊதியங்கள் குழு மற்றும் சபையின் பரிந்துரைக் குழுவின் நியதிகளின் படி பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்ற அலுவலரை நியமித்தல் மற்றும் பதவியமர்த்தல்கள் மற்றும் பதவியுயர்வுகள்.

## பணிப்பாளர் சபையின் அமைப்பு

தேசிய சேமிப்பு வங்கியின் நியதிகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபை உருவாக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர் சபை பட்டயம் பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்ட வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளை விபரிக்கின்றது. தற்போதைய பணிப்பாளர் சபையானது தமது நிபுணத்துவம் மற்றும் திறன்கள் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்கு முன் வைக்கப்பட்ட தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக அனுபவமிக்க தொழில்சார் நபர்களான ஆறு பணிப்பாளர்களை கொண்டுள்ளது. நிதியாண்டின் நிறைவின் போது, தற்போதைய பணிப்பாளர் சபையின் ஆறு பணிப்பாளர்களில் ஐந்து பணிப்பாளர்கள் சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்றவர்களாக இருக்கும் அதேவேளை ஒரு பணிப்பாளர் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்றவராக இருக்கின்றார். பணிப்பாளர் சபையின் தலைமைத்துவத்திற்கும் அதன் செயல்திறனை உறுதி செய்வதற்கும் தலைவருக்கு ஒட்டுமொத்த பொறுப்பு உள்ளது. பணிப்பாளர் சபை வங்கி இடரை திறம்பட நிர்வகிக்கின்றது, நிதியியல் செயலாற்றுகைமற்றும் அறிக்கையிடலை கண்காணிக்கின்றது மற்றும் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் நடைமுறைகள் அவற்றின் உரிய இடங்களில் உள்ளதென்பதை உறுதி செய்கின்றது.

2020ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர்கள், அவர்களது தகைமைகள் உள்ளடங்களான சுயவிபரங்கள் மற்றும் அவர்களுடைய பணிப்பாளர் சபையின் உப குழுக்களிலான அங்கத்துவம் தொடர்பான விபரங்கள் பக்கம் 40 முதல் 44 வரை வழங்கப்பட்டுள்ளன.

## பணிப்பாளர் சபையின் திறன்கள் மற்றும் நிபுணத்துவம்

ஒரு நிதி இடைத்தரகராக, அனைத்து நலன்விரும்பிகளின் நலனுக்காக பெறுமதி சேர்ப்பினை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர் சபைக்கு பரந்தளவிலான திறன்கள் அவசியமாகும். விரைவாக மாறிவரும் சூழலுக்கும் வங்கியின் நீண்டகால உபாயமார்க்க இடப்பெயர்வுக்கும் பதிலளிக்கும் விதமாக தேவையான திறன்களின் தொகுப்பை பணிப்பாளர் சபை தீர்மானிக்கின்றது. சரியான திறன்களும் நிபுணத்துவமும் கலந்திருப்பது ஒரு ஐக்கிய சபையாக ஒரு ஐக்கிய சபை வங்கியின் மூலோபாயத்தை முன்னோக்கி செல்லும் வழியிலும், மதிப்பு உருவாக்கும் செயல்பாட்டிலும் வழிநடத்தவும் இயங்கவும் நன்கு பொருத்தப்பட்டிருப்பதை உறுதி செய்கின்றது. எங்கள் பணிப்பாளர் சபை குறிப்பாக வங்கி, நிதி, பொருளாதாரம், ஆராய்ச்சி, திட்டமிடல், மூலோபாய மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம், இணைய பாதுகாப்பு, மனித நேயம், மேலாண்மை, நிர்வாகம் மற்றும் சர்வதேச உறவுகள் போன்ற துறைகளில் திறன்கள் மற்றும் அனுபவங்களைக் கொண்டுள்ளது.

# கூட்டாண்மை ஆளுகை

## பணிப்பாளர் சபையின் செயன்முறை

பணிப்பாளர் சபையானது தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பரிந்துரைகளின் பிரகாரம், இணங்கப்பட்ட கூட்ட அட்டவணையின் அடிப்படையில் குறைந்தபட்சம் ஆறு வாரங்களுக்கு ஒரு முறை கூடுகின்றது. தேவைகளின் அடிப்படையில் மேலதிக கூட்டங்கள் கூட்டப்படும். பணிப்பாளர்கள் ஒழுங்காக கூட்டங்களுக்கு சமூகமளிப்பதுடன் கலந்துரையாடல்களில் உத்வேகமாக பங்கு பெறுவர். கூட்டங்களுக்கான சமூகமளித்தல் தொடர்பான விபரங்கள் பக்கம் 53 இல் வழங்கப்பட்டுள்ளன. பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் உடனான கலந்துரையாடல்களின் அடிப்படையில் பணிப்பாளர் சபை செயலாளரது உதவியுடன் கூட்ட நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் பொறுப்பு தலைவரைச் சாரும். கூட்டத்துக்கு ஒரு வாரம் முன்பாக பணிப்பாளர் சபையின் செயலாளரினால் பொருத்தமான பணிப்பாளர் சபை ஆவணங்களுடன் கூட்ட நிகழ்ச்சி நிரலானது பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். இந்த செயன்முறையானது பணிப்பாளர் சபை உரிய காலத்தில் கூட்டத்திற்கு தயாராவதுடன் கலந்துரையாடல்கள் மற்றும் முறை சாரந்த தீர்மானங்களை மேற்கொள்வதைத் தயார்படுத்த உதவும். வழக்கத்திற்கு மாறான சூழ்நிலைகளில் மிகக் குறுகிய அறிவிப்புடன் அல்லது கூட்டங்கள் இடம்பெறும் போது அவசரமான பணிப்பாளர் சபை ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும். போதுமான அளவு விபரமான கூட்ட அறிக்கைகள் மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள் தொடர்பான விபரங்கள் பணிப்பாளர்கள் அணுகக் கூடிய விதத்தில் பேணப்படுகின்றன. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் கலந்துரையாடல் மற்றும் முடிவெடுப்பதற்கான நிகழ்ச்சி நிரலின் சில ஆவணங்களைச் சேர்க்குமாறு கோரலாம்.

## அக்கறை முரண்பாடுகள்

பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் வங்கி மீதான மிகச்சிறந்த அக்கறையுடன் உச்ச நம்பிக்கையில் நிதிசார் அல்லது வேறு எந்த வகையிலுமான தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்க்கும் வகையில் செயற்படுவதற்கான அர்பணிப்பினைக் கொண்டுள்ளனர். குறிப்பிட்ட வியாபாரம் தொடர்பாக அவர்கள் கொண்டிருக்கக்கூடிய முரண்பாடுகள் அல்லது உத்தேச முரண்பாடுகள் குறித்து பணிப்பாளர்கள் உடனடியாக பணிப்பாளர் சபைக்கு தெரிவிக்க வேண்டும். எந்தவொரு விடயத்திலும் அவர்கள் ஆர்வமுள்ள முரண்பாடுகளைக் கொண்ட முடிவுகளின் விவாதங்களிலிருந்து அவர்களை மன்னிக்க இயக்குநர்கள் கடமைப்பட்டுள்ளனர். உறுப்பினர்கள் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி நிரலில் ஒரு வி' யத்தில் முரண்பாடு ஏதேனும் உள்ளதா என்பதை அறிவிக்க ஒரு நிலையான நிகழ்ச்சி நிரல் உருப்படி சேர்க்கப்பட்டுள்ளதுடன் அதற்கமைவாக குறிப்பெடுக்கப்பட்டுள்ளது. பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் எந்தவொரு வசதிகளும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்துடன் இணங்குகின்றன. ஆண்டுதோறும் தங்கள் விருப்பத்தை அறிவிக்கின்றார்கள் மற்றும் அக்கறை முரண்பாடுகள் இல்லை என்பதை உறுதிப்படுத்த தேவையான நடைமுறைகள் உள்ளன.

2020 ஆம் ஆண்டில், நிதி அறிக்கைகளின் பக்கம் 239, குறிப்பு 49.5.2 இல் வெளிப்பட்டுள்ளதைத் தவிர வங்கி அல்லது அதன் துணை நிறுவனங்களினால் எந்தவொரு ஒப்பந்தத்திலும் அல்லது ஏற்பாட்டிலும் எந்த பணிப்பாளருக்கும் குறிப்பிடத்தக்க அக்கறை இல்லை.

## பணிப்பாளர் சபை கூட்டங்கள்

தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறைந்தபட்சம் ஆறு வாரங்களுக்கு ஒரு முறை பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடாத்தப்படுவதுடன் தேவைகள் ஏற்படுவதைப் பொறுத்து, விசேட கூட்டங்களும் நடாத்தப்படுகின்றன. முடிவடைந்த ஆண்டின் போது விசேட கூட்டங்கள் உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை 19 திட்டமிட்ட கூட்டங்களை கூட்டி இருந்தது. உத்திகளுக்கு எதிராக வழங்குவதற்கான ஆளுகை செயல்பாட்டில், வங்கியின் மூன்று ஆண்டு மூலோபாய வியாபாரத் திட்டத்தை வகுப்பதில் கூட்டிணைந்த நிர்வாகத்திற்கு தெளிவான வழிமுறைகளை வழங்குவதில் பணிப்பாளர் சபை தங்கள் நேரத்தை அர்ப்பணித்ததன் விளைவாக பணிப்பாளர் சபை மதிப்பாய்வு செய்து அதற்கு ஒப்புதல் அளித்தது. இந்த ஆண்டில் பணிப்பாளர் சபை மூலதன நிர்வாகத்தில் தொடர்ந்து நேரத்தை ஒதுக்கியது. உபாயமார்க்க வியாபாரத் திட்டத்தின் செயல்திறன் மற்றும் செயல்பாட்டை மதிப்பாய்வு செய்ததுடன் மேலும் கவனம் தேவைப்படும் முழுமையாக சொந்தமான துணை நிறுவனத்தை கையகப்படுத்துதல், இலங்கை சேமிப்பு வங்கி, இடர் முகாமைத்துவம், இணக்கம் மற்றும் கூட்டிணைந்த ஆளுகை போன்ற விடயங்களில் விவாதங்களை நடாத்தியது.

## 2020 இல் எங்கள் பணிப்பாளர் சபை

### திறன்களும் அனுபவங்களும்

வரைபடம் 19




A – தலைமைத்துவம்

B – பொருளாதாரம், வங்கியியல், நிதி

C – ஆராய்ச்சி, திட்டமிடல், உபாயமார்க்க அபிவிருத்தி

D – முகாமைத்துவம், நிர்வாகம்

E – தகவல் தொழில்நுட்பம், சைபர் பாதுகாப்பு

F – மனிதவளம், சர்வதேச உறவுகள்

### வயதின் பல்வகைமை

வரைபடம் 20




● 60 வயதிலும் குறைந்தவர்கள்

● 60 வயதிலும் கூடியவர்கள்

**வயது பல்வகைமை** வரைபடம் 21

சராசரி வயது 51 வருடங்கள்




## சபையின் உப குழுக்கள்

எந்தவொரு குழு அல்லது குழுக்களுக்கும் அதன் அதிகாரங்கள், தனிவிருப்புரிமைகள் மற்றும் அதிகாரங்களை ஒப்படைக்க பட்டயத்தின் ஊடாக அதிகாரம் வழங்கப்படுகின்றது. ஏனெனில் பிரதிநிதிகளின் சுயாதீன தீர்ப்பை ஊக்குவிப்பதை உறுதிசெய்வது பொருத்தமானது என்று கருதுவதுடன், அதிகார சமநிலை மற்றும் கடமைகளை திறம்பட நிறைவேற்ற உதவுகின்றது. முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் அந்தந்த அதிகாரிகள் தொடர்பான விடயங்களை மேற்பார்வையிடுவதற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும், இருப்பினும் பணிப்பாளர் சபை தொடர்ந்தும் குழுக்களின் தீர்மானங்களுக்கான பொறுப்பை தன்னகத்தே தக்க வைத்துக் கொண்டுள்ளது. 2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் தேவைக்கேற்ப பணிப்பாளர் சபை கணக்காய்வுக் குழு, பணிப்பாளர் சபை மனித வளம் மற்றும் ஊதியக் குழு, பணிப்பாளர் சபை பரிந்துரைக் குழு மற்றும் பணிப்பாளர் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு எனும் கட்டாயக் குழுக்களும் வியாபார, ஆளுகைத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கும், இடர் முகாமைத்துவம் மற்றும் கைத்தொழிற்துறையின் சிறந்த நடவடிக்கைகளுக்காக ஏனைய மூன்று குழுக்களும் நிறுவப்பட்டன. பணிப்பாளர் சபைக் குழுக்கள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடும். பணிப்பாளர் சபை ஒவ்வொரு குழுக்களினதும் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளை வரையறுத்துள்ளதுடன், அவை தொழிற்படக்கூடியளவிலான தனிவிருப்புரிமைகளின் குறித்துரைத்த மட்டங்களை வழங்கியுள்ளது. பணிப்பாளர் சபையின் செயலாளர் ஆறு உப குழுக்களின் செயலாளராகவும் விளங்குவதுடன். கூட்டங்களின் குறிப்புகள் தகவல், மீளாய்வு, கருத்து மற்றும் தேவையான அனுமதிக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகள், அமைப்பு, வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள், அங்கத்தவர்களின் வருகை, 2020 ஆம் ஆண்டில் கொண்டு நடாத்தப்பட்ட நடவடிக்கைகள் என்பன அந்தந்த குழுக்களின் அறிக்கைகள் அமைந்துள்ள 78 இருந்து 91 வரையுள்ள பக்கங்களில் வழங்கப்பட்டுள்ளன.

## பணிப்பாளர் சபை/பணிப்பாளர் சபையின் உப குழுக்களின் அமைப்பு மற்றும் வருகை

| பணிப்பாளரின் பெயர் | பணிப்பாளர் தகைமை | சபை | BAC | BHRRC | BNC | BIRMC | BCC | BITSC | BMSC |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| திருமதி கேசிலா ஜயவர்தன – தலைவர் | NED/NID | 19/19 | | 6/6 | | | 1/1 | 1/2 | 6/6 |
| திரு எரங்க ஜயவர்தன – சிரேஸ்ட பணிப்பாளர் | NED/ID | 18/18 | | 0/0 | 0/0 | 1/1 | 4/4 | 6/6 | 4/6 |
| திரு யூ ஜீ ஆர் ஆரியரத்ன – பதவி வழிப்பணிப்பாளர் | NED/NID | 18/19 | | 1/1 | 2/2 | | | 4/4 | |
| கலாநிதி எம் கே சி சேனநாயக்க – பதவி வழிப்பணிப்பாளர் | NED/NID | 19/19 | 6/6 | | 2/2 | 3/5 | | | |
| திருமதி மனோஹரி அபேயசேகர – பணிப்பாளர் | NED/NID | 19/19 | 6/6 | | | 4/4 | 4/4 | 1/1 | 6/6 |
| கலாநிதி திரான் டி சில்வா – பணிப்பாளர் (09 அக்டோபர் 2020 வரை) | NED/NID | 13/15 | | 5/5 | 2/2 | | 2/3 | 2/2 | 0/2 |
| திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர் | NED/NID | 14/14 | 5/5 | 5/5 | | 3/4 | | 3/3 | 6/6 |

NED – நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் NID – சுயாதீனமற்ற பணிப்பாளர் ID – சுயாதீன பணிப்பாளர்

## பணிப்பாளர்களின் நியமனம், மீள் தேர்வு மற்றும் இராஜினாமா

அரசுக்கு சொந்தமாகிய வங்கியாக, தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்களை நியமித்தல் 1971ஆம் ஆண்டு 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படுகின்றது. அதன்படி, அரசுக்கு பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்பட்ட ஏழு பணிப்பாளர்களில் ஒருவர் திறைசேரி செயலாளராகவோ அல்லது அவரது வேட்பாளராகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன், மற்றவர் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி தபால் அதிபதி நாயகமாகவோ அல்லது அவரது வேட்பாளராகவோ இருத்தல் வேண்டும். தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், அந்த நியமனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி ஒப்புதல் அளிக்கின்றது. 2007ஆம் ஆண்டு 12ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் கூட்டிணைந்த ஆளுகைப் பணிப்பரைக்கு அமைவாக ஒரு பணிப்பாளரின் சேவைக் காலம் ஒன்பது ஆண்டுகளுக்கு வரையறுக்கப்படுகின்றது.

பணிப்பாளர்களின் இராஜினாமாக்கள் மற்றும் மீள்தேர்தல் இலங்கை மத்திய வங்கிக்கு உரிய முறையில் அறிவிக்கப்பட்டு 1971ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் பிற்பட்ட அதன் திருத்தங்களின்படி செய்யப்படுகின்றது.

## பணிப்பாளர் சபை புகுமுகம் மற்றும் பயிற்சி

புதிய பணிப்பாளர்களை பணிப்பாளர் சபையின் முழுமையான விவாதங்களுக்கு பங்களிப்பு செய்வதற்கு இயலுமானதாக்க, வங்கி மற்றும் அதன் தொழிற்பாடுகள் தொடர்பாக அவர்கள் போதியளவு அறிவூட்டப்பட்டுள்ளார்கள் மற்றும் அவசியமான அறிவினைக் கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சரியான

# கூட்டாண்மை ஆளுகை

முறையில் முன்னிறுத்தப்பட்ட புகுமுகம் மற்றும் பயிற்சியின் அவசியத்தை வங்கி அடையாளம் கண்டுள்ளது. அத்துடன் இது பணிப்பாளர்களின் நம்பகமான மற்றும் சட்டரீதியான கடமைகளை மேலும் கோடிட்டுக் காட்டுகின்றதுடன் சட்ட மற்றும் நிர்வாகம் தொடர்பான அனைத்துக் கடமைகளுக்கும் வழிகாட்டுதலை வழங்குகின்றது. புதிய பணிப்பாளர்களுக்கு பயிற்சியுடன் 1971ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபையின் தீர்வுத் தொகுதி மற்றும் கையேட்டு அணுகல், இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகள், பணிப்பாளர் சபையின் பட்டயம், பணிப்பாளர் சபையின் உப குழுக்களின் பட்டயங்கள், ஏனைய பொருத்தமான சட்டங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய நியமனங்கள் தொடர்பான ஆவணங்கள் வழங்கப்படுகின்றது. பணிப்பாளர்கள் பொருளாதாரம், ஒழுங்குமுறை மற்றும் தொழில்துறை போக்குகளில் பணிப்பாளர்களை நிலையொத்து வைத்திருப்பதற்கு உதவும் பணிப்பாளர் சபை செயலாளரிடமிருந்து தங்கள் காலவரையறை முழுவதும் தகவல் புதுப்பிப்புகள் மற்றும் பயிற்சியினைப் பெறுகின்றார்கள். பணிப்பாளர்கள் ஒழுங்குமுறைப்படுத்துனர்கள் அல்லது ஏதேனும் ஏனைய அதிகாரசபைகளினால் ஒழுங்குபடுத்தப்படும் பயிற்சி/அறிந்துகொள்ளல் நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுகின்றார்கள்.

## தகவல்களை அனுகுதல்

பணிப்பாளர்கள் அனைத்து தகவல்களுக்கும் கட்டுப்பாடற்ற அணுகலைக் கொண்டுள்ளதுடன், அவர்களின் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றத் தேவையான ஆதாரங்களும் உள்ளன. 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் ஆண்டின் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையின் திருத்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் வங்கியின் செலவில் வெளிநிபுணர் ஆலோசனைக்கான அணுகல் பணிப்பாளர்களுக்கு கிடைக்கின்றது. பணிப்பாளர்களுக்கு அவசியமான விவாதங்களை மேற்கொள்வதற்கு போதிய நேரம் கிடைப்பதற்காக முறைமையின் ஊடாக பணிப்பாளர் சபைப் பத்திரங்களை சுற்றுநிருபம் செய்வதற்கு அவர்களுக்கு இலத்திரனியல் பணிப்பாளர் சபைப் பத்திர முறைமை கிடைக்கப் பெறுகின்றது.

## முகாமைத்துவக் குழுக்கள்

சபைக் குழுக்களுக்கு மேலதிகமாக, வங்கி முகாமைத்துவக் குழுக்களை நிறுவியுள்ளது. இது பணிப்பாளர் சபையின் முன்கூட்டியே அங்கீகரிக்கப்பட்ட உப குழுக்களின் பட்டயத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழிற்பாட்டு பரப்பெல்லைகளுக்கு இணக்கமாக பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் முகாமைத்துவக் குழுக்களின் தலைவராக செயற்படுவார். இந்தக் குழுக்கள் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வங்கியின் தொழிற்பாடுகள் தொடர்பான முக்கியமான விடயங்களில் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்:

| முகாமைத்துவக் குழு | நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள் | கட்டமைப்பு |
|---|---|---|
| கூட்டாண்மை முகாமைத்துவ குழு (CMC) | கொள்கை மற்றும் உபாயமார்க்க உருவாக்கம், கொள்கை மற்றும் உபாயமார்க்க உருவாக்கங்களை தொழில்பாட்டு மட்டங்களில் நடைமுறைப்படுத்தல் தொடர்பான விடயங்களை மேற்பார்வை செய்தல். | பிரதி பொது முகாமையாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிகளில் தொழிற்படும் அனைத்து அதிகாரிகளும். |
| சொத்து மற்றும் பொறுப்புகள் முகாமைத்துவக் குழு (ALCO) | திரும்பலை உச்சப்படுத்தும் வகையில் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட இடர் ஏற்பு வரம்புக்கு உட்பட்டு சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்களை பேணுதல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |
| கடன் குழு (CC) | வங்கியினுடைய கடன் கொள்கையினை கால ரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தல், கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் வங்கியினுடைய இடர் ஏற்பு மட்டத்திற்கு உட்பட்ட வகையில் திரும்பல்களை உச்சப்படுத்தக்கூடிய விதத்தில் ஒரு ஆரோக்கியமான சேர்க்கையைப் பேணுதல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |
| முதலீட்டுக் குழு (IC) | வங்கியினுடைய முதலீட்டு கொள்கையினை கால ரீதியான மீளாய்வுக்கு உட்படுத்தல் மற்றும் வங்கியினுடைய ஒட்டுமொத்த இடர் ஏற்பு மட்டத்தில் வங்கியின் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |
| பெறுபேற்று மீளாய்வுக் குழு (PRC) | நிதிசார் பெறுபேறு, தொடர்ந்து செல்லும், கைவிடப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெறுபேற்றுக்கு வசதியளிக்கும் ஏதேனும் துணைத் தொழிற்பாடுகள் ஆகியவற்றின் விருத்திநிலை முதலியவற்றை மீளாய்வு செய்தல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், அனைத்து பிரதி பொது முகாமையாளர்கள், அனைத்துப் பிரிவுகளினதும் தலைவர்கள் மற்றும் ஆலோசகர்கள், அனைத்து உதவிப் பொது முகாமையாளர்களும், இணக்கப்பட்டு அதிகாரிகள் மற்றும் குழுக்களால் நியமிக்கப்பட்ட பிற உறுப்பினர்கள் |
| கிளைத் தொழிற்பாடுகள் உந்துதல் குழு (BOSC) | பகிர்ந்தளிக்கப்பட்ட நிதிசார் அதிகாரங்களுடன் கிளைகளின் தொழிற்பாடுகளை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சட்டம் மற்றும் வளாகங்களின் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |
| தகவல் தொழில்நுட்ப வழிகாட்டல் (ITSC) | வங்கியின் வியாபார உபாயமார்க்கங்களுடன் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கங்கள் சமாந்தரமாக செல்கின்றது என்பதை உறுதிப்படுத்தல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, சர்வதேச தொழிற்பாடுகள், கடன், திறைசேரி, சட்டம், மனித வள அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், இணக்கம் மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |

| முகாமைத்துவக் குழு | நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள் | கட்டமைப்பு |
|---|---|---|
| சந்தைப்படுத்தல் குழு (MKTC) | பணிப்பாளர் சபை மற்றும் கூட்டு வணிக முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு சந்தைப்படுத்தல் ஆலோசனை நிபுணத்துவம் மற்றும் உதவிகளை வழங்குதல் வங்கியினுடைய சந்தைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான படிவங்களில் முதல் ஆய்வு மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் தொழிற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |
| தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவக் குழு (ORMC) | தொழிற்பாட்டு இடர்முகாமைத்துவ நுட்பங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உள்ளக கட்டுப்பாடுகள் ஊடாக நாணயத் தன்மையினை பாதுகாத்தல் ஆகிய செயற்பாடுகளை மேற்கொள்ளல், வங்கியின் இடர்களை முகாமை செய்தல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழிற்பாடுகள், மனித வள அபிவிருத்தி, சந்தைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம், துணைச் சேவைகள், ஆதன முகாமை, சட்டம், இணக்கம் மற்றும் இடர் முகாமைத்துவ இணக்கப்பாடு மற்றும் தகவல் பாதுகாப்பு பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |
| உற்பத்தி விருத்திக் குழு (PDC) | அதிகரித்துச் செல்லும் போட்டிக்கு முகம் கொடுக்கும் வகையில் புத்தாக்கம் மிக்க உற்பத்திகளை விருத்தி செய்வதன் மூலம் நீண்டகால பெறுமதி சேர்த்தலை மேற்பார்வை செய்தல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, தொழிற்பாடுகள், சர்வதேச தொழிற்பாடுகள், தகவல் பாதுகாப்பு, சில்லறைக் கடன், சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |
| மனித வளக் குழு (HRC) | வங்கியின் உபாயமார்க்க நோக்கங்களுடன் இணக்கமாக மனித வளத்தினை விருத்தி செய்தல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், மனித வள அபிவிருத்தி, கடன் மற்றும் சட்டப் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள். |
| கூட்டிணைந்த பெறுகைக் குழு (பாரியவை) | வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், தொழிற்பாடுகள் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள், நிதி அமைச்சின் பிரதிநிதி. |
| கூட்டிணைந்த பெறுகைக் குழு (சிறியவை) | வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், தொழிற்பாடுகள் பிரிவுகளின் பிரதான முகாமைத்துவ நபர்கள், நிதி அமைச்சின் பிரதிநிதி. |
| நிறைவேற்றுத்தர பெறுகைக் குழு (EPC) | வங்கியின் பெறுகை செயன்முறையை சீராக மேற்கொள்ளல். | சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (கடன்), பிரதான முகாமையாளர் (நிதி) |
| கூட்டிணைந்த சமூக பொறுப்பு மற்றும் நிலைத்திருத்தல் குழு | நிலையான செயற்திறன் மற்றும் மேம்பாட்டுடன் இணைக்கப்பட்ட கூட்டிணைந்த நோக்கங்களால் வரையறுக்கப்பட்டுள்ளபடி, தினசரி வியாபார நடவடிக்கைகளில் நெறிமுறை, சமூக மற்றும் சுற்றுச் சூழல் பொறுப்பை ஒருங்கிணைப்பதன் மூலம் முக்கிய நலன்விரும்பிகளுக்கான ஆதரவு மதிப்பு உருவாக்கம். | பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர், சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர், அனைத்து பிரதி பொது முகாமையாளர்கள், அனைத்து ஆலோசனையாளர்கள், பிரிவுகளின் தலைவர்கள் மற்றும் அனைத்து உதவிப் பொது முகாமையாளர்கள். |
| சிரேஷ்ட முகாமைத்துவ குழு (SMC) | மனிதவளம் தொடர்பான விடயங்களை ஆராய்தல் | பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் (கடன்), பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி), மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு). |

## இடர் முகாமைத்துவத்தில் பணிப்பாளர் சபையின் வகிபாகம்

வங்கியின் வணிக உபாயமார்க்கத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக இடர் முகாமைத்துவத்தை சீரமைப்பதை பணிப்பாளர் சபை அடையாளம் காட்டுகின்றது. இடர் முகாமைத்துவம் குறித்த விவேகமான மேற்பார்வை பணிப்பாளர் சபைக்குள் ஆழமாக வேரூன்றியுள்ளதுடன், மேலும் இது வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடு தொடர்பாக தனது கடமைகளை நிறைவேற்றுவதில் அதன் பொறுப்பை பணிப்பாளர் சபையின் இடர் முகாமைத்துவ குழுவிற்கு வழங்கியுள்ளது. அந்த வகையில் வங்கியானது பலமான இடர் முகாமைத்துவ சட்டத்தினை உருவாக்கியுள்ளதுடன், வங்கியினுடைய இடர் அளவினைக் கையாளுவத்கான இடர் ஏற்பு வரம்புகள், சகிப்புத்தன்மை மட்டங்கள் மற்றும் இடரினைக் கண்காணிப்பதற்கான பொறிமுறைகள் ஆகிய உருவாக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபையானது ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழுவினால் சீரான கால இடைவெளிகளில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளின் அடிப்படையில் இடர் தொடர்புபட்ட விடயங்களைக் கண்காணிக்கின்றது. ஒப்புக் கொள்ளப்பட்ட இடர் சகிப்பு மட்டங்களில் இருந்து ஏதேனும் விலகல்களுக்கு நிர்வாகத்திடம் தெளிவுபடுத்தல் கோரப்பட்டதுடன் அதனை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டது. நீண்டகால வியாபார திட்டமிடல் செயன்முறை தொடர்பான ஆபத்தை நன்கு நிவர்த்தி செய்யும் உபாயமார்க்க வியாபாரத் திட்டம் குறித்த கலந்துரையாடலின் போது வணிகத்தில் உள்ள அபாயங்கள் பரிசீலிக்கப்பட்டு ஆழமாக விவாதிக்கப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டன.

## தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரின் வகிபாகங்கள்

1971ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள், இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் கைத்தொழிற்துறையின் சிறந்த நடைமுறைகள் என்பவற்றுக்கு இணங்கும் வகையில் நியமனம் மற்றும் வகிபாக

# கூட்டாண்மை ஆளுகை

தெளிவாக்கலுக்கான முகாமைத்துவத்துவ பங்களிப்புக்கான சாட்டுதல் மற்றும் அதிகாரம் மற்றும் பொறுப்புகளின் வினைத்திறனான பின்பற்றல்கள் என்பவற்றை வங்கி உறுதி செய்கின்றது. தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிர்வாக அலுவலர் ஆகியோரின் வகிபாகங்கள் தனித்தனியாக உள்ளதுடன், அவற்றின் தனிப்பட்ட பொறுப்புகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு தனி நபருக்கும் தடையற்ற முடிவெடுக்கும் அதிகாரங்கள் இல்லை என்பதையும், அதிகாரம் மற்றும் அதிகாரத்தின் பொருத்தமான சமநிலைகள் இருப்பதை உறுதி செய்வதற்கும் பொறுப்புகளைப் பிரிப்பது வடிவமைக்கப்பட்டுள்ளது. தலைவர் ஒரு சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக இருக்கின்றார். பொது முகாமையாளர் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்ட ஒரு முக்கிய முகாமைத்துவ பணியாளராக இருக்கின்றார், அவர் பிரதான நிர்வாக அலுவலராகவும் இருப்பார், ஆனால் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருக்கமாட்டார். தலைவர் மற்றும் பொது முகாமையாளர்/பிரதான நிர்வாக அலுவலரின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புக்களை பணிப்பாளர் சபை பட்டயம் தெளிவாக வரையறுக்கின்றது.

தலைவரானவர், பணிப்பாளர் சபைக்குத் தலைமைத்துவம் வழங்குதல், பணிப்பாளர் சபையின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டுக்கு வசதி அளித்தல், அதிகாரத்தை கையாளுதல் மற்றும் வங்கியின் சிறந்த கூட்டிணைந்த ஆளுகையினை மேம்படுத்தல மற்றும் பேணுதல் ஆகிய பொறுப்புகளை கொண்டுள்ளார். பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பணிப்பாளர் சபை செயலாளருடன் கலந்தாலோசித்து நிகழ்ச்சி நிரலை அமைக்கின்றனர். பணிப்பாளர் சபையின் கடமைகளை நிறைவேற்றுவதில் தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்காக பணிப்பாளர் சபை போதுமான தகவல்களைப் பெறுவதை தலைவர் உறுதி செய்கின்றதுடன், பணிப்பாளர் சபைக் கூட்டங்களில் அங்கத்தரவர்களின் திறம்பட்ட பங்கேற்பு, பங்குதாரருடன் பயனுள்ள தகவல்தொடர்பு மற்றும் பிரதான முகாமைத்துவப் நபர்களுடன் திறந்த தொடர்பு என்பவற்றைக் கொண்டுள்ளார்.

பணிப்பாளர் சபையினால் ஒப்படைக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட இடர் சகிப்புத்தன்மை நிலைகளுக்குள் வங்கியின் உபாயமார்க்கம் மற்றும் வியாபாரத்தின் அன்றாட முகாமைத்துவம் ஆகியவற்றை வடிவமைத்தல், மேம்படுத்தல் மற்றும் செயல்படுத்தல் ஆகியவற்றுக்கு பொது முகாமையாளர்/பிரதான நிர்வாக அலுவலர் பொறுப்பேற்கின்றார். பொது முகாமையாளர்/பிரதான நிர்வாக அலுவலர் கூட்டிணைந்த முகாமைத்துவக் குழுவிற்கு தலைமைத்துவத்தை வழங்குகின்றதுடன் கூட்டிணைந்த நிர்வாக கட்டமைப்பில் அனுமதிக்கப்பட்ட அவர்களுடைய அதிகாரத்தின் அம்சங்களை கூட்டிணைந்த முகாமைத்துவ உறுப்பினர்களுக்கு வழங்குகின்றார்.

முகாமைத்துவ குழுக்களுக்குத் தலைமை தாங்குவதோடு, வங்கியின் செயல்திறன் குறித்த துல்லியமான, சரியான நேரத்தில் மற்றும் தெளிவான தகவல்களை பணிப்பாளர் சபை பெறுவதை உறுதி செய்கின்றார். பொது முகாமையாளர்/பிரதான நிர்வாக அலுவலர் வங்கியின் விவகாரங்களை மேற்கொள்ளும் போது நல்ல கூட்டிணைந்த நிர்வாகமும் உயர்ந்த தரங்களும் பயன்படுத்தப்படுவதையும் பராமரிப்பதையும் உறுதி செய்கின்றார்.

## பணிப்பாளர் சபை செயலாளரின் வகிபாகம்

பணிப்பாளர் சபை செயலாளரின் வகிபாகம் சபையின் செயலாளர் பணிப்பாளர் சபையின் செயற்பாடுகள் ஒழுங்காக பின்பற்றப்படுதல் மற்றும் மீளாய்வு செய்யப்படுதலை உறுதி செய்வதில் ஒரு முக்கிய வகிபாகத்தைக் கொண்டிருக்கினறார். பணிப்பாளர் சபையின் செயலாளரது பொறுப்புகள் பின்வருமாறு சுருக்கமாக கூறப்படுகின்றன:

- பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் அனைத்துக் கூட்டங்கள் தொடர்பான கூட்ட அறிக்கைகளைப் பேணுதல்
- பணிப்பாளர் சபையினது ஒழுக்க விதிகள் மற்றும் சட்ட ரீதியான இணக்கப்பாட்டு தன்மையினை உறுதி செய்தல்.
- பணிப்பாளர் சபையின் பயனுறுதி வாய்ந்த தொழிற்பாட்டை உறுதி செய்தல்
- தொடர்புபட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக பணிப்பாளர்களுக்கு தொழில்சார் ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் கூட்டிணைந்த ஆளுகைக்கான கோட்பாடுகள் மற்றும் தொடர்புபட்ட ஒழுக்கவிதி மற்றும் சட்டங்களுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்தல்.
- சபையின் உப குழுக்கள் மேற்கொள்ளும் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் வெளிப்பாடுகள் ஆகியன தொடர்பாக உரிய வகையில் சபை தகவல்களை பெற்றுக்கொள்வதை உறுதி செய்தல்.

ஓர் முக்கிய முகாமை நபர் என்னும் வகையில் செயலாளரது நியமனம் மற்றும் பதவி நீக்கம் ஆகியன பணிப்பாளர் சபையுடனே தொடர்புபட்டதாகும்.

## பணிப்பாளர்களது சம்பளம் மற்றும் நிர்ணய முறை

1971ஆம் ஆண்டு 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கியின் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களுக்குட்பட்டு, பணிப்பாளர்களின் சம்பளமானது தொடர்புபட்ட அமைச்சரினால் தீர்மானிக்கப்படும். எந்த ஒரு பணிப்பாளரும் தன்னுடைய சம்பளத்தை தீர்மானிப்பது தொடர்பான விடயங்களில் தொடர்புபடுவதில்லை. பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவானது பொது முகாமையாளர் அல்லது பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான முகாமைத்துவ நபர்களது சம்பளங்கள் தொடர்பாக மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மீளாய்வு செய்யப்படும் கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபைக்குப் பரிந்துரைகளை மேற்கொள்ளும் வங்கியானது பிரதான முகாமைத்துவ நபர்களுக்கான பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சம்பளக் கொள்கையினைக் கொண்டிருக்கின்றது. பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக பணிப்பாளர் சபை அரசுடமை வங்கிகள் தொடர்பாக தேசிய சேமிப்பு வங்கி சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளின் இணக்கமான வகையில் இறுதி முடிவினை வழங்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த அமைச்சருக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளும். பணிப்பாளர் சபையின் மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழுவானது 3 நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.

## பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் மீளாய்வு

2007ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வங்கியியல் சட்ட வழிகாட்டல்கள் மற்றும் ஏனைய பிரயோகிக்கத்தக்க விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மற்றும் கூட்டிணைவு கோட்பாடுகளுக்கான சிறந்த நடைமுறைகள் ஆகியவற்றில் குறிப்பிட்ட பொறுப்புகளை உள்ளடக்கும் பணிப்பாளர் சபையின் பட்டயம் மற்றும் பணிப்பாளர் சபையின் உப குழுக்களின் பட்டயம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட கடமைகளை பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்கள் உரிய வகையில் நிறைவு செய்கின்றமையை உறுதி செய்வதற்காக வருடாந்த அடிப்படையில் பணிப்பாளர் சபை மற்றும் பணிப்பாளர் சபையின் உப குழுக்கள் சுயமீளாய்வை மேற்கொள்ளுகின்றனர். இந்த மீளாய்வு செயன்முறையிலே ஒவ்வொரு பணிப்பாளர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்ட பணிப்பளர் சபை பெறுபேற்று மீளாய்வுப் படிவம் ஒன்றை பூர்த்தி செய்ய அது சபையின் செயலாளரினால் பணிப்பாளர் சபை நியமன குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும்.

## பிரதான நிறைவேற்று அலுவலரின் மதிப்பீடு

வருடத்தின் ஆரம்பத்தில் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்ற அலுவலருடன் ஒப்புக்கொள்ளப்பட்ட உபாயமார்க்க வியாபாரத் திட்டத்தின் நிதி மற்றும் நிதியல்லா இலக்குகளின் படி அளவுகோள்களின் அடிப்படையில் வருடாந்த அடிப்படையில் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்ற அலுவலரின் செயற்திறனை பணிப்பாளர் சபை மதிப்பீடு செய்கின்றது. மதிப்பீட்டினைச் செய்யும் போது தொழிற்பாட்டுச் சூழலில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் சரியான கவனத்தை வழங்குகின்றன. தலைவர் முறையான மற்றும் முறைசாரா பின்னூட்டல்களை பொது முகாமையாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலருடன் கலந்தாலோசிக்கின்றார். அனுமதிக்கு முன்னர் பொது முகாமையாளர் மற்றும் பிரதான நிறைவேற்று அலுவலரினால் மதிப்பீட்டுக்கான பின்னூட்டல் வழங்கப்படும் போது உரிய கவனம் மேற்கொள்ளப்படுகின்றது.

## வங்கிச் சட்ட கட்டளைகளுடனான இணக்கப்பாடு

**2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிச் சட்ட கட்டளைகள் மற்றும் அதன் பிற்கால திருத்தங்கள் ஆகியவற்றுக்கு அமைவாக பிரசுரிக்கப்பட வேண்டிய வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கை.**

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| **3 (1)** | **பணிப்பாளர் சபையின் பொறுப்புகள்** | |
| 3 (1) (i) | பின்வருவனவற்றை உறுதி செய்வதன் மூலம் பணிப்பாளர் சபையானது வங்கியினுடைய பாதுகாப்பு மற்றும் பொருத்தமான தன்மையை பலப்படுத்தல் வேண்டும்: | |
| 3 (1) (i) (a) | வங்கியின் தந்திரோபாய நோக்கங்கள் மற்றும் கூட்டு வணிகப் பெறுமதிகளை மேற்பார்வை செய்து அங்கீகரித்தல் மற்றும் இவை வங்கி முழுவதும் உரியவாறு தொடர்பாடல் செய்யப்படுவதை உறுதி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>வங்கியினுடைய தந்திரோபாய இலக்குகள் மற்றும் கூட்டு வணிக பெறுமதிகள் 51 ஆம் பக்கத்தில் குறிப்பிட்டவாறு பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றன.<br><br>இவை பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட 2021-2023 காலப்பகுதிக்கான தந்திரோபாய வணிக திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டு அனைத்து ஊழியர்களுக்கும் தொடர்பாடல் செய்யப்பட்டிருக்கின்றன. கூட்டு வணிக பெறுமதிகள் வங்கியின் வலைப்பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் ஊழியர் அறிமுகப்படுத்தல் செயற்றிட்டம் மற்றும் கூட்டங்களின் போது ஊழியர்களுடன் தொடர்பு கொண்டு வலுப்படுத்தப்பட்டுள்ளது. கூட்டு வணிக பெறுமதிகள் வங்கியின் வலைப் பக்கத்திலும் இவ்வறிக்கையின் 2 மற்றும் 3 ஆம் பக்கங்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 3 (1) (i) (b) | வங்கியினுடைய ஒட்டுமொத்த வணிக தந்திரோபாயம், ஒட்டுமொத்த இடர்க் கொள்கை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பொறிமுறைகள் ஆகியவற்றை அளவிடக்கூடிய இலக்குகளுடன் கூடிய வகையில் குறைந்தபட்சம் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்கு அங்கீகரித்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக தந்திரோபாயம், திசைமுகப்படுததல் மற்றும் அளவிடக்கூடிய இலக்குகள் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று ஆண்டுகளுக்கான (2021-2023) தந்திரோபாய வணிக திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மூலோபாய வணிகத்திட்டம், ஒட்டுமொத்த இடர் மேலாண்மை கட்டமைப்பு, நடைமுறைகள் மற்றும் வங்கியின் இடர் தன்மையுடன் இணைக்கப்பட்டுள்ளது. தந்திரோபாய திட்டமானது ஒவ்வொரு ஆண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் ஒரு சுழலும் திட்டமாகும். |
| 3 (1) (i) (c) | பிரதானமான இடர்களை அடையாளம் கண்டு அத்தகைய இடர்களில் இருந்து பாதுகாப்பு தரும் வகையில் முகாமை செய்வதற்கான பொருத்தமான முறைமைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>பணிப்பாளர் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு வங்கி கொள்கை, முக்கியமான இடர்களை அடையாளம் காணுதல், ஆளுகை கட்டமைப்புகளை உருவாக்குதல் மற்றும் முக்கியமான இடர்களை அளவிட்டு கண்காணித்து முகாமை செய்வதற்கான முறைகளை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றுக்காக பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை வழங்கப் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது.<br><br>கீழ்வரும் அறிக்கைகள் இது தொடர்பான விபரங்களை உள்ளடக்கியுள்ளது:<br>• பக்கம் 92 – 114 இல் உள்ள இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவ அறிக்கை.<br>• பக்கம் 84 – 85 இல் உள்ள பணிப்பாளர் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கை. |
| 3 (1) (i) (d) | வைப்பாளர்கள், கடன்பெற்றவர்கள், கடன்கொடுத்தோர் மற்றும் பங்குதாரர் உள்ளடங்கலான அனைத்து அக்கறை உள்ள தரப்பினருனான தொடர்பாடல் பற்றிய கொள்கை ஒன்றினை நடைமுறைப்படுத்துவதை அங்கீகரித்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>வங்கியானது அனைத்து அக்கறையுள்ள தரப்பினர் உள்ளடங்கலான பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் கொள்கை ஒன்றினை பேணுகிறது. |
| 3 (1) (i) (e) | வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைமைகள் ஆகியவற்றின் போதுமான தன்மை மற்றும் நாணயத் தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>சபை கணக்காய்வு குழுவானது வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை ஆகியவை தொடர்பான போதுமான தன்மை மற்றும் நாணயத் தன்மை விடயங்களில் பணிப்பாளர் சபைக்கு உதவி வழங்குகிறது. உள்ளக கணக்காய்வு பிரிவு மற்றும் இது தொடர்பான அரசு கணக்காய்வு மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவை சபைக் கணக்காய்வு குழுவினால் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு அது தொடர்புபட்ட முகாமைத்துவத்தின் பதில்கள் பெறப்படுகின்றன. |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (1) (i) (f) | சர்வதேச கணக்கீட்டு நியமங்களில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட வகையில் பிரதம முகாமைத்துவ நபர்களை அடையாளம் கண்டு குறித்தொதுக்குதல். | இணங்கப்பட்டுள்ளது.<br>பிரதம முகாமைத்துவ நபர்களை சர்வதேச கணக்கீட்டு நியமங்களில் வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்கள், கொள்கை, நேரடி நடவடிக்கைகள் மற்றும் வணிக நடவடிக்கைகள், செயற்பாடுகள் மற்றும் இடர் மேலாண்மை ஆகியவற்றில் கணிசமாக செல்வாக்கு செலுத்தும் நிலையில் உள்ளனர்.<br>நியமிக்கப்பட்ட அனைத்து பிரதம முகாமைத்துவ நபர்களையும் நியமனம் செய்வது, சபை நியமன குழுவினால் பரிந்துரைக்கப்பட்டு சபையினால் அங்கிகரிக்கப்படுகிறது.<br>நிறுவன ஆளுகை தொடர்பான இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல் படி பிரதம முகாமைத்துவ நபர்களை வங்கி அடையாளம் கண்டுள்ளது. |
| 3 (1) (i) (g) | பணிப்பாளர்கள் தமக்காகவும் பிரதம முகாமைத்துவ நபர்களுக்காகவும் அதிகாரப் பரப்புகள் மற்றும் பொறுப்புக்களை வரையறை செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர் சபையின் அதிகாரப் பரப்பு தொடர்பான விடயங்கள் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 7 இன்படி ஆளுகை செய்யப்படுகின்றன. தேசிய சேமிப்பு வங்கி சட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட பணிப்பாளர் சபை பட்டயமானது பணிப்பாளர் சபையின் அதிகாரப்பரப்பு மற்றும் பொறுப்புகளை விவரிக்கிறது. சபையின் மனித வள மற்றும் ஊதியங்கள் குழுவானது பிரதம முகாமைத்துவ நபர்களது அதிகார பரப்புக்கள் மற்றும் பொறுப்புகளை வரையறை செய்துள்ளதுடன் நியமனங்களை பரிந்துரை செய்கிறது. |
| 3 (1) (i) (h) | சபையின் கொள்கைக்கு இணக்கமான வகையில் வங்கி மற்றும் பிரதம முகாமைத்துவ அவர்கள் ஆகியோரது விவகாரங்கள் தொடர்பான பொருத்தமான மேற்பார்வை நடைமுறையில் உள்ளதை உறுதி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br>சபையின் உப குழுவானது நிதி அறிக்கையிடல், உள்ளகக் கட்டுப்பாடுகள், இடர் முகாமைத்துவம் மற்றும் குழுவுக்கு பொறுப்பளிக்கப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பான அறிக்கையினை பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கும். மேலும் பிரதம முகாமைத்துவ நபர்கள் தமது பொறுப்பெல்லைக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பாக கிரமமான முன்னிலைப்படுத்தலை மேற்கொள்வதுடன் அவை தொடர்பான விளக்கங்களை அளிக்குமாறு பணிப்பாளர் சபையினால் அழைக்கப்படுவர். |
| 3 (1) (i) (i) | அவசியமான போது, பணிப்பாளர்கள் மற்றும் பிரதம முகாமைத்துவ நபர்களது தெரிவு, நியமனம், தேர்தல் மற்றும் முகாமைத்துவ அக்கறை முரண்பாடுகள், பலவீனங்களை அடையாளம் கண்டு மாற்றங்களை நடைமுறைப்படுத்துதல் உள்ளடங்கலான பணிப்பாளர் சபையின் சுய ஆளுகை நடைமுறைகளின் பயனுறுதித்தன்மையை சீரான கால இடைவெளிகளில் மதிப்பீடு செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br>பொதுவாக, சபையின் செயல்திறனைப் பற்றிய சுய மதிப்பீடு ஆண்டுதோறும் அதன் நிர்வாக நடைமுறைகளை மதிப்பீடு செய்யப்படுகிறது. தொடர்புபட்ட நபருடனான கொடுக்கல்வாங்கல் தொடர்பான கொள்கை, அக்கறை தொடர்பிலான முரண்பாட்டினை முகாமை செய்ய அமுலில் உள்ளது. தொடர்புபட்ட நபருடனான கொடுக்கல்வாங்கல் மற்றும் அவர்களது அக்கறையினை ஒவ்வொரு வருடமும் வெளிப்படுத்த வேண்டும்.<br>பணிப்பாளர் சபையினால் செயற்திறனை ஆளுகை நடைமுறைகளுக்கமைய மதிப்பீடு செய்யும் பொருட்டு சுயமதிப்பீடு ஆண்டு தோறும் செயற்படுத்தப்படும். இது 2020 ஆம் ஆண்டிற்கும் மேற்கொள்ளப்பட்டது. |
| 3 (1) (i) (j) | பிரதம முகாமைத்துவ நபர்கள் தொடர்புபட்ட வகையில் வங்கியானது பொருத்தமான தொடர்ந்து செல்கைத் திட்டம் ஒன்றினை கொண்டிருப்பதனை உறுதி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதம முகாமைத்துவ நபர்கள் தொடர்பான விடயங்களில் தயார் நிலையை உறுதி செய்வதற்கான ஒரு தொடர்ச்சித் தன்மை திட்டமானது நடைமுறையில் உள்ளது. |
| 3 (1) (i) (k) | தேவைகளின் அடிப்படையில் கொள்கைகளை மீளாய்வுக்கு உட்படுத்தல், தொடர்பாடல் வசதிகளை உருவாக்குதல் மற்றும் கூட்டு வணிக நோக்கங்களை நோக்கிய செயற்பாடுகளை கண்காணித்தல் ஆகிய நோக்கங்களுக்காக பிரதம முகாமைத்துவ நபர்களுடன் கிரமமான சந்திப்புகளை மேற்கொள்ளுதல். | இணங்கப்பட்டுள்ளது.<br>பிரதம முகாமைத்துவ நபர்கள் பெறுபேறுகள், தந்திரோபாயம், கொள்கை மற்றும் தமது பொறுப்புக்களுக்கு உட்பட்ட பகுதிகள் தொடர்பாக பணிப்பாளர் சபை மற்றும் உப குழுக்களின் கலந்துரையாடல்களில் முறையாக தொடர்புபடுகின்றார்கள். மேலும் பிரதம முகாமைத்துவ நபர்கள் தமது பொறுப்புக்கு உட்பட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ள விடயங்கள் தொடர்பாக முன்னிலைப்படுத்தல்களை மேற்கொள்வதுடன் கொள்கைகள் மற்றும் கூட்டு வணிக நோக்கங்கள் ஆகியவை தொடர்பான பொருண்மையான விடயங்களில் விளக்கமளிப்புகளை மேற்கொள்ளுமாறு சபை மற்றும் உப குழுக்களால் அழைக்கப்படுகின்றனர். |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (1) (i) (l) | ஒழுங்குவிதிமுறை சூழலினை விளங்கிக்கொண்டு வங்கியானது ஒழுங்கு விதியாளர்களுடன் பயனுறுதி வாய்ந்த உறவுமுறையை பேணுவதனை உறுதி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>பிரதம முகாமைத்துவ நபர்கள் ஒழுங்கு விதிமுறை விருத்திகள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு தெரிவிக்கின்றனர். மேலும் பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு), இணக்கப்பாட்டு அலுவலர் மற்றும் பிரதம இடர் அதிகாரி ஆகியோர் சபையின் கணக்காய்வுக் குழு மற்றும் சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றுக்கு ஒழுங்குவிதிமுறை விருத்திகள் தொடர்பாக விளக்கமளிக்கின்றனர்.<br><br>மேலதிகமாக, இணக்க அதிகாரி சபையால் கண்காணிக்கப்படும் மாதாந்த அறிக்கையின் மூலம் மாதந்தோறும் ஒழுங்குபடுத்துனருக்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து அறிக்கைகள் பற்றியும் சபைக்கு அறிவிக்கிறார். |
| 3 (1) (i) (m) | வெளிவாரிக் கணக்காய்வாளர்களை பணிக்கு அமர்த்துதல் மற்றும் மேற்பார்வை ஆகிய விடயங்களில் போதிய அக்கறை செலுத்தப்படுதல். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 154 ஆவது சரத்து மற்றும் அரசுடமை வங்கி என்னும் வகையில் தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் 37 ஆம் பிரிவு ஆகியவற்றுக்கு அமைவாக கணக்காய்வு தலைமை அதிபதி அவர்களே வங்கியின் வெளிவாரிக் கணக்காய்வாளர் ஆவார். |
| 3 (1) (ii) | பணிப்பாளர் சபையானது தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரை நியமித்து இந்த கட்டளைகளின் கட்டளை இலக்கம் 3 (5) இற்கு அமைவாக தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளை வரையறை செய்து அங்கீகரிக்கும். | 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 11 (1) மற்றும் அதன் திருத்தச் சட்டமாகிய 1995 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தலைவர் அமைச்சரினாலேயே நியமிக்கப்படுவார். தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 21 குறிப்பிடுவதன் படி பணிப்பாளர் சபை பொருத்தமான, தகுந்த நபர் ஒருவரை வங்கியின் பொது முகாமையாளராக நியமிக்க அவரே வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் தொழிற்படுவார். தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டு சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பணிப்பாளர் சபை பட்டய கட்டளையின் பிரிவு 3 (5) இற்கு அமைவாக, தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது பொறுப்புகள் வேறுபட்டு காணப்படுவதுடன் அவை வரையறுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. |
| 3 (1) (iii) | பணிப்பாளர் சபையானது கிரமமான முறையில் ஒன்று கூடுவதுடன் ஏறத்தாழ ஒரு மாத இடைவெளியில் ஒவ்வொரு ஆண்டும் பணிப்பாளர் சபை குறைந்தபட்சம் 12 தடவைகள் ஒன்றுகூடி இருத்தல் வேண்டும். அத்தகைய கிரமமான பணிப்பாளர் சபை கூட்டங்களுக்கு சமுகம் அளிப்பதற்கு தகமை வாய்ந்த இயக்குனர்களில் பெரும்பான்மையானவர்களது நேரடியான ஆரோக்கியமான பங்குபற்றலுடன் கூட்டம் இடம் பெற்றிருக்க வேண்டும். இயலுமானவரையில் எழுத்து மூலமான சுற்றுநிருப தீர்மானங்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>ஒவ்வொரு மாதமும் பணிப்பாளர்களுடைய ஆரோக்கியமான பங்குபற்றுதலுடன் கிரமமான சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அவற்றுக்கு சமுகம் அளித்தவர்கள் தொடர்பான விபரங்கள் பக்கம் 53 இல் கூட்டங்களின் எண்ணிக்கையுடன் வழங்கப்பட்டுள்ளது. வங்கியானது எழுத்துமூலமான சுற்றுநிருபம் மூலம் அங்கீகாரத்தை பெறுவதற்கான நடவடிக்கைகளை இயன்றளவு குறைப்பதற்கான ஒவ்வொரு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. |
| 3 (1) (iv) | வணிகத்தின் மேம்படுத்தல் மற்றும் இடர்களின் முகாமைத்துவம் ஆகியன தொடர்பாக வழக்கமான சபைக் கூட்டங்களில் உள்ளடக்கப்பட்ட விடயங்களில் அனைத்து பணிப்பாளர்களும் தமது வாதங்கள் மற்றும் முன்மொழிவுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் காணப்படுவதை சபை உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது. |
| 3 (1) (v) | வழக்கமான கூட்டங்களுக்கு அனைத்து இயக்குனர்களும் பங்களிக்கும் வகையில் குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்பதாகவே அறிவித்தல் வழங்கப்படுவதனை பணிப்பாளர் சபை செயன்முறைகள் உறுதி செய்தல் வேண்டும். பணிப்பாளர் சபையின் ஏனைய கூட்டங்களுக்கு நியாயமான அறிவித்தல் வழங்கப்பட வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br><br>கூட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் ஆவணங்கள் உள்ளடங்கலாக கலந்துரையாடல்களில் பங்குபற்ற இருக்கும் மற்றும் அவசரமான முன்மொழிவுகளை மேற்கொள்வதற்கும் பணிப்பாளர்களுக்கு வசதி அளிக்கும் வகையில் குறைந்தபட்சம் ஏழு நாட்களுக்கு முன்பதாகவே சுற்றுநிருபம் செய்யப்படும். |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (1) (vi) | சமீபத்தில் முடிவடைந்த 12 மாத காலப்பகுதியில் இடம்பெற்ற கூட்டங்களில் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு அளவான கூட்டங்களுக்கு சமுகமளிக்காத பணிப்பாளர்கள் அல்லது சமீபத்தில் இடம்பெற்ற மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு சமூகமளிக்காத இயக்குனர்கள் பதவி விலக்கப்படுவதனை பணிப்பாளர் சபை செயன்முறைகள் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>2007 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க வங்கி சட்ட கட்டளைகளுக்கு அமைவாக பணிப்பாளர்களது வருகையானது மதிப்பீடு செய்யப்படும். பணிப்பாளர்களின் வருகை தொடர்பான விபரங்கள் பக்கம் 53 இல் தரப்பட்டுள்ளது.<br>எந்தவொரு பணிப்பாளரும் மூன்றில் இரண்டு கூட்டங்களிற்கோ அல்லது தொடர்ச்சியாக 12 மாதங்களிற்கோ அல்லது மூன்று தொடர் கூட்டங்களிற்கோ சமூகமளிக்காமல் இருக்கவில்லை. |
| 3 (1) (vii) | 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கியில் சட்டத்தின் நாற்பத்து மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளைத் திருப்தி செய்கின்ற வகையில் கம்பனி செயலாளர் ஒருவரை பணிப்பாளர் சபை நியமித்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபை செயலாளர் 1988ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க வங்கி சட்டத்தின் 43 ஆம் பிரிவுக்கு இணக்கமான வகையில் ஒரு சட்டத்தரணியாக இருக்கின்றார். பணிப்பாளர் சபையின் செயலாளர் பிரதானமாக பணிப்பாளர் சபை தொடர்பான ஆவண வேலைகளை கையாள்வதுடன் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளை குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தொழிற்பாடுகளுடனும் தொடர்புபடுகின்றார். |
| 3 (1) (viii) | பணிப்பாளர் சபையின் செயன்முறைகள் யாவும் பிரயோகிக்கப்பட விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளின்படி பின்பற்றப்படுவதை உறுதி செய்யும் வகையில் கம்பனி செயலாளரது சேவைகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கான அணுகை அனைத்து பணியாளர்களுக்கும் காணப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>புதிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபை செயன்முறை இடம்பெறுவதை உறுதி செய்யும் பொறுப்பினை கொண்ட செயலாளரிடம் இருந்து தேவையான ஆலோசனைகள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்கான அனுமதி அனைத்து பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. |
| 3 (1) (ix) | கம்பனி செயலாளர் பணிப்பாளர் சபை கூட்டத்தின் அறிக்கைகளை பேணுவதுடன் கூட்ட அறிக்கைகள் எந்த ஒரு பணிப்பாளரும் நியாயமான முன்னறிவித்தலின் பெயரில் பார்வையிடுவதற்கு அனுமதி காணப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>தேசிய சேமிப்பு வங்கியின் செயலாளர் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகளை சபைக்கு சுற்றுநிருபம் செய்கின்றார் மேலும் முடிவடைந்த கூட்ட சுற்றுநிருபம் தலைவரினால் உறுதி செய்யப்பட்ட பின் சபை பணிப்பாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. அடுத்து வரும் கூட்டத்தில் அந்த அறிக்கைகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன. |
| | பணிப்பாளர் சபையானது தமது கடமைகளை செயற்படுத்தும் போது போதுமான கவனம் மற்றும் பாதுகாப்புடன் செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்வதற்கு அவசியமான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் போதுமான தகவல்களுடன் கூட்ட அறிக்கை தயாரிக்கப்படுதல் வேண்டும்.<br>மேலும் ஒழுங்குவிதி அமைப்புகள் மற்றும் மேற்பார்வை அமைப்புகள் சபையின் கலந்துரையாடல் மற்றும் கூட்டம் தொடர்பான விடயங்களை மதிப்பீடு செய்வதற்கான ஒரு அடிப்படையாக கூட்ட அறிக்கைகள் காணப்படுதல் வேண்டும். ஆகவே பணிப்பாளர் சபை கூட்ட அறிக்கையானது பின்வரும் விடயங்களை தெளிவாக பதிவு செய்தல் வேண்டும்:<br>(a) பணிப்பாளர் சபை தனது கலந்துரையாடல்களின் போது பயன்படுத்திய தகவல்கள் மற்றும் தரவு முதலியவற்றின் சுருக்கம்<br>(b) சமீபத்தில் கருத்தில் எடுக்கப்பட்ட விடயங்கள் | இணங்கப்பட்டுள்ளது.<br>வழங்கப்பட்டுள்ள மூல பிரமாணங்களுக்கு இணக்கமான முறையில் கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன. |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (1) (x) | (c) பணிப்பாளர் சபை தமது கடமைகளை செயன்முறைப்படுத்தும் போது, போதுமான கவனம் மற்றும் பாதுகாப்புடன் செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்யும் வகையில் விடயங்களைக் கண்டுபிடிக்கும் கலந்துரையாடல் தொடர்பான ஏற்கப்பட்ட மற்றும் நிராகரிக்கப்பட்ட கருத்துக்கள்<br>(d)சபையின் தந்திரோபாயங்கள் கொள்கைகள் ஆகியன அமைப்புக்குப் பொருத்தமான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணக்கமாகவும் காணப்பட்டமை உறுதி செய்யும் நிர்வாக உறுப்பினர்களது சுருக்கவுரை மற்றும் உறுதிப்படுத்தல்கள்<br>(e) பின்பற்றப்பட்ட இடர்முகாமைத்துவ நடைமுறைகளில் ஒரு மேலோட்டமான பார்வை என்ற வகையில் பணிப்பாளர் சபையின் இடர்கள் தொடர்பான அறிவு மற்றும் புரிந்துணர்வு, மற்றும்<br>(f) தீர்மானங்கள் மற்றும் பணிப்பாளர் சபை முடிவுகள் | |
| 3 (1) (xi) | அவசியமான சந்தர்ப்பங்களில் நியாயமான வேண்டுகோளின் அடிப்படையில் பணிப்பாளர்கள் சுயாதீனமான தொழில்சார் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளவும் அதற்கான செலவினங்களை வாங்கி பொறுப்பேற்கவும் அடிப்படையான பணிப்பாளர் சபை அங்கீகரிக்கப்பட்ட படிமுறை காணப்படுதல் வேண்டும்.<br>வங்கிக்கான தமது கடமை தொடர்பாக ஒரு பணிப்பாளர் அல்லது பணிப்பாளர்களுக்கு பொருத்தமான தொழில்சார் சுயாதீன ஆலோசனை மூலம் உதவி அளிப்பதற்கான தனியான தீர்மானத்தினை பணிப்பாளர் சபை மேற்கொள்ள வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் பிரிவு 27 கூறுகிறது, சபை தனது கடமைகளை நிறைவேற்ற, தேவைப்படும் போது சுயாதீனமான தொழில்முறை ஆலோசனையைப் பெறமுடியும். அவசியமான சூழ்நிலைகளில் வங்கியின் செலவில் பணிப்பாளர்கள் தமக்கு அவசியமான சுயாதீன தொழில்சார் ஆலோசனைகளை நியாயமான கோரிக்கையின் பேரில் பெற்றுக் கொள்வதற்கான பணிப்பாளர் சபை பட்டயம் நடைமுறையில் உள்ளது. |
| 3 (1) (xii) | பணிப்பாளர்கள் தமது, ஏனைய நிறுவனங்கள் மீதான அல்லது உறவுமுறை தரப்பினருடனான ஈடுபாடுகளில் அக்கறை முரண்பாடுகள் அல்லது அக்கறை முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய தோற்றப்பாடுகள் ஆகியவற்றை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>நியமனத்தின் போது மற்றும் வருடாந்த அடிப்படையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் போது, தமது அக்கறைகள் தொடர்பாக பணிப்பாளர்கள் பிரகடனங்களை மேற்கொள்கின்றார்கள். அக்கறை முரண்பாட்டு நிலைமை ஒன்று காணப்படும் போது அத்தகைய சூழ்நிலைகளை பணிப்பாளர்கள் கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல், தமது கருத்துக்களை வழங்குதல், அங்கீகரித்தல் ஆகிய நடவடிக்கைகளிலிருந்து தடுக்கப்படுகிறார்கள். |
| 3 (1) (xiii) | வங்கியினுடைய திசைமுகப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு ஆகியன நிலைத்த தன்மையில் தமது அதிகாரத்தின் கீழ் தொழிற்படுத்த படுவதனை உறுதி செய்யும் வகையில் பணிப்பாளர் சபை தமது தீர்மானத்துக்கு உட்பட்ட விடயங்கள் தொடர்பாக முறைசார்ந்த அட்டவணை ஒன்றினை பெறுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்குரிய உச்ச அதிகாரம் பணிப்பாளர்களிற்கு வழங்கப்பட்டுள்ளதுடன் வங்கியின் போக்கும் கட்டுப்பாடும் சபையின் அதிகாரத்தின் கீழ் உறுதியாக இருப்பதை உறுதி செய்கிறது. கடமைகளை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட வலுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையின் பட்டயம் விவரிக்கிறது. மேலும், சபை தனது கடமைகளை நிறைவேற்ற வசதியாக அமைப்புக்களையும் கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளது. |
| 3 (1) (xiv) | வங்கியானது தனது கடப்பாடுகளை நிறைவேற்ற முடியாத போது அல்லது முறிவடையும் நிலையை அடையும் போது அல்லது வைப்பாளர்கள் மற்றும் ஏனைய கடன் கொடுத்தவர்களுக்கான கொடுப்பனவுகளை நிறுத்தும் போது அல்லது அத்தகைய சாத்தியத்தன்மை ஒன்று ஏற்படும் போது பணிப்பாளர் சபை அல்லது அது தொடர்பாக பங்கு ஏதேனும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்பதாகவே இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைக்கு பொறுப்பாக உள்ள பணிப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கி தீர்ப்பனவு இயலுமையைக் கொண்டுள்ளதுடன், அத்தகை சூழ்நிலைகள் எவையும் ஆண்டுக்காலப்பகுதியில் ஏற்பட்டிருக்கவில்லை. |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (1) (xv) | மூலதன போதுமை விகிதம் மற்றும் ஏனைய பாதுகாப்பு நடவடிக்கைகளில் அடிப்படையில் சபையின் தேவைப்பாடுகளுக்கு இணக்கமான வகையில் அனைத்து மட்டங்களிலும் வங்கி போதுமான மூலதனமாக்கலை மேற்கொள்வது பணிப்பாளர் சபையினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியின் வரையறுக்கப்பட்ட இடர் ஏற்பு எல்லையினுள் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணக்கமான வகையில் செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் மூலதன போதுமை தொடர்பான விடயங்களை பணிப்பாளர் சபை கண்காணிக்கிறது. |
| 3 (1) (xvi) | இந்த கட்டளைகளின் மூன்றாவது கட்டளைக்கு அமைவாக வங்கியினுடைய ஆண்டு அறிக்கை மற்றும் வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கை ஆகியவற்றை பணிப்பாளர் சபை பிரசுரித்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>இந்த அறிக்கையானது வருடாந்த அறிக்கையில் பக்கம் 39 முதல் 91 இல் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை அறிக்கையின் ஒரு பகுதியாக அமைகிறது. |
| 3 (1) (xvii) | வருடாந்திர அடிப்படையில் ஒவ்வொரு பணிப்பாளர் ஆளும் சுயமதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அத்தகைய மதிப்பீடுகள் தொடர்பான பதிவுகள் பேணப்படுவதற்கான முறை ஒன்றினை பணிப்பாளர் சபை பின்பற்றுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியானது வருடாந்த அடிப்படையில் பணிப்பாளர்கள் மேற்கொள்ளப்படும் சுய மீளாய்வுப் படிமுறை ஒன்றினை பின்பற்றுகிறது. இதனை உறுதி செய்யும் மதிப்பீடு ஒன்றினை சபை செயலாளர் கொண்டுள்ளார். ஒவ்வொரு சபைப்பணிப்பாளரும் தனிநபரினதும் சபையினதும் செயற்திறனை மதிப்பிட சுயமதிப்பீட்டை மேற்கொண்டனர். |
| **3 (2)** | **சபையின் உள்ளடக்கம்** | |
| 3 (2) (i) | பணிப்பாளர் சபையில் உள்ள பணிப்பாளர்கள் எண்ணிக்கையானது 7க்கு குறையாத வகையிலும் 13க்கு அதிகரிக்காத வகையிலும் காணப்படுதல் வேண்டும். | தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 8(1) இன் படி தலைவர் உள்ளடங்கலாக பணிப்பாளர் சபை ஏழு பணிப்பாளர்களைக் கொண்டிருக்கின்றது. பணிப்பாளர்களது விபரம் பக்கம் 40 முதல் 44 வரை இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 3 (2) (ii) (a) | பிரதம நிறைவேற்று அதிகாரியாகவுள்ள பணிப்பாளர் ஏனைய இயக்குனர்களது பதவிக்காலம் 9 ஆண்டுகளை விட அதிகரித்தல் ஆகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>தற்போதுள்ள எந்த ஒரு பணிப்பாளரும் ஒன்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் பதவி வகிக்கவில்லை. பதவிக்காலம் இந்த ஆண்டறிக்கையில் பக்கம் 40 முதல் 44 இல் வழங்கப்பட்டுள்ளன. |
| 3 (2) (ii) (b) | 1 ஜனவரி 2008 அன்று 9 வருடங்களை பூர்த்தி செய்த இயக்குனர் ஒருவர் அல்லது 31 டிசம்பர் 2008 க்கு முன்னர் அத்தகைய காலத்தினைப் பூர்த்தி செய்யும் இயக்குனர் ஒருவர் 1 ஜனவரி 2009 க்குப் பின்னர் ஆகக் கூடுதலாக மூன்று ஆண்டுகள் மாத்திரமே பதவியில் நீடிக்க முடியும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3 (2) (iii) | நிறைவேற்று அதிகாரமுள்ள இயக்குனர்களின் எண்ணிக்கையானது பணிப்பாளர் சபையில் உள்ள மொத்த இயக்குனர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றினை விட அதிகரிக்கவில்லை என்னும் நிபந்தனையை பூர்த்தி செய்யும் பட்சத்தில் வங்கி ஊழியர் ஒருவர் பணிப்பாளர் ஒருவராக நியமிக்கப்பட, தெரிவு செய்யப்பட அல்லது பதவி வழங்கப்பட (இனி வரும் பகுதிகளில் நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர் என குறிப்பிடப்படும்) முடியும். அத்தகைய சந்தர்ப்பங்களில் நிறைவேற்று அதிகாரமுள்ள இயக்குனர்களில் ஒருவர் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக தொழிற்படுவார். | இணங்கப்பட்டுள்ளது<br>நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இன் 30 ஆம் இலக்கம் மற்றும் திருத்தங்கள் உள்ளடக்கவில்லை. |
| 3 (2) (iv) | வங்கியானது குறைந்தபட்சம் மூன்று அல்லது மொத்த பணிப்பாளர்கள் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்று, இதில் அதிகமான எண்ணிக்கையில் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருக்கும். | சபையானது ஒரு சுயதீனப் பணிப்பாளரையும் ஐந்து சுயதீனமற்ற பணிப்பாளர்களையும் கொண்டுள்ளது. ஆண்டறிக்கையின் பக்கம் 40 முதல் 44 வரை மற்றும் 53 பக்கங்களில் பணிப்பாளர் அதிகார விவரங்களை பார்க்கவும். |
| 3 (2) (v) | சுயாதீனமான இயக்குனர் ஒருவருக்கு பதிலாக ஒரு பதில் இயக்குனர் நியமிக்கப்படும் பட்சத்தில் அந்த பதிலாக நியமிக்கப்பட்டவர் சுயாதீன இயக்குனருக்கு இருக்க வேண்டிய மூல பிரமாணங்களை திருப்தி செய்திருத்தல் வேண்டும் | பொருத்தமற்றது |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (2) (vi) | நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் சீரான பெறுபேற்றுப் பதிவுகள் மற்றும் தந்திரோபாயம், பெறுபேறுகள், வளங்கள் ஆகியன தொடர்பாக சுயாதீனமான தீர்மானங்களை எடுக்க கூடிய வகையில் அவசியமான திறன்கள் மற்றும் அனுபவங்களை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>பணிப்பாளர்களின் சுயவிவரங்கள் உட்பட தேவையான தகவல்கள் பக்கம் 40 முதல் 44 வரை குறிப்பிடப்பட்டுள்ளன. |
| 3 (2) (vii) | பணிப்பாளர் சபை கூட்டம் ஒன்றுக்கு சமுகம் அளிக்கவேண்டிய ஆகக் குறைந்த எண்ணிக்கையிலான இயக்குனர்கள் சமுகமளித்து இருந்தாலும் கூட சமுகமளித்து இருக்கும் இயக்குனர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் நிறைவேற்று அதிகாரமற்ற இயக்குனர்களாக இருக்கும் பட்சத்தில் பணிப்பாளர் சபை கூட்டம் முறையாக கொண்டு நடத்தப்பட முடியாது. | இணங்கப்பட்டுள்ளது<br>தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி கூட்டம் ஒன்றுக்கான குறைந்தபட்ச வரவு எண்ணிக்கை 4. இது மொத்த பணிப்பாளர் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் அதிகமாக உள்ளது. வங்கியின் அனைத்து பணிப்பாளர்களுமே நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் ஆவர். |
| 3 (2) (viii) | நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன இயக்குனர்கள் வங்கியின் இயக்குனர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு வணிக தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பிரத்தியேகமாக அடையாளம் காட்டப்படும் | இணங்கப்பட்டுள்ளது<br>நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன இயக்குனர்கள் வங்கியின் இயக்குனர்களாக பெயர் குறிப்பிடப்பட்டு வணிக தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பிரத்தியேகமாக அடையாளம் காட்டப்படும். தலைவர், நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், சுயாதீன மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீன பணிப்பாளர்களின் பெயர்கள் உட்பட பணிப்பாளர்களின் வகையின் அடிப்படையில் சபையின் அமைப்பு பக்கம் 40 முதல் 44 இல் கொடுக்கப்பட்டுள்ளது. |
| 3 (2) (ix) | பணிப்பாளர் சபைக்கு புதிய பணிப்பாளர் நியமிப்பதற்கான முறை சார்ந்த வெளிப்படையான செயன்முறை காணப்படுதல் வேண்டும். மேலும் பணிப்பாளர் சபைக்கான நியமனத்தின் தொடர்ச்சித் தன்மைக்கான வழிமுறைகளும் காணப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் பிரிவு 8 (1) (அ) இன் படி அனைத்து பணிப்பாளர் நியமனங்களும் அமைச்சரினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி ஐந்து பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒரு பணிப்பாளர் திறைசேரியின் செயலாளராக இருப்பார் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்டவர் மற்ற பணிப்பாளர் தபால் மா அதிபர் அல்லது அவரால் பரிந்துரைக்கப்பட்டவராக இருக்க வேண்டும். |
| 3 (2) (x) | வழக்கமான வெற்றிடங்களை நிரப்புவதற்காக நியமிக்கப்படும் ஒவ்வொரு பணிப்பாளர்களும் அவர்களது நியமனத்தின் பின்னர் வரும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் வைத்து பங்குதாரர்களின் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். | தொடர்பற்றது.<br>தொடர்புபட்ட அமைச்சரினால் நியமனங்கள் மேற்கொள்ளப்படுவதனால் இப்பகுதி அவசியமற்றது. |
| 3 (2) (xi) | பணிப்பாளர் ஒருவர் பதவி விலகினால் அல்லது பதவி விலக்கப்பட்டால்: | இணங்கப்பட்டுள்ளது<br>ஒரே ஒரு பங்குதாரராக உள்ள இலங்கை அரசாங்கம் தொடர்புபட்ட, வங்கிக்கான அமைச்சர் ஊடாக பணிப்பாளர்களது நியமனங்கள் மற்றும் பதவி விலக்கல்களை மேற்கொள்கிறது. ஏதேனும் பதவி விலகல்களும் குறித்த அமைச்சரினாலே பரிந்துரைக்கப்படும். இலங்கை மத்திய வங்கிக்கு பதவி விலகல் தொடர்பில் அறிவிக்கப்படும். |
| (a) | பணிப்பாளர் சபை குறித்த பணிப்பாளர் பதவி விலகி இருக்கிறார் அல்லது அதுவும் பதலி விலக்கப்பட்டு இருக்கிறார் என்பதனை அதற்குரிய காரணங்களுடன் குறிப்பிட்டு பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டிய விடயங்கள் காணப்படுகின்றனவா இல்லையா என்பது தொடர்பான ஒரு கூற்றினை வழங்குதல் வேண்டும். | |
| (b) | பங்குதாரர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டிய ஏதேனும் விடயங்கள் தொடர்பிலான அறிக்கையினை வெளியிடல். | ஒரே ஒரு பங்குதாரராக இலங்கை அரசாங்கம் உள்ளது மற்றும் அமைச்சரினூடாக பதவிவழி பணிப்பாளர்கள் தவிர்ந்த ஏனைய ஐந்து அங்கத்தவர் கொண்ட பணிப்பாளர் சபை தொடர்பிலான மாற்றம் இடம்பெறும். |
| 3 (2) (xii) | மற்றொரு வங்கியானது இவ்வங்கியின் சேய் கம்பனியாகவோ அல்லது துணைக் கம்பனியாகவோ இல்லாதவிடத்து இயக்குனர் அல்லது ஊழியர் ஒருவர் மற்றொரு வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்படவோ, தேர்தலில் தெரிவு செய்யப்படவோ அல்லது பதவி வழங்கப்படவோ முடியாது. | 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக தேசிய சேமிப்பு வங்கி தனது பங்கு உரிமையினை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் வங்கியின் ஊழியராக உள்ள சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளரை, பிரதேச அபிவிருத்தி வங்கியின் ஒரு பணிப்பாளராக நியமித்துள்ளது தவிர வேறு எந்த பணிப்பாளர் மற்றும் ஊழியர் ஏனைய வங்கிகளில் பணிப்பாளராக நியமிக்கப்படவில்லை. |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| **3 (3)** | **பணிப்பாளர்களது தகைமை மற்றும் பொருத்தமான தன்மையினை மதிப்பீடு செய்வதற்கான மூலப் பிரமாணங்கள்** | |
| 3 (3) (i) (a), & (b) | பணிப்பாளராக பணியாற்றும் எந்த ஒரு நபரது வயதும் 70 வருடங்களுக்கு மேற்படுதலாகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>70 வயதுக்கு மேற்பட்ட எந்த ஒரு பணிப்பாளரும் காணப்படவில்லை |
| 3 (3) (ii) | எந்த ஒரு நபரும் துணை கம்பனிகள் மற்றும் சேய் கம்பனிகள் உள்ளடங்களாக 20க்கும் மேற்பட்ட உரிமங்கள் அல்லது நிறுவனங்களுக்கு பணிப்பாளராகப் பணியாற்றலாகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>சேய்க் கம்பனி மற்றும் துணைக் கம்பனிகள் உள்ளடங்கலாக 20 க்கும் மேற்பட்ட கம்பனிகள், உரிமங்கள் அல்லது நிறுவனங்களுக்கு எவரொருவரும் பணிப்பாளராக கடமையாற்றவில்லை. |
| **3 (4)** | **பணிப்பாளர் சபையினால் பகிர்ந்தளிக்கப்பட்ட முகாமைத்துவ தொழிற்பாடுகள்** | |
| 3 (4) (i) | நடைமுறையிலுள்ள பகிர்ந்தளித்தல் ஒழுங்குமுறைகளை பணிப்பாளர்கள் கவனமாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும், | இணங்கப்பட்டுள்ளது<br>பணிப்பாளர் சபை குறித்த கால இடைவெளிகளில் அதிகார பகிர்ந்தளிப்பு தொடர்பான விடயங்களில் ஆய்வுக்கு உட்படுத்தி ஏற்றுக்கொள்வதுடன் பணிப்பாளர்கள் தமது கடமைகளை சரியாக தடையேதுமின்றி நிறைவேற்றி கொள்வதுடன் அதிகாரப் பரம்பல் தொடர்பான விடயங்களிலும் உறுதிப்படுத்தல்களை மேற்கொள்கின்றனர். |
| 3 (4) (ii) | பணிப்பாளர் சபை தமது கடமைகளை ஒட்டுமொத்தமாக நிறைவேற்றுவதற்கு குந்தகமாக அல்லது பாதகம் விளைவிக்கக் கூடிய வகையில் எந்த ஒரு விடயத்தையும் சபை உபகுழுக்களுக்கோ, பிரதம நிறைவேற்று அதிகாரிக்கோ, நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளர்களுக்கோ அல்லது பிரதம முகாமைத்துவ நபர்களுக்கோ பகிர்ந்தளிக்க முடியாது. | |
| 3 (4) (iii) | பணிப்பாளர் சபை பகிர்ந்தளித்தல் போன்ற நடைமுறைகளை ஓர் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்வதுடன் அவை வங்கியின் தேவைக்குப் பொருத்தமானவையாக இருப்பதனை உறுதி செய்தல் வேண்டும். | |
| **3 (5)** | **தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி** | |
| 3 (5) (i) | தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது வகிபாகம் தனி ஒருவரால் பின்பற்றப்படுதலாகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகிய வகிபாகங்கள் இரு வேறுபட்ட நபர்களால் கையாளப்படுகின்றன. தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அல்லது பொது முகாமையாளரது பொறுப்புகளை வரையறை செய்வதற்கான பணிப்பாளர் சபை பட்டயம் காணப்படுகிறது. |
| 3 (5) (ii) | தலைவர் நிறைவேற்று அதிகாரமுள்ள பணிப்பாளராகவும் அதே வேளை சுயாதீனமானவராக இருத்தல் மிகவும் விரும்பப்படுகிறது. தலைவர் சுயாதீனமான பணிப்பாளராக உள்ள இல்லாத போதும் அவசியமான விடயங்களை ஆவணப்படுத்தி பணிப்பாளர் சபை சுயாதீனமான பணிப்பாளர் ஒருவரை சிரேஷ்ட பணிப்பாளராக நியமித்தல் வேண்டும். சிரேஷ்ட பணிப்பாளரின் நியமனம் ஆண்டறிக்கையில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>தலைவர் ஒரு நிறைவேற்று அதிகாரம் அற்ற அதேவேளை சுயாதீனமற்ற பணிப்பாளராக இருக்கின்றார். சிரேஷ்ட பணிப்பாளராக திரு எரங்க ஐயவர்தன சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் வங்கி சட்டகட்ட ளைக்கமைய நியமிக்கப்பட்டுள்ளார். |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (5) (iii) | பணிப்பாளர் சபை என்று தமது கூட்டாண்மை அறிக்கையிலே தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்றி அதிகாரி ஆகியோரது அடையாளங்கள் மற்றும் அவர்களுக்கு இடையேயான உறவு முறைகளின் இயல்பு பற்றி வெளிப்படுத்துதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது சுயவிபரங்கள் இந்த ஆண்டு அறிக்கையின் பக்கம் 55 முதல் 56 வரை வழங்கப்பட்டுள்ளன.<br>பணிப்பாளர் சபையானது பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியுடன் எந்தவித நிதி, வணிக, குடும்ப மற்றும் ஏனைய உறவுகள் இல்லை என்பதனை அறிந்திருக்கிறது. மேலும் பணிப்பாளர்களுக்குமிடையே எந்தவொரு உறவுகளும் கிடையாது. |
| 3 (5) (iv) | பணிப்பாளர் சபையின் தலைவர் பணிப்பாளர் சபை தலைமை வழங்கி பணிப்பாளர் சபை தமது பொறுப்புகளை பயனுறுதி வாய்ந்த வகையில் நிவர்த்தி செய்வதையும் பணிப்பாளர் சபை அனைத்து அவசியமான விடயங்களில் உரிய காலப்பகுதியில் பொருத்தமாக கலந்துரையாடப்படுவதையும் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>தலைவர் பணிப்பாளர் சபைக்கு தலைமை வகிப்பதுடன் பணிப்பாளர் சபையின் பொறுப்புகள் யாவும் உரிய வகையில் நிவர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்கிறார். பணிப்பாளர் சபை அனைத்து முக்கிய விடயங்களை பொருத்தமான காலப்பகுதியில் கலந்துரையாடுகிறது. |
| 3 (5) (v) | தலைவரே பணிப்பாளர் சபையின் ஒவ்வொரு கூட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி அங்கீகரிப்பதற்கான பொறுப்பினை கொண்டிருக்கிறார். | இணங்கப்பட்டுள்ளது<br>பணிப்பாளர் சபையின் செயலாளர் தலைவரின் வழிகாட்டலின் பெயரில் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கிறார். |
| 3 (5) (vi) | அனைத்து பணியாளர்களுக்கும் சபை கூட்டங்களில் எழுகின்ற விடயங்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. உரிய காலப்பகுதியில் பணிப்பாளர்கள் அவசியமான தகவல்களைப் பெற்றுக் கொள்வதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>சபைக் கூட்டங்களில் எழும் விடயங்கள் குறித்து சபைக்கு போதுமான விளக்கமும் தகவலும் அளிக்கப்படுவதை தலைவர் உறுதி செய்கிறார். அதை உறுதிப்படுத்த பின்வரும் நடைமுறைகள் உள்ளன.<br>• சபைக் கூட்டங்கள் முன்கூட்டியே திட்டமிட்டு கூட்டப்படுவதுடன், அனைத்து பணிப்பாளர்களும் அவசியமான விடயங்களை மீளாய்வு செய்வதற்கு மற்றும் மேலதிக தகவல்களை கோருவதற்கும் கூட்டங்களின் பின்னர் அவசியமான பின்தொடரலை மேற்கொள்வதற்கும் அவசியமாக ஒவ்வொரு கூட்டங்களுக்கும் குறைந்தபட்சம் ஒரு வாரம் முன்பதாக கூட்ட ஆவணங்கள் சுற்றுநிருபம் செய்யப்படுகின்றன.<br>• தேவைப்படும் போது பிரதம முகாமைத்துவ நபர்களால் விடயங்கள் தெளிவுபடுத்தல். |
| 3 (5) (vii) | அனைத்து பணிப்பாளர்களும் பணிப்பாளர் சபை விடயங்களில் ஆரோக்கியமான பங்களிப்பினை மேற்கொள்வதுடன் வங்கியின் சிறந்த அக்கறையுடன் செயற்படுவதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது |
| 3 (5) (viii) | தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களுடைய பயனுறுதி வாய்ந்த பங்களிப்பினை உறுதி செய்வதுடன் நிறைவேற்று அதிகாரமுள்ள மற்றும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களிடையே இந்த உறவு முறை ஒன்று காணப்படுவதனை உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>முழுமையான பணிப்பாளர் சபையும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை கொண்டுள்ளது. |
| 3 (5) (ix) | பிரதம முகாமைத்துவ நபர்கள் மற்றும் நிறைவேற்று உறுப்பினர்கள் தொடர்பான நேரடியான மேற்பார்வை விடயங்களில் தலைவர் ஈடுபடுதல் ஆகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற பதவி நிலையில் செயற்படுவதுடன் பிரதம முகாமைத்துவ நபர்களது செயற்பாடுகளின் மேற்பார்வையிலோ அல்லது ஏதேனும் நிறைவேற்று செயற்பாடுகளிலோ ஈடுபடுவதில்லை. |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (5) (x) | பங்குதாரர்களுடன் பயனுறுதி வாய்ந்த தொடர்பாடலை மேற்கொள்வதற்கான அவசியமான படிமுறைகள் மேற்கொள்ளப்படுவதுடன் பங்குதாரர்கள் கருத்துக்கள் பணிப்பாளர் சபைக்கு தொடர்பாடல் செய்யப்படுவதனை தலைவர் உறுதி செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கி பங்குதாரருடன் அதாவது இலங்கை அரசுடன் பயனுள்ள தகவல்தொடர்புகளை வைத்திருக்கிறது.<br>தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணக்கமாக பதவிவழிப் பணிப்பாளர் நியமிக்கப்பட்டு, சபை மற்றும் பங்குதாரர்களுக்கு இடையிலான தகவல்தொடர்பு ஊடகமாக செயல்படுகிறார். |
| 3 (5) (xi) | வங்கி ஊழியர்கள் மற்றும் வணிகம் தொடர்பான விடயங்களில் நிறைவேற்றும் பொறுப்பில் உச்ச அதிகாரத்தில் பிரதம நிறைவேற்று அதிகாரி உள்ளார். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியின் அன்றாட நடவடிக்கைகள் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன.<br>சபையானது பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரிக்கு உள்ள அதிகாரங்களை குறிப்பாக விளக்குகிறது. |
| **3 (6)** | **பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் குழுக்கள்** | |
| 3 (6) (i) | இந்த கட்டளைகளில் வழங்கப்பட்டுள்ள கட்டளைகள் இலக்கம் 3(6)(ii), 3(6)(iii), 3(6)(iv) மற்றும் 3(6)(v) ஆகியவற்றுக்காக ஒவ்வொரு வங்கியும் குறைந்த பட்சம் நான்கு சபை குழுக்களை கொண்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவும் பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கை இடவேண்டும். அனைத்து குழுக்களும் செயலாளர் ஒருவரை நியமித்தல் வேண்டும் | இணங்கப்பட்டுள்ளது<br>சபையானது ஏழு சபைக்குழுக்களை நிறுவியுள்ளதுடன் அவற்றுள் ஆறு சபைக்குழுக்கள் எழுதப்பட்ட குறிப்பு விதிமுறைகளுடன் நிறுவப்பட்டுள்ளது. சபை சந்தைப்படுத்தல் உபயமார்க்க குழுவினது எழுதப்பட்ட குறிப்பு விதிமுறைகள் தயாரிக்கும் பணியில் உள்ளது. நான்கு சபைக் குழுக்கள் (சபை கணக்காய்வுக் குழு, சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, சபை நியமனக் குழு, சபை மனிதவளம் மற்றும் ஊதியங்கள் குழு) 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வங்கிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலதிக மூன்று சபைக் குழுக்களும் வங்கியின் வணிக தேவைகளை பூர்த்தி செய்ய நிறுவப்பட்டுள்ளன. அனைத்து சபைக் குழுக்களும் சபைத் தலைவர்கள் ஊடாக சபைக்கு அறிக்கை செய்கின்றன. ஏனைய மேலதிக மூன்று சபைக் குழுக்களும் பெப்ரவாரி 8, 2021 முதல் அமுலுக்கு வரும் வகையில் இரத்து செய்யப்பட்டுள்ளன. இவற்றின் பரப்பெல்லையானது ஏனைய நான்கு கட்டாய சபைக் குழுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.<br>சபை சந்தைப்படுத்தல் உபயமார்க்க குழு தவிர்ந்த அனைத்து சபைக்குழுக்களுக்கும் சபையின் செயலாளர் செயலாளராக பணியாற்றி சபைக்குழு கூட்டங்களை ஏற்பாடு செய்து, கூட்டக்குறிப்புகள், பதிவுகளை சபை குழுத்தலைவர்களின் மேற்பார்வையின் கீழ் பராமரிக்கின்றார். பிரதிப் பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல், நிர்வாகம் மற்றும் மீட்பு) சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்க குழுவின் செயற்பாட்டு கூட்டங்களை ஏற்பாடு செய்து கூட்டக்குறிப்புகளை பராமரிக்கின்றார். சபைக்குழுக்களின் அறிக்கைகள் பக்கம் 78 முதல் 91 வரையான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் ஆண்டறிக்கையானது ஒரே ஒரு பங்குதாரரான இலங்கை அரசிற்கு, இலங்கை பாராளுமன்றத்திற்கும் வங்கிக்கு பொறுப்பான அமைச்சிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. |
| 3 (6) (ii) | கணக்காய்வு குழு தொடர்பாகப் பின்வரும் விதிகள் பிரயோகிக்கத் தக்கதாகும். | |
| 3 (6) (ii) (a) | குழுவின் தலைவர் கணக்கியல் மற்றும் கணக்காய்வு விடயங்களுடன் போதுமான தராதரங்கள் மற்றும் அனுபவத்தினை கொண்ட ஒரு சுயாதீனமான நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளராக இருத்தல் வேண்டும். | சபை கணக்காய்வு குழுவின் தலைவர் நிறைவேற்று அதிகாரமற்ற சுயாதீனமற்ற பணிப்பாளர் ஆவார். சபை கணக்காய்வு குழுவின் தலைவர் தேவையான தராதரங்கள் மற்றும் அனுபவங்களை கொண்டிருக்கிறார். தலைவரது விபரம் பக்கம் 42 இல் கொடுக்கப்பட்டுள்ளது. |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (6) (ii) (b) | குழுக்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக இருத்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியின் அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் எனவே குழுக்களில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாவார். |
| 3 (6) (ii) (c) | பின்வரும் விடயங்கள் தொடர்பாக குழு பரிந்துரைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்: | |
| | (i) பொருத்தமான சட்டங்களுக்கு அமைவான விதத்தில் கணக்காய்வு சேவையினை வழங்குவதற்கான வெளிவாரி கணக்காய்வாளர் நியமனம்<br>(ii) காலத்துக்கு காலம் மத்திய வங்கியினால் கணக்காய்வாளருக்கு வழங்கப்படும் வழிகாட்டல்களினை நடைமுறைப்படுத்தலைப் பிரயோகித்தல்.<br>(iii) கணக்கீட்டு நியமங்கள் அமுலாக்கல்<br>(iv) சேவைக் காலம், கணக்காய்வு கட்டணம், கணக்காய்வாளரது பதவி விலகல் அல்லது பதவி விலக்குதல் ஆகியன கணக்காய்வாளருடைய நியமனம் ஐந்து வருடத்துக்கும் ஏற்படாத வகையில் காணப்படுவதுடன் முன்னைய காலம் முடிவடைந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அதே கணக்காய்வு பங்காளர் மீண்டும் பணிக்கு அமர்த்தப் படவில்லை என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும். | தேசிய சேமிப்பு வங்கி சட்டத்தின்படி வங்கியின் கணக்கு ஆய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி நியமிக்கப்பட்டுள்ளார் ஆகையால் சபைக்குழுவிற்கு வெளிவாரி கணக்காய்வாளர் நியமனத்தில் எந்தவித பங்கும் இல்லை.<br>சபை கணக்காய்வுக் குழுவானது குறிப்பு விதிமுறைகளின் படி ஏனையோருக்கு கீழ்வரும் பரிந்துரைகளை வழங்குகின்றது:<br>• மத்திய வங்கியினால் கணக்காய்வாளர்களிற்கு வழங்கப்பட்ட அறிவுரைகளை அமுல்படுத்தல்.<br>• தொடர்புடைய கணக்கீட்டு நியமங்களை பிரயோகித்தல். |
| 3 (6) (ii) (d) | கணக்காய்வுக் குழுவானது வெளிவாரி கணக்காய்வாளரது சுயாதீனத் தன்மை, பக்கம் சாராத்தன்மை மற்றும் நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவான வகையில் கணக்காய்வு செயன்முறைகளில் பயனுறுதி வாய்ந்த தன்மை ஆகியவற்றில் ஆய்வு மற்றும் கண்காணிப்பு செய்தல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதியே வெளிவாரி கணக்காய்வாளராக காணப்படுவதனால் சுயாதீனத் தன்மை மற்றும் சாரா தன்மை ஆகியன காணப்படுகின்றது. சபையின் கணக்காய்வு குழு கூட்டங்களில் கணக்காய்வு செயன்முறையின் பயனுறுதி வாய்ந்த தன்மையானது அரசாங்க கணக்காய்வு மேலதிகாரியுடன் கலந்துரையாடப்படுகிறது. |
| 3 (6) (ii) (e) | கணக்காய்வு தவிர்ந்த பிற சேவைகளை வழங்குவதற்காக வெளிவாரி கணக்காய்வாளர் பயன்படுத்துவதற்கான கொள்கை ஒன்று குழுவினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | தொடர்பற்றது<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வாளராக காணப்படுகிறார். எனினும் சபையின் கணக்காய்வு குழு சட்டத்துக்கு அமைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றொரு கணக்காய்வாளரை நியமிக்கும் போது அந்த கணக்காய்வு நிறுவனத்தின் சுயாதீனத் தன்மை, பக்கம் சாரா தன்மை அல்லது பயனுறுதி தன்மை பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும். 2020 ஆம் ஆண்டின் கணக்காய்விற்காக மெர்ஸர்ஸ் எர்னஸ்ட் மற்றும் யங் நியமிக்கப்படனர். |
| 3 (6) (ii) (f) | கணக்காய்வு ஆரம்பிப்பதற்கு முன்பதாக குழுவானது கணக்காய்வின் இயல்பு மற்றும் பரப்பெல்லை ஆகிய விடயங்களை கலந்துரையாடி முடிவு செய்யும். | தொடர்பற்றது<br>வெளிவாரி கணக்காய்வாளர் என்ற வகையில் கணக்காய்வின் பரப்பெல்லை மற்றும் விஸ்தீரணம் ஆகியன கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தீர்மானிக்கப்படும். |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (6) (ii) (g) | வங்கியின் நிதிக் கூற்றுக்கள், ஆண்டு அறிக்கைகள், கணக்குகள் வெளிப்படுத்தல்களுக்காக தயாரிக்கப்படும் காலாண்டு அறிக்கைகள், முக்கிய நிதி அறிக்கைகள், தீர்ப்புகள் ஆகியவற்றின் ஒழுங்குமுறை தன்மையை கண்காணிப்பதற்காக குழுவானது வங்கியின் நிதி சார்ந்த தகவல்களை மறு ஆய்வுக்கு உட்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது<br><br>கணக்காய்வு குழுவானது வெளிப்படுத்தல் நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட காலாண்டு நிதிக்கூற்றுக்கள் மட்டும் ஆண்டறிக்கை ஆகியன பிரசுரத்துக்குத் தயாரான நிலையில் மீளாய்வுக்கு உட்படுத்தியது. ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் உள்ளக கணக்காய்வு பிரிவானது முக்கிய நிதி அறிக்கைகள் தீர்ப்புகள் கணக்கீட்டு கொள்கை மாற்றங்கள் ஆகியன உள்ளடங்கலான வேறுபாடுகளை இனங்கண்டு கணக்காய்வு குழுவுக்கு தனியானதொரு அறிக்கையினை வழங்கும்.<br><br>மேற்கூறிப்படவைக்கமைவாக சபை கணக்காய்வுக் குழுவானது சபைக்கு தேவையான நிமித்தம் பரிந்துரைகள் மேற்கொள்ளும். |
| 3 (6) (ii) (h) | இடைக்கால கணக்காய்வு மற்றும் இறுதி கணக்காய்வு ஆகியவற்றுக்கு இடையே ஏற்படும் ஒதுக்கங்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக சபையின் கணக்காய்வு குழு கலந்துரையாடும். இத்தகைய குழு கூட்டங்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதிகள் பங்குபெறுகிறார்கள். | இணங்கப்பட்டுள்ளது<br><br>இடைக்கால மற்றும் இறுதி கணக்காய்வு ஆகியவற்றிடையே ஏற்படக்கூடிய பிரச்சனைகள் மற்றும் ஒதுக்கீடுகள் ஆகியவை தொடர்பாக கணக்காய்வாளர் கலந்துரையாடலுக்காக உள்ளடக்க விரும்பும் விடயங்கள் தொடர்பாகவும் குழு கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி அனைத்துக் கூட்டங்களிலும் கலந்துகொண்டுள்ளார். |
| 3 (6) (ii) (i) | குழுவானது கணக்காய்வாளரது முகாமைத்துவ கடிதம் மற்றும் அதற்கான முகாமைத்துவத்தின் பதில்கள் ஆகியவற்றை மீளாய்வுக்கு உட்படுத்தும். | இணங்கப்பட்டுள்ளது<br><br>சபையின் கணக்காய்வு குழுவானது வெளிவாரி கணக்காய்வாளரது அறிக்கையினை நிதியியல் சட்டத்தின் பிரிவுகள் 14 (2) (c) மற்றும் 13 (7) (a) ஆகியவற்றுக்கு அமைவாக ஆய்வு செய்த முகாமைத்துவத்தின் பதில்களையும் கவனத்தில் எடுக்கிறது. |
| 3 (6) (ii) (j) | வங்கியின் உள்ளகக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக பின்வரும் படிமுறைகளை குழு மேற்கொள்ளுதல் வேண்டும்: | |
| | (i) உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளங்கள் ஆகியவற்றின் போதுமான தன்மையை மீளாய்வுக்கு உட்படுத்தி, திணைக்களம் தனது கடமைகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை கொண்டுள்ளமையை திருப்தி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது<br><br>2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு திட்டமானது குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது உள்ளகக் கணக்காய்வின் நோக்கெல்லை, தொழிற்பாடுகள் மற்றும் வளத் தேவைப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. |
| | (ii) உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம், உள்ளக கணக்காய்வு செயன்முறைகளின் விளைவுகள் ஆகியன தொடர்பாக மீளாய்வுகளை மேற்கொள்வதுடன் தேவையான போது, உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை உறுதி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது<br><br>உள்ளகக் கணக்காய்வின் திட்டம், மற்றும் செயன்முறைகளின் விளைவுகள் ஆகியவற்றை மீளாய்வு செய்துள்ளதுடன், பரிந்துரைகள் தொடர்பான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை உறுதி செய்கிறது. |
| | (iii) உள்ளக கணக்காய்வு திணைக்களத் தலைவர், சிரேஷ்ட ஊழியர்கள் ஆகியோரது பெறுபேறுகளை மீளாய்வு மற்றும் மதிப்பீடு செய்கிறது. | இணங்கப்பட்டுள்ளது<br><br>பிரதான உள்ளக கணக்காய்வாளரது செயற்திறன் மதிப்பீடு மற்றும் உள்ளக கணக்காய்வு செயற்பாட்டின் முடிவுகளின் மதிப்பீடு என்பன சபை கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படும். பிரதான உள்ளக கணக்காய்வாளரால் சிரேஷ்ட பணியாளர்களினது செயற்திறன் மதிப்பீடானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு முறைக்கமைவாக மேற்கொள்ளப்பட்டு சபைகணக்காய்வுக் குழுவிற்கு காட்சிப்படுத்தப்படும். 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| | (iv) உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் தலைவர், சிரேஷ்ட ஊழியர்கள் மற்றும் வெளிவாரி ஒப்பந்த சேவை வழங்குனர்களது நியமனம் மற்றும் விலகல் ஆகியன தொடர்பாக பரிந்துரைகளை வழங்குதல். | இணங்கப்பட்டுள்ளது.<br>ஆண்டுக்காலப்பகுதியில் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கவில்லை. |
| | (v) பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒப்பந்தப் புற சேவை வழங்குனர் ஆகியோர் உள்ளடங்கலாக, உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் சிரேஷ்ட ஊழிய உறுப்பினர்களது பதவி விலகல் தொடர்பாக குழு மதிப்பாய்வுகளை மேற்கொள்வதுடன், பதவிவிலகும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் ஒப்பந்தப் புற சேவை வழங்குனர் முதலிய சிரேஷ்ட ஊழிய உறுப்பினர்கள் தமது பதவிவிலகலுக்கான காரணத்தை சமர்ப்பிக்கவும் உதவுதல். | இணங்கப்பட்டுள்ளது.<br>ஆண்டுக்காலப்பகுதியில் அத்தகைய சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கவில்லை. |
| | (vi) உள்ளக கணக்காய்வு செயற்பாடு என்பதை உறுதி செய்யவும் தாம் கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமாக உள்ளதுடன், அது பாரபட்சமற்ற முறையில், தொழில்சார் திறமை மற்றும் போதுமான கவனம் ஆகியவற்றுக்கு இணக்கமாக செய்யப்படுவதனை உறுதி செய்தல். | இணங்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் ஆளுகைக் கட்டமைப்பின் படி, பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு) நேரடியாக சபை கணக்காய்வு ஊடாக சபைக்கு அறிக்கையிடுவதுடன், வங்கியின் நடவடிக்கைகளில் இருந்து சுயாதீனமாக உள்ளார். |
| 3 (6) (ii) (k) | உள்முக விசாரணைகள் மற்றும் கணக்காய்வு மூலமான முக்கிய கண்டறிதல்கள் மற்றும் அவற்றுக்கான முகாமையின் பதிலளிப்புகள் ஆகியவற்றை குழு பரிசீலிக்க வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>உள்முக விசாரணைகள் மற்றும் கணக்காய்வு மூலமான முக்கிய கண்டறிதல்கள் மற்றும் அவற்றுக்கான முகாமையின் பதிலளிப்புகள் ஆகியவற்றை சபை கணக்காய்வுக் குழு மீளாய்வு செய்துள்ளது.<br>அத்தகைய விசாரணைகளின் பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டன என்பதையும் உறுதி செய்கிறது. |
| 3 (6) (ii) (l) | பிரதம நிதி அதிகாரி, பிரதம உள்ளக் கணக்காய்வாளர் மற்றும் வெளிவாரிக் கணக்காய்வாளரது ஒரு பிரதிநிதி ஆகியோர் பொதுவாக கூட்டங்களுக்கு வருவார்கள். குழுவானது குறைந்தது இரண்டு கூட்டங்களையாவது நிறைவேற்று பணிப்பாளர்கள் இன்றி, வெளிவாரிக் கணக்காய்வாளர்களுடன் நடாத்தியுள்ளது. | இணக்கப்பட்டுள்ளது.<br>பிரதிநிதி பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதி ஆகியோர் பொதுவாக கூட்டங்களுக்கு வருவார்கள்.<br>2020 ஆம் ஆண்டில் ஆறு கூட்டங்கள் நடைபெற்றன. கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் பிரதிநிதி ஆறு கூட்டங்களுக்கு வருகை தந்திருந்தார். |
| 3 (6) (ii) (m) | குழுவானது பின்வருவனவற்றைக் கொண்டிருக்க வேண்டும்:<br>(i) அதன் பரப்பெல்லைக்கு உட்பட்ட எந்தவொரு விடயத்திலும் வெளிப்படையான விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரம்.<br>(ii) அவ்வாறு செய்வதற்கு வேண்டிய வளங்கள்<br>(iii) தகவல்களுக்கான முழுமையான அணுகல் மற்றும்<br>(iv) வெளிவாரி தொழில்முறை அறிவுரையைப் பெறும் மற்றும் தேவைப்பட்டால், தொடர்புடைய அனுபவமுடைய வெளிவாரி பங்கேற்க அழைக்கும் அதிகாரம். | இணக்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் சபையின் கணக்காய்வுப் பட்டயத்தின் படி:<br>• குழுவானது எந்தவொரு விடயத்தையும் விசாரிக்கும் அதிகாரம்<br>• அதன் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதற்கான வளங்கள்<br>• தகவலுக்கான அணுமை மற்றும்<br>• தேவைப்படின், தொழில்முறை ஆலோசனை பெறும் அதிகாரம் மற்றும் வெளியிலிருந்து அனுபவமுடையவர்களை அழைக்க அதிகாரம் கொண்டுள்ளது<br>குழு அறிக்கையின் பக்கம் 78 முதல் 79 வரை பார்க்கவும். |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (6) (ii) (n) | விவாதிக்க வேண்டிய விடயங்கள் மற்றிய போதிய முன்னறிவித்தலுடன், குழு வழக்கமாக, சந்திக்க வேண்டும். அத்துடன், அதன் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் அதன் முடிவுகளைப் பதிவு செய்தல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>சபைக் கணக்காய்வுக் குழு வழக்கமான கூட்டங்களை நடாத்தியது. மேலதிகமாக கூட்டங்கள் தேவைப்படும் போது ஒழுங்குபடுத்தப்படுகிறது.<br>ஆண்டுக்காலப்பகுதியில் குழு ஆறு முறை சந்தித்துள்ளதுடன் கூட்ட அறிக்கைகள் பராமரிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களுக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தொடர்பில் நியாயமான அறிவித்தல் வழங்கப்பட்டதுடன், அதன் முடிவுகள் சபை செயலாளரினால் பதிவு செய்யப்பட்டுள்ளன. |
| 3 (6) (ii) (o) | குழுவானது தகவலளிக்கும் முறையில் பின்வருவனவற்றை வெளிப்படுத்தும்:<br>(i) கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள் பற்றிய விவரங்கள்<br>(ii) ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற கணக்காய்வுக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை, மற்றும்<br>(iii) ஒவ்வொரு கூட்டங்களுக்குமான தனித்தனி பணிப்பாளர்கள் வருகை பற்றிய விடயங்கள் | இணக்கமாகவுள்ளது.<br>பக்கம் 78 முதல் 79 வரை சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் பின்வருவனவற்றைப் பார்வையிடுக:<br>• சபை கணக்காய்வுக் குழுவின் நோக்கம்.<br>• 2020 ஆண்டு காலத்தில் நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை<br>• ஒவ்வொரு பணியாளர்களின் கூட்டங்களுக்கான வருகை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. |
| 3 (6) (ii) (p) | குழுவின் செயலாளரே கம்பனியின் செயலாளராக அல்லது உள்ளக கணக்காய்வு தலைவராக தொழிற்படுவதுடன் குழுவின் கூட்டங்கள் தொடர்பான விபரமான அறிக்கைகள் பேணப்பட வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது.<br>சபையின் செயலாளரே குழுவின் செயலாளராக இருப்பதுடன் கூட்ட அறிக்கைகள் பேணப்படுகின்றன. |
| 3 (6) (ii) (q) | நிதி அறிக்கையிடல், உள்ளக கட்டுப்பாடு அல்லது பிற விடயங்கள் தொடர்பான இரகசியமான முறையில், ஊழியர்களால் சாத்தியமான முறைகேடுகள் காரணமாக வினா எழுப்புவதற்கான முறைமையினை குழு மீளாய்வு செய்தல வேண்டும். அந்த வகையில் அத்தகைய விடயங்கள் தொடர்பான சுயாதீனமான விசாரணை மற்றும் பொருத்தமான பின்தொடரல்கள் ஆகியவற்றுடன் வெளிவாரிக் கணக்காய்வாளர் மற்றும் வங்கியுடனான உறவுமுறைகளை மேற்பார்வை செய்வதற்கான முக்கிய பிரதிநிதியாக தொழிற்படுவதனை உறுதி செய்யும். | இணங்கப்பட்டுள்ளது.<br>இத்தகைய அம்சங்களை உள்ளடக்கி வங்கியானது சபையால் அங்கீகரிக்கப்பட்ட மோசடி இடர் முகாமைத்துவம் மற்றும் தகவல் தெரிவிக்கும் (whistle – Blowing) கொள்கையை நடைமுறைப்படுத்தியுள்ளது. பொருத்தமான பின்தொடர் நடவடிக்கைகளுக்காக, முக்கியமான கண்டுபிடிப்புக்கள் சபை கணக்காய்வுக் குழுவுக்கு அறிக்கையிடப்படுகின்றன.<br>வங்கியின் ஊழியர்களால் எழுப்பப்படும் எந்தவொரு கேள்விக்கும், சுயாதீனமான மற்றும் நடுநிலையான விசாரணையை நடாத்துவதற்கும் பொருத்தமான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பொருத்தமான செயன்முறை மற்றும் அளவீடுகள் காணப்படுகின்றன.<br>சபை கணக்காய்வுக் குழுவானது வெளியகக் கணக்காளருடனான வங்கியினது உறவினை மேற்பார்வை செய்வதற்கான பிரதானமான பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கமாகும். |
| 3 (6) (iii) | சபையின் மனிதவள மற்றும் சம்பளக் குழுக்கள் தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கத் தக்கதாக உள்ளது. | |
| 3 (6) (iii) (a) | வங்கியின் பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களது சம்பளம் தொடர்பான கொள்கை (சம்பளங்கள், படிகள் மற்றும் பிற நிதிசார் கொடுப்பனவுகள்) ஒன்றினைத் தீர்மானிக்கும். | பணிப்பாளர்களது சம்பளம் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 பிரிவு 10 மற்றும் அதன் திருத்தங்களின் படி அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகிறது. பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய நபர்கள் ஆகியோரது சம்பளம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பணிப்பாளர் சபையின் மனித வள மற்றும் சம்பளக் குழுவினால் தீர்மானிக்கப்படுகிறது |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (6) (iii) (b) | பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்கள் ஆகியோருக்கான இலக்குகளை குழு தீர்மானிக்கும். | இணக்கப்பட்டுள்ளது.<br>தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 பிரிவு 8 மற்றும் அதன் திருத்தங்களின் படி அனைத்து பணிப்பாளர்களும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களாக அமைச்சரினால் நியமிக்கப்படுவதனால் இது பணிப்பாளர்களுக்கு பொருத்தமற்றது.<br>பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முகாமைத்துவ நபர்களது இலக்குகள் தந்திரோபாய வணிக திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு பிரதான பெறுபேற்றுக் குறிகாட்டிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு உருவாக்கப்படுகின்றன. |
| 3 (6) (iii) (c) | குழுவானது ஒழுங்கான கால அடிப்படையில் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களது இலக்குகளுக்கு எதிராக ஆய்வு செய்தல் வேண்டும். அத்துடன் சம்பளங்கள், நன்மைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவு அடிப்படையிலான ஊக்குவிப்புகள் ஆகியவற்றினை மீளாய்வு செய்வதற்கான அடிப்படையினை உருவாக்குதல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமைத்துவ நபர்களது செயற்திறன் மதிப்பீடானது சபையினால் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் செயற்திறன் மதிப்பீட்டிற்கான அளவுகோல்களுக்கமைய இடம்பெறும். |
| 3 (6) (iii) (d) | பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்படும் போது தவிர, ஏனைய சந்தர்ப்பங்களில் பிரதம நிறைவேற்று அதிகாரி குழுவின் கூட்டங்களுக்கு வருகை தர வேண்டும் | இணக்கப்பட்டுள்ளது<br>பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி தொடர்பான அனைத்து விடயங்களும் விவாதிக்கப்படும் போது தவிர சபையின் அனைத்து கூட்டங்களிளும் கலந்து கொள்வர் |
| 3 (6) (iv) | சபையின் நியமனக் குழு தொடர்பாக பின்வரும் விதிமுறைகள் பிரயோகிக்கத் தக்கதாக உள்ளது. | |
| 3 (6) (iv) (a) | புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்களின் தெரிவு அல்லது நியமனம் தொடர்பான கொள்கை ஒன்றினை குழு நடைமுறைப்படுத்தல் வேண்டும். | அமைச்சரினால் ஐந்து பணிப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள், மற்ற இரண்டு பணிப்பாளர்களும் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி பதவி வழிப் பணிப்பாளர்கள், அமைச்சரினாலேயே நியமிக்கப்படுகிறார்கள்.<br>பிரிவு 11 - பணிப்பாளர் சபையின் ஒரு பணிப்பாளரை தலைவராக அமைச்சர் நியமிப்பார்.<br>பிரிவு 26 - பணிப்பாளர் சபையானது தகமையான, பொருத்தமான ஒருவரை பொது முகாமையாளராக நியமிக்க அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் தொழிற்படுவார்.<br>முக்கிய முகாமை நபர்கள் நியமன விடயங்கள் இணக்கமாக உள்ளது. பணிப்பாளர் சபையானது, சபையின் நியமனக் குழுவின் பரிந்துரையின் பேரில் முக்கிய முகாமை நபர்களை நியமிக்கும். |
| 3 (6) (iv) (b) | தற்போதைய பணிப்பாளர்களின் மீள் தேர்தலை குழுவானது கருத்திற் கொள்ளும் (அல்லது கருத்திற் கொள்ளாதுவிடும்). | பொருத்தமற்றது.<br>தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் படி ஐந்து பணிப்பாளர்கள் அமைச்சரினாலும் மேலும் இரண்டு பதவிவழி பணிப்பாளர்களும் நியமிக்கப்படுகிறார்கள். |
| 3 (6) (iv) (c) | பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்கள் பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவி உயர்வுக்கான தகமை மூலப்பிரமாணங்களை குழு உருவாக்குதல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் 1971 இல 30 மற்றும் அதன் திருத்தங்களின் படி, பணிப்பாளர் சபையின் இணங்கப்பட்ட நடைமுறையுடன் பொது முகாமையாளர் நியமிக்கப்படுகின்றார். பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட, முக்கிய முகாமை நபர்கள் பதவிக்கு தகமை பெறுவதற்கான மூலப்பிரமாணங்களைக் குறிப்பிடும் பதவியுயர்வுக் கொள்கையானது நடைமுறையில் உள்ளது. |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (6) (iv) (d) | இக் கட்டளைகளின் கட்டளை 3 (3) மற்றும் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவான முறையில், பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் முக்கிய முகாமை நபர்கள் ஆகியோர் தமது பதவிகளுக்கு தகைமையானவர்களாகவும் பொருத்தமானவர்களாகவும் இருப்பதனை குழு உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>பணிப்பாளர்கள் மற்றும் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியோரது ஒப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசிகள் மற்றும் பிரகடனங்கள் ஆகியன சபை செயலாளரினால் பெறப்பட்டு, அதே ஆவணங்கள் பிரதம முகாமை நபர்களிடமிருந்து மனிதவள அபிவிருத்திப் பிரிவினால் சேகரிக்கப்பட்டு தகைமை மற்றும் பொருத்தமான தன்மையை மதிப்பிட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்படும். |
| 3 (6) (iv) (e) | காலத்துக்குக் காலம் குழுவானது இளைப்பாறும் பணிப்பாளர்கள் மற்றும் பிரமத முகாமை நபர்கள் ஆகியோரது தொடர்ச்சித் தன்மை ஏற்பாடுகளுக்கான மேலதிக அல்லது புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகளை கருத்தில் கொள்ளும். | இணக்கப்பட்டுள்ளது.<br>தலைவர், பணிப்பாளர்கள் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆகியவர்களது நியமன விடயங்கள் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிரதம முகாமை நபர்களது நியமனங்கள் சபையின் நியமனக் குழுவின் பரிந்துரைகளின் பேரில், பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்படும். |
| 3 (6) (iv) (f) | குழுவானது ஒரு சுயாதீன பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்படுதல் வேண்டும். | குழுவானது சுயாதீனமற்ற நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்படுகின்றது. |
| 3 (6) (v) | சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழு | |
| 3 (6) (v) (a) | குழுவானது இடர் வகைகளை மேற்பார்வை செய்யும் குறைந்தபட்சம் மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் பிரமத முகாமை நபர்களைக் கொண்டிருக்கும். | இணங்கப்பட்டுள்ளது.<br>குழுவானது மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களையும், பொது முகாமையாளர், பிரதான இடர் அதிகாரி, இடர் முகாமைக்கு பொறுப்புடையவரையும் உள்ளடக்கியுள்ளது. அதாவது கடன் இடர் முகாமை, சந்தை மற்றும் திரவத் தன்மை இடர் முகாமை மற்றும் தொழிற்பாட்டு இடர் மற்றும் மூலோபாய இடர்.<br>இணக்க உத்தியோகத்தர் அனைத்து கூட்டங்களுக்கும் அழைக்கப்படுவார். ஏனைய பிரமத முகாமை நபர்கள் மற்றும் ஊழியர்கள் தேவைக்கு ஏற்ப அழைக்கப்படுவர். சபையானது பிரமத முகாமை நபர்களுடன் அவர்களது அதிகாரம் மற்றும் பொறுப்புக்கள் அடிப்படையில் நெருக்கமாக பணிபுரிகிறது. |
| 3 (6) (v) (b) | குழுவானது வங்கியின் இடர்கள் அதாவது, கடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாட்டு மற்றும் தந்திரோபாய இடர்கள் ஆகியவற்றை மாதாந்த அடிப்படையில் பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத் தகவல் முறைமை ஊடாக மதிப்பிடும். சேய்க் கம்பனிகள் மற்றும் துணைக் கம்பனிகளுக்கு, இடர் முகாமைத்துவமானது வங்கி மட்டத்திலும் குழு மட்டத்திலும் மேற்கொள்ளப்படும். | இணக்கப்பட்டுள்ளது.<br>கடன் இடர் முகாமை, சந்தை மற்றும் திரவத்தன்மை இடர் முகாமை மற்றும் தொழிற்பாட்டு இடர் முகாமை ஆகியன சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் பரிந்துரையின் பேரில் சபையினால் அங்கீகரிக்கப்படும். இடர் முகாமைப் பிரிவு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர் ஏற்பு எல்லையின் அடிப்படையில் வங்கி மற்றும் குழு அடிப்படையில் இடர் குறிகாட்டிகளில் மாதாந்த அறிக்கைகளை சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவின் ஊடாக சபைக்கு மாதாந்த அடிப்படையில் அறிக்கையிடும். |
| 3 (6) (v) (c) | குழுவானது பிரத்தியேகமான அளவுசார் மற்றும் பண்புசார் இடர் மட்டங்களை கடன் குழு மற்றும் சொத்துப் பரிப்புக் குழு முதலிய அனைத்து முகாமை மட்டக் குழுக்களுக்கும் மீளாய்வு செய்து இடர் குறிகாட்டிகளை காலரீதியாக அறிக்கையிடுதல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>சபையானது கடன் குழு போன்ற முகாமைத்துவ மட்ட குழுக்களின் அறிக்கைகளை ஆய்வு செய்யும். முதலீட்டு குழு மற்றும் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ குழு இடர்களை முகாமை செய்வதற்கான பண்பு மற்றும் வினைத்திறனினை ஆராயும் மற்றும் காலரீதியாக அறிக்கையிடப்படும் இடர்கள் முகாமை செய்யப்படுதலை உறுதிப்படுத்தும்.<br>சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைக் குழுவினால் அனைத்து முகாமை மட்ட இடர்களை முகாமை செய்வதற்கான பண்பு மற்றும் வினைத்திறன் வருடாந்தம் ஆய்வு செய்யப்படும். |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (6) (v) (d) | குழுவானது பிரத்தியேகமான இடர்களின் விளைவுக்கு பொருத்தமான திருத்த நடிவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>ஒழுங்குமுறை மற்றும் கொள்கை நிலை தேவைகளின் அடிப்படையில் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட இடர் நிலையின் போது சபைக்குழுவானது சபைக்கு விளைவுகளை உடனடியாக திருத்த தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை பரிந்துரை செய்யும். |
| 3 (6) (v) (e) | குழுவானது பிரத்தியேக இடர்களைக் குறைக்கும் வகையில் குறைந்தபட்சம் காலாண்டுக்கு ஒருமுறையேனும் கூடுதல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>முடிந்த ஆண்டின் போது குழு ஐந்து கூட்டங்களைக் கூட்டியிருந்தது. கூட்டங்கள் மற்றும் சமுகமளித்தோர் தொடர்பான விபரங்கள் பக்கம் 84 இல் வழங்கப்பட்டுள்ளன. |
| 3 (6) (v) (f) | குழுவினால் அல்லது வங்கி மேற்பார்வைகளுக்குப் பொறுப்பாக பணிப்பாளர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட பிரத்தியேகமான இடர்களுக்குப் பொறுப்பானவர்கள் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாத போது குழுவானது பொறுப்பான அதிகாரிகள் மீது பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். | இணக்கப்பட்டுள்ளது.<br>அத்தகைய பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வங்கி ஒழுங்கு நடவடிக்கை நடைமுறையை நிறுவியுள்ளது. ஆண்டுக்காலத்தில் அதற்கான தேவை ஏற்பட்டிருக்கவில்லை. |
| 3 (6) (v) (g) | குழுவானது பணிப்பாளர் சபைக்கு ஒவ்வொரு கூட்டமும் முடிவடைந்து ஒரு வாரத்தினுள் பிரத்தியேகமான விடயங்களில் பணிப்பாளர் சபையின் ஆலோசனைகளுக்காக இடர் மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்கும். | இணக்கப்பட்டுள்ளது.<br>இடர் முகாமைத்தவ அறிக்கை மற்றும் பரிந்துரைகளுடன் கூட்டம் தொடர்பான விபரமான அறிக்கை அடுத்துவரும் சபைக் கூட்டத்தில் சமர்பிக்கப்படும். |
| 3 (6) (v) (h) | குழுவானது வங்கியின் தொடர்புபட்ட சட்டம், ஒழுங்குவிதி முறைகள், ஒழுங்குவிதி கட்டளைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்யும் இணக்கப்பாட்டு செயன்முறை ஒன்றினை உருவாக்குதல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>தொழிற்பாட்டுப் பகுதிகளில் வங்கியின் தொடர்புபட்ட சட்டம், ஒழுங்குவிதி முறைகள், ஒழுங்குவிதி கட்டளைகள், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுக்கு இணக்கமான தன்மையினை உறுதி செய்யும் இணக்கப்பாட்டு செயன்முறை ஒன்றினை உருவாக்கியுள்ளது. இத்தொழிற்பாடானது அர்ப்பணிப்பான இணக்கப்பாட்டு அலுவலர் ஒருவருக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. அவர் காலரீதியான அடிப்படையில், சபையின் ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு, கணக்காய்வுக் குழு மற்றும் சபைக்கு அறிக்கையிடுவார். |
| **3 (7)** | **தொடர்புபட்ட தரப்பினர் ஊடுசெயல்கள்** | |
| 3 (7) (i) | எந்தவொரு நபருடனும் தொடர்புபடும் எந்தவொரு ஊடுசெயல் தொடர்பிலும் அக்கறை முரண்பாடுகள் எழாமையை உறுதி செய்யும் படிமுறைகளை சபை உருவாக்குதல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புபட்ட தரப்பினர், அவர்களது ஊடுசெயல்கள் மற்றும் பணிப்பாளர் சபையின் அக்கறை முரண்பாடுகளை நீக்கும் வகையில் மிகச் சாதகமான அணுகுமுறைகளை உறவுமுறைத் தரப்பினருக்கு வழங்குவதைத் தவிர்க்கும் வரையறைகள் ஆகியன உள்ளிட்ட தொடர்புபட்ட தரப்பினர் ஊடுசெயல் கொள்கையானது நடைமுறையில் உள்ளது.<br>பணிப்பாளர்கள் தனித்தனியாக தமது தொடர்புபட்ட தரப்பின் ஊடுசெயல்கள் தொடர்பாக வெளிப்படுத்துமாறு கோரப்படுகின்றனர். இத்தகைய ஊடுசெயல்கள் தன்னியக்கமான முறை ஒன்றின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. |

# கூட்டாண்மை ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (7) (ii) | இக் கட்டளையில் தொடர்புபட்ட தரப்பினர் தொடர்பான ஊடுசெயல்கள் வகைகள் உள்ளடக்கப்படல் வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>சபையால் அங்கீகரிக்கப்பட்ட தொடர்புபட்ட தரப்பினர் பரிவர்த்தனைக் கொள்கை பினவரும் பரிவர்த்தனைகளை உள்ளடக்கியது:<br>• நாணய சபை வரையறுத்துள்ள படி அதிகபட்ச இடவசதிகளை வழங்குதல்.<br>• வைப்பு, கடன் மற்றும் முதலீடு வடிவத்தில் வங்கியில் எந்தவொரு பொறுப்புகளை உருவாக்குதல்.<br>• நிதி அல்லது நிதி சாராத எந்தவொரு சேவையையும் வங்கிக்கு வழங்குதல் அல்லது பெறுதல்.<br>• வங்கி மற்றும் எந்தவொரு தொடர்புடைய தரப்பினருக்கும் இடையில் அறிக்கையிடல் மற்றும் தகவல் தொடர்புகளை உருவாக்குதல் அல்லது பராமரித்தல். இது அத்தகைய தொடர்புடைய கட்சிகளுக்கு நன்மை தரக்கூடிய ரகசிய அல்லது உணர்திறன் வாய்ந்த தகவல்களைப் பகிர வழிவகுக்கும்.<br>இது தொடர்பான தகவல் குறிப்பு 49.5 “தொடர்புபட்ட தரப்பினர்” இல் பக்கம் 239 இல் வழங்கப்பட்டுள்ளது. |
| 3 (7) (iii) | மேலே கட்டளை 3 (7) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, வங்கியானது ஊடுசெயல்களில் ஈடுபடும் பிற தரப்பினரை விட உறவுமுறைத் தரப்பினருக்கு “மிக சாதகமான கையாள்கை” வழங்கப்படவில்லை என்பதை இணங்கும் வகையில் உறவுமுறைத் தரப்பினருடன் ஊடுசெயல்களில் ஈடுபடவில்லை என உறுதி செய்ய வேண்டும். | இணக்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் தொடர்புபட்ட நபர் ஊடுசெயல் கொள்கையானது, தொடர்புபட்ட நபர்களுக்கு மிகச் சாதகமான கையாள்கை ஏனைய வாடிக்கையாளர்களை விட வழங்கப்படுவதனை தடுக்கிறது.<br>அத்தகைய ஊடுசெயல்களை அடையாளம் காட்டும் வகையில் இயக்குநர்களிடமிருந்து வருடாந்த வெளிப்படுத்தல்கள் பெறப்படுகின்றன. வங்கியானது ஊடுசெயல்களில் ஈடுபடும் பிற தரப்பினரை விட உறவுமுறைத் தரப்பினருக்கு “மிக சாதகமான கையாள்கை” வழங்கப்படவில்லை என்பதை காலரீதியாக அடையாளம் காண்பதற்கான முறைமைகள் செயற்பாட்டில் உள்ளன.<br>வழக்கமான முறையில் உறவுமுறைத் தரப்பினருடன் இடம்பெற்ற ஊடுசெயல்கள் நிதிக் கூற்றுக்களின் “தொடர்புபட்ட தரப்பினர்” குறிப்பு 49.5 பக்கம் 239 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |
| 3 (7) (iv) | ஒரு வங்கி எந்தவொரு இயக்குனர்களுக்கோ அல்லது அத்தகைய இயக்குனர்களின் நெருக்கமான உறவினருக்கோ ஒரு வசதியளித்தல் பணிப்பாளர் சபையினால் கருத்தில் கொள்ளப்படும் பணிப்பாளர் தவிர்ந்த, மூன்றில் இரண்டு பங்கான பணிப்பாளர்கள் சாதகமாக வாக்களித்து அங்கீகரிக்கப்படாதவிடத்து, அத்தகைய வசதியளித்தல் ஒன்றை வழங்குதல் ஆகாது. | இணங்கப்பட்டுள்ளது<br>அத்தகைய நிகழ்வுகள் இவ்வாண்டில் பதிவு செய்யப்படவில்லை. |
| 3 (7) (v) (a) | ஒரு நபருக்கு அல்லது அவரது நெருக்கமான உறவினருக்கு அல்லது அத்தகை நபர் கணிசமான அக்கறையைக் கொண்டுள்ள ஏதேனும் கருதுபொருள்களுக்கு ஏதேனும் வசதிகள் வழங்கப்பட்டு, அத்தகைய நபர் பிற்பட்ட காலங்களில் வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டால், அவர் பணிப்பாளராக நியமிக்கப்பட்டு ஒரு வருட காலப்பகுதியினுள் நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அவசியமான பிணையினை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் வங்கியினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது<br>சபையின் செயலாளர் பணிப்பாளர்களை ஆட்சேர்க்க முன் அவர்களிடமிருந்து வெளிப்படுத்தலினை பெறுவதோடு அவர்கள் ஏதேனும் மேலதிக கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்த வேண்டும்.<br>நாணய சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அவசியமான பிணையினை பெற்றுக் கொள்வதற்கான தேவைப்பாடுகள் பற்றி வங்கி ஊழியர்கள் அறிந்துள்ளனர்.<br>இணங்கல் பிரிவு அதன் செயன்முறையினை மேற்பார்வை சட்டத்தின் படி மேற்பார்வை செய்யும். |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (7) (v) (b) | கட்டளை 3 (7) (v) மேற்குறிப்பிட்டவாறு பாதுகாப்பு வழங்கப்படாதவிடத்து, வங்கியானது குறித்த தங்கியிருத்தலுக்கான பணம் மற்றும் அதற்கான வட்டி ஏதேனுமிருப்பின் அவற்றை வழங்கும் போது குறிப்பிட்ட நேரத்தில் அல்லது பணிப்பாளர் பதவி ஏற்றதிலிருந்து 18 மாதம் என்பவற்றுள் முன்னரான திகதியில் மீளப்பெற தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | |
| 3 (7) (v) (c) | மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்காத பணிப்பாளர்கள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து நீக்கப்படுவதுடன் அது தொடர்பில் வங்கி பொது மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். | |
| 3 (7) (v) (d) | இந்த உப கட்டளையானது, தங்கியிருத்தல் வசதி வழங்கப்படும் போது வங்கியின் ஊழியராக இருந்து மற்றும் வங்கியினால் ஊழியருக்கு வழங்கப்படும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பணிப்பாளர்களுக்கு பொருந்தாது. | |
| 3 (7) (vi) | வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்படத்தக்கதான அடிப்படையில் அமைந்த திட்டம் ஒன்று தவிர்ந்த ஏனைய வசதிகளை அல்லது "மிக சாதகமான கையாள்கையை" வங்கி வழங்குதல் ஆகாது. | இணங்கப்பட்டுள்ளது.<br>வங்கியின் ஊழியர்களுக்கு வழங்கப்படத்தக்கதான அடிப்படையில் அமைந்த திட்டம் ஒன்று தவிர்ந்த ஏனைய வசதிகள் ஊழியருக்கு வழங்கப்படவில்லை. வங்கி ஊழியர்கள் சுற்றுநிருபம் மூலம் வங்கியின் ஏனைய ஊழியருக்கு அல்லது நெருக்கமான உறவுகளுக்கு மிக சாதகமான கையாள்கையை மேற்கொள்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| 3 (7) (vii) | கட்டளை 3 (7) (v) மற்றும் 3 (7) (vi) ஆகியவற்றின் படி வங்கியினால் எந்தவாரு வசதியளித்தல்களும் அல்லது அது தொடர்பான வட்டிகளும் நாணய சபையின் முன் அனுமதியின்றி மேற்கொள்ளப்படலாகாது. அத்துடன், அத்தகைய அனுமதியின்றிய மாற்றல்கள் பெறுமதியற்றவையாகவும் செல்லுபடியற்றவையாகவும் இருக்கும். | இணங்கப்பட்டுள்ளது.<br>அத்தகைய நிகழ்வுகள் இவ்வாண்டில் பதிவு செய்யப்படவில்லை. |
| **3 (8)**<br>3 (8) (i) | **வெளிப்படுத்துகை**<br>சபையானது பின்வருவனவற்றை உறுதி செய்தல் வேண்டும். | |
| 3 (8) (i) (a) | வருடாந்த கணக்காய்வு செய்யப்பட நிதிக் கூற்றுக்கள் மற்றும் காலாண்டு நிதிக்கூற்றுக்கள் யாவும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதி அமைப்புக்களினால் பரிந்துரைக்கப்பட்ட பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான வடிவில் தயாரித்து முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. | இணங்கப்பட்டுள்ளது |
| 3 (8) (i) (b) | அத்தகைய கூற்றுக்கள் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட வேண்டும். | இணங்கப்பட்டுள்ளது |

# கூட்டாண்மை
# ஆளுகை

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (8) (ii) | சபையானது பின்வரும் குறைந்தபட்ச வெளிப்படுத்தல்களை ஆண்டறிக்கையில் வெளிப்படுத்த வேண்டும். | |
| 3 (8) (ii) (a) | வருடாந்த கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் மற்றும் விசேட வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலான ஒழுங்குவிதி தேவைப்பாடுகளுக்கு இணங்கமாக தயாரிக்கப்பட்டுள்ளன என்னும் கூற்று. | இணங்கப்பட்டுள்ளது<br>வருடாந்த கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதிக் கூற்றுக்கள் யாவும் மேற்பார்வை மற்றும் ஒழுங்குவிதி அமைப்புக்களினால் பரிந்துரைக்கப்பட்ட பொருத்தமான கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவான வடிவில் தயாரித்து முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான வெளிப்படுத்தல் பக்கம் 123 மற்றும் 124 இல் "நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர் பொறுப்பு" மற்றும் "பொது முகாமையாளர் மற்றும் சிரேʻட பிரதி பொது முகாமையாளர் (நிதி மற்றும் திட்டமிடல்) பொறுப்பு பற்றிய கூற்று" பக்கம் 128 முதல் 129 இல் தரப்பட்டுள்ளது. |
| 3 (8) (ii) (b) | வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரித் தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிமுறை தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பன தொடர்பாக நியாயமான உறுதிப்பாட்டை வழங்கும் வகையில் வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையானது உறுதி செய்கிறது என்பது தொடர்பான பணிப்பாளர் சபையின் அறிக்கை. | இணங்கப்பட்டுள்ளது<br>வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமையானது நிதி அறிக்கையிடலின் நம்பகத்தன்மை மற்றும் வெளிவாரித் தேவைகளுக்கான நிதிக் கூற்றுக்கள் பொருத்தமான கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிமுறை தேவைப்பாடுகளுக்கு இணக்கமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்தனை ஆண்டிறிக்கையின் பின்வரும் அறிக்கைகள் உள்ளடக்குகின்றன:<br>• பணிப்பாளர்களது ஆண்டறிக்கை பக்கம் 117 முதல் 122 வரை.<br>• நிதி அறிக்கையிடலுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று பக்கம் 123 முதல் 124<br>• நிதி அறிக்கையிடல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு பற்றிய கூற்று பக்கம் 125 முதல் 126 |
| 3 (8) (ii) (c) | 31 டிசம்பர் 2008 இன் பின்னர் தயாரித்துப் பிரசுரிக்கப்பட் எந்தவொரு கூற்றுக்கள் தொடர்பான மேலே 3(8)(ii)(b) இல் குறிப்பிட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதி தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்துகை. | இணங்கப்பட்டுள்ளது<br>பக்கம் 125 முதல் 126 இலுள்ள உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீனமான உறுதிப்படுத்தல் அறிக்கையினைப் பார்வையிடுக. |
| 3 (8) (ii) (d) | பணிப்பாளர்களது விபரங்கள்:<br>1. பெயர்கள், தகைமை மற்றும் பொருத்தமான தன்மை உள்ளடங்கலாக<br>2. வங்கியுடனான ஊடுசெயல்கள் மற்றும்<br>3. வங்கியால் செலுத்தப்பட்ட மொத்த கட்டணங்கள் அல்லது சம்பளங்கள் | இணங்கப்பட்டுள்ளது<br>பணிப்பாளர்களது விபரங்கள் பக்கம் 40 முதல் 44 இல் வழங்கப்பட்டுள்ளது.<br>பக்கம் 239 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.<br>பக்கம் 239 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |
| 3 (8) (ii) (e) | மொத்த நிகர தங்கியிருத்தல் என்பது ஒவ்வொரு உறவுமுறைத் தரப்பினருக்கும் உரிய வகையில் 3(7)(iii) இல் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.<br>ஒவ்வொரு உறவுமுறைத் தரப்பினருக்கும் மொத்த நிகர தங்கியிருத்தலானது என்பது உரிய வகையில் வங்கியின் ஒழுங்குமுறை மூலதன வீதாசாரத்தின் படி வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டுள்ளது<br>ஒவ்வொரு உறவுமுறைத் தரப்பினருக்கும் மொத்த நிகர தங்கியிருத்தலானது என்பது உரிய வகையில் வங்கியின் ஒழுங்குமுறை மூலதன வீதாசாரத்தின் படி பக்கம் 239 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5.3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |
| 3 (8) (ii) (f) | பிரதம முகாமை நபர்களுக்கு வங்கியினால் செலுத்தப்பட்ட மொத்த சம்பளப் பெறுமதி மற்றும் பிரதம முகாமை நபர்களுக்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட ஊடுசெயல்களின் மொத்தப் பெறுமதி, சம்பளங்கள் என்னும் பரந்த வகையினுள் உள்ளடக்கப்படல். | இணங்கப்பட்டுள்ளது<br>பக்கம் 239 இல் உள்ள நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 49.5.1 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. |

| பிரிவு | கோட்பாடு | 2020 இல் இணக்கத்தன்மை மட்டம் |
|---|---|---|
| 3 (8) (ii) (g) | வருடாந்த கூட்டாண்மை ஆளுகை அறிக்கைகளில் உள்ள கட்டளைகள் தொடர்பான வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்தல் | இணங்கப்பட்டுள்ளது<br>வெளிவாரிக் கணக்காய்வாளரது சான்றுப்படுத்தலானது நிறுவன கூட்டாண்மை கட்டளை இல 12,2007 இல் பெறப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்கள் அனைத்து கண்டுபிடிப்புகளும் கூட்டாண்மை ஆளுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 3 (8) (ii) (h) | பாதுகாப்புத் தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடனான இணக்கப்பாடுகள் மற்றும் ஏதேனும் பொருண்மையான இணக்கப்பாடின்மைக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் ஆகியன பற்றிய விபரத்தை வழங்கும் ஓர் அறிக்கை. | இணங்கப்பட்டுள்ளது<br>நிதி அறிக்கையிடல் தொடர்பிலான பணிப்பாளர் பொறுப்பு பக்கம் 123 முதல் 124 வரையில் பாதுகாப்புத் தேவைப்பாடுகள், ஒழுங்குவிதிகள், சட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடனான இணக்கப்பாடுகள் மற்றும் ஏதேனும் பொருண்மையான இணக்கப்பாடின்மைக்காக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் ஆகியன பற்றிய விபரத்தை வழங்குகிறது. |
| 3 (8) (ii) (i) | வங்கியின் இடர் முகாமைத்துவம் தொடர்பான குறைபாடுகள், இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வைக்கான பணிப்பாளரினால் குறித்துக் காட்டப்பட்டு, அத்தகைய விடயங்கள் நாணய சபையினால் பொது மக்களுக்கு வெளிப்படுத்தமாறு பணிக்கப்பட்டு இருப்பின், அத்தகைய விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திருத்த நடவடிக்கைகள் உள்ளடங்கலான ஒழுங்குவிதி மற்றும் மேற்பார்வை கூற்று ஒன்று. | தொடர்பற்றது.<br>இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை இயக்குனரால் சுட்டிக்காட்டப்பட்ட இவ் வழிகாட்டல்கள் தொடர்பில் வங்கியின் இடர் முகாமைத்துவம் சம்பந்தமான தோல்விகளோ அல்லது இணங்கியொழுகாமை தொடர்பான எவ்வித குறைகளும் இல்லை. ஆகையால், நாணய சபையானது குறித்த ஆண்டில் பொதுமக்களிற்கான எவ்வித வெளிப்படுத்தல்களையும் வழங்குவதற்கு அறிவுறுத்தவில்லை.<br>ஆண்டுக் காலத்தின் போது எந்தவொரு விடயத்தையும் வெளிப்படுத்துமாறு நாணய சபை பணித்திருக்கவில்லை. |
| 3 (9) | நிலைமாறுகை மற்றும் ஏனைய பொதுவான ஏற்பாடுகள். | இணக்கமாகவுள்ளது.<br>வங்கி பொருத்தமான நிலைமாறுகை மற்றும் ஏனைய பொதுவான ஏற்பாடுகளுடன் இணங்கியுள்ளது. |

வுயடிடந 15

**2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கூட்டாண்மை ஆளுகை கட்டளைகளின் இணக்கப்பாட்டுத் தேவைப்பாடுகள்**

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கட்டளைகள் தொடர்பான கூட்டாண்மை ஆளுகை விதிகளுடன் இணக்கப்பாடாகும் வகையில், இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை தொடர்புபட்ட சேவைகளுக்கான நியமம் 4400 - நிதித் தகவல்கள் தொடர்பான உடன்பாடான சேவைகளின் நிறைவேற்றம் நியமத்தின் அடிப்படையில் வெளிப்படுத்தப்பட்ட கோட்பாடுகளுக்கு இணங்கி கணக்காய்வாளர் நாயகம் செயன்முறைகளை மேற்கொண்டு இருக்கின்றார். அவரால் 2021 ஏப்ரல் 9 திகதியிடப்பட்டு வழங்கப்பட்ட அறிக்கையின் கண்டறிதல்கள் மேலே வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களிலிருந்து பொருண்மையான வகையில் வேறுபட்டு இருக்காததுடன், மேலே பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்ட அறிக்கையில் இருந்து முக்கியமான அளவில் விலகலடைந்து இருக்கவில்லை.



**அனுபமா முகாந்திரம்**
சபை செயலாளர்



**கேசிலா ஜயவர்தன**
தலைவர்

2021 ஏப்ரல் 9
கொழும்பு

# சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

## குழுவின் அமைப்பு

### 2020 இல்

ஏழு பணிப்பாளர்களைக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்களைக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான 1995ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் உப பிரிவான பிரிவு 8 (i) இன் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டள்ளது. குழுவின் உறுப்பினர்கள் பணிப்பாளர் சபைக் குழுவில் பணிபுரிவதற்கு அவசியமான தராதரங்கள், தேர்ச்சி, மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளனர்.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபையின் கணக்காய்வுக் குழு கீழ்வரும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது:



**திருமதி மனோஹரி அபயசேகர**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

பணிப்பாளர் சபையின் கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 40 இருந்து 44 வரை வழங்கப்பட்டுள்ளன.

### 2021 இல்

சபையின் கணக்காய்வுக் குழு கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற தற்போதைய பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது:

**திருமதி. மனோஹரி அபேயசேகர**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எச் கே டி லக்க்ஷமன் காமினி**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்**
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர், நிதி மற்றும் திட்டமிடல் செயற்பாட்டின் மேற்பார்வைக்கு பொறுப்பானவர்.

பிரதிப் பொது முகாமையாளர் (கணக்காய்வு)

**குழுவின் செயலாளர்**
குழுவின் செயலாளர் சபைக் கணக்காய்வுக் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

**கூட்டங்கள்**

| பெயர் | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|
| திருமதி மனோஹரி அபயசேகர | 06 | 06 |
| கலாநிதி எம் கே சி சேனாநாயக்க | 06 | 06 |
| திரு எம் ரி ஜே பெரேரா | 05 | 05 |

2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் குழுவானது ஆறு கூட்டங்களை நடாத்தியதுடன் சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயத்துக்கு அமைவாக குழுவின் ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) மூன்றில் இரண்டாகும்.

கணக்காய்வுக் கண்காணிப்பு அதிகாரி - தேசிய கணக்காய்வு அலுவலகம் கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதியாக அழைப்பின் பேரில் ஆறு சபைக் கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களில் பார்வையாளராக கலந்து கொண்டது. சபைக் கணக்காய்வுக் குழு தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு கண்காணிப்பு அதிகாரியுடன் இரண்டு சிறப்பு கலந்துரையாடல்களை நடத்தியது. இக் கூட்டங்களில் சபைக் கணக்காய்வுக் குழு உறுப்பினர்கள், கணக்காய்வு கண்காணிப்பு அதிகாரி - தேசிய கணக்காய்வு அலுவலகம் மற்றும் பணிப்பாயர் சபைச் செயலாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அழைப்பின் பேரில் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி அடங்கிய வங்கியின் சிரேஷ்ட முகாமைத்தவத்தினர் தேவை அடிப்படையில், அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொண்டனர்.

# சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

## சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட சபைக் கணக்காய்வுக் குழுவின் பட்டயம் ஒழுங்காக புதுப்பிக்கப்பட்டதுடன், (மூன்று வருடத்திற்கு ஒரு தடவை) குழுவின் குறிப்புகளின் நியதியைத் தெளிவாக வரையறுக்கின்றது. வங்கித்துறையில் ஏற்பட்ட புதிய முன்னேற்றங்களைக் கருத்தில் கொண்டு 2018 ஆம் ஆண்டில் குழுவின் பட்டயம் இறுதியாக மீளாய்வு செய்யப்பட்டது.

உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகை மீதான 2007 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிப்புரைகளின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் சிறந்த ஆளுகைக்கான அரச தொழில் முயற்சிகளின் ஏற்பாடுகளுக்கமைய வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட பணிப்புரையின் பிரிவு 3(6)(ii) இற்கு அமைய அரச தொழில் முயற்சிகளின் சிறந்த ஆளுகைக்கான ஏற்பாடு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட "நிறுவன ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை" என்பவையும் அதன் தொடர்ச்சியான திருத்தங்களாகும்.

குழுவானது, தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் பின்வரும் மேற்பார்வை பொறுப்புகளை நிறைவேற்றுவதிலும் பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது:

1. வங்கியின் நிதிக் கூற்றுகள் நேர்மையானதாகயிருத்தல்
2. வங்கியின் இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் செயற்திறனுடையதாக இருத்தல்
3. வங்கியின் உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டு செயலாற்றுகை மற்றும்
4. வங்கியின் வெளியகக் கணக்காய்வுச் செயற்பாட்டு செயலாற்றுகை

குழு அதன் நடவடிக்கைகள் குறித்து குழு நேரடியாக, அதன் கூட்ட அறிக்கைகளுடன் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுகிறது. சபைக் கணக்காய்வுக் குழு அகக் கணக்காய்வு, வெளிவாரிக் கணக்காய்வு மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கு இடையேயான திறந்த தொடர்பாடல்களைப் பேணுகிறது. குழுவின் செயற்பாட்டுப் பரப்பெல்லை நியதிகள் (TOR) அனைத்து பொருண்மைமிக்க அம்சங்களிலும் இணங்கப் பட்டுள்ளன எனக் குழு கருதுகிறது.

## 2020 இன் போதான செயற்பாடுகள்

2020 ஆண்டு காலத்தினுள் குழு பின்வரும் செயற்பாடுகளில் கலந்து கொண்டது:

- 2020 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுத் திட்டத்தை அங்கீகரித்தது
- முகாமைக் கடிதங்கள் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதற்கான முகாமையின் பதிலளித்தல்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்தது.
- அகக் கணக்காய்வு அறிக்கைகளை (விரிவான கிளைக் கணக்காய்வுகள், தலைமை அலுவலகப் பிரிவுகளின் கணக்காய்வு, திடீர் கணக்காய்வுகள் மற்றும் அகக் கணக்காய்வுப் பிரிவுக்கு சபை அல்லது சபைக் கணக்காய்வுக் குழுவினால் வழங்கப்பட்ட விசேட ஒப்படை பணிகள்) மீளாய்வு செய்தது. அதே பிரச்சினைகள் மீண்டும் எழுவதைத் தவிர்ப்பதற்கான மேலதிக வழிகாட்டுதலும் குழுவால் வழங்கப்பட்டுள்ளது.
- வரைவு நிதிக் கூற்றுக்களை (காலாண்டு மற்றும் ஆண்டு தோறும்) மீளாய்வு செய்து, பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்தது
- விரிவான கணக்காய்வுகளின் அடிப்படையில் கிளைகளின் இடர் வகைப்படுத்தலை மீளாய்வு செய்தது.
- வணிக தொடர்ச்சித் தன்மைத் திட்டத்தின் மீதான கணக்காய்வு
- வங்கிக்குள்ளே இடம்பெற்ற பாரிய மோசடி நடவடிக்கைகள் குறித்து கவனம் செலுத்துதல் மற்றும் அவற்றுக்கு உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கான வங்கியின் செயற்பாடுகளின் நகர்வைப் பின்தொடரல்.
- வளப் பயன்பாட்டு கணக்காய்வுகளின் அறிக்கைகளை மீளாய்வு செய்தல்
- அனைத்து அம்சங்களிலும் ஒருமைப்பாடு மற்றும் ஒழுக்கத்தை பராமரிக்க வழிகாட்டும் ஒளியை வழங்கும் இலஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் எதிர்ப்பு கொள்கை உள்ளிட்ட முக்கிய கொள்கை விடயங்களை மீளாய்வு செய்தது
- வங்கிக்கு ஏற்பட்ட இழப்பைப் பதிவழிப்பு செய்வதற்கான பரிந்துரை

குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட வழக்கமான அறிக்கைகளின் வடிவங்கள் குறித்து குழு மேலும் விசேட கவனம் செலுத்தியதுடன், அதன் வடிவம் மற்றும் உள்ளடக்கத்தை மேம்படுத்துவதன் அவசியத்தையும் குறிப்பிட்டது. முன்னேற்றத்திற்கான வழிகாட்டல்களும் அந்தந்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு தொற்றுநோய் நிலையைக் கருத்தில் கொண்ட குழு, கொவிட்-19 தொற்றுநோயின் விளைவாக எழுந்த சவால்களை எதிர்கொள்ள செயலுக்கமான நடவடிக்கைகளை எடுப்பதற்காக சிரேஷ்ட அதிகாரிகளை உள்ளடக்கிய ஒரு விசேட பணிக்குழுவை அமைப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது.

## குழு மதிப்பீடு

குழு ஆண்டுதோறும் குழுவின் செயல்திறனை மதிப்பீடு செய்வதுடன், முடிவுகள் சபைக்கு தொடர்பாடல் செய்யப்படுகின்றன. குழுவின் செயல்திறன் மதிப்பீடு சாசனத்தின் சோதனைப் பட்டியல் மற்றும் சுய மதிப்பீட்டு வழிகாட்டி அடிப்படையில் நடத்தப்பட்டது.

குழு 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டை, சுய மதிப்பீட்டைக் கொண்டு நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டு செயன்முறை மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்பட்ட போது, அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**மனோஹரி அபேயசேகர**

தலைவர்
சபைக் கணக்காய்வுக் குழு

19 மார்ச் 2021
கொழும்பு

# சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் அறிக்கை

## குழுவின் அமைப்பு

**2020 இல்**

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு பின்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது:



**திருமதி கேசிலா ஜயவர்தன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர
(17 ஜனவரி 2020 முதல் 22 ஏப்ரல் 2020 வரை/28 அக்டோபர் 2020 முதல்)

**கலாநிதி திரான் த சில்வா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(09 அக்டோபர் 2020 வரை)

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(22 ஏப்ரல் 2020 முதல் 28 அக்டோபர் 2020 வரை)

**திரு எரங்க ஜயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(28 அக்டோபர் 2020 முதல் 08 ஜனவரி 2021 வரை)

சபையின் சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 40 இருந்து 44 வரை வழங்கப்பட்டுள்ளன.

**2021 இல்**

தற்போதைய சபையின் மனித வளங்களும் ஊதியங்களும் குழு கீழ்வரும் மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது:

**திருமதி.கேசிலா ஜயவர்தன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர

**திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எச் கே டி லக்கூஷமன் காமினி**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்**
பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரியுடன் தொடர்புடைய விடயங்கள் கலந்துரையாடப்படும் சந்தர்ப்பங்கள் தவிர்த்து, பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அதிகாரி குழுவுக்கு தகவல்கள் வழங்குவதுடன், அனைத்து குழுக் கூட்டங்களிலும் கலந்துக்கொள்வார்

பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவள அபிவிருத்தி) மற்றும் வங்கியின் சிரேஷ்ட முகாமைத்தவத்தின் தேவை அடிப்படையில், அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்வார்.

**குழுவின் செயலாளர்**
குழுவின் செயலாளர் சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் செயலாளராக செயற்படுகின்றார்.

**கூட்டங்கள்**
குழுக் கூட்டங்கள் தேவை அடிப்படையில் காலாண்டுக்கு ஒரு முறை நடாத்தப்படுவதுடன், அதன் அடிப்படையிலேயே கூட்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் ஆறு (06) கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் குழுவின் ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் பட்டயப்படி மூன்றில் இரண்டாகும். இவ்வாண்டில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு.

இவ்வாண்டில் வருகை தந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பெயர் | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|
| திருமதி கேசிலா ஜயவர்தன | 06 | 06 |
| திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன | 01 | 01 |
| கலாநிதி திரான் த சில்வா | 05 | 05 |
| திரு எம் ரி ஜே பெரேரா | 05 | 05 |
| திரு எரங்க ஜயவர்தன | 00 | 00 |

## சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் பட்டயம்

சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழுவானது திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 ஓ (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையின் பிரிவு 03 (06) (i) மற்றும் (iii) இன் ஏற்பாடுகளின் நியதிப்படி சபை உருவாக்கப்பட்டது. இக்குழு பணிப்பாளர் சபைக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன் குழுக் கூட்டங்களின் நடவடிக்கைகள் நேரடியாக பணிப்பாளர் சபைக்கு கிரமமாக அறிவிக்கப்படும்.

## குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

பட்டயத்தின்படி, குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- கூட்டு உடன்படிக்கையினால் தீர்மானிக்கப்பட்ட ஊதியங்கள் தவிர வங்கியின் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினருக்கான ஊதியக் கொள்கையைத் (சம்பளங்கள், சம்பளப் படிகள் மற்றும் ஏனைய நிதிக் கொடுப்பனவுகள்) தீர்மானித்தல் குழுவின் பொறுப்பாகும்.
- குழுவானது, பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினருக்கான குறிக்கோள் மற்றும் இலக்குகளை ஏற்படுத்தியுள்ளது.
- மேலும், காலத்துக்கு காலம் ஏற்படுத்தப்பட்ட இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு எதிராக பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்தவ ஆளணியினரின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்வதுடன்
- செயலாற்றுகை அடிப்படையிலான ஊக்குவிப்புக்களான ஊதியம், நன்மைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளைத் திருத்தியமைக்கும் அடிப்படையையும் தீர்மானிக்கின்றது.

சிரேஷ்ட நிறைவேற்று மட்டத்திலான அலுவலர்களுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் காணப்பட்ட போதிலும் குழுவானது அனைத்து முக்கியமான மனித வளக் கொள்கைகள், முன்னெடுப்புகள், சம்பள அமைப்புக்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்கினற்து. இச் செயன்முறையில் தேவைப்படும் தகவல் மற்றும் பரிந்துரைகள் ஆகியன பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன.

## 2020 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள்

- ஊழியர்களின் பதவி உயர்வு, ஒழுக்காற்று விடயங்கள், பயிற்சி மற்றும் ஊழியர் விருத்தி குறித்த முடிவுகளை அடைதல்
- 2020 ஆம் ஆண்டிற்கான வங்கியின் மனிதவளத் திட்டத்தை முடிவு செய்தல்
- வங்கியின் அடுத்தடுத்த திட்டத்தின் தேவை குறித்து கவனம் செலுத்துதல்
- 2020 ஆம் ஆண்டிற்கான பயிற்சியளித்தல் திட்டத்திற்கான ஒப்புதல்
- அடையாளம் காணப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டங்களுக்கான திருத்தம்
- அடையாளம் காணப்பட்ட பிரிவுகளுக்கான கட்டமைப்பு மாற்றங்கள்
- தற்போதுள்ள பதவியுயர்வுத் திட்டங்களை மீளாய்வு செய்ய முகாமையை வழிநடாத்தல்
- வங்கியின் தற்போதைய இடமாற்றக் கொள்கையை மீளாய்வு செய்ய முகாமையை வழிநடாத்தல்
- திரும்பி வரும் முடிவு நிறுத்தப்படும் வரை அங்கீகரிக்கப்பட்ட ஊதியமற்ற விடுப்பில் வெளிநாட்டில் கல்வி/வேலைவாய்ப்பை மேற்கொள்ளும் ஊழியர்களின் பதவியை ஒதுக்கி வைத்திருப்பதற்கான நடைமுறை

குழு, கலந்துரையாடலுக்காக திட்டமிடப்பட்ட வழக்கமான விடயங்களுக்கு மேலதிகமாக, வங்கியின் கூட்டாண்மை முகாமை வகைக்கு உட்பட்ட தலைமை சந்தைப்படுத்தல் அதிகாரி மற்றும் தலைமை சட்ட அதிகாரி பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதில் கவனம் செலுத்தியது.

## குழு மதிப்பீடு

குழு 2020 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டைக் கொண்டு மதிப்பீட்டு செயன்முறையை நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்படும் போது அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருப்பதாக முடிவு செய்யப் பட்டிருந்தது.

**கேசிலா ஜயவர்தன**

தலைவர்
சபை மனித வளங்களும் ஊதியங்களும் குழு

19 மார்ச் 2021
கொழும்பு

# சபை நியமனக் குழுவின் அறிக்கை

## குழுவின் அமைப்பு

**2020 இல்**

சபை நியமனக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது. மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபை நியமனக் குழு பின்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது:



**யூ ஜீ ஆர் ஆரியரத்ன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எம் கே சி சேனாநாயக்க**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**கலாநிதி திரான் த சில்வா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(17 ஜனவரி 2020 முதல் 09 அக்டோபர் 2020 வரை)

**திரு எரங்க ஐயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(28 அக்டோபர் 2020 முதல்)

சபை நியமனக் குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 40 இருந்து 44 வரை வழங்கப்பட்டுள்ளன.

**2021 இல்**

தற்போதைய சபை நியமனக் குழு கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது.:

**திரு யூ ஜீ ஆர் ஆரியரத்ன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எரங்க ஐயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**அழைப்பின் பேரில் ஒழுங்காக வருகை தருவோர்**
பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் குழுவுக்குத் தகவல்களை வழங்குவதுடன் குழுக் கூட்டங்களில் அழைப்பின் பேரில் கலந்து கொள்கின்றார்.

**குழுச் செயலாளர்**
சபையின் செயலாளர், சபை நியமனக் குழுவின் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

**கூட்டங்கள்**
2020 முடிவடைந்த நிதியாண்டில் இரண்டு சபை நியமனக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் குழவின் ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) சபை நியமனக் குழவின் பட்டயப்படி மூன்றில் இரண்டாகும்.

இவ்வாண்டில் வருகை தந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பெயர் | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|
| திரு யூ ஜீ ஆர் ஆரியரத்ன | 02 | 02 |
| கலாநிதி எம் கே சி சேனாநாயக்க | 02 | 02 |
| கலாநிதி திரான் த சில்வா | 02 | 02 |
| திரு எரங்க ஐயவர்தன | 00 | 00 |

# சபை நியமனக் குழுவின் அறிக்கை

## சபை நியமனக் குழுவின் பட்டயம்

முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் தெரிவில் சபையின் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டினை உறுதி செய்வதற்காக திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 (ஒ) (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை நியமனக் குழுவை பணிப்பாளர் சபை நிறுவியது.

## குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

சபை நியமனக் குழு, பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை தெரிவு செய்வதற்கு/நியமிப்பதற்கான செயன்முறையை நடைமுறைப்படுத்தல்,/ பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் பதவிக்கான நியமனம் அல்லது பதவி உயர்வுக்காக கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய தகுதிக்கான தேவைப்படுத்தப்படும் தராதரங்கள், அனுபவம் மற்றும் முக்கிய விடயங்கள் போன்ற பிரமாணங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகும்.

மேலும் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளவாறும், பணிப்புரை 3 (3) இல் கொடுக்கப்பட்ட அளவுகளிலும் குறித்துரைக்கப்பட்ட பதவிகளை பெறுவதற்கு தகுதியான மற்றும் சரியானவர்கள் என பணிப்பாளர்கள் பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரை குழு உறுதிப்படுத்தும். ஓய்வு பெறும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான குழு காலத்துக்கு காலம் மேலதிகமான/புதிய நிபுணத்துவத் தேவைப்பாடுகளையும், ஓய்வு பெறும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கான அடுத்து வரும் ஒழுங்குகளையும் கவனத்தில் எடுத்து பரிந்துரைகளை மேற்கொள்ளும்.

## 2020 ஆம் ஆண்டின் போதான செயற்பாடுகள்

இந்த ஆண்டில் குழு கலந்துகொண்ட மிக முக்கியமான பணி பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி பதவிக்கு பொருத்தமான விண்ணப்பதாரரை நியமித்தல்/தெரிவு செய்தல் தொடர்பான விடயம் ஆகும். வங்கியின் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி நியமனம் செய்வதற்கான தெரிவு செய்தல்/மதிப்பீட்டு அளவுகோல்களை குழு முடிவு செய்தது.

மூன்று உதவிப் பொது முகாமையாளர்களை பிரதிப் பொது முகாமையாளர் தரத்திற்கு பதவி உயர்த்துதல்.

## குழு மதிப்பீடு

குழு 2020 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டைக் கொண்டு மதிப்பீட்டு செயன்முறையை நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்படும் போது அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருப்பதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.



**யூ ஜீ ஆர் ஆரியரத்ன**
தலைவர்
சபை நியமனக் குழு

19 மார்ச் 2021
கொழும்பு

# சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை

## குழுவின் அமைப்பு

### 2020 இல்

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபையினால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.

2020ஆம் ஆண்டில் கீழ்வரும் அங்கத்தவர்கள் சபையினால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவில் பணியாற்றினார்கள்:



**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திருமதி மனோஹரி அபயசேகர**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(17 ஜனவரி 2020 முதல் 28 அக்டோபர் 2020 வரை)

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(22 ஏப்பிரல் 2020 முதல்)

**திரு எரங்க ஐயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(28 அக்டோபர் 2020 முதல்)

**சபையில் இல்லாத அங்கத்தவர்கள்**
பொது முகாமையாள்/பிரதான
நிறைவேற்று அலுவலர்
பிரதான இடர் அலுவலர்

2020 ஆம் ஆண்டின் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 40 இருந்து 44 வரை வழங்கப்பட்டுள்ளன.

### 2021 இல்

தற்போதைய சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு கீழ்வரும் மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியுள்ளது.

**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எரங்க ஐயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**அழைப்பின் பேரில் வருகை தருவோர்**
குழுவானது, ஏனைய பிரதிப் பொது முகாமையாளர்கள் உதவிப் பொது முகாமையாளர்கள், இணங்குவிப்பு அலுவலர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்கள் ஆகியோரை தேவைப்படும் போது கூட்டங்களுக்குச் சமூகமளிக்குமாறு வேண்டியிருந்தது.

**குழுச் செயலாளர்**
சபையின் செயலாளர், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

**கூட்டங்கள்**
குழுக் கூட்டங்கள் தேவை அடிப்படையில் காலாண்டுக்கு ஒரு முறை நடாத்தப்படுவதுடன், அதன் அடிப்படையிலேயே கூட்டங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. 2020 ஆம் ஆண்டில் ஐந்து (05) கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் குழுவின் ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) மனித வளங்களும் ஊதியங்களும் குழுவின் பட்டயப்படி மூன்றில் இரண்டாகும்.

இவ்வாண்டில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பெயர் | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|
| கலாநிதி எம் கே சி சேனாநாயக்க | 05 | 03 |
| திருமதி மனோஹரி அபயசேகர | 04 | 04 |
| திரு எம் ரி ஜே பெரேரா | 04 | 03 |
| திரு எரங்க ஐயவர்தன | 01 | 01 |

## சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபை 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவின் நியதிகளின் கீழ் நாணயச் சபையில் நிறைபெறச் செய்யப்பட்ட அதிகாரத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கான நிறுவன ஆளுகையின் 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டப் பணிப்புரையுடனான இணங்குவிப்புடன் சபை ஒருங்கிணைந்த முகாமைத்துவக் குழுவை நிறுவியது.

## குழுவின் வகிபாகங்களும் பொறுப்புக்களும்

பணிப்பாளர் சபையினால் உருவாக்கப்பட்ட தொழிற்பாட்டு பரப்பெல்லைக்கான நியதிகள் குழுவின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகள் என வகுத்துள்ள விதிமுறைகள் பின்வருமாறு:

- வங்கிக்கான இடர் தாங்கு எல்லை மற்றும் சகிப்புத்தன்மை வரம்புகளை அமைத்தல்.
- வங்கியின் இடர் முகாமைக் கொள்கைகளை மதிப்பாய்வு செய்தல்.
- பாசல் III மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்கள்/ வழிகாட்டுதல்களுடன் இணங்குவதை உறுதிசெய்தல்
- இடர் முகாமைத் தந்திரோபாயம், கட்டமைப்பு மற்றும் வழிமுறைகள் ஒருங்கிணைந்த இடர் முகாமை (IRM) கட்டமைப்பின் படி வங்கி முழுவதும் தொடர்ந்து செயற்படுத்தப்படுவதை/ நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.
- இடர் முகாமை பிரிவின் (RMD) நோக்கத்தை தீர்மானித்தல் மற்றும் ஒருங்கிணைந்த இடர் முகாமைக் கட்டமைப்பை திறம்பட செயற்படுத்துவதை உறுதி செய்ய இடர் முகாமைப் பிரிவின் செயற்பாட்டை வழிநடத்துதல்.
- இடர் முகாமை செயற்பாடுகளை திறம்பட நிறைவேற்ற தேவையான நிபுணத்துவம் வாய்ந்த ஊழியர்களை இடர் முகாமைப் பிரிவு கொண்டுள்ளதை உறுதிசெய்தல் மற்றும் அவர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்கப்படுவதை உறுதி செய்தல்.
- தேவை ஏற்படின், இடர் முகாமையில் வெளிவாரி நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் சேவைகளைப் பெற பரிந்துரைத்தல்.
- இடர் முகாமை தொடர்பான சபையின் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான ஆலோசனை வழங்குதல்
- வங்கியின் மட்டம் I மற்றும் மட்டம் II இடர் குறைத்தல் மற்றும் இடர் முகாமை அணுகுமுறைகளான வரையறை கண்காணிப்பு, வணிகத் தொடர்ச்சித் திட்டம், தகவல் பாதுகாப்பு திட்டம் போன்றவற்றை அவ்வப்போது அறிக்கைகள் மூலம் ஆராய்தல்.
- வங்கியின் உள்முக மூலதன போதுகை மதிப்பீட்டு செயன்முறையை (ICAAP) மீளாய்வு செய்தல்.

குழு கொள்கைகள், அறிக்கைகள் மற்றும் வங்கியுடன் தொடர்பான இடர் மற்றும் இணக்கம் பற்றிய எடுத்துரைப்புகள் ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது ஆணையின் கீழ் வரும் முன் மொழிவுகளுக்கான ஒப்புதலை வழங்குவதுடன் சபையினால் மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டிய முன் மொழிவுகள்/அறிக்கைகள் ஆகியவற்றை பணிப்பாளர் சபைக்கு பரிந்துரை செய்கின்றது.

இடர் முகாமைத்துவம் தொடர்பான உரிய பகுதி/பிரிவு ஆகியன வங்கியின் இடர் முகாமைத்துவச் செயற்பாடுகள் மற்றும் அதன் முக்கியத்துவம் தொடர்பில் விபரமான அறிமுகத்தை வழங்குகின்றன. சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இடர் முகாமைத்துவம், இணக்குவிப்புப் பிரிவு மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகள் ஆகியவற்றினால் ஆதரவளிக்கப்பட்டது.

## 2020 ஆம் ஆண்டின் போதான செயற்பாடுகள்

- தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளின் அரையாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கப்பாட்டு மதிப்பீடு, இணக்கப்பாட்டு சான்றிதழ் உள்ளிட்ட இணக்கப்பாட்டுப் பிரிவு சமர்ப்பித்த அறிக்கைகள் வங்கியின் இணக்கப்பாட்டுத் திட்டத்துடனான மீளாய்வு
- வங்கியின் திரவத்தன்மைத் திட்டத்தின் முன்னேற்றக் கட்டத்தை மீளாய்வு செய்தல்
- வங்கியின் இடர் முகாமை கொள்கைகளை மீளாய்வு செய்து, சபையின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்தல்
- வங்கியின் முக்கிய முகாமைக் குழுக்களின் சாசனங்கள்/தொழிற்பாட்டுப் பரப்பெல்லை நியதிகளை மீளாய்வு செய்து, ஒப்புதலுக்காக சபைக்குப் பரிந்துரை செய்தல்.
- இடர் தாங்கு எல்லைக் கட்டமைப்பு மற்றும் இடர் சகிப்புத்தன்மை வரம்பு குறித்த மீளாய்வு செய்யப்பட்ட அறிக்கைகள், வங்கியின் ஒட்டுமொத்த இடர் முகாமை அம்சம் குறித்த காலாண்டு அறிக்கைகளை மீளாய்வு செய்தல்
- இடர் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு (RCSA) குறித்த அறிக்கைகளின் மீளாய்வு.
- வங்கியின் தகவல் பாதுகாப்புக் கொள்கையை மீளாய்வு செய்து சபையின் ஒப்புதலுக்கு பரிந்துரை செய்தல்
- அரசியல் ரீதியாக தொடர்புபட்ட நபர்களின் கணக்குகள் (PEP) பற்றிய விரிவான பரிசீலனை.
- வங்கியின் உள்ளக மூலதன போதுகை மதிப்பீட்டு செயல்முறை (ICAAP) ஆவணத்தை மீளாய்வு செய்தல்
- முகாமைக் குழுக்களின் போதுமான தன்மை மற்றும் செயற்திறனை மீளாய்வு செய்தல்
- வங்கியின் பாதுகாப்பு வைப்பு பெட்டகங்களின் இணக்கப்பாட்டு மதிப்பீடு.

## குழு மதிப்பீடு

குழு 2020 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டைக் கொண்டு மதிப்பீட்டு செயன்முறையை நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்படும் போது அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருப்பதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.



**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**

தலைவர்
சபை ஒருங்கிணைந்த இடர்
முகாமைத்துவக் குழு

19 மார்ச் 2021
கொழும்பு

# சபை கடன் குழுவின் அறிக்கை

## குழுவின் அமைப்பு

**2020 இல்**

சபைக் கடன் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபைக் கடன் குழு கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது:



**திருமதி கேசிலா ஜயவர்தன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(17 ஜனவரி 2020 முதல் 22 ஏப்ரல் 2020 /28 அக்டோபர் 2020 முதல்)

**கலாநிதி திரான் த சில்வா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(22 ஏப்ரல் 2020 முதல் 09 அக்டோபர் 2020 வரை)

**திரு எரங்க ஜயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(17 ஜனவரி 2020 முதல் 28 அக்டோபர் 2020 வரை)

**திருமதி மனோஹரி அபயசேகர**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

2020ஆம் ஆண்டின் சபைக் கடன் குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 40 இருந்து 44 வரை வழங்கப்பட்டுள்ளன.

**2021 இல்**

சபைக்கடன் குழு கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்ததுடன் 08 பெப்ரவரி 2021 முதல் குழு இரத்துச் செய்யப்பட்டது:

**திருமதி கேசிலா ஜயவர்தன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திருமதி மனோஹரி அபயசேகர**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**அழைப்பின் பேரில் வருகை தருவோர்**
பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர், பிரதிப் பொது முகாமையாளர்கள் (கடன்) மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடுகள்) ஆகியோர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொணடனர்.

**குழுச் செயலாளர்**
சபையின் செயலாளர், சபைக் கடன் குழுவின் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

**கூட்டங்கள்**
2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த நிதியாண்டில் நான்கு சபைக் கடன் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. கூட்டமொன்றுக்கான ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) இரண்டு உறுப்பினர்கள் ஆகும்.

இவ்வாண்டில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பெயர் | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|
| திருமதி கேசிலா ஜயவர்தன | 01 | 01 |
| திருமதி மனோஹரி அபயசேகர | 04 | 04 |
| திரு எரங்க ஜயவர்தன | 04 | 04 |
| கலாநிதி திரான் த சில்வா | 03 | 02 |

# சபை கடன் குழுவின் அறிக்கை

## குழுவின் பட்டயம்

பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான 1971ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 ஓ (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டத்திற்கு இணங்க சபைக் கடன் குழுவை நிறுவியது. வங்கியின் கடன் கொள்கை மற்றும் முதலீட்டுக் கொள்கை ஆகியவற்றின் மீளாய்வுகளை தேவைப்படும் போது காலத்திற்குக் காலம் மேற்கொள்வதிலும், வழங்கப்பட்ட எல்லைக்குள் கொடுகடன் வசதிகள், முதலீடுகளுக்கு ஒப்புதலளித்தலிலும் ஈடுபடும்.

## குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புக்கள்

கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஏனைய தொடர்பான கொள்கை மட்டத்திலான ஆவணங்கள் உள்ளடங்கலாக கடன் மற்றும் முதலீடு தொடர்பில் வங்கியின் உபாயமார்க்க நோக்கங்களை மீளாய்வு செய்வதுடன் விதந்துரைப்புகளையும் மேற்கொள்ளுகின்றது.

ஸ்திரமான, வலிமையான மற்றும் ஆரோக்கியமான கடன் இடர் பெறுகை மற்றும் முகாமைத்துவக் கலாச்சாரம் ஆகியவற்றை ஊக்குவித்தல் மற்றும் மீளச் செயற்படுத்தல் ஆகியவற்றை ஊக்குவித்தல் மற்றும் மீளச் செயற்படுத்தல் ஆகியவற்றுக்காக வங்கியின் கடன் கொள்கை மற்றும் முதலீட்டுக் கொள்கையுடன் தொடர்புடைய திறமையான செயற்திறன் வாய்ந்த முகாமைத்துவத்தின் ஊடாக பணிப்பாளர் சபைக்கு உதவுகின்றது.

சொத்துக்கள் மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவின் விதப்புரைக்கு இணங்க கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஆகியவற்றுக்கான விலையிடல் மற்றும் முதலீடுகள் மீதான ஆலோசனைகளுக்கு ஒப்புதல் அளிக்கின்றது.

இடர்களை சமாளிக்கக் கூடிய பொருத்தமான முறைமைகளை நடைமுறைப்படுத்தல், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் வங்கியின் கடன் கொள்கைக்கான முகாமைத்துவக் கடன் கொள்கைகள் ஆகியவற்றை வலுப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல்.

## 2020 ஆம் ஆண்டின் போதான செயற்பாடுகள்

குழுவிடம் வழங்கப்பட்ட அதிகாரத்தின் அளவின் அடிப்படையில் கடன் திட்டங்களினை மீளாய்வு செய்து, அங்கீகரித்து, பரிந்துரை செய்தல்.

வங்கியின் கடன் வசதிகள் தொடர்பான உறுதி இரத்துச் செய்தல் மற்றும் உறுதி வெளியீட்டு பத்திரங்களை நிறைவேற்ற ஒப்புதல் வழங்குதல்.

அதிகாரத்திற்குள் உட்பட்ட வகையில் குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட மீட்பு விடயங்கள் தொடர்பானவற்றை மீளாய்வு செய்து, அங்கீகரித்து, பரிந்துரை செய்தல்.

## குழு மதிப்பீடு

குழு 2020 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டைக் கொண்டு மதிப்பீட்டு செயன்முறையை நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்படும் போது அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருப்பதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

Keasila Jayawardana

**திருமதி கேசிலா ஜயவர்தன**

தலைவர்
சபைக் கடன் குழு

19 மார்ச் 2021
கொழும்பு

# சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழுவின் அறிக்கை

## குழுவின் அமைப்பு

**2020 இல்**

சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு மூன்று நிறைவேற்று அதிகாரமற்ற பண்பாளர்களைக் கொண்டுள்ளது.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டிருந்தது:



**திருமதி கேசிலா ஐயவர்தன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(17 ஜனவரி 2020 முதல் 07 பெப்ரவரி 2020 மற்றும் 28 அக்டோபர் 2020 முதல்)

**கலாநிதி திரான் த சில்வா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(17 ஜனவரி 2020 முதல் 15 மே 2020 வரை) (தலைவர் - 07 பெப்ரவரி 2020 முதல் 15 மே 2020 வரை)

**திருமதி மனோஹரி அபயசேகர**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(07 பெப்ரவரி 2020 முதல் 22 ஏப்ரல் 2020 வரை)

**திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(தலைவர் 15 மே 2020 முதல் 28 அக்டோபர் 2020 வரை)

**திரு எரங்க ஐயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(22 ஏப்ரல் 2020 முதல் 28 அக்டோபர் 2020 வரை)

2020ஆம் ஆண்டின் சபை சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 40 இருந்து 44 வரை வழங்கப்பட்டுள்ளன.

**2021 இல்**

சபை தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்ததுடன் 08 பெப்ரவரி 2021 முதல் குழு இரத்துச் செய்யப்பட்டது.:

**திருமதி கேசிலா ஐயவர்தன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எரங்க ஐயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**அழைப்பின் பேரில் வருகை தருவோர்**
பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர் அழைப்பின் பேரில் கூட்டங்களில் கலந்து கொள்வார்

**குழுச் செயலாளர்**
சபையின் செயலாளர், சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

**கூட்டங்கள்**
2020 டிசம்பர் 31இல் முடிவடைந்த நிதியாண்டில் ஆறு சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு பட்டயத்தின் படி கூட்டமொன்றுக்கான ஆகக் குறைந்த எண்ணிக்கை (கோரம்) மூன்றில் இரண்டு உறுப்பினர்கள் ஆகும்.

இவ்வாண்டில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பெயர் | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|
| திருமதி கேசிலா ஐயவர்தன | 02 | 01 |
| கலாநிதி திரான் த சில்வா | 02 | 02 |
| திரு எரங்க ஐயவர்தன | 06 | 06 |
| திருமதி மனோஹரி அபயசேகர | 01 | 01 |
| திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன | 04 | 04 |
| திரு எம் ரி ஜே பெரேரா | 03 | 03 |

# சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழுவின் அறிக்கை

## குழுவின் பட்டயம்

வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 76 ஓ (i) இன் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்ட இலங்கையின் உரிமம் பெற்ற சிறப்பியல்பு 2007 இன் 12 ஆம் இலக்க வங்கி தொழில் சட்டத்திற்கு இணங்க சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழுவை நிறுவியது.

சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழுவானது தகவல் தொழில்நுட்பத்தில் வங்கி தங்கியிருப்பதை உறுதிப்படுத்துவதற்காகவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்கு இணங்க வங்கியின் உபாயமார்க்க நோக்கங்களை மேற்பார்வை செய்வதற்குமாக நிறுவப்பட்டது.

## குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

தலைமைத்துவ ஆதரவு, நிறுவன ரீதியான அமைப்பு மற்றும் வங்கியின் தகவல் தொழில்நுட்பச் செயல்முறை, பெறுமதி வழங்கல், தொழில்நுட்ப இடர் முகாமைத்துவம், மூலவள முகாமைத்துவம் மற்றும் செயலாற்ற முகாமைத்துவம் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக தகவல் தொழில்நுட்ப ஆளுகை வரையமைப்பினை நிறுவுதல் மற்றும் மீளாய்வு செய்தல்.

வியாபாரத் தொடர்ச்சி முகாமைத்துவத்தின் போதுமை மற்றும் திறனாற்றல் மற்றும் வங்கியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைகளின் அனர்த்த மீட்சி ஆகியவற்றை உறுதிப்படுத்தல்.

இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டல்கள் மற்றும் சிறந்த சர்வதேச நடைமுறைகளின்படி தகவல் தொழில்நுட்பத்தின் போதுமை மற்றும் திறனாற்றலை உறுதிப்படுத்தல்.

## 2020 ஆம் ஆண்டில் குழு கலந்து கொண்ட நடவடிக்கைகள்

- வங்கியின் மைய வங்கி தீர்வை அமுல்படுத்தும் முறை குறித்த முடிவை மதிப்பாய்வு செய்து முடிவு செய்தல்
- தகவல் தொழிநுட்பம் தொடர்பான கொள்முதல் திட்டங்கள் தொடர்பான ஒப்புதல் மற்றும் பரிந்துரை செய்தல்
- வங்கியின் தகவல் தொழில்நுட்பத் தேவைகளுக்கான வருடாந்திர கொள்முதல் திட்டத்தின் அங்கீகாரம் வழங்கல் மற்றும் பரிந்துரை செய்தல்

## குழு மதிப்பீடு

குழு 2020 ஆம் ஆண்டிற்கான சுய மதிப்பீட்டைக் கொண்டு மதிப்பீட்டு செயன்முறையை நிறைவு செய்ததுடன், மதிப்பீட்டின் முடிவுகள் சபைக்குத் தொடர்பாடல் செய்யப்படும் போது அதன் செயற்திறன் பயனுறுதி மிக்கதாக இருப்பதாக முடிவு செய்யப்பட்டிருந்தது.

**கேசிலா ஜயவர்தன**
தலைவர்
சபைத் தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு

19 மார்ச் 2021
கொழும்பு

# சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுவின் அறிக்கை



## குழு அமைப்பு

**2020 இல்**

ஏழு பணிப்பாளர்களைக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்களைக் கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் சபையானது திருத்தப்பட்டவாறான 1971ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் உப பிரிவான பிரிவு 8 (i) இன் ஏற்பாடுகளின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது. சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்க குழு உள்ளடங்கிய அனைத்து சபைக்குழுக்களின் உறுப்பினர்கள் பணிப்பாளர் சபைக் குழுவில் பணிபுரிவதற்கு அவசியமான தராதரங்கள், தேர்ச்சி, மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ளனர்.

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில், சபையின் சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு கீழ்வரும் நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது:



**திருமதி கேசிலா ஜயவர்தன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**கலாநிதி திரான் த சில்வா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்
(22 ஏப்ரல் 2020 முதல் 09 அக்டோபர் 2020 வரை)

**திரு எரங்க ஜயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திருமதி மனோஹரி அபயசேகர**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

2020ஆம் ஆண்டின் சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுவின் அங்கத்தவர்களின் சுயவிபரங்கள் கூட்டிணைந்த ஆளுகை அறிக்கையின் கீழ் பக்கம் 40 இருந்து 44 வரை வழங்கப்பட்டுள்ளன.

**2021 இல்**

சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்ததுடன் 08 பெப்ரவரி 2021 முதல் குழு இரத்துச் செய்யப்பட்டது.:

**திருமதி கேசிலா ஜயவர்தன**
தலைவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எரங்க ஜயவர்தன**
அங்கத்தவர்/சுயாதீன
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திருமதி மனோஹரி அபயசேகர**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எம் ரி ஜே பெரேரா**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**திரு எச் கே டி லக்ஷமன் காமினி**
அங்கத்தவர்/சுயாதீனமற்ற
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

**அழைப்பின் பேரில் வருகை தருவோர்**
பொது முகாமையாளர்/பிரதான நிறைவேற்று அலுவலர்

**குழுச் செயலாளர்**
சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுவின் செயலாளராக பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல், நிர்வாகம், மீட்பு) செயற்படுகின்றார்.

**கூட்டங்கள்**
2020 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டில் ஆறு சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

இவ்வாண்டில் பங்குபற்றிய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| பெயர் | வருகை தரக்கூடிய எண்ணிக்கை | வருகை தந்த எண்ணிக்கை |
|---|---|---|
| திருமதி கேசிலா ஜயவர்தன | 06 | 06 |
| கலாநிதி திரான் த சில்வா | 02 | 00 |
| திரு எரங்க ஜயவர்தன | 06 | 04 |
| திருமதி மனோஹரி அபயசேகர | 06 | 06 |
| திரு எம் ரி ஜே பெரேரா | 06 | 06 |

# சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுவின் அறிக்கை

## சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுவின் சாசனம்

சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழுவின் தொழிற்பாட்டு பரப்பெல்லை விதிமுறைகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கான மீளாய்வு மற்றும் ஒப்புதலுக்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன. எவ்வாறாயினும், 2021 பிப்ரவரி 8 முதல் இந்த குழு கலைக்கப்பட்டது. ஆகையால், குழு சாசானம் உருவாக்கப்படவில்லை.

## குழுவின் வகிபாகம் மற்றும் பொறுப்புகள்

வங்கியின் 50 வது ஆண்டு நிறைவு விழாவின் சந்தைப்படுத்தல் உபாயமார்க்கம் மற்றும் அமுலாக்கல் குறித்த கொள்கை நிலை மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலுக்காக வங்கியின் சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு (BMSC) அமைக்கப்பட்டது.

## 2020 இன் போதான செயற்பாடுகள்

- குழுவின் பகிர்ந்து அளிக்கப்பட்ட பிரதிநிதித்துவ அதிகார வரம்புகளை தீர்மானித்தல்
- வங்கியின் பொன்விழாவைக் கொண்டாடுவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடல் மற்றும் முடிவு செய்தல்
- வங்கியின் சந்தைப் பங்கு மற்றும் வர்த்தக நாம மதிப்பை மேம்படுத்துவதற்கு உரிய கவனம் தேவைப்படும் விடயங்களைப் பற்றி கலந்துரையாடுதல்.

## குழு மதிப்பீடு

குழு 2020 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட, 8 பெப்ரவரி 2021 இலிருந்து விளைவுக்கு வரும் வகையில் கலைக்கப்பட்டு இருந்தது. ஆகவே, 2020 ஆம் ஆண்டுக்கான சுய மதிப்பீடு உள்ளடங்கலான மதிப்பீட்டு செயன்முறை இடம்பெற்று இருக்கவில்லை.



**கேசிலா ஐயவர்தன**

தலைவர்
சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு

19 மார்ச் 2021
கொழும்பு

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

உலகலாவிய நோய்த் தொற்றின் மூலம் 2020 ஆம் ஆண்டானது ஒரு போதும் இல்லாத ஆண்டொன்றாக தோற்றம்பெற்றது. வங்கிகள், வியாபார தொழிற்பாடுகளை நிலைநிறுத்துவதில் ஒருபோதுமில்லாத சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருந்த அதேவேளை பாதிக்கப்பட்ட வாடிக்கையார்களுக்கு நிவாரணங்களை வழங்கின. தேசிய சேமிப்பு வங்கியானது அழுத்தமிகு நிலைமையொன்றில் தாக்குப்பிடிக்கதக்கதாக இருந்து அரசாங்கத்திற்கும், வாடிக்கையார்களுக்கும் ஆதரவினை வழங்கியதன் மூலம் முக்கிய பங்காற்றியது.

வைரஸ் பரவலின் காரணமாக வங்கியின் தொழிற்பாட்டு சூழலின் மீது தொடர்சியாக காணப்பட்ட தொடர்சியான அழுத்தம் காணப்பட்டமைக்கும் உள்நாட்டு பொருளாதாரத்திற்கான இழப்புகளுடன் கூடிய நிதியியல் இடர்நேர்வு மேலும் எதிர்பார்க்கப்பட்டமைக்கு மத்தியிலும், கொடுகடன் தரம், திரவத்தன்மை மற்றும் வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் நிவாரணங்கள் மீது ஒழுங்குமுறைப்படுத்துனரினால் எடுக்கப்பட்ட வழிமுறைகள் மூலம் துணையளிக்கப்பட்டு தேசிய சேமிப்பு வங்கி தாக்குப்பிடிக்கத்தக்க செயலாற்றத்துடன் விளங்குகின்றது.

அதிகரித்த எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகள் காணப்பட்ட போதிலும், சொத்துகளினதும் பொறுப்புகளினதும் வீத உணர்வுமிக்க முதிர்ச்சி தொகுப்புகளை மீள்விலையிடும் விதத்தின் மூலம் துணையளிக்கப்பட்டு குறைவான வட்டி வீதச் சூழல்நிலைமையிலும் இலாபத்தன்மையினை வங்கி மேம்படுத்தக் கூடியதாகவிருந்தது.

2019 இன் 12 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி பணிப்புரைக்கு அமைவாக 2019 இல், உள்நாட்டில் முறைமை சார்ந்த முக்கியத்துவமிக்க வங்கி என வகைப்படுத்தப்படாமையின் காரணமாக வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடு குறைக்கப்பட்டது. மேலதிக அடுக்கு 1 சாதனத்தை வழங்கியமையுடன் மூலதன போதுமை விகிதங்கள் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை குறைந்தபட்ச தேவைப்படுத்தல்களுக்கு நன்கு மேல் வங்கி பேணக்கூடியதாக இருந்தது.

நாட்டின் நாட்டுக்கான தோற்றப்பாட்டில் சீர்குலவை எவ்வாறருப்பினும் செலவு மற்றும் நிதியளித்தல் தேவைப்பாடுகள் மீது மேலதிக அழுத்தம் எதனையும் உணராது உரிய திகதிகளில் ஐக்கிய அமெரிக்க டொலரில் மாற்றம்செய்யப்பட்ட கடன்பாடுகளின் தவணைக் கொடுப்பனவுகளை உள்ளக நிதியங்களில் இருந்து மீள்கொடுப்பனவு செய்ய வங்கிக்கு இயலுமாக இருந்தது.

நிதியியல் முறைமையினையும் பொருளாதாரத்தினையும் பாதுகாக்கும் பொருட்டு வழங்கப்பட்ட உலகலாவிய நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் மீதான இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகள் மற்றும் அரசாங்கத்தின் முயற்சிகள் என்பவற்றை வங்கி கடைப்பிடித்தது.

கொவிட்-19 நெருடிக்கடியானது, அதன் நீண்டகால தாக்கங்கள் இன்றும் அறியப்படாதுள்ள 2007-2009 வரையான நிதியியல் நெருக்கடிக்குப் பின்னர் உலகலாவிய நிதியியல் முறைமை எதிர்கொண்ட கடுமையான பலப்பரீட்சை ஒன்றாக, சவால்ளை மிகவும் கடினமாக்குகியுள்ளது. குறைவான வட்டி வீதங்கள் மற்றும் வாடிக்கையாளர் செயற்பாடு மந்தமடைந்தமை அத்துடன் மூதலீடு குறைந்தமை காரணமாக வங்கிகள், இலாப மற்றும் அளவு நெருக்குதல்களை எதிர்கொண்டன. இணைத்தரப்பினர்களுக்கு இடையில் கொடுகடன் தரம் சீர்குலைந்தமை அதிகரித்த தவணைதவறுதல் வீதங்களுக்கு வழிவகுத்து இலாபத்தன்மை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் என்பன மீது அழுத்தத்தினை அதிகரித்தது.

அடிப்படையான இடர்நேர்வுகளை செயல்திறன்வாய்ந்த விதத்தில் முகாமைசெய்வதற்கும் ஒட்டுமொத்த இடர்நேர்வு தொகுப்பு, நடப்பாட்டின் செயலாற்றுகை மற்றும் நீண்டகால நிலைபெறும்தன்மை மீது ஆகக் குறைந்த பாதகமான தாக்கத்துடன் கூடிய கடினமிக்க ஆண்டாக திசைப்படுத்துவதற்கும் வங்கிக்கு வங்கியின் ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு கட்டமைப்பு சாதகமாக அமைந்தது.

இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவ அறிக்கையானது கொவிட்-19 அழுத்தமிக்க சூழலில் இடர்நேர்வுகள் மற்றும் மூலதன மட்டங்கள் அத்துடன் கொடுகடன் தரம், இலாபத்தன்மை, திரவத்தன்மை மற்றும் வங்கியின் மூலதன அளவுகள் மீதான பாதகமான தாக்கங்களை குறைப்பதற்கு வங்கியனால் எடுக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ முயற்சிகள் பற்றி ஆராய்கின்றது.

## இடர்நேர்வு ஆளுகை

வங்கியானது அதன் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள், உயர் தரத்திலான ஆளுகை நியமத்தினை பிரதிபலிக்கின்றன என்பதை உறுதி செய்வதற்கு அர்பணித்துள்ளது. இது இடர்நேர்வை எடுத்துக்கொள்கின்ற நடவடிக்ககளை செயல்திறன்மிக்க விதத்திலும் முன்மதிமிக்கவாறும் மேற்கொள்வதற்கு சபையினையும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினையும் இயலச்செய்கின்றது. ஆளுகைக் கட்டமைப்பின் அதியுயர் மட்டமாக சபை தொழிற்படுகின்றது.

பல்வேறு வகையான இடருக்குள்ளாகும் தன்மைகளை முகாமை செய்வதற்கும் தோதானவிதத்தில் உள்ளக கொள்கைகள் நிறுவப்பட்டு இணங்குவிக்கப்படுவதனை உறுதி செய்வதற்கும் சிரேஷ்ட முகாமைத்துவம் ஒருங்கிணைக்கப்பட்ட கட்டமைப்பொன்றினை நிறுவி உள்ளது என்பதனை இடர்நேர்வு மேற்பார்வை வகிபாகத்தின் ஊடாக சபை உறுதிசெய்கின்றது. கொவிட்-19 நோய்பரவலுக்கு மத்தியில் அதிகரித்த இடர்நேர்வு பிரதேசங்களை முகாமைசெய்வதற்கும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் மூலமான பணிப்புரைகளுடன் இணங்கியொழுகுவதற்கும் சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் உதவியுடன் சபை முக்கிய பங்காற்றியது. அனைத்து இடர்நேர்வு வகைகளும், அதாவது நிதியியல் மற்றும் நிதியியல்சாரா இரு வகையானவையும் வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பிற்கு அமைவாக முகாமைசெய்யப்பட்டு அறிக்கையிடப்படுகின்றன.

## ஆளுகைக் குழுக்கள்: சபை மட்டம்

| குழு | பொறுப்பு |
|---|---|
| சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு | சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது சபைக்கு செயல்திறன்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றினை பரிந்துரைப்பதற்கு அதன் இடர்நேர்வு தொடர்புபட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுகின்றது. சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவ குழுவின் முக்கிய நோக்கங்களாக இடர்நேர்வு ஏற்பினை நிறுவுதல், இடர்நேர்வு ஏற்புக்கு எதிராக இடர்நேர்வுத் தொகுப்பினை மதிப்பிடுதல் மற்றும் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயல்முறையினை பரிந்துரைத்தல் என்பன காணப்படுகின்றன. |
| சபைக் கணக்காய்வுக் குழு | சபைக் கணக்காய்வு குழுவானது தகவல்களின் ஒருமைப்பாடு, தோதான கணக்கீட்டுக் கொள்கையின் பயன்பாடு என்பவற்றை உறுதிசெய்வதுடன் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இணங்குவித்தல் பிரச்சினைகளை கண்காணிக்கின்றது. |

அட்டவணை 16 சபை மட்ட முகாமைத்துவக் குழுக்கள்

சிரேஷ்ட முகாமைத்துவமானது அறிந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சிறந்த உள்நோக்குகளை வழங்கி அனைத்து தொழிற் பிரிவுகள் முழுவதும் ஏற்கனவே உள்ள மற்றும் தோற்றம்பெற்று வருகின்ற இடர்நேர்வுகள், போக்குகள் மற்றும் பிரச்சினைகளை இனங்கண்டு புரிந்துகொள்வதனை மையப்படுத்தி முகாமைத்துவ குழு கட்டமைப்பினை நிறுவுவதன் மூலம் நிதிசார்ந்த மற்றும் நிதிசாராத இடர்நேர்வுகள் இரண்டின் மீதும் தீவிரமான ஆளுகையினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. கொவிட்-19 இடையூறுகளுடன் கூடிய இடர்நேர்வுகளை/இலாப நட்டங்களை மற்றும் தொழிற்பாடுகளை முகாமைசெய்வதில் முகாமைத்துவக் குழுக்கள் முக்கிய பங்காற்றின.

## ஆளுகைக் குழுக்கள்: சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் →

| முகாமைத்துவக் குழு | பொறுப்பு |
|---|---|
| கொடுகடன் குழு | கொடுகடன் குழு என்பது வங்கியின் கொடுகடன் தவணைதவறுதல் இடர்நேர்வு, தொழிற்பாட்டு மற்றும் கொடுகடனில் சட்ட ரீதியான இடர்நேர்வுகள் உள்ளடங்களாக அனைத்து தூண் I மற்றும் தூண் II கொடுகடன் இடர்நேர்வுகளை மேற்பார்வை செய்வதற்கான உச்சமட்ட முகாமைத்துவக் குழுவாகும்.<br>கொடுகடன் குழுவானது கொடுகடன் வசதிகளை அனுமதிக்கின்ற போது அதாவது சில்லறைக் கடன்கள் மற்றும் நிறுவனக் கடன்களை (கருத்திட்ட கடன்கள், நிறுவனங்களுக்கான கடன் வழங்கல், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கான கடன்கள், அரசுக்கு உரித்தான தொழில்முயற்சிகளுக்கு/அரசாங்கத்திற்கு கடன் வழங்கல் போன்ற) அதிகாரமளிக்கப்பட்ட வரையறைகளினுள் அனுமதியளிப்பதில் ஈடுபடுவதுடன் வங்கியின் கொடுகடன் இடர்நேர்வு கொள்கைகளை காலமுறையாக மீளாய்கின்றது/நடைமுறைப்படுத்துகின்றது. அத்துடன் சபைக்கு கொடுகடன் வசதிகளை பரிந்துரைக்கின்றது. |
| சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு | சொத்து மற்றும் முகாமைத்துவக் குழு என்பது வங்கியின் சந்தை இடர்நேர்வினையும், திரவத்தன்மை இடர்நேர்வினையும் முகாமைசெய்வதற்கு பொறுப்புடைய முகாமைத்துவக் குழுவாகும். இக் குழு முன்கணிப்புச் செய்யப்பட்ட ஏற்றுக்கொள்ளத்தக்க இடர்நேர்வினை/ஆதாய விகிதத்தினை பெறுவதற்கு சொத்துகளினதும் பொறுப்புகளினதும் அளவு, கலப்பு, முதிர்ச்சி, வீத உணர்வுத்தன்மை, தரம் மற்றும் திரவத்தன்மை என்பவற்றை முகாமைசெய்வதை நோக்காக கொள்கின்றது.<br>சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவின் தொழிற்பாடானது வங்கியின் உழைப்பினையும், கடன் தீர்க்கவல்ல தன்மையினையும் நிலைநிறுத்தும் நோக்குடன் மூலதன கட்டமைப்பு, உற்பத்தி விலையிடல், நிதியிடல் மற்றும் மூதலீடுகள் என்வற்றை பரிசீலனையில் கொண்டு ஐந்தொகை நிலைமைகள் மீதும், வெளியிலும் முகாமைசெய்வதுடன் தொடர்புடைய கொள்கை தீர்மானங்களை உள்ளடக்குகின்றது. |
| முதலீட்டுக் குழு | முதலீட்டுக்குழு என்பது வங்கியின் கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, முதலீடுகளுடன் தொடர்புபட்ட தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் உள்ளடங்களாக தூண் I மற்றும் தூண் II இடர்நேர்வு இரண்டினையும் மேற்பார்வை செய்வதற்கான உச்சமட்ட முகாமைத்துவக் குழுவாகும். வழங்கப்பட்ட அதிகார வரையறையினுள் அரசாங்க பிணையங்களில் முதலீடு, பங்குகள், (ஆரம்ப பொது வழங்கல் மற்றும் இரண்டாம் தரச் சந்தை தொழிற்பாடுகள்) அத்துடன் ஏனைய முதலீடுகளில் ஈடுபடுவதற்கான முதலீட்டுக் கொள்கையினை குழு மீளாய்கின்றது/நடைமுறைப்படுத்துகின்றது, சபைக்கு முதலீடுகளை பரிந்துரைக்கின்றது. |
| தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு | தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவானது வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வினை முகாமைசெய்வதுடன் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ நுட்பங்களை நடைமுறைப்படுத்தி வங்கியின் தொழிற்பாட்டு நட்டங்களை குறைப்பதற்காக உள்ளக கட்டுப்பாடுகளின் ஒருங்கிணைப்பினை பேணுவதனை நோக்காக கொள்கின்ற, கொடுக்கல்வாங்கல் செயன்முறையில் பிழைகளை குறைக்கின்ற, மோசடிகள் போன்றவற்றை தடுக்கின்ற வழிமுறைகளை எடுக்கின்றது. |
| தகவல் பாதுகாப்புக் குழு | தகவல் பாதுகாப்புக் குழு, வங்கியின் தகவல் பாதுகாப்பு கொள்கையின் நடைமுறைப்படுத்தலினை மேற்பார்வைசெய்வற்காக தாபிக்கப்பட்டுள்ளது. தகவல் பாதுகாப்பு குழுவானது அனைத்து தகவல்முறைமைகளும் தொடர்புபட்ட கட்டமைப்பும் இணைய அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பாகவும், தீங்கற்றதாகவும் காணப்படுகின்றன என்பதனை கண்கானிக்கின்றது. இதற்கு மேலதிகமாக, தகவல் பாதுகாப்பு தொடர்பிலான ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களையும் வேண்டப்பட்ட தொழிற்துறை நியமங்களில் மற்றும் சான்றுப்படுத்தல்களில் தேவைப்படுத்தப்பட்டவாறு இணங்குவித்தலினையும் குழு கண்கானிக்கின்றது. |

அட்டவணை 17 முகாமைத்துவக் குழுக்கள்




வரைபடம் 05 இடர்நேர்வு முகாமைத்துவ ஆளுகை கட்டமைப்பு

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

பாதுகாப்பின் இரண்டாம் நிலையானது கொவிட்-19 அழுத்தமிக்க சூழலிலிருந்துவரும் தாக்கத்தினை அறிந்துகொள்வதற்கு சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவிற்கும் சபைக்கும் துணையளிப்பதன் மூலம் முக்கிய பங்காற்றுவதுடன் தாக்கத்தினைக் குறைப்பதற்கு முனைப்புடன் பதிலிறுத்துவதை வசதிப்படுத்துகின்றது.

பிரதம இடர்நேர்வு அலுவலரின் தலைமையிலான இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவானது சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் முகாமைத்துவக் குழுக்களில் பங்கேற்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவ பிரிவானது 03 அலகுகளை அதாவது கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ அலகு, சந்தை இடர்நேர்வு முகாமைத்துவ அலகு/திறைசேரி நடு அலுவலகம் மற்றும் தொழிற்பாட்டு முகாமைத்துவ அலகு என்பவற்றை உள்ளடக்குகின்றது. இடர்நேர்வு முகாமைத்துவ பிரிவானது சபை அங்கீகரித்த கொள்கைகள், செயன்முறைகள் மற்றும் வரையறைகளுக்கு எதிராக அனைத்து இடர்நேர்வுகளையும் சுயாதீனமாக கண்காணிக்கின்றது. இடர்நேர்வு முகாமைசெய்தலை வசதிப்படுத்துவதற்கும் தடுப்பு மற்றும் சீர்ப்படுத்தல் நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இடர்நேர்வு மதிபீடுகளிலிருந்து சுயாதீனமாக கண்டறியப்படுகின்றவைகள் முகாமைத்துவ குழுக்கள், சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு மற்றும் சபை என்பவற்றுக்கு அறிக்கையிடப்படுகின்றன.

இணங்குவித்தல் அலுவலரினால் தலைமைவகிக்கப்படுகின்ற இணங்குவித்தல் பிரிவானது இலங்கை மத்திய வங்கியினதும் வங்கிக்கு ஏற்புடைய வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அரசாங்க அதிகாரிகளினதும் அனைத்து ஏற்பாடுகளும் வழிகாட்டல்களும் கடைப்பிடிக்கப்படுவதனை உறுதிசெய்வதற்கு அர்பணித்துள்ளது. மாற்றமடைகின்ற இணங்குவித்தல் சூழல் பற்றி உரியவாறு இப்பிரிவு இற்றைபடுத்தப்படுவதுடன் புதிய பணிப்புரைகள், தொடர்புடைய ஊழியர்கள் மத்தியில் முறையாக தொடர்பூட்டப்படுகின்றன என்பதனை உறுதி செய்வதற்கு தொடர்புடைய பிரிவுகளை/கிளைகளை பின்தொடர்ந்து அவதானிக்கின்றது.

## இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு →

“மூன்று நிலைப் பாதுகாப்பு மாதிரி” உடன் இணைந்த ஆற்றல்வாய்ந்த நிறுவன ஆளுகைக் கோட்பாடுகள், வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை சூழவும் அமைந்துள்ளன. இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பானது முன்மதிமிக்க இடர்நேர்வு முகாமைத்துவத்தினை உறுதிசெய்வதற்காக இடர்நேர்வு பற்றி அடையாளப்படுத்தல், மதிப்பிடுதல், அளவிடுதல், தணித்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடுதல் என்பவற்றுக்கான உபாயங்களை, கொள்கைகளை, மற்றும் நடைமுறைகளை தோதானவிதத்தில் உருவாக்குவதனையும் நடைமுறைப்படுத்துவதனையும் இயலச்செய்கின்றது. இடர்நேர்வு முகாமைத்துவத்துக்கான உரித்தும் பொறுப்பும் தொழில் தொழிற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனைத்து தனிப்பட்டவர்களிடமும் காணப்படுகின்றது.

மூன்று நிலைப் பாதுகாப்பு மாதிரியானது இடர்நேர்வின் உரிமைக்கான பொறுப்புக்கூறுதலை இடம்பெறச் செய்கின்றது. இம் மாதிரியானது முழுமையான தொடக்கம் முதல் முடிவு வரையான பெறுமதிச் சங்கிலியினை கருத்திற்கொள்கின்ற உகப்பான நீண்ட கால இடர்நேர்வு - நலன்மிக்க தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தொழிலானது சிறந்த நிலையொன்றில் காணப்படுகின்றது என்பதனை இனங்காண்கின்ற இடர்நேர்வு உரித்திற்கான பொறுப்புக்கூறலை இடம்பெறச்செய்கின்றது. இடர்நேர்வினை முகாமை செய்வதற்கான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு பொறுப்புக்கூறுகின்ற தொழில் உரிமையாளர்களுக்கான வழிகாட்டல், ஆலோசனை மற்றும் உத்தரவாதத்தினை இடர்நேர்வும் இணங்குவித்தலும் வழங்குகின்ற அதேவேளை கணக்காய்வானது இடர்நேர்வு முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் ஆளுகை என்பவற்றின் செயல்திறன் பற்றி சபைக்கும், ஒழுங்குபடுத்துனர்களுக்கும் மற்றும் ஏனைய அலுவலர்களுக்கும் சுயாதீன உத்தரவாத்தினை வழங்குகின்றது.

உள்ளக கட்டுப்பாடுகளையும் இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் வலுப்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்துனர்களும் வெளிவாரி கணக்காய்வாளர்களும் பெறுமதிவாய்ந்த உள்ளீடுகளை வழங்குகின்றனர். இது ஆர்வலர்களுக்கான மேலதிக உத்தரவாதமாக காணப்படுகின்றது.

## இடர்நேர்வுக் கலாசாரம் →

கலாசாரம் என்பது நிர்ணயமிக்க விதிகள், ஒழுங்குவிதிகள் அல்லது சந்தை சமிக்ஞைகள் இல்லாத சந்தர்ப்பத்தில் இடர்நேர்வு பற்றி புரிந்துகொள்வதற்கும் ஆற்றல்வாய்ந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் ஊழியர்களுக்கும், பணிப்பாளர்களுக்கும் வசதியளிக்கின்ற விழுமியங்கள், திறன்கள் மற்றும் நடத்தைகளை கொண்ட தொகுப்பொன்றாகும். அனைத்து மட்டங்களிலுமுள்ள ஊழியர்களும் தொடர்புடைய தொழிற் தொழிற்பாடுகளில் காணப்படும் இடர்நேர்வினை புரிந்துகொள்கின்றனர். இடர்நேர்வு கலாசாரமானது இடர்நேர்வு மற்றும் ஒன்றுக்காக ஒன்றை இழத்தல் அத்துடன் இடர்நேர்வுகளையும் மூலதன மட்டங்களையும் முகாமைசெய்தல் என்பவற்றுக்கான முக்கிய செலுத்தியொன்றாக விளங்குகின்றது.

## ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள் →

| கொள்கை | உள்ளடக்கம் |
|---|---|
| **ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவக் கொள்கை** | வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு |
| **கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை** | சில்லறைக் கொடுகடன், நிறுவனக்கொடுகடன், வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான கடன்கள், அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான, அரசுக்கு சொந்தமான வியாபார தொழில்முயற்சிகளுக்கான கடன்கள் போன்றவற்றில் உள்ள இடர்நேர்வுகளை இனங்காண்பதற்கான, மதிப்பிடுவதற்கான, முகாமைசெய்வதற்கான, மற்றும் தணிப்பதற்கான கட்டமைப்பு |
| **சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை** | சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வினை இனங்காண்பதற்கான, மதிப்பிடுவதற்கான, முகாமைசெய்வதற்கான, மற்றும் தணிப்பதற்கான கட்டமைப்பு |
| **தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை** | தொழிற்பாட்டு இடர்நேர்வினை இனங்காண்பதற்கான, மதிப்பிடுவதற்கான, முகாமைசெய்வதற்கான, மற்றும் தணிப்பதற்கான கட்டமைப்பு |
| **தகைவுப் பரிசோதனைக் கொள்கை** | வங்கியின் தகைவுப் பரிசோதனைக் கட்டமைப்பினை எடுத்துரைக்கின்றது. |
| **இடர்நேர்வு முகாமைத்துவ வெளிப்படுத்தல் கொள்கை** | இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளுடன் தொடர்புடைய வெளிப்படுத்தல் தேவைப்பாடுகள் |
| **உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறைக் முகாமைத்துவக் கொள்கை** | உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை நடாத்துவதற்கான கட்டமைப்பினை வழங்குகின்றது. |
| **தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கையினுள் வேறு கொள்கைகள்** | |
| **வெளியாரிடமிருந்து சேவை பெறும் கொள்கை** | வெளியாரிடமிருந்து சேவை பெறும் நடவடிக்கைகள் மீதான வழ்காட்டலகள், நடைமுறைகள், இடர்நேர்வு தணித்தல் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமை. |
| **தகவல் பாதுகாப்புக் கொள்கை** | வங்கியினுள் மற்றும் அதன் வலையமைப்பினுள் தகவல் பாதுகாப்புடன் தொடர்புபட்ட விதிகளையும் வழிகாட்டல்களையும் எடுத்துரைக்கின்றது. |
| **தொழில் தொடர்ச்சித் திட்டம்** | அனர்த்த நிலைமைகளில் தொழில் தொடர்ச்சியினை உறுதிசெய்வதற்கான வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள் |
| **இணங்குவித்தல் கொள்கை** | வங்கியின் இணங்குவித்தல் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான கட்டமைப்பு |
| **பணம் துய்தாக்கலுக்கெதிரான கொள்கை** | வங்கியின் பணம் துய்தாக்கலுக்கெதிரான கொள்கையினை உறுதிசெய்வதற்கான வழிகாட்டல்கள் மற்றும் நடைமுறைகள் |

அட்டவணை 18 இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகள்

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

## இடர்நேர்வு ஏற்புக் கட்டமைப்பு →

இடர்நேர்வு ஏற்புக் கூற்றானது இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பில் முக்கிய பாகமொன்றாக விளங்குகின்றது. இது, உபாயரீதியான கொள்கைச் செயன்முறைகளை வசதிப்படுத்துகின்ற விரும்பப்படுகின்ற எதிர்கால இடர்நேர்வை எடுத்துக்கொள்ளும் மட்டத்தினை எடுத்துக்காட்டுகின்றது.

இடர்நேர்வு ஏற்பானது வங்கி அதன் குறிக்கோள்களை எய்துவதில் ஏற்றுக் கொள்வதற்கு அது விரும்புகின்ற இடர்நேர்வு மட்டமாகும். இது தொழிலின் முக்கிய அம்சங்களையும் ஆர்வலர் எதிர்பார்க்கைகளையும் பிரதிபலிக்கின்றது.

வங்கியின் இடர்நேர்வு ஏற்புக் கூற்றானது தொழில் தொழிற்பாடுகளையும் இடர்நேர்வுகளையும் அணிசேர்ப்பதன் மூலம் பெறுமதியினை அதிகரிக்கின்றது. ஊகிக்கப்பட்ட இடர்நேர்வுக்கான ஆதாயச் சமநிலையினை வழங்குகின்ற அதேவேளை, எற்றுக்கொள்ளத்தக்க இடர்நேர்வு மட்டங்களினுள் காணப்படுவதற்கான தொழிற் செயற்பாடுகளை திட்டமிடுவதற்கான வழிகாட்டியொன்றாக இது செயற்படுகின்றது.

சபையினால் அங்கீகரிக்கப்பட்ட இடர்நேர்வு ஏற்புக் கட்டமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள முக்கிய கூறுகள் உள்ளடக்குவன:

- தொழிலை மேற்கொள்வதன் பாகமொன்றாக நாம் ஏற்றுக்கொள்கின்ற இடர்நேர்வுகள், இவை, செயற்பாடுமிக்க இடர்நேர்வு முகாமைத்துவத்தின் ஊடாக கட்டுப்படுத்தப்படுகின்றன.
- தொழிலை மேற்கொள்வதன் பாகமொன்றாக எமக்கு ஏற்படுகின்ற இடர்நேர்வுகள், ஏற்றுக்கொள்ளத்தக்க ஏற்பினுள் வைத்திருக்கப்படுவதற்கு இவை, செயற்பாடுமிக்கவாறு முகாமைசெய்யப்படுகின்றன.
- வங்கி பூச்சிய சகிப்புத்தன்மையினைக் கொண்ட இடர்நேர்வுகள்

வங்கி, பெறுமதிகளுக்கும், நிதியியல் நிலைக்குமான பாதகமான தாக்கங்களை குறைக்கின்ற பண்புசார் மற்றும் அளவுசார் வழியலகுகளை பயன்படுத்தி நிறுவன மட்டத்தில் இடர்நேர்வு ஏற்பினை ஏற்படுத்துவதில் மேலிருந்து கீழ்நோக்கிய அணுகுமுறையினை பிரயோகிக்கின்றது. நிறுவன மட்டத்திலான அளவுசார் இடர்நேர்வு ஏற்பானது மூலதனப் போதுமை திரவத்தன்மை, இலாபத்தன்மை மற்றும் ஏனைய முன்மதித் தேவைப்பாடுகளை பிரதானமாக மையப்படுத்துகின்றது.

வங்கி பூச்சிய இடர்நேர்வு ஏற்பினை கொண்டுள்ள இடர்நேர்வுகளை பண்புசார் கூற்றுகள் பிரதானமாக உள்ளடக்குகின்றது. தொழில் பிரிவு மட்டத்தில் இடர்நேர்வு ஏற்பு வரையறைகளாக கொடுகடன், பங்கு மூலதனம், வட்டி வீதம், வெளிநாட்டுச் செலாவணி மற்றும் தொழிற்படு ஆகிய இடர்நேர்வு வகைகளாக காணப்படுகின்றன.

வரையறை கட்டமைப்புகள், வரவு செலவுத்திட்ட மட்டங்கள், முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகள் என்பவற்றை பயன்படுத்தி மிகவும் முன்மதிமிக்க இடர்நேர்வு ஏற்பு மட்டங்களை நிர்ணயிப்பதற்கு பிரிவு மற்றும் உற்பத்தி வகுப்பு மட்டங்களில் மேலிருந்து கீழான மற்றும் கீழிருந்து மேலான அணுகுமுறையின் ஒருங்குதல் பயன்படுத்தப்படுகின்றது.

## இடர்நேர்வு ஏற்பு தொகுதியமைப்பு - உபாய மட்டம் →

| கூறு | அளவீடு % | 2020- உண்மையானது | இடர்நேர்வு ஏற்புக்கு எதிரானது |
|---|---|---|---|
| இலாபத்தன்மை | பங்குமூலதனம் மீதான ஆதாயம் | 20.67 | ✔ |
| | சொத்துகள் மீதான ஆதாயம் | 1.24 | ✔ |
| மூலதனப்போதுமை | பொதுவான பங்குமூலதனம் அடுக்கு 1 | 12.03 | ✔ |
| | அடுக்கு 1 | 13.65 | ✔ |
| | மொதத்த மூலதனம் | 16.45 | ✔ |
| திரவத்தன்மை | திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் (அனைத்தும்) | 307.22 | ✔ |
| | நியதி திரவத்தன்மை சொத்து விகிதம் | 69.10 | ✔ |
| | தேறிய நிலையான நிதியளித்தல் விகிதம் | 169.00 | ✔ |
| முடுக்கி | முடுக்கி | 6.64 | ✔ |

**இடர்நேர்வு மட்டங்கள்**

✔ இடர்நேர்வு ஏற்பு மட்டத்தினுள் ✔ உயர்ந்தபட்ச சகிப்பு மட்டத்திற்கு கீழ் ✔ உயர்ந்தபட்ச சகிப்பு மட்டத்தினுள்

அட்டவணை 19 முக்கிய இடர்நேர்வு ஏற்பு அளவீட்டுமுறை

வங்கியின் இலாபத்தன்மை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேம்பட்டது. முக்கிய உபாயமட்ட இடர்நேர்வு ஏற்பு குறிகாட்டிகள், இடர்நேர்வு ஏற்பு வரையறைகளினுள் காணப்படுகின்றன.

இலாபத்தன்மை, திரவத்தன்மை மற்றும் முடுக்கி என்பவற்றுக்கு நிர்ணயிக்கப்பட்ட இடர்நேர்வு மட்டங்களுக்கு மேல் வங்கி காணப்பட்டது. மூலதனப் போதுமை விகிதம் குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தலினுள் காணப்படுகின்றது: எனினும் தூண் II இடர்நேர்வுகள் மற்றும் தகைவுப் பரிசோதனை என்பவற்றை உள்ளடக்குவதற்கான காப்பாக உயர்வான மூலதன அளவினை பேணுவதற்கு வங்கி விரும்புகின்றது.

கொடுகடன், சந்தை, திரவத்தன்மை, தொழிற்பாடு, இணங்குவித்தல், நற்பெயர், உபாயம் போன்ற உள்ளக மற்றும் வெளிவாரி மூலங்களினால் தூண்டப்படும் நிதியியல் மற்றும் நிதிசாரா இடர்நேர்வுகளுக்கு தொடர்ச்சியாக உள்ளாவதன் விளைவாக செயலாற்றுகை அத்துடன் வங்கியின் ஒட்டுமொத்த தொழிற்பாடு மீதான பாதகமான தாக்கத்தினை குறைப்பதற்கு ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பொன்றினை வங்கி ஊக்குவிக்கின்றது என்பது மிக முக்கியமாகும். தோற்றம்பெறுகின்ற அத்துடன் ஏற்கனவே காணப்படுகின்ற இடர்நேர்வுகளை கொண்ட விரிந்த பரப்பினை உள்ளடக்குவதற்கு தோதானவாறு ஒவ்வொரு விடயத்திற்கும் தாபிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடனும் ஆளுகையுடனும் ஒருங்கிணைக்கப்பட்ட விதமொன்றில் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## கொடுகடன் இடர்நேர்வு

கொடுகடன் இடர்நேர்வு என்பது வங்கிக்கான அதன் நிதியியல் அல்லது ஒப்பந்த கடப்பாடுகளை கடன்பெறுனர் அல்லது இணைத்தரப்பினர் நிறைவேற்றுவதற்கு முடியாமை அல்லது தவறுதல் காரணமாக காசுப் பாய்ச்சல்களுக்கு இடையூறுகள் மற்றும் சேகரிப்புச் செலவில் அதிகரிப்பு என்பவற்றில் இருந்து தோன்றுகின்ற சாத்தியமான நிதியியல் நட்டத்தைக் கொண்ட இடர்நேர்வாகும். இது நேரடியான கடன் வழங்கல் செயற்பாடுகளில் இருந்தும் அதேபோன்று கடப்பாடுகள் மற்றும் எதிர்பாராதவைகள் என்பவற்றில் இருந்தும் தோன்றக்கூடியன.

வங்கிக்கான கொடுகடன் இடர்நேர்வானது இணைத்தரப்பு தவணைதவறுதல் இடர்நேர்வு, திரட்சி இடர்நேர்வு, தீர்ப்பனவு இடர்நேர்வு, எஞ்சியுள்ள கொடுகடன் இடர்நேர்வு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் உயர்ந்தபட்ச தன்மை 2020 இல் ரூபா 1,317.3 பில்லியனுக்கு 19.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இது பிரதானமாக கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் காரணமாக நாட்டில் நிலவிய சவால்மிக்க பொருளாதார சூழலுக்கு மத்தியில் வங்கியின் மொத்த சொத்துகளின் 96.6 வீதத்தினை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது. கடன்கள் மற்றும் முற்பணங்கள், படுகடன் அத்துடன் ஏனைய சாதனங்கள் என்பன வங்கிக்கான கொடுகடன் இடர்நேர்வின் முக்கிய மூலங்களாகும்.

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | உயர்ந்தபட்ச கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை 2020 ரூ. ’000 | உயர்ந்தபட்ச கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை 2019 ரூ. ’000 | மாற்றம் % |
|---|---|---|---|
| காசும் காசுக்கு சமமானவையும் | **6,491,963** | 5,376,715 | 20.7 |
| மத்திய வங்கியுடனான இருப்புகள் | **–** | – | – |
| வங்கிகளுடனான இருப்புகள் | **13,253,499** | 12,364,469 | 7.2 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **19,897** | 11,622 | 71.2 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள் | | | |
| – சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்டவை | **11,221,746** | 11,459,882 | -2.1 |
| – சீர்மதிப்பு பெறுமதியில் நியமிக்கப்பட்டவை | **–** | – | – |
| கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் | | | |
| – கடன்களும் முற்பணங்களும் | **516,795,160** | 454,394,957 | 13.7 |
| – படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | **754,233,344** | 615,634,321 | 22.5 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் | **15,271,822** | 3,478,811 | 339.0 |
| **கூட்டு மொத்தம்** | **1,317,287,431** | 1,102,720,778 | 19.5 |

அட்டவணை 20 உயரந்தபட்ச இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை (ஐந்தொகை மீதான இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை)

சில்லறை கடன்வழங்கல் சொத்துப் பட்டியலானது கொடுகடன் வளர்ச்சிக்கான அதிகூடிய பங்களிப்பினை வழங்கியுள்ளதுடன் 24.3 சதவீதத்தினால் (ஆண்டுக்கு ஆண்டு) அதிகரித்த அதேவேளை நிறுவனக் கடன்வழங்கல் சொத்துப் பட்டியல் 9.8 சதவீதத்தினால் (ஆண்டுக்கு ஆண்டு) அதிகரித்துள்ளது. தனிப்பட்ட கடன் உற்பத்தி, ஆண்டின் போது அதிகூடிய வளர்ச்சியினை (41.2%) அறிக்கையிட்டு சில்லறை கடன்வழங்கல் சொத்துப் பட்டியலில் 58.6 சதவீதமாக உள்ளடக்கத்தினை அதிகரித்தது.

### ஐந்தொகை மீதும் வெளியிலும் இடர் நேர்வுக்குள்ளாகும் தன்மை

வரைபடம் 22




### கடன்கள் மற்றும் முற்பணங்கள் சொத்துப்பட்டியல் கலப்பு

வரைபடம் 23




### சில்லறைக் கடன் சொத்துப்பட்டியல்

வரைபடம் 24




| | 2020 | 2019 |
|---|---|---|
| A – வீட்டு மற்றும் ஆதனக் கடன்கள் | 21.0% | 24.4% |
| B – தனிப்பட்ட கடன்கள் | 58.6% | 51.6% |
| C – வைப்புகளுக்கெதிரான கடன்கள் | 8.3% | 10.9% |
| D – அடகு | 11.6% | 12.5% |
| E – வாகனம் | 0.5% | 0.6% |

**நிறுவனக் கடன் சொத்துப்பட்டியல்** வரைபடம் 25

2020




2019




| | 2020 | 2019 |
|---|---|---|
| A – நிறுவனக் கடன்கள்- அரசுக்கு உரித்தான தொழில்முயற்சிகள் மற்றும் இலங்கை அரசாங்கம் | 71.4% | 71.3% |
| B – வங்கிகளுக்கான கடன்கள் | 8.2% | 10.5% |
| C – நிறுவனக் கடன்கள் - ஏனையவை | 2.9% | 11.1% |
| D – ஏனைய சாதனங்கள் | 17.5% | 7.1% |

அரசாங்கத்திற்கு உரித்தான உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கியாக தேசிய சேமிப்பு வங்கியானது கொவிட் மூலம் பாதிக்கப்பட்ட தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு கணிசமாக பங்களித்தது. வங்கி, கொவிட்-19 மூலம் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களுக்கும் தொழில் வாடிக்கையாளர்களுக்கும் படுகடன் செலுத்தும் கால நீடிப்பு, வட்டி வீத சலுகைகள் மற்றும் வழங்கப்பட்ட புத்துயிரளித்தல் வசதிகளில் பங்களிப்பதற்கு வேறு நிவாரணங்களை வழங்குதல் போன்றவற்றை வழங்கி இருந்தது.

நுகர்வு நோக்கங்களுக்கான சில்லறை கடன்வழங்கல் மூலம் பிரதானமாக தூண்டப்பட்டு 2020 இல் கடன் வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. ஆண்டின் போது அதிகரித்த தவணைதவறுதல் இடர்நேர்வு காணப்பட்ட போதிலும், 2021 மார்ச் வரை செயற்பாட்டில் இருந்த கடன் செலுத்தும் கால நீடிப்பு மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நெகிழ்வுத்தன்மை அத்துடன் ஒழுங்குமுறைபடுத்தல் மற்றும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனதின் வகைப்படுத்தல் மற்றும் சேதஇழப்பு இனங்காணல் நோக்கம் என்பன மூலம் சொத்துத்தரம் மீதான முழுமையான தாக்கம் குறைவடைந்தது.

முனைப்பான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதற்கு, படுகடனை செலுத்தும் கால நீடிப்பு முடிவடைந்ததன் பின்னர் செயற்படா கடன்கள் அதிகரிக்கும் சாத்தியம், எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரியினை பயன்படுத்தி சேதஇழப்பு ஏற்பாடு மற்றும் வேறுபட்ட சூழ்நிலைகளின் கீழ் இலாபத்தன்மை மீதான அதன் தாக்கம் என்பன மதிப்பிடப்பட்டன.

## கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் →

### இணைத்தரப்பு இடர்நேர்வு

இணைத்தரப்பு இடர்நேர்வானது உடன்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இணைத்தரப்பினர் அவர்களது நிதியியல் கடப்பாடுகளை நிறைவு செய்யாமையில் இருந்து தோன்றுவதுடன் வங்கிக்கான கொடுகடன் இடர்நேர்விற்கு மிக முக்கிய கூறாக காணப்படுகின்றது.

இணைத்தரப்பு முகாமைத்துவச் செயன்முறையானது ஒழுங்குமுறைப்படுத்துனராலும் பாசல் வழிகாட்டல்கள் மூலமும் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக வகுக்கப்பட்ட கொடுகடன் இடர்நேர்வு முகமைத்துவ நுட்பங்கள் மற்றும் கருவிகளை கொண்ட கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு ஊடாக பிரதானமாக முகாமைசெய்யப்படுகின்றது. வாடிக்கயைாளர் உரிய விழிப்புக் கவனம், கொடுகடன் வரையறைக் கட்டமைப்பு இடர்நேர்வு ஏற்பு மற்றும் சகிப்பு கட்டமைப்பு தரப்படுத்தல் முறைமை, கடன் பகிர்த்தளிக்கப்பட்ட பின்னர் கண்காணித்தல் மற்றும் கடன் மீளாய்வுப் பொறிமுறை என்பன இணைத்தரப்பு தவணைதவறுதல் இடர்நேர்வினை முகாமைசெய்வதற்கு வங்கிக்கு வசதியளிக்கின்றன.

2020 டிசம்பர் அன்று உள்ளவாறு 2.8% கொண்ட வங்கியின் மொத்த செயற்படா கடன் விகிதம் 4.9% கொண்ட தொழிற்துறை மொத்த செயற்படா கடன் விகிதத்திற்கு கீழ் காணப்பட்டது. இநிஅறி 9 வகைப்படுத்தலுக்கு அமைவாக 2020 ஆம் ஆண்டுக்காக கொடுகடன் சேதமிழந்த (கட்டம் 3) கடன்கள் ரூபா 16.9 பில்லியன் (2019 இல் ரூபா 9.1 பில்லியன்) ஆக காணப்பட்டது. இது வங்கியின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் 3.2% (2019 இல் 2.0%) ஆகும்.

## கொடுகடன் இடர்நேர்வு மீளாய்வு →

| இடர்நேர்வுகு: கூறு | விபரம் | கண்காணித்தல்/முகாமைத்துவக் கருவிகள் | இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | தாக்கத்தின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றம்* |
|---|---|---|---|---|
| இணைதரப்பினர் தவணைதவறுதல் இடர்நேர்வு | இணங்கிய நியதிகளுக்மைவாக வங்கியுடனான ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இணைதரப்பினர் தவறுகினறமை காரணமாக சாத்தியமான தாக்கம். | • வரையரை கண்காணித்தல்<br>• முன்னெச்சரிக்கை குறிகாட்டிகள், செயலாற்றமற்ற கணக்கு போக்குகளை கண்காணித்தல்<br>• கடன் மீளாய்வுப் பெறிமுறை<br>• கடன் தரப்படுத்தல்/புள்ளியிடல், தகைவுச் சோதனை | உயர்வானது | தாக்கம் அதிகரிப்பு |
| திரட்சி இடர்நேர்வு | தொழிற்துறையொன்றுக்கு அல்லது புவியியல் பிராந்தியத்திற்கான கடனில் எதிர்தரப்பினர்களின் ஒழுங்கற்ற பரம்பல் | • ஹேர்பின்டால்-ஹிர்ஸ்சமன் சுட்டெண் (HHI)<br>• வரையறையினைக் கண்காணித்தல்<br>• தகைவுச் சோதனை | மிதமானது | மாற்றமில்லை |
| தீர்ப்பனவு இடர்நேர்வு | தீர்ப்பனவு நேரத்தில் ஒப்பந்தமொன்றின் நியதிகளை நிறைவேற்றத் தவறுவதன் காரணமாக சாத்தியமான தாக்கம் | • வரையறையினைக் கண்காணித்தல்<br>• முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகளை செலாற்றமற்ற கடன்கள் போக்கினை கண்காணித்தல் | மிதமானது | மாற்றமில்லை |
| எஞ்சிய இடர்நேர்வு | இல்லாதொழிக்கப்பட்ட, காப்பிடப்பட்ட, அல்லது வேறுவகையில் வகைகூறப்பட்ட பின்னர் எஞ்சியுள்ள இடர்நேர்வுகளில் இருந்து தோன்றுகின்ற சாத்தியமான தாக்கம் | • பிணையஉறுதியாக்குதல்<br>• விலைமதிப்பீட்டினை/மீள்விலைமதிப்பீட்டினை கண்காணித்தல்<br>• பெறுமதி விகிதங்களுக்கான கடன் கண்காணிப்பு | மிதமானது | மாற்றமில்லை |

* வருவாய் மற்றும் மூலதனம் மீதான தாக்கத்தின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றம்

தாக்கம் அதிகரிப்பு | மாற்றமில்லை | தாக்கம் குறைவு

வுயடிடந 21 கொடுகடன் இடர்நேர்வு மீளாய்வு

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

ஆண்டுக்காக சேதமிழந்த (கட்டம் 3) படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் எதுவும் அறிக்கையிடப்படவில்லை.

ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்களில் அனுபவித்த அதிகரிக்கின்ற போக்கு சேதமிழந்தவையாக வகைப்படுத்தப்பட்டமை மீளாய்வுக்கு உட்படுகின்ற ஆண்டுக்காக ரூபா 9.0 பில்லியன் கொண்ட (2019 ரூ. 4.3 பில்லியன்) ஒன்றுதிரண்டு சேதஇழப்பு ஏற்பாட்டையும் ரூ. 4.9 பில்லியன் கொண்ட (2019 இல் ரூ. 0.6 பில்லியன்) சேதஇழப்பு அறவீட்டையும் ஏற்படுத்தியது.

மேம்பட்ட கொடுகடன் மதிப்பீடுகள், கடன் அனுமதிகள், செயல்திறன்வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு கட்டமைப்பு, அனுமதிக்குப் பிந்திய கண்காணிப்பு மற்றும் அறவீட்டு முயற்சிகள் என்பன செயற்படா கடன் அளவுகளை குறைப்பதற்கு உதவும் என்பதுடன் வங்கி ஏடுகளின் தரத்தினை பேணுவதற்கும் பங்களிக்கும்.

வங்கி முழுவதும் கொடுகடன் வழங்குதல் மற்றும் ஆவணப்படுத்தல் செயன்முறை என்பவற்றின் இடைவெளிகளை உடனடியாக இனங்கண்டு நிவர்த்திசெய்வதன் மூலம் கொடுகடனின் தொழிற்பாட்டு இடர்நேர்வினை தணிப்பதற்கு, கடன் மீளாய்வுப் பொறிமுறை செயல்திறன்வாய்ந்த கருவி ஒன்றாக பயன்படுத்தப்படுகின்றது. இது கொடுகடன் செயன்முறைப்படுத்தல் மற்றும் கொடுகடன் தரம் என்வற்றின் தர உத்தரவாதத்தினை உறுதி செய்கின்றது. இனங்காணப்பட்ட இடைவெளிகள் முன்கூட்டிய சீர்படுத்தலுக்காக கொடுகடன் குழுவுக்கு, சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு/ சபைக்கு தொடர்பூட்டப்படுகின்றன.

**கடன்கள் மற்றும் முற்பணங்கள் எதிர் சேதஇழப்பு ஏற்பாடு** வரைபடம் 26




**செயற்படாக் கடன் விகிதமும் செயற்படாக் கடன்களின் வயதுப் பகுப்பாய்வு** வரைபடம் 27




நாடு கடந்த இணைத்தரப்பினர்கள் வங்கியினை நாடு கடந்த இடர்நேர்வுக்கு உட்படுத்துகின்றனர். வெளிநாட்டு அரசாங்கங்கள் மூலம் எடுக்கப்படும் நடவடிக்கைகள், கொள்கைகளின் முக்கிய மாற்றங்கள் மற்றும் மாற்றக் கூடியதன்மை தொடர்பில் தொடர்பான நாடுகளின் ஒழுங்குவிதிகள் அத்துடன் வெளிநாட்டு நாணயத்தின் மாற்றல்செய்யத்தக்க தன்மை என்பவற்றின் விளைவாக ஒப்பந்த கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தவறுதல், வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்கு உள்ளாகும் தன்மையினை அதிகரிக்கின்றது. வங்கியின் நாடுகடந்த கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையானது மொத்த சொத்துகளில் 0.1% மாத்திரம் பிரதிநிதித்துவப்பத்துகின்ற மாலைதீவுகளுக்கான இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மைக்கு மட்டுப்படத்தப்பட்டுள்ளது.

## திரட்சி இடர்நேர்வு

திரட்சி இடர்நேர்வு என்பது குறித்த இணைத்தரப்பினருக்கு, தொழிற்துறைக்கு, உற்பத்திக்கு அல்லது புவியியல் பிரதேசத்திற்கான வங்கியின் கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையின் இடர்நேர்வுத் தொகுப்பில் சமவிகிதமற்ற சீர்குலைவிற்கு இட்டுச்செல்லுகின்ற அவ் இணைத்தரப்பினரின், தொழிற்துறைகளின், உற்பத்தியின் அல்லது புவியியல் பிரதேசத்தின் பாதகமான அபிவிருத்தி பற்றிய இடர்நேர்வாகும்.

துறைகள், இணைத்தரப்பினர்கள் மற்றும் புவியியல் பிரதேசங்கள் முழுவதும் கொடுகடன் சொத்துப் பட்டியலை பன்முகப்படுத்துவதன் ஊடாக திரட்சி இடர்நேர்வு பெரும்பாலும் முகாமைசெய்யப்படுகின்றது. வங்கியானது திரட்சி இடர்நேர்வு மட்டங்களை கண்காணிப்பதில் ஹேர்பின்டால்-ஹிர்ஸ்சமன் சுட்டெண் மற்றும் தகைவுச் சோதனை போன்ற நுட்பங்களை பயன்படுத்துகின்றது.

தொழில் மாதிரி மற்றும் அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கு பங்களிப்பு செய்யப்பட்ட மட்டம் என்பவற்றை கருத்தில் கொண்டு துறைசார் திரட்சியினை நோக்கிய மிதமான இடநேர்வு ஏற்பொன்றினை இடர்நேர்வு ஏற்புக் கூற்று வரையறை செய்கின்றது.

வங்கியானது இணைத்தரப்பு மட்டங்களுக்கு எதிராக கொடுகடன் இடநேர்வுக்குள்ளாகும் தன்மைகளை கண்காணிப்பதுடன் இடநேர்வு ஏற்பினுள் பெயர்திரட்சி காணப்படுவதை உறுதி செய்கின்றது. அனைத்து பாரிய கடன்களும் தலைமை அலுவலக கொடுகடன் பிரிவில் பதிவு செய்யப்பட்டு வருவதனால் மேல் மாகாணம் உயர்வான புவியியல் பிரதேச திரட்சியாக காணப்படுகின்றது.

**புவியியல்சார்ந்த திரட்சி** வரைபடம் 28




| | 2020 | 2019 |
|---|---|---|
| A – மத்திய மாகாணம் | 6.7% | 5.9% |
| B – கிழக்கு மாகாணம் | 2.3% | 2.0% |
| C – வடமத்திய மாகாணம் | 3.9% | 3.4% |
| D – வட மேல் மாகாணம் | 6.8% | 6.0% |
| E – வடக்கு மாகாணம் | 3.0% | 2.7% |
| F – சப்ரகமுவ மாகாணம் | 5.0% | 4.3% |
| G – தென் மாகாணம் | 7.8% | 6.3% |
| H – ஊவா மாகாணம் | 4.7% | 4.0% |
| I – மேல் மாகாணம் | 59.8% | 65.4% |

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

### துறைசார் திரட்சி

வரைபடம் 29




| | 2020 | 2019 |
|---|---|---|
| A – விவசாயம் மற்றும் மீன்பிடி | 6.3% | 7.2% |
| B – சுற்றுலாத் துறை | 0.0% | 0.0% |
| C – போக்குவரத்து | 0.3% | 0.4% |
| D – நிர்மாணம் | 29.0% | 27.9% |
| E – நிதியியல் மற்றும் வியாபாரச் சேவைகள் | 1.6% | 2.5% |
| F – உட்கட்டமைப்பு | 18.4% | 15.5% |
| G – ஏனைய சேவைகள | 3.0% | 2.8% |
| H – அடகு | 1.7% | 8.0% |
| I – ஏனைய வாடிக்கையாள்கள் | 39.7% | 35.7% |

2020 ஆம் ஆண்டில் வங்கியின் கொடுகடன் சொத்துப் பட்டியலின் 25.5% அரசாங்க உத்தரவாதத்தினால் பிணையளிக்கப்பட்டதுடன் 14.3% அசையாக ஆதன ஈடுகளால் பிணையளிக்கப்பட்டுள்ளன.
அசையாத ஆதன ஈட்டுக்கடன்களுக்கு மத்தியில் கடன்களின் 78.3% பெறுமதிக்கான கடன் விகிதத்தின் 50% இற்கு குறைவுடன் கூடிய அசையாத ஆதனங்களினால் பிணையளிக்கப்பட்டிருந்தன. பிணைய உறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அசையாத ஆதன ஈடுகள் இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுடன் இணங்கும் விதத்தில் உருவாக்கப்பட்ட அசையாத ஆதனங்களின் விலைமதிப்பீடு மற்றும் மீள்விலை மதிப்பீடு மீதான வங்கியின் கொள்கையின் அடிப்படையில் மீள்விலை மதிப்பீடு செய்யப்படுகின்றன.

## தீர்ப்பனவு இடர்நேர்வு

தீர்ப்பனவு இடநேர்வு என்பது பெறுமதியினை வழங்குவதற்கு இணைத்தரப்பு ஒன்றின் தவறுகையிலிருந்து தோன்றுகின்றது. வழமையாக தீர்ப்பனவு நேரத்தில் ஒப்பந்த நியதிகளுக்கு அமைவாக ஒப்பந்தத்தின் துணையளிக்கின்ற சொத்தினை அல்லது காசுப் பெறுமதியினை வழங்க தவறுகின்றமையிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வாகும். தீர்பனவு இடநேர்வானது தீர்ப்பனவின் ஏதேனும் கால வேறுபாட்டுடன் இணைந்த தவணைதவறுதல் இடநேர்வுடன் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளது. கொடுகடன் தீர்ப்பனவு இடநேர்வு, வங்கியின் வரையறை கட்டமைப்பின் ஊடாக முகாமைசெய்யப்படுகின்றது.

## எஞ்சிய கொடுகடன் இடர்நேர்வு

எஞ்சிய கொடுகடன் இடர்நேர்வானது வங்கியின் உட்பொதிந்த இடர்நேர்வுகளை கட்டுப்பாட்டுப் பெறிமுறைகள் தணித்ததன் பின்னர் எஞ்சியுள்ள இடர்நேரவுத் தொகையாக இனங்காணப்படுகின்றது. ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டமொன்றில் எஞ்சிய இடர்நேர்வினை பேணும் பொருட்டு இடர்நேர்வு ஆளுகை கட்டமைப்பானது செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளுக்கான வலுவான கட்டுப்பாட்டு பொறிமுறைகளுடனும் கொள்கை மட்டத்தில் மற்றும் அறவீட்டு நடைமுறைகளில் வரையறைசெய்யப்பட்ட பெறுமதிக்கான கடன் விகிதத்திற்குட்பட்ட பிணையஉறுதியாக்கல் போன்ற இடர்நேர்வு தணிப்பு நுட்பங்களுடனும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

தனிப்பட்ட உத்தரவாதங்கள் மூலம் பிணையளிக்கப்பட்ட தனிப்பட்ட கடன்களின் தொகுப்பில் அதிகரிப்பினால், கொடுகடனில் காணப்படும் எஞ்சிய இடர்நேர்வில் அதிகரிப்பொன்று காணப்படுகின்றது எனினும்,

### பிணைய உறுதி வாரியாக கடன் சொத்துபட்டியலும் அசையாத ஆதனங்களினால் பிணையளிக்கப்பட்ட கடன்களின் பெறுமதிக்கான கடன் பரம்பலும்

வரைபடம் 30




| | 2020 |
|---|---|
| A – தனிப்பட்ட உத்தரவாதம் | 37.7% |
| B – திறைசேரி உத்தரவாதம் | 25.5% |
| C – பிணையளிக்கப்படாதவை | 4.7% |
| D – தங்கம் | 7.6% |
| E – காசு | 5.4% |
| F – ஏனையவை | 4.0% |
| G – கிடைக்கத்தக்க குத்தகை | 0.5% |
| H – அசையும் ஆதனம் | 0.3% |
| I – நிறுவன உத்தரவாதம் | 0.0% |
| J – அசையாத ஆதனம் | 14.3% |
| K – 50% ஐ விடக் குறைவான பெறுமதிக்கான கடன் | 78.3% |
| L – 50% – 75% இடையிலான பெறுமதிக்கான கடன் | 19.8% |
| M – 75% இற்கு அதிகமான பெறுமதிக்கான கடன் | 1.9% |

## சந்தை இடர்நேர்வு

சந்தை இடநேர்வு என்பது நிதியியல் சந்தை வீதங்கள் அல்லது விலைகளில் பாதகமான மாற்றங்களின் காரணமாக பொருளாதார பெறுமதி இழப்பிற்கான வாய்ப்பாகும். இலங்கை மத்திய வங்கி 2019 இன் 6ம் இலக்க பணிப்புரை – “திறைசேரி தொழிற்பாடுகளுக்கான சந்தை நடத்தை மற்றும் நடைமுறைகள்” இனை வழங்கியதுடன் சந்தை இடநேர்வு முகாமைத்துவ தொழிற்பாட்டின் தேவைப்படுத்தலையும் முக்கியத்துவத்தினையும் வலுப்படுத்தியுள்ளது. வங்கியின் சந்தை இடநேர்வுக்குள்ளாகும் தன்மை பின்வரும் மூலங்களில் இருந்து பெரும்பான்மையாக தோன்றுகின்றது:

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

## வர்த்தகப்படுத்தல் ஏடு →

வர்த்தகப்படுத்தல் ஏடு என்பது நிதியியல் சந்தையில் வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தக செயற்பாடுகளில் இருந்து விளைகின்ற நட்டத்திற்கான சாத்தியப்பாடாகும். வங்கியின் வர்த்தப்படுத்தல் ஏடானது அரசாங்க பிணையங்கள், பங்குரிமை மூலதனங்கள் மற்றும் வெளிநாட்டு நாணய திறந்த நிலைகள் என்பவற்றின் முதலீடுகளை உள்ளடக்குகின்றது. வர்த்தகபடுத்தல் ஏட்டில் நிலைகளை வைத்திருப்பதன் காரணமாக வங்கி சந்தை இடநேர்வுக்கு உள்ளாகின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியின் வர்த்தகப்படுத்தல் ஏடு, ரூ. 11.2 பில்லியன் தொகை கொண்டதாக இருந்தது. இது வங்கியின் மொத்த சொத்துகளின் 0.8% ஐக் கொண்டது.

– **வட்டி வீத இடர்நேர்வு:** விளைவு வளையிகளின் மற்றும் மீள் விலையிடல் பரம்பல்களில் மாற்றங்களில் இருந்து தோன்றுகின்றது.

– **பங்குமூலதன இடர்நேர்வுகள்:** பங்குமூலதன முதலீடுகளின் விலைகளின் மாற்றங்களில் இருந்து தோன்றுகின்றது.

– **வெளிநாட்டு செலாவெணி வீத இடர்நேர்வு:** நாணய மாற்றுவீதங்களின் மாற்றங்களில் இருந்து தோன்றுகின்றது.

– **பண்ட இடர்நேர்வு:** பண்ட விலை இடநேர்வுக்கு வங்கி புறக்கணிக்கத்தக்க உட்படுதலையே கொண்டுள்ளது. அடகு சொத்தப் பட்டியல் மீதான தங்க விலையின் தலம்பல்கள் என்ற ரீதியில் இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## வரத்தகப்படுத்தல் அல்லாதவற்றின் ஏடு →

வங்கி போதிய திரவத்தன்மை சொத்துகள் தாங்குதளத்தினை வைத்திருக்கின்றது, அவற்றில் அதிகமானவை உயர்தரமிக்க சந்தைப்படுத்தத்தக்க அரசாங்க பிணையங்களாகும் என்பதனை சொத்து பொறுப்பு முகாமைத்துவ கருமபீடம் உறுதிசெய்கின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் அரசாங்க பிணையங்களில் மொத்த மூதலீடுகள் (இலங்கை அபிவிருத்தி முறிகள் உள்ளடங்களாக) ரூ. 740.9 பில்லியன் தொகையுடையதாக இருந்தது. இது வங்கியின் மொத்த சொத்துகளின் 54.3%ஐ உள்ளடக்குகின்றது.

வங்கியானது வெளிநாட்டு நாணயக் கடன்கள் மற்றும் இலங்கை ரூபாய் தவிர்ந்த நாணயங்களில் மாற்றப்பட்ட தொடர்புபட்ட வருமானத் துறைகளில் இடர்நேர்வுக்குட்படுதலை கொண்டுள்ளது. இவை காப்பளிக்கப்படவில்லை என்ற ரீதியில் வங்கியானது ஒதுக்குகளில் பிரதிபலிக்கப்படுகின்ற கட்டமைப்புசார் வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வுக்கு உட்படுகின்றது.

## சந்தை இடர்நேர்வு மீளாய்வு →

| இடர்நேர்வுக் கூறு | விபரம் | கண்காணித்தல்/முகாமைத்துவக் கருவிகள் | இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | தாக்கம்* |
|---|---|---|---|---|
| **வட்டி வீத இடர்நேர்வு** | | | | |
| மீள்விலையிடல் இடர்நேர்வு | ஐந்தொகை மீதும் ஐந்தொகைக்கு வெளியிலும் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மீதான வீத உணர்விலிருந்தான வீத மாற்றங்கள் அல்லது காசுப் பாய்ச்சல்களுக்கு இடையிலான கால வேறுபாடுகளில் நிகழுகின்றபோது இவ்விடர்நேர்வு தோன்றுகின்றது. | • மீள்விலையிடல் இடைவெளி எல்லைகளை கண்காணித்தல்<br>• வீத உணர்வுமிக்க சொத்துகள் மற்றும் வீத உணர்வுமிக்க பொறுப்புகள் என்பவற்றை கண்காணித்தல் | உயர்வானது | தாக்கம் குறைவு |
| விளைவு வளையி இடர்நேர்வு | நீண்ட கால வீதங்களின் கூடிய அல்லது குறைவான மாற்றங்கள் மூலம் குறுகிய கால வீத மாற்றங்களின் இடர்நேர்வு. | • உணர்வுத் தன்மை/வீத அதிர்வுகளுடன் தகைவுச் சோதனை | உயர்வானது | தாக்கம் குறைவு |
| அடிப்படை இடர்நேர்வு | ஒரே மாதிரியான முதிர்வு அல்லது மீள்விலையிடல் திகதிகளுடன் கூடிய வீத உணர்வுமிக்க சொத்துகள் மற்றும் வீத உணர்வுமிக்க பொறுப்புகள் மீதான வட்டி வீதங்களில் சமமற்ற அசைவுகளிலிருந்தான இடர்நேர்வு. | • வீத உணர்வுமிக்க சொத்துகள் மற்றும் வீத உணர்வுமிக்க பொறுப்புகள் மீதான வீத அதிர்வுகளின் உணர்வுத் தன்மை | உயர்வானது | தாக்கம் குறைவு |
| **வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு** | வெளிநாட்டு நாணய நிலைமைகளில் முதிர்வுப் பொருத்தமின்மைகளிலிருந்து தோன்றுகின்ற செலாவணி வீதங்களின் பாதகமான மாற்றங்களில் இருந்து தோன்றுகின்ற வருவாய் அல்லது மூலதனம் மீதான சாத்தியமான தாக்கம். | • எல்லைகளை கண்காணித்தல் இடர்நேர்வில் உள்ள வெளிநாட்டு செலாவணி பெறுமதி<br>• தகைவுச் பரிசோதனை | நடுத்தரமானது | தாக்கம் அதிகரிப்பு |
| **பங்கு மூலதன விலை இடர்நேர்வு** | பங்குமூலதனச் சந்தைகளிலிருந்தான மாற்றங்களில் இருந்து தோன்றுகின்ற சாத்தியமான நட்டங்கள். | • எல்லைகளை கண்காணித்தல்<br>• இடர்நேர்விலுள்ள பங்குமூலதனப் பெறுமதி<br>• நாளாந்த அடிப்படையில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்ப்ப பெறுமதி மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சிர்மதிப்பு பெறுமதி சொத்துப்பட்டியலின் சந்தைப் பெறுமதி வர்த்தகப்படுத்தல் | குறைவானது | மாற்றமில்லை |
| **பண்ட விலை இடர்நேர்வு** | பண்டங்களின் விலைகளில் (தங்கம்) மாற்றங்களின் காரணமாக வருவாய் மீது சாத்தியமான எதிர்மறையான தாக்கம் | • அடகு முற்பணங்களுக்கு எதிரான பிணையஉறுதிப் பெறுமதி மீதான நேரடியற்ற தாக்கம் | குறைவானது | தாக்கம் குறைவு |

*வருவாய் மற்றும் மூலதனம் மீதான தாக்கத்தின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றம்

தாக்கம் அதிகரிப்பு    மாற்றமில்லை    தாக்கம் குறைவு

அட்டவணை 22 சந்தை இடர்நேர்வு மீளாய்வு

| 2020 டிசம்பர் 31இல் உள்ளவாறு | நிதியியல் கூற்றுக்கமைவான தொகைகள் (ரூ. '000) | வர்த்தகப்படுத்தல் இடர் நேர்வுக்குள்ளாகும் தன்மை (ரூ. '000) | வர்த்தகப்படுத்தல் அல்லதா இடர் நேர்வுக்குள்ளாகும் தன்மை (ரூ. '000) | சந்தை இடர்நேர்வு வகை |
|---|---|---|---|---|
| **நிதியியல் சொத்துகள்** | | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 6,491,963 | – | 6,491,963 | IRR, FX |
| வங்கிகளுடனான இருப்புகள் | 13,253,499 | – | 13,253,499 | IRR,FX |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 19,897 | – | 19,897 | IRR |
| சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் | 11,221,746 | 11,221,746 | – | IRR,Equity |
| கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் | 516,795,160 | – | 516,795,160 | IRR,FX |
| கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 754,233,344 | – | 754,233,344 | IRR,FX |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சருமதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் | 15,271,822 | – | 15,271,822 | IRR,Equity |
| **மொத்தம்** | 1,317,287,431 | 11,221,746 | 1,306,065,685 | |
| **நிதியியல் பொறுப்புகள்** | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தவேண்டியவை | 12,862,337 | – | 12,862,337 | IRR, FX |
| கடன்தீர் செலவில் நிதியியல் பொறுப்புகள் – வாடிக்கையாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 1,237,123,791 | – | 1,237,123,791 | IRR,FX |
| கடன்தீர் செலவில் நிதியியல் பொறுப்புகள் – ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தவேண்டியவை | 8,159,591 | – | 8,159,591 | IRR,FX |
| குத்தகைப் பொறுப்பு | 1,274,713 | – | 1,274,713 | IRR |
| வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள் | 31,773,753 | – | 31,773,753 | IRR |
| **கூட்டு மொத்தம்** | 1,291,194,186 | – | 1,291,194,186 | |

அட்டவணை 23 ஐந்தொகைக்கான சந்தை இடர்நேர்வு விடயங்களை தொடர்புபடுத்தல்

நாட்டின் கொரேனா வைரஸ் உலகலாவிய நோய்த்தொற்று பரவலானது நிதியியல் மற்றும் மூலதன சந்தையின் உறுதியின்மையையும் நிச்சயின்மையினையும் அதிகரித்து முறைமை சார்ந்த இடர்நேர்வினை அதிகரிக்கின்ற சவால்மிக்க பொருளாதார சூழலொன்றினுள் வங்கியின் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வினை முகாமைசெய்வதன் முக்கியத்துவத்தினை அதிகரித்துள்ளது.

பொருளாதார நிச்சயமின்மையின் காரணமாக 2020 மார்ச்சில் செத்துகளின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனைகள் குறைவான விலையில் இடம்பெற்றுள்ளன. நாடு முடக்கப்பட்டதன் காரணமாக பங்குமூலதனச் சந்தை ஏறக்குறை 2 மாதங்கள் மூடப்பட்டிருந்துடன் அதன் விளைவாக அரசாங்க பிணையங்களுக்கான கேள்வி அதிகரித்தது.

எவ்வாறாயினும், பொருளாதார நடவடிக்கையினை துாண்டுவதற்கான அரசாங்கத்தின் தலையீடுகளின் காரணமாக ஆண்டு காலப்பகுதியில் சந்தைத் திரவத்தன்மை மட்டம் அதிகரித்தது. இது பொருளாதார வட்டி வீதங்கள் குறைவதற்கு வழிவகுத்தது. மரபுசார்ந்த மற்றும் மரபுசாராத நாணய கொள்கை வழிமுறைகளினால் துணையளிக்கப்பட்ட வட்டி வீதங்களிலான குறைப்பு பிணை விளைவுகளில் வீழ்ச்சியொன்றினை தோற்றுவித்தது. குறைவடைந்த வட்டி வீதங்கள் மற்றும் விளைவுகள் என்பன மூலம் ஆண்டின் பிந்திய பகுதியில் முதலீட்டாளர்கள் நிதியங்கள் பங்குமூலதனச் சந்தைக்கு இடம்மாறி கொழும்பு பங்குப் பரிவத்தனை பிரதான சுட்டெண் 4,200 கொண்ட குறைவான மட்டங்களில் இருந்து 6,700 மட்டத்திற்கு மேல் உயர்வடைந்து 2020 மே இல் 59% கொண்ட மேல் நோக்கிய அதிகரிப்பினை பதிவுசெய்தது.

மேலும் வீழ்ச்சியடைந்த ஏற்றுமதி வருவாய்கள், குறைவடைந்த பணியாளர் பணம் அனுப்பல் மற்றும் சுற்றுலாவில் இருந்து குறைவடைந்த வருவாய்கள் அத்துடன் படுகடன் மீளச் செலுத்தல்கள் காரணமாக நாட்டின் வெளிநாட்டு செலாவணி ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்து அதிகரித்த தலம்பலுடன் சேர்த்து இலங்கை ரூபா ஆண்டு காலப்பகுதியில் 2.8% (இலங்கை மத்திய வங்கி நடு வீதம்) பெறுமானத்தேய்வடைந்தது.

2020 காலப்பகுதியில் நிச்சயமின்மைகளின் காரணமாக முதலீட்டாளர்கள் இடர்நேர்வுமிக்க சொத்துகளில் இருந்து பாதுகாப்பான முதலீடுகளை நோக்கி நகர்ந்தமையால் உலக தங்க விலைகள் ஏறத்தாழ 28% இனால் அதிகரித்தன.

முன்மதிமிக்க இடர்நேர்வு வரையறைகள், வங்கியின் உள்ளக கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை கடைப்பிடித்தல், சிறந்த சந்தை நடத்தைகள் அத்துடன் சந்தை மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வுகள் பற்றி தொடர்ச்சியான கண்கானித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பன அதிகரித்த முறைமை சார்ந்த இடர்நேர்வுகளில் இருந்து தோன்றுகின்ற சாத்தியமான தொழிற்பாட்டு மற்றும் மூலதன நட்டங்களை குறைப்பதற்கு வழிவகுத்தன. உள்ளக மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை கடைப்பிடித்து மீளாய்வுக்கு உட்படுகின்ற காலப்பகுதியில் பங்குமூலதன மற்றும் அரசாங்க பிணையங்கள் வர்த்தகப்படுத்தலில் இருந்து வங்கி நன்மைகளை பொறுக்கொள்ளும் விதத்தில் சிறப்பாக முகாமைசெய்யப்பட்டது.

## சந்தை இடர்நேர்வு முகாமைத்துவம் →

பாதுகாப்பின் முதல் நிலையாக செயற்படுகின்ற திறைசேரி முன்னரங்கு அலுவலகம், வங்கியின் வர்த்தக மற்றும் வர்த்தகமல்லாத சந்தை இடர்நேர்வுகள் இரண்டினதும் சபையினால் நிர்ணயிக்கப்பட்ட அதன் பணிப்புரை பொறுப்புகளின் நோக்கெல்லையினுள் செயல்திறன்வாய்ந்த முகாமைத்துவத்துவதற்கு பொறுப்புடையதாகும். திறைசேரி நடு அலுவலகமானது, பாதுகாப்பு முதல் நிலையின் வர்த்தகப்படுத்தப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளின் சுயாதீன கண்காணித்தலை செயலாற்றுகின்ற இரண்டாம் நிலைக் கட்டுப்பாட்டு தொழிற்பாடாக காணப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் கீழ், சந்தை இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது வர்த்தகப்படுத்தப்பட்ட இடர்நேர்வு மற்றும்

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

வர்த்தகப்படுத்தல் அல்லாத இடர்நேர்வு என்பவற்றுக்கான பொது அனைத்து இடர்நேர்வு வகைகளையும் காண்பிக்கின்ற இடர்நேர்வு அம்சங்களை ஒன்றாக சேர்க்கின்றது.

## பங்குமூலதன விலை இடர்நேர்வு

பங்குமூலதன இடர்நேர்வானது வருமானம் மற்றும் ஒதுக்குகளில் சாத்தியமான மாறுபாடுகளுக்கு வங்கியினை இடர்நேர்வுக்குள்ளாக்கி பங்குச் சந்தை இயலாற்றலின் காரணமாக பங்குமூலதன சொத்துப்பட்டியலில் உள்ள முதலீடுகளின் பெறுமதியினை தேய்வடையச்செய்கின்ற இடரினை குறிப்பீடு செய்கின்றது. வங்கியானது சாதாரண பங்குகள் மற்றும் கூறு நம்பிக்கைகள் இரண்டிலும் பட்டியலிடப்பட்ட அதன் பங்குமூலதன சாதனங்களில் இருந்து பங்குமூலதன விலை இடர்நேர்வுக்கு உட்படுகின்றது.

வங்கியின் பட்டியிலிடப்பட்ட பங்குமூலதன சொத்துப்பட்டியலானது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள சொத்துப்பட்டியல்கள் இரண்டினையும் உள்ளடக்குவதுடன் பங்குமூலதனத்தில் முதலீட்டு அடிப்படையானது அதன் இடர்நேர்வு வரையறைக் கட்டமைப்புகள் மூலமும் அதன் முதலீட்டுக் கொள்கைக் கூற்று மூலமும் இடைநடுப்படுத்தப்பட்டுள்ளது.

**பங்குமூலதன சொத்துப்பட்டியல் தொகுப்பு (முதலீடுகளின் ஏட்டுப் பெறுமதி)** வரைபடம் 31




| | 2020 | 2019 |
|---|---|---|
| A – இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பட்டியலிடப்பட்ட பங்குமூலதனம் | 42.2% | 47.5% |
| B – கூறு நம்பிக்கைகள் | 1.7% | 1.5% |

| | 2020 | 2019 |
|---|---|---|
| C – அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பட்டியலிடப்பட்ட பங்குமூலதனம் | 52.2% | 47.4% |
| D – அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பட்டியலிடப்பாத பங்குமூலதனம் | 3.9% | 3.6% |

| சொத்துப்பட்டியல் வகை | 2020 | | 2019 | | தேறாத இலாபம்/(நட்டம்) |
|---|---|---|---|---|---|
| | ஏட்டுப் பெறுமதி ரூ. '000 | சந்தைப் பெறுமதி ரூ. '000 | ஏட்டுப் பெறுமதி ரூ. '000 | சந்தைப் பெறுமதி சுள. '000 | ரூ. '000 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியியல் சொத்துப்பட்டியல் | **2,524,999** | **1,675,748** | 3,046,421 | 1,782,337 | 414,833 |
| அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்ப்பு பெறுமதியியல் சொத்துப்பட்டியல் | **3,006,094** | **2,514,374** | 2,940,930 | 3,208,101 | (758,891) |
| **மொத்தம்** | **5,531,093** | **4,190,122** | 5,987,351 | 4,990,438 | (344,058) |

அட்டவணை 24 பட்டியலிடப்பட்ட பங்குமூலதன சொத்துப்பட்டியல் நிலை

கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பிரதான சுட்டெண் 10.5 சதவீத அதிகரிப்புடன் 2020 ஆம் ஆண்டுக்காக மூடப்பட்டது. இது 2014 ஆம் ஆண்டு தொடக்கம் பதிவாகிய அதிகூடிய வருடாந்த ஆதாயமாக இருந்தது. 2020 ஆம் ஆண்டானது நாடு முழுவதும் உலகலாவிய தொற்றுநோயின் முதலாம் அலையின் காரணமாக ஏறத்தாழ இரண்டு மாதங்கள் மூடப்பட்டு ஆண்டு காலப்பகுதியில் சில சந்தைச் சூழற்சிகளுக்கு உட்பட்டிருந்ததன் பின்னர் கொழும்பு பங்கு பரிவர்த்தனை திறக்கப்பட்ட போது மேயில் சுட்டெண்கள் ஆகக் குறைந்த மட்டங்களை சென்றடைந்த கொவிட்-19 நோய்த்தொற்றின் உலகலாவிய பரவலின் காரணமாக நிச்சியமின்மைகள் நிறைந்த ஆண்டாக இருந்தது. அடிப்படை அளவீட்டு அனைத்து பங்கு விலைச்சுட்டெண் ஒரு தசாப்தத்திற்கு மேற்பட்ட காலப்பகுதியின் பின்னர் 4,215 கொண்ட அதன் ஆகக் குறைந்த புள்ளியினை அடைந்த பின்னர் ஆண்டு முடிவில் ஏறக்குறைய 4 ஆண்டுகள் உயர்விற்கு 6,774 ஆக உயர்வடைந்தது.

எனினும் எஸ் என்ட் பீஎஸ்எல் 20 சுட்டெண், 2020 இல் எதிர்மறையான 10.1% திகதிக்கான ஆண்டு வருவாயுடன் 2,638 இல் மூடப்பட்டது. முக்கிய சுட்டெண்ணின் மதிப்பேற்றத்தை கருத்தில் கொள்ளாது, இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் பங்குமூலதனச் சொத்துப்பட்டியலின் சந்தைப் பெறுமதி 2020 இறுதியில் ரூ. 1,675.7 மில்லியனக்கு ரூ. 106.6 மில்லியனால் குறைவடைந்தது. 2020 நிதியாண்டுக்காக வங்கி, பங்குமூலதன பிணையங்கள் வர்த்தகத்திலிருந்து ரூ. 445.6 மில்லியன் தேறிய இலாபத்தினை பெற்றுக்கொண்டது.

## வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு

வெளிநாட்டு நாணய இடர்நேர்வு என்பது செலாவணி வீதத்தில் எதிர்பாராத மற்றும் சாதகமற்ற தளம்பல்களின் விளைவாக வருவாய்கள் மற்றும் மூலதனம் மீது ஏற்படுகின்ற சாத்தியமான தாக்கமாகும். 2020 இன் போது ஐ.அ.டொ./ரூபா உடனடி வீதம் ரூ. 181.15 - ரூ. 194.87 என்ற வீச்சில் தளம்பலடைந்தது (மூலம்: புளூம்போர்க்). ஆண்டுக்கான ரூபா மதிப்பிறக்கம் 2.26% ஆகவிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டு மூலங்களில் இருந்து வெள்நாட்டு நாணய திரவத்தன்மையினை மேம்படுத்தவதற்கு இலங்கை மத்திய வங்கி பல வழிமுறைகளை எடுத்தது. மேலும், ஒதுக்கங்களைக் கட்டியெழுப்புவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு நாணயச் சந்தையிலிருந்து இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் வெளிநாட்டு நாணயத்தை கொள்வனவு செய்தது.

| நாணயம் | <1 மாதம் | 1-3 மாதங்கள் | 3-6 மாதங்கள் | 6-12 மாதங்கள் | 1-3 வருடங்கள் | 3-5 வருடங்கள் | >5 வருடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் | (12,849,451) | 15,573,904 | 1,794,424 | (23,940,000) | 16,831,931 | 4,234,200 | 898,800 | 2,543,808 |
| யூரோ | 2,267,437 | 1,471,758 | 2,700,484 | 682,459 | – | – | – | 7,122,138 |
| ஸ்ரேலிங் பவுண் | (560,876) | 1,624,867 | 1,137,656 | (1,830,680) | 139,579 | – | – | 510,546 |
| சிங்கப்பூர் டொலர் | 8,764 | – | – | – | – | – | – | 8,764 |
| அவுஸ்திரேலிய டொலர் | (563,533) | 978,387 | 2,256,003 | (2,178,871) | 87,011 | – | – | 578,997 |
| யப்பான் யென் | 244,372 | – | – | – | – | – | – | 244,372 |
| சுவிட்ஸர்லாந்து பிராங் | 3,431 | – | – | – | – | – | – | 3,431 |
| கனேடிய டொலர் | 26,078 | – | – | – | – | – | – | 26,078 |
| ஐக்கிய அரபு திர்ஹம் | 295 | – | – | – | – | – | – | 295 |

அட்டவணை 25 வெளிநாட்டு செலாவணித் தொழிற்பாடுகளுக்கான நாணய அடிப்படையிலான முதிர்வு இடைவெளிகள்

வெளிநாட்டு நாணய இடர்நேர்வானது அனைத்து வெளிநாட்டு நாணயங்களிலும் காப்பிடப்படாத நிலைமைகளுடன் இணைந்து காணப்படுகின்றன. தேறிய வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையினை கருத்திற்கொண்டு வெளிநாட்டு நாணய இடர்நேர்வுக்காக வங்கி, தரப்படுத்தப்பட்ட அளவீட்டு அணுகுமுறையின் கீழ் மூலதனத்தினை ஒதுக்கீடு செய்கின்றது. தரப்படுத்தப்பட்ட அளவீட்டு அணுகுமுறையானது உள்ளக விழிப்பு வரையறைகளுக்கெதிராக நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வுகடகுள்ளாகும் தன்மை ஐ.அ. டொலர் 11.8 மில்லியனாகும் இது, வங்கியின் மொத்தத மூலதனத்தின் 5.2% ஆகும்

**உள்ளக மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வரையறைகளுக்கு எதிரான நாளாந்த தேறிய திறந்த நிலை**

வரைபடம் 32




பங்குமூலதன வர்த்தகப்படுத்தல் ஏட்டுக்காகவும் வெளிநாட்டு நாணய தேறிய திறந்த நிலைக்காவும் இடர்நேர்வில் உள்ள பெறுதியினைப் பயன்படுத்தி வங்கி சந்தை இடர்நேர்வு மாற்றங்களை அளவிடுகின்றது. இடர்நேர்வில் உள்ள பெறுதி, வங்கியின் இடர்நேர்வு சகிப்பு மட்டத்தினுள் காணப்பட்டது.

## கட்டமைப்புசார்ந்த வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மைகள்

| நாணயம் | 2020 '000 | 2019 '000 |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | **1,672** | 906 |
| ஸ்ரேலிங் பவுண் | **567** | 511 |
| யப்பான் யென் | **244** | -1,935 |
| சிங்கப்பூர் டொலர் | **9** | 3 |
| யூரோ | **7,191** | 9,264 |

அட்டவணை 26 கட்டமைப்புசார்ந்த வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மைகள்

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

**இடர்நேர்விலுள்ள பங்குமூலதனப் பெறுமதி** வரைபடம் 33




நாட்டில் முடக்கல் காரணமாக 2020 மார்ச் 20 தொடக்கம் 2020 மே 10 வரை கொழும்பு பங்குப்பரிவத்தனை மூடப்பட்டது.

**இடர்நேர்விலுள்ள வெளிநாட்டு நாணயம்** வரைபடம் 34




## வட்டி வீத இடர்நேர்வு

வர்த்தகப்படுத்தப்பட்ட ஏட்டில் உள்ள வட்டி வீத இடர்நேர்வு வங்கியின் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைக்கப்பட்டுள்ள வட்டி உழைக்கின்ற முதலீட்டுச் சொத்துப் பட்டியலில் இருந்து தோன்றுகின்றது. வங்கியின் வட்டி உணர்வுமிக்க இலாபம் அல்லது நட்டம் ஊடான சீர்மதிப்பு பெறுமதியிலான முதலீடானது திறைசேரி உண்டியல்கள் முறிகள் இரண்டினையும் உள்ளடக்குகின்ற அரசாங்க பிணையங்களில் அதன் மொத்த முதலீடுகள் 1.5% ஆக இருந்தது. இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள அரசாங்க பிணையங்கள் சொத்துப் பட்டியலின் வட்டி வீத இடர்நேர்வானது தேறாத பெறுகை/இழப்பு மற்றும் வர்த்தகப்படுத்தல் ஏட்டில் வைக்கப்பட்டுள்ள பிணையங்களின் காலத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் மூலதன தேவைப்பாடு என்பன ஊடாக மதிப்பிடப்பட்டுள்ளது.

## வங்கித்தொழில் ஏட்டில் உள்ள வட்டி வீத இடர்நேர்வு

| | <1 மாதம் ரூ. மில். | 1-3 மாதங்கள் ரூ. மில். | 3-6 மாதங்கள் ரூ. மில். | 6-12 மாதங்கள் ரூ. மில். | 1-3 வருடங்கள் ரூ. மில். | 3-5 வருடங்கள் ரூ. மில். | >5 வருடங்கள் ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|---|
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் சொத்துப்பட்டியல் நீங்கலாக வீத உணர்வுமிக்க சொத்துகள் | 39,454 | 66,373 | 43,322 | 133,030 | 322,887 | 308,349 | 385,416 |
| வீத உணர்வுமிக்க பொறுப்புகள் | 224,602 | 379,188 | 230,612 | 403,718 | 34,945 | 11,855 | 5,000 |
| கால இடைவெளி (வீ.உ.சொ-வி.உ.பொ) | (185,148) | (312,815) | (187,290) | (270,688) | 287,943 | 296,495 | 380,416 |
| திரண்ட இடைவெளி | (185,148) | (497,964) | (685,253) | (955,941) | (667,998) | (371,504) | 8,912 |
| வீ.உ. பொறுப்பின் சதவீதமொன்றாக உண்மை இடைவெளி – 2020 (%) | -82.43 | -82.50 | -81.21 | -67.05 | 823.99 | 2,501.06 | |
| வீ.உ. பொறுப்பின் சதவீதமொன்றாக உண்மை இடைவெளி – 2019 (%) | -87.40 | -90.68 | -76.16 | -73.56 | 562.44 | 2,289.59 | |

அட்டவணை 27 வட்டி வீத உணர்வுத் தன்மை இடைவெளி - வங்கித்தொழில் ஏடு

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

வட்டி வீத இடர்நேர்வு என்பது வட்டி வீதங்களில் கடுமையான அசைவு, வட்டி வீத சொத்துகளின், பொறுப்புகளின் துணையளிக்கின்ற பெறுமதியினை பாதிக்கின்ற சாத்தியம் என்பதுடன் தேறிய வட்டி வருமானத்தில் தளம்பல்களுக்கு வங்கி உள்ளாகின்ற ஐந்தொகைக்கு வெளியிலான இடர்நேர்வுக்கு உள்ளாகும் தன்மைகளாகும். வட்டி வீத இடர்நேர்வுக்கு வங்கி உள்ளாகக் கூடிய தன்மை, மீள்விலையிடல் இடர்நேர்வு, விளைவு வளையி இடர்நேர்வு மற்றும் அடிப்படை இடர்நேர்வு ஆகிய வடிவத்தில் இனங்காணக்கூடியவையாகும்.

பாதகமான வட்டி வீத அசைவுகள், வங்கியின் மூலதனத்திலும் வட்டியின் மீதும், மற்றும் வங்கி ஏட்டு நிலமைகளின் தற்போதைய பெறுமதி மற்றும் எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் காலம் குறித்தலில் மாற்றங்கள் ஊடான வட்டியிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாம். வட்டி வித இடர்நேர்வின் இவ் வடிவம், வர்த்தகப்படுத்தப்படாத சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அத்துடன் சாதனங்கள் விலைக்குறிக்கப்பட்டுள்ள அடிப்படையிலமைந்த வட்டி வீத சுட்டெண்கள் என்பவற்றின் தவணைக் கட்டமைப்பின் வேறுபாடுகளில் இருந்து தோன்றுகின்றது. வங்கித் தொழில் ஏட்டில் உள்ள வட்டி வீத இடர்நேர்வானது, அது முறையாக முகாமை செய்யப்படாவிடின் வங்கியின் மூலதனத் தளத்தின் மீதும் எதிர்கால வருவாய்கள் மீதும் குறிப்பிடத்தக்க பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடியது.

நோய்த்தொற்று நிலமை காரணமாக 2020 காலப்பகுதியில் வட்டி வீதங்கள் ஒருபோதும் இல்லாதவாறு குறைவடைந்தமையினால் ஒரு வருடத்திற்கு குறைவான முதிர்ச்சிக் கூடைகளில் பாரிய எதிர்மறையான பொருத்தமின்மைகள் வங்கியின் தேறிய வட்டி வருமானத்தில் சாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தின.

வங்கியின் சொத்துகளின் மற்றும் பொறுப்புகளின் ஏறத்தாழ 95% வட்டி வீத உணர்வுமிக்கவையாக காணப்படுகின்ற, வங்கியின் தேறிய வட்டி வருமானம் அல்லது தேறிய வட்டி இலாபம் வட்டி வீத தளம்பல்களுக்கு உட்படுகின்றமையினால் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவம் முக்கியமானதாக காணப்படுகின்றது. எனவே, வங்கியின் வட்டி வீத இடர்நேர்வு முகாமைத்துவ முயற்சிகள் முதிர்ச்சிகளின் பொருத்தமின்மைகளை குறைப்பதனை (நிலையான வீதமிடப்பட்ட சொத்துகள் அல்லது பொறுப்புகள்) அல்லது மீள்விலையிடல் திகதிகளை (தளம்பல் வீதமிடப்பட்ட சொத்துகள் அல்லது பொறுப்புகள்) பொருத்தச் செய்வதை நோக்காகக் கொள்கின்றன. வங்கியானது உழைக்கும் நோக்கிலும் பொருளாதார பெறுமதி நோக்கிலும் வட்டி வீத இடர்நேர்வினை அளவிடுகின்றது.

வங்கி வட்டி வீத மீள்விலையிடல் இடைவெளிப் பகுப்பாய்வு ஊடாக வட்டி வீத இடர்நேர்வினை முதன்மையாக மதிப்பிடுகின்றது. வட்டி வீத மீள்விலையிடல் இடைவெளி பகுப்பாய்வானது வரையறைசெய்யப்பட்ட முதிர்ச்சிக் கூடைகளினுள் மீள் விலையிடப்பட்டவைகளான வட்டி உழைக்கின்ற சொத்துகளினதும் வட்டி உடைய பொறுப்புகளினதும் தொகைக்கு இடையிலான வேறுபாட்டை அளவிடுகின்றது.

### பெறுதி நிதியில் சாதனங்கள்

வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையொன்றினை வங்கி கொண்டுள்ளது. இது சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டு 2020 ஆம் ஆண்டின் இறுதியில் சொத்தொன்றாக கொண்டு செல்லப்பட்டது. பரஸ்பர பரிமாற்றல் உடன்படிக்கையின் பெரளவிலான தொகை ரூ. 2 பில்லியன் ஆகும். உடன்படிக்கையின் தள வட்டி வீதம் 6 மாத சாரசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தில் அடிப்படை அளவீடு செய்யப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பெறுதிகளின் பெறுமதி ரூ. 19.9 மில்லியன் என்பதுடன் பெறுதிகளின் சீர்மதிப்பு பெறுமதி மாற்றங்கள், “தேறிய வர்தகப்படுத்தல் வருமானம்” இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## திரவத்தன்மை மற்றும் நிதியளித்தல் இடர்நேர்வு

திரவத்தன்மை மற்றும் நிதியளித்தல் இடர்நேர்வு என்பது ஏற்றுக்கொள்ளத்தகாத நட்டங்களை எதிர்கொள்ளாது அவை செலுத்த வேண்டியதாகின்ற போது ஐந்தொகை மீது அல்லது வெளியில் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நிதியளிப்பதற்கு பேதிய நிலையான அல்லது பன்முக மூலங்களை கொண்டிருக்காமையில் இருந்து தோன்றுகின்ற இடர்நேர்வாகும். வங்கியின் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது வங்கி முன்கணிப்பு செய்யப்பட்ட திரவத்தன்மை மட்டங்களினுள் தொழிற்படுகின்றது என்பதையும் திரவத்தன்மைக் கொள்கைகள், ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் மற்றும் சிறந்த நடத்தைகள் என்பவற்றுக்கு இணங்கிக் காணப்படுகின்றது என்பதையும் உறுதிப்படுத்தவதற்கு வேண்டுகின்றது.

### திரவத்தன்மை இடர்நேர்வு மீளாய்வு →

நிதியியல் முறைமையின் திரவத்தன்மையினை அதிகரிப்பதற்கு முனைப்பான கடன்வழங்கல் ஊடாக பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சிக்கு ஆதரவளிக்கும் பொருட்டு நியதி ஒதுக்கு தேவைப்பாட்டினை குறைத்தல் மற்றும் துணைநில் வைப்பு வீதம், துணைநில் கடன் வழங்கல் வீதம் என்பவற்றை குறைத்தல் போன்ற இலங்கை மத்திய வங்கியினால் எடுக்கப்பட்ட கொள்கை சார்ந்த வழிமுறைகளின் காரணமாக ஆண்டு முழுவதும் மிகையான சந்தைத் திரவத்தன்மை நிலவியது. மேலும் வங்கித் தொழில் முறைமையின் திரவச் சொத்துக்களை அதிகரிப்பதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை தேவைப்படுத்தல்களும் குறைக்கப்பட்டன (அதாவது திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் மற்றும் தேறிய நிலையான நிதியளித்தல் விகிதம்). எனவே காலப்பகுதியின் போது வங்கியின் திரவத்தன்மை குறிகாட்டிகள் சாதகமாக காணப்பட்டன. திரவத்தன்மை மற்றும் நிதியளித்தல் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் பிரதான குறிக்கோள் சாதாரண மற்றும் அழுத்தமிக்க சூழ்நிலைகள் இரண்டின் கீழும் சரியான நேரத்தில் சரியான செலவில் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு தேவையான நிதியங்கள் கிடைக்கப்பெறுவதனை கணிப்பதும் உறுதிசெய்வதும் ஆகும்.

2020 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் திரவதன்மை விகிதங்கள் பின்வருமாறு:

| | 2020 % | 2019 % | ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சம் % | குறைந்தபட்ச ஒழுங்கு முறைப்படுத்தல் (கொவிட்-19 நிவாரண வழிமுறைகளுக்கு பின்னர்) % |
|---|---|---|---|---|
| நியதி திரவத்தன்மை சொத்து விகிதம் – உள்ளநாட்டு வங்கிப் பிரிவு | **69** | 60 | 20 | 20 |
| திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் – ரூபா | **311** | 278 | 100 | 90 |
| திரவத்தன்மை உள்ளடக்க விகிதம் அனைத்து நாணயங்களும் | **307** | 277 | 100 | 90 |
| தேறிய நிலையான நிதியளித்தல் விகிதம் | **169** | 175 | 100 | 90 |

வயபிடந 28 ஒழுங்குமுறைப்படுத்தல் திரவத்தன்மை விகிதங்கள்

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

## திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவம் →

### இருப்பு அணுகுமுறை

இருப்பு அணுகுமுறையின் கீழ், முக்கியமாக வேகங்குறைந்த கொடுகடன் வளர்ச்சியின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், மீளாயப்படும் ஆண்டுகாலப்பகுதில், கடன்களுக்கான கடமைப் பொறுப்புகள் விகிதம் நீங்கலாக அனைத்து திரவத்தன்மை விகிதங்களும் மேம்பட்டன. அதிகரித்த வைப்புகளுடன் சேர்த்து பிரதானமாக அரசாங்கப் பிணையங்களில் அதிகரித்த முதலீடுகள் தொடர்பில் வங்கியின் சொத்துகள் மேம்பட்டது.

| இருப்பு அணுகுமுறையின் கீழ் விகிதங்கள் | 2020 % | 2019 % |
|---|---|---|
| மொத்த சொத்துகளுக்கான தேறிய கடன்கள் | 37.9 | 39.3 |
| வாடிக்கையாளர் வைப்புகளுக்கான கடன்கள் | 42.5 | 46.7 |
| குறுகிய காலப் பொறுப்புகளுக்கான திரவச் சொத்துகள் | 64.5 | 53.9 |
| மொத்த சொத்துகளுக்கான கொள்வனவு செய்யப்பட்ட நிதியங்கள் | 20.6 | 22.0 |
| (உழைக்கும் சொத்துகள் – தற்காலிக முதலீடுகள்) இற்கான (பாரிய பொறுப்புகள் – தற்காலிக முதலீடுகள்) | 11.2 | 13.8 |
| மொத்த கடன்கள் விகிதத்திற்கான கடமைப் பொறுப்புகள் | 4.1 | 1.7 |

அட்டவணை 29 இருப்பு அணுகுமுறையின் கீழ் விகிதங்கள்

### பாய்ச்சல் அணுகுமுறை:

பாய்ச்சல் அணுகுமுறையின் கீழ், திரவத்தன்மை இடர்நேர்வினை மதிப்பிடுவதற்கு வங்கியினால் பயன்படுத்தப்படுகின்ற முறைகளில் ஒன்றாக வரையறைகளுக்கெதிராக திரவத்தன்மை இடைவெளிப் பகுப்பாய்வு காணப்படுகின்றது. திரவத்தன்மை இடைவெளிப் பெறுபேறுகள், காலமுறையாக கண்காணிக்கப்படுவதுடன் உணர்வுப் பகுப்பாய்வு, தகைவுச் சோதனை என்பவற்றுக்குப் பயன்படுத்தப்படுகின்றது.

சேமிப்பு வைப்புகளின் மற்றும் ஒரு ஆண்டைவிட குறைந்த தவணை வைப்புகளின் வகைப்படுத்தலின் காரணமாக ஒரு ஆண்டைவிட குறைந்த முதிர்ச்சிக் கூடையொன்றில் உயர்வான எதிர்மறையான திரவத்தன்மை இடைவெளி அவதானிக்கப்படக்கூடியது. எனினும், வரலாற்று நடத்தை விதங்களின் அடிப்படையில் நீடிப்பதற்கான போக்கொன்றினைக் கருதுகையில், திரவத்தன்மை மீதான பாதகமான தாக்கம் குறைவானது.

2020 இறுதியில் 12 மாதங்களை விட குறைந்த முதிர்ச்சிக் கூடையில் நிலவிய எதிர்மறையான இடைவெளிகள் வீழ்ச்சியடைந்து அதிகரித்த குறுகிய கால முதலீடுகள் காரணமாக மேம்பட்ட திரவத்தன்மையினை பிரதிபலிக்கின்றது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சாதகமான இடைவெளிகளும் அதிகரித்துள்ளன.

சொத்துகளின் மற்றும் பொறுப்புகளின் முதிர்ச்சி இடைவெளிப் பகுப்பாய்வினை கண்கானித்தலானது பாதகமான திரவத்தன்மை மட்டங்களை முன்னுனர்வதை இயலச்செய்துள்ளது. வங்கி, சந்தை மீள் கொள்வனவு கடன்பாடுகள் மீது குறைந்தளவில் தங்கியிருந்து அரசாங்க பிணையங்கள் சொத்தப் பட்டியலை பயன்படுத்தி ஆண்டின் போது நிதியளித்தல் தேவைப்பாடுகளை முகாமைசெய்ய இயலுமாக இருந்தது.

### உற்பத்திகள் வாரியாக நிதியளித்தல் பண்முகப்படுத்தல்

கொவிட்-19 நெருக்கடிகளுக்கு மத்தியில் 2020 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கியின் வைப்புத்தளம் 21.07% கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் ரூ. 1.2 ரில்லியனை எட்டியது. இது வங்கயின் வைப்புகள் மீது வழங்கப்படுகின்ற திட்டவட்டமான 100% அரசாங்க உத்தரவாதத்தின் காரணமாக வாடிக்கையாளர் வைப்புகளுக்காக பாதுகாப்பான வங்கியாக வாடிக்கையாளர் நம்பிக்கையினால் தோற்றுவிக்கப்பட்டது.

| | 0-3 மாதம் ரூ. மில். | 3-12 மாதங்கள் ரூ. மில். | 1-3 வருடங்கள் ரூ. மில். | 3-5 வருடங்கள் ரூ. மில். | >5 வருடங்கள் ரூ. மில். | மொத்தம் ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| ஒப்பந்த முதிர்ச்சியுடனான சொத்துகள் | 111,629 | 187,556 | 330,285 | 315,863 | 418,475 | 1,363,308 |
| ஒப்பந்த முதிர்ச்சியுடனான பொறுப்புகள் | 608,578 | 639,368 | 35,490 | 12,202 | 68,170 | 1,363,308 |
| முதிர்ச்சி இடைவெளி | (496,949) | (451,812) | 294,795 | 303,661 | 350,305 | (0) |
| திரண்ட இடைவெளி | (496,949) | (948,761) | (653,966) | (350,305) | (0) | (0) |
| வீத உணர்வுப் பொறுப்பின் சதவீதமொன்றாக உண்மை இடைவெளி – | | | | | | |
| – 2020 (%) | -82 | -71 | 831 | 2,489 | 514 | 0 |
| – 2019 (%) | -87 | -91 | -76 | -74 | 562 | |

அட்டவணை 30 சொத்துகளினதும் பொறுப்பகளினதும் முதிர்வுத் தொகுப்புகள்

**உற்பத்தி வாரியான நிதியளித்தல் பன்முகப்படுத்தல்** வரைபடம் 35







| | 2020 | 2019 | | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|
| A – சேமிப்பு வைப்புகள் | 21.7% | 19.9% | D – ஐ.அ.டொலர் கடன்பாடுகள் | 0.5% | 1.1% |
| B – நிலையான வைப்புகள் | 74.2% | 72.6% | E – பின்னிகழ்வுப் படுகடன்கள் | 0.9% | 0.5% |
| C – மீள்கொள்வனவு கடன்பாடுகள் | 1.1% | 4.0% | F – பின்னிகழ்வற்ற கடன்பாடுகள் | 1.6% | 1.9% |

வங்கியானது அதன் வலையமைப்பின் ஊடாக பரந்தளவிலான சில்லறை வைப்புகளுக்கும் நிறுவனசார் வைப்புகளுக்கும் பெறுவழியினை கொண்டுள்ளதுடன் அதனை அது நிலையான நிதியங்களின் அடிப்படை மூலமாக கருதுகின்றது. 2019 இல் பெற்றுக்கொள்ளப்பட்ட குறைந்த செலவிலான வெளிநாட்டு நாணய கடன்பாட்டையும் வங்கி கொண்டுள்ளது.

நிதியளித்தலில் திரட்சி இடர்நேர்வினை குறைப்பதற்கு நாடுபூராகவும் உள்ள கிளைகளின் வலையமைப்பின் ஊடாக சில்லறை வைப்புகளுக்கான (அதாவது சேமிப்பு மற்றும் நிலையான வைப்புகள்) பெறுவழி இயலச்செய்கின்றது. திரவத்தன்மை மற்றும் நிதியளித்தல் இடர்நேர்வுகள் சபையினால் அனுமதியளிக்கப்பட்ட கொள்கைகளை, நடைமுறைகளைப் பயன்படுத்தி திறைசேரிப் பிரிவின் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ அலகினால் முகாமைசெய்யப்படுகின்றன.

## தொழிற்பாட்டு இடர்நேர்வு

தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பது போதாத அல்லது தோல்வியடைந்த செயன்முறைகள், மக்கள் மற்றும் முறைமைகளில் இருந்து அல்லது வெளிவாரி நிகழ்வுகளில் இருந்து நட்டம் தோன்றுகின்ற இடர்நேர்வாகும். தொழிற்பாட்டு இடர்நேர்வானது சட்டரீதியான இடர்நேர்வுகளை உள்ளடக்குகின்றது ஆயினும் நற்பெயர்சார்ந்த மற்றும் உபாயரீதியான இடர்நேர்வுகளை உள்ளடக்குவதில்லை. மக்கள், செயன்முறைகள் மற்றும் முறைமைகள் முழுமையற்றதன் காரணமாக தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் முழுமையாக பன்முகப்படுத்தவோ அல்லது இல்லாதொழிக்கவோ முடியாதவையாகும். எனினும், இடர்சகிப்பு மட்டத்தினுள் அவை முகாமைசெய்யப்படக்கூடியன.

வங்கியானது அதன் நாளாந்த தொழிற்பாடுகள் ஊடாக பரந்தளவிலான தொழிற்பாட்டு இடர்நேர்வுக்கு உள்ளாகின்றதுடன் தோன்றம்பெறுகின்ற தொழிற்பாட்டு இடர்நேர்வுக் கரிசனைகள் பற்றி அவதானத்துடன் உள்ளது.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தின் வகிபாவமானது ஏற்கனவேயுள்ள அதேபோன்று தோற்றம்பெறுகின்ற போக்குகளில் இருந்தான தாக்கத்தினை கருத்திற்கொண்டு வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றது.

## தொழிற்பாட்டு இடர்நேர்வு மீளாய்வு

| இடர்நேர்வுக் கூறு | விபரம் | கண்காணித்தல்/முகாமைத்துவ கருவிகள் | இடர்நேர்வுக்-குள்ளாகும் தன்மை | தாக்கம்* |
|---|---|---|---|---|
| திருட்டு மற்றும் மோசடி இடர்நேர்வு | உள்ளக அல்லது வெளிவாரி தரப்பினர் மூலமான மோசடியான செயற்பாடுகள் | • மோசடி இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தகவல் தெரிவித்தல் செயன்முறை<br>• உள்ளகக் கட்டுப்பாடுகள்<br>• முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகளை கண்காணித்தல்<br>• நட்ட நிகழ்வுக் கண்காணிப்பு<br>• இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு | உயர்வானது | ▲ |
| இணைய இடர்நேர்வும் தரவு விட்டுக்கொடுப்பும் | இணையக் குற்றங்கள்/ தரவு மீறல்கள் மற்றும் முறைமை செயலிழப்புகள் | • உள்ளகக் கட்டுப்பாடுகள்<br>• தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை<br>• முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகளை கண்காணித்தல்<br>• நிகழ்வு பற்றி அறிக்கையிடல் | உயர்வானது | ► |
| தொழில் தொடர்ச்சி இடர்நேர்வு | தோல்வியடைந்த செயன்முறைகள், மற்றும் முறைமைகளில் இருந்து நட்டம் தோன்றுதல் | • முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகளை கண்காணித்தல்<br>• தொழில் தொடர்ச்சி முகாமைத்துவ முறைமை செயற்படுத் தல் | உயர்வானது | ▲ |
| இணங்குவித்தல்/ ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வு | ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதில் தவறுகை | • இணங்குவித்தல் நிகழச்சித்திட்டங்களும் பரிசோதனைகளும்<br>• முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகளைக் கண்காணித்தல்<br>• இணங்குவித்தல் இடர்நேர்வு புள்ளியிடல் அட்டை | உயர்வானது | ► |
| சட்ட இடர்நேர்வு | சட்டரீதியான தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுதல் போதாமை/ தவறுதல் | • அனைத்து ஒப்பந்த கடப்பாடுகள் மீதும் சட்ட இசைவு<br>• முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகளை கண்காணித்தல் | மிதமானது | ► |

*வருவாய் மற்றும் மூலதனம் மீதான தாக்கத்தின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றம்

▲ தாக்கம் அதிகரிப்பு ► மாற்றமில்லை ▼ தாக்கம் குறைவு

அட்டவணை 31 தொழிற்பாட்டு இடர்நேர்வு மீளாய்வு

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

தொழிற்பாட்டு இடர்நேர்வானது வங்கிக்கான முக்கிய இடர்நேர்வுகள் என்ற நிதியதிகளில் மீளாய்வுசெய்யப்படுகின்றது. தொழில் முக்கியத்துவம் வாய்ந்த தொழிற்பாடுகளில் வங்கி தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்காக மிகவும் குறைந்த சகிப்புத்தன்மையினையே கொண்டுள்ளது. ஆண்டின் போது தொழில் தொடர்ச்சி இடர்நேர்வுக் கூறுகள் தோற்றம் பெற்றதுடன் தொழிற்பாடுகளுக்கு உயர்வான தாக்கத்தினை உண்டுபன்னின.

2020 நிதியாண்டிற்கான தொழிற்பாட்டு நட்டங்கள் கடந்த 3 ஆண்டுகளுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட மொத்த வருமானச் சராசரியின் 0.13% ஆகவிருந்தது. இது இடர்நேர்வு ஏற்பு மற்றும் இடர்நேர்வு சகிர்ப்பு மட்டங்களுக்கு நன்கு கீழ் காணப்பட்டது தொழிற்பாட்டு இடர்நேர்வினை முகாமை செய்வதற்கு செயற்பாட்டில் உள்ள உள்ளக கட்டுப்பாடுகள், கட்டமைப்புக்கள், செயன்முறைகள் மற்றும் நடைமுறைகள் என்வற்றின் செயல்திறன் வாய்ந்த தன்மையினை பிரதிபலிக்கின்றது.

**இடர்நேர்வு ஏற்பு மற்றும் சகிப்பு மட்டங்களுக்கெதிரான உண்மையான தொழிற்பாட்டு நட்டங்கள்**

வரைபடம் 36




கடந்த ஐந்து வருட காலப்பகுதியில் வங்கியின் கடன்களை ஒரே மாதிரியாக குறைந்த மட்டங்களில் பேணப்படுவதை போக்கு கோடு எடுத்துக்காட்டுகின்றது.

கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றானது வியாபாரம் நடாத்தப்படுகின்ற முறைக்கு அதிர்வுமிக்க மாற்றமொன்றினை தோற்றுவித்ததுடன் அதன் விளைவுகள் கணிசமான காலத்திற்கு நீடித்திருக்கும்.

உயர்ந்தளவிலான மனித வள ஈடுபாடு மற்றும் நாளாந்த சேவை வழங்குதலில் பொதுமக்களுடனான பாரியளவிலான தொடர்பு மட்டம் என்பன காரணமாக உலகலாவிய நோய்த் தொற்றானது நிதியியல் சேவை வழங்குனர் ஒருவராக வங்கியின் தொழிற்பாடுகளை தீவிரமாக பாதித்துள்ளது. இருந்தும், தொழில் தொடர்ச்சி ஒழுங்குகள் அதேபோன்று முனைப்பான தீர்மானங்களுடன் இணைந்த அவசரநிலை திட்டமிடல் எனபன மூலம் இடைத்தடங்கலற்ற சேவையினை வங்கி வழங்கியது.

தேசியளவில் நடமாட்ட கட்டுப்பாடுகள் காரணமாக தொலைவில் இருந்து பணியாற்றும் ஒழுங்குகளையும் அத்துடன் இ-வணிக கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் இணையவழி வங்கித் தொழில் என்பவற்றுக்கான கேள்வியினை முகாமை செய்வதற்கும் இயலச்செய்கின்ற வகையில் இணையத் தாக்குப் பிடிக்கும் தன்மை மற்றும் தரவுப் பாதுகாப்பு பற்றிய நோக்குகள் பாதுகாக்கப் படவேண்டிய நுண்மையான தகவல்களாக கருதப்பட்டன.

சுகாதாரா அதிகாரிகளினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களை கடைப்பிடித்து ஊழியர்களையும் வாடிக்கையாளர்களையும் பாதுகாப்பதற்கு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

## தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவம் →

சபை அனுமதித்த தொழிற்பாட்டு இடர்நேர்வு கட்டமைப்பின் அடிப்படையில் அனைத்து தொழிற்பாட்டு விடயப்பரப்புகளிலும் உட்பொதிந்துள்ள தொழிற்பாட்டு இடர்நேர்வினை முகாமைசெய்வதற்கு வங்கி அனைத்தையும் உள்ளடக்கிய அணுகுமுறையொன்றினை எடுத்துள்ளது.

கிளைகளுக்கும் பிரிவுகளுக்கும் இணைக்கப்பட்டுள்ள அலுவலர்கள் தொழிற்பாட்டு இடர்நேர்வின் முதல்நிலை பொறுப்பாளர்களாவர். அவர்களுக்கு போதிய பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இது அவர்கள் பொறுப்புவகிக்கின்ற விடயப்பரப்பில் உட்பொதிந்துள்ள இடர்நேர்வுகளை இனங்காண்பதற்கு உதவுகின்றது.

முறைமை கட்டுப்பாடுகள். அணுகுவழிக் கட்டுப்பாடுகள், கடமைகளை பிரித்தல், அதிகாரம் மற்றும் பொறுப்புக்கான தெளிவான வரையறை, கொடுக்கல்வாங்கல்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் சரிபார்த்தலுக்கான இரட்டைப் பரிசோதனைகள், சொத்துகள் மீதான பௌதீக ரீதியான கட்டுப்பாடுகள், முறையான பதிவேட்டுப் பேணுகை, இணக்கம் பார்த்தல், கணக்காய்வுப் பரிசோதனைகள் மற்றும் கணக்காய்வு பதிவேடுகள் போன்றன உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பின் பாகமொன்றாக காணப்படுகின்றன. இவை தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான தளமாக விளங்குகின்றது.

இடர்நேர்வு முகாமைத்துவ பிரிவின் தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ அலகானது, செயன்முறைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு சீராக்கல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் இடர்நேர்வுகளை இனங்காண்கின்றது.

தொழிற்பாட்டு இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மைகளை முகாமைசெய்வதற்கும், குறைப்பதற்கும் வங்கி பல்வேறு கருவிகளையும் பயன்படுத்துகின்றது.

### நட்ட நிகழ்வு தரவு சேகரித்தலும் பகுப்பாய்வும்

நட்ட நிகழ்வு தரவு சேகரித்தல் என்பது ஆற்றல்வாய்ந்த தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவத்தின் முக்கிய கூறு ஒன்றாவதுடன் மூலதனக் கணிபிற்கான முன்னேற்றகரமான அணுகுமுறைகளை அடைவதற்கான பிரமாணமானமொன்றுமாகும்.

வங்கியின் நட்ட நிகழ்வு தரவு சேகரித்தல் செயன்முறையானது உள்ளக மற்றும் வெளிவாரி நட்ட நிகழ்வு தரவு இரண்டினையும் பெற்றுக்கொள்கின்றது.

உரிய காலத்தில் ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடுவததையும் அங்கீகரித்தலினையும் வசதிபடுத்துவதற்கு அனைத்து புவியியல் அமைவிடங்களில் இருந்தும் உள்ளக நட்டத் தரவுகளை இனங்கண்டு, சேகரித்து அங்கீகரிப்பதற்கான ஆவணமாக்கப்பட்ட நடைமுறையொன்றினை வங்கி கொண்டுள்ளது. மேலும் வங்கியின் வெளிவாரி நட்ட நிகழ்வு தரவுத் தளமானது அதனை ஒத்த நிறுவனங்களினால் வெளியிடப்படும் தொழிற்பாட்டு இழப்பு நிகழ்வு அறிக்கைகளை பெற்றுகொள்கின்றது.

சேகரிக்கப்பட்ட தரவுகள் பாசல் மட்டம் II நட்ட நிகழ்வு வகைகளுக்குள் வகைப்படுத்தப்படுவதுடன் செயன்முறை மேம்படுத்தல்களை இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கைகளுக்கும் அவற்றின் தன்மை, அடிப்படை காரணங்கள் மற்றும் நிகழக்கூடிய சாத்தியம் என்பவற்றை இனங்காண்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது. நட்ட நிகழ்வு விதங்களின் பகுப்பாய்வின் அடிப்படையில் இடர்நேர்வுத் தணிப்பு நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

2020 ஆம் ஆண்டின் போது மற்றும் பௌதீக சொத்துச் சேதங்கள் மற்றும் வெளிவாரி மோசடிகள் என்பவற்றிலிருந்து முறையே மிகவும் அடிக்கடி இடம்பெறும் மற்றும் தீவிர நிகழ்வுகள் அறிக்கையிடப்பட்டன. நிகழ்வுகளின் அடிக்கடி இடம்பெறும் தன்மையும் மற்றும் தீவிரத்தன்மையும் சகிப்பு மட்டங்களினுள் முகாமைசெய்யத்தக்கவையாக இருந்தன.

**நட்ட நிகழ்வு தரவுகள் ஏற்படும்தன்மை** வரைபடம் 37




● 2019 ● 2020

IF – உள்ளக மோசடி
EF – வெளிவாரி மோசடி
EPWS – நிறைவேற்றுதல், வழங்குதல் மற்றும் செயன்முறை முகாமைத்துவம்
CPBP – சேவைநாடி, உற்பத்திகள், தொழில் நடைமுறைகள்
DPA – பௌதீக சொத்துகளுக்கான சேதம்
BDSF – தொழில் இடையூறு மற்றும் முறைமை செயலிழத்தல்
EDPM – ஊழியர் நடைமுறைகள் மற்றும் பணியிடப் பாதுகாப்பு

**நட்ட நிகழ்வு தரவுகளின் தீவிரத்தன்மை** வரைபடம் 38




● 2019 ● 2020

IF – உள்ளக மோசடி
EF – வெளிவாரி மோசடி
EPWS – நிறைவேற்றுதல், வழங்குதல் மற்றும் செயன்முறை முகாமைத்துவம்
CPBP – சேவைநாடி, உற்பத்திகள், தொழில் நடைமுறைகள்
DPA – பௌதீக சொத்துகளுக்கான சேதம்
BDSF – தொழில் இடையூறு மற்றும் முறைமை செயலிழத்தல்
EDPM – ஊழியர் நடைமுறைகள் மற்றும் பணியிடப் பாதுகாப்பு

## முக்கிய தொழிபாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகளை கண்கானித்தல்

முக்கிய தொழிபாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகளானவை நிகழும்தன்மை மற்றும் தாக்கம் என்ற நியதிகளில் இடர்நேர்வு காரணிகளில் உள்ள மாற்றங்களை எடுத்துக் காட்டுவதனால் இடர்நேர்வு பற்றி கண்காணிப்பதற்கும், இடர்நேர்வை அறிக்கையிடுவதை மேம்படுத்துவதற்கும் அவை பயன்படுத்தப்படுகின்றன.

வங்கியின் நிதியியல், தொழிற்பாட்டு, நற்பெயர்சார், இணங்குவித்தல் அல்லது உபாய சிக்கல்கள் பற்றி விழிப்பூட்டுவதற்கான முன்கூட்டிய எச்சரிக்கை முறைமையொன்றாக குறித்த நடவடிக்கை தொடர்பில் சாத்தியமான இடர்நேர்வினை முக்கிய தொழிபாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகள் அளவிடுகின்றன.

வங்கியின் முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகள் தொகுதியமைப்பானது முக்கிய தொழில் தொழிற்பாடுகளை உள்ளடக்குவதுடன் கணக்காய்வு பிரச்சினை முகாமைத்துவம், தொழில் தொடர்ச்சி முகாமைத்துவம், தகவல் பாதுகாப்பு முகாமைத்துவம், உற்பத்தித் தரம், செயன்முறைத் தரம் மற்றும் இணங்குவித்தல் என்பவற்றை உள்ளடக்குகின்ற இடர்நேர்வு வரைச்சட்டமொன்றில் தொழிற்பாட்டு இடர்நேர்வு தொகுப்பினை இனங்கண்டு மதிப்பிடுவதற்கு துணையளிக்கின்றது. முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வு குறிகாட்டிகள் என்பது ஏற்கனவே வரையறைசெய்யப்பட்ட அடிப்படை மட்டுப்பாடுகளினை அடிப்படையாகக் கொண்டு இடர்நேர்வினை மதிப்பிடுவதற்காக ஒவ்வொரு விடயப்பரப்பின் கீழும் வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது. இவ் அடிப்படை வரையறைகள், வருடாந்தம் அல்லது தொழிற்பாட்டு சூழலில் காணப்படுகின்ற மாற்றங்களை கருத்திற்கொண்டு மிகவும் அடிக்கடி மீளாய்வு செய்யப்படுகின்றன.

## இடர்நேர்வு கட்டுப்பாட்டு சுயமதிப்பீடு

வங்கியின் தொழிற்பாட்டு இடர்நேர்வுகள் பற்றிய புரிந்துணர்வு, கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வையினை மேம்படுத்துவதற்கான அதன் இடர்நேர்வு அடையாளப்படுத்தல் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முயற்சிகளை ஒருங்கிணைத்து கூட்டிணைப்பதற்கு வங்கிக்கு அது வாய்பபொன்றினை வழங்குவதனால் இடர்நேர்வுக் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடானது ஒட்டுமொத்த தொழிற்பாட்டு இடர்நேர்வு கட்டமைப்பில் இன்றியமமையாத கூறொன்றினை தோற்றுவிக்கின்றது. இடர்நேர்வுக் கட்டுப்பாட்டிற்கு ஏதுவாகின்ற ஊகம் என்பது தொழிற் செயன்முறை உரிமையாளர்கள் பாதுகாப்பின் முதலாம் நிலையில் உள்ளோர் அவர்களது சொந்த இடர்நேர்வுகளை புரிந்துகொள்ளும் சிறந்த நிலையில் காணப்படுகின்றனர் என்பதாகும்.

இடர்நேர்வு கட்டுப்பாட்டு சுய மதிப்பீட்டில் முக்கியமாக கட்டறியப்பட்டவை இடர்நேர்வு முகாமைத்துவத்தில் சாத்தியமான இடைவெளிகளை அடையாளப்படுத்தி நடவடிக்கையினை வகுப்பதற்கு வங்கிக்கு உதவின. இடர்நேர்வு கட்டுப்பாட்டு சுய மதிப்பிடானது முன்கணிப்புச் செய்யப்பட்ட தொழிற்பாட்டு இடர்நேர்வு வழியலகுகளுக்கு அமைவாக இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையினை மதிப்பிடுவதற்கு கிளை வலயமைப்பிலும் முக்கிய தொழில் பிரிவுகளிலும் உள்ள செயன்முறை உரிமையாளர்களுடனான ஒருங்கிணைப்புடன் இடர்நேர்வு முகாமைத்துவ பிரிவினால் நடாத்தப்படுகின்றது.

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

## வாடிக்கையாளர் முறைப்பாடுகள் முகாமைத்துவம்

வங்கியானது அனைத்து முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டு குறித்த காலப்பகுதியினுள் பதிலிறுத்தப்படுவதை உறுதி செய்கின்ற வாடிக்கையாளர் முறைப்பாடு கையாளுதல் செயன்முறையினை தாபித்துள்ளது.

வங்கியின் தொழிற்பாடுகள் பற்றிய தொழிற்பாட்டுப் பலவீனங்களின் மற்றும் வாடிக்கையாளர் எண்ணப்பாங்கினை இனங்காண்பதற்கான மூலமொன்றாக வாடிக்கையாளர் முறைப்பாடுகள் கருதப்படமுடியும்.

தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ பிரிவு, வாடிக்கையாளர் முறைப்பாடுகளை காலமுறையாக பகுப்பாய்வு செய்து மேலதிக இடர்நேர்வு தணிப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கு கண்டறியப்பட்டவை தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு அறிக்கையிடப்படுகின்றது.

## தகவல் பாதுகாப்பு

நிதியியல் சேவை முறைமைகளினுள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் முன்னேற்றமானது வங்கியின் தொழில் மாதிரியினை கணிசமானளவிற்கு மாற்றியமைத்துள்ளதுடன் இதன் காரணமாக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் எப்போதும் தோற்றம்பெற்றுவரும் பாதிக்கப்படும்தன்மைகளிலிருந்து தகவல்களின் செம்மை, கட்டுப்பாடு, ஒருமைப்பாடு மற்றும் இரகசியத்தன்மை போன்ற நியதிகளில் வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான வங்கிச் சேவையினை வழங்குவதற்கு அது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஆளுகையினை அமுல்படுத்துகின்றது.

வங்கியின் முக்கிய தகவல் சொத்துகளைப் பாதுகாப்பதற்கு உள்ளகரீதியாக, வங்கி, சபை அனுமதித்த தகவல் பாதுகாப்பு கட்டமைப்பினை செயற்படுத்தியுள்ளது. தகவல் பாதுகாப்பு இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவது தகவல் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பாகும். தகவல் பாதுகாப்பு பிரிவானது வெளிவாரி நிபுணத்துவ சேவை வழங்குனர்களின் உதவியுடன் தகவல் முறைமைகள் மீதான சுயாதீன இடர்நேர்வு மதிப்பீடுகளை மேற்கொள்வதுடன் மதிப்பீட்டு பெறுபேறுகள், இடர்நேர்வு அச்சுறுத்தல்களை அல்லது இடர்நேர்வு தணிப்புகளை பரிந்துரைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

பரிணமிக்கின்ற இணைய அச்சுறுத்தல்களுக்கு தாக்குப்பிடிக்கும்தன்மையினை மேம்படுத்துவதற்காக வங்கி தொடர்ச்சியாக தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பு முயற்சிகளை எடுத்துள்ளது.

2020 ஆண்டின் போது தகவல் பாதுகாப்பு பாதிக்கப்படும்தன்மைகளை குறைப்பதற்கும் பாதுகாப்பு தோற்றவமைப்புகளை அதிகரிப்பதற்கும் பின்வரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன:

i. **கொடுப்பனவு அட்டை தொழிற்துறை - தரவு பாதுகாப்பு நியமம்**

கொடுப்பனவு அட்டை தொழிற்துறை தரவு பாதுகாப்பு நியமம் என்பது முக்கிய அட்டைத் திட்டங்களில் இருந்து வர்த்தக நாமம் இடப்பட்ட கடன்/பற்று அட்டைகளை கையாள்கின்ற நிறுவனங்களுக்கான தகவல் பாதுகாப்பு நியமம் ஒன்றாகும்.

கொடுப்பனவு அட்டை பாதுகாப்பிற்காக சர்வதேச ரீதியாக மிகவும் ஏற்றுக்கொள்ளப்படும் நியமங்களில் ஒன்றாக இது காணப்படுவதுடன் அட்டைத் தொழிற்பாடுகள் மற்றும் தொடர்புடைய தகவல் முறைமைகளுக்கான குறிப்பான தொழிநுட்ப மற்றும் தொழிற்பாட்டு கட்டுப்பாடுகளை அடிப்படையாக கொண்டதாகும். தற்போது வங்கி வாடிக்கையாளர்களுக்காக மாஸ்டர்காட் மற்றும் வீசா வர்த்தக நாமம் இடப்பட்ட பற்று அட்டைகளை வழங்குவதுடன் அட்டை வைத்திருப்போரின் தகவல் பாதுகாப்பினை கொடுப்பனவு அட்டை தொழிற்துறை தரவு பாதுகாப்பு நியமம் உறுதி செய்கின்றது. கொடுப்பனவு அட்டை தொழிற்துறை தரவு பாதுகாப்பு நியமத்தினை பெற்றுக்கொண்ட ஒரேயொரு அரச வங்கியாக வங்கி காணப்படுவதுடன் 2019 இல் இணங்குவித்தலை அடையப்பெற்றது. 2020 ஆம் ஆண்டுக்காக வங்கிக்கு கொடுப்பனவு அட்டை தொழிற்துறை தரவு பாதுகாப்பு நியம சான்றளிக்கப்பட்டுள்ளது.

ii. **பாதுகாப்பு தொழிற்பாடுகள் நிலையம்**

தகுதிவாய்ந்த மூன்றாம் தரப்பினரின் ஆதரவுடன் தகவல் பாதுகாப்பு பிரிவின் கீழ் 24x7x365 நாளும் தொழிற்படுத்தப்படுகின்ற தகவல் தொழிற்பாட்டு நிலையத்தினை வங்கி நடைமுறைப்படுத்தியுள்ளது. நிகழ்வுகளுக்கு பதிலிறுத்தும் இயலளவுகள், சர்வதேச தரங்களை நிறைவுசெய்யும் வகையில் மேலும் வலுவூட்டப்பட்டுள்ளன. தொழிநுட்ப இடர்நேர்வுக்கு தாக்குப்பிடிக்கும்தன்மை மீதான இலங்கை மத்திய வங்கியின் ஆலோசனை பத்திரத்தில் காணப்படும் தேவைப்படுத்தல்களை நிறைவேற்றுவதற்கான முன்னாயத்திற்காக வங்கியானது 2020 இல் முன்மொழியப்பட்ட தேவைப்படுத்தல்களை அடைந்துகொண்டது. இது தகவல் பாதுகாப்பு முறைமையினை மேம்படுத்தியதுடன் கிரமமான முகாமைத்துவக் குழு மற்றும் மீளாய்வுகள் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த மீளாய்வுகள் ஊடாக தொடர்ந்தும் அதிகரிக்கப்பட்டு பராமரிக்கப்படும்.

iii. **தரவுக் கசிவுகளை தடுத்தல்**

தகவல் தொழிநுட்ப பிரிவின் ஆதரவுடன் தகவல் பாதுகாப்பு பிரிவு, தரவுகளை பாதுகாப்பதற்கும் தீங்கற்றதாக பேணுவதற்கும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதற்கும் 2020 ஆம் ஆண்டின் போது தரவு கசிவு தடுத்தல் மற்றும் தரவு வகைப்படுத்தல் தீர்வு என்பவற்றை நடைமுறைப்படுத்தியது.

## தொழில் தொடர்ச்சி முகாமைத்துவ முறைமை

வாடிக்கயையாளர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் இடைத்தடங்கலின்றி தொடர்ச்சியாக சேவை வழங்கப்பட வேண்டுமென்பதனை தொழில் தொடர்ச்சித் திட்டம் உறுதிசெய்கின்றது. தகவல் தொழில்நுட்பத்தினால் இயக்கப்படும் வங்கித்தொழில் சூழலில் இது இன்றியமையாத முக்கியத்துவமிக்கதாக விளங்குகின்றது.

இயற்கை, மனிதன் ஏற்படுத்திய அல்லது தகவல் தொழிலநுட்பத்தினால் தூண்டப்பட்ட அனர்த்தங்களில் இருந்து தொழில் நடிவக்கைகளுக்கான இடைத்தடங்கல்கள் குறைந்த மட்டத்தில் இடம்பெறுகின்றது என்பதனை உறுதிசெய்வதற்கு சபையினால் அனுமதிக்கப்பட்ட தொழில் தொடர்ச்சி திட்ட ஆளுகைக் கட்டமைப்பு, கொள்கை ஆவணங்கள், செயன்முறைகள் மற்றும் முறைமைகள் என்பவற்றை வங்கி செயற்படுத்தியுள்ளது.

தொழில் தொடர்ச்சி கொள்கை கட்டமைப்பினை செயல்திறன்மிக்கவாறு நடைமுறைப்படுத்தி பரிசோதித்து கண்காணிப்பதற்கும் வங்கியின் அனர்த்த மீட்பு பரதேசத்தினை முகாமைசெய்வதற்குமான பொறுப்புகள் தொழில் தொடர்ச்சி திட்ட அலகுக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ளன.

## இடர்நேர்வை கைமாற்றல் →

**வெளியில் இருந்து சேவையினை பெற்றுக்கொள்வதானது** செயல்திறன்வாய்ந்த மற்றும் செலவு சிக்கனமுள்ள இடர்நேர்வு கைமாற்றல் உபாயம் ஒன்றாக பயன்படுத்தப்படுகின்றது. வங்கியின் வெளியில் இருந்து சேவை பெற்றுக்கொள்ளும் தொழிற்பாடுகள், சபையினால் அங்கீககரிக்கப்பட்ட வெளியில் இருந்து சேவை பெற்றுகொள்ளும் கொள்கை மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களுக்கு அமைவாக கொண்டுநடாத்தப்படுகின்றது.

தொழில் தொழிற்பாடுகளை வெளியில் இருந்து பெற்றுக்கொள்வதில் இருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகள் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுடன் இணங்குவதனை உறுதிப்படுத்தும் விதத்தில், நிருவாக பிரிவின் வெளியில் இருந்து சேவை பெற்றுக்கொள்ளலை கண்காணிக்கும் அலகினால் முகாமை செய்யப்படுகின்றது.

வெளியில் இருந்து சேவை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளை செயலாற்றுவதற்கான சேவை வழங்குனர்களின் இயலளவினை உறுதிசெய்வதற்கு வங்கி அனைத்தையும் உள்ளடக்கிய உரிய விழிப்புக்கவன பிரயோகங்களை நடாத்துகின்றது. வெளியில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் செயற்பாட்டின் தன்மையினை தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு கண்காணிப்பதுடன் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் நிருவாகப் பிரிவினால் நடாத்தப்படுகின்றன.

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

**காப்புறுதியானது** முக்கிய காப்பிடத்தக்க இடர்நேர்வினை காப்புறுதிச் சேவை வழங்குனருக்கு மாற்றுவதற்கான தொழிற்பாட்டு இடர்நேர்வு தணிப்பானொன்றாக முக்கிய பங்கொன்றினை ஆற்றுகின்றது. வங்கிக்கு ஏற்கனவே காணப்படுகின்ற அத்துடன் தோற்றம் பெறுகின்ற இடர்நேர்வுகளை கருத்தில் கொண்டு காப்புறுதி பூட்கைகளின் போதுமான தன்மை தொடர்ச்சியாக மீளாய்வு செய்யப்படுகின்றன. தொழிற்பாட்டு நட்டங்களுக்கான காப்புறுதி அறவீட்டு முன்னேற்றத்தை இடர்நேர்வு முகாமைத்துவ பிரிவு கண்காணித்து அறிக்கையிடுகின்றது. காப்புறுதி தொழிற்பாடானது நிருவாகப் பிரிவினுள் மத்திய மயப்படுத்தப்பட்டுள்ளது. இது தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவின் ஊடாக கண்காணிக்கப்படுகின்றனது.

## சட்ட இடர்நேர்வு →

சட்ட இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வின் பாகம் ஒன்றாகும். சட்ட இடர்நேர்வானது தொழிலுக்கு, அதன் தொடர்புகளுக்கு, செயன்முறைகளுக்கு, உற்பத்திகளுக்கு மற்றும் சேவைகளுக்கு ஏற்புடைய சட்டம் அல்லது ஒழுங்குவிதிகள் பற்றிய வழிப்புணர்வு போதாமை, தவறான புரிந்துணர்வு, பொருள்மயக்கம், அல்லது பொறுப்பற்ற அலட்சியம் என்பனவற்றின் விளைவாக ஏற்படக்கூடிய நிதியியல் அல்லது நட்பெயர் சார்ந்த இடர்நேர்வாகும். சட்ட இடர்நேர்வானது குற்றப்பணங்கள், தண்டங்கள், தண்ட நடவடிக்கை சேதங்கள் போன்றவற்றைத் தோற்றுவிக்கின்ற எழுதப்பட்ட உடன்படிக்கைகள் இன்மை அல்லது போதுமான உடன்படிக்கைகள் இல்லாத கொடுக்கல்வாங்கல்களை கைச்சாத்திடுவதற்கு வரைவதில் குறைபாடு காரணமான நட்ட இடர்நேர்வுகளை உள்ளடக்குகின்றது.

சட்ட இடர்நேர்வு முகாமைத்துவம் என்பது வங்கி அதன் குறிக்கோள்களை வெற்றிகரமான அடைவதற்கான அதன் இயலுமைக்கு பங்கம் ஏற்படுத்துகின்ற சட்ட ரீதியான பிரச்சினைகள் நிகழும் தன்மையினை மற்றும் தீவிரத்தினை குறைக்கின்ற தீர்மானங்களை வகுக்கின்ற மற்றும் மேற்கொள்கின்ற செயன்முறையாகும். சட்டப் பிரிவானது உற்பத்தி மற்றும் வியாபாரத் தொழிற்பாடுகள் அத்துடன் வாடிக்கையாளர்கள் அல்லது சேவை வழங்குனர்கள் போன்ற மூன்றாம் தரப்பினர் ஊடான ஒப்பந்த ரீதியான உறவுகள் தொடர்பிலான சட்டங்களுக்கு மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்குவதனை உறுதி செய்வதில் ஈடுபடுகின்றது.

சட்டப் பிரிவானது தொழில் பிரிவுகளுக்கு வழிகாட்டல்களை வழங்குவதுடன் வங்கியின் சட்ட இடர்நேர்வு உபாய முகாமைத்துவத்தில் ஈடுபடுகின்றது.

## இணங்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வு →

இணங்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வானது ஏற்புடைய சட்டங்கள் ஒழுங்குவிதிகள், வங்கி தொழிற்துறையில் காணப்படுகின்ற நடத்தைக் கோவைகள் மற்றும் நடத்தை நியமங்களுடன் இணங்காமையில் இருந்து நேரடியாக தோன்றுகின்றது. இது ஒழுங்குமுறைப்படுத்துனரின் தடை, நிதியியல் நட்டங்கள், தொழில் தொழிற்பாடுகளின் இடையூறுகள் மற்றும் நற்பெயர் சார்ந்த பாதிப்புகள் போன்றவற்றுக்கு இட்டுச்செல்லக் கூடியன. இணங்குவித்தல் கொள்கை கட்டமைப்பானது சபை அனுமதித்த இணங்குவித்தல் கொள்கை, பணம் தூய்தாக்கலுக்கு எதிரான கொள்கை, தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல் கொள்கை மற்றும் வங்கியினால் இணங்குவித்தல் எவ்வாறு முகாமைசெய்யப்படுகின்றது என்பதனை குறித்துரைக்கின்ற இணங்குவித்தல் கையேடு என்பவற்றை உள்ளடக்குகின்றது. இணங்குவித்தல் அலுவலரினால் தலைமைவகிக்கின்ற இணங்குவித்தல் பிரிவானது சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு ஊடாக சபைக்கு நேரடியாக அறிக்கையிடுவதுடன் வங்கியின் இணங்குவித்தல் இடர்நேர்வினை கணிப்பதற்கு வழிமுறைகளை எடுக்கின்றது. 2020 ஆம் ஆண்டின் போது வங்கியின் இணங்குவித்தல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் இடர்நேர்வினை குறைப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன:

- ஏற்புடைய கொள்கைகளின், நடைமுறைகளின் உரிய கால மீளாய்வினை உறுதி செய்தல்.
- வங்கியின் கிளைகள், பிரிவுகள் மற்றும் உற்பத்திகள் மீது இணங்குவித்தல் மதிப்பீடுகளை நடாத்துதல்.
- பயிற்சி அமர்வுகள் ஊடாக விழிப்புணர்வினை தோற்றுவித்தல்
- மேற்பார்வை கரிசனைகளை மதிப்பீடு செய்து கண்காணித்தல்
- பணம் தூய்தாக்தல்/பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீட்டினை வங்கயினுள் பின்பற்றுதல்.

பணம் தூய்தாக்கலுக்கு எதிரான மற்றும் வாடிக்கையாளர் உரிய விழிப்பு கவனச் செயற்பாடுகளை தொலைவில் இருந்து அல்லது தளத்தின் மீது நடைமுறைப்படுத்தல் ஆயினும் கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றை அனுபவித்த தொழிற்பாட்டு கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக வங்கி மூலம் மையப்படுத்தப்பட வேண்டிய சமூக இடைவெளி வழிமுறைகளின் காரணமாக மிகவும் குறைந்தளவிலான அணியினை கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

## நற்பெயர்சார் இடர்நேர்வு →

நற்பெயர்சார் இடர்நேர்வு என்பது நிறுவன வர்த்தக நாமத்தினை மோசமாக பாதிக்கின்ற நிகழ்வுகளில் இருந்து தோன்றுகின்ற நேரடியற்ற நட்டம் ஒன்றாகும். வங்கி பற்றிய எதிர்மறையான எண்ணப்பாங்கு அல்லது பிரச்சாரம் செலவுமிக்க வழக்காடலை, வருவாய் குறைப்பை மற்றும் வாடிக்கையாளர் தளத்தில் வீழ்ச்சியினை ஏற்படுத்துகின்றது. இதனால், நற்பெயர்சார்ந்த இடர்நேர்வினை முகாமைசெய்வது என்பது அதன் தொழிற்பாடுகளில் பொதுமக்களின் நம்பிக்கையினை பேணுவதற்கு நிதியியல் நிறுவனங்களுக்கு மிகவும் முக்கியமாக காணப்படுகின்றது.

கொள்கைகள், நடைமுறைகள், நடத்தை கோவைகள் மற்றும் தொழில் ஒழுக்கம் போன்றவற்றின் மூலம் முகாமைசெய்யப்படுகின்ற பல்வேறு வகையான தொழில் இடர்நேர்வு மூலம் நற்பெயர்சார்ந்த இடர்நேர்வு தூண்டப்படுவதனால் அனைத்து வேறு இடர்நேர்வுகளுக்கும் பின்பற்றப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஊடாக இது முகாமைசெய்யப்படுகின்றது.

இலங்கையில் முதன்மையான உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்நத வங்கியாக மாசற்ற நற்பெயரை நான்கு தசாப்தங்களுக்கும் மேல் வங்கி பேணியுள்ளது. எனவே, நற்பெயர் மீதான எதிர்மறையான தாக்கம் குறைவானதாகவே இருந்து வருகின்றது. ஆற்றல்வாய்ந்த நற்பெயரொன்று, வாடிக்கையாளரின் நம்பிக்கைக்கான அத்திவாரத்தினை தோற்றுவிக்கின்ற வங்கியின் நம்பகத்தன்மை, அலுவலர்களின் திறமை, தேவைக்கேற்றவாறான உற்பத்திகள் மற்றும் சேவைகள் என்பவற்றை பிரதிபலிக்கின்றது.

நற்பெயர்சார் இடர்நேர்வுக்கென வங்கி பூச்சிய ஏற்பொன்றினைக் கொண்டுள்ளது. இதனால், முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகள் ஊடாக நற்பெயர்சார் இடர்நேர்வினை இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு உன்னிப்பாக கண்காணிக்கின்றது. வாடிக்கைாளர்களையும் ஏனைய ஆர்வலர்களையம் தொடர்பூட்டுவதற்கும் பாதகமான தொடர்பூட்டல்களில் இருந்து நற்பெயரினைக் காத்துக்கொள்வதற்கும் வங்கி பல்வேறு வழிகளைப் பயன்படுத்துகின்றது. உள்ளக மூலதனப்போதுமை மதிப்பீட்டுச்செயன்முறை வழிகாட்டல்களின் அடிப்படையிலான நற்பெயர்சார் இடர்நேர்வினை மதிப்பிடுவதற்கு புள்ளிவழங்கும் அட்டை அடிப்படையிலான மாதிரி பயன்படுத்தப்படுகின்றது.

## உபாய இடர்நேர்வு →

உபாய இடர்நேர்வு என்பது போட்டிமிக்க தோற்றவமைப்பு, ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு அல்லது பேரண்ட பொருளாதாரச் சூழலில் செயல்திறனற்ற நிலைப்படுத்தலில் மாற்றங்களுக்கு பதிலிறுத்துவதில் வருவாய்களுக்கு மற்றும் உபாயங்களின் நிலைபெறுதன்மைக்கு ஏற்படும் சாத்தியமான நட்டமாகும்.

உபாய அபிவிருத்திக்கான பொறுப்பானது வங்கியின் தொலைநோக்கு, பணி மற்றும் இடர்நேர்வு ஏற்பு என்பவற்றுடன் அணிசேருகின்ற உபாயத்திட்டமிடல் மற்றும் வரவுசெலவுத்திட்ட செயன்முறை என்பன ஊடாக பிரிவு பிரதானிகளிடம் காணப்படுகின்றது. உபாயங்களை பெறுவிப்பதில் முகாமைத்துவம் உபாயக் குறிக்கோள்களை வகுக்கின்றது. இவை

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

அடையப்பெறத்தக்கவையும் முன்னுணர்கின்ற எதிர்காலத்தில் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பெறுமதி உருவாக்கத்திற்கும் நன்கு நிலைநிறுத்தப்பட்டவையும் ஆகும்.

ஆராய்ச்சி பிரிவிலிருந்து கிடைக்கின்ற உள்ளீடுகள் வங்கிக்கான வியாபார உபாயங்களை வகுப்பதில் கூட்டிணைக்கப்படுகின்றன. உபாய நிறைவேற்று இடர்நேர்வினை குறைப்பதற்கு சரியான ஆற்றல், இயலளவுகள், உட்கட்டமைப்பு மற்றும் தொழிநுட்பம் கிடைக்கப்பெறுவதினை உறுதிசெய்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை வங்கி எடுத்துள்ளது. உபாயத்தின் விளைவாக ஏற்படும் இடர்நேர்வை குறைப்பதில் மேற்கொள்ளப்பட்ட உபாயத் தீர்மானங்களின் முன்னேற்றத்தினை முகாமைத்துவம் கிரமமான அடிப்படையில் மீளாய்கின்றது.

வங்கியின் உபாய இடர்நேர்வுக்கான மேற்பார்வைப் பொறுப்பினை சபை கொண்டுள்ளது. இது அடிக்கடியான மீளாய்வுகள் ஊடாக சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் கண்காணிக்கப்படுகின்றது. உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டு செயன்முறை வழிகாட்டலின் அடிப்படையிலமைந்த உபாய இடர்நேர்வினை மதிப்பிடுவதற்கு புள்ளியிடல் அட்டை அடிப்படையிலான மாதிரி பயன்படுத்தப்படுகின்றது.

## மூலதன மீளாய்வு

ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுத்தல்களை நிறைவேற்றுவதற்கு அதன் வைப்பாளர்களுக்கு/கொடுகடன் வழங்குனர்களுக்கு நிதியியல் பாதுகாப்பினை வழங்குவதற்கும், எதிர்கால தொழில் விரிவுபடுத்துவதற்கான இயன்ற சலுகைகளை பேணுவதற்கும் அத்துடன் அதன் ஆர்வலர்களுக்கு போதிய ஆதாயங்களை ஈட்டும் பொருட்டும் வங்கிக்கு வலுவான மூலதன நிலை தேவைப்படுகின்றது.

மூலதனத்தை முகாமைசெய்தலானது வங்கியின் தாக்குப்பிடிக்கும்தன்மையினை உறுதிசெய்கின்ற அதேவேளை பங்குதாரர்களுக்கு ஆதாயத்தினை உருவாக்குகின்றது. எனவே, செயலற்றுகைக்கும் இடர்நேர்வுக்கும் இடையில் உயர்ந்பட்ச சமநிலையினைப் அடைவதன் மூலம் மூலதனத்தினை வினைத்திறன்மிக்கவாறு முகாமைசெய்வதற்கு வங்கி பாடுபடுவதுடன் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக் கலப்பிற்கும் இடர்நேர்வு தொகுப்பில் உள்ள மாற்றங்களின் கண்டிப்பான கண்காணித்தலையும் நடாத்துகின்றது. மூலதன முகாமைத்துவ செயன்முறையானது இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் வழிகாட்டல்களுக்கமைவாக காணப்படுகின்றது.

2019 இன் 11 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் மற்றும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் என்பவற்றுக்கான பாசல் III இன் கீழ் மூலதனத் தேவைப்பாடுகள் மீதான பணிப்பரைகளுக்கான திருத்தங்கள் என்பவற்றுக்கு அமைவாக அட்டவணை 32 இல் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச மூலதன விகிதங்களை பேணுவதற்கு வேண்டப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியானது உள்நாட்டில் முறைமைசார்ந்து முக்கியத்துவமிக்க வங்கியாக இனிமேலும் கருதப்படாமையினால் உயர்வான நட்ட ஈர்ப்பினை பேணுவது தேவைப்படுத்தப்படவில்லை.

இலங்கை மத்திய வங்கியானது கொவிட்-19 இன் பின்னர் பொருளாதார நடவடிக்கைகளின் வீழ்ச்சியடைந்த பின்னணியில், உள்நாட்டில் முறைமைசார்ந்து முக்கியத்துவமற்ற வங்கிகளை 50 அடிப்படை புள்ளிகளால் அவற்றின் மூலதன காப்பு தாங்கியிருப்பினை குறைப்பதற்கு அனுமதித்துள்ளது. மேலும்,இடர்நேர்வு நிறைவேற்றப்பட்ட சாரசரிகளின் மேம்படுத்தலுக்கு அதிவிசேட ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள் வசதியளித்தன.

2019 இன் போது வங்கி ரூ. 3.1 பில்லியன் மொத்த கொடுப்பனவு கைமாறுக்காக இலங்கை சேமிப்பு வங்கியினை கையகப்படுத்தியது. மூன்று வருட காலப்பகுதிக்கு பொது பங்குரிமை அடுக்கு 1 இற்கான மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் சரிப்படுத்தல்களில் இருந்து முதலீட்டினை விலக்களிப்பதற்கு நாணயச் சபையின் அனுமதியினை வங்கி பெற்றுக்கொண்டது. எனினும், வங்கி 250% இடர்நேர்வு நிறை ஒன்றினை பிரயோகிப்பதன் மூலம் முதலீடானது கொடுகடன் இடர்நேர்வு நிறையேற்றப்பட்டதாக காணப்படுகின்றது. வங்கி, முன்னைய ஆண்டின் ரூ. 2 பில்லியனுக்கு எதிராக 2020 ஆண்டுக்கு ரூ. 1 பில்லியன் பங்கிலாபத்தினை கொடுப்பனவு செய்தது.

வங்கி, 2020 ஒக்டோபரில் 9% கொண்ட தள வீதத்தில் ரூ. 5 பில்லியன் தொகைக்கு பாசல் III இணக்க நிலையான மேலதிக அடுக்கு I சாதனம் ஒன்றை வழங்கியது.

2020 ஆம் ஆண்டின் போது மூலதன போதுமைக்காக நிர்ணயிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்ச தேவைப்பாடுகளை வங்கி எய்தியது. பொது பங்குமூலதன அடுக்கு I விகித நிலை 2019 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு 13.49% இருந்து 2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு 12.03% இற்கு ஆண்டின் போது குறைவடைந்தது. எனினும், தகைமைபெறுகின்ற மேலதிக அடுக்கு I மூலதனச் சாதனங்களை வழங்கியதன் விளைவாக, வங்கியின் அடுக்கு I மூலதன விகிதம் 2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு 13.65% ஆக அதிகரித்தது. மொத்த மூலதன விகிதமானது 2019 டிசம்பர் 31 அன்று உள்ளவாறான 15.82% இற்கு எதிராக 2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு 16.45% ஆக அதிகரித்தது.

தொகுதி மட்டத்தில் மூலதனப் போதுமை விகிதத்திற்கு வங்கியின் துணைக் கம்பனிகள் சாதகமாக பங்களித்தன. தொகுதிக்கான மொத்த மூலதன விகிதம் 2019 டிசம்பரின் 17.74% இற்கு எதிராக 2020 இல் 18.3% ஆக காணப்பட்டது. 100% அரசுக்கு உரித்தான சேமிப்பு வங்கியாக வெளிவாரியாக ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தை திரட்டுவதற்கு மட்டுப்படுத்தப்பட்ட தெரிவுகளே காணப்படுகிறன. மூலதனத்தை பெரிதாக்குவதற்கு மிகவும் விரும்பத்தக்க மூலம் உழைப்புகளை பிடித்துவைப்பதாகும்.

**மூலதன மட்டம் - வங்கியும் தொகுதியும்** வரைபடம் 39



| விகிதங்கள் (%) | ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சம் | ஒழுங்குமுறைப்படுத்தல் குறைந்தபட்சம் மூலதன காப்பு தாங்கியிருப்பு இன்றி | 2020.12.31 அன்று உள்ளவாறு உண்மையானது | | 2019.12.31 அன்று உள்ளவாறு உண்மையானது | |
|---|---|---|---|---|---|---|
| | | | வங்கி | தொகுதி | வங்கி | தொகுதி |
| பொது பங்குமூலதன அடுக்கு 1 உடன் மூலதன காப்பு தாங்கியிருப்பு | 7.00 | 6.5 | **12.03** | **13.96** | 13.49 | 15.37 |
| அடுக்கு 1 உடன் மூலதன காப்பு தாங்கியிருப்பு | 8.50 | 8.0 | **13.65** | **15.57** | 13.49 | 15.37 |
| மொத்த மூலதனம் | 12.5 | 12.0 | **16.45** | **18.30** | 15.82 | 17.74 |

அட்டவணை 32 மூலதனப் போதுமை விகிதம்

உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டு செயன்முறையானது தொழிற்பாட்டு வினைத்திறன், வளர்ச்சி மற்றும் கடன்தீர்க்கும் ஆற்றல் என்பவற்றைப் பெறுவதற்கு இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் உபாயத் தொழில் திட்டமிடலையும் ஒருங்கிணைக்கின்ற அணுகுமுறையினை ஊக்குவிக்கின்றது.

## உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை – தூண் II

உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையானது அனைத்து முக்கிய இடர்நேர்வுகளையும் பதிவதற்கு ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பொன்றுடன் கூடிய இடர்நேர்வு ஏற்பு, தகைவுச் சோதனை மற்றும் மூலதன திட்டமிடல் எண்ணக்கருக்களை உள்ளடக்குகின்றது. இது வங்கியின் இடர்நேர்வு தொகுப்பிற்கு ஈடாக உள்ளக மூலதன மட்டமொன்றினை நிறுவுவதற்கு மிகவும் ஆய்ந்தறிந்த முறையொன்றில் தொழில் செயலாற்றம், இடர்நேர்வு முகாமைத்துவ நடடிவக்கைகள் மற்றும் இடர்நேர்வு உணர்வுமிக்க மூலதனம் என்பவற்றை ஒன்றிணைப்பதை இயலச்செய்கின்றது.

வங்கியானது சபை அனுமதித்த உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையினை கொண்டுள்ளது. இது மேற்பார்வை மீளாய்வுச் செயன்முறை மீது வங்கிகளுக்கு வழங்கப்பட்ட பாசல் III தூண் II வழிகாட்டல்களின் மீதான இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கும் சர்வதேச சிறந்த நடத்தைகளுக்கும் அமைவாக காணப்படுகின்றது.

வங்கியின் உள்ளக மூலதனப் போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையானது வங்கிக்கும் ஒழுங்குமுறைபடுத்துனருக்கும் அடிப்படையாகக் காணப்படுகின்ற 04 கோட்பாடுகளினால் ஆளப்படுகின்றது. சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவ குழு ஊடாக சபையின் மேற்பார்வை பொறுப்புடன் தீர்மானம் மேற்கொள்ளுவதற்கான இடர்நேர்வு ஒருங்கிணைத்தல், அனைத்தையும் உள்ளடக்கிய இடர்நேர்வு மதிப்பீடு, உள்ளகக் கட்டுப்பாடுகளை மீளாய்வு செய்தல், கண்காணித்தல், அறிக்கையிடுதல், இடர்நேர்வுகளை தகைவுச் சோதனைசெய்தல் என்பவற்றை இச்செயன்முறை ஈடுபடுத்துகின்றது.

இடர்நேர்வு மதிப்பீடானது தூண் I மற்றும் தூண் II இடர்நேர்வுகள் இரண்டினையும் பதிவுசெய்கின்றது. தூண் I, இடர்நேர்வுகள் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத் தேவைப்பாடுகளுடன் தொடர்புபடுவதுடன் தூண் II, பொருளாதார மூலதனத்துடன் கூடிய இடர்நேர்வுகளை கையாளுகின்றது.

வங்கியானது இடர்நேர்வுத் தொகுப்பினையும் உள்ளக மூலதன தேவைப்பாடுகளையும் மதிப்பிடுவதற்கும் அளவிடுவதற்கும் உள்ளக மாதிரிகளை வைத்திருக்கின்றது. மூலதனப் போதுமை தொடர்பில் செயல்திறன்மிக்க மதிப்பீட்டினை வழங்குவதற்கான உள்ளக மூலதன தேவைப்பாட்டினை உள்ளடக்கி உள்ளக வரையறைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அனைத்தையும் உள்ளடக்கிய விதத்தில் ஆவணப்படுத்தப்பட்ட உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறை கலந்துரையாடப்பட்டு ஒழுங்குமுறைப்படுத்துனருக்கு சமர்பிக்கப்படுவதற்கு முன்னர் சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழு ஊடாக சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு மற்றும் சபை மூலம் அங்கீகரிக்கப்படுகின்றன.

## தகைவுச் சோதனை

தகைவுச் சோதனை என்பது தூண் II இன் கீழ் உள்ளக மூலதன போதுமை மதிப்பீட்டுச் செயன்முறையின் மிக முக்கிய பாகமொன்றாகும். வங்கியின் தகைவுச் சோதனைக் கட்டமைப்பானது சபை அனுமதித்த தகைவுச் சோதனைக் கொள்கை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்கள் மூலம் ஆளப்படுகின்றது. வங்கியின் தகைவுச் சோதனைக் கட்டமைப்பானது கொடுகடன் இடர்நேர்வு, வட்டி வீத இடர்நேர்வு, வர்த்தகப்படுத்தல் ஏடு மற்றும் வங்கித்தொழில் ஏடு என்பனவற்றில் காணப்படும் இடர்நேர்வு, தொழிற்பாட்டு இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு, திரட்சி இடர்நேர்வு, மற்றும் எஞ்சிய கொடுகடன் இடர்நேர்வு போன்ற அனைத்து முக்கிய இடர்நேர்வுகள் மீதுமான தகைவுச் சோதனைகளை உள்ளடக்குகின்றது. தகைவுச் சோதனை நோக்கங்களுக்காக அதிகரிக்கின்ற இடர்நேர்வுகளைக் கொண்ட அதாவது சிறிய, நடுத்தர மற்றும் பாரிய (அல்லது குறைவான, நடுத்தர மற்றும் உயர்வான) மூன்று மட்டங்களை வங்கி வரையறைசெய்துள்ளது.
தகைவுச் சோதனையானது வங்கி தொழிற்படுகின்ற சூழலில் பாதகமான பொருளாதார, அரசியல், மற்றும் பௌதீக மாற்றங்களின் கீழ் எதிர்பாரத மாறுபடுகின்ற தீவிரத்தன்மைகொண்ட சூழ்நிலைகளை எதிர்த்து நிற்பதற்கான அதன் இயலுமை பற்றிய புரிந்துகொள்ளலினை ஏற்படுத்துகின்றது.

தீர்மானம் எடுத்தலுக்கு துணையளிக்கும் பொருட்டு கடன்தீர் ஆற்றல் குறிகாட்டிகள் மீதான தாக்கத்தினை அறிந்து கொள்வதற்கு வங்கி, கொவிட்-19 சூழ்நிலை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தலில் மாற்றம் மீதான தகைவுப் பரிசோதனையினை மேற்கொண்டது.

வட்டிவீதங்கள், வெளிநாட்டுச் செலாவணி வீதங்கள் மற்றும் பங்குமூலதன விலைகள் உள்ளடங்கலாக குறித்த சாதனங்கள் அல்லது சொத்துப்பட்டியல்களின் தனிப்பட்ட சந்தைக் காரணிகளின் அசைவுகளின் தாக்கத்தை அளவிடுவதற்கு வங்கி உணர்வுப் பகுப்பாய்வனை பயன்படுத்துகின்றது.

வங்கியானது பாதகமான வட்டி வீதத் தளம்பல்களின் காரணமாக வர்த்தகப்படுத்தல் மற்றும் வங்கித்தொழில் ஏடுகள் மீதான தாக்கத்தினை இனங்காண்பதற்கு பிரதானமாக உணர்வுப் பகுப்பாய்வினை பயன்படுத்துடன் காலமுறையான அடிப்படையில் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழுவிற்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. வங்கியின் சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவத்திலும் விலையிடல் தீர்மானங்களிலும் இவ் அறிக்கைகள் முக்கிய ஏதூக்களாக காணப்படுகின்றன.

# இடர்நேர்வு மற்றும் மூலதன முகாமைத்துவம்

| | இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 | அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 | மொத்தம் ரூ. '000 |
|---|---|---|---|
| 2020 இன் இறுதியில் செலவுக்கு எதிராக அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் தேறாத இலாபம்/(நட்டம்) | 143,897 | 73,521 | 217,418 |
| சந்தை விலைகுறித்தல் பெறுமதியில் மாற்றம் | | | |
| விளைவில் 100 அடிப்படைப் புள்ளி அதிகரிப்பு | (206,648) | (253,099) | (459,747) |
| விளைவில் 200 அடிப்படைப் புள்ளி அதிகரிப்பு | (403,831) | (498,106) | (901,937) |
| விளைவில் 100 அடிப்படைப் புள்ளி குறைவு | 216,686 | 261,547 | 478,233 |
| விளைவில் 200 அடிப்படைப் புள்ளி குறைவு | 516,747 | 531,918 | 1,048,665 |

வுயடிடந 33 உணர்வுத்தன்மைப் பகுப்பாய்வு – வர்த்தகப்படுத்தல் ஏட்டில் வட்டி வீத இடர்நேர்வு - அரசாங்கப் பிணையங்கள்

| எதிர்மறை இடைவெளிகள் மீதான 100 அடிப்படைப் புள்ளி வீத அதிர்வு | | <1 மாதம் ரூ. மில். | 1-3 மாதங்கள் ரூ. மில். | 3-6 மாதங்கள் ரூ. மில். | 6-12 மாதங்கள் ரூ. மில். | 1-3 வருடங்கள் ரூ. மில். | 3-5 வருடங்கள் ரூ. மில். | >5 வருடங்கள் ரூ. மில். | மொத்தம் ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தனியான மட்டம் | இடைவெளி | (185,148) | (312,815) | (187,290) | (270,688) | 287,943 | 296,495 | 380,416 | 8,912 |
| | தே. வ. மீதான தாக்கம் | (1,780) | (2,614) | (1,180) | (705) | – | – | – | (6,279) |
| திரட்டிய மட்டம் | இடைவெளி | (185,914) | (315,028) | (181,474) | (268,105) | 295,242 | 298,994 | 384,830 | 28,545 |
| | தே. வ. மீதான தாக்கம் | (1,788) | (2,632) | (1,144) | (698) | – | – | – | (6,262) |

வுயடிடந 34 உணர்வுத்தன்மைப் பகுப்பாய்வு – வங்கித்தொழில் ஏட்டின் விளைவு வளையி இடர்நேர்வு மதிப்பீடு

தகைவுப் பரிசோதனை செயற்பாட்டிலிருந்து பெற்றுக்கொண்ட பெறுபேறுகள், இடர்நேர்வு ஏற்பு, இடர்நேர்வு வரையறைகள், மூலதனத் திட்டமிடல், உபாயத் தொழில் திட்டமிடல் என்வற்றை அமைப்பதிலும் முனைப்பான தீர்மானம் மேற்கொள்வதில் துணையளிப்பதற்கு முக்கிய தொழில் தொழிற்பாடுகளில் உள்ள இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

| இடர்நேர்வு விடயப்பரப்பு | சூழ்நிலை | மூலதனப் போதுமை விகிதத்திற்கான தாக்கம் | | |
|---|---|---|---|---|
| | | குறைவானது % | நடுத்தரமானது % | உயர்வானது % |
| கொடுகடன் இடர்நேர்வு | கொடு கடன் இடர்நேர்வு- பொருளாதார வீழ்ச்சி காரணமாக செயற்படா கடன்களில் அதிகரிப்பு (குறைவு – 10%, நடுத்தரம் – 20%, உயர்வு – 30%) | -0.065 | -0.108 | -0.216 |
| சந்தை இடர்நேர்வு | வட்டி வித இடர்நேர்வு: சந்தை விளைவில் அதிகரிப்பு (இ/ந சி. பெ சொத்துப் பட்டியல்) (குறைவு 0.5 அ. புள்ளி, நடுத்தரம் 1 அ. புள்ளி, உயர்வு 2 அ. புள்ளி) | -0.03 | -0.06 | -0.12 |
| | பங்குமூலதன விலை இடர்நேர்வு: சந்தை விலைகளில் வீழ்ச்சி (குறைவு – 15%, நடுத்தரம் – 20%, உயர்வு – 25%) | 0.15 | 0.17 | 0.20 |
| | வெளிநாட்டுச் செலாவணி இடர்நேர்வு: ரூபா மதிப்பிறக்கம் (குறைவு – 5%, நடுத்தரம் – 10%, உயர்வு – 15%) | -0.006 | -0.012 | -0.018 |
| தொழிற்பாட்டு இடர்நேர்வு | பாசல் II நட்ட நிகழ்வு வகைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு நட்டங்களில் அதிகரிப்பு | -0.02 | -0.03 | -0.04 |

வுயடிடந 35 வேறுபட்ட தகைவுப் பரிசோதனை மட்டங்களில் மூலதனப் போதுமைக்கான தாக்கம்

## குறைந்தபட்ச வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் - தூண் III

வங்கியின் மூலதன போதுமையினையும் இடர்நேர்வுள்ளாகும் தன்மையினையும் அளவிடுவதற்கு சந்தை பங்கேற்பாளர்களை அனுமதிப்பதற்கு பாசல் III கட்டமைப்பினுள் இலங்கை மத்திய வங்கியினால் குறைந்தபட்ச வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2016 இன் 1ஆம் இலக்க வங்கித்தொழில் பணிப்புரைக்கமைவாக குறைந்தபட்ச வெளிப்படுத்தல் தேவைப்படுத்தல்களுக்காக பக்கம் 287 தொடக்கம் 300 வரை பார்க்கவும்.

# நிதியியல் அறிக்கைகள் 115

நிதி நாட்காட்டி – **116**

பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை – **117**

நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று – **123**

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று – **125**

உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம் – **127**

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று – **128**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – **130**

நிதியியல் கூற்றுக்களின் உள்ளடக்கம் – **133**

வருமானக் கூற்று – **134**

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று – **135**

நிதி நிலைமைக் கூற்று – **136**

பங்குரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று – **138**

காசுப் பாய்ச்சல்கள் கூற்று – **142**

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – **144**

# நிதி நாட்காட்டி

| நிதி நாட்காட்டி 2020 | |
|---|---|
| 31 மார்ச் 2020 முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல் | 29 மே 2020 |
| 30 ஜுன் 2020 முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல் | 31 ஓகஸ்ட் 2020 |
| 30 செப்டெம்பர் 2020 முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல் | 27 நவம்பர் 2020 |
| 31 டிசெம்பர் 2020 முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல் | 30 மார்ச் 2021 |

| திட்டமிடப்பட்ட நிதி நாட்காட்டி 2021 | |
|---|---|
| 31 மார்ச் 2021 முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல் | 31 மே 2021 |
| 30 ஜுன் 2021 முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல் | 31 ஆகஸ்ட் 2021 |
| 30 செப்டெம்பர் 2021 முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல் | 30 நவம்பர் 2021 |
| 31 டிசெம்பர் 2021 முடிவடைந்த காலாண்டிற்கான இடைக்கால நிதிக்கூற்றுக்களை பிரசுரித்தல் | 31 மார்ச் 2022 |

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

## பொது

2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுடன் இணைத்து வங்கியின் நடவடிக்கைகள் பற்றிய தமது ஆண்டறிக்கையினைச் சமர்ப்பிப்பதில் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளர்கள் மகிழ்ச்சியடைகின்றனர். வங்கியானது கடந்த ஆண்டுகளிலும் மற்றும் எதிர் காலத்திலும் இவ்வாறு பெறுமதி வாய்ந்ததாகவும் அதனை நிலை நிறுத்துவதாகவும் விளங்குமென்பதைத் தெரிவிக்கும் வகையில் வங்கியின் செயற்பாடுகள் மூலோபாயத் தோற்றத்தை வழங்குவதாக நாம் உறுதிப்படுத்துகிறோம்.

வருடாந்த நிதிக் கூற்றுக்கள், கணக்காய்வாளர் சபையினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு மற்றும் பரிந்துரை செய்யப்பட்டு 2021 மார்ச் 19 இல் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் 2021 மார்ச் 21 இல் விநியோகிப்பதற்கு அங்கீகாரமளிக்கப்பட்டது. இவ்வறிக்கையானது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் அத்துடன் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட நிறுவன ஆளுகை மீதான உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கிக்கான வங்கிச் சட்ட நியமம் 2007 ஆம் ஆண்டு இல 12 பணிப்புக்கள் என்பவற்றின் கீழ் ஆக்கப்பட்ட சில வெளிப்படுத்தல்கள் தேவைப்பாடுகளையும் உள்ளடக்குகிறது. ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் என்பன கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையுடன் சேர்த்து இலங்கைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக பொதுத் தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட சிறந்த ஆளுகைக்கான வழிகாட்டலுக்கமைவாக நிதியாண்டின் நிறைவில் இருந்து 150 நாட்களுக்குள் நிதியமைச்சருக்கு சமர்ப்பிக்கப்படும்.

தேசிய சேமிப்பு வங்கி, 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மூலம் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளதுடன், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் நியதிகளுக்கமைய உரிமம் பெற்ற சிறப்பியல்பு வங்கியென்ற அந்தஸ்து வழங்கப்பட்டது. வங்கிக்கு ICRA லங்கா (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் நீண்டகால கடன் இறுக்கும் ஆற்றல் AAA (நிலையான) தரப்படுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## வணிக மதிப்பாய்வு

### வங்கியின் பிரதான நடவடிக்கைகள்

தேசிய சேமிப்பு வங்கி முதன்மைச் செயற்பாடானது, இலங்கை மக்களிடையே சேமிப்பை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டப்பட்ட சேமிப்புக்களை இலாபகரமாக முதலீடு செய்வதும் ஆகும். குறித்த வருடத்தில் வங்கி நடவடிக்கைகளானது, சில்லறை வங்கியியல், நிறுவன வங்கியியல், வியாபார நிதியிடல், திறைசேரி நடவடிக்கைகள் மற்றும் முதலீடு கொரஸ்போன்டன் வங்கியியல் மற்றும் பணமாற்றல் வசதிகள், அடகுவைத்தல், வெளிநாட்டு நாணய தொழிற்பாடுகள், மற்றும் ஏனைய நிதிச்சேவைகள்.

### நோக்கம், பணி மற்றும் மதிப்பீடுகள்

வங்கியின் நோக்கம், பணி, மதிப்பீடுகள் ஆகியன இவ்வாண்டறிக்கையின் 2 ஆம் மற்றும் 3 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து நிரந்தர ஊழியர்களும் வங்கியின் ஒழுக்கக் கோவைக்குக் கட்டுப்பட்டுள்ளதுடன், வங்கியின் நோக்கு மற்றும் பணியை அடைவதற்கான நோக்கில் அரச சத்தியப் பிரமாணத்துக்கும் கட்டுப்பட்டவர்களாவர்.

### அரசாங்க உத்தரவாதம்

வங்கியில் வைப்புச் செய்த மற்றும் அதற்கான வட்டியினை மீளச்செலுத்துவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்துகிறது.

### வங்கியின் துணை நிறுவனங்கள்

தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடட் மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி ஆகியன வங்கியின் இரண்டு துணை நிறுவனங்களாகும்.

தேசிய சேமிப்பு வங்கி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடட் நிறுவனத்தின் முதன்மைச் செயற்பாடு, இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட முதனிலை வணிகர் ஒருவராக, அரசாங்கப் பிணையங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகும்.

இலங்கை சேமிப்பு வங்கியின் முக்கிய செயற்பாடுகளாவன சேமிப்பு வைப்பு மற்றும் நேர வைப்புக்களைத் திரட்டல், கடன்கள் வழங்குதல், குத்தகை, வாடகை கொள்வனவு, நகை அடகு மற்றும் பிறகடன் வசதிகளை வழங்குதல் மற்றும் முறிவடைந்த வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் கடன் கணக்குகளை மறுசீரமைத்து வைப்பு பொறுப்புக்களை தீர்த்தல்.

இக்கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 24 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

### குழும கட்டமைப்பு மாற்றங்கள்

எதுவித பாரிய மாற்றங்களும் வங்கி மற்றும் குழுமத்தில் பிரதான நடவடிக்கைகளில் இடம் பெறவில்லை.

### வணிக செயற்திறன் மீளாய்வு

2020 வருடத்தின் வங்கி மற்றும் குழுமத்தின் முழுமையான நிதி செயற்றிறன் பற்றிய மீளாய்வு தலைவர் அறிக்கை (பக்கம் 06 மற்றும் 07), பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மீளாய்வு (பக்கம் 08 தொடக்கம் 10) வழங்கப்பட்டுள்ளது. நிதி மூலதன மீளாய்வு பக்கம் 24 தொடக்கம் 38 மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் (பக்கம் 134 முதல் 282) என்பன பிரதான வணிகங்கள் பற்றி மற்றும் வங்கி மற்றும் குழுமத்தின் நிலைமை பற்றிய விவரமான ஆய்வினை வழங்குகிறது. இந்த அறிக்கைகள் ஆண்டறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

### கிளை வலையமைப்பு விரிவாக்கம்

தீவு முழுதும் வங்கியின் பிரசன்னத்தை விரிவுபடுத்தும் நோக்கில் மீளாய்வின் கீழான ஆண்டில் மூன்று கிளைகள் வலையமைப்பில் சேர்க்கப்பட்டன. ஆண்டின் இறுதியில் 259 கிளைகளை வங்கி தனது வலையமைப்பில் கொண்டிருந்தது. வாடிக்கையாளர் வசதிகளை அதிகரிக்கும் விதத்தில் தன்னியக்கக் காசு இயந்திர வலையமைப்பு (ATM/CRM) மேலும் விரிவாக்கப்பட்டது. வங்கியானது இவ் ஆண்டில் நாடு முழுவதிலும் 24 CRM மற்றும் 03 ATM இயந்திரங்களை நிறுவி, ஏனைய (peer) வங்கிகளின் ATM பாவனைக்கு மேலதிகமாக தேசிய சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர் தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய தன்னியக்கக் காசு இயந்திரங்கள் எண்ணிக்கையை 361 ஆக்கியது.

### நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல்

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய (SLFRSs/LKASs) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை திருத்தப்பட்ட 1988 இன் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் குறித்த வெளிப்பாடுகள் தொடர்பிலான சட்ட தேவைப்பாட்டுடன் இணங்குவதாகவும் அமைந்துள்ளன. 2020 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வங்கி மற்றும் தொகுதியின் நிதிக் கூற்றுக்கள் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) இனால் முறையாக சான்றுபடுத்தப்பட்டு, பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் வங்கியின் தலைவர் உள்ளிட்ட இரு பணிப்பாளர்களினால் அனுமதிக்கப்பட்டும்,

கையொப்பமிடப்பட்டும் 134 முதல் 137 ஆம் பக்கம் வரை தரப்பட்டுள்ளது. இது வங்கியின் ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகிறது.

## கணக்கீட்டுக் கொள்கைகளும் இவ்வாண்டின் போது ஏற்பட்ட மாற்றங்களும்

வங்கி தனது நிதிக் கூற்றுக்களை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRSs/ LKASs) அமைவாகத் தயாரித்துள்ளது.

இவ்வாண்டுக்கான நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பில் கைக்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் 144 - 160 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. மீளாய்விற்குட்பட்ட ஆண்டில், எதுவித மாற்றங்களும் வங்கி மற்றும் குழுமத்தின் கணக்கீட்டு கொள்கைகளில் இடம் பெறவில்லை.

## நிதிசார் அறிக்கையிடலுக்கான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் →

2020 டிசெம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியினது அலுவல்களை உண்மையான மற்றும் நேர்மையான நோக்கத்தினைப் பிரதிபலிப்பதற்கும் அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான இலாபத்தினைப் பிரதிபலிப்பதற்கும் வங்கியினதும் தொகுதியினதும் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் பொறுப்பு பணிப்பாளர்களுடையது ஆகும். இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (SLFRSs/LKASs) மற்றும் 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டமும் அதன் திருத்தங்களின் தேவைப்பாடுகளுக்கிணங்க அனைத்தையுமுள்ளடக்கிய பக்கம் 134 முதல் 137 வரை உள்ள பக்கங்களில் காணப்படும் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்னும் கருத்தினை பணிப்பாளர்கள் கொண்டுள்ளனர். இவ் ஆண்டறிக்கையின் 123 முதல் 124 ஆம் பக்கத்தில் காணப்படும் பணிப்பாளர்களின் பொறுப்புடைமைக் கூற்று வங்கியின் ஆண்டறிக்கையின் முக்கிய பகுதியொன்றாகக் காணப்படுகிறது. நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புடமை இதில் விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது.

## கணக்காய்வாளரின் அறிக்கை →

2020 டிசெம்பர் 31 உடன் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியினதும் மற்றும் குழுவின் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பனவற்றின் கணக்காய்வினை கணக்காய்வாளர் தலைமை அதிபதி மேற்கொண்டுள்ளனர். வங்கிக்கான மற்றும் அதன் துணை கம்பனியான தே சே வ நிதி முகாமைத்துவக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியினது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. 2020 இல் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வங்கியின் கண்காய்வு நடாத்தப்பட்டது. அவர்களின் கணக்காய்வில் அடையாளங் காணப்பட்ட விடயங்கள் உடனடி நடவடிக்கைக்காக கிரமமான முறையில் முகாமைத்துவத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதி அறிக்கையிடல் முறையின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி அவசியமான தரவுகள் மற்றும் தகவல்களுடன் நிதியியல் கூற்றுக்கள் பரிசோதனைக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் ஆண்டறிக்கையின் 130 முதல் 132 ஆம் பக்கங்களில் காணப்படுகிறது.

## எதிர்கால முன்னேற்றங்கள்

வங்கி மற்றும் குழுமத்தின் எதிர்கால முன்னேற்றம் பற்றிய மீளாய்வு 2020 ஆண்டறிக்கையின் தலைவர் தகவல் (பக்கம் 06 முதல் 07), பொது முகாமையாளர்/பி.நி.அ மீளாய்வு (பக்கம் 08 முதல் 10) மற்றும் “தந்திரோபாயம் மற்றும் வள ஒதுக்கீடு” பக்கம் 19 முதல் 23 வரை வழங்கப்பட்டுள்ளது.

## மொத்த வருமானம்

2020 ஆம் ஆண்டுக்கான வங்கியின் மொத்த வருமானம் ரூபா 127,547 மில்லியனாகக் (2019 - ரூபா 121,929 மில்லியன்) காணப்பட்ட வேளையில் தொகுதியின் வருமானம் ரூபா 130,039 மில்லியனாக (2019 - ரூபா 125,810 மில்லியன்) விளங்கியது. வருமானங்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இல் தரப்பட்டுள்ளன.

## பங்கிலாபம் மற்றும் ஒதுக்கீடுகள்

### பெறுபேறுகளும் பகிர்வும் →

வங்கியினதும் தொகுதியினதும் வருமான வரிக்கு முன்பான இலாபம் முறையே ரூ. 15,645 மில்லியனாகவும், ரூ. 16,791 மில்லியனாகவும் (2019 - ரூ. 10,462 மில்லியனாகவும், ரூ. 13,092 மில்லியனாகவும்) விளங்கியது.

வருமான வரிக்குப் பின்பான வங்கியினதும், தொகுதினதும் இலாபம் முறையே ரூ. 10,108 மில்லியனாகவும் ரூ 10,821 மில்லியனாகவும் (2019 ரூ. 6,381 மில்லியனாகவும் ரூ 8,713 மில்லியன்) விளங்கியிருந்தன. வங்கிக்கான இலாபம் பற்றிய விபரங்கள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| | 2020 ரூ. மில். | 2019 ரூ. மில். |
|---|---|---|
| அனைத்துச் செலவுகள் தேய்வுக்கான ஒதுக்கீடு ஏற்படக் கூடிய கடன் இழப்புக்கள் மற்றும் பெ.சே.வ, தே.நி.வ, க.மீ.வ மற்றும் வரிக்கு முன்பான எதிர்காலத் தேய்வுகள் ஆகியவற்றின் பின்பான ஆண்டுக்குரிய இலாபம் | **19,432** | 15,659 |
| நிதிச் சேவைகள் மீதான பெ.சே.வ வரி | **3,787** | 3,046 |
| நிதிச் சேவைகள் மீதான தேச நிர்மாண வரி | **–** | 366 |
| கடன் மீள்செலுத்தல் வரி (க.மீ.வ) | **–** | 1,785 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | **5,537** | 4,081 |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் | **10,108** | 6,381 |
| வரி நீங்கலான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | **(4,498)** | (2,729) |
| வருடத்திற்கான அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் | **5,610** | 3,652 |
| **பங்கீடுகள்:** | | |
| நியதிச்சட்ட ஒதுக்கத்திற்கு மாற்றல் | **(505)** | (335) |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிக்கான (NITF) பங்களிப்பு | **(101)** | (67) |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு/பங்குலாபம் | **(1,000)** | (2,000) |

## வரி விதிப்பிற்கான ஏற்பாடு →

வங்கி மற்றும் தொகுதியின் தொழிலுக்கு ஏற்புடைய வருமான வரி 28% ஆகும். 1 ஜனவரி 2020 முதல் வங்கித் தொழிலிற்கான வருமான வரி 24% குறைக்கப்பட்டுள்ளது எனினும் இதுவரை சட்டம் இயற்றப்படவில்லை. வங்கி மற்றும் தொகுதியின் தொழிலுக்கு ஏற்புடைய நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி 15% ஆகும். வங்கி மற்றும் தொகுதிக்கு பொறுப்புடையதான, 1 பெப்ரவரி 2009 இல் அறிமுகப்படுத்தப்பட்டு 1 டிசெம்பர் 2019 இல் இரத்துச் செய்யப்பட்ட தேச நிர்மாண வரி 2% ஆகவும் காணப்பட்டதுடன், 1 அக்டோபர் 2018 இல் அறிமுகப்படுத்தப்பட்டு 1 ஜனவரி 2020 இரத்துச் செய்யப்பட்ட நிதிச் சேவைகள் மீதான கடன் மீள்செலுத்தல் வரி (DRL) 7% ஆகும்.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் LKAS 12 இற்கமைய வருமான வரிகள் மீது பொறுப்புடைமை முறையின் கீழ் அனைத்து அறியப்பட்ட தற்காலிக வேறுபாடுகள் மீதும் பிற்போடப்பட்ட வரியினை வங்கி வழங்கியது. வருமான வரிச் செலவினம் மற்றும் பிற்போடப்பட்ட வரி விதிப்பு பற்றிய தகவல்கள் முறையே குறிப்புகள் 13 இலும் 30 இலும் 171 ஆம் பக்கங்களிலும் 211 ஆம் பக்கங்களிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

## அரசாங்கத்திற்கு பங்கு இலாபம், வரிகள் மற்றும் அறவீடுகள்/ தேசத்திற்கான பங்களிப்புகள் →

2020 ஆம் ஆண்டில் வங்கி அரசாங்கத்திற்கு வரிகள் மற்றும் அறவீடுகள் வாயிலாக ரூ. 10,745 மில்லியன் (2019 - ரூ. 11,664 மில்லியன்) பங்களிப்புச் செய்தது.:

| | **2020 ரூ. மில்.** | 2019 ரூ. மில். |
|---|---|---|
| வருமான வரி | **5,537** | 4,080 |
| பெறுமதிசேர் வரி | **3,787** | 3,046 |
| தேச நிர்மாண வரி | **–** | 366 |
| சிறப்பு கட்டணம் | **320** | 320 |
| கடன் மீள்செலுத்தல் வரி | **–** | 1,785 |
| திரட்டிய நிதிக்கான பங்களிப்பு | **1,000** | 2,000 |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிக்கான பங்களிப்பு | **101** | 67 |
| **தேசத்திற்கான மொத்த பங்களிப்பு** | **10,745** | 11,664 |

## ஒதுக்குகள் →

வங்கியின் மொத்த ஒதுக்குகள் 31 டிசெம்பர் 2020 இல் ரூ. 42,497 மில் ஆக காணப்பட்டது. (2019 - ரூ. 36,525 மில்). வங்கியின் ஒதுக்குகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

| | **2020 ரூ. மில்.** | 2019 ரூ. மில். |
|---|---|---|
| நியதிச் சட்ட ஒதுக்கு நிதியம் | **4,068** | 3,563 |
| மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | **6,679** | 5,611 |
| பிடித்து வைத்த வருவாய்கள் | **11,883** | 8,195 |
| ஏனைய ஒதுக்குகள் | **19,867** | 19,156 |
| **மொத்த ஒதுக்குகள்** | **42,497** | 36,525 |

ஒதுக்குகளின் மாற்றங்கள் பற்றிய தகவல்கள் பங்கு மூலதன மாற்றங்களின் கூற்றில் 138 முதல் 141 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## தபால் மா அதிபருக்கான (த மா அ) சேவைக் கட்டணங்கள் ➔

தபால் மா அதிபருக்கான 2020 ஆம் ஆண்டுக்குரிய சேவைக்கட்டணங்கள் ரூ. 160 மில்லியனாக, 2019 இல் வழங்கப்பட்ட அதே அடிப்படையிலேயே வழங்கப்பட்டன.

## ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பொறுப்புக்கள் ➔

வங்கி இரண்டு ஓய்வூதிய நிதியினை பேணுகிறது: ஊழியர் ஓய்வூதிய நிதி I மற்றும் ஓய்வூதிய நிதி II. மேலும் வங்கி துணையிழந்த மற்றும் அனாதைகளுக்கான ஓய்வூதிய நிதி மற்றும் ஓய்விற்கு பின்னரான மருத்துவ திட்டத்தினையும் பேணுகிறது. நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 38 ஓய்வூதிய நன்மைகள் மற்றும் பொறுப்புக்களின் கீழ் பக்கம் 219 - 229 இல் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.

## ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் மூலதன செலவினம் ➔

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி, 2020 ஆம் ஆண்டின் இறுதியில் வங்கி, தொகுதிக்கு முறையே ரூ. 16,004 மில்லியன் மற்றும் ரூ. 16,892 மில்லியனாக (2019 இல் ரூ. 14,163 மில்லியன் மற்றும் ரூ. 14,457 மில்லியன்) விளங்கியது. நிதி அறிக்கைகளுக்கான குறிப்புக்களிலுள்ள விபரங்கள் வருமாறு:

- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 26: ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பக்கம் 200 முதல் 206.
- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 29: நன்மதிப்பு மற்றும் கட்புலனாகாச் சொத்து பக்கம் 209 முதல் 210.
- நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 48.1: மூலதன அர்ப்பணிப்பு பக்கம் 235.

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள், கட்புலனாகாச் சொத்துக்கள் (நடைமுறையிலுள்ள மூலதனம் உள்ளடங்கலாக) ஆகியனவற்றைக் கையேற்றல் தொடர்பிலான வங்கியின் மொத்த மூலதனச் செலவினம் இவ்வாண்டில் ரூ. 2,159 மில்லியனாகவும் (2019 - ரூ. 2,207 மில்லியன்) மற்றும் தொகுதியின் செலவினம் ரூ. 2,169 மில்லியனாகவும் (2019 - ரூ. 2,212 மில்லியன்) விளங்கின. இவற்றின் விபரங்கள் இந்த ஆண்டறிக்கையில் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 26 (அ) மற்றும் 26 (ஆ) இல் 202 முதல் 205 வரையான பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

## நிரந்தரச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி ➔

உரிமம் வழங்கப்பட்ட விசேட வங்கிகளின் அசையாச் சொத்துக்களின் பெறுமதி மீதான 2014 இன் எண் 01 கொண்ட மத்திய வங்கிப் பணிப்புரையின் பிரிவு 3 இற்கு அமைவாக வங்கியானது 2020 டிசம்பரில் இல் உள்ளவாறு நிரந்தர ஆதனம் மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீடொன்றை மேற்கொண்டது.

வங்கியின் ஆதனம் மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீட்டுச் செய்முறையானது, மேற் கூறப்பட்ட வழிகாட்டல்களுக்கிணங்க தொழில் சார் தகைமை பெற்ற சுயாதீனமான மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. நிரந்தரச் சொத்து மற்றும் கட்டடங்களின் மீள் மதிப்பீட்டுத் தொகையானது, அவற்றின் சந்தைப் பெறுமதியை விஞ்சவில்லை என்ற அபிப்பிராயத்தை பணிப்பாளர்கள் சபை கொண்டுள்ளது.

## குறித்துரைக்கப்பட்ட மூலதனம் மற்றும் பங்குடைமை ➔

### குறித்துரைக்கப்பட்ட மூலதனம் →

வங்கியின் அங்கீகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 பில்லியன் ஆகும். இது ஒவ்வொன்றும் ரூ. 10.00 கொண்ட ஒரு பில்லியன் சாதாரண பங்குகளைக் கொண்டு ஆக்கப்பட்டது. வங்கியின் வழங்கப்பட்ட பங்கு

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை



மூலதனம் 2020 டிசெம்பர் 31 இல் ரூ. 9.4 பில்லியன் ஆக விளங்கியது. திறைசேரியின் செயலாளர் அவரது அலுவல்சார் பதவிக்கிணங்க விநியோகிக்கப்பட்ட பங்கு மூலதனம் அனைத்திற்கும் உரிமையாளராவார். இது பற்றிய தகவல்கள் குறிப்பு 43 – வழங்கப்பட்ட மூலதனம் மற்றும் மற்றும் குறிப்பு 46.1 கோரப்படாத வைப்பு ஒதுக்கம் என்பவற்றின் கீழ் 230 மற்றும் 233 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

## பங்குடைமை

இலங்கை அரசாங்கமானது, தேசிய சேமிப்பு வங்கியின் தனிப்பட்ட பங்குதாரர் ஆகும்.

## கீழ்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன் வழங்கல் →

2020 டிசெம்பர் 31 கீழ்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன் பொறுப்பு ரூபா 6 பில்லியன் தரப்படுத்தப்பட்ட, பிணையளிக்கப்படாத, கீழ் நிலைப்படுத்தப்பட்ட மீளளிப்பு செய்யப்படும் ரூபா 100 பெறுமதியினை உடைய 29 டிசெம்பர் 2016 இல் தனிப்பட்ட வைப்பாக வழங்கப்பட்ட மற்றும் ரூபா 5 பில்லியன் பட்டியல்படுத்தப்படாத தரப்படுத்தப்பட்ட பிணையளிக்கப்படாத கீழ்நிலைப்படுத்தப்பட்ட நிரந்தர தொகுதிக்கடன்களை ரூபா 100 பெறுமதியினை உடைய தனிப்பட்ட வைப்பாக 27 அக்டோபர் 2020 வழங்கப்பட்டது. ரூபா 6 பில்லியன் தொகுதிக்கடன்கள் வங்கியின் 2ம் நிலை மூலதனத்திற்கு தகுதிபெறுகின்றதுடன் ரூபா 5 பில்லியன் தொகுதிக்கடன் வங்கியின் 1ம் நிலை மூலதனத்திற்கு தகுதிபெறுகின்றது. நிதிநிலவர அறிக்கை தினத்தில் உள்ள தொகுதிக்கடன் விபரங்கள் குறிப்பு 37.1 பக்கம் 217 முதல் 218 இல் உள்ளது.

## சிரேஷ்ட தொகுதிக்கடன் வழங்கல் →

2020 டிசெம்பர் 31 அன்று வங்கியின் தொகுதிக்கடன் பொறுப்பு ரூபா 20 பில்லியன் ஆகும். பட்டியலிடப்படாத சிரேஷ்ட பிணையளிக்கப்படாத மீட்டுக்கொள்ளக்கூடிய ரூபா 100 பெறுமதியான தொகுதிக்கடன்கள் 28 ஆகஸ்ட் 2019 தனியார் வழங்கல் மூலம் வழங்கப்பட்டன. சிரேஷ்ட தொகுதிக்கடன் விபரங்கள் ஆண்டறிக்கை குறிப்பு 37.2 பக்கம் 218 இல் உள்ளது.

## பங்கு தகவல்

குறித்த வருடத்திற்கான 2020 இற்கான அடிப்படை பங்கிற்கான வருவாய் மற்றும் பங்கிற்கான தேறிய சொத்து பெறுமதி என்பன ரூபா 10.75 (2019 - ரூபா 6.79) மற்றும் ரூபா 55.21 (2019 - ரூபா 48.86). சராசரி பங்கிற்கான அடிப்படை மற்றும் குன்றிய வருமானம் குறிப்பு 14 பக்கம் 173 மற்றும் குறிப்பு 50 பக்கம் 241 இல் தரப்பட்டுள்ளது.

## நிறுவன சமூகப் பெறுப்பு

2020 ஆம் ஆண்டின் போது வங்கியினால் நடாத்தப்பட்ட நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) நிகழ்வுகளிற்கான மொத்தச் செலவு ரூபா. 18.1 மில்லியனாகும்.

## பணிப்பாளர் சபை

### 2020 வருடத்திற்கான பணிப்பாளர் தகவல்கள் →

பணிப்பாளர் சபை, தலைவர் மற்றும் நிதி அமைச்சு மற்றும் தபால் மா அதிபரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இரண்டு பதவி வழி உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கி ஏழு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. 1995 இன் 28 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1971 இன் 30 ஆம் இலக்க தேசேவ சட்டத்தின் பிரிவு 11 (1) இன் ஏற்பாடுகளின் கீழ் தலைவர் மற்றும் ஏனைய நான்கு பணிப்பாளர்கள் ஆகியோர் நிதி அமைச்சரினால் நியமிக்கப்படுவர்.

2020 ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர்களின் விபரங்கள் ஆண்டறிக்கையின் பக்கம் 40 முதல் 44 இல் தரப்பட்டுள்ளது.

| பணிப்பாளரின் பெயர் | நியமன திகதி | அங்கத்துவ அந்தஸ்து |
|---|---|---|
| திருமதி கேசிலா ஜயவர்தன – தலைவர் | 2 ஜனவரி 2020 | நிஅ/சுஅ |
| திரு எரங்க ஜயவர்தன – சிரேஷ்ட பணிப்பாளர் (15 ஜீன் 2020 வரை) | 23 ஜனவரி 2020 | நிஅ/சு |
| திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன – பதவிவழிப் பணிப்பாளர் | 31 ஆகஸ்ட் 20218 | நிஅ/சுஅ |
| கலாநிதி எம் கே சி சேனாநாயக்க – பதவிவழிப் பணிப்பாளர் | 11 ஜனவரி 2020 | நிஅ/சுஅ |
| திருமதி மனோஹரி அபயசேகர – பணிப்பாளர் | 14 ஜனவரி 2020 | நிஅ/சுஅ |
| பிறிகேடியர் கலாநிதி திரான் த சில்வா – பணிப்பாளர் (17 ஜனவரி 2020 முதல் 9 அக்டோபர் 2020 வரை) | 17 ஜனவரி 2020 | நிஅ/சுஅ |
| திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர் | 11 ஏப்ரல் 2020 | நிஅ/சுஅ |

சுஅ – சுயாதீனம் அற்ற பணிப்பாளர், நிஅ – நிறைவேற்று அதிகாரம் அற்ற பணிப்பாளர், சு – சுயதீனமான பணிப்பாளர்

## வங்கி துணை நிறுவனங்களின் பணிப்பாளர்கள்

2020 ஆம் ஆண்டுக்கான NSB நிதி முகாமைத்துவ கம்பனியின் பணிப்பாளர் பெயர்கள் வருமாறு:

- திருமதி கேசிலா ஜயவர்தன – தலைவர்
- திரு யூ ஜி ஆர் ஆரியரத்ன – பணிப்பாளர்
- திருமதி மனோஹரி அபயசேகர – பணிப்பாளர்
- திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர்
- திரு. டபிள்யூ ஓ ரொட்ரிகோ – பணிப்பாளர்
- திரு எம் பி ஏ டபிள்யூ பீரிஸ் – பணிப்பாளர் (4 நவம்பர் 2020 முதல்)
- பிறிகேடியர் கலாநிதி திரான் த சில்வா – பணிப்பாளர் (17 ஜனவரி 2020 முதல் 12 அக்டோபர் 2020)
- திரு எஸ் டி என் பெரேரா – பணிப்பாளர் (26 ஜீலை 2014 முதல் 7 பெப்ரவரி 2020)
- திரு ஆர் எம் டி கே ரத்நாயக்க – பணிப்பாளர் (2 ஜீன் 2020 முதல் 9 அக்டோபர் 2020)

2020 இல் பதவியளிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் பணிப்பாளர் பெயர்கள் வருமாறு:

- திருமதி கேசிலா ஜயவர்தன – தலைவர்
- திரு எச் டி பி கமகே – பணிப்பாளர்
- திரு என் பி இம்புலாகொட – பணிப்பாளர்
- திரு ஜனக அருணசாந்த – பணிப்பாளர்
- திரு எம் ரி ஜே பெரேரா – பணிப்பாளர்

- திரு சுனில் கல்கம – பணிப்பாளர் (13 ஜனவரி 2020 முதல் 5 அக்டோபர் 2020 வரை)
- பிறிகேடியர் கலாநிதி திரான் த சில்வா – பணிப்பாளர் (17 ஜனவரி 2020 முதல் 9 அக்டோபர் 2020 வரை)

## சபை உப குழுக்கள் →

முழுமையான பொறுப்பு மற்றும் பதில்கூறும் பெறுப்பு பணிப்பாளர் சபையிடம் காணப்பட நான்கு உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கினால் வெளியிடப்பட்ட வங்கிகளின் முழுமையான கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்தும், “இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகள்” 2007 இன் இல 12 வங்கி சட்ட நியமத்தின் படி அவையாவன: சபை கணக்காய்வு குழு, சபை மனித வளம் மற்றும் ஊதியங்கள் குழு, சபை நியமன குழு, மற்றும் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு.

பணிப்பாளர்கள் மேலும் மூன்று தன்னிச்சையான உப குழுக்களை நியமித்துள்ளனர், அவையாவன: சபை கடன் குழு, சபை தகவல் தொழில்நுட்ப உபாயமார்க்கக் குழு மற்றும் சபை சந்தைப்படுத்தல் உபாயமார்க்கக் குழு என்பன பணிப்பாளர்களின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைக்கின்றன. எனினும் இம் மூன்று கட்டாயமல்லாத சபை உப குழுக்களும் 8 பெப்பரவரி 2021 முதல் பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கு அமைய இரத்துச் செய்யப்பட்டன. சபை உப குழுக்களின் நியமங்கள் மத்திய வங்கி மற்றும் தேசேவ சட்ட நிறுவன ஆளுகை தொடர்பான பரிந்துரைகளையும் மற்றும் இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சுயாதீனமான நியமங்கள் என்பவற்றின் பரிந்துரைகளுக்கு அமைவானது.

31 டிசெம்பர் 2020 இல் கட்டாயமான மற்றும் சுயாதீனமான சபை உப குழுக்களின் உள்ளடக்கம் மற்றும் கூட்டங்களின் போதான பணிப்பாளர் வருகை என்பன பக்கம் 53 மற்றும் இவ் உப குழுக்களின் அறிக்கைகள் பக்கம் 78 முதல் 91 வரை வழங்கப்பட்டுள்ளது.

## பணிப்பாளர்களின் கூட்டங்கள் →

பணிப்பாளர் சபைக் கூட்டங்கள், சபை உப குழு கூட்டங்கள் மற்றும் முன் கூறப்பட்ட கூட்டங்களுக்கான பணிப்பாளர்களின் வருகைகள் இவ்வாண்டறிக்கையின் நிறுவன ஆளுகை அறிக்கையில் பக்கம் 53 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

## ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் அக்கறை →

நேரடி மற்றும் நேரடியற்ற வங்கியுடனான ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களின் நலன்கள் நிதிக் கூற்றுக்கான குறிப்பு 49.5.2 இல் பக்கம் 239 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந் நலன்கள், சபைக் கூட்டங்களில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. வங்கியுடனான ஏனைய ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் ஏதேனும் நேரடி அல்லது நேரடியற்ற நலன்களைக் கொண்டிருக்கவில்லை.

## வங்கியினால் வழங்கப்பட்ட தொகுதிக்கடன்களில் பணிப்பாளர்களின் அக்கறை →

பணிப்பளாளர்கன் பெயரில் எதுவித தொகுதிக்கடன்களும் பதிவாகவில்லை.

## பணிப்பாளர்களின் வேதனங்களும் ஏனைய நலன்களும் →

வங்கி மற்றும் தொகுதி தொடர்பில் 2020 நிதியாண்டுக்கான பணிப்பாளர்களது வேதனங்கள் மற்றும் ஏனைய நலன்கள் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான 49.5.1 ஆம் குறிப்பில் பக்கம் 239 இல் தரப்பட்டுள்ளன.

## தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் →

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றப்பட்ட இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் (LKAS) 24 இல் தொடர்புடைய திறத்தவர்களின் நியமங்களுக்கமைய “தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை” வகைப்படுத்தக் கூடிய ஏதேனும் இருப்பின் பணிப்பாளர்கள் அவற்றை வெளிப்படுத்தியுள்ளனர். பணிப்பாளர்களால் வெளிப்படுத்தப்பட்ட அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள், பணிப்பாளர்களின் ஆண்டறிக்கையின் பகுதியொன்றாக விளங்கும் நிதிக் கூற்றுக்களுக்கான 49.5.3 ஆம் குறிப்பில் 239 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன.

## சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய அல்லது அபாயங்களை ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் செயற்பாட்டில் வங்கியும் தொகுதியும் ஈடுபடவில்லை.

## நியதிச் சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும், நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் அரசுக்கான நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் மற்றும் அதனோடு தொடர்புபட்ட ஒழுங்குமுறை அமைப்புக்கள், ஊழியர்களுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் உரிய நேரத்தில் செலுத்தப்பட்டுள்ளன என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

## அறிவித்தல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 52 பக்கம் 242 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, கணக்குகளுக்கான சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்களைத் தேவைப்படுத்தும் எந்தவித நிகழ்வுகளும் அறிவிக்கும் திகதியிலிருந்து ஏற்படவில்லை.

## தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

முன்னறிகின்ற எதிர்காலத்தின் போது அதன் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு வங்கி போதிய வளங்களைக் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை மீளாய்வு செய்து திருப்தியடைந்துள்ளது. மேலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினைப் பேணுவதற்கு செயற்பாடுகளைத் தடை செய்கின்ற கட்டுப்பாடுகள் அல்லது திட்டம் போன்ற வங்கியின் இயலுமை மீது சந்தேகத்தினைத் தோற்றுவிக்கின்ற நிச்சயமற்ற தன்மைகள் எதுவும் இருப்பதாக பணிப்பாளர்கள் அறிந்திருக்கவில்லை.

## இடர் முகாமைத்துவம், உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவ தகவல் முறைமைகள்

இடர் முகாமைத்துவம் செய்வதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பினையும் பணிப்பாளர் சபை பொறுப்பேற்கின்றது. இந் நோக்கத்திற்காகப் பணிப்பாளர்கள் சபையானது செயற்திறன் மிக்க மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தகவல் முறைகளை வங்கியில் ஆரம்பித்து அமுல்படுத்தியுள்ளது. வங்கி எதிர் கொள்ளக் கூடிய இடர்களைக் குறைத்தல், முக்கிய தவறுக் கூற்றுக்கள் அல்லது இழப்புகளுக்கு எதிராக நியாயமான உத்தரவாதங்களை வழங்குதல் என்பவற்றுக்காக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் மீள்

# பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை

வடிவமைக்கப்பட்டுள்ளன. வங்கியினால் எதிர்கொள்ளப்படும் அத்தகைய இடர்களை அடையாளங் காணுதல், மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமை செய்தல் ஆகியவற்றுக்கான செயல்முறையொன்று நடைமுறையிலுள்ளது. இடர்களைக் குறைப்பதற்கு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க வழிமுறைகள் இவ்வறிக்கையின், இடர் மற்றும் மூலதன முகாமைத்துவ அறிக்கையின் 92 ஆம் பக்கத்திலிருந்து 114 வரையான பக்கங்களிலும், சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவ குழு அறிக்கையின் 84 முதல் 85 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

## கணக்காய்வாளர் நியமனம், அவர்களது ஊதியம்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 வது பிரிவின் படி கணக்காய்வாளர் தலைமை அதிபதி தேசிய சேமிப்பு வங்கியின் கணக்காய்வாளர் ஆவார்.

நிதிக்கூற்றுக்களின் குறிப்பு 12 பக்கம் 170 இல் கணக்காய்வு கட்டணம் மற்றும் 2020 நிதியாண்டுக்கான ஏனைய சேவைகள் தொடர்பிலான செலவு குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஒழுங்குவிப்பு மேற்பார்வை

ஒழுங்குவிப்பு மேற்பார்வை நிறுவனமான மத்திய வங்கி (CBSL) காலத்திற்கு காலம் வங்கியானது மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பரிந்துரைகளுக்கு இணங்கியுள்ளதா என பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளது. வங்கியில் அக்கறை கொண்ட தரப்பினரின் அக்கறைகளுக்கு ஏற்ப தேவையான நிதி நியமங்களை தேவையான மட்டங்களில் பேணுகிறதா என்பதை தீர்மானிக்கிறது. குறிப்பாக வைப்பாளர்களை பாதுகாத்தல்.

## கூட்டாண்மை ஆளுகை

வங்கியினை முகாமை செய்வதில் சிறந்த கூட்டாண்மை ஆளுகை மற்றும் நியதிகளை பின்பற்றுவதை பணிப்பாளர்கள் முக்கியப்படுத்தியுள்ளனர். எனவே பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை பரிந்துரைத்துள்ளனர்:

(அ) வங்கி வணிகத்தினை நடாத்துவதில் குறித்த சட்டங்கள் மற்றும் நியதிகளை உடன்பட்டுள்ளது மற்றும் சட்டங்கள் மற்றும் நியதிகளை மீறும் எந்த வித நடவடிக்கைளிலும் ஈடுபடவில்லை.

(ஆ) வங்கி தொடர்புபட்ட அனைத்து ஒப்பந்தங்களையும் வெளிப்படுத்தியுள்ளனர் மற்றும் அவர்கள் அக்கறை கொண்ட எந்த விடயத்திலும் ஈடுபடவில்லை.

(இ) வங்கியானது தொடர்ந்து இயங்கும் எண்ணப்பாடு உடையது மற்றும், பணிப்பாளர் சபை தந்திரோபாய வணிக திட்டத்தினை பகுப்பாய்வு செய்துள்ளது மற்றும் எதிர்வு கூறக்கூடிய எதிர்காலத்திற்கு தே.சே.வ தேவையான வளங்களைக் கொண்டுள்ளது. வங்கி மற்றும் துணைக்கம்பனியின் நிதிக்கூற்றுகள் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவில் தயாரிக்கப்பட்டள்ளன.

(ஈ) தொடர்புபட்ட தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றில் வெளிக்காட்டப்பட்டுள்ளது.

(உ) நிதி, தொழிற்பாடு மற்றும் இணங்குவிப்பு கட்டுப்பாடு, இடர் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்கிய உள்ளக கட்டுப்பாடு தொடர்பான மீளாய்வினை வங்கி செய்துள்ளது மற்றும் அவற்றின் வினைத்திறன் மற்றும் உடன்பாடு தொடர்பில் நியாமான உறுதியினை பெற்றுள்ளது.

## நீடித்து நிலைத்திருத்தல்

வணிக தந்திரோபாயங்களை உருவாக்கும் போது வங்கி நீடித்து நிலைத்திருக்கும் விடயங்களை கருத்தில் கொள்கிறது.

## மனித வளங்கள்

உயர் தரச் சேவையினூடாக, நிலை பெறத்தக்க பெறுமதியினைத் தோற்றுவிப்பதற்கு அர்ப்பணிப்பு மிக்க மற்றும் உயர் ஊக்கமிகு ஊழியர்களை விருத்தி செய்வதற்கும், பேணுவதற்கும் வங்கி தொடர்ந்தும் செயலாற்றியது. வங்கியின் மனித மூலவளத் தரத்தினை விருத்தி செய்வதற்கு குறிப்பிடத்தக்க அளவில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

## தொடரும் வழக்குகள்

நிதிக்கூற்றின் குறிப்பு 51, பக்கம் 242 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள், பணிப்பாளர் மற்றும் வங்கியின் சட்டத்தரணிகளின் கருத்துப்படி, வங்கி நிதி நிலைமை மற்றும் எதிர்கால தொழிற்பாடுகளில் தாக்கத்தை கொண்டதல்ல.

## அறிக்கையின் உள்ளடக்கத்தினை ஒத்துக்கொள்ளல்

பணிப்பாளர் சபை இந்த ஆண்டறிக்கையின் உள்ளடக்கத்தை ஒப்புக்கொள்கிறது.

சபையின் ஆணைப்படி.

Keasila Jayawardana

**திருமதி கேசிலா ஜயவர்த்தன**
தலைவர்

**அனுபமா முகாந்திரம்**
சபைச் செயலாளர்

19 மார்ச் 2021
கொழும்பு

# நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் (வங்கி) மற்றும் வங்கியினதும், அதன் துணை நிறுவனங்களின் (தொகுதி) திரட்டிய நிதிக் கூற்றுக்கள் என்பவற்றுடன் தொடர்புடைய பணிப்பாளர்களின் பொறுப்பு இக்கூற்றில் தரப்பட்டுள்ளது.

## நிதிக் கூற்றுக்கள்

அனைத்துக் கொடுக்கல் வாங்கல் கணக்குகளினதும் முறையான பதிவேடுகளைப் பேணுதல் மற்றும் நியதிச் சட்ட வேண்டுதலுக்கிணங்க ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் நிலைமையின் உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினைத் தருகின்ற, பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்கள், இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் என்பவற்றுக்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு வங்கியின் பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும். 2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, வருமானக் கூற்று மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று, பங்கு மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் அவற்றிற்கான குறிப்புக்கள் என்பனவற்றை நிதிக் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

வங்கியினதும், அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்கள், உண்மையானதும் நியாயமானதுமான நோக்கினை பின்வருவன தொடர்பில் தருகின்றன:

1. 2020 டிசெம்பர் 31 இல் வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களின் நிதி நிலைமை மற்றும்
2. 2020 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களின் நிதிச் செயலாற்றுகை.

நிதிக் கூற்றுக்கள் தயாரித்தலில் பணிப்பாளர்கள் பின்வருவனவற்றை உறுதி செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளனர்:

1. நடைமுறையிலுள்ள நிதி அறிக்கையிடல் வலையமைப்புக்கு அமைவாக நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பக்கம் 144 - 160 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், தற்போது நடைமுறையிலுள்ள நிதி அறிக்கையிடல் வரையமைப்புகளுக்கு அமைவாக பொருத்தமாகக் காணப்படுகின்றன. இக் கொள்கைகள் முரண்பாடின்றிப் பிரயோகிக்கப்பட்டதுடன் போதியளவில் வெளிப்படுத்தப்பட்டுமுள்ளன.
2. நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கொடுக்கல் வாங்கல்களின் வடிவம் மற்றும் அவற்றின் போதுமை ஆகியவற்றின் சரியான பிரதிபலிப்பை உறுதிப்படுத்துவதற்குத் தேவைப்படுகின்ற நியாயமானதும், விவேகமிக்கதுமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
3. இயைபுடைய அனைத்துப் பொருத்தமான கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்படுகின்றன.

1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும், 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் 7 (I) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளுக்கிணங்க பணிப்பாளர்கள் சபை வங்கியின் அலுவல்கள் மற்றும் தொழிற்பாட்டினைக் கட்டுப்படுத்தி நிருவகிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளது.

உரிமம் வழங்கப்பட்ட சிறப்பியல்பு வங்கிகளுக்கு மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட மாதிரியுடன் நிதிக் கூற்றுக்கள் இணங்கிச் செல்வதை பணிப்பாளர்கள் சபை உறுதிப்படுத்துகின்றது.

பணிப்பாளர்கள் சபையானது கணக்கீட்டு பதிவுகள் சரியாக பதிவு செய்யப்பட்டு வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான செம்மையுடன் வங்கியின் நிதிக் கூற்றுக்களை எவ்வேளையிலும் தயாரிக்க இயலச் செய்வதனை உறுதி செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளது.

இவ்வாண்டறிக்கையில் எடுத்துரைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒருமைப்பாடு மற்றும் குறிக்கோள்களுக்கான பொறுப்புடைமையினையும் பணிப்பாளர் சபை ஏற்றுக் கொள்கின்றது. (134 முதல் 143 வரையுள்ள பக்கங்களில் நிதிக் கூற்றுகள் காட்டப்பட்டுள்ளன.) இவ்வாண்டறிக்கையில், தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ள 2020 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், கணக்குப் பதிவேடுகளுடன் முரண்படாத மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள், 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் அவற்றுக்கான திருத்தங்கள் ஆகியவற்றுடன் இணங்கியுள்ளன.

## உள்ளகக் கட்டுப்பாடுகள்

பணிப்பாளர்கள் சபை வங்கியினதும் தொகுதியினதும் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளையும் கவனத்தையும் எடுத்தல், மோசடிகள் மற்றும் வேறு ஒழுங்கீனங்களைக் கண்டு பிடித்தல் என்பற்றுக்குப் பொறுப்பாக இருப்பதுடன் செயற்றிறன் மிக்க மற்றும் விரிவான உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறுவி மற்றும் உள்ளகக் கணக்காய்வினையும் முற்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் எல்லைகளுக்கமைவாகவே பிரயோகிக்க மற்றும் செயல்படுத்தப்படுகின்றமையையும் உள்ளடக்குகின்ற செயற்றிறனைக் கண்காணிக்கின்ற செயற்றிறன் மிகு முறைமையினை ஏற்படுத்தியுள்ளது. பணிப்பாளர்கள், நிதிக் கூற்றுக்கள், அவர்களது கிரமமான கூட்டங்களில் அவர்களால் நேரடியாகவும், சபைக் கணக்காய்வுக் குழுவினூடாகவும் மீளாய்வு செய்யப்படுகின்றது என்பதனை உறுதி செய்கின்றனர். நிதி அறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று இவ்வாண்டறிக்கையின் 125 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் உறுதிப்பாட்டு அறிக்கை 127 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

## கணக்காய்வு அறிக்கை

நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்கலாக வங்கியின் அனைத்துப் பதிவேடுகளும் பணிப்பாளர்கள் சபை மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்கச் செய்யப்பட்டுள்ளதுடன், இவ்வறிக்கையின் 130 ஆம் பக்கத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிக்கையிடப்பட்டவாறு காணப்படுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகளை வெளிப்படுத்தியுள்ள மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம் ஆய்வு செய்துள்ளது பொருத்தமானதென அவரால் கருதப்பட்ட அனைத்துப் பரிசோதனைகளையும் பொறுப்பேற்பதற்கு சகல சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளது.

## இணங்குவிப்பு அறிக்கை

அரசாங்கத்திற்கும் ஏனைய தொடர்புபட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களுக்குமானதும், வங்கி மற்றும் தொகுதியின் தொடர்பிலும் ஊழியர்கள் தொடர்பிலும் வங்கியினால் செலுத்தப்படத்தக்க அனைத்து வரிகள், சுங்கம் மற்றும் விதிப்புகள் அத்துடன் அனைத்து ஏனைய அறியப்பட்ட நியதிச்சட்ட நிலுவைகளையும் பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வரையில் உறுதி செய்கின்றனர். நிதி நிலைமைக் கூற்று திகதியன்று உள்ளவாறான வங்கியினாலும் தொகுதியினாலும் நிலுவையாகச் செலுத்தப்படத்தக்கதாயுள்ள

# நிதி அறிக்கையிடல் மீதான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று

அதிகார நிறுவனங்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளன, அல்லது தொடர்புடைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், நிதி நிலை, தொழிற்பாட்டு நிலைமைகள் மற்றும் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தால் விநியோகிக்கப்பட்ட "கூட்டாண்மை ஆளுகைக் கோவை" இல் தீர்க்கப்பட வேண்டிய ஏனைய காரணிகள் கருத்திற் கொள்ளப்பட்டன.

வங்கி மற்றும் தொகுதி முன்னறிகின்ற எதிர்காலத்திற்குத் தொழிற்பாட்டினைத் தொடர்வதற்காக போதிய வளங்களைக் கொண்டுள்ளன. மற்றும் இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் பிரயோகத்தினை நியாயப்படுத்துவதற்கும் பணிப்பாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்துடன், இலங்கை மத்திய வங்கியினால் விநியோகிக்கப்பட்ட பணிப்புரைகளுடன் இணங்குவதற்கு சபை அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

சபையின் ஆணைப்படி



**அனுபமா முகாந்திரம்**
சபைச் செயலாளர்

2021 மார்ச் 19
கொழும்பு

# நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று

## பொறுப்புக்கள்

2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை 3 (8) (ii) (ஆ) இற்கிணங்க இவ்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2017 இல் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகைக்கான சிறப்பு வழிகாட்டலின் கோட்பாடு (ஈ) 1.5 யை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய சேமிப்பு வங்கியில், போதிய மற்றும் செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டு பேணப்படுவதனை உறுதி செய்வதற்கு பணிப்பாளர்கள் சபை (சபை) பொறுப்புடையதாகும். எனினும், அத்தகைய முறைமையொன்று வங்கியின் தொழில் குறிக்கோள்களை அடைவதற்கான தவறு இடரினை இல்லாதொழிப்பதனை விட ஏற்றுக் கொள்ளத்தக்க இடர் வழிவகைகளினுள் வங்கியின் முக்கிய இடர் பகுதிகளை முகாமை செய்வதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க, உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை, முகாமைத்துவத்தின் மற்றும் நிதித் தகவல்களின், அத்துடன் பதிவேடுகளுக்கு எதிரான அல்லது நிதியியல் நட்டங்கள் அல்லது மோசடிகளுக்கெதிரான முக்கிய புறழ் கூற்றுக்களுக்கு எதிரான தீர்க்கமான உத்தரவாதத்தையன்றி நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்கக் கூடியதாகவுள்ளது.

வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட முக்கிய இடர்களை இனங்கண்டு மதிப்பிட்டு முகாமை செய்வதற்காக முன்னெடுக்கப்படும் செயன்முறை ஒன்றை பணிப்பாளர்கள் சபை ஸ்தாபித்துள்ளதுடன், இச் செயன்முறை வியாபாரச் சூழலில் அல்லது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளில் அத்துடன் ஏனைய வழிகாட்டல்களில் மாற்றங்கள் ஏற்படும் போது அல்லது வேண்டப்படும் போது நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமையினை மேம்படுத்துவதனை உள்ளடக்குகின்றது. இச் செயன்முறைகள் சபையினால் கிரமமாக மீளாய்வு செய்யப்படுவதுடன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட உள்ளக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்றின் மீது வங்கி பணிப்பாளர்களுக்கான வழிகாட்டலுடன் இணங்குகின்றமை உறுதி செய்யப்படுகின்றது. இவ் வழிகாட்டலில் வழங்கப்பட்டவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் கொள்கைகளுக்கமைய சபையானது உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீடு செய்தது.

நிதி அறிக்கையிடலின் நம்பகத் தன்மை தொடர்பில் நியாயமான உத்தரவாதத்தினை வழங்குவதற்கு தற்போது செயற்பாட்டிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை செயற்றிறன் மிக்கது, மற்றும் போதுமானது எனவும், அத்துடன் புற நோக்கங்களுக்காக நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் இயைபுடைய கணக்கீட்டுத் தத்துவங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கு அமைவாக உள்ளது எனவும் சபை கருதுகின்றது.

வங்கியினால் எதிர்கொள்ளப்பட்ட இடர்களை இனங்கண்டு மதிப்பிடுவதனூடாக இடர் மற்றும் கட்டுப்பாடு என்பவை மீது சபையினால் அனுமதிக்கப்பட்ட கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் அமுலாக்குவதிலும் இவ்விடர்களைத் தணிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளை வடிவமைத்தல் தொழிற்படுத்தலிலும், கண்காணித்தலிலும் முகாமைத்துவம் சபைக்கு உதவுகின்றது.

நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு வடிவமைப்பு மற்றும் செயற்றிறன் ஆகியவற்றை பிரயோகித்தல் மற்றும் மீளாய்வு செய்தலின் போது தழுவிக்கொள்ளப்பட்ட செயன்முறையின் சிறப்பம்சங்கள்.

காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் வடிவமைப்பு மற்றும் செயற்றிறன் ஆகியவற்றை மீளாய்வு செய்கின்ற முறைமையினை சபை செயற்படுத்தியுள்ளது. ஏனையவற்றுக்கிடையிலான முக்கிய செயன்முறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- வங்கித் தொழிற்பாடுகளின் செயற்றிறன் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுவனக் குறிக்கோள்கள், உபாயங்கள் மற்றும் கொள்கைகளும் வியாபாரப் பணிப்புரைகளுக்கும் இணங்கி வங்கித் தொழிற்பாடுகள் காணப்படுகின்றன என்றும் உறுதி செய்வதில் சபைக்கு உதவுவதற்குமான வரையறை செய்யப்பட்ட நோக்கெல்லைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் சபை உப குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.
- சபைக் கணக்காய்வுக் குழுவானது (BAC), வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு, வெளியகக் கணக்காய்வாளர்கள், ஒழுங்கு முறைப்படுத்தல் அதிகாரிகள் ஆகியோரால் அடையாளங் காணப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு விடயங்கள் தொடர்பில் காலத்துக்குக் காலம் மீளாய்வுகளை மேற்கொள்வதுடன், அத்தகைய குறைபாடுகளைச் சரி செய்வது தொடர்பில் திருத்த நடைமுறைகளையும் மேற்கொள்கின்றது. கணக்காய்வாளர் தலைமை அதிபதி வங்கியின் வெளியகக் கணக்காய்வினை மேற்கொள்கின்றார். பொதுவாக, அரச கணக்காய்வு மேற்பார்வையாளர் சபைக் கணக்காய்வுக் குழுக்கூட்டங்களுக்கு அழைக்கப்படுவார்.
- சபைக் கணக்காய்வுக் குழு, கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அதன் தரம் தொடர்பில் குறிப்பிடத்தக்க கவனத்தைச் செலுத்தி உள்ளக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மீளாய்வு செய்கிறது. 2020 ஆம் ஆண்டில் சபை கணக்காய்வுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இந்த ஆண்டறிக்கையின் 78 ஆம் பக்கத்தில் காணப்படும் சபைக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. வங்கியின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு வருடாந்த கணக்காய்வுத் திட்டத்திற்கமைய கிளைகள், பிரிவு மற்றும் ஏனைய அலகுகளின் கணக்காய்வுகளை மேற்கொள்கின்றது. கணக்காய்வு இடைவெளிகள் மதிப்பிடப்பட்ட இடர் மட்டங்களின் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. கணக்காய்வுத் திட்டம் அமுல்படுத்துவதற்காக சபை கணக்காய்வுக் குழுவினால் ஒப்புதலளிக்கப்படுகின்றது. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகளுடனான இணக்கத்தையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் செயற்றிறன் தன்மைகளையும் உறுதி செய்வதற்கு கணக்காய்வுப் பரிசோதனைகளை நடாத்துவதுடன் ஏதேனும் இணங்கியொழுகாமை தொடர்பில் அதன் காண்புகளை அறிக்கையிடுகின்றது. தொழிற்பாட்டு மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளின் மீதான சுயாதீன மற்றும் பொருண்மை அறிக்கையொன்றினை வழங்கும் பொருட்டு கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கணக்காய்வுகளின் காண்புகள், சபைக் கணக்காய்வுக் குழுவின் பருவகாலக் கூட்டங்களில் மீளாய்வு செய்யப்படுவதற்காகச் சமர்ப்பிக்கப்படுகின்றன. சபைக் கணக்காய்வுக் குழுவின் நடவடிக்கைகள், குழுக் கூட்டங்களின் குறிப்புகளோடு காலத்துக்குக் காலம் என்ற அடிப்படையில் சபையின் தகவலுக்காகச் சமர்ப்பிக்கப்படும்.
- வங்கியின் இடரினது பிரதான பகுதிகளின் முழுமையான முகாமைத்துவத்தைக் கண்காணிப்பதற்கு சபைக்கு உதவுவதற்காக சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழு (BIRMC) சபையினால் நிறுவப்பட்டது. வங்கியின் நடவடிக்கைகள் பொருத்தமான சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிகாட்டல்களுக்கிணங்க மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சபையானது சுயாதீன இணங்குவிப்புப் பிரிவொன்றை நிறுவியது. ஏதாவது இணங்குவிப்பற்ற விடயங்கள் தொடர்பில் சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவுக்கு காலத்துக்குக் காலம்

# நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று



அறிவிக்கப்படும். இடர் மதிப்பீடு பற்றிய அறிக்கை சபை ஒருங்கிணைந்த இடர் முகாமைத்துவக் குழுவினால் காலத்துக்குக் காலம் சமர்ப்பிக்கப்படும்.

- முகாமைத்துவ மட்டக் குழுக்கள், வங்கியின் நாளாந்த வர்த்தக நடவடிக்கைகளின் முக்கிய விடயங்களின் செயற்றிறன் வாய்ந்த முகாமை மற்றும் மேற்பார்வையை உறுதிப்படுத்துவற்கு ஏற்புடைய உரித்துடன் இயங்குகின்றன. இம் மதிப்பீடு, வங்கியினால் பிரயோகிக்கப்பட்ட செயன்முறையை மட்டும் உள்ளடக்கியுள்ளதுடன், அதன் துணை நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகளை உள்ளடக்கவில்லை.

வங்கியானது LKASs மற்றும் SLFRSs ஆகியவற்றை உள்ளடக்கிய, புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களை 2012 இல் ஏற்றுக் கொண்டது. அத்தகைய இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டமையினால் ஏற்றுக் கொள்ளுகைக்கான புதிய தேவைப்பாடுகள், அறவீடு, பகுப்பாய்வு மற்றும் வெளிப்படுத்துகை ஆகியவற்றுடன் இணங்கிச் செல்லும் செய்முறைகளில் முன்னேற்றகரமான அதிகரிப்பும், தொடர்ச்சியான கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டன.

## உறுதிப்படுத்தல்

மேற்குறித்த செயன்முறைகளை அடிப்படையாகக் கொண்டு சபை வெளியக நோக்கங்களுக்காக நிதி அறிக்கையிடல் நம்பகத் தன்மை மற்றும் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பில் நியாயமான உத்தரவாதமொன்றினை வழங்கும் பொருட்டு வங்கியின் நிதி அறிக்கையிடல் முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும் உறுதி செய்கின்றது.

## வெளியகக் கணக்காய்வாளர்களின் கூற்று மீளாய்வு

2020 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்று பற்றிய மேலே உள்ள பணிப்பாளர்களின் கூற்றானது வெளியகக் கணக்காய்வாளர்களான கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மீளாய்வு செய்யப்பட்டதுடன் வங்கியின் நிதியறிக்கையிடல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டின் திட்டமிடல் மற்றும் செயற்திறன் தொடர்பான மீளாய்வின் போது பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயற்பாடு தொடர்பாக தனது அறிவு முரண்படுவதை ஏற்றுக் கொள்ளுவதற்கான காரணங்கள் எதுவும் தனது கவனத்திற்குட்படுத்தவில்லை என பணிப்பாளர் சபைக்கு அறிக்கை இடப்பட்டது. நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டுக் கூற்று தொடர்பான அவர்களது அறிக்கை இவ் ஆண்டறிக்கையின் 127 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

சபையின் ஆணைப்படி



**திருமதி. கேசிலா ஜயவர்த்தன**
தலைவர்



**திருமதி மனோஹரி அபேயசேகர**
தலைவர் – சபைக் கணக்காய்வு குழு/
பணிப்பாளர்



**கலாநிதி எம் கே சி சேனாநாயக்க**
பணிப்பாளர்

2021 மார்ச் 19
கொழும்பு

# உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான சுயாதீன உறுதிப்பாட்டு அறிக்கை தேசிய கணக்காய்வு அலுவலகம்

**ජාතික විගණන කාර්යාලය**
**தேசிய கணக்காய்வு அலுவலகம்**
**NATIONAL AUDIT OFFICE**

මගේ අංකය / எனது இல. / My No. } பீஏஎவ்/ஏ/என்எஸ்பீ/ஐசி/2020/11
ඔබේ අංකය / உமது இல. / Your No. }
දිනය / திகதி / Date } 2021 ஏப்றில் 07

தலைவர்,
தேசிய சேமிப்பு வங்கி

தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான பணிப்பாளர் சபைக்கூற்றுக்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் உறுதிப்பாட்டு அறிக்கை.

## அறிமுகம்

2020 திசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடு ("கூற்று") மீதான பணிப்பாளர் சபைக் கூற்றுத் தொடர்பான உறுதிப்பாட்டை இவ்வறிக்கை வழங்குவதாக உள்ளது.

## முகாமைத்துவத்தின் பொறுப்பு

இலங்கை பட்டாயக் கணக்காளர் நிறுவனத்தினால் 2007ன் 12ஆம் இலக்க வங்கிச் சட்ட நெறிப்படுத்தலின் 3 (8) (ii) (ஆ) பிரிவிற்கிணங்க விநியோகிக்கப்பட்ட "உள்ளகக் கட்டுப்பாட்டுக்கு உரித்தான பணிப்பாளர்களின் கூற்று மீதான வங்கியின் பணிப்பாளர்களுக்கான வழிகாட்டல்" களுக்கிணங்க கூற்றுக்களின் தயாரிப்பு மற்றும் சமர்ப்பித்தல் ஆகியவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

## உத்தரவாத ஈடுபாடுகள் மீதான இலங்கைத் தரநியமத்துடனான 3050 (திருத்தப்பட்டது) உடன் எனது பொறுப்புக்களும் இணங்குவித்தலும்

கூற்றானது பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட இரு ஆவணம் மூலமும் துணையளிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தேசிய சேமிப்பு வங்கியின் உள்ளக கட்டுப்பாட்டின் வடிவம் மற்றும் செயல்திறன் வாய்ந்த தன்மை என்பவற்றை மீளாய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய செயன்முறையினை பொருத்தமானவாறு பிரதிபலிக்கின்றதா என்பதனையும் மதிப்பிடுவதே எனது பொறுப்பாகும்.

இலங்கை பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் மூலம் வழங்கப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடு பற்றிய பணிப்பாளர்களின் கூற்று மீது வங்கிகளுக்கான உத்தரவாத ஈடுபாடுகள் 3050 (திருத்தப்பட்டது) மீதான இலங்கை தரநியமத்திற்கிசைவாக இவ் ஈடுபாட்டினை நான் மேற்கொண்டுள்ளேன்.

இந்நியமமானது உள்ளகக் கட்டுப்பாடு மீதான கூற்றினை அனைத்து முக்கியத்துவமிக்க நோக்குகளிலும் தயாரித்துள்ளதா என்பது பற்றிய மட்டுப்படுத்தப்பட்ட உத்தரவாதத்தினை பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகளை நான் திட்டமிட்டு செயலாற்றுவதை தேவைப்படுத்துகின்றது.

இவ் ஈடுபாட்டின் நோக்கத்திற்காக இற்றைப்படுத்துவதற்கான அல்லது எவையேனும் அறிக்கைகளை மீள வழங்குவதற்கான பொறுப்பு எனக்கில்லை அன்றியும் இவ் ஈடுபாட்டு நடவடிக்கையில் நான் நிதியியல் தகவல் பற்றி செயலாற்றவோ அத்துடன் கணக்காய்வு செய்யவோ அல்லது மீளாய்வு செய்யவோ இல்லை.

## செயலாற்றப்பட்ட பணி பற்றிய தொகுப்பு

கூற்றானது பணிப்பாளர்களினால் அல்லது பணிப்பாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட ஆவணத்தின் மூலம் துணையளிக்கப்பட்டிருந்ததா அத்துடன் வங்கியின் நிதியியல் அறிக்கையிடல் மீதான உள்ளக கட்டுப்பாட்டு முறையினை மீளாய்வு செய்வதில் பணிப்பாளர்கள் பின்பற்றிய செயன்முறையினை பொருத்தமானவாறு பிரதிபலித்திருந்ததா என்பது பற்றி மதிப்பிடுவதற்கான எனது ஈடுபாட்டினை நான் மேற்கொண்டேன்.

செயலாற்றப்பட்ட நடைமுறைகளானவை முதன்மையாக வங்கியின் ஆளணியினை மற்றும் பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயன்முறைக்கு துணையளித்தவற்றின் மாதிரி அடிப்படையில் ஏற்கனவேயுள்ள ஆவணம் பற்றி வினவுதல் என்பவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

உத்தரவாத ஈடுபாடுகள் மீதான இலங்கை தரநியமமானது 3050 (திருத்தப்பட்ட), அறிக்கை, அனைத்து இடர்நேர்வுகளையும் கட்டுப்பாடுகளையும் உள்ளடக்குகின்றது என்பதனை பரிசீலிக்கவோ அல்லது வங்கியின் இடர்நேர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடைமுறைகளின் செயல்திறன் மீதான அபிப்பிராயமொன்றினை ஏற்படுத்தவோ என்னை தேவைப்படுத்தவில்லை. உத்தரவாத ஈடுபாடுகள் மீதான இலங்கைத் தரநியமமானது 3050 (திருத்தப்பட்ட) ஆண்டறிக்கையில், வெளிப்படுத்தப்பட்ட எவையேனும் முக்கிய பிரச்சினைகள் பற்றிய முக்கிய உள்ளகக் கட்டுப்பாட்டு நோக்குகளைக் கையாளுவதற்கு விவரிக்கப்பட்டுள்ள செயன்முறைகள் உண்மையில் பிரச்சினைகளுக்கான பரிகாரமாக அமையுமா என்பதனை பரிசீலிப்பதற்கும் என்னை தேவைப்படுத்தவில்லை.

தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகளானவை வங்கியின் தன்மை பற்றிய கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலான நிகழ்வு அல்லது கொடுக்கல் வாங்கல் பற்றிய எனது புரிந்துணர்வு கொண்ட எனது தீர்ப்பினை சார்ந்தவையாகும்.

நான் பெற்றுக்கொண்ட சான்றுகள், எனது முடிவுரைக்கான அடிப்படையொன்றினை வழங்குவதற்கு போதுமானதும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## எனது முடிவுரை

மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டின் அடிப்படையில் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட கூற்று வங்கியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் திட்டமிடல் மற்றும் செயற்திறன் தொடர்பான மீளாய்வின்போது பணிப்பாளர் சபையினால் பின்பற்றப்பட்ட செயற்பாடு தொடர்பாக எனது அறிவு முரண்படுவதை ஏற்றுக் கொள்ளுவதற்கான காரணங்கள் எதுவும் எனது கவனத்திற்குட்படவில்லை.

**ஒப்பமிட்டவர்**
**டபிள்யூ. பீ. சீ. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துாவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று

## இணங்கியொழுகுதல்

2020 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் (தொகுதி) ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் பின்வரும் தேவைப்பாடுகளுக்கிணங்க தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள்
- 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம்
- 1955 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்
- திருத்தப்பட்டவாறான 1988 இன் 30 ஆம் இலக்க வங்கிச் சட்டம் மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மாதிரி மற்றும் தகவல் வெளிப்படுத்தலுடன் தொடர்புடைய வழிகாட்டல்கள்.
- இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் (SLFRSs/LKASs)
- இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் விநியோகிக்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை மீதான சிறந்த நடைமுறைக் கோவை
- இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட கூட்டாண்மை ஆளுகை மீதான 2007 இன் 12 ஆம் இலக்க வங்கிச் சட்டப் பணிப்புரை

நிதிக் கூற்றுக்கள் மற்றும் வெளிப்படுத்தல்களைத் தயாரிக்கையில் பயன்படுத்திய வடிவங்கள் இலங்கை மத்திய வங்கியினால் விதந்துரைக்கப்பட்ட வடிவங்களுடன் இணங்கியிருந்தது. இவை கணக்கீட்டு நியமம் - (LKAS1), “நிதிக் கூற்றுக்களை எடுத்துரைத்தல்” இனது வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுடனும் இணங்கியிருந்தது. குழு காலாண்டு அடிப்படையில் அதன் பாவனையாளர்களுக்கு நிதியியல் பெறுபேறுகளை எடுத்துரைக்கின்றது. நிதிநிலைக்கூற்றுக்களை தயாரிப்பதில் பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் வங்கி மற்றும் குழுவினால் சரியாகவும் மற்றும் நிலையாகவும் பிரயோகிக்கப்பட்டன. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் உயர் நிலைத் தீர்மானங்கள் மற்றும் சிக்கல்களில் ஈடுபடுத்திய மதிப்பீடுகளும் வங்கியின் வெளியகக் கணக்காய்வாளர்கள் மற்றும் சபை கணக்காய்வுக் குழுவுடன் கலந்துரையாடப்பட்டன.

2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஆண்டறிக்கை வெளியீடு தொடக்கம் கணக்கீட்டுக் கொள்கைகளில் மற்றும் கணிப்பீட்டு முறைகளில் மாற்றங்கள் ஏதும் காணப்படவில்லை. அதற்கமைய, தற்போதைய எடுத்துரைத்தலுடன் இணங்கும் விதத்தில் ஒப்பீட்டுத் தகவல்கள் திருத்தப்படவில்லை.

இவ்வாண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய நிதித் தகவல்கள் மீளாய்வுக்குட்பட்ட காலத்தின் போது வங்கி மற்றும் தொகுதியினது சொத்துக்கள், பொறுப்புக்கள் நிதி நிலைமைகள், தொழிற்பாடு மற்றும் காசுப் பாய்ச்சல்களின் பெறுபேறுகள் தொடர்பில் அனைத்து முக்கிய விடயங்களையும் நியாயமாக எடுத்துரைக்கின்றது என நாம் எமது அறிவுக்கு எட்டிய வரையில் உறுதி செய்கின்றோம். தொகுதி தொடர்ச்சியான தொழிற்பாட்டுக்கு போதிய வளங்களைக் கொண்டுள்ளது என்றும் இந் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தலில் தொடர்ந்தியங்கும் எண்ணக் கரு பிரயோகிக்கப்பட்டது என்றும் நாம் உறுதி செய்கின்றோம்.

## உள்ளக கட்டுப்பாடு மற்றும் செயல்முறைகளின் பொறுப்புக்கள்

வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைகளைத் தாபித்து அமுலாக்கிப் பேணுவதற்கு நாம் பொறுப்புடமை கொண்டுள்ளோம். முன்னெடுக்கப்படும் அடிப்படை ஒன்றில் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு சமகாலப்படுத்தப்படுகின்ற சொத்துக்களைப் பாதுகாத்தல், மோசடி அல்லது தவறுகள் அத்துடன் வேறேதேனும் ஒழுங்கீனங்களைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் முக்கிய தவறுகளை உறுதி செய்கின்ற செயற்றிறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாடுகளும் நடவடிக்கை முறைகளும் செயன் முறையிலுள்ளன என்பதை நாம் உறுதி செய்கின்றோம். எமது அறிவுக்கு எட்டிய வரையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைமைகளின் வடிவமைத்தல் அல்லது தொழிற்படுத்தலில் முக்கிய குறைபாடுகள் அல்லது பலவீனங்கள், இல்லையென்றும் மற்றும் முகாமைத்துவம் அல்லது ஏனைய ஊழியர்களுடன் தொடர்பான எதுவித மோசடியும் காணப்பட்டிருக்கவில்லையெனவும் நாம் உறுதிப்படுத்துகின்றோம். வங்கியின் உள்ளகக் கணக்காய்வாளர்களும் உள்ளகக் கட்டுப்பாடுகளும் மற்றும் நடைமுறைகளும் முரணின்றிப் பின்பற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக காலத்துக்குக் காலம் மீளாய்வுகளை நடாத்துகின்றனர். இருப்பினும், எந்தவொரு உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் கணக்கீட்டு முறைமையினால் வழங்கப்படும் உத்தரவாதத்தை மதிப்பிடும் போதும் உள்ளார்ந்த வரையரைகளை இனங்காண வேண்டும்.

நிதி அறிவித்தல் தொடர்பில் உள்ளகக் கட்டுப்பாடு மீதான பணிப்பாளர்களின் கூற்று இந்த ஆண்டறிக்கையின் 125 முதல் 126 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது. வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிதி அறிக்கையிடல் மீதான உள்ளகக் கட்டுப்பாட்டின் செயற்றிறன் பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி கணக்காய்வினை மேற்கொண்டதுடன் அவரால் வழங்கப்பட்ட தகுதியற்ற அபிப்பிராயம் 127 ஆம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

# பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (நிதியும் திட்டமிடலும்) ஆகியோரின் பொறுப்புடைமைக் கூற்று

## வெளியகக் கணக்காய்வு

வங்கியினதும் அதன் துணை நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட்டன. வங்கியின் திரட்டிய நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை இவ்வாண்டறிக்கையின் 130 முதல் 132 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது. வங்கியின் சபைக் கணக்காய்வுக் குழு ஏனைய பணிகளுக்கு மத்தியில் அனைத்து உள்ளகக் கணக்காய்வு மற்றும் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டங்கள், உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளினதும் நடவடிக்கை முறைகளினதும் வினைத் திறனையும் மீளாய்வு செய்ததுடன் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் மீளாய்வு செய்தது. அத்துடன், அவர்களது நியதிச்சட்ட ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளைக் கொண்டமை பற்றிய விபரங்கள் இவ்வாண்டறிக்கையின் 78 முதல் 79 வரையான பக்கங்களில் சபைக் கணக்காய்வுக் குழு அறிக்கையில் தரப்பட்டுள்ளன. முழுமையான சுயாதீனத் தன்மையினை உறுதி செய்வதற்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியும், உள்ளகக் கணக்காய்வாளர்களும் ஏதேனும் முக்கிய விடயம் பற்றி கலந்துரையாடுவதற்கு, சபைக் கணக்காய்வுக் குழு உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்வதற்கு முழுமையான சுதந்திரத்துடன் அடையும் வழியினைப் பெற்றுள்ளனர்.

## உறுதி செய்தல்

இதனை எமது அறிவுக்கு எட்டிய வரையில் உறுதி செய்கின்றோம்:

- வங்கியும் தொகுதியும் அனைத்து ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் அத்துடன் வழிகாட்டல்கள் என்பவற்றுடன் இணங்கியொழுகியுள்ளது.
- பொருண்மையான இணங்குவிப்பற்ற தன்மைகள் எதுவும் காணப்படவில்லை.
- நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 51 இல் 242 ஆம் பக்கத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர குழுவிற்கு எதிராக வழக்காடல்கள் எதுவும் காணப்படவில்லை.
- வங்கி மற்றும் தொகுதி மூலமான அனைத்து வரிகள், தீர்வைகள், அறவீடுகள் மற்றும் நியதிச் சட்டக் கொடுப்பனவுகள் அனைத்தும் அத்துடன் வங்கியினதும் தொகுதியினதும் ஊழியர்கள் சார்பில் 2020 டிசெம்பர் 31 இல் கொடுப்பனவு செய்யத்தக்க அனைத்து பங்களிப்புக்கள், அறவீடுகள் மற்றும் வரிகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன. அல்லது தேவையான போது உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**எம் பீ ஏ டபிள்யூ பீரிஸ்**
பொது முகாமையாளர்/பிரதம
நிறைவேற்று அதிகாரி

**கே ரவீந்திரன்**
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்
(நிதியும் திட்டமிடலும்)

2021 மார்ச் 19
கொழும்பு

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } பீஏஎவ்/ஏ/என்எஸ்பீ/2020/10

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2021 மார்ச் 21

தலைவர்,

தேசிய சேமிப்பு வங்கி

**தேசிய சேமிப்பு வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனியினதும் 2020 திசெம்பர் 31 இல் அறிக்கை இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் மீது 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் துணைக் கம்பனிகளினதும் ("வங்கி") வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனியினதும் ("தொகுதி") 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் திரட்டிய நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் ஆகியவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்.

வங்கியினதும் மற்றும் தொகுதியினதும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கியினதும் மற்றும் தொகுதியினதும் ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 வங்கியின் 2020 ஆம் ஆண்டின் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள பிற தகவல்கள்

வங்கியின் 2020 ஆம் ஆண்டின் ஆண்டு அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் மற்றும் எனது கணக்காய்வாளர் அறிக்கை ஆகியன தவிர்ந்த பிற தகவல்கள் கணக்காய்வாளரது அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்குக் கிடைக்கச் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய பிற தகவல்களுக்கு முகாமையே பொறுப்பு ஆகும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் பிற தகவல்களை உள்ளடக்குவதில்லை என்பதுடன், மேலும் அதில் எந்தவிதமான உறுதிப்படுத்தல் முடிவுகளையும் நான் வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, மேலே அடையாளம் காணப்பட்ட பிற தகவல்கள் எனக்குக் கிடைக்கச் செய்யப்படும் போது அதை வாசிப்பதே எனது பொறுப்பாக இருப்பதுடன், அவ்வாறு செய்யும்போது, பிற தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வில் பெறப்பட்ட எனது அறிவுடன் பொருண்மைமிக்க வகையிலான இணக்கப்பாடின்மையைக் கொண்டுள்ளதா அல்லது அவ்வாறல்லாத போது, பொருண்மைமிக்க வழுக்கூற்றாகத் தோற்றமளிக்கிறதா என்பதையும் கருத்தில் கொள்வேன்.

வங்கியின் 2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையை நான் வாசிக்கும் போது, அதில் பொருண்மைமிக்க வழுக்கூற்றுக்கள் இருப்பதாக நான் முடிவு செய்தால், அந்த விடயத்தை திருத்துவதற்காக ஆளுகைக்குப் பொறுப்பளிக்கப்பட்டவர்களுடன் நான் தொடர்பு கொள்ளத் தேவைப்படுத்தப்படுகிறேன். மேலும் திருத்தப்படாத பொருண்மைமிக்க வழுக்கூற்றுக்கள் காணப்பட்டால், அவை அரசியலமைப்பின் 154 (6) வது பிரிவில் உள்ள ஏற்பாடுகளைப் பின்பற்றி, பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு, கூடியவிரைவில் வழங்கப்படும்.

අංක 306/72, පොල්දුව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

NAOSL
ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள் →

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் மற்றும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு →

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்:

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியினது உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

**2.1** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

**2.1.1** கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவு என்பவற்றின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியால் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் வைத்திருக்கப்படுகின்றன.

**2.1.2** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

**2.1.3** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் உள்ளடக்குகின்றன.

**2.2** மேற்கொள்ளப்பட்ட நடைமுறைகளின் அடிப்படையில் பெறப்பட்ட சான்றுகளானவை பொருண்மையான விடயங்களிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. ஆனால் வேறு எதுவும் எனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**2.2.1.** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வழமையான வணிக செயற்பாடுகளிற்கு வெளியே வங்கியினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் ஒப்பந்தம் தொடர்பில் வங்கியின் ஆளுகை சபை உறுப்பினர் எவராவது நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் ஏதேனும் அக்கறை கொண்டுள்ளதை குறிப்பிடுதல்.

**2.2.2** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் ஏற்புடையற்பாலதான எழுத்தினாலான சட்டம், பொது அல்லது விசேட பணிப்புக்களுடன் வங்கி இணங்கியொழுகாதுள்ளமையை குறிப்பிடுதல்.

**2.2.3** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கி அதன் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்க செயலாற்றியிருக்காதமையை குறிப்பிடுதல்.

**2.2.4** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12 (ஏ) பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் வங்கியின் வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டிருக்காதமையை குறிப்பிடுதல்.

**ஒப்பமிட்டவர்**
**டபிள்யூ. பீ. சீ. விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# நிதியியல் கூற்றுக்களின் உள்ளடக்கம்


| | | பக்க இலக்கம் |
|---|---|---|
| **பிரதான நிதியியல் கூற்றுக்கள்** | | |
| | வருமானக் கூற்று | 134 |
| | அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று | 135 |
| | நிதி நிலைமைக் கூற்று | 136 |
| | பங்குரிமை மாற்றங்கள் பற்றிய கூற்று – வங்கி | 138 |
| | பங்குரிமை மாற்றங்கள் பற்றிய கூற்று – தொகுதி | 140 |
| | காசுப் பாய்ச்சல்கள் கூற்று | 142 |
| **நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – பொதுவானவை** | | |
| 1. | அறிக்கையிடும் நிறுவனம் | 144 |
| 2. | கணக்கீட்டுக் கொள்கைகள் | 144 |
| 2.1 | தயாரித்தலுக்கான அடிப்படை | 144 |
| 2.2 | கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் | 147 |
| 2.3 | சீர்மதிப்பு பெறுமதி அளவீடு | 148 |
| 2.4 | முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் – பொதுவானவை | 149 |
| 2.5 | முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் – சொத்துகளையும் பொறுப்புகளையும் இனங்காணுதல் | 150 |
| 2.6 | முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் – நிதியியல் சாதனங்களுக்கான வருமானத்தினையும் செலவினையும் இனங்காணல் | 159 |
| 2.7 | முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் – வரிவிதிப்பு | 159 |
| 2.8 | காசுப் பாய்ச்சல் கூற்று | 160 |
| 2.9 | ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகள் | 160 |
| 2.10 | அறிக்கையிடும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் | 160 |
| 2.11 | வழங்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் ஆயினும் அறிக்கையிடும் திகதியன்று செயற்பாட்டில் அல்லாதவை | 160 |
| **நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – வருமானக் கூற்று** | | |
| 3. | மொத்த வருமானம் | 161 |
| 4. | தேறிய வட்டி வருமானம் | 161 |
| 5. | தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமனம் | 163 |
| 6. | வர்த்தகப்படுத்தலில் இருந்து இலாபம்/(நட்டம்) | 165 |
| 7. | இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்களிலிருந்து இலாபம்/(நட்டம்) | 165 |
| 8. | நிதியியில் சொத்துகளின் இனங்காணாமையிலிருந்து தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்) | 166 |
| 9. | ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறியது) | 166 |
| 10. | சேதஇழப்பு அறவீடுகள் | 167 |
| 11. | ஆளணிச் செலவுகள் | 168 |
| 12. | ஏனைய செலவுகள் | 170 |
| 13. | வரிச் செலவுகள் | 171 |
| 14. | பங்கொன்றிற்கான வருவாய் (EPS) | 173 |
| **நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – நிதி நிலைமைக் கூற்று: சொத்துக்கள்** | | |
| 15. | அளவீட்டு அடிப்படையில் நிதியியல் சாதனங்கள் பற்றிய பகுப்பாய்வு | 174 |
| 16. | காசும் காசுக்கு சமமமானவையும் | 177 |
| 17. | மத்திய வங்கியிடமுள்ள மீதிகள் | 177 |
| 18. | வங்கிகளிலுள்ள இருப்புகள் | 177 |
| 19. | பெறுதி நிதியியல் கருவிகள் | 178 |
| 20. | இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள் | 180 |
| 21. | கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் | 183 |
| 22. | கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள் – படுகடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் | 192 |
| 23. | ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள் | 194 |
| 24. | துணை கம்பனிகளில் உள்ள முதலீடுகள் | 198 |
| 25. | இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டுமுயற்சிகளில் முதலீடுகள் | 200 |
| 26. | ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 200 |
| 27. | சொத்துகளைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை | 206 |
| 28. | முதலீட்டு ஆதனங்கள் | 207 |
| 29. | நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துகள் | 209 |
| 30. | பிற்போடப்பட்ட வரிச் (சொத்துகள்)/பொறுப்புகள் | 211 |
| 31. | ஏனைய சொத்துகள் | 213 |
| **நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – நிதி நிலைமைக் கூற்று: பொறுப்புக்கள் மற்றும் உரிமையாண்மை** | | |
| 32. | வங்கிகளுக்குச் செலுத்தப்படவேண்டியவை | 213 |
| 33. | பெறுதி நிதியியல் சாதனங்கள் | 214 |
| 34. | இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் பொறுப்புகள் | 214 |
| 35. | கடன்தீர் செலவில் நிதியியல் பொறுப்புகள் | 214 |
| 35. | வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 214 |
| 35. | படுகடன் பிணையங்கள் வைத்திருப்போருக்கு செலுத்தவேண்டியவை | 214 |
| 35. | ஏனைய கடன் பெறுநர்களுக்கு செலுத்தவேண்டியவை | 214 |
| 36. | குத்தகைப் பொறுப்புகள் | 214 |
| 37. | வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள் | 216 |
| 38. | ஓய்வு நலக் கடப்பாடுகள் | 219 |
| 39. | நடப்பு வரிப் பொறுப்புகள் | 229 |
| 40. | ஏனைய ஏற்பாடுகள் | 230 |
| 41. | ஏனைய பொறுப்புகள் | 230 |
| 42. | துணைநிறுவனங்களுக்கு செலுத்தவேண்டியவை | 230 |
| 43. | குறிப்பிடப்பட்ட மூலதனம்/சாட்டப்பட்ட மூலதனம் | 230 |
| 44. | நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | 231 |
| 45. | பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | 231 |
| 46. | ஏனைய ஒதுக்குகள் | 232 |
| 47. | கட்டுப்படுத்தாத அக்கறை | 234 |
| **நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் – ஏனைய வெளிப்படுத்தல்கள்** | | |
| 48. | எதிர்பாராப் பொறுப்புகளும் கடமைப்பொறுப்புகளும் | 234 |
| 49. | தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் | 235 |
| 50. | சாதாரண பங்கு ஒன்றின் நிகர சொத்துப் பெறுமதி | 241 |
| 51. | வங்கிக்கும் தொகுதிக்கும் எதிரான வழக்குகள் | 242 |
| 52. | அறிக்கையிடும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் | 242 |
| 53. | ஒப்பீட்டுத் தொகைகள் | 243 |
| 54. | நிதியியல் இடநேர்வு முகாமைத்துவம் | 245 |
| 55. | முதிர்வுப் பகுப்பாய்வு | 273 |
| 56. | நிதியயில் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி | 277 |
| 57. | மூலதன முகாமைத்துவம் (ஒழுங்குமுறைப்படுத்தல் அறிக்கையிடலின் பிரகாரம்) | 282 |

# வருமானக் கூற்று

| டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | குறிப்பு | வங்கி 2020 ரூ. '000 | வங்கி 2019 ரூ. '000 | வங்கி மாற்றம் % | தொகுதி 2020 ரூ. '000 | தொகுதி 2019 ரூ. '000 | தொகுதி மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| **மொத்த வருமானம்** | 3 | 127,547,060 | 121,929,059 | 5 | 130,039,494 | 125,810,171 | 3 |
| வட்டி வருமானம் | | 122,512,049 | 118,729,784 | 3 | 124,608,182 | 120,351,774 | 4 |
| கழிக்குக: வட்டிச் செலவு | | 87,621,868 | 89,897,770 | (3) | 88,425,490 | 90,868,139 | (3) |
| **தேறிய வட்டி வருமானம்** | 4 | 34,890,181 | 28,832,014 | 21 | 36,182,692 | 29,483,635 | 23 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | | 2,710,487 | 1,261,268 | 115 | 2,723,087 | 1,269,521 | 114 |
| கழிக்குக: கட்டணம் மற்றும் தரகு செலவினங்கள் | | 154,486 | 131,954 | 17 | 160,556 | 136,838 | 17 |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | 5 | 2,556,001 | 1,129,314 | 126 | 2,562,531 | 1,132,683 | 126 |
| வர்த்தகத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) | 6 | 1,273,676 | 1,491,610 | (15) | 1,745,329 | 1,963,229 | (11) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுதியில் நிதியியல் சாதனங்கள் இலிருந்து தேறிய சீர்மதிப்பு பெறுமதி இலாபம்/(நட்டம்) | 7 | – | – | – | – | – | – |
| நிதியியல் சொத்துகளின் இனங்காணமையிலிருந்து இலாபங்கள்/(நட்டங்கள்) | 8 | 241,284 | 22,021 | 996 | 241,284 | 22,021 | 996 |
| தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 9 | 809,564 | 424,376 | 91 | 721,612 | 2,203,626 | (67) |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | | 39,770,707 | 31,899,335 | 25 | 41,453,448 | 34,805,194 | 19 |
| கழிக்குக: சேதஇழப்பு விதிப்பனவுகள் | 10 | 4,873,768 | 565,536 | 762 | 4,932,840 | 590,700 | 735 |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | | 34,896,939 | 31,333,799 | 11 | 36,520,608 | 34,214,494 | 7 |
| **கழிக்குக: செலவுகள்** | | | | | | | |
| ஆளணிச் செலவுகள் | 11 | 9,966,786 | 10,157,926 | (2) | 10,152,485 | 10,217,978 | (1) |
| பெறுமானத் தேய்வு மற்றும் பெறுமதி இழப்புச் செலவுகள் | | 1,240,503 | 1,042,933 | 19 | 1,256,826 | 1,048,095 | 20 |
| ஏனைய செலவுகள் | 12 | 4,258,307 | 4,474,053 | (5) | 4,313,367 | 4,461,457 | (3) |
| **நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி, தேசநிர்மாண வரி மற்றும் படுகடன் மீள்கொடுப்பனவு வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | | 19,431,342 | 15,658,887 | 24 | 20,797,931 | 18,486,964 | 13 |
| கழிக்குக: நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி | | 3,786,717 | 3,045,921 | 24 | 4,006,877 | 3,208,584 | 25 |
| நிதிச் சேவைகள் மீதான தேசநிர்மாண வரி | | – | 366,157 | (100) | – | 383,614 | (100) |
| நிதிச் சேவைகள் மீதான படுகடன் மீள்கொடுப்பனவு வரி | | – | 1,785,171 | (100) | – | 1,803,225 | (100) |
| **நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி, தேசநிர்மாண வரி மற்றும் படுகடன் மீள்கொடுப்பனவு விதிப்பனவுக்கு பிந்திய தொழிற்பாட்டு இலாபம்** | | 15,644,625 | 10,461,638 | 50 | 16,791,054 | 13,091,541 | 28 |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டுமுயற்சிகளின் இலாபப் பங்கு | | – | – | – | – | – | – |
| **வருமான வரிக்கு முந்திய இலாபம்** | | 15,644,625 | 10,461,638 | 50 | 16,791,054 | 13,091,541 | 28 |
| கழிக்குக: வருமான வரிச் செலவினம் | 13 | 5,536,709 | 4,080,468 | 36 | 5,969,936 | 4,378,631 | 36 |
| **ஆண்டிற்கான இலாபம்** | | 10,107,916 | 6,381,170 | 58 | 10,821,118 | 8,712,910 | 24 |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்** | | | | | | | |
| வங்கியின் பங்குமூலதன உரிமையாளர்களுக்கு | | 10,107,916 | 6,381,170 | 58 | 10,821,118 | 8,712,910 | 24 |
| கட்டுப்பாடு இல்லாத அக்கறை | | – | – | – | – | – | – |
| **ஆண்டிற்கான இலாபம்** | | 10,107,916 | 6,381,170 | 58 | 10,821,118 | 8,712,910 | 24 |
| **இலாபம் மீதான பங்கொன்றின் உழைப்பு** | | | | | | | |
| சாதாரண பங்கொன்றின் அடிப்படை வருவாய் (ரூ.) | 14 | 10.75 | 6.79 | 58 | 11.51 | 9.27 | 24 |
| சாதாரண பங்கொன்றின் குன்றிய வருவாய் (ரூ.) | | 10.75 | 6.79 | 58 | 11.51 | 9.27 | 24 |
| **ஆண்டிற்கான இலாபம்** | | 10,107,916 | 6,381,170 | 58 | 10,821,118 | 8,712,910 | 24 |

144 தொடக்கம் 282 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

# அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று

| டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | வங்கி 2020 ரூ. '000 | வங்கி 2019 ரூ. '000 | வங்கி மாற்றம் % | தொகுதி 2020 ரூ. '000 | தொகுதி 2019 ரூ. '000 | தொகுதி மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| **ஆண்டிற்கான இலாபம்** | **10,107,916** | 6,381,170 | 58 | **10,821,118** | 8,712,910 | 24 |
| **வருமானக் கூற்றில் மீளவகைப்படுத்தப்படவுள்ள விடயங்கள்** | | | | | | |
| வெளிநாட்டுத் தொழிற்பாடுகளின் மாற்றம் மீதான செலாவணி வேறுபாடுகள் | – | – | – | – | – | – |
| காசுப் பாய்ச்சல் காப்பு மீதான தேறிய இலாபம்/(நட்டம்) | – | – | – | – | – | – |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்களில் முதலீடுகள் மீதான தேறிய இலாபம்/(நட்டம்) | – | – | – | – | – | – |
| இணைநிறுவனங்கள் மற்றும் கூட்டுமுயற்சிகளின் இலாபப் பங்கு | – | – | – | – | – | – |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள படுகடன் சாதனங்கள் | **273,544** | 127,928 | 114 | **329,820** | 227,305 | 45 |
| கழிக்குக: ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள படுகடன் சாதனங்களின் கையுதிர்த்தல் மீது வருமானக்கூற்றுக்கு மாற்றப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி இலாபம்/(நட்டம்) | **(241,284)** | (13,717) | 1,659 | **(241,284)** | (13,717) | 1,659 |
| மேற் கூறப்பட்டவற்றின் மீதான பிற்போடப்பட்ட வரியின் தாக்கம் | **(9,033)** | (31,979) | (72) | **(9,033)** | (31,979) | (72) |
| **வருமானக் கூற்றுகக்கு மீளவகைப்படுத்தப்படவுள்ள மொத்த விடயங்கள்** | **23,227** | 82,232 | (72) | **79,503** | 181,609 | (56) |
| **வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படக் கூடாத விடயங்கள்** | | | | | | |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட பங்குமூலதனச் சாதனங்களிலுள்ள முதலீடுகள் மீதான சிர்மதிப்பு பெறுமதியில் மாற்றம் | **(776,162)** | (324,635) | 139 | **(774,791)** | (320,297) | 142 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் மீது வங்கியின் சொந்த கடன் இடர்நேர்வில் உள்ள மாற்றத்திற்கு சாட்டத்தக்க சீர்மதிப்பு பெறுமதியில் மாற்றம் | – | – | – | – | – | – |
| தொழிலுக்குப் பிந்திய நலக் கடப்பாடுகளின் மீள் அளவீடு | **(6,684,417)** | (3,454,283) | 94 | **(6,681,422)** | (3,455,660) | 93 |
| மேற் கூறப்பட்டவற்றின் மீதான பிற்போடப்பட்ட வரியின் தாக்கம் | **1,871,637** | 967,199 | 94 | **1,871,637** | 967,199 | 94 |
| **தொழிலுக்குப் பிந்திய நலக் கடப்பாடுகளின் மீள் அளவீடு (வரி நீங்கலாக)** | **(4,812,780)** | (2,487,084) | 94 | **(4,809,785)** | (2,488,461) | 93 |
| மீள்மதிப்பீட்டு மிகைகளில் உள்ள மாற்றங்கள் | **1,482,472** | – | 100 | **1,921,578** | – | 100 |
| மேற் கூறப்பட்டவற்றின் மீதான பிற்போடப்பட்ட வரியின் தாக்கம் | **(415,092)** | – | 100 | **(415,092)** | – | 100 |
| **மீள்மதிப்பீட்டு மிகைகளில் உள்ள மாற்றங்கள் (வரி நீங்கலாக)** | **1,067,380** | – | 100 | **1,506,486** | – | 100 |
| இணைநிறுவனங்கள் மற்றும் கூட்டுமுயற்சிகளின் இலாபப்பங்கு | – | – | – | – | – | – |
| **வருமானக் கூற்றில் மீள வகைப்படுத்தப்படக் கூடாத மொத்த விடயங்கள்** | **(4,521,563)** | (2,811,719) | 61 | **(4,078,090)** | (2,808,758) | 45 |
| **வரி நீங்கலாக ஆண்டிற்கான ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **(4,498,336)** | (2,729,487) | 65 | **(3,998,586)** | (2,627,149) | 52 |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **5,609,580** | 3,651,683 | 54 | **6,822,532** | 6,085,762 | 12 |
| **பகிர்ந்தளிக்கப்படுவதற்கு:** | | | | | | |
| வங்கியின் பங்குரிமையாளர்கள் | **5,609,580** | 3,651,683 | 54 | **6,822,532** | 6,085,762 | 12 |
| கட்டுப்பாடு இல்லாத அக்கறை | – | – | – | – | – | – |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | **5,609,580** | 3,651,683 | 54 | **6,822,532** | 6,085,762 | 12 |

144 தொடக்கம் 282 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

# நிதி நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | குறிப்பு | வங்கி 2020 ரூ. '000 | வங்கி 2019 ரூ. '000 | வங்கி மாற்றம் % | தொகுதி 2020 ரூ. '000 | தொகுதி 2019 ரூ. '000 | தொகுதி மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| காசும் காசுக்கு சமனானவைகளும் | 16 | **6,491,963** | 5,376,715 | 21 | **6,598,595** | 5,564,824 | 19 |
| மத்திய வங்கியுடனான மீதிகள் | 17 | **–** | – | – | **6** | 58 | (90) |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 18 | **13,253,499** | 12,364,469 | 7 | **17,456,660** | 15,745,184 | 11 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 19 | **19,897** | 11,622 | 71 | **19,897** | 11,622 | 71 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள் | 20 | | | | | | |
| – சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை | | **11,221,746** | 11,459,882 | (2) | **23,617,944** | 22,130,273 | 7 |
| – சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்டவை | | **–** | – | – | **–** | – | – |
| கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் | | | | | | | |
| – கடன்களும் முற்பணங்களும் | 21 | **516,795,160** | 454,394,957 | 14 | **517,833,067** | 456,636,285 | 13 |
| – படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 22 | **754,233,344** | 615,634,321 | 23 | **758,594,934** | 619,567,786 | 22 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் | 23 | **15,271,822** | 3,478,811 | 339 | **16,059,841** | 4,626,582 | 247 |
| துணை நிறுவனங்களில் உள்ள முதலீடுகள் | 24 | **4,811,000** | 4,811,000 | – | **–** | – | – |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டுமுயற்சிகளில் உள்ள முதலீடுகள் | 25 | **–** | – | – | **–** | – | – |
| ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 26 | **15,315,772** | 13,564,578 | 13 | **16,197,837** | 13,857,882 | 17 |
| சொத்துக்களை பயன்படுத்துவற்கான குத்தகைபெறுநரின் உரிமை | 27 | **1,226,183** | 1,073,507 | 14 | **1,271,525** | 1,130,868 | 12 |
| முதலீட்டு ஆதனங்கள் | 28 | **–** | – | – | **237,077** | 333,315 | (29) |
| நல்லெண்ண மற்றும் அருவச் சொத்துக்கள் | 29 | **687,961** | 598,876 | 15 | **694,160** | 599,612 | 16 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 30 | **1,446,249** | – | 100 | **1,446,249** | 338 | 428,226 |
| ஏனைய சொத்துகள் | 31 | **23,033,780** | 35,197,923 | (35) | **23,192,936** | 35,370,115 | (34) |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,363,808,376** | 1,157,966,664 | 18 | **1,383,220,728** | 1,175,574,745 | 18 |
| **பொறுப்புகள்** | | | | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 32 | **12,862,337** | 35,045,251 | (63) | **13,339,705** | 36,139,122 | (63) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 33 | **–** | – | – | **–** | – | – |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் பொறுப்புகள் | 34 | **–** | – | – | **–** | – | – |
| கடன்தீர் செலவுகள் நிதியியல் பொறுப்புகள் | 35 | | | | | | |
| – வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | | **1,237,123,791** | 1,016,574,286 | 22 | **1,237,669,284** | 1,015,635,421 | 22 |
| – படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு செலுத்தப்பட வேண்டியவை | | **–** | – | | **–** | – | – |
| – ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | | **8,159,591** | 21,203,242 | (62) | **19,656,090** | 32,808,023 | (40) |
| குத்தகை பொறுப்பு | 36 | **1,274,713** | 1,066,882 | 19 | **1,320,877** | 1,121,441 | 18 |
| வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள் | 37 | **31,773,753** | 26,691,711 | 19 | **31,908,279** | 26,955,697 | 18 |
| ஓய்வுநலக் கடப்பாடுகள் | 38 | **10,885,085** | 5,025,779 | 117 | **10,916,429** | 5,053,759 | 116 |
| நடப்பு வரிப் பொறுப்புகள் | 39 | **3,128,643** | – | 100 | **3,705,537** | 565,704 | 555 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 30 | **–** | 482,241 | (100) | **1,121** | 483,005 | (100) |
| ஏனைய ஏற்பாடுகள் | 40 | **–** | – | – | **–** | – | – |
| ஏனைய பொறுப்புகள் | 41 | **6,699,216** | 5,951,464 | 13 | **7,253,989** | 7,430,415 | (2) |
| துணை நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியவை | 42 | **3,750** | 547 | 585 | **–** | – | – |
| **மொத்த பொறுப்புகள்** | | **1,311,910,879** | 1,112,041,403 | 18 | **1,325,771,311** | 1,126,192,586 | 18 |

# நிதி நிலைமைக் கூற்று

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | குறிப்பு | வங்கி 2020 ரூ. '000 | வங்கி 2019 ரூ. '000 | வங்கி மாற்றம் % | தொகுதி 2020 ரூ. '000 | தொகுதி 2019 ரூ. '000 | தொகுதி மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|
| **பங்கு மூலதனம்** | | | | | | | |
| ஒதுக்கப்பட்ட மூலதனம்/சாட்டப்பட்ட மூலதனம் | 43 | **9,400,000** | 9,400,000 | – | **9,400,000** | 9,400,000 | – |
| நியதிச் சட்ட ஒதுக்க நிதியம் | 44 | **4,068,268** | 3,562,872 | 14 | **4,090,363** | 3,571,214 | 15 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | 45 | **11,883,168** | 8,194,507 | 45 | **16,085,184** | 10,964,046 | 47 |
| ஏனைய ஒதுக்கங்கள் | 46 | **26,546,061** | 24,767,882 | 7 | **27,873,870** | 25,446,899 | 10 |
| மொத்த பங்குரிமையாளர்களின் மூலதனம் | | **51,897,497** | 45,925,261 | 13 | **57,449,417** | 49,382,159 | 16 |
| கட்டுப்பாடு இல்லாத அக்கறை | 47 | **–** | – | – | **–** | – | – |
| **மொத்த பங்கு மூலதனம்** | | **51,897,497** | 45,925,261 | 13 | **57,449,417** | 49,382,159 | 16 |
| **மொத்த பங்கு மூலதனம் மற்றும் கடமைபொறுப்புகள்** | | **1,363,808,376** | 1,157,966,664 | 18 | **1,383,220,728** | 1,175,574,745 | 18 |
| **எதிர்பாராத பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள்** | 48 | **23,787,099** | 10,355,197 | 130 | **23,850,325** | 10,691,602 | 123 |
| **ஆவணத் தகவல்கள்** | | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | | **4,641** | 4,715 | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | | **259** | 256 | | | | |

**குறிப்பு:** குறிப்பிடப்பட்ட தொகைகள் சேதஇழப்பு மற்றும் பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டவையாகும்.

144 தொடக்கம் 282 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

**உறுதிப்படுத்தல்**

மேலே உள்ள நிதிக் கூற்றுக்கள், 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய சேமிப்பு வங்கியினதும் அதன் தொகுதியினதும் விவகாரங்களின் நிலை பற்றிய உண்மையான மற்றும் நியாயமான நோக்கொன்றினையும் முடிவுற்ற ஆண்டுக்கான அவற்றின் இலாபத்தினையும் தருகின்றன என்பதனை சான்றுதிப்படுத்துகின்றேன்.

**கே. ரவீந்திரன்**
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர்

இந்நிதியியல் கூற்றுகளை தாயரித்து எடுத்துரைப்பது பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்

சபை சார்பாக அனுமதிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டது.

**திருமதி. கேசிலா ஜயவர்தன**
தலைவி

**கலாநிதி எம்.கே.சி. சேனநாயக்க**
பணிப்பாளர்

**திரு எம்.பி.ஏ. டபிள்யூ பீரிஸ்**
பொதுமுகாமையாளர்/
பிரதம நிறைவேற்று அதிகாரி

2021 மார்ச் 19

கொழும்பு,
இலங்கை

# பங்குரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று

## வங்கி

| | ஒதுக்கப்பட்ட மூலதனம்/ சாட்டப்பட்ட மூலதனம் ரூ. '000 | நியதிச்சட்ட ஒதுக்கு நிதி ரூ. '000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. '000 |
|---|---|---|---|
| **2019 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | 9,400,000 | 3,227,960 | 7,793,317 |
| முன்னைய ஆண்டு சீராக்கம்* | – | – | (2,182,129) |
| **2019 சனவரி 01இல் உள்ளவாறான மீளக்குறிப்பிடப்பட்ட ஆரம்ப மீதி** | 9,400,000 | 3,227,960 | 5,611,188 |
| 2019 ஆம் ஆண்டிற்கான இலாபம் | – | – | – |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | – | – | – |
| **ஆண்டிற்கான அனைத்தையும் உள்ளடக்கிய மொத்த வருமானம்** | – | – | – |
| **பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட, பங்கு மூலதன உரிமையாளர்களுடனான கொடுக்கல்வாங்கல்** | | | |
| ஆண்டின்போது ஒதுக்கங்களுக்கு/ஒதுக்கங்களில் இருந்து மாற்றப்பட்டவை | – | 334,912 | – |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு – பங்குலாபம்/வரி அறவீடு | – | – | – |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு | – | – | – |
| கோரப்படாத வைப்பு ஒதுக்கிற்கான மாற்றல்கள் | – | – | – |
| **பங்குரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல்வாங்கல்** | – | 334,912 | – |
| **2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 9,400,000 | 3,562,872 | 5,611,188 |
| 2020 ஆம் ஆண்டிற்கான இலாபம் | – | – | – |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | – | – | 1,067,380 |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | – | – | 1,067,380 |
| **பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட, பங்கு மூலதன உரிமையாளர்களுடனான கொடுக்கல்வாங்கல்** | | | |
| ஆண்டின்போது ஒதுக்கங்களுக்கு/ஒதுக்கங்களில் இருந்து மாற்றப்பட்டவை | – | 505,396 | – |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு – பங்குலாபம்/வரி அறவீடு | – | – | – |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு | – | – | – |
| கோரப்படாத வைப்பு ஒதுக்கிற்கான மாற்றல்கள் | – | – | – |
| **பங்குரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல்வாங்கல்** | – | 505,396 | – |
| **2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 9,400,000 | 4,068,268 | 6,678,568 |

144 தொடக்கம் 282 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

*தயவுசெய்து குறிப்பு 53 ஒப்பீட்டுத் தொகைகளைப் பார்க்க

| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான ஒதுக்கம் ரூ. '000 | காசுப் பாய்ச்சல் காப்பு ஒதுக்கம் ரூ. '000 | ஏனைய ஒதுக்கங்கள் ரூ. '000 | பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு ரூ. '000 | மொத்த பங்கு மூலதனம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| 528,430 | – | 18,160,874 | 3,869,070 | 42,979,655 |
| 31,979 | – | – | 2,833,244 | 683,094 |
| 560,409 | – | 18,160,874 | 6,702,314 | 43,662,749 |
| – | – | – | 6,381,170 | 6,381,170 |
| (242,403) | – | – | (2,487,084) | (2,729,487) |
| (242,403) | – | – | 3,894,087 | 3,651,684 |
| | | | | |
| – | – | – | (334,912) | – |
| – | – | – | (2,000,000) | (2,000,000) |
| – | – | – | (66,982) | (66,982) |
| – | – | 677,811 | – | 677,811 |
| – | – | 677,811 | (2,401,894) | (1,389,171) |
| 318,006 | – | 18,838,685 | 8,194,507 | 45,925,261 |
| – | – | – | 10,107,916 | 10,107,916 |
| (752,935) | – | – | (4,812,780) | (4,498,336) |
| (752,935) | – | – | 5,295,136 | 5,609,580 |
| | | | | |
| – | – | – | (505,396) | – |
| – | – | – | (1,000,000) | (1,000,000) |
| – | – | – | (101,079) | (101,079) |
| – | – | 1,463,736 | – | 1,463,736 |
| – | – | 1,463,736 | (1,606,475) | 362,657 |
| (434,929) | – | 20,302,421 | 11,883,168 | 51,897,497 |

# பங்குரிமை மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று

## தொகுதி

| | ஒதுக்கப்பட்ட மூலதனம்/ சாட்டப்பட்ட மூலதனம் ரூ. '000 | நியதிச்சட்ட ஒதுக்கு நிதி ரூ. '000 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ. '000 |
|---|---|---|---|
| **2019 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி** | 9,400,000 | 3,227,960 | 7,793,317 |
| முன்னைய ஆண்டு சீராக்கம்* | – | – | (2,182,129) |
| **2019 சனவரி 01இல் உள்ளவாறான மீளக்குறிப்பிடப்பட்ட ஆரம்ப மீதி** | 9,400,000 | 3,227,960 | 5,611,188 |
| 2019 ஆம் ஆண்டிற்கான இலாபம் | – | – | – |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | – | – | – |
| **ஆண்டிற்கான அனைத்தையும் உள்ளடக்கிய மொத்த வருமானம்** | – | – | – |
| **பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட, பங்கு மூலதன உரிமையாளர்களுடனான கொடுக்கல்வாங்கல்** | | | |
| ஆண்டின்போது ஒதுக்கங்களுக்கு/ஒதுக்கங்களில் இருந்து மாற்றப்பட்டவை | – | 343,254 | – |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு – பங்குலாபம்/வரி அறவீடு | – | – | – |
| பங்கிலாபம் மீதான பிடித்துவைத்தல் வரி | – | – | – |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு | – | – | – |
| கோரப்படாத வைப்பு ஒதுக்கிற்கான மாற்றல்கள் | – | – | – |
| **பங்குரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல்வாங்கல்** | – | 343,254 | – |
| **2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 9,400,000 | 3,571,214 | 5,611,188 |
| முன்னைய ஆண்டு சீராக்கம் | – | – | – |
| **2020 சனவரி 1 இல் உள்ளவாறான மீதி (முன்னைய ஆண்டு சீராக்கத்தின் பின்னர்)** | 9,400,000 | 3,571,214 | 5,611,188 |
| 2020 ஆம் ஆண்டிற்கான இலாபம் | – | – | – |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் (வரி நீங்கலாக) | – | – | 1,506,486 |
| **ஆண்டிற்கான மொத்த அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்** | – | – | 1,506,486 |
| **பங்கு மூலதனத்தில் நேரடியாக இனங்காணப்பட்ட, பங்கு மூலதன உரிமையாளர்களுடனான கொடுக்கல்வாங்கல்** | | | |
| ஆண்டின்போது ஒதுக்கங்களுக்கு/ஒதுக்கங்களில் இருந்து மாற்றப்பட்டவை | – | 519,149 | – |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு – பங்குலாபம்/வரி அறவீடு | – | – | – |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு | – | – | – |
| கோரப்படாத வைப்பு ஒதுக்கிற்கான மாற்றல்கள் | – | – | – |
| **பங்குரிமையாளர்களுடனான மொத்த கொடுக்கல்வாங்கல்** | – | 519,149 | – |
| **2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** | 9,400,000 | 4,090,363 | 7,117,674 |

144 தொடக்கம் 282 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

* தயவுசெய்து குறிப்பு 53 ஒப்பீட்டுத் தொகைகளைப் பார்க்க

| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான ஒதுக்கம் ரூ. '000 | காசுப் பாய்ச்சல் காப்பு ஒதுக்கம் ரூ. '000 | ஏனைய ஒதுக்கங்கள் ரூ. '000 | பிடித்து வைக்கப்பட்ட உழைப்பு ரூ. '000 | மொத்த பங்கு மூலதனம் ரூ. '000 |
|---|---|---|---|---|
| 390,210 | – | 18,745,544 | 4,445,441 | 44,002,475 |
| 31,979 | – | – | 2,833,244 | 683,094 |
| 422,189 | – | 18,745,544 | 7,278,685 | 44,685,569 |
| – | – | – | 8,712,910 | 8,712,910 |
| (138,688) | – | – | (2,488,461) | (2,627,149) |
| (138,688) | – | – | 6,224,450 | 6,085,762 |
| | | | | |
| – | – | 128,852 | (472,106) | – |
| – | – | – | (2,000,000) | (2,000,000) |
| – | – | – | – | – |
| – | – | – | (66,982) | (66,982) |
| – | – | 677,811 | – | 677,811 |
| – | – | 806,663 | (2,539,088) | (1,389,171) |
| 283,501 | – | 19,552,207 | 10,964,046 | 49,382,159 |
| – | – | – | 882,070 | 882,070 |
| 283,501 | – | 19,552,207 | 11,846,116 | 50,264,229 |
| – | – | – | 10,821,118 | 10,821,118 |
| (695,287) | – | – | (4,809,785) | (3,998,586) |
| (695,287) | – | – | 6,011,332 | 6,822,531 |
| | | | | |
| – | – | 152,037 | (671,185) | – |
| – | – | – | (1,000,000) | (1,000,000) |
| – | – | – | (101,079) | (101,079) |
| – | – | 1,463,736 | – | 1,463,736 |
| – | – | 1,615,773 | (1,772,264) | 362,657 |
| (411,786) | – | 21,167,980 | 16,085,184 | 57,449,417 |

# காசுப் பாய்ச்சல்கள் கூற்று

| டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | வங்கி 2020 ரூ. '000 | வங்கி 2019 ரூ. '000 | தொகுதி 2020 ரூ. '000 | தொகுதி 2019 ரூ. '000 |
|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| வட்டி கிடைப்பனவுகள் | **121,217,294** | 116,116,735 | **123,222,195** | 117,913,757 |
| வட்டி கொடுப்பனவுகள் | **(87,043,414)** | (82,583,128) | **(87,905,761)** | (83,544,584) |
| தேறிய தரகுப் பெறுகைகள் | **2,556,001** | 1,129,314 | **2,562,531** | 1,132,683 |
| வர்த்தக வருமானம் | **1,073,229** | 415,692 | **1,475,091** | 507,130 |
| ஊழியர்களுக்கான கொடுப்பனவு | **(9,573,701)** | (9,576,038) | **(9,784,100)** | (9,636,090) |
| நிதியியல் சேவைகள் மீதான செ.சே.வ, தே க வ, ப.மீ.அ. | **(3,635,577)** | (4,926,687) | **(3,875,451)** | (5,092,470) |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான பெறுகைகள் | **453,266** | 336,670 | **481,659** | 2,115,916 |
| ஏனைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் | **(4,211,774)** | (4,449,742) | **(4,292,547)** | (4,432,794) |
| **தொழிற்படுகின்ற சொத்துகள் மற்றும் பொறுப்புகளில் மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படு வருமானம்** | **20,835,323** | 16,462,816 | **21,883,617** | 18,963,548 |
| **தொழிற்படுகின்ற சொத்துகளில் (அதிகரிப்பு)/குறைவு** | | | | |
| இலங்கை மத்திய வங்கியுடனான மீதிகள் | **–** | – | **–** | – |
| வங்கிகளுடனான இருப்புகள் | **(878,260)** | 5,088,591 | **(1,631,768)** | 1,707,876 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **29,615** | 4,744,070 | **29,615** | 4,744,070 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுதியில் உள்ள நிதியயில் சொத்துகள் | **635,258** | 5,926,456 | **(970,781)** | 5,681,883 |
| கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் | **(96,177,753)** | (31,733,787) | **(94,958,436)** | (33,889,390) |
| கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் சொத்துகள – படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | **(109,017,140)** | (94,261,299) | **(109,529,470)** | (94,172,565) |
| நிதியியல் முதலீடு விற்பனை மற்றும் முதிர்வுகளில் இருந்தான பெறுகை | **–** | – | **–** | – |
| ஏனைய சொத்துகள் | **11,884,067** | (4,185,579) | **11,896,995** | (4,034,303) |
| | **(193,524,215)** | (114,421,548) | **(195,163,845)** | (119,962,429) |
| **தொழிற்படுகின்ற பொறுப்புகளில் அதிகரிப்பு/(குறைவு)** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | **(22,288,937)** | (42,196,267) | **(22,912,312)** | (48,579,868) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **–** | (1,533) | **–** | (1,533) |
| கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் பொறுப்புகள் – வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | **221,909,528** | 170,677,338 | **223,397,260** | 169,738,473 |
| கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் பொறுப்புகள் – படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு செலுத்தப்பட வேண்டியவை | **–** | – | **–** | – |
| கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் பொறுப்புகள்-ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | **(12,727,496)** | 6,287,565 | **(12,773,875)** | 10,919,340 |
| வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள் | **–** | (25,677,100) | **–** | (25,413,114) |
| ஏனைய பொறுப்புகள் | **(138,401)** | (382,265) | **(140,530)** | 1,698,978 |
| | **186,754,695** | 108,707,738 | **187,570,543** | 108,362,276 |
| **வருமான வரிக்கு முன்னர் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் ஈட்டப்பட்ட தேறிய காசு** | **14,065,803** | 10,749,007 | **14,290,315** | 7,363,395 |
| செலுத்தப்பட்ட வருமான வரி | **(2,889,044)** | (3,798,618) | **(3,271,758)** | (3,530,579) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளில் (பயன்படுத்தப்பட்ட)/ இருந்து தேறிய காசு** | **11,176,759** | 6,950,389 | **11,018,557** | 3,832,816 |

# காசுப் பாய்ச்சல்கள்
# கூற்று

| டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | **(976,972)** | (1,242,701) | **(994,063)** | (1,246,470) |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்தான பெறுகை | **6,504** | 14,804 | **6,504** | 14,808 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் சாதனங்களில் தேறிய (அதிகரிப்பு)/குறைவு | **(12,326,936)** | 2,373,158 | **(11,927,988)** | 2,902,903 |
| நிதியியல் முதலீடு விற்பனை மற்றும் முதிர்வுகளில் இருந்தான பெறுகை | **–** | – | **–** | – |
| அருவச்சொத்து தேறிய கொள்வனவு | **(389,202)** | (262,718) | **(395,250)** | (263,293) |
| முதலீட்டு ஆதனங்களின் தேறிய கொள்வனவு/மேம்படுத்தல் | **–** | – | **–** | (333,315) |
| துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களில் முதலீட்டு கையகப்படுத்தலில் இருந்து தேறிய காசுப் பாய்ச்சல் | **–** | (3,111,000) | **–** | – |
| துணைநிறுவனங்கள் மற்றும் இணைநிறுவனங்களில் முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பங்கிலாபம் | **170,000** | – | **–** | – |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **(13,516,606)** | (2,228,457) | **(13,310,796)** | 1,074,633 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | | | |
| கீழ்நிலைப்படுத்தப்பட்ட படுகடன் வழங்கலில் இருந்து தேறிய பெறுகைகள் | **5,000,000** | – | **5,000,000** | – |
| கீழ்நிலைப்படுத்தப்பட்ட படுகடன் மீள்கொடுப்பனவு | **–** | – | **(92,454)** | – |
| கீழ்நிலைப்படுத்தப்பட்ட படுகடன் மீது செலுத்தப்பட்ட வட்டி | **(780,000)** | (780,000) | **(817,007)** | (780,000) |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு -பங்கிலாபம்/அறவீடு | **(1,000,000)** | (2,000,000) | **(1,000,000)** | (2,000,000) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **3,220,000** | (2,780,000) | **3,090,539** | (2,780,000) |
| **காசு மற்றும் காசுக்கு சமனானவைகளின் தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | **880,153** | 1,941,932 | **798,300** | 2,127,449 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள் | **5,293,907** | 3,351,975 | **5,482,007** | 3,354,558 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை தொடர்பில் செலாவணி மாற்று வேறுபாடு | **–** | – | **–** | – |
| **ஆண்டின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்** | **6,174,060** | 5,293,907 | **6,280,307** | 5,482,007 |
| **காசு மற்றும் காசுக்கு சமனானவற்றின் இணக்கம்** | | | | |
| கையிருப்பிலுள்ள காசு | **1,901,551** | 941,102 | **1,906,210** | 947,240 |
| வங்கி மீதி | **4,590,397** | 4,436,403 | **4,692,371** | 4,618,378 |
| அழைப்பு மற்றும் குறுகிய அறிவித்தலில் உள்ள காசு | **112** | – | **112** | – |
| மத்திய வங்கியுடனான மீதிகள் | **–** | – | **6** | 58 |
| வங்கிகளுக்கு கொடுக்க வேண்டியவை | **(318,000)** | (83,598) | **(318,391)** | (83,669) |
| | **6,174,060** | 5,293,907 | **6,280,307** | 5,482,007 |

144 தொடக்கம் 282 வரையான பக்கங்களில் காட்டப்பட்டுள்ள நிதியியல் கூற்றுகள் தொடர்பான குறிப்புகள், இந்நிதிக் கூற்றுகளை முழுமையாக்கும் பகுதிகளாகும்.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 1 அறிக்கையிடும் நிறுவனம்

### 1.1 நிறுவனத் தகவல்கள்

தேசிய சேமிப்பு வங்கியானது, 1971 இன் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தின் கீழ் 1972 இல் கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றாவதுடன் இலங்கையில் அதன் அமைவிடத்தைக் கொண்டுள்ளது. இது, 1988 ஆம் ஆண்டின் வங்கித் தொழில் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் கீழ் ஒழுங்குமுறைப்படுத்தப்படும் சிறப்பியல்பு வாய்ந்த வங்கியொன்றாகும். வங்கியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம், “சேமிப்பகம்”, இல. 255, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரியில் அமைந்துள்ளது.

2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியின் ஆளணி 4,641 ஆக காணப்பட்டது. (2019 – 4,715).

வங்கியானது 259 கிளைகள் மற்றும் அதன் சேவை நிலையங்களில் 289 தன்னியக்க இயந்திரங்களையும் (ATM) 72 காசு மீள்சுழற்சி இயந்திரங்களையும் கொண்டுள்ளதுடன், அதன் முகவர் வலையமைப்பாக மேலும் 653 அஞ்சல் அலுவலகங்கள், 3,410 உப அஞ்சல் அலுவலகங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

### 1.2 ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுகள்

2020 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுகள், வங்கியினையும் (தாய்க் கம்பனி) அதன் முழுமையான உரித்துடைய இரண்டு துணை நிறுவனங்களான தேசேவ நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட் மற்றும் இலங்கை சேமிப்பு வங்கியினையும் உள்ளடக்குகின்றது.

வங்கியானது முழுமையாக இலங்கை அரசாங்கத்திற்கு உரித்தானதாகும். வங்கியே குழுமத்தின் இறுதி முடிவான தாய் நிறுவனமாகும். வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுகள் டிசம்பர் 31 அன்று முடிவடைகின்ற பொதுவான நிதியியல் ஆண்டொன்றினை கொண்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்கென டிசம்பர் 31இல் முடிவடைகின்ற பன்னிரண்டு மாத காலப்பகுதிக்கான “வங்கியினதும்” அதன் “தொகுதியினதும்” நிதியியல் கூற்றுக்களை வங்கி தயாரிக்கும்.

### 1.3 பிரதான நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

**வங்கி**

இலங்கை மக்கள் மத்தியில் சேமிப்பினை ஊக்குவிப்பதும் அவ்வாறு திரட்டிய சேமிப்புகளை இலாபகரமாக முதலிடுவதும் வங்கியின் பிரதான செயற்பாடுகளாக தொடர்ந்தும் இருந்து வந்தது. தேசிய சேமிப்பு வங்கியானது வைப்புகளை ஏற்றுக் கொள்ளல், நிறுவன மற்றும் சில்லறைக் கடன், வர்த்தக நிதியளித்தல், அரசாங்க கருத்திட்டங்களுக்கான கடன்கள், அடகுபிடித்தல், இணைய வங்கிச் சேவை மற்றும் குறுந்தகவல் வங்கிச் சேவை போன்ற பல்வேறு தீர்வுகளை வழங்குகின்றது. 1971 இன் 30 ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக அதன் வைப்புகளிலிருந்து குறைந்தபட்சம் 60% இனை அரசாங்கப் பிணையங்களில் முதலிடுவதற்கு வங்கி வேண்டப்பட்டுள்ளது.

**துணை நிறுவனங்கள்**

**தேசேவ நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட்**

தேசேவ நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட் நிறுவனமானது முதனிலை வணிகரொருவராக அரசாங்க பிணையங்களை கையாளுவதில் ஈடுபடுகின்றது.

**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி**

ஆண்டின்போது வங்கியின் பிரதான செயற்பாடுகளாக சேமிப்புகளையும் கால வைப்புகளையும் திரட்டுதல், கடன்கள், குத்தகைகள், தவணைமுறை கொள்வனவு, அடகு மற்றும் வேறு கொடுகடன் வசதிகளை வழங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் கடன் கணக்குகளின் மீள்கட்டமைப்புடன் தவணை தவறிய வரையறுக்கப்பட்ட பிரமுக சேமிப்பு மற்றும் அபிவிருத்தி வங்கியின் வைப்புப் பொறுப்புகளை தீர்ப்பனவு செய்தல் என்பன அமைந்திருந்தன.

## 2 கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே எடுத்துரைக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், வேறுவகையில் குறிப்பிட்டாலன்றி, நிதியியல் கூற்றுகளை எடுத்துரைக்கின்ற போது அனைத்து காலப்பகுதியிலும் ஒரே சீர்மையாக பயன்படுத்தப்பட்டுள்ளன. வங்கியின் இக்கொள்கைகள், ஏற்புடையவிடத்து தொகுதியில் ஒரே சீர்மையாக பிரயோகிக்கப்பட்டுள்ளதுடன் ஏதேனும் விலகல்கள் அதற்கேற்றவாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1 தயாரித்தலுக்கான அடிப்படை

#### 2.1.1 இணக்கக் கூற்று

வருமானக் கூற்று, அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, பங்கு மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற தொகுதியினது திரட்டிய நிதியியல் கூற்றும் வங்கியின் வேறான நிதியியல் கூற்றுக்களும், இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நியமங்களுக்கமைவாக (இகநி மற்றும் இநிஅநி) தயாரிக்கப்பட்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் 1988 இன் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம் மற்றும் அதனைத்தொடர்ந்த அதற்கான திருத்தங்களினால் தேவைப்படுத்தப்பட்ட தகவல்களுக்கும் இணங்கி காணப்படுகின்றன. காசுப் பாய்ச்சலில் காணப்படும் தகவல்களுக்கானவை தவிர இந் நிதியியல் கூற்றுகள் கணக்கீட்டின் ஒன்று சேருகின்ற அடிப்படையினை பின்பற்றி தயாரிக்கப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுக்களினை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட மாதிரிகளும் மற்றும் அவற்றில் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் என்பனவும் உரிமம் வழங்கப்பட்ட வங்கிகளின் ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளினை தயாரித்து சமர்ப்பித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகியவற்றிற்காக இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட குறிப்பான மாதிரிகளுடன் இணங்கிக் காணப்படுகின்றன.

#### 2.1.2 நிதியியல் கூற்றுகளுக்கான பொறுப்புடைமை

1971இன் 30ஆம் இலக்க தேசிய சேமிப்பு வங்கிச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களின் ஏற்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் என்பவற்றிற்கமைவாக தொகுதியினதும் வங்கியினதும் நிதியியல் கூற்றுகளை தயாரித்து எடுத்துரைத்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்புடைமையாகும்.

#### 2.1.3 நிதியியல் கூற்றுகளுக்கான பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரம்

2020 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற ஆண்டுக்கான வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகள் 2021 மார்ச் 19 அன்று பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்டன.

#### 2.1.4 அளவீட்டு அடிப்படை

சீர்மதிப்பு பெறுதியில் அளவிடப்பட்டுள்ள, நிதியியல் நிலைக்கூற்றில் உள்ள பின்வரும் முக்கிய விடயங்களுக்கானவை தவிர திரட்டிய நிதியியல் கூற்றுகள், வரலாற்று கிரய அடிப்படையொன்றில் தயாரிக்கப்பட்டுள்ளன.

(i) ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் (குறிப்பு 23)

(ii) பெறுதி நிதியியல் சாதனங்கள், (குறிப்பு 19 மற்றும் 33)

(iii) இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் (குறிப்பு 20 மற்றும் 34)

(iv) இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புக்கள் (குறிப்பு 20)

(v) கையேற்கின்ற நேரத்தில் செலவில் அளவிடப்பட்டு அதனைத் தொடர்ந்து மீள்மதிப்பிடப்பட்ட தொகைகளில் அளவிடப்பட்ட காணி மற்றும் கட்டடங்கள். அவை மீள்மதிப்பீட்டுத் திகதியில் உள்ள சீர்மதிப்புப் பெறுமதிகளாகும் (குறிப்பு 26)

(vi) ஊழியர்களுக்கான வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்புக்களானவை திட்ட சொத்துகளின் சீர்மதிப்புப் பெறுமதியினைக் கழித்து வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்புக்களின் தற்போதைய பெறுமதியில் இனங்காணப்படுகின்றன (குறிப்பு 38)

### 2.1.5 தொழிற்பாட்டு மற்றும் எடுத்துரைத்தல் நாணயம்

தொகுதி தொழிற்படும் அடிப்படை பொருளாதார சூழலின் நாணயமாகவுள்ள இலங்கை ரூபாவில் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளதுடன் வேறு விதத்தில் குறிப்பிட்டாலன்றி அனைத்து பெறுமதிகளும் கிட்டிய ஆயிரம் ரூபாவிற்கு முழுமையாக்கப்பட்டுள்ளன. மீளாய்விற்குட்படுகின்ற ஆண்டின்போது தொகுதியின் எடுத்துரைத்தல் மற்றும் தொழிற்பாட்டு நாணயத்தில் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.

### 2.1.6 நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல்

நிதியியல் நிலைமைக் கூற்றில் எடுத்துரைக்கப்பட்டுள்ள வங்கியினதும் தொகுதியினதும் சொத்துகளும் பொறுப்புகளும் அவற்றின் தன்மைக்கேற்ப வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை தொடர்புடைய திரவத்தன்மை மற்றும் முதிர்வு விதங்களை பிரதிபலிப்பதற்கு ஏற்றவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதியியல் கூற்றுகளை பாதிக்கின்ற பணவீக்க காரணிகளுக்காக சரிப்படுத்தல்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. வங்கியினதும் தொகுதியினதும் சொத்துகளினதும் பொறுப்புகளினதும் முதிர்வு விதங்கள் பற்றிய பகுப்பாய்வொன்று 273 மற்றும் 276 ஆம் பங்கங்களில் குறிப்பு இல. 55 இல் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### 2.1.7 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

வங்கியானது தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனமாக தொடர்ந்தும் இருப்பதற்கான தகைமையினை தொடர்ந்து கொண்டிருப்பதாக பணிப்பாளர்கள் சபை/ முகாமைத்துவம் மதிப்பிட்டுள்ளதுடன் முன்னறிகின்ற எதிர்காலத்தில் தொழில் அலுவல்களை தொடர்ந்து நடாத்துவதற்கான வளங்களைக் கொண்டிருப்பதாக திருப்தியடைகின்றது. மேலும், தொடர்ந்து இயங்கும் நிறுவனமாக தொடர்ந்தும் செயற்படுவதற்கான தொகுதியின் தகைமை மீது குறிப்பிடத்தக்க சந்தேகம் எதனையும் ஏற்படுத்தக்கூடிய உணரக்கூடிய நிச்சயமின்மைகள் எவற்றையும் முகாமைத்துவம் அறிந்திருக்கவில்லை. எனவே தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதியியல் கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன.

### 2.1.8 பொருண்மையும் ஒன்றுசேர்தலும்

ஒரே வகையின் ஒவ்வொரு முக்கிய வகுப்பும் நிதியியல் கூற்றுக்களில் வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன. ஒரே வகையற்ற தன்மையினை அல்லது தொழிற்பாடுகளைக் கொண்ட விடயங்கள், “நிதியியல் கூற்றுக்களை எடுத்துரைத்தல்” மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் - இகநி 1 இனால் அனுமதிக்கப்பட்டவாறு அவை முக்கியமற்றதாக காணப்படவில்லையெனின் வேறாக எடுத்துரைக்கப்படுகின்றன.

### 2.1.9 ஒப்பீட்டு தகவல்கள்

நடப்பு காலத்தின் நிதியியல் கூற்றுகள் பற்றிய புரிதலினை அதிகரிக்கும் பொருட்டும் காலங்களுக்கிடையிலான ஒப்பீட்டினை அதிகரிப்பதற்கும் அளவுசார், விளக்கம்சார், மற்றும் விவரணம்சார்ந்த தகவல்கள் உள்ளடங்கலாக ஒப்பீட்டுத் தகவல்கள், நிதியில் கூற்றுகளில் உள்ள முந்திய ஆண்டு தொடர்பிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சிறப்பாக எடுத்துரைப்பதற்கும் நடைமுறை ஆண்டின் எடுத்துரைத்தலுக்கு இணங்கக்கூடியவாறும் ஒப்பீட்டுத் தகவல்கள் அவசியமான இடங்களில் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டுத் தகவல்கள் பற்றிய விபரங்கள், 243 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 53 இல் தரப்பட்டுள்ளன.

### 2.1.10 முழுமையாக்கல்

நிதியியல் கூற்றுகளில் உள்ள தொகைகள், இலங்கை கணக்கீட்டு நியமம் - இகநி 01 “நிதியியல் கூற்றுகளை எடுத்துரைத்தல்” இனால் அனுமதிக்கப்பட்டவாறு வேறுவகையில் குறித்து காட்டப்பட்டவை தவிர கிட்டிய ஆயிரம் ரூபாய்க்கு முழுமைக்கப்பட்டுள்ளன.

### 2.1.11 எதிரீடு செய்தல்

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கு சட்டரீதியாக அமுலாக்கத்தக்க உரிமையொன்று காணப்படுகின்ற போது அத்துடன் சமகாலத்தில் தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது சொத்துகளை தேறல் செய்து பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு உத்தேசமொன்று காணப்படுகின்றபோது மாத்திரம் நிதியியல் சொத்துகளும் நிதியியல் பொறுப்புகளும் எதிரீடுசெய்யப்பட்டு தேறிய தொகை நிதியியல் நிலைக்கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன. கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்கோடல் ஒன்றினால் (சர்வதேச நிதி அறிக்கையிடல் நியம பொருள்கோடல்கள் குழு மற்றும் நியம பொருள்கோடல் குழு மூலம் வழங்கப்பட்ட) வேண்டப்பட்டாலன்றி அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி அத்துடன் வங்கியின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளில் குறிப்பாக வெளிப்படுத்தப்பட்டாலன்றி வருமானம் மற்றும் செலவுகள் என்பன வருமானக்கூற்றில் எதிரீடுசெய்யப்படவில்லை.

### 2.1.12 முக்கிய கணக்கீட்டு தீர்வுகள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுக்களை தயாரித்தலானது கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிப்பதில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற அத்துடன் சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற தீர்வுகளை, மதிப்பீடுகளை, மற்றும் ஊகங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. உண்மைப் பெறுபேறுகள் இம்மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அடிப்படையான ஊகங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் திருத்தப்படுகின்ற காலத்திலும் அத்துடன் தாக்கத்தினைக் கொண்டிருக்கின்ற ஏதேனும் எதிர்கால காலப்பகுதியிலும் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் இனங்காணப்படுகின்றன.

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது மிக முக்கிய விளைவினைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கை பிரயோகித்தலில் மதிப்பிடுதல், முக்கிய தீர்மானங்கள் மற்றும் ஊகங்கள் என்பனவற்றின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

#### அ. முக்கிய கணக்கீட்டு தீர்வுகள்

இந் நிதியியல் கூற்றுகளில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது மிக முக்கிய தாக்கங்களைக் கொண்டுள்ள கணக்கீட்டு கொள்கைகளை பிரயோகிக்கையில் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய தகவல்கள், கீழே குறிப்புகள் 2.1.12.1 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

#### 2.1.12.1 நிதியியல் சொத்துகளின் மற்றும் பொறுப்புகளின் வகைப்படுத்தல்

இநிஅறி 9 இற்கு அமைவாக, பின்வரும் மூலப்பிரமாணங்களின் அடிப்படையில் நிதியியல் சொத்துகளை வேறுபட்ட வகுப்புகளாக வகைப்படுத்தி அதாவது மதிப்புக் குறைக்கப்பட்ட செலவு, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி என்பனவற்றில் அளவிடப்படுவதற்கு, தொகுதியின் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் நோக்கெல்லையொன்றினை ஏற்பாடுசெய்கின்றன்

- 150 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.1.4.1 இல் எடுத்துரைக்கப்பட்டவாறு நிதியியல் சொத்துகளை முகாமைசெய்வதற்கான நிறுவனத்தின் தொழில் மாதிரி.
- 150 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.1.4.2 இல் எடுத்துரைக்கப்பட்டவாறு நிதியியல் சொத்துகளின் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகள்.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

**ஆ. ஊகங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமின்மைகள்**

முக்கிய சீராக்கங்களை தோற்றுவிக்கின்ற குறிப்பிடத்தக்க இடர்நேர்வொன்றினைக் கொண்டுள்ள ஊகங்கள் மற்றும் மதிப்பீட்டு நிச்சயமின்மைகள் பற்றிய தகவல்கள் கீழே குறிப்புகள் 2.1.12.2 தொடக்கம் 2.1.12.9 வரை உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.1.12.2 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதி நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட நிதிச் சொத்துகளினதும் நிதிப்பொறுப்புகளினதும் சீர்மதிப்புப் பெறுமதியினை தொழிற்படும் சந்தைகளிலிருந்து உருவாக்கப்படமுடியாத-விடத்து, கணித மாதிரிகளின் பயன்பாட்டினை உள்ளடக்குகின்ற மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு அவை தீர்மானிக்கப்-படுகின்றன. இம்மாதிரிகளுக்கான உள்ளீடுகள் அனேகமாக அவதானிக்கப்படும் சந்தைத் தரவுகளிலிருந்து பெறப்படுவதாயினும், அவதானிக்கப்படும் சந்தைத் தரவுகள் கிடைக்காத நிலையில் சீர்மதிப்புப் பெறுமதியைத் தாபிப்பதற்கு தீர்ப்புகள் தேவைப்படுகின்றன.

நிதிச் சாதனங்களின் மதிப்பீட்டிற்காகவும் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை என்பவற்றிற்கும் பயன்படுத்தப்படும் முறையியல்கள் என்பன 277 ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு இல. 56 இல் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

### 2.1.12.3 நிதியியல் சொத்துகள் மீதான சேதஇழப்பு நட்டங்கள்

நிதியியல் சொத்துகளின் அனைத்து வகைகளுக்கும் இநிஅறி 9 மற்றும் இகநி 39 இரண்டின் கீழும் சேதஇழப்பு நட்டங்களின் அளவீடானது குறிப்பாக, சேதஇழப்பு நட்டங்களை நிர்ணயிக்கின்ற போது தொகை மதிப்பீடு, எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் காலநிகழ்வு மற்றும் பிணைய உறுதிப் பெறுமதிகள் போன்றனவற்றில் தீர்வுகளை வேண்டுகின்றது.

அதற்கமைய, வருமானக்கூற்றில் சேதஇழப்பு நட்டமொன்று ஏற்பாடு செய்யப்படவேண்டுமா எனபதனை மதிப்பிடுவதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தொகுதி அதன் தனிப்பட்டரீதியாக முக்கியத்துவமிக்க கடன்களையும் முற்பணங்களையும் மீளாய்வு செய்கின்றது. குறிப்பாக, சேதஇழப்பு நட்டங்களை நிர்ணயிக்கின்ற போது தொகை மதிப்பீடு மற்றும் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் காலநிகழ்வு போன்றனவற்றில் முகாமைத்துவத்தின் தீர்வுகள் வேண்டப்படுகின்றன. இம் மதிப்பீடுகள் பல எண்ணிக்கையான காரணிகள் பற்றிய ஊகங்களை அடிப்படையாக கொண்டவை என்பதுடன் இதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட சேதஇழப்பு ஒதுக்கீட்டுக்கான எதிர்கால மாற்றங்களின் விளைவாக உண்மையான பெறுபேறுகள் வேறுபடலாம்.

நிதியியல் சொத்துகளுக்கு ஏற்புடைய தனிப்பட்ட சேதஇழப்பு ஏற்பாடானது சேதஇழப்புக்காக தனிப்பட்ட ரீதியாக மதிப்பீடுசெய்யப்பட்டதுடன் கிடைக்கப்பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எதிர்கால காசுப் பாய்ச்சல் பற்றிய முகாமைத்து-வத்தின் சிறந்த மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டதாகும். இக் காசுப் பாய்ச்சல்களை மதிப்பிடுவதில் முகாமைத்துவமானது கடன்பெறுநரொருவரின் நிதியியல் நிலைமை மற்றும் ஏதேனும் துணையளிக்கின்ற பிணைய உறுதியின் நிகர தேறத்தக்க பெறுமதி என்பன பற்றியும் தீர்வுகளை மேற்கொள்கின்றது. சேதஇழப்புச் செய்யப்பட்ட ஒவ்வொரு சொத்தும் அதன் மதிப்புகளின் அடிப்படையில் கணிக்கப்படுகின்றது, அத்துடன் காசுப் பாய்ச்சல்-களின் செயலாற்றத்தக்க உபாயமும் மதிப்பீடும் மீளஅறவிடத்தக்கவையாக கருதப்படுகின்றன.

கூட்டான சேதஇழப்பு ஏற்பாடு உருவாக்கப்பட்டவை:

- தனிப்பட்ட ரீதியாக முக்கியமானவையாக கருத்திற்கொள்ளப்படாத ஒரேவிதமான தன்மையிலான கடன் மற்றும் முற்பணங்-களைக் கொண்ட தொகுதிகள் அத்துடன்
- தனிப்பட்ட ரீதியாக முக்கியமான ஆனால் தனிப்பட்ட ரீதியியல் சேதமிழந்தவையாக அறியப்படாத சொத்துகளின் தொகுதிகள்

இநிஅறி 9 இற்கு அமைவாக தொகுதியின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு கணிப்பு-களானவை மாறிலி உள்ளீடுகளினதும் அவற்றின் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் தன்மைமைகளினதும் தெரிவு தொடர்பில் பல எண்ணிக்கையான துணையளிக்கின்ற ஊகங்களுடன் கூடிய சிக்கலான மாதிரிகளின் பெறுபேறுகள் ஆகும். கணக்கீட்டு தீர்வுகள் மற்றும் மதிப்பீடுகளை கருத்திற் கொள்கின்ற எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரிகளின் அடிப்படைக் கூறுகள் உள்ளடக்குவன:

- கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்படுகின்றதா என்பதனை பண்புரீதியாக மதிப்பிடுவதற்கும் அத்துடன் அவ்வாறு இருக்குமெனில், ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அடிப்படையின் மீது அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளுக்கான ஒதுக்கீடுகளுக்-குமான தொகுதியின் மூலப்பிரமாணமானம்
- நிதியியல் சொத்துகளின் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பானது கூட்டான அடிப்படையில் மதிப்பிடப்படுகின்ற போது அவற்றின் பிரிவுபடுத்தல்
- பல்வேறு புள்ளிவிபரவியல் சூத்திரங்கள் மற்றும் உள்ளீடுகள் தெரிவு என்பவற்றை உள்ளடக்குகின்ற எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரிகளை உருவாக்குதல்
- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, பணவீக்கம், வட்டி வீதங்கள், செலாவணி வீதங்கள் மற்றும் தொழிலின்மை போன்ற பேரண்ட பொருளாதார உள்ளீடுகளுக்கும் தவணை தவறுதல் நிகழுந்தன்மை மீதான தாக்கம், தவணை தவறுதல் இடருக்குள்ளாகும் தன்மை மற்றும் தவணை தவறுதல் மூலம் ஏற்படும் நிதி நட்டம் என்பவற்றுக்கும் இடையிலான இணைப்புகளை நிர்ணயித்தல்
- எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரிகளினுள் பேரண்டப் பொருளாதார உள்ளீடுகளை செலுத்துவதற்கு எதிர்பார்க்கும் பேரண்டப் பொருளாதார சூழ்நிலைகளையும் அவற்றின் நிகழும்தன்மை நிறையேற்றங்களையும் தெரிவு செய்தல்.

### 2.1.12.4 ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் மீள் விலைமதிப்பீடு

வங்கியினதும் தொகுதியினதும் இறையிலி காணி மற்றும் கட்டடங்கள் மீள்விலைமதிப்பிடப்பட்ட தொகைகளில் பிரதிபலிக்கின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் (இநிஅறி-13) "சீர்மதிப்புப் பெறுமதி அளவீடு" இன் நியதிகளின் பிரகாரம் இறையிலி காணியினதும் கட்டடங்களினதும் சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்காக தொகுதி சுயாதீன தொழில்சார் விலைமதிப்பீட்டாளர்களை ஈடுபடுத்தியது.

இறையிலி காணியினதும் கட்டடங்களினதும் சீர்மதிப்புப் பெறுமதியினை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்தப்படும் முறைகளும் முக்கிய ஊகங்களும் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்பு இல. 2.3 இல் மேலும் விளக்கப்பட்டுள்ளன.

### 2.1.12.5 ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் பயன்பாட்டு ஆயுட்காலம்

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றின் மிஞ்சிய பெறுமதி, பயன்மிக்க ஆயுட்காலம் மற்றும் பெறுமானத் தேய்வு முறைகள் போன்றவற்றை தொகுதி ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மீளாய்கின்றது. இப்பெறுமதிகளினதும் வீதங்களினதும் முறைகளினதும் மதிப்பீடுகளில் முகாமைத்துவத் தீர்வு பிரயோகிக்கப்படுகின்றது. ஆதலால் அவை நிச்சயமற்ற தன்மைக்கு உட்படுத்தப்பட்டவையாகும்.

### 2.1.12.6 நிதியியல் சொத்துகள் அல்லாதவற்றின் சேதஇழப்பு

பிற்போடப்பட்ட வரிச் சொத்து தவிர்ந்த சொத்தொன்று தேசஇழப்புக்கான சாத்தியம் உள்ளதா என்பதை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், தொகுதி கணிக்கும். சாத்தியமொன்று காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான ஆண்டு தேசஇழப்பு பரிசோதனை தேவைப்படுமிடத்து, சொத்தில் மீளப்பெறப்பட வேண்டிய தொகையை தொகுதி மதிப்பிடும். சொத்து ஒன்றின் கொண்டு செல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறவேண்டிய தொகையை விஞ்சுமிடத்து சொத்தானது சேதமிழந்துள்ளதாக கருதப்படுவதுடன், அதன் மீளஅறவிடத்தக்க தொகையில் பதிவுசெய்யப்படும்.

### 2.1.12.7 பிற்போடப்பட்ட வரிச் சொத்து

வரி இழப்புகள் பயன்படுத்தக்கூடியதாகவிருக்-கின்றமைக்கு எதிராக எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபம் கிடைக்கப்பெறும் என்கின்ற நிகழ்வு காணப்படுகின்றது என்ற ரீதியில் வரி இழப்புகளுடன் தொடர்புபட்டு பிற்போடப்பட்ட வரி சொத்துகள் இனங்காணப்-பட்டுள்ளன. எதிர்கால வரி திட்டமிடல் மூலோபாயங்களுடன் சேர்த்து எதிர்கால வரி விதிக்கத்தக்க இலாபங்கள் நிகழக்கூடிய காலம் மற்றும் மட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்படக்கூடிய பிற்போடப்பட்ட வரி சொத்து தொகையினை நிர்ணயிப்பதற்கு தீர்ப்பு தேவைப்படுத்தகின்றது.

### 2.1.12.8 வரையறைசெய்யப்பட்ட நலக் கடப்பாடுகள்

வரையறைசெய்யப்பட்ட நலத் திட்டங்களின் கிரயமும் அவற்றின் கடப்பாடுகளின் தற்போதைய பெறுமதிகளும் கணிப்பீட்டு பெறுமதி மதிப்பீடுகளை பயன்படுத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கணிப்பீட்டு மதிப்பீடானது கழிவு வீதங்கள், சொத்துகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட வருவாய் வீதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புகள், இறப்பு வீதங்கள் மற்றும் எதிர்கால ஓய்வூதிய

அதிகரிப்புகள் என்பன பற்றிய ஊகங்களை மேற்கொள்வதனை ஈடுபடுத்துகின்றது.

பொருத்தமான கழிவு வீதத்தினை நிரணயிக்கின்றபோது ஓய்வூதிய நிதியத்தின் எஞ்சியுள்ள நிறையேற்றப்பட்ட சராசரிக் காலப்பகுதியினை ஒத்த உயர்தர நிறுவன முறியொன்றின் விளைவினை முகாமைத்துவம் கருத்திற்கொள்கின்றது. சந்தையில் பொருந்துகின்ற ஒத்த உயர்தர நிறுவன முறியொன்று கிடைக்கப்பெறாவிடின், ஒரேமாதிரியான கால இடர்நேர்வு சீர்செய்யப்பட்ட அரசாங்க பிணை முறி விளைவு வீதமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இறப்பு வீதமானது பொதுவாக கிடைக்கத்தக்க இறப்பு வீத அட்டவணைகளை அடிப்படையாக கொண்டமைந்துள்ளது. எதிர்கால சம்பள அதிகரிப்புகளும் ஓய்வூதிய அதிகரிப்புகளும் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்க வீதங்களையும் வங்கியின் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதத்தையும் அடிப்படையாக கொண்டமைந்துள்ளன.

இத்திட்டங்களின் நீண்டகால தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமின்மைக்கு உட்பட்டவையாகும்.

### 2.1.12.9 ஏற்பாடுகள், கடமைப் பொறுப்புகள மற்றும் எதிர்பாரா செலவுகள்

தொகுதியானது சாதாரண தொழில் நடவடிக்கைகளில் அதற்கெதிரான சட்டக்கோரிக்கைகளை பெறுகின்றது. ஏற்பாடுகளை மேற்கொள்வதில் ஏதேனும் பின்தொடர்கின்ற உரிமைக் கோரிக்கை நேரிடக்கூடியமை தொடர்பில் முகாமைத்துவம் தீர்ப்புகளை மேற்கொள்கின்றது. சட்டக் கோரிக்கைகளை முடிவுறுத்தும் காலம் நிச்சயமற்றதாகவுள்ளமையினைப் போன்றே பொருளாதார நலன்களின் சாத்தியமான வெளிப்பாய்ச்சல் தொகையும் காணப்படுகின்றது. காலம் குறித்தலும் செலவும் தொடர்புடைய சட்டரீதியான நியாயாதிக்கத்தில் காணப்படும் உரிய செயன்முறையிலேயே இறுதியாக தங்கியிருக்கின்றன.

## 2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் →

2020ஆம் ஆண்டில் கணக்கீட்டுக் கொள்கைகளில் பாரிய மாற்றங்களில்லை.

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் (இநிஅறி 16) -குத்தகைகள்

இந்நியமமானது குத்தகைகளை இனங்காணுதல், அளவிடுதல், எடுத்துரைத்தல் மற்றும் வெளிப்படுத்தல் என்பவற்றுக்கான கோட்பாடுகளை எடுத்துரைக்கின்றது. இதன் குறிக்கோள், குத்தகைபெறுநரும் குத்தகைவழங்குநரும் அக்கொடுக்கல்வாங்கல்களை நம்பகமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விதத்தில் தொடர்புடைய தகவல்களை வழங்குவதனை உறுதிசெய்வதாகும். நிறுவனமொன்றின் நிதி நிலை, நிதியியல் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன மீது குத்தகைகள் கொண்டிருக்கின்ற தாக்கத்தினை மதிப்பிடுவதற்கு இந்நிதியியல் கூற்றுகளை பயன்படுத்துவோருக்கு இத்தகவல்கள் அடிப்படையொன்றினை வழங்குகின்றன.

இந்நியமமானது பின்வரும் நியமங்களையும் பொருள்கோடல்களையும் மாற்றீடு செய்கின்றது:

(அ) இகநி 17 குத்தகைகள்

(ஆ) சர்வதேச நிதியியல் அறிக்கையிடல் பொருள்கோடல் சபை 4 - ஒழுங்கேற்பாடோன்று குத்தகையொன்றினை உள்ளடக்குகின்றதா என்பதனை நிர்ணயித்தல்

(இ) நிலையில் பொருள்கோடல் குழு-15 தொழிற்படுகின்ற குத்தகைகள்-ஊக்குவிப்புக்கள் அத்துடன்

(ஈ) நிலையில் பொருள்கோடல் குழு-27 குத்தகையொன்றின் சட்டரீதியான வடிவத்தினை ஈடுபடுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களின் கருத்திற்கொள்ளத்தக்க மூலதனத்தினை மதிப்பிடுதல்.

கீழே குறித்துரைக்கப்பட்டவை 2019 சனவரி 1 ஆம் திகதியுடைய ஆரம்ப பிரயோக திகதியில் இருந்து பிரயோகிக்கப்பட்டுவருகின்ற இநிஅறி 16 இன் பின்பற்றலின் மீதான வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையாகும்.

#### 2.2.1.1 குத்தகை ஒன்றினை இணங்காணுதல்

விலைஈட்டுக்கான பரிமாற்றத்தின் காலப்பகுதி ஒன்றுக்காக இனங்காணப்பட்ட சொத்தொன்றினை பயன்படுத்துவதனை கட்டுப்படுத்துவதற்கான உரிமை ஒன்றினை ஒப்பந்தம் வெளிப்படுத்துமாயின் ஒப்பந்தமானது குத்தகையாகும். எனவே ஒப்பந்தம் ஒன்றின் தொடக்கத்தில் வங்கியானது பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்வதன் மூலம் ஒப்பந்தமானது குத்தகை ஒன்றா அல்லது குத்தகையினை உள்ளடக்குகின்றதா என்பதை மதிப்பிடுகின்றது.

1. இனங்காணப்பட்ட சொத்து கிடைக்கப்பெறுகின்றமை
2. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான வங்கியின் உரிமை
3. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டில் இருந்து அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமாக பெறுறுக்கொள்வதற்கான வங்கியின் உரிமை
4. இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை பணிப்பதற்கான வங்கியின் உரிமை

அதற்கமைய, வங்கியானது இநிஅறி 16: குத்தகைகள் இன் கீழ் குத்தகையினை உள்ளடக்குகின்ற கிளையொன்றினை தொழிற்படுத்துவதற்காக மற்றும் இயந்திரங்களை பயன்படுத்துவதற்காக வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து வாடகை உடன்படிக்கைகளையும் (குறுகிய கால உடன்படிக்கைகள், 12 மாதங்களுக்கு குறைவான மற்றும் குறைந்த பெறுமதி உடன்படிக்கைகள் தவிர) இனங்காண்கின்றது.

#### 2.2.1.2 சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை உரிமை

வங்கியானது சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகை பெறுநரின் உரிமையினை குத்தகை திகதியின் தொடக்கத்தில் (அதாவது குத்தகை உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான திகதி) இனங்காணுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையானது ஏதேனும் ஒன்று திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் சேதஇழப்பு நட்டங்களை கழித்து செலவில் அளவிடப்படுவதுடன் குத்தகைப் பொறுப்புக்களில் ஏதேனும் மீள்அளவீட்டிற்காக சீர்செய்யப்படுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமைச் செலவானது இனங்காணப்பட்ட குத்தகைப் பொறுப்புக்களின் தொகை மற்றும் ஏதேனும் கிடைக்கப்பெற்ற குத்தகை ஊக்குவிப்புக்களை கழித்து தொடக்கத் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட குத்தகை கொடுப்பனவுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. குத்தகை தவணைக் காலத்தின் இறுதியில் குத்தகைச் சொத்தின் சொத்தாண்மையை பெற்றுக்கொள்வதற்கு வங்கி நியாயமானளவில் நிச்சயமில்லாதவிடத்து, இனங்காணப்பட்ட சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகை பெறுநரின் உரிமை, அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட்காலத்தினையும் குத்தகை தவணையினையும் விட குறைவாக நேர்-கோட்டு அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டுகின்றது. சொத்துகளை பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை, சேதஇழப்புக்கு உட்படுவதில்லை.

#### 2.2.1.3 குத்தகை பொறுப்புக்கள்

குத்தகை திகதியின் தொடக்கத்தில், வங்கியானது குத்தகை தவணைக் காலத்தின் மீது மேற்கொள்ளப்படவுள்ள குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்ட குத்தகை பொறுப்புகளை இனங்காண்கின்றது. குத்தகை கொடுப்பனவுகளானவை கிடைக்கப்பெறத்தக்க ஏதேனும் ஊக்குவிப்புக்களை கழித்து நிலையான கொடுப்பனவுகள் (கட்டாய நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்களாக), சுட்டெண்னை அல்லது வீதமொன்றைச் சார்ந்து செலுத்தப்பட்ட குத்தகை கொடுப்பனவுகளின் பாகம் மற்றும் வழங்கப்பட்ட பெறுமதி உத்தரவாதங்களின் கீழ் கொடுப்பனவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. குத்தகை கொடுப்பனவுகளானது வங்கியினால் பிரயோகிக்கப்படவுள்ள நியாயமாக நிச்சயமான கொடுப்பனவு தெரிவொன்றின் பிரயோக விலை மற்றும் குத்தகை நியதியானது குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தெரிவினை வங்கி பிரயோகிப்பதனை பிரதிபலிக்குமாயின் குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தண்டப்பண கொடுப்பனவுகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. சுட்டெண்னொன்றை அல்லது வீதமொன்றைச் சார்ந்திருக்காத செலுத்தப்பட்ட குத்தகை கொடுப்பனவுகளின் பாகமானது கொடுப்பனவு இடம்பெறுதல்களை தூண்டுகின்ற நிகழ்வு அல்லது நிலைமைக் காலத்தில் செலவாக இனங்காணப்படுகின்றது. குத்தகை கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதியினைக் கணிக்கின்ற போது, குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதம் உடனடியாக நிர்ணயிக்கப்படமுடியாமலிருப்பின் வங்கியானது குத்தகையின் தொடக்க திகதியில் திரைசேறி முறி வீதத்தினை (திறைசேரி முறியின் காலம் குத்தகைக் காலத்தை ஒத்ததாக இருத்தல் வேண்டும்) பயன்படுத்துகின்றது. தொடக்கத் திகதியின் பின்னர், குத்தகை பொறுப்புக்களின் தொகையானது வட்டித் திரள்வினை பிரதிபலிப்பதற்கு அதிகரிக்கப்படுவதுடன்

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

செலுத்தப்பட்ட குத்தகை கொடுப்பனவுகளுக்காக குறைக்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக குத்தகை பொறுப்புக்கள் கொண்டுசெல்லும் தொகையானது குத்தகை தவணைக் காலத்தில் திருத்தமொன்று, மாற்றமொன்று, கட்டாய நிலையான குத்தகை கொடுப்பனவுகளில் அல்லது ஏதுவாகின்ற சொத்தை கொள்வனவு செய்வதற்கான மதிப்பீட்டில் மாற்றம் காணப்படுமாயின் மீள அளவிடப்படுகின்றது.

### 2.2.1.4 குறுகிய கால குத்தகைகளும் குறைந்த பெறுமதியுடைய சொத்துகளின் குத்தகைகளும்

வங்கியானது அதன் குறுகிய கால குத்தகைகளுக்கு (அதாவது தொடக்கத் திகதியில் இருந்து 12 மாத அல்லது அதற்கு குறைவான தவணைக்காலத்தை கொண்டிருக்கின்ற அத்துடன் கொள்வனவு தெரிவு ஒன்றினை உள்ளடக்காத குத்தகைகளுக்கு) குறுகிய கால குத்தகை இனங்காணல் விதிவிலக்கினை பிரயோகிக்கின்றது. வங்கி, குறைந்த பெறுமதியுடையதாக கருதப்படுகின்ற குறைந்த பெறுமதி சொத்துக்கள் குத்தகை இனங்காணல் விதிவிலக்கினையும் பிரயோகிக்கின்றது. குறுகிய கால குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதி சொத்துகள் மீதான குத்தகை கொடுப்பனவுகள், குத்தகை தவணைக்காலத்தின் மீது நேர் கோட்டு அடிப்படையில் செலவாக இனங்காணப்படுகின்றன. ஏதுவாகின்ற சொத்தின் பெறுமதியானது ரூபா 1 மில்லியனுக்கு குறைவாக அல்லது சமமாக காணப்படுமாயின் வங்கி அதனை குறைந்த பெறுமதியுடைய சொத்துகள் குத்தகைகளாக கருதுகின்றது.

### 2.2.1.5 மீளப்புதுப்பித்தல் தெரிவுகளுடன் கூடிய குத்தகை தவணைக் காலத்தினை நிர்ணயிப்பதில் முக்கியமான தீர்ப்பு

வங்கியானது நிறைவேற்றப்படுவதற்கு நியாயமளவில் நிச்சயம் காணப்படுமாயின் அல்லது சாத்தியமாக காணப்படுமெனில் குத்தகையினை நீடிப்பதற்கான தெரிவொன்றினால் உள்ளடக்கப்படும் எவையேனும் காலப்பகுதிகளுடன் அல்லது நிறைவேற்றப்படாமைக்கு நியாயமானளவு நிச்சயம் காணப்படுமாயின் குத்தகையினை முடிவுறுத்துவதற்கான தெரிவொன்றால் உள்ளடக்கப்படும் எவையேனும் காலப்பகுதிகளுடன் ஒன்று சேர்த்து தவணைக்காலத்தினை இரத்துச்செய்ய முடியாத குத்தகைத் தவணைக்காலமாக நிர்ணயிக்கின்றது. மீளபுதுப்பிப்பதற்கான தெரிவினை நிறைவேற்றுவதற்கு நியாயமான நிச்சயம் காணப்படுகின்றதா என்பதை மதிப்பிடுவதில் வங்கி தீர்ப்பினை பிரயோகிக்கின்றது. அதாவது மீளபுதுப்பித்தலினை அது நிறைவேற்றுவதற்கு அதற்கு பொருளாதார ஊக்குவிப்பு ஒன்றினை தோற்றுவிக்கின்ற அனைத்து தொடர்புடைய காரணிகளையும் அது கருத்திற்கொள்கின்றது. தொடக்கத் திகதியின் பின்னர் மீளபுதுப்பிப்பதற்கான தெரிவினை நிறைவேற்றுவதற்காக (அல்லது நிறைவேற்றாமைக்கு) வங்கியின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற அத்துடன் அதன் இயலுமையினை பாதிக்கின்ற முக்கிய நிகழ்வு அல்லது சூழ்நிலைகளில் மாற்றம் காணப்படுமாயின், குத்தகை தவணைக் காலத்தினை வங்கி மீள மதிப்பிடுகின்றது.

ஒப்பந்தமானது குத்தகையினை நீடிப்பதற்கு அல்லது முடிவுறுத்துவதற்கான தெரிவுகளை கொண்டிருக்குமிடத்து, குத்தகை தவணைக் காலத்தினை தீர்மானிப்பதில் வங்கி நடந்த நிகழ்வின் தன்மையினை பயன்படுத்துகின்றது. அதற்கமைய, வங்கியானது குத்தகை தவணைக் காலத்தினை வங்கி மற்றும் குத்தகைகொடுனர் மூலம் கைச்சாத்திடப்பட்ட வாடகை ஒப்பந்தங்களினால் உள்ளடக்கப்படும் காலப்பகுதியின் அடிப்படையில் அமைந்த வருடங்களின் எண்ணிக்கையாக இனங்கண்டுள்ளது.

### 2.2.1.6 அளவீடு

வங்கியானது 2019.01.01 அன் ஆரம்ப பிரயோக திகதியுடன் மாற்றம் செய்யப்பட்ட முன்கூட்டியே பொருந்தக்கூடிய பின்பற்றல் முறையினைப் பயன்படுத்தி இநிஅறி 16 ஐப் பின்பற்றியது. இம்முறையின் கீழ், ஆரம்பத் திகதியில் இனங்காணப்பட்ட நியமத்தினை முதன்முறையாக பிரயோகிப்பதன் ஒன்றுதிரண்ட விளைவுடன் முன்கூட்டியே பொருந்தக்-கூடியவாறு நியமம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. மாற்றம்செய்யப்பட்ட முன்கூட்டியே பொருந்தக்கூடிய அணுகுமுறையினைப் பயன்படுத்தி வங்கி, இநிஅறி 16 ஐப் பிரயோகிப்பதனால்,

- முன்னர் அறிக்கையிடப்பட்டவாறான ஒப்பீடுகளை வங்கி விட்டுவிடுகின்றது.
- மாறுதலடையும்போது சொத்திற்கும் பொறுப்பிற்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடு, ஆரம்ப பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளில் இனங்காணப்பட்டுள்ளது
- குத்தகையின் தொடக்கத்திலிருந்து இநிஅறி 16 பிரயோகிக்கப்பட்டிருந்தாற்போன்று சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினை அளவீடுசெய்தல் (ஆனால் மாறுதல் திகதியில் கழிவிடல் வீதத்தினை பயன்படுத்தல்)

**சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினதும் குத்தகைப் பொறுப்பினதும் ஆரம்ப அளவீடு**

சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையானது ஆரம்பத்தில் 2019.01.01 அன்று உள்ளவாறு நிலுவையாக ஆக்கப்பட்ட ஏதேனும் முற்பணங்களுக்கு சீர்செய்யப்பட்ட அனைத்து குத்தகைகளினதும் தற்போதைய பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. குத்தகைப் பொறுப்பானது தொடக்கத் திகதியில் எஞ்சியுள்ள குத்தகைக் காலப்பகுதியின் மீது எதிர்கால குத்தகை வாடகைகளின் தற்போதைய பெறுமதியில் ஆரம்பத்தில் அளவிடப்பட்டுள்ளன.

**சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமையினதும் குத்தகைப் பொறுப்பினதும் தொடர்ந்துவருகின்ற அளவீடு**

தொடக்கத் திகதிக்கு பின்னர் வங்கியானது செலவு மாதிரியொன்றினைப் பிரயோகித்து சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகை-பெறுநரின் உரிமையினை அளவிடும். இச் சொத்துக்கள், நேர்கோட்டு முறையினைப் பயன்படுத்தி 2019.01.01 அன்று உள்ளவாறு நிலுவை குத்தகை தவணைக்கு கடன்தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது. குத்தகை பொறுப்பின் தொடர்ந்து வருகின்ற அளவீடானது குத்தகை வட்டியினை அதிகரிப்பதன் மூலமும் குத்தகை கொடுப்பனவுகளை குறைப்பதன் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது.

**கழிவு வீதம்**

எதிர்கால வாடகைக் கொடுப்பனவுகளை கழிப்பதற்கு குத்தகைபெறுநர் அதிகரித்துச் செல்லும் கடன்பெறுதல் வீதத்தினை பிரயோகிக்க வேண்டும். அதாவது "அதனையொத்த தவணைக்காலத்தின் மீது, அதனையொத்த பிணையுடன், அதனையொத்த பொருளாதாரச் சூழலில் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமைக்கு அதனையொத்த பெறுமதியினைக் கொண்ட சொத்தினை பெற்றுக்கொள்வதற்கு அவசியமான நிதியங்களை கடன்பெறுவதற்கு குத்தகைபெறுநர் செலுத்தவேண்டிய வட்டி வீதம்". ஒரேமாதிரியான குத்தகை காலப்பகுதியுடன் கூடிய குத்தகைகளுக்கு வங்கி தனி கழிவு வீதமொன்றினை பிரயோகிக்கின்றது.

- **ஒப்பந்தமொன்றின் கூறுகளை வேறாக்கல்**
  குத்தகைக் கூறுகளில் இருந்து குத்தகையற்ற கூறுகளை வேறுபடுத்தாத நடைமுறைச் சூழலுக்கேற்றவாறு இசைவான விதத்தில் பிரயோகிப்பதனை வங்கி தெரிவுசெய்கின்றது என்பதுடன் அதற்கு பதிலாக ஒவ்வொரு குத்தகைக் கூறினையும் அத்துடன் எவையேனும் இணையப்பெற்ற குத்தகையல்லா கூறுகளையும் தனியொரு குத்தகை கூறாக கொள்கிறது.
- **ஆரம்ப நேரடிச் செலவுகள்**
  வங்கியானது நடைமுறைச் சூழலுக்கேற்றவாறு ஆரம்ப பிரயோக திகதியன்று சொத்தினைப் பயன்படுத்துவதற்கான குத்தகைபெறுநரின் உரிமை அளவீட்டிலிருந்தான ஆரம்ப நேரடிச் செலவுகளை உள்ளடக்குவதில்லை.

## 2.3 சீர்மதிப்பு பெறுமதி அளவீடு →

"சீர்மதிப்புப் பெறுமதி" என்பது பிரதான தரப்பினரின் அளவீட்டுத் திகதியில் அல்லது அது கிடைக்காத பட்சத்தில், அத் திகதியில் தொகுதி அணுகுவழியினை கொண்டுள்ள மிகவும் அனுகூலமிக்க சந்தையில், சந்தை பங்கேற்பாளர்களுக்கிடையில் ஒழுங்குமுறையான கொடுக்கல்வாங்கல் ஒன்றில் சொத்தொன்றை விற்பனை செய்வதற்கு கிடைக்கப்பெறக்கூடிய அல்லது பொறுப்பொன்றினை மாற்றல் செய்வதற்கு கொடுப்பனவு செய்யப்படக்கூடிய விலையாகும். பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியானது அதன் செயலாற்றமற்ற இடர்நேர்வினை பிரதிபலிக்கின்றது.

தொகுதியானது செயற்பாடுமிக்க சந்தையொன்றில் சாதனமொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியினை அச்சாதனத்திற்காக குறிக்கப்பட்ட விலையினை பயன்படுத்தி அளவிடுகின்றது. போதிய நிகழுந்தன்மை மற்றும் முன்னெடுக்கப்படும் அடிப்படையொன்றில் விலையிடல் தகவல்களை வழங்குவதற்கான அளவு என்பவற்றுடன் சொத்தொன்றிற்கான அல்லது பொறுப்பொன்றிக்கான கொடுக்கல்-வாங்கல் இடம்பெறுமாயின் அச்சந்தை செயற்பாடுமிக்க கருத்தில் கொள்ளப்படுகின்றது.

செயற்பாடுமிக்க சந்தையொன்றில் குறிக்கப்பட்ட விலை எதுவும் காணப்படவில்லையாயின், அப்போது தொகுதியானது தொடர்புடைய அவதானிக்கத்தக்க உள்ளீடுகளின் பயன்பாட்டை உச்சப்படுத்துகின்ற அத்துடன் அவதானிக்க முடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டை குறைக்கின்ற விலைமதிப்பீட்டு

நுட்பங்களை பயன்படுத்துகின்றது. தெரிவுசெய்யப்பட்ட மதிப்பீட்டு நுட்பமானது கொடுக்கல்வாங்கல் ஒன்றினை விலை குறிப்பதில் சந்தை பங்கேற்பாளர்கள் கருத்தில் கொள்கின்ற அனைத்து காரணிகளையும் உள்ளடக்குகின்றது.

சந்தைப் பங்கேற்பாளர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுவார்களாயின், சொத்தை அல்லது பொறுப்பை விலைகுறிக்கின்ற போது சந்தை பங்கேற்பாளர்கள் சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையினை பயன்படுத்துவர் என்ற ஊகங்களைப் பயன்படுத்தி சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி அளவிடப்படுகின்றது.

தொகுதியானது மாற்றம் ஏற்பட்டுள்ள காலப்பகுதியான அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதி படிநிலையின் மட்டங்களுக்கிடையிலான மாற்றல்களை இனம்காணுகின்றது.

நிதியல்லாத சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சொத்தின் உச்ச மற்றும் சிறந்த பயன்பாட்டில் அதனை பயன்படுத்துவதன் மூலம் அல்லது சொத்தின் உச்ச மற்றும் சிறந்த பயன்பாட்டில் அதனைப் பயன்படுத்தும் மற்றுமொரு சந்தைப் பங்கேற்பாளருக்கு அதனை விற்பனை செய்வதன் மூலம் பொருளாதார நலன்களை ஈட்டுவதற்கான சந்தைப் பங்கேற்பாளரின் இயலுமையினை கருத்தில் கொள்கின்றது. காணி மற்றும் கட்டிடங்கள் போன்ற முக்கிய சொத்துகளின் விலை மதிப்பீட்டிற்காக வெளிவாரி தொழில்சார் விலைமதிப்பீட்டாளர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய சீர்மதிப்புப் பெறுமதி தொடர்பான பகுப்பாய்வொன்று 277 தொடக்கம் 282 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 56 இல் தரப்பட்டுள்ளது.

## 2.4 முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்- பொதுவானவை →

### 2.4.1 திரட்டுதலுக்கான அடிப்படை

வங்கியினதும் தொகுதியினதும் நிதியியல் கூற்றுகள், இநிஅறி 10 - "திரட்டிய நிதியியல் கூற்றுகள்" மற்றும் இகநி 27- "திரட்டிய மற்றும் வேறான நிதியியல் கூற்றுகள்" ஆகிய நியதிகளுக்கமைவாக வங்கியினதும் அதன் துணை நிறுவனத்தினதும் நிதியியல் கூற்றுகளை உள்ளடக்குகின்றன.

#### 2.4.1.1 தொழில் ஒருங்கிணைப்புகள்

"தொழில் ஒருங்கிணைப்புகள்" (இநிஅறி 03) மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு அமைவாக தொகுதிக்கு கட்டுப்படுத்தல் கைமாற்றப்படுகின்ற போது கையகப்படுத்தல் முறைமையினை பயன்படுத்தி தொழில் ஒருங்கிணைப்புகள் கணக்கிற்கொள்ளப்படுகின்றது. கையேற்றலில் விலையீடு கைமாற்றப்பட்டு இனங்காணத்தக்க கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துகள் சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படுகின்றன. தோன்றுகின்ற ஏதேனும் நன்மதிப்பு சேதஇழப்பிற்காக வருடாந்தம் பரீட்சிக்கப்படுகின்றது. பேரம் பேசுதல் கொள்வனவு மீதான ஏதேனும் இலாபம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றது. கொடுக்கல்வாங்கல் செலவுகள் அவை படுகடன் அல்லது பங்குமூலதனப் பிணையங்களுடன் தொடர்புள்ளதாயின் தவிர ஏற்பட்ட செலவாக்கப்படுகின்றன.

கைமாற்றப்பட்ட விலையீடு ஏற்கனவே இருந்த தொடர்புகளை தீர்ப்பனவு செய்தலுடன் தொடர்புடைய தொகைகளை உள்ளடக்குவதில்லை. அத்தகைய தொகைகள் பொதுவாக இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

ஏதேனும் எதிர்பாரா விலையீடானது கையகப்படுத்தல் திகதியன்று சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. நிதியியல் சாதனம் ஒன்றின் வரைவிலக்கணத்தை நிறைவுசெய்கின்ற எதிர்பாரா விலையீட்டினை கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடு பங்குமூலதனமாக வகைப்படுத்தப்படுத்தப்படுமாயின், அது மீள் மதிப்பீடு செய்யப்படுவதில்லை என்பதுடன் தீர்ப்பனவானது பங்குமூலதனத்தினுள் கணக்கில் கொள்ளப்படுகின்றது. வேறுவிதத்தில், எதிர்பாரா விலையீட்டின் சீர்மதிப்பு பெறுமதியில் காணப்படும் தொடர்ந்து வருகின்ற மாற்றங்கள், இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

#### 2.4.1.2 குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள்

குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள் பற்றிய விபரங்கள் 234 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 47 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.4.1.3 துணை நிறுவனங்கள்

துணை நிறுவனங்களின் நிதியியல் கூற்றுகள் வங்கிக்கு கட்டுப்பாடு மாற்றப்பட்ட திகதியிலிருந்தும் முழுமையாக திரட்டப்பட்டுள்ளதுடன் அத்தகைய கட்டுப்பாடு நிறுத்தப்படும் திகதி வரை திரட்டப்படுதல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். ஏதேனும் நிறுவனமொன்றின் செயற்பாடுகளிலிருந்து நலன்களைப் பெறுவதற்காக நிதியியல் மற்றும் தொழிற்படுத்தல் கொள்கைகளை ஆளுவதற்கு வங்கிக்கு அதிகாரம் உள்ளவரை கட்டுப்படுத்தல் நிலைத்திருக்கும். திரட்டுதல் நோக்கத்திற்கான வங்கியின் துணை நிறுவனத்தின் நிதியியல் கூற்றுக்கள் தேசிய சேமிப்பு வங்கியைப் போன்று அதே அறிக்கையிடும் காலத்திற்காக ஒரேமாதிரியான கணக்கீட்டு கொள்கைகளை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன.

#### 2.4.1.4 கட்டுப்படுத்தலை இழத்தல்

துணை நிறுவனம் ஒன்றினை கட்டுப்படுத்துவதனை தொகுதி இழக்கின்ற போது துணை நிறுவனத்தின் சொத்துகளையும், பொறுப்புகளையும் அது இனங்காணாது என்பதுடன் ஏதேனும் தொடர்புடைய குறைந்த எண்ணிக்கை பங்குரிமையாளர் அக்கறைகள் மற்றும் பங்குரிமையின் வேறு கூறுகள் என்பனவும் இனங்காணப்படாது. விளைகின்ற ஏதேனும் இலாபம் அல்லது நட்டம், இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. முன்னால் துணை நிறுவனத்தின் தக்கவைக்கப்பட்ட ஏதேனும் நலன் கட்டுப்படுத்தல் இழக்கப்படுகின்ற போது சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

#### 2.4.1.5 திரட்டுதலின் மீது இல்லாதொழிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள்

குழுக்களுக்குள்ளான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து விளைகின்ற அனைத்து குழுக்களுக்குள்ளான மீதிகள், வருமானம் மற்றும் செலவுகள் அத்துடன் தேறாத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன திரட்டிய நிதியியல் கூற்றுகள் தயாரிக்கின்ற போது முழுமையாக இல்லாதொழிக்கப்பட்டன. 237 மற்றும் 238 பக்கங்களிலுள்ள குறிப்பு இல. 49.3 மற்றும் 49.4 - துணைக் கம்பனியுடனான கொடுக்கல்வாங்கலைப் பார்க்க.

### 2.4.2 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்களும் மீதிகளும்

வெளிநாட்டு நாணயத்திலான அனைத்து கொடுக்கல்வாங்கலும் கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற திகதியில் நிலவிய நாணயமாற்று வீதத்தைப் பயன்படுத்தி தொழிற்பாட்டு நாணயமான இலங்கை ரூபாவிற்கு மாற்றப்படுகின்றன.

அறிக்கையிடும் திகதியில் வெளிநாட்டு நாணயத்தில் வகைப்படுத்தப்பட்ட நாணய சொத்துகளும் பொறுப்புகளும் அறிக்கையிடும் அத்திகதியில் ஆளுகின்ற நடுத்தர நாணயமாற்று வீதத்தினைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவில் மீள் நாணயமாற்றம் செய்யப்பட்டுள்ளன. நாணய விடயங்களில் தீர்ப்பனவில் ஏற்படும் அல்லது ஆரம்பத்தில் அவை பதிவுசெய்யப்பட்டவற்றிலிருந்து வேறுபட்ட வீதத்தில் நாணய விடயங்களை மாற்றும்போது ஏற்படுகின்ற அனைத்து செலாவணி வேறுபாடுகளும் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவீடு செய்யப்படும் நாணயமல்லாத விடயங்கள், ஆரம்பக் கொடுக்கல்வாங்கல் செய்யப்பட்ட திகதிகளின் நாணயமாற்று வீதத்தினை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணயத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவீடு செய்யப்பட்ட நாணயமல்லாத விடயங்கள், சீர்மதிப்புப் பெறுமதி நிர்ணயிக்கப்பட்ட திகதியிலான நாணயமாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் அலகின் நிதி நிலைமைக் கூற்றானது, அறிக்கையிடும் திகதியிலான நடுத்தர செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாய்க்கு மாற்றப்பட்டது. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் அலகின் கொடுக்கல்வாங்கல்கள், மேற்குறித்த கொள்கைக்கு அமைவாக பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் ஏற்பட்ட இலாபங்கள்/நட்டங்கள் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 2.5 முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்-சொத்துகளையும் பொறுப்புகளையும் இனங்காணுதல் →

**நிதியியல் சாதனங்கள்**

2018 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கின்ற ஆண்டறிக்கையிடும் காலப்பகுதிகளுக்காக இநிஅறி 9-“நிதியியல் சாதனங்கள்” இகநி 39 இனை பதிலீடு செய்தது. இகநி 39 இற்கமைய, காப்பு கணக்கீட்டினை தொடர்ந்து பிரயோகிப்பதற்கு இநிஅறி 9 இன் கீழ் அனுமதிக்கப்பட்ட கொள்கைத் தெரிவொன்றாக தொகுதி தெரிவு செய்தது.

## 2.5.1 நிதியியல் சாதனங்கள் - ஆரம்ப இனங்காணல், வகைப்படுத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்த அளவீடு

### 2.5.1.1 இனங்காணப்பட்ட திகதி

கடன்கள் மற்றும் முற்பணங்கள், வைப்புகள் மற்றும் கீழ்நிலைப்படுத்தப்பட்ட பொறுப்புகள் போன்றவற்றினை தொகுதி அவை உருவாக்கப்பட்ட திகதியில் இனங்காண்கின்றது. வாடிக்கையாளர்-களுக்கான கடன்களும் முற்பணங்களும் வாடிக்கையாளரின் கணக்குகளுக்கு நிதியங்கள் மாற்றல்செய்யப்படுகின்ற போது இனங்காணப்படுகின்றன. வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டிய நிலுவைகளை வங்கிக்கு நிதியங்கள் மாற்றல்செய்யப்படுகின்ற போது வங்கி இனங்காணகின்றது. அனைத்து ஏனைய நிதியியல் சாதனங்களும் (கிரமமான வழி மூலமான நிதியியல் சொத்துகளின் கொள்வனவு மற்றும் விற்பனைகள் உள்ளடங்கலாக) வர்த்தக திகதியில் அதாவது சாதனத்தின் ஒப்பந்தம் செய்யும் ஏற்பாடுகளின் ஒரு தரப்பினராக தொகுதி ஆகுகின்ற திகதியன்று இனங்காணப்படுகின்றன.

### 2.5.1.2 நிதியியல் சாதனங்களை இனங்காணலும் ஆரம்ப அளவீடும்

ஆரம்ப இனங்காணலில் நிதியியல் சாதனங்களை வகைப்படுத்தலானது குறிப்புகள் 2.5.1.4.1 மற்றும் 2.5.1.4.2 ஆகியவற்றில் விவரிக்கப்பட்டவாறு அவற்றின் ஒப்பந்த நியதிகள் மற்றும் சாதனங்களை முகாமைசெய்வதற்கான தொழில் மாதிரி என்பனவற்றைச் சார்ந்துள்ளது.

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகள் என்ற விடயங்கள் தவிர நிதியியல் சாதனங்கள் ஆரம்பத்தில் அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதியில் (குறிப்பு 56 இல் வரைவிலக்கணம் செய்யப்பட்டவாறு) அளவிடப்பட்டு, கொடுக்கல் வாங்கல் செலவுகள் இத்தொகைக்கு சேர்க்கப்-பட்டுள்ளன அல்லது இத்தொகையிலிருந்து கழிக்கப்பட்டுள்ளன. வர்த்தக கிடைக்கப்பெறத்-தக்கவை, கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் போது நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதியானது கொடுக்கல்வாங்கல் விலையிலிருந்து வேறுபடுகின்றபோது, வங்கியும் தொகுதியும் கீழே விவரிக்கப்பட்டவாறு நாள் 1 இலாபம் அல்லது நட்டத்திற்கு வகைகூறும்.

### 2.5.1.3 “நாள் 1” இலாபம் அல்லது நட்டம்

ஒரே மாதிரியான சாதனத்தின் ஏனைய அவதானிக்கத்தக்க நடப்புச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்களின் சீர்மதிப்பு பெறுமதியிலிருந்து அல்லது அவதானிக்கத்தக்க சந்தைகளிலிருந்தான தரவுகளை மட்டுமே உள்ளடக்குகின்ற மாறிலிகளின் மதிப்பீட்டு நுட்பமொன்றின் அடிப்படையில் அமைந்த சீர்மதிப்பு பெறுமதியிலிருந்து கொடுக்கல்வாங்கல் விலை வேறுபடும்போது, தொகுதியானது கொடுக்கல்வாங்கல் விலை மற்றும் சீர்மதிப்பு பெறுமதி (“நாள் 1” இலாபம் அல்லது நட்டம்) என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை உடனடியாக இனங்காண்கின்றது. அவதானிக்கப்பட முடியாத தரவுகளைப் பயன்படுத்தி சீர்மதிப்பு பெறுமதி தீர்மானிக்கப்-படுமிடத்தான சந்தர்ப்பங்களில் கொடுக்-கல்வாங்கல் விலை மற்றும் மாதிரிப் பெறுமதி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடானது உள்ளீடுகள் அவதானிக்கத்தக்கதாயிருக்கும் போது மாத்திரம் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்படும் அல்லது அச்சாதனம் இனங்காணப்படாதிருக்கும் போது கொடுக்கல்வாங்கல் விலை மற்றும் சீர்மதிப்பு பெறுமதி என்வற்றுக்கிடையிலான வேறுபாடானது வருமானக் கூற்றில் இனங்காணப்-படுகின்றது. ஒரே மாதிரியாகப் பொருந்தக் கூடிய திட்டங்களின் கீழ் சலுகை வீதங்களில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்த வரையில் ஏற்படக் கூடிய “நாள் 1 நட்டம்” ஊழியர்களின் எஞ்சியுள்ள சேவைக் காலப்பகுதி அல்லது கடன் திருப்பிச் செலுத்த வேண்டிய காலப்பகுதி ஆகிய இரண்டில் எது குறுகியதோ அதன் மீது பொருந்தக் கூடிய விளைவு வட்டி வீதங்களை பயன்படுத்தி பிற்போடப்பட்டு கடன்கழிப்புச் செய்யப்படுகின்றது

### 2.5.1.4 நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்

வங்கியானது சொத்துகளையும் சொத்தின் ஒப்பந்த நியதிகளையும் முகாமைசெய்வதற்கான தொழில் மாதிரியின் அடிப்படையிலமைந்த அதன் அனைத்து நிதியியல் சொத்துகளையும் பின்வரும் வகுதிகளில் ஒன்றில் வகைப்படுத்தப்படுகின்றது:

- கடன்தீர் செலவில் அளவிடல்
- ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதி
- இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதி

வங்கியும் தொகுதியும், இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள அதன் பெறுதி மற்றும் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலினை குறிப்பு இல. 2.5.1.6 இல் விளக்கியவாறு வகைப்படுத்தி அளவிடுகின்றது. வங்கி, நிதியியல் சாதனங்களை இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் நியமிக்கலாம், அவ்வாறு செய்வது, அளவீட்டு அல்லது இனங்காணல் ஒத்திசைவின்மைகளை இல்லாதொழிக்கின்றது அல்லது கணிசமாக குறைக்கின்றது.

#### 2.5.1.4.1 தொழில் மாதிரி மதிப்பீடு

வங்கியின் குறிக்கோள்களை அடைவதற்கு நிதியியல் சொத்துகளை அவை எவ்வாறு முகாமை செய்கின்றன என்பதனை சிறப்பாக பிரதிபலிக்கின்ற விதத்தில் அவற்றின் தொழில் மாதிரியினை வங்கியும் தொகுதியும் நிர்ணயிக்கின்றன.

வங்கியின் தொழில் மாதிரியானது சாதனத்திற்கு சாதனம் என்ற அடிப்படையில் மதிப்பிடப்படுவதில்லை, ஆனால் அது ஒன்றுதிரண்ட சொத்துப்பட்டியலின் உயர்மட்டத்தில் மதிப்பிடப்படுவதுடன் பினவருவன போன்ற அவதானிக்கத்தக்க காரணிகளின் அடிப்படையிலமைந்தது:

- தொழில் மாதிரியினதும் அத்தொழில் மாதிரியினுள் வைக்கப்பட்ட நிதியில் சொத்துகளினதும் செயலாற்றுகை எவ்வாறு மதிப்பிடப்பட்டு குழுமத்தின் முக்கிய ஆளணிக்கு அறிக்கையிடப்படுகின்றது,
- தொழில் மாதிரியின் (அத்துடன் அத்தொழில் மாதிரியினுள் வைக்கப்பட்டுள்ள நிதியியல் சொத்து) செலாற்றுகையினைப் பாதிக்கின்ற இடர்நேர்வுகள், குறிப்பாக, அவ் இடர்நேர்வுகள் முகாமை செய்யப்படும் விதம்.
- தொழிலின் முகாமையாளர்களுக்கு எவ்வாறு ஊதியங்கள் வழங்கப்படுகின்றன (உதாரணமாக, ஊதியமானது முகாமை செய்யப்படுகின்ற சொத்துகளின் சீர்மதிப்பு பெறுமதியின் அடிப்படையிலா அல்லது சேகரிக்கப்பட்ட ஒப்பந்த காசுப் பாய்ச்சலின் மீதா என்பது)
- விற்பனைகள் நிகழும் தன்மை, அளவு மற்றும் காலஅளவு எனபவும் வங்கியின் மதிப்பீட்டின் முக்கிய அம்சங்களாக காணப்படுகின்றன.

தொழில் மாதிரி மதிப்பீடானது “மோசமான நிலை” அல்லது “அழுத்தமான நிலை” சூழ்நிலைகளை என்பவற்றைக் கருத்தில்-கொள்ளாது நியாயமாக எதிர்பார்க்கப்படும் சூழ்நிலைகளை அடிப்படையாகக்கொண்டவை. ஆரம்ப இனங்காணலின் பின்னர் காசுப் பாய்ச்சல் வங்கியின் அடிப்படையான எதிர்பார்ப்பிலிருந்து வேறுபட்ட வழியில் தேறியிருக்குமாயின், அத் தொழில் மாதிரியில் வைக்கப்பட்ட எஞ்சிய நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலை வங்கி மாற்றுவதில்லை. ஆனால் முன்னெடுத்துச் செல்கையில் புதிதாக தோற்றம்பெற்ற அல்லது புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நிதியியல் சொத்துகளை மதிப்பிடுகின்ற போது அத்தகைய தகவல்களை கூட்டிணைக்கும்.

#### 2.5.1.4.2 ஒப்பந்த காசுப் பாய்ச்சல்கள் தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளா என்பது பற்றிய மதிப்பீடு (SPPI பரிசோதனை)

வங்கியின் வகைப்படுத்தல் செயன்முறையில் இரண்டாம் படிமுறையாக, வங்கியானது நிதியியல் ஒப்பந்த நியதிகள் தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் பரிசோதனையை நிறைவு செய்கின்றனவா என்பதை இனம்காணுவதற்கு அவற்றை மதிப்பிடுகின்றது.

இப்பரிசோதனை நோக்கத்திற்காக “முதன்மை” என்பது ஆரம்ப இனம்காணலில் நிதியியல் சொத்தொன்றின் சீர்மதிப்புப் பெறுமதி என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளதுடன் நிதியியல் சொத்தின் ஆயுட்காலம் மீது மாற்றமடையலாம் (உதாரணமாக முதன்மை மீள்கொடுப்பனவுகள் அல்லது கடன் தீர்வு மிகை/கழிவு காணப்படுமாயின்).

கடன் வழங்கல் ஏற்பாடொன்றினுள் மிக முக்கிய வட்டிக் கூறுகளாக காணப்படுவது பொதுவாக பணத்தினதும் கொடுகடன் இடர்நேர்வினதும் காலப்பெறுமதிக்கான கைமாறுகளாகும். தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு, வங்கியானது தீர்வுகளை பிரயோகிப்பதுடன், நிதியியல்

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

சொத்து குறித்துரைக்கப்பட்டுள்ள நாணயம் மற்றும் வட்டி வீதம் நிர்ணயிக்கப்பட்டுள்ள காலம் போன்ற தொடர்புடைய காரணிகளை கருத்தில் கொள்கின்றது.

இதற்குமாறாக, அடிப்படை கடன் வழங்கல் ஏற்பாடொன்றிற்கு தொடர்பு இல்லாதவையாக காணப்படுகின்ற ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களின் இடர்நேர்வுகளுக்கு அல்லது தளம்பலுக்கு குறைந்தபட்ச இடர்நேர்வுக்கு உள்ளாகும் தன்மையினை விட அதிகமாக அறிமுகப்படுத்துகின்ற ஒப்பந்த நியதிகள், செலுத்தவேண்டிய தொகை மீது தனியே முதன்மை மற்றும் வட்டி கொடுப்பனவுகளான ஒப்பந்த காசுப் பாய்ச்சல் இடம்பெற அனுமதிப்பதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்து அளவிடப்பட வேண்டியுள்ளது.

நிதியியல் நிலைமை கூற்றில் இனம்காணப்பட்ட வேறுபட்ட நிதியியல் சொத்துகளின் வகைகள் பற்றிய விபரங்களுக்கு கீழே குறிப்பு இலக்கம் 2.5.1.4.3 தொடக்கம் 2.5.1.4.5 வரை பார்க்க.

**2.5.1.4.3 கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்**

நிதியியல் சொத்தொன்று பின்வரும் இரு நிபந்தனைகளையும் நிறைவுசெய்யமாயின் கடன்தீர் செலவில் அளவிடப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ளவையாக நியமிக்கப்படுவதில்லை:

- ஒப்பந்த காசுப்பாய்ச்சலை சேகரிப்பதற்காக சொத்தை வைத்திருப்பதற்கான குறிக்கோளுடைய தொழில் மாதிரியொன்றினுள் சொத்து வைத்திருக்கப்படல் மற்றும்
- செலுத்த வேண்டிய முதன்மைத் தொகை மீது தனியே முதன்மை மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளாக காணப்படுகின்ற காசுப் பாய்ச்சல்களை நிதியியல் சொத்தின் ஒப்பந்த நியதிகள் குறித்துரைத்த திகதியில் இடம்பெறச்செய்தல்.

கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) காசும் காசுக்கு சமமானவையும்**

"காசும் மற்றும் காசுக்கு சமமானவையும்" பற்றிய விபரங்கள் 177ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 16 இல் தரப்பட்டுள்ளன.

**(ஆ) மத்திய வங்கியுடனான மீதிகள்**

"மத்திய வங்கிகளுடனான மீதிகள்" பற்றிய விபரங்கள் 177ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 17 இல் தரப்பட்டுள்ளன.

**(இ) வங்கிகளுடனான இருப்புகள்**

"வங்கிகளுடனான இருப்புகள்" பற்றிய விபரங்கள் 177ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 18 இல் தரப்பட்டுள்ளன.

**(ஈ) கடன்தீர் செலவிலுள்ள நிதியியல் சொத்துகள் -கடன்களும் முற்பணங்களும்**

"கடன்களும் முற்பணங்களும்" பற்றிய விபரங்கள் 183ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 21 இல் தரப்பட்டுள்ளன.

**(உ) கடன்தீர் குறைக்கப்பட்ட செலவிலுள்ள நிதியியல் சொத்துகள் - படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்**

"படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள்" பற்றிய விபரங்கள் 192ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 22 இல் தரப்பட்டுள்ளன.

**2.5.1.4.4 ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்**

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளானவை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் மற்றும் பங்குமூலதன சாதனங்களை உள்ளடக்குகின்றன.

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியியல் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் கீழே குறிப்புகள் (அ) மற்றும் (ஆ) இல் தரப்பட்டுள்ளன.

**(அ) ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன்**

ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டிருப்பின் அத்துடன் நிதியியல் சொத்துகளை விற்பனை செய்வதற்காகவிருக்கின்ற படுகடன் சாதனங்களின் குறிக்கோளைக் கொண்ட தொழில் மாதிரியொன்றினுள் படுகடன் சாதனங்கள் வைக்கப்பட்டிருப்பின், அவை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. இங்கு தனியே முதன்மைத் தொகையினதும் செலுத்தவேண்டிய முதன்மை தொகை மீதான வட்டியினதும் கொடுப்பனவுகளாக காணப்படுகின்ற சொத்தின் காசுப் பாய்ச்சல்கள் கொடுப்பனவுகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

"ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள படுகடன் சாதனங்கள்;" பற்றிய விபரங்கள் 194 - 197 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 23 இல் தரப்பட்டள்ளன.

**ஆ. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட பங்குமூலதன சாதனங்கள்**

ஆரம்ப இனங்காணிலின் மீது தொகுதியானது உபாய மற்றும் நியதிச்சட்ட நோக்கங்களுக்காக வைத்திருக்கும் அதன் சில பங்குமூலதன முதலீடுகளை ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குமூலதன சாதனங்களாக மாற்ற முடியாதவாறு வகைப்படுத்துவதை தெரிவு செய்கின்றது. "ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பங்குமூலதன சாதனங்கள்;" பற்றிய விபரங்கள் 194 - 197 ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 23 இல் தரப்பட்டள்ளன.

**2.5.1.4.5 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள்**

இ.நி.அ.நி 09 இன் பிரகாரம், கடன்தீர் செலவில் அல்லது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வகைப்படுத்தப்பட்டவை தவிர்ந்த அனைத்து நிதியியல் சொத்துகளும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகளானவை வர்த்தகப்படுத்துவதற்காக வைத்திருக்கப்படுகின்ற அல்லது முகாமை செய்யப்படுகின்ற மற்றும் அவற்றின் செயலாற்றுகையானது அவை ஒன்றில் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவோ அன்றில் ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்கோ அத்துடன் நிதியியல் சொத்துகளை விற்பனை செய்வதற்கோ என இரண்டிற்கும் வைக்கப்பட்டாமையினால் சீர்மதிப்புப் பெறுமதி அடிப்படையொன்றில் மதிப்பிடப்படுகின்ற நிதியியல் சொத்துகளையும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணல் மீது நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகளையும் உள்ளடக்குகின்றது. இவை கீழே கலந்துரையாடப்பட்டுள்ளன.

**(அ) இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள்**

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகளானவை நிதி நிலமைக் கூற்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவு செய்யப்படுகின்றன. சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள், "இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மீதான தேறிய இலாபம் அல்லது நட்டம்" இல் பதிவு செய்யப்படுகின்றன. உழைக்கப்பட்ட வட்டி விளைவு வட்டி வீதத்தைப் பயன்படுத்தி "வட்டி வருமானம்" இல் ஒன்றுதிரடப்படும் அதேவேளை பங்கிலாப வருமானமானது கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கான உரிமை தாபிக்கப்படுகின்ற போது "ஏனைய தொழிற்பாட்டு வருமானம்" இல் பதிவு செய்யப்படுகின்றது.

தொகுதியானது அறிக்கையிடும் திகதியின் இறுதியில் உள்ளவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவையாக ஆரம்ப இனம்காணலின் மீது நியமிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

### 2.5.1.5 நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலும் அதனைத் தொடர்ந்த அளவீடும்.

இநிஅறி 9 இன் பிரகாரம், தொகுதியானது நிதியியல் பொறுப்புகள், நிதியியல் உத்தரவாதங்கள் மற்றும் கடன் கடமைப்பொறுப்புகள் என்பவற்றை பின்வரும் வகுதிகளில் ஒன்றினுள் வகைப்படுத்தப்படுகின்றது:

- இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் பொறுப்புகளும் மற்றும் பின்வருவன இவ் வகுதியினுள் உள்ளவை.

  வர்த்தகத்திற்காக பிடித்து வைக்கப்பட்டவை அல்லது

  இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் நியமிக்கப்பட்டவை

- கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் பொறுப்புகள்

நிதியியல் பொறுப்புகளின் தொடர்ந்துவரும் அளவீடானது அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கின்றது. நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுத்தலுக்கான இகநி 39 இல் ஏற்கனவே உள்ள தேவைப்படுத்தல்களை இநிஅறி 9 பாரியளவில் தக்கவைத்துள்ளது

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

**2.5.1.5.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் பொறுப்புகள்**

தொகுதியானது அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவையாக நியமிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புக்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

**2.5.1.5.2 கடன்தீர் செலவில் நிதியியல் பொறுப்புகள்**

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்படாத தொகுதியினால் விநியோகிக்கப்பட்ட நிதியியல் சாதனங்களானவை பொருத்தமானவாறு 'வங்கிக்கு செலுத்தவேண்டியவை', 'ஏனைய வாடிக்கையாளருக்கு செலுத்த வேண்டியவை' மற்றும் 'படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு கிடைக்கவேண்டியவை' 'ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்த வேண்டியவை' அல்லது 'விநியோகிக்கப்பட்ட படுகடன் பிணையங்கள்' ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன, இங்கு ஒப்பந்த உடன்படிக்கையின் நோக்கமானது வைத்திருப்பவருக்கு காசுத் தொகையினை அல்லது வேறு நிதியியல் சொத்தினை ஒப்படைப்பதற்கான கடப்பாட்டினை அல்லது நிலையான காசுத் தொகை ஒன்றின் பரிமாற்றம் அல்லது சொந்த பங்குமூலதன பங்குகளில் நிலையான எண்ணிக்கை ஒன்றிற்கான வேறு நிதியியல் சொத்து மூலமானவை தவிர கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான கடமைப்பாடு ஒன்றினை தொகுதி கொண்டுள்ள பெறுபேறுகளைத் தோற்றுவிக்கும். சாதனத்தின் ஒப்பந்த நியதிகளின் நோக்கத்திற்கு அமைவாக தொகுதியானது மூலதனச் சாதனங்களை நிதியியல் பொறுப்புகளாக அல்லது பங்குமூலதன சாதனங்களாக வகைப்படுத்துகின்றது.

ஆரம்ப இனங்காணலின் பின்னர் அத்தகைய நிதியியல் பொறுப்புகள் விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி கடன்தீர் செலவில் அதனைத்தொடர்ந்து அளவிடப்பட்டுள்ளன. கடன்தீர் செலவானது கையேற்றலின் ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் மற்றும் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றாக காணப்படுகின்ற ஏதேனும் கட்டணங்கள் அல்லது செலவுகளைக் கருத்திற் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது.

விளைவு வட்டி வீத கடன் தீர்த்தலானது வருமானக் கூற்றில் 'வட்டிச் செலவுகளில்' உள்ளடக்கப்பட்டுள்ளது. பொறுப்புக்கள் அடையாளப்படுத்தப்படாமையின்போதும் அதே போன்று விளைவு வட்டி வீத கடன் தீர்த்தல் செயன்முறை ஊடாகவும் இலாபங்களும் நட்டங்களும் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளன.

**(அ) வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை**

'வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை' பற்றிய விபரங்கள் 213 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 32 இல் தரப்பட்டுள்ளன.

**(ஆ) வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை**

'வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை' பற்றிய விபரங்கள் 214 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன.

**(இ) படுகடன் பிணையங்கள் வைத்திருப்போருக்கு செலுத்தவேண்டியவை**

'படுகடன் பிணையங்கள் வைத்திருப்போருக்கு செலுத்தவேண்டியவை' பற்றிய விபரங்கள் 214 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன.

**(ஈ) ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்த வேண்டியவை**

'ஏனைய கடன் பெறுநர்களுக்கு செலுத்த வேண்டியவை' பற்றிய விபரங்கள் 214 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 35 இல் தரப்பட்டுள்ளன.

**(உ) வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்**

'வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள்' பற்றிய விபரங்கள் 216 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 37 இல் தரப்பட்டுள்ளன.

### 2.5.1.6 பெறுதி சொத்துகளும் பொறுப்புகளும்

பெறுதி சொத்துகளும் பொறுப்புகளும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்ட பெறுதிகளாகவும் இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கப்படும் பெறுதிகளாகவும் பரந்த அளவில் வகைப்படுத்தப்படுகின்றன.

**2.5.1.6.1 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவுசெய்யப்பட்ட பெறுதி**

பெறுதி என்பது பின்வரும் அனைத்து 03 பண்புகளுடனும் கூடிய நிதியியல் சாதனம் ஒன்றாகும் அல்லது வேறு ஒப்பந்தமாகும்:

- குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதம், நிதியியல் சாதன விலை, வணிகப்பொருள் விலை, வெளிநாட்டுச் செலாவணி வீதம், விலைச் சுட்டெண்கள் அல்லது வீதங்கள், கடன் தரப்படுத்தல் அல்லது கொடுகடன் சுட்டெண் அல்லது ஏனைய மாறிலிகள் ஒன்றில் மாற்றத்திற்கு பதிலிறுத்துவதில் அதன் பெறுமதி மாற்றமடைகின்றது, எது எவ்வாறிருப்பினும் நிதியல்லாத மாறிலியொன்றின் விடயத்தில் ஒப்பந்தத்திற்கான தரப்பினர் ஒருவருக்கு இது பிரத்தியேகமானதாக(அதாவது "ஏதுவாகின்றதாக") காணப்படுவதில்லை
- இது ஆரம்ப தேறிய முதலீட்டினையோ அல்லது சந்தைக் காரணிகளின் மாற்றங்களுக்கு ஒரே மாதிரியான பதிலிறுத்தலினை கொண்டிருப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வேறு வகையான ஒப்பந்தத்திற்கு தேவைப்படுத்தக்கூடியதனை விட சிறிய ஆரம்ப தேறிய முதலீடொன்றினை தேவைப்படுத்தாது.
- இது எதிர்காலத் திகதியொன்றில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றது.

வங்கியானது பல்வேறு இணைத்தரப்பினர்களுடன் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்றது. இவை, வட்டி வீத பரஸ்பர பரிமாற்றல் ஒப்பந்தங்கள், கொடுகடன் தவணை தவறுதல் பரஸ்பரபரிமாற்றல்கள், குறுக்கு நாணய பரஸ்பரபரிமாற்றல் ஒப்பந்தங்கள், முன்னோக்கிய வெளிநாட்டுச் செலாவணி ஒப்பந்தங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. பெறுதிகள், சீர்மதிப்புப் பெறுமதியில் பதிவு செய்யப்பட்டு அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதி சாதகமாகவுள்ள போது சொத்துகளாகவும் அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதி எதிர்மறையாக உள்ள போது பொறுப்புகளாவும் கொண்டு செல்லப்படுகின்றன. அத்தகைய பெறுதிகளின் உத்தேச தொகையும் சீர்மதிப்புப் தொகையும் குறிப்பு 19 இல் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளன. பெறுதிகளின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள், காப்பு கணக்கீடு பிரயோகிக்கப்படாதவிடத்து தேறிய வர்த்தக வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றன. காப்பு கணக்கீடு வெளிப்படுத்தல்கள், 178 - 179ஆம் பக்கங்களில் குறிப்பு இல. 19 இல் தரப்பட்டுள்ளன.

**2.5.1.6.2 இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காகவும் காப்பு கணக்கீட்டுக்காவும் வைத்திருக்கப்படும் பெறுதி**

இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைத்திருக்கும் பெறுதிகளானவை, வர்த்தகப்படுத்தல் சொத்துகள் மற்றும் பொறுப்புகளாக வகைப்படுத்தப்படாத அனைத்து பெறுதி சொத்துகள் மற்றும் பொறுப்புகளை உள்ளடக்குகின்றன. இடர்நேர்வு முகாமைத்துவ நோக்கங்களுக்காக வைக்கப்பட்ட பெறுதிகள் நிதி நிலைமைக் கூற்றில் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகினறன.

**2.5.1.6.2.1 சீர்மதிப்புப் பெறுமதிக் காப்புகள்**

இனங்காணப்பட்ட சொத்தொன்றின் அல்லது பொறுப்பொன்றின் அல்லது இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிக்கக்கூடியதான நிறுவனத்தின் கடமைபொறுப்பொன்றின் சீர்மதிப்புப் பெறுமதியின் மாற்றத்தின் காப்பொன்றில் காப்பிடுகின்ற சாதனமாக பெறுதியொன்று நியமிக்கப்படுகின்ற போது, பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்கள் காப்பிடப்பட்ட இடர்நேர்விற்கு சாட்டத்தக்கதாகவுள்ள காப்பிடப்பட்ட விடயமாக அதே நிரல் விடயத்தில் இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றன.

காப்பிடப்படுகின்ற பெறுதி காலாவதியடையுமெனில் அல்லது விற்பனை செய்யப்படுமாயின், முடிவுறுத்த அல்லது பிரயோகிக்கப்படுமாயின், அல்லது பெறுதியானது சீர்மதிப்புப் பெறுமதி காப்புக் கணக்கீட்டிற்கான மூலப்பிரமாணத்தினை இனிமேலும் நிறைவு செய்யாதிருக்குமாயின், அல்லது காப்பு நியமனம் இரத்துச் செய்யப்படுமாயின், காப்புக் கணக்கீடானது எதிர்பார்ப்புடன் தொடர்ச்சியாக கொண்டு செல்லப்படாது. எனினும், பெறுதியினை மாற்றீடுசெய்வதற்கு அவசியமானவை தவிர அதன் நியதிகளில் மாற்றமின்றி சட்டங்களின் அல்லது ஒழுங்குவிதிகளின் விளைபயனாக இரண்டு தரப்பினர்களாலும் மத்திய இணை தரப்பினர் ஒருவருக்கு மாற்றீடுமாயின், அப்போது பெறுதியானது காலாவதியடைந்ததாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாக கருதப்படாது.

விளைவு வட்டி வீத முறை பயன்படுத்தப்படும் காப்பிடப்பட்ட வகையொன்றிற்கான தொடர் செயற்பாடு நிறுத்தப்படும் நிலை வரையிலான ஏதேனும் சரிப்படுத்தலானது அதன் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீது வகையின் மீள் கணிக்கப்பட்ட விளைவு வட்டி வீத பாகமொன்றாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மதிப்பு குறைக்கப்படுகின்றது.

**2.5.1.6.2.2 காசுப் பாய்ச்சல் காப்புகள்**

இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிக்கக்கூடிய இனங்காணப்பட்ட சொத்து அல்லது பொறுப்பொன்றுடன் இணையப்பெற்ற குறித்த இடர்நேர்வொன்றிற்கு சாட்டத்தக்க காசுப் பாய்ச்சல்களில் மாறுபடும்தன்மையுடைய காப்பொன்றில் காப்பிடும் சாதனமாக பெறுதியொன்று நியமிக்கப்படுகின்ற போது, பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்களில் விளைவுமிக்க பாகமானது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுவதுடன் பங்குமூலதனத்தினுள் காப்பிடுகின்ற ஒதுக்கில் எடுத்துரைக்கப்படுகின்றது.

பெறுதியின் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள மாற்றங்களின் விளைவற்ற பாகமானது இலாபம் அல்லது நட்டத்தில் உடனடியாக இனங்காணப்படுகின்றது

காப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல்கள், இலாபத்தினை அல்லது நட்டத்தினை பாதிப்பதனால் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட தொகையானது அதே காலப்பகுதியின் மீள்வகைப்படுத்தல் சரிப்படுத்தலாக இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மற்றும் இலாபம் அல்லது நட்ட அத்துடன் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூறறில் அதே மாதிரியான நிரல் வகையிலும் மீள்வகைப்படுத்தப்படுகின்றது.

காப்பிடப்படுகின்ற பெறுதி காலாவதியடைய்-மெனில் அல்லது விற்பனை செய்யப்படு-மாயின், முடிவுறுத்த அல்லது பிரயோகிக்கப்-படுமாயின், அல்லது பெறுதியானது சீர்மதிப்புப் பெறுமதி காப்புக் கணக்கீட்டிற்கான மூலப்பிரமாணத்தினை இனிமேலும் நிறைவு செய்யாதிருக்குமாயின், அல்லது காப்பு நியமனம் இரத்துச் செய்யப்படுமாயின், காப்புக் கணக்கீடானது எதிர்பார்ப்புடன் தொடர்ச்சியாக கொண்டு செல்லப்படாது. எனினும், பெறுதியினை மாற்றிடுசெய்வதற்கு அவசியமானவை தவிர அதன் நியதிகளில் மாற்றமின்றி சட்டங்களின் அல்லது ஒழுங்கு-விதிகளின் விளைபயனாக இரண்டு தரப்பினர்-களாலும் மத்திய இணை தரப்பினர் ஒருவருக்கு மாற்றீடுமாயின், அப்போது பெறுதியானது காலாவதியடைந்ததாக அல்லது முடிவுறுத்தப்பட்டதாக கருதப்படாது. தொகுதியானது அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறு ஏதேனும் காசுப்பய்ச்சல் காப்பினைக் கொண்டிருக்கவில்லை.

#### 2.5.1.6.3 உட்பொதிந்த பெறுதிகள்

உட்பொதிந்த பெறுதி என்பது தனிப் பிரிவு பெறுதியொன்றுக்கு ஒத்த வகையில் ஒன்றிணைந்த சாதனத்தின் காசுப் பாய்ச்சல்களில் சில மாறுபடுகின்ற தாக்கத்துடன்கூடிய பெறுதியற்ற இணைந்த ஒப்பந்தமொன்றினையும் உள்ளடக்குகின்ற கலப்பு சாதனமொன்றின் கூறொன்றாகும். உட்பொதிந்த பெறுதியானது குறித்துரைக்கப்பட்ட வட்டி வீதம், நிதியியல் சாதன விலை, வணிகப் பொருள் விலை, வெளிநாட்டுச் செலாவணி வீதம், விலைகள் சுட்டெண்கள் அல்லது வீதங்கள், கடன் தரப்படுத்தல் அல்லது கொடுகடன் சுட்டெண் அல்லது ஏனைய மாறிலிகள் போன்ற ஒன்றிற்கு அமைவாக திருத்தப்படுவதற்கு ஒப்பந்தத்தினால் வேறு வகையில் வேண்டப்படுகின்ற சில அல்லது அனைத்து காசுப் பாய்ச்சல்களையும் ஏற்படுத்துகின்றது, எது எவ்வாறிருப்பினும் நிதியல்லாத மாறிலியொன்றின் விடயத்தில் ஒப்பந்தம் ஒன்றிற்கான தரப்பினர் ஒருவருக்கு பிரத்தியேகமானதாக காணப்படுவதில்லை. நிதியியல் சாதனத்திற்கு இணைக்கப்பட்டுள்ள ஆனால் அச்சாதனத்தின் சுயாதீனமாக ஒப்பந்தரீதியாக கைமாற்றத்தக்க அல்லது அச்சாதனத்திலிருந்த வேறுபட்ட இணைத்தரப்பினர் ஒருவரை கொண்டுள்ள பெறுதியானது உட்பொதிந்த பெறுதியொன்றல்ல ஆயினும் அது வேறான நிதியியல் சாதனமொன்றாகும்.

இநிஅறி 09 இற்கு அமைவாக வேறொரு ஒப்பந்த ஒழுங்கில் பெறுதிகள் உட்பொதிந்து இருக்கலாம் (இணைந்த ஒப்பந்தம்). தொகுதியானது நிதியியல் பொறுப்புகளில் மற்றும் நிதியல்லாத இணைந்த ஒப்பந்தங்களில் உட்பொதிந்தள்ள பெறுதிகளை அவை பின்வருமாறு இருப்பின் தனியான பெறுதிகாளாக கொள்கின்றது:

- இணைந்த ஒப்பந்தமானது இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் சுயமாகக் கொண்டு செல்லப்படவில்லை அத்துடன்
- உட்பொதிந்த பெறுதியின் நியதிகள் தனியான ஒப்பந்தமொன்றில் உள்ளடக்கப்பட்டிருப்பின் அவை பெறுதியொன்று பற்றிய வரைவிலக்-கணத்தினை நிறைவுசெய்யும் அத்துடன்
- உட்பொதிந்த பெறுதியின் பொருளாதார பண்புகளும் இடர்நேர்வுகளும் இணைந்த ஒப்பந்தத்தின் பொருளாதார பண்புகளுக்கும் இடர்நேர்வுகளுக்கும் நெருங்கிய தொடர்பற்றவை

அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு தொகுதியினது உட்பொதிந்த பெறுதிகளை கொண்டிருக்கவில்லை.

### 2.5.1.7 நிதியியல் சொத்துகளையும் பொறுப்புகளையும் மீள் வகைப்படுத்தல்

இநிஅறி 09 இற்கு அமைவாக தொழில் நடவடிக்கையொன்றினை கையேற்றல், கையுதிர்த்தல் அல்லது முடிவுறுத்தலினை உள்ளடக்கக்கூடிய அத்தகைய நிதியியல் சொத்துகளை முகாமைசெய்வதற்கான அதன் தொழில் மாதிரியின் குறிக்கோளினை தொகுதி மாற்றுகின்ற போதான அத்தகைய அரிதான சூழ்நிலைகள் மாத்திரம் தவிர நிதியியல் சொத்துகளை அவற்றின் ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து மீள்வகைப்படுத்தப்படுவதில்லை.

இநிஅறி 09 இனால் அத்தகைய மீள்வகைப்-படுத்தல் அனுமதிக்கப்படாமையினால் நிதியியல் பொறுப்புகள் மீள்வகைப்படுத்தப்படவில்லை.

#### 2.5.1.7.1 நிதியியல் சொத்துகளின் மீள்வகைப்படுத்தல் அளவீடு

#### 2.5.1.7.1.1 "இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி" இல் நிதியியல் சாதனங்களை மீள்வகைப்படுத்தல்

- **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**

மீள்வகைப்படுத்தல் திகதி மீதான சீர்மதிப்புப் பெறுமதி புதிய மொத்த கொண்டு செல்லும் தொகையாக வருகின்றது. விளைவு வட்டி வீதமானது புதிய கொண்டு செல்லும் தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது. சீர்மதிப்புப் பெறுதியில் தொடர்ந்து வரும் மாற்றங்கள் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

- **கடன்தீர் செலவிற்கு**

மீள்வகைப்படுத்தல் திகதி மீதான சீர்மதிப்புப் பெறுமதி புதிய கொண்டு செல்லும் தொகையாக வருகின்றது. விளைவு வட்டி வீதமானது புதிய மொத்த கொண்டு செல்லும் தொகையின் அடிப்படையில் கணிப்பிடப்படுகின்றது.

#### 2.5.1.7.1.2 "ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி" இல் நிதியியல் சாதனங்களை மீள்வகைப்படுத்தல்

- **இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ள ஒன்று திரண்ட மீதி, மீள்வகைப்படுத்தல் திகதியன்று இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படுகின்றது.

- **கடன்தீர் செலவிற்கு**

நிதியியல் சொத்து சீர்மதிப்புப் பெறுமதியில் மீள்வகைப்படுத்தப்படுகின்றது. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் உள்ள ஒன்றுதிரண்ட மீதி அகற்றப்படுவதுடன், மீள்வகைப்படுத்தல் திகதியன்று சீர்மதிப்புப் பெறுமதியினை சீர்செய்யப் பயன்படுகின்றது. சீர்செய்யப்பட்ட தொகை கடன்தீர் செலவாகின்றது.

ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கப்பட்ட விளைவு வட்டி வீதம் மற்றும் மொத்த கொண்டு செல்லும் தொகை என்பன மீள் வகைப்படுத்திலின் பயனாக சரி செய்யப்படுவதில்லை.

#### 2.5.1.7.1.3 "கடன்தீர் செலவு" இல் நிதியியல் சாதனங்களை மீள் வகைப்படுத்தல்

- **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஏதேனும் வேறுபாட்டுடன் சீர்மதிப்புப் பெறுமதிக்கு சொத்து மீள் அளவிடப்படகின்றது. ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கப்பட்ட விளைவு வட்டி வீதமானது மீள் வகைப்படுத்திலின் பயனாக சரி செய்யப்படுவதில்லை.

- **இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதிக்கு**

மீள்வகைப்படுத்தல் திகதியன்றுள்ள சீர்மதிப்புப் பெறுமதி புதிய கொண்டு செல்லும் தொகையாகின்றது. கடன்தீர் செலவு மற்றும் சீர்மதிப்புப் பெறுமதி என்பவற்றிக்கிடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

அறிக்கையிடும் திகதிக்கு வங்கியும் தொகுதியும் ஏதேனும் நிதியியல் சாதன மீள் வகைப்படுத்தலை கொண்டிருக்கவில்லை.

### 2.5.1.8 நிதியியல் சொத்துகளையும் நிதியியல் பொறுப்புகளையும் இனங்காணமை

#### 2.5.1.8.1 நிதியியல் சொத்துகள்

நிதியியல் சொத்துகளிலிருந்து காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியாகின்றபோது பெற்றுக் கொள்வதற்கான உரிமை முடிவடையும்போது அல்லது நிதியியல் சொத்தின் சொத்தாண்மையின் அனைத்து இடர்நேர்வுகளும் கைமாறுகளும் கணிசமாக கைமாற்றப்படுகின்ற அல்லது தொகுதியானது நிதியியல் சொத்தின் ஒன்றில் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறுகளையும் கைமாற்றாது அன்றில் கணிசமாக தக்க வைக்காது அத்துடன் கட்டுப்பாட்டினை தக்கவைக்காதுள்ள போது நிதிச் சொத்து ஒன்றினை (அல்லது இயைபானவிடத்து நிதிச் சொத்தொன்றின் பாகமொன்றினை) தொகுதி இனங்காணாது.

நிதியியல் சொத்தொன்று இனங்காணப்-படாதபோது சொத்து கொண்டுசெல்கின்ற தொகைக்கும் (அல்லது இனங்காணப்படாத சொத்தின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள கொண்டுசெல்லும் தொகை) மற்றும் கிடைக்கப்பெற்ற விலை ஈடுத் தொகை (பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் புதிய சொத்தினை கழித்து மற்றும் ஊகிக்கப்பட்ட புதிய பொறுப்பு உள்ளடங்களாக) மற்றும் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டிருந்த

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

ஏதேனும் ஒன்றுதிரட்டிய இலாபம் அல்லது நட்டம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடானது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

எனினும், ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளவாறு நியமிக்கப்பட்ட பங்குமூலதன முதலீட்டுப் பிணையங்கள் தொடர்பில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஒன்றுதிரண்ட இலாபம்/நட்டம், இநிஅறி 09 இற்கு அமைய அத்தகைய பிணையங்களின் இனங்காணாமையின் மீது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுவதில்லை. தொகுதியினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்டதாகவுள்ள இனங்காணாமைக்கு தகுதிபெறுகின்ற கைமாற்றல்செய்யப்பட்ட நிதியியல் சொத்துகளில் உள்ள ஏதேனும் நலன் வேறான சொத்தாக அல்லது பொறுப்பாக இனங்காணப்பட்டுள்ளது.

தொகுதி கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்கின்றது. இதன் ஊடாக அதன் நிதியியல் நிலைக்கூற்றின் மீது இனங்காணப்பட்ட சொத்துகளை கைமாற்றல்செய்கின்றது. ஆனால் கைமாற்றல்செய்யப்பட்ட சொத்துகளின் அல்லது அவற்றின் பாகமொன்றின் இடர்நேர்வுகள் மற்றும் கைமாறுகள் அனைத்தையுமோ அல்லது கணிசமானவற்றையோ தக்கவைக்கின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில், கைமாற்றல்செய்யப்பட்ட சொத்துகள் இனங்காணப்படாது இருப்பதில்லை.

சொத்தொன்றிலிருந்தான காசுப் பாய்ச்சலினை பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமையினை தொகுதியானது கைமாற்றி அல்லது கடந்து செல்லல் ஒழுங்கொன்றை மேற்கொண்டு அத்துடன் கணிசமாக சொத்தின் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறுகளையும் கைமாற்றாது அன்றில் தக்கவைக்காது அன்றில் சொத்தின் கட்டுப்பாட்டினை கைமாற்றல்செய்யாதிருக்கும்போது, சொத்தில் குழுமத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு உள்ளதென்ற ரீதியில் சொத்தானது இனங்காணப்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் தொகுதி இனங்காணுகின்றது. கைமாற்றல்செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் தொகுதி தக்கவைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

#### 2.5.1.8.2 நிதியியல் பொறுப்புக்கள்

தொகுதியின் ஒப்பந்தக் கடப்பாடுகள் நிறைவேற்றப்படுகின்ற போது, இரத்துச் செய்யப்படுகின்ற போது அல்லது காலாவதியடைகின்ற போது நிதியியல் பொறுப்பொன்றினை அது இனங்காணாது

### 2.5.1.9 நிதியியல் சொத்துகளினதும் நிதியியல் பொறுப்புகளினதும் திருத்தியமைத்தல்

#### 2.5.1.9.1 நிதியியல் சொத்துகள்

நிதியியல் சொத்தின் நியதிகள் திருத்தம் செய்யப்படுமாயின் திருத்தம் செய்யப்பட்ட சொத்தின் காசுப் பாய்ச்சல் கணிசமாக வேறுபடுகின்றதா என்பதை தொகுதி மதிப்பிடுகின்றது. காசுப் பாய்ச்சல்கள் கணிசமானளவில் வேறுபடுமாயின் மூல நிதியியல் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சலுக்கான ஒப்பந்த உரிமைகள் காலாவதியடைந்துள்ளதாக கருதப்படுகின்றது. இவ்விடயத்தில் மூல நிதியியல் சொத்து இனங்காணப்படுவதில்லை என்பதுடன் புதிய நிதியியல் சொத்தொன்று சீர்மதிப்புப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றது

இநிஅறி 09 இன் பிரகாரம், கடன்தீர் செலவில் கொண்டுசெல்லப்படும் திருத்தியமைக்கப்பட்ட சொத்தின் காசுப் பாய்ச்சல் கணிசமாக வேறுபடாவிடின், திருத்தியமைத்தலானது நிதியியல் சொத்தின் இனங்காணாமையினை விளைவிக்காது. இவ்விடயத்தில், தொகுதியானது நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் தொகையினை மீள் கணிப்பீடு செய்வதுடன், மொத்த கொண்டுசெல்லும் தொகையினை சீர்செய்வதிலிருந்து தோன்றுகின்ற தொகையினை இலாபம் அல்லது நட்டத்தில் திருத்தியமைத்தல் இலாபம் அல்லது நட்டம் ஒன்றாக இனங்காண்கின்றது. கடன்பெறுநரின் நிதியியல் கஷ்டநிலை காரணமாக அத்தகைய திருத்தியமைத்தல் மேற்கொள்ளப்படுமாயின், அப்போது இலாபம் அல்லது நட்டம் சேதஇழப்பு நட்டத்துடன் சேர்த்து எடுத்துரைக்கப்படுகின்றது. ஏனைய சந்தர்ப்பங்களில் இது வட்டி வருமானமாக எடுத்துரைக்கப்படுகின்றது.

#### 2.5.1.9.2 நிதியியல் பொறுப்புகள்

ஏற்கனவே காணப்படும் நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளின் அடிப்படையில் அதே கடன் வழங்குநரிடமிருந்து வேறொரு பொறுப்பின் மூலம் மாற்றீடு செய்யப்படுகின்றவிடத்து அல்லது ஏற்கனவே உள்ள நிதியியல் பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமாக திருத்தியமைக்கப்படுமிடத்து, அத்தகைய பரிமாற்றம் அல்லது திருத்தியமைத்தல் மூலப் பொறுப்பின் இனங்காணாமை ஒன்றாக கொள்ளப்படுவதுடன் புதிய பொறுப்பொன்று இனங்காணப்படுகின்றது. இவ்விடயத்தில், திருத்தியமைக்கப்பட்ட நியதிகளின் அடிப்படையிலமைந்த புதிய நிதியியல் பொறுப்பானது சீர்மதிப்புப் பெறுமதியில் இனங்காணப்படுகின்றது. முடிவுறுத்தப்பட்ட நிதியியல் பொறுப்பின் கொண்டு செல்லும் தொகைக்கும் திருத்தியமைக்கப்பட்ட நியதிகளுடனான புதிய நிதியியல் பொறுப்புக்கும் இடையிலான வேறுபாடு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது.

### 2.5.1.10 நிதியியல் சாதனங்களை எதிரீடு செய்தல்

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடு செய்வதற்கு சட்ட ரீதியாக அமுலாக்கத்தக்க உரிமையொன்று காணப்படுகின்ற போது மாத்திரம் அத்துடன் சமகாலத்தில் சொத்துகளை தேறிய அடிப்படையொன்றில் தீர்ப்பனவு செய்து அல்லது தேறல் செய்து அத்துடன் பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு உத்தேசமொன்று காணப்படுகின்றபோது நிதியியல் சொத்துகளும் நிதியியல் பொறுப்புகளும் எதிரீடுசெய்யப்பட்டு தேறிய தொகை நிதியியல் நிலைக்கூற்றில் அறிக்கையிடப்படுகின்றன.

### 2.5.1.11 கடன்தீர் செலவும் மொத்த கொண்டு செல்லும் தொகையும்

நிதியியல் சொத்தொன்றின் அல்லது நிதியியல் பொறுப்பொன்றின் "கடன்தீர் செலவு" என்பது நிதியியல் சொத்து அல்லது நிதியியல் பொறுப்பு ஆரம்ப இனங்காணலில் அளவிடப்பட்டு, முதன்மை மீள்கொடுப்பனவுகளைக் கழித்து, ஆரம்ப தொகைக்கும் முதிர்வுத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாட்டின் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி திரண்ட கடன்தீர்தொகையினை கூட்டி அல்லது கழித்து, அத்துடன் நிதியியல் சொத்துகளுக்காக ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டினை சீர்செய்த தொகையாகும்.

"நிதியியல் சொத்தொன்றின் மொத்த கொண்டு செல்லும் தொகை" என்பது ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டுக்கான சரிப்படுத்தலுக்கு முன்னர் நிதியியல் சொத்தொன்றின் கடன்தீர் செலவாகும்.

### 2.5.1.12 நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி

நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதி அளவீடானது சீர்மதிப்புப் பெறுமதி படிநிலை உள்ளடங்கலாக 147 மற்றும் 277 ஆம் பக்கங்களில் குறிப்பு இலக்கம் 2.3 மற்றும் 56 இல் விவரிக்கப்பட்டுள்ளது.

## 2.5.2 நிதியியல் சொத்துகளின் சேதஇழப்பு

### 2.5.2.1 தனிப்பட்ட சேதஇழப்பு மதிப்பீடு

முன்னர் நிர்ணயிக்கப்பட்ட அடிப்படை அளவொன்றிற்கு மேல் நிதியியல் சொத்துகளுக்காக (அதாவது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவம் மிக்க நிதியியல் சொத்துகள்), சேதஇழப்பு நட்டமொன்று ஏற்பட்டிருந்தது என்ற புறநிலை சான்று காணப்படுமாயின், இழப்புத் தொகையானது சொத்து கொண்டு செல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்கும் (ஏற்பட்டிருக்காத எதிர்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு நீங்கலாக) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது.

பிணைய உறுதியாக்கப்பட்ட நிதியியல் சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக் கணிப்பானது மீட்புரிமைத்தடை நிகழத்தக்கதோ இல்லையோ, பிணைய உறுதியினை பெற்றுக்கொண்டு விற்பனை செய்வதற்கான மீட்புரிமைத்தடை செலவுகளை கழிப்பதிலிருந்து தோன்றக்கூடிய காசுப் பாய்ச்சல்களை பிரதிபலிக்கின்றது. தனிப்பட்ட சேதஇழப்பு மதிப்பீடு பற்றிய விபரங்கள் 185 ஆம் பக்கத்தில் குறிப்பு இலக்கம் 21 (ஈ) இல் தரப்பட்டுள்ளது.

### 2.5.2.2 தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமிக்க மதிப்பீடும் தனிப்பட்ட ரீதியாக சேதம்இழக்காதவையும்

தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமிக்க ஆனால் சேதமிழக்காத கடன்களானவை தோற்றம்பெற்றதிலிருந்து முக்கிய கொடுகடன் சீர்குலைவு காணப்படுகின்றதா என்ற மூலப்பிரமாணத்தின் அடிப்படையில் படிமுறை 1 அல்லது படிமுறை 2 இல் ஏதாவது ஒன்றின் கீழ் சேதஇழப்பிற்காக கூட்டாக மதிப்பிடப்படும்.

முக்கிய கொடுகடன் சீர்குலைவினை நிறுவுகின்ற அதேவேளை வங்கி பின்வரும் மூலப்பிரமாணங்களை பரிசீலனையில் கொள்ளும்:

- சாதனம் புதிதாக தோற்றுவிக்கப்படுமாயின் கணிசமாக வேறுபடக்கூடிய ஏற்கனவே உள்ள நிதியியல் சாதனம் ஒன்றின் வீதங்களில் அல்லது நியதிகளில் காணப்படும் ஏனைய மாற்றங்கள்
- குறித்த நிதியியல் சாதனம் ஒன்றிற்கான அல்லது அதே மாதிரியான நிதியியல் சாதனத்திற்கான கொடுகடன் இடர்நேர்வு தொடர்பான வெளிவாரி சந்தை குறிகாட்டிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள்
- கடன்பெறுநரின் படுகடன்/பங்குமூலதன சாதனங்களின் விலையில் காணப்படும் மாற்றங்கள் போன்ற கடன்பெறுநருடன் தொடர்புடைய ஏனைய தகவல்கள்
- கடன் பெறுநருக்கான உண்மையான/ எதிர்பார்க்கப்பட்ட உள்ளக கடன் தரப்படுத்தல், தரம் குறைப்பு அல்லது கொடுகடன் இடர்நேர்வு மதிப்பீட்டிற்கு உள்ளக ரீதியாக பயன்படுத்தப்படும் நடத்தை புள்ளிகளில் குறைவு
- கடன்பெறுநர் அதன் கடன்பாட்டினை நிறைவுசெய்வதற்கான இயலுமையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொழில், நிதியியல் அல்லது பொருளாதார நிலைமையில் தற்போதுள்ள அல்லது எதிர்வுகூறப்படும் பாதகமான மாற்றங்கள்
- வருவாயில் உண்மையான/எதிர்பார்க்கப்பட்ட வீழ்ச்சி, தொழிற்படுத்தல் இடர்நேர்வில் அதிகரிப்பு, பணியாற்று மூலதனப் பற்றாக்குறை, சொத்து தரத்தில் குறைவு, சொத்து விகிதாசாரத்தில் அதிகரிப்பு, திரவத்தன்மை முகாமைத்துவ பிரச்சினைகள் போன்றவற்றில் தொடர்பில் கடன்பெறுநரின் தொழிற்படுத்தல் பெறுபேறுகளின் உண்மையான அல்லது எதிர்பார்க்கப்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம்
- அதே கடன்பெறுநரின் வேறு நிதியியல் சாதனங்கள் மீதான கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு
- கடன்பெறுநரின் படுகடன் கடப்பாட்டினை நிறைவேற்றுவதற்கான இயலுமையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை விளைவிக்கும் கடன்பெறுநர் ஒழுங்குமுறைப்படுத்தல், பொருளாதார, தொழில்நுட்பவியல் சூழலில் உண்மையாக அல்லது எதிர்பார்க்கப்பட்ட பாதகமான மாற்றம்.

### 2.5.2.3 எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கோட்பாடுகள் பற்றிய பொதுநோக்கு

இநிஅறி 9ஐப் பின்பற்றுகின்றமை, இகநி 39 இன் முன்னோக்கி எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு அணுகுமுறையுடன் இணைந்த ஏற்பட்ட இழப்பு அணுகுமுறையினை மாற்றீடு செய்வதன் மூலம் வங்கியின் கடன் இழப்பு சேதஇழப்பு முறையினை அடிப்படையாக மாற்றுகின்றது. 2018 சனவரி 1 தொடக்கம், "நிதியியல் சாதனங்கள்" ஆக இப் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் மற்றும் நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்களுடன் சேர்த்து இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் வைத்திருக்கப்படாத அனைத்து கடன்களுக்கும் ஏனைய படுகடன் நிதியியில் சொத்துகளுக்கும் வங்கி, கடன் எதிரபார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளுக்காக ஒதுக்கீடொன்றினை பதிவுசெய்து வருகின்றது. பங்குமூலதன சாதனங்கள் இநிஅறி 9 இன் கீழ் சேதமிழப்பிற்கு உட்படுத்தப்படுவதில்லை.

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு என்பது தோற்றம் பெற்றதிலிருந்து கடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு எதுவும் இல்லாதவிடத்து, சொத்தின் ஆயுட்காலத்தின் மீது தோன்றுவதற்கு (ஆயுட்காலம் எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு) எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை அடிப்படையாக கொண்டிருக்கும் அத்தகைய சந்தர்ப்பங்களில் இழப்பு ஒதுக்கீடு, 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பாகவிருக்கும். கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றுள்ளதா என்பதனை நிர்ணயிப்பதற்கான வங்கியின் கொள்கைகள் 31 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.2.7 இல் எடுத்துரைக்கப்படுகின்றன.

12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு என்பது ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் பாகமொன்றாகும் இது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் 12 மாத காலங்களினுள் சாத்தியமானதாக காணப்படுகின்ற நிதியியல் சாதனமொன்றின் தவணை தவறுதல் நிகழ்வுகளில் இருந்து விளைகின்ற எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை விவரிகின்றது. ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு மற்றும் 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பு இரண்டும் ஏதுவாகின்ற நிதியியல் சாதனங்களின் சொத்துப்பட்டியல் தன்மையைச் சார்ந்து தனிப்பட்ட அடிப்படையிலோ அல்லது கூட்டான அடிப்படையிலோ கணிக்கப்படுகின்றன.

நிதியியல் சாதனத்தின் எஞ்சியுள்ள ஆயுட்காலத்தின் மீது நிகழுகின்ற தவணை தவறுதல் இடர்நேர்வில் காணப்படும் மாற்றத்தினை கருத்திற்கொள்வதன் மூலம் நிதியியல் சாதனமொன்றின் கடன் இடர்நேர்வானது ஆரம்ப இனங்காணலில் இருந்து குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளதா என்பதற்கு ஒவ்வொரு அறிக்கையிடும் காலத்தின் இறுதியிலும் கணிப்பீடொன்றினை செயலாற்றுவதற்கு வங்கி கொள்கையொன்றினை நிறுவியுள்ளது.

அத்தகைய செயன்முறையொன்றின் அடிப்படையில் வங்கி அதன் கடன்களை கீழே விவரிக்கப்பட்டவாறு படிமுறை 1, படிமுறை 2, படிமுறை 3 ஆக வகைப்படுத்தியுள்ளது.

**படிமுறை 01**

- கடன்கள் முதலாவது இனங்காணப்படுகின்ற-போது, வங்கியானது 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பின் அடிப்படையில் ஒதுக்கீடொன்றினை இனங்காண்கின்றது. கொடுகடன் இடர்நேர்வு மேம்பட்டுள்ள வசதிகளையும் படிமுறை 2 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களையும் படிமுறை 1 உள்ளடக்குகின்றது.

**படிமுறை 02**

- கடனொன்று தோற்றம்பெற்றது முதல் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைக் காண்பித்துள்ளபோது, ஆயுட்கால எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கான ஒதுக்கீடொன்றினை வங்கி பதிவு செய்கின்றது. கொடுகடன் இடர்நேர்வு மேம்பட்டுள்ள வசதிகளையும் படிமுறை 3 இலிருந்து மீள்வகைப்படுத்தப்பட்டுள்ள கடன்களையும் படிமுறை 2 உள்ளடக்குகின்றது.
- வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்த கொடுப்பனவுகளானவை கீழே படிமுறை 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்ட கொடுகடன் வசதிகள் தவிர 30 நாட்களுக்கு மேற்பட்ட கடந்த கால நிலுவையாக காணப்படுகின்றவிடத்து கொடுகடன் வசதிகள் இநிஅறி 9 இல் குறிப்பிடப்பட்டவாறு தள்ளுபடிசெய்யத்தக்க அனுமானத்திற்கு உட்படுகின்றது.

**படிமுறை 03**

- இநிஅறி 9 இல் குறிப்பிடப்பட்டவாறு தள்ளுபடிசெய்யத்தக்க ஊகத்திற்கு உட்பட்டு வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 90 நாட்களுக்கு மேல் கடந்த கால நிலுவையாகின்றபோது
- இரு தடவைகளுக்கு மேல் மீள்கட்டமைக்கப்பட்டவையாக காணப்படுகின்ற அனைத்து மீள்கட்டமைக்கப்பட்ட கடன்களும்
- அனைத்து மீள்அட்டவணைப்படுத்தப்பட்ட கடன்களும்
- இலங்கை மத்திய வங்கியின் பணிப்புரைக்கமைவாக செயலாற்றமற்றதாக வகைப்படுத்தப்பட்ட அனைத்து கொடுகடன் வசதிகள்/வாடிக்கையாளர்கள்
- வாடிக்கையாளரொருவரின் அல்லது சாதனமொன்றின் இடர்நேர்வுத் தரப்படுத்தலானது வெளிவாரி கடன்தரப்-படுத்தல் முகவராண்மை ஒன்றினால் B+ ஆக தரங்குறைக்கப்பட்டுள்ளபோது அத்துடன்/ அல்லது வங்கிகளின் உள்ளக தரப்படுத்தல் முறைமையில் இரு – படிநிலைகள் தரங்குறைக்கப்பட்டுள்ளபோது.
- கொடுகடன் இடர்நேர்வில் செயலாற்றமற்ற கொடுகடன் வசதிகளின்/வாடிக்கையாளர்-களின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு (குறிப்பு இல. 2.5.2.7 ஐப் பார்க்க)

செலுத்த வேண்டிய மொத்த தொகையோ அல்லது அதன் ஒரு பாகத்தை மீளஅறவிடுவதற்கு நியாயமான எதிர்பார்க்கைகளை வங்கி கொண்டிராத நிதியியல் சொத்துகளுக்காக, நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் தொகை குறைக்கப்படுகின்றது. இது நிதியியல் சொத்தின் இனங்காணாமை (பகுதியளவிலான) ஒன்றாக கருதப்படுகின்றது.

### 2.5.2.4 எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக் கணிப்பீடு

எதிர்பார்க்கப்பட்ட காசு பற்றாக்குறைகளை அளவிடுவதற்கு, விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டத்தட்ட சமமாக்கலொன்றில் கழிவுசெய்யப்பட்ட எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பினை வங்கி கணிக்கின்றது. காசுப் பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்திற்கு அமைவாக நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டியதாகவுள்ள காசுப் பாய்ச்சலுக்கும் பெறுவதற்கு நிறுவனம் எதிர்பார்க்கின்ற காசுப் பாய்ச்சலுக்கும் இடையிலான வேறுபாடாகும்.

எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு கணிப்பீட்டு பொறிமுறைகள், கீழே எடுத்துரைக்கப்-பட்டுள்ளதுடன் முக்கிய கூறுகள் பின்வருமாறு:

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

- **தவணைதவறுதல் நிகழும் தன்மை:**
தவணைதவறுதல் நிகழும்தன்மை என்பது வழங்கப்பட்ட கால வீச்சொன்றின் மீது தவணைதவறுதல் நிகழக்கூடிய மதிப்பீடொன்றாகும். வசதியானது முன்னர் இனங்காணப்படவில்லையாயின் அத்துடன் இன்னும் சொத்துப்பட்டியலில் இருக்குமாயின், மதிப்பிடப்பட்ட காலமொன்றில் குறித்த நேரமொன்றில் மாத்திரம் தவணைதவறுதல் நிகழலாம்.
- **தவணைதவறுதல் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை**
தவணைதவறுதல் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை என்பது ஒப்பந்தத்தினாலோ அல்லது வேறுவகையிலோ அட்டவணைப்படுத்தப்பட்ட கடப்பாடுடைய வசதிகள் மீதான எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குறைப்பாகவுள்ள முதன்மை மற்றும் வட்டி மீள்கொடுப்பனவுகள் அத்துடன் தவறிய கொடுப்பனவுகளில் இருந்தான ஒன்றுதிரண்ட வட்டி உள்ளடங்கலாக அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை கருத்திற் கொண்டு எதிர்கால தவணைதவறுதல் திகதியொன்றில் உள்ள இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை பற்றி மதிப்பீடாகும்.
- **கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை**
கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை என்பது தரப்பட்ட நேரமொன்றில் தவணை தவறுதலொன்று நிகழுமிடத்து அதிலிருந்து தோன்றுகின்ற இழப்பு பற்றிய மதிப்பீடொன்றாகும். ஒப்பந்த காசுப் பாய்ச்சல் நிலுவை மற்றும் ஏதேனும் பிணைய உறுதி தேறுதல் உள்ளடங்கலாக கடன்வழங்குநர் பெறுவதற்கு எதிர்பார்க்கின்றவை என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டினை இது அடிப்படையாக கொண்டது. இது பொதுவாக தவணை தவறுதல் இடர்நேர்வுக்குள்ளகும் தன்மையின் சதவீதமாக கூறப்படும்.

கொடுகடன் இழப்புகள் நிர்ணயிக்கப்படுவதற்கான உயர்ந்தபட்ச காலம் என்பது வங்கி அதனை முன்கூட்டி அழைப்பதற்கான உரிமையினை கொண்டிருக்காதவிடத்து நிதியியல் சாதனமொன்றின் ஒப்பந்த ஆயுட்காலமாகும். சேதஇழப்பு நட்டங்களும் விடுவிப்புகளும் நிதியியல் சொத்தின் மொத்த கொண்டுசெல்லும் பெறுமதியின் சீராக்கமாக கணக்கிடப்படுகின்ற திருத்தியமைத்தல் நட்டங்கள் அல்லது இலாபங்களிலிருந்து வேறாக கணக்கிடப்பட்டு காண்பிக்கப்படுகின்றன. எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு முறையின் பொறிமுறை கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளது:

**படிமுறை 01**

12 மாத எதிர்பார்க்கப்பட்ட கடன் இழப்பானது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் 12 மாத காலங்களினுள் சாத்தியமானதான நிதியியல் சாதனமொன்றின் தவணைதவறுதல் நிகழ்வுகளில் இருந்து விளைகின்ற எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆயுட்கால எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பின் பாகமொன்றாக கணிக்கப்படுகின்றது. அறிக்கையிடும் திகதிக்கு பின்னர் 12 மாத காலங்களினுள் தவணைதவறுதல் எதிர்பார்க்கையின் அடிப்படையில் 12 மாத எதிரபார்க்கப்பட்ட கடன் இழப்பினை வங்கி கணிப்பிடுகின்றது. இவ் எதிர்பார்க்கப்பட்ட 12 மாத தவணை தவறுதல் நிகழுந்தன்மைகள், தவணைதவறுதல் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையினை எதிர்வுகூறுவதற்கு பிரயோகிக்கப்படுவதுடன் கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை மூலம் பெருக்கப்பட்டு மூல விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டியபெறுமதியாக்கல் மூலம் கழிவு செய்யப்படுக்கின்றது.

**படிமுறை 02**

கடனொன்று அதன் உருவாக்கத்திலிருந்து கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பினை காண்பித்துள்ளபோது, ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளுக்கான ஒதுக்கீடொன்றினை வங்கி பதிவு செய்கின்றது. பொறிமுறையானது மேலே விளக்கப்பட்டவற்றுக்கு ஒத்ததாகும். ஆனால் தவணை தவறுதல் நிகழுந்தன்மைகள் மற்றும் கடன்பெறுநர் தவணைதவறும் போது இழக்கும் தொகை என்பன சாதனத்தின் ஆயுட்காலத்தின் மீது மதிப்பிடுப்படுகின்றன. எதிர்பார்க்கப்படும் காசுப் பற்றாக்குறையானது மூல விளைவு வட்டி வீதத்திற்கான கிட்டியபெறுமதியாக்கல் மூலம் கழிவு செய்யப்படுக்கின்றது.

**படிமுறை 03**

கொடுகடன் சேதஇழந்துள்ளதாக கருத்தில் கொள்ளப்படுகின்ற கடன்களுக்காக, வங்கியானது இக்கடன்களுக்கென ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளை இனங்காணுகின்றது. இம்முறையானது 100% இல் நிர்ணயிக்கப்பட்ட தவணை தவறுதல் நிகழுந்தன்மையுடன் படிமுறை 2 சொத்துகளுக்கானதை ஒத்ததாகும்.

### 2.5.2.5 ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள்

அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளானவை சீர்மதிப்புப் பெறுமதியில் காணப்படுகின்ற, நிதியியல் நிலை கூற்றில் உள்ள இந்நிதியியல் சொத்தின் கொண்டுசெல்லும் தொகையை குறைப்பதில்லை. இதற்கு பதிலாக, கடன்தீர் செலவில் சொத்துகள் அளவிடப்பட்டிருப்பின் தோற்றம்பெறக்கூடிய ஒதுக்கீட்டுக்குச் சமமான தொகையொன்று இலாபம் அல்லது நட்டத்திற்கான நேரொத்த விதிப்பனவொன்றுடன் திரட்டிய சேதமிழப்புத் தொகையொன்றாக ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றது. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட ஒன்றுதிரட்டிய நட்டமானது சொத்துகளின் இனங்காணாமையின் மீது இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்சுழற்சி செய்யப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியன்று உள்ளவாறு வங்கியும் தொகுதியும் சேதஇழப்பிற்கு உட்படுகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட படுகடன் சாதனம் எதனையும் கொண்டிருக்கவில்லலை.

### 2.5.2.6 முன்னோக்கி எதிர்பார்க்கும் தகவல்கள்

வங்கியின் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியில், அது பின்வருவன போன்ற பொருளாதார உள்ளீடுள் போன்ற முன்னோக்கி எதிர்பார்க்கின்ற தகவல்களின் பரந்த வீச்சொன்றில் தங்கியுள்ளது:

- மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி
- தொழிலின்மை வீதங்கள்
- பணவீக்க வீதங்கள்
- செலாவணி வீதங்கள்
- வட்டி வீதங்கள்

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளை கணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உள்ளீடுகளும் மாதிரிகளும் எப்போதும் நிதியியல் கூற்றுகளின் திகதியன்று சந்தையின் அனைத்து பண்புகளையும் உள்ளடக்காதிருக்கலாம். இதனைப் பிரதிபலிப்பதற்கு அத்தகைய வேறுபாடுகள் குறிப்பிடத்தக்களவு முக்கியமாக காணப்படுகின்றபோது தற்காலிக சீராக்கங்களாக பண்புசார் சீராக்கங்கள் அல்லது முகாமைத்துவ முறைகள் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.5.2.7 கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு

சாதனமொன்று அல்லது சாதனங்களைக் கொண்ட சொத்துப்பட்டியலொன்று 12 மாத எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு அல்லது ஆயுட்காலம் எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு உட்பட்டுள்ளதா என்பதனை நிர்ணயிக்கும் பொருட்டு எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பிற்கு உட்படுகின்ற அனைத்து சொத்துகளையும் வங்கி தொடர்ச்சியாக கண்காணிக்கின்றது, ஆரம்ப இனங்காணல் தொடக்கம் கடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று காணப்படுகின்றதா என்பதனை வங்கி கணிப்பிடுகின்றது. வங்கியானது அளவுமீறிய செலவு அல்லது முயற்சி இன்றி தொடர்புடையதாக மற்றும் கிடைக்கத்தக்தாகவுள்ள நியாயமான மற்றும் துணையளிக்கத்தக்க தகவல்களை பரிசீலனையில் கொள்கின்றது. இது, வங்கியின் வரலாற்று அனுபவம் மற்றும் நிபுணத்துவ கொடுகடன் மதிப்பீடு அத்துடன் எதிர்நோக்குகின்ற தகவல்கள் எனபவற்றின் அடிப்படையிலமைந்த அளவுசார் மற்றும் பண்புசார் தகவல் பகுப்பாய்வுகளை உள்ளடக்குகின்றது. அதற்கமைய, பின்வரும் காரணிகளில்/நிபந்தனைகளில் ஒன்று நிறைவுசெய்யப்படுகின்றபோது கடன் இடர்நேர்வு குறிப்பிடத்தக்க அதிகரிப்பாக வங்கி கருதுகின்றது.

- வாடிக்கையாளரொருவரின் ஒப்பந்தக் கொடுப்பனவுகள் 30 நாட்களுக்கு மேல் கடந்தகால நிலுவையாகின்றபோது (இறிஅறி 9 இல் தள்ளுபடிசெய்யத்தக்க ஊகத்திற்கு உட்பட்டு)
- வாடிக்கையாளரொருவரின் அல்லது சாதனமொன்றின் இடர்நேர்வுத் தரப்படுத்தலானது வெளிவாரி கடன்தரப்படுத்தல் முகவராண்மை ஒன்றினால் B+ ஆக தரங்குறைக்கப்பட்டுள்ளபோது
- மீள்கட்டமைக்கப்பட்ட வசதிகள்
- வாடிக்கையாளரை/வசதியினை கண்காணிப்பு அட்டவணைக்கு நகர்த்தல் போன்ற சொத்தொன்றுக்கான கொடுகடன் இடர்நேர்வில் முக்கிய அதிகரிப்பொன்றினை தூண்டுகின்ற இரண்டாம் நிலைக் குறிகாட்டிகள்
- வாடிக்கையாளரொருவரின்/வாடிக்கையாளர்கள் குழுவின், சொத்துப்பட்டியல்களின் அல்லது சாதனங்களின் செயலாற்றுகையினை நேரடியாக பாதிக்கின்ற எதிரகால பொருளாதார நிலைமைகள் பற்றிய நியாயமான மற்றும் துணையளிக்கத்தக்க எதிர்வுகூறல்களின் போது
- வாடிக்கையாளரொருவரின்/வாடிக்கையாளர்கள் குழுவின், சொத்துப்பட்டியல்களின் அல்லது சாதனங்களின் செயலாற்றுகையில்

நேரடியாக தாக்கமேற்படுத்துகின்ற புவியியல் அமைவிடத்தில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்று அல்லது இயற்கை அனர்த்தம் காணப்படுகின்றபோது
- பிணைய உறுதியின் பெறுமதி குறிப்பிடத்தக்களவு குறைக்கப்படுகின்றபோது அத்துடன்/ அல்லது பிணைய உறுதியின் தேறுந்தன்மை சந்தேகத்திற்கிடமானதாக உள்ளபோது
- கொடுகடன் வசதியின் செயலாற்றுகையினை கணிசமான அளவு பாதிக்கின்ற விதத்தில் வாடிக்கையாளர் ஒருவர் வழக்காடலொன்றுக்குட்படுகின்ற போது
- நிறுவனசார் வாடிக்கையாளரொருவரின் சிரேஸ்ட முகாமைத்துவத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள்
- தொழில் தொழிற்பாடுகளின்/கருத்திட்டங்களின் தொடக்கம் அடிப்படையில் உடன்பட்ட திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு மேல் தாமதமடைதல்
- கொடுப்பனவுகளின் விரிவுபடுத்தல்கள், ஒத்திவைத்தல், ஒப்பந்தங்களை தள்ளுபடி செய்தல் உள்ளடங்கலாக சலுகைகளை ஏற்படுத்துகின்ற நியதிகளின் திருத்தியமைத்தல்கள்
- வாடிக்கையாளர் மரணித்தல்/கடனிறுக்க வகையின்மை
- வங்கி வாடிக்கையாளரை தொடர்புகொள்ள அல்லது கண்டுபிடிக்க இயலாதிருக்கின்ற போது
- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வாடிக்கையாளரின் புரள்வில் மற்றும்/ அல்லது வரிக்கு முந்திய இலாபத்தில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட வீழ்ச்சி அத்துடன்
- முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சொத்து பெறுமதியில் 25% இற்கு மேல் சிதைவடைதல்.

#### 2.5.2.8 தவணைதவறுதல் மற்றும் கொடுகடன் சேதமிழந்த சொத்துகள் பற்றிய வரைவிலக்கணம்

ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்களையும் முற்பணங்களையும் தொகுதி பின்வரும் சந்தர்ப்பங்களின்போது தவணைதவறப்பட்டதாக கருதுகின்றது:
- பிணையங்கள் தேறுதல் (ஏதேனும் வைக்கப்பட்டிருப்பின்) போன்ற நடவடிக்கைகளுக்கு தொகுதி மூலமான உதவியின்றி அதன் கடப்பாடுகளை தொகுதிக்கு முழுமையாக கொடுப்பனவு செய்வதற்கு கடன்பெறுநர் இயலாதிருத்தல் அல்லது
- கடன்பெறுநர், அவரின் ஒப்பந்த கொடுப்பனவுகள் மீது 90 நாட்கள் கடந்த கால நிலுவையினைக் கொண்டிருத்தல்

மேலும், குறித்த முதலீட்டுக்கு வெளிவாரி கடன்தரப்படுத்தல் "தவணை தவறுதல்" இனை குறித்தொதுக்குகின்ற போது நிதியியல் முதலீடுகளை தொகுதி படிமுறை 3 இன் கீழ் வகைப்படுத்துகின்றது.

### 2.5.3 ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் பற்றிய விபரங்கள் 200 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 26 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.5.3.1 பெறுமானத்தேய்வு

"பெறுமானத்தேய்வு" பற்றிய விபரங்கள் 200 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 26 இல் தரப்பட்டுள்ளன.

#### 2.5.3.2 கடன்பெறுதல் செலவுகள்

"கடன்பெறுதல் செலவுகள்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம்- இகநி 23 இற்கு அமைய சொத்தின் செலவின் பாகமாக தகமைபெறுகின்ற சொத்தின் கையகப்படுத்தல், நிர்மாணித்தல் அல்லது உற்பத்தி செய்தல் போன்றவற்றிற்கு நேரடியாக சாட்டத்தக்க கடன்பெறுதல் செலவுகளை தொகுதி மூலதனமாக்குகின்றது. தகமைபெறுகின்ற சொத்து என்பது அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்கு அல்லது விற்பனைக்கு ஆயத்தமாகுவதற்கு கணிசமான காலப்பகுதியினை எடுத்துக்கொள்கின்ற சொத்தொன்றாகும். ஏனைய கடன்பெறுதல் செலவுகள், அவை நிகழுகின்ற காலப்பகுதியில் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. வங்கியும் தொகுதியும் அறிக்கையிடும் காலப்பகுதிக்காக ஏதேனும் கடன் பெறுதல் செலவினை மூலதனமாக்கவில்லை

### 2.5.4 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துகள் பற்றிய விபரங்கள் 71ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 29 இல் தரப்பட்டுள்ளன.

### 2.5.5 நிதியியல் சொத்துகள் அல்லாதவற்றின் சேதஇழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், பிற்போடப்பட்ட வரிச் சொத்து தவிர்ந்த சொத்தொன்று சேதமிழப்புச் செய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ளதா என்பதை தொகுதி கணிக்கும். சாத்தியமொன்று காணப்படின் அல்லது சொத்தொன்றுக்கான ஆண்டு சேதஇழப்பு பரிசோதனை தேவைப்படுமிடத்து, சொத்தில் மீளப்பெறப்பட வேண்டிய தொகையை தொகுதி மதிப்பிடும். சொத்தொன்றின் கொண்டுசெல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறவேண்டிய தொகையை விஞ்சுமிடத்து சொத்தானது சேதமிழந்துள்ளதாக கருதப்படுவதுடன், அதன் மீளப்பெறப்பட வேண்டிய தொகைக்கு பதிவு செய்யப்படுகின்றது.

### 2.5.6 ஓய்வு நலக் கடப்பாடு

#### 2.5.6.1 வரையறைசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டங்கள்

##### 2.5.6.1.1 ஊழியர் ஓய்வூதிய நிதியம் - I

1995 ஒக்டோபர் 01ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் இணைந்த நிரந்தர பணியாளர்களுக்கு வரையறைசெய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டமொன்றை வங்கி செயற்படுத்துகின்றது. இதில் வேறாக நிர்வகிக்கப்படும் நிதியமொன்றிற்கு பங்களிப்புச்செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மை ஓய்வூதியத் திட்டம் I இன் கீழ் வழங்கப்படும் நன்மைகளின் செலவானது, எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. கணிக்கப்பட்ட பெறுகைகள் மற்றும் இழப்புகள், அவற்றுக்குரிய காலப்பகுதியில் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

வரையறைசெய்யப்பட்ட நன்மை சொத்து அல்லது பொறுப்பு, இன்னமும் இனங்காணப்படாத கடந்த காலச் சேவைச் செலவுகளை கழித்தும் கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டிய திட்டமிட்ட சொத்துகளின் உண்மைப் பெறுமதியைக் கழித்தும், இன்னமும் இனங்காணப்படாத கணிப்பீட்டு நட்டங்களை கழித்தும் பெறப்பட்ட அறுதியிட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. அறுதியிட்ட நன்மைப் பொறுப்பின் பெறுமதியை வங்கியே கொண்டிருப்பதுடன், இது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. எந்தச் சொத்தினதும் பெறுமதியானது, ஏதாவது இழப்புகள் அல்லது இன்னமும் இனங்காணப்படாத கடந்த கால சேவைச் செலவுக்கும், திட்டத்துக்கான எதிர்காலப் பங்களிப்பில் திட்டத்திலிருந்தான மீளளிப்புகள் அல்லது குறைப்புக்கள் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கக்கூடிய ஏதாவது பொருளாதார நன்மைகளினது தற்போதைய பெறுமதி ஆகிய தொகைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆகப் பிந்திய மதிப்பீடானது தொழில்சார் கணிப்பீட்டு நிறுவனமொன்றான எக்சூரியல் அன்ட் மெனேஜ்மென்ட் கொன்சல்டன்ஸ் (பிரைவட்) லிமிடெட் இன் கணிப்பீட்டு நிறுவன இணை உறுப்பினரான திரு எம் பூபாலநாதன் என்பவரினால் 2020 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது.

2020.12.31இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் எடுகோள்கள் பன்வருமாறு:

| | |
|---|---|
| வட்டி/கழிவு வீதம் | ஆண்டுக்கு 8.00 % |
| வாழ்க்கைச் செலவு படிகளின் அதிகரிப்பு | ஆண்டுக்கு 4.50 % |
| சராசரி அடிப்படைச் சம்பளத்திலான அதிகரிப்பு | ஆண்டுக்கு 6.50% |

நிதியத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளுக்கு புறம்பாக பேணப்படுவதுடன் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கை பொறுப்பாளர்களினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றது, அத்துடன் சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் ஆண்டுதோறும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. ஓய்வூதிய நிதியம் I இன் நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையினாலும் வங்கியின் பணிப்பாளர் சபையினாலும் மீளாயப்படுகின்றன. அனுகூலமான மட்டங்களில் நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்யும் கடப்பாடு வங்கிக்கு இருப்பதனால் வங்கியின் வெளிப்படுத்தலை மீளாய்வு செய்வதற்கும் அவை சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் மாதாந்தம் வழங்கப்படும்.

ஊழியர் ஓய்வூதியத் நிதியம் I பற்றிய விபரங்கள் 220 தொடக்கம் 222 வரையுள்ள பங்கங்களில் குறிப்பு இல. 38. (அ) 1 இல் தரப்பட்டுள்ளன.

##### 2.5.6.1.1.1. நிதியளிக்கப்படாத ஓய்வூதியப் பொறுப்பு - ஊழியர் ஓய்வூதிய நிதியம் - I

நிதியளிக்கப்படாத கடந்தகாலச் செலவு, கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீட்டின் மீது உடனடியாக அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளன. 2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடு, முழுமையாக வழங்கப்பட்ட ரூ. 7,049 மில்லியன் கொண்ட கடந்த காலச் சேவைச் செலவுப் பற்றாக்குறையை குறித்துக் காட்டியது. நிதியளிக்கப்படாத ஓய்வூதியப்

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

பொறுப்பு பற்றிய தகவல்கள் 220-222 ஆம் பக்கங்களில் 38(அ) .1 ஆம் இலக்க குறிப்பில் தரப்பட்டுள்ளன.

**2.5.6.1.2 ஊழியர் ஓய்வூதிய நிதியம் - II**

1995 ஒக்டோபர் 01ம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் வங்கியில் இணைந்த நிரந்தர அலுவலர்களுக்காக வங்கி வரையறைசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் ஒன்றினைத் தாபித்து தொழிற்படுத்துகின்றது. இது வேறாக நிர்வகிக்கப்பட்ட நிதியம் ஒன்றிற்கு அங்கத்தவர்களின் மொத்த சம்பளத்தில் 12 சதவீதத்தினை மாதாந்தம் பங்களிப்பதற்கு வங்கியினை தேவைப்படுத்துகின்றது. வரையறைசெய்யப்பட்ட நல ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் நலன்களை வழங்குவதற்கான செலவு எதிர்வுகூறப்பட்ட அலகு வரவு கணிப்பீட்டு மதிப்பு முறையினைப் பயன்படுத்தி நிர்ணயிக்கப்படுகின்றது. கணிப்பீட்டு பெறுகைகளும் நட்டங்களும் அவை நிகழும் ஆண்டுக் காலத்தில் ஏனைய முழுமையான வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளன.

வரையறைசெய்யப்பட்ட நன்மை சொத்து அல்லது பொறுப்பு, இன்னமும் இனங்காணப்படாத கடந்த காலச் சேவைச் செலவுகளை கழித்தும் கடப்பாடுகள் நேரடியாகத் தீர்க்கப்பட வேண்டிய திட்டமிட்ட சொத்துகளின் உண்மைப் பெறுமதியைக் கழித்தும், இன்னமும் இனங்காணப்படாத கணிப்பீட்டு நட்டங்களை கழித்தும் பெறப்பட்ட வரையறைசெய்யப்பட்ட நன்மைக் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியாக கணிப்பீடு செய்யப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நன்மைப் பொறுப்பின் பெறுமதியை வங்கியே கொண்டிருப்பதுடன், இது இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. எந்தச் சொத்தினதும் பெறுமதியானது, ஏதாவது இழப்புகள் அல்லது இன்னமும் இனங்காணப்படாத கடந்த கால சேவைச் செலவுக்கும், திட்டத்துக்கான எதிர்காலப் பங்களிப்பில் திட்டத்திலிருந்தான மீளளிப்புகள் அல்லது குறைப்புக்கள் ஆகியவற்றின் வடிவில் கிடைக்கக்கூடிய ஏதாவது பொருளாதார நன்மைகளினது தற்போதைய பெறுமதி ஆகிய தொகைக்கும் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆகப் பிந்திய மதிப்பீடானது தொழில்சார் கணிப்பீட்டு நிறுவனமொன்றான எக்சூரியல் அன்ட மெனேஜ்மென்ட் கொன்சல்டன்ஸ் (பிரைவட்) லிமிடெட் இன் கணிப்பீட்டு நிறுவன இணை உறுப்பினரான திரு எம் பூபாலநாதன் என்பவரினால் 2020 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது.

2020.12.31இல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டில் பயன்படுத்தப்பட்ட முக்கிய நிதியியல் எடுகோள்கள் பன்வருமாறு:

| | |
|---|---|
| வட்டி/கழிவு வீதம் | ஆண்டுக்கு 8.50% |
| வாழ்க்கைச் செலவு படிகளின் அதிகரிப்பு | ஆண்டுக்கு 4.50% |
| சராசரி அடிப்படைச் சம்பளத்திலான அதிகரிப்பு | ஆண்டுக்கு 6.50% |

நிதியத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளுக்கு புறம்பாக பேணப்படுவதுடன் நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாடுகளுக்கமைய நம்பிக்கை பொறுப்பாளர்களினால் சுயாதீனமாக நிர்வகிக்கப்படுகின்றது, அத்துடன் சுயாதீன வெளிவாரி கணக்காய்வாளர்களினால் ஆண்டுதோறும் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. ஓய்வூதிய நிதியம் II இன் நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளரின் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டு நம்பிக்கை பொறுப்பாளர்கள் சபையினாலும் வங்கியின் பணிப்பாளர் சபையினாலும் மீளாயப்படுகின்றன. அனுகூலமான மட்டங்களில் நிதி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை உறுதி செய்யும் கடப்பாடு வங்கிக்கு இருப்பதனால் வங்கியின் வெளிப்படுத்தலை மீளாய்வு செய்வதற்கும் அவை சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் இருக்கும் வரை ஓய்வூதியம் மாதாந்தம் வழங்கப்படும்.

ஊழியர் ஓய்வூதியத் நிதியம் II பற்றிய விபரங்கள் 223-225ஆம் பங்கங்களில் குறிப்பு 38 (அ) 2 இல் தரப்பட்டுள்ளன.

**2.5.6.1.2.1. நிதியளிக்கப்படாத ஓய்வூதியப் பொறுப்பு – ஊழியர் ஓய்வூதிய நிதியம் - II**

நிதியளிக்கப்படாத கடந்தகாலச் செலவு, கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீட்டின் மீது உடனடியாக அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளன. 2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீடு, முழுமையாக வழங்கப்பட்ட ரூ. 316 மில்லியன் கொண்ட கடந்த காலச் சேவைச் செலவுப் பற்றாக்குறையை குறித்துக் காட்டியது. நிதியளிக்கப்படாத ஓய்வூதியப் பொறுப்பு பற்றிய தகவல்கள் 223-225ஆம் பக்கங்களில் 38(அ).2. ஆம் இலக்க குறிப்பில் தரப்பட்டுள்ளன.

**2.5.6.1.3 விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்**

2013 டிசம்பரில் இருந்து ஓய்வூதியநிதியம்- II உறுப்பினர்களுக்காக வங்கியானது 'விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள்' ஓய்வூதியத் திட்டம் ஒன்றினை நிறுவியுள்ளது. ஓய்வூதியத் திட்டம் - II இன் உறுப்பினர்கள் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தின் உறுப்பினர்களாக இருப்பதற்கு தெரிவு செய்யலாம். இந்நிதியத்திற்கு வங்கி பங்களிப்பு செய்வதில்லை. அதேவேளை வங்கி ஊழியர்கள் தமது மொத்த அடிப்படை சம்பளத்தில் மாதாந்தம் 5% இனை நிதியத்திற்கு செலுத்துகின்றனர்.

**2.5.6.2 பணிக்கொடை**

பதவியினர் ஓய்வூதியத் திட்டம் - II நிறுவப்பட்டதுடன் 1995 ஒக்டோபர் 01ம் திகதியன்று அல்லது அதற்கு பின்னர் வங்கியில் இணைந்து கொண்ட ஊழியர்கள் ஓய்வூதியத் திட்டம்-II இன் உறுப்பினர்களாயினர். இதனால் சேவைப் பணிக்கொடைத் திட்டத்தின் கீழான உரிமைகள் மற்றும் சலுகைகளுக்கு அவர்கள் உரித்துடையவர்களல்லர். எவ்வாறாயினும், இவ் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஏதேனும் ஓய்வூதியநலனுக்கு உரித்துடையவராவதற்கு ஓய்வுபெறும் நேரத்தில் வங்கியில் ஆகக்குறைந்தது 120 மாதகால தடங்கலற்ற செயற்பாடுமிக்க சேவையொன்று வேண்டப்படுகின்றது. எனவே 10 வருட சேவைக்கு முன்னர் ஓய்வு பெறுகின்ற ஊழியர்கள் அத்துடன் அவர்களது சேவைகளை ஓய்வினை விட ஐந்து வருட சேவைக்கு பின்னர் முடிவுறுத்தப்பட்டிருப்பின் 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ், தொடர்ச்சியான ஒவ்வொரு வருட சேவைக்கும் நிதியாண்டின் கடைசி மாதத்திற்கு ஏற்புடைய மொத்த சம்பளத்தின் ஒரு அரை விகிதத்தில் நிறுத்தல் பணிக்கொடையினை பெறுவதற்கு உரித்துடையவர்.

முகாமைத்துவத்தின் தீர்வுகளுக்கமையவும் கடந்த கால அனுபவத்தின் படியும் அத்தகைய நிகழ்வுகளின் நிகழும் தன்மை அரிதாக காணப்படுகின்றது. அறிக்கையிடும் திகதியன்று முக்கிய பொறுப்பு ஒன்று மதிப்பிடப்பட்டிருந்தாலன்றி நிதியியல் கூற்றுகளில் பணிக்கொடை ஏற்பாடு ஒன்று பேணப்படுவதில்லை. 1983இன் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் கீழ் அத்தகைய நிகழ்வின் ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடை ஒன்று செலுத்தப்பட்டிருக்கப்படிடத்து, அதே ஆண்டில் வருமானக்கூற்றில் பணிக்கொடை செலவொன்றாக இது இனங்காணப்பட்டுள்ளது.

**2.5.6.3 தொழிலுக்குப் பின்னரான மருத்துவ நலன்கள்**

ஓய்வு பெற்ற ஊழியர்களுக்காக பங்களிப்புடனான வைத்திய உதவித் திட்டம் ஒன்றினை வங்கி கொண்டுள்ளது. இத்திட்டத்தின் சொத்துகள், வங்கியின் சொத்துகளில் சுயாதீனமாக வைக்கப்பட்டுள்ளதுடன் நம்பிக்கைப் பொறுப்பாளர் நிதியத்தின் நம்பிக்கை நிதியத்தின் உறுதிப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டவாறு முகமைத்துவம் மற்றும் ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படுகின்றது. வரையறைசெய்யப்பட்ட நலத் திட்டங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் செலவானது, எதிர்வு கூறப்பட்ட அலகு வரவு முறையால் தீர்மானிக்கப்படுகின்றது. கணிப்பீட்டினால் ஏற்படும் இலாபம் மற்றும் நட்டமானது, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படுகின்றன.

வங்கியின் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்ட தொகையொன்றினை வங்கியானது பங்களிப்பு மருத்துவ திட்டத்திற்கு பங்களிப்பு செய்கின்றது. காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டு சிபாரிசுகளின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி 2020ஆம் ஆண்டின் இலாபத்திலிருந்து ரூபா 302.3 மில். கொண்ட தொகையொன்று வழங்கப்பட்டுள்ளது ஆகப் பிந்திய மதிப்பீடானது தொழில்சார் கணிப்பீட்டு நிறுவனமொன்றான எக்சூரியல் அன்ட மெனேஜ்மென்ட் கொன்சல்டன்ஸ் (பிரைவட்) லிமிடெட் இன் கணிப்பீட்டு நிறுவன இணை உறுப்பினரான திரு எம் பூபாலநாதன் என்பவரினால் 2020 டிசம்பர் 31இல் மேற்கொள்ளப்பட்டது. 2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு பெறுமதி மதிப்பீட்டில் பயன்படத்தப்பட்ட முதன்மை நிதியியல் ஊகங்கள் பினவருமாறு:

| | |
|---|---|
| வட்டி/கழிவு வீதம் | ஆண்டுக்கு 8.00% |
| மருத்துவச் செலவு பணவீக்க வீதம் | ஆண்டுக்கு 4.50% |

நிதியத்தின் சொத்துகள் வங்கியின் சொத்துகளில் இருந்து புறம்பாக வைக்கப்பட்டுள்ளதுடன் நம்பிக்கைப் பொறுப்பு ஆவணத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நம்பிக்கைப்பொறுப்பாளர்களால் சுயாதீனமாக நிருவகிக்கப்படுவதுடன் சுயாதீன வெளிவாரிக் கணக்காய்வாளர்களால் வருடாந்தக் கணக்காய்விற்குட்படுத்தப்படுகின்றது.

ஓய்வூதியம் II இன் நிதியியல் கூற்றுகளும் கணக்காய்வாளர் அறிக்கையும் நம்பிக்கையாளர் சபைக்கும் வங்கியின் பணிப்பாளர் சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டு மீளாய்வு செய்யப்படுகின்றது. நிதியளித்தல் உகப்பான மட்டங்களில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதை உறுதிசெய்வதற்கு வங்கி கடப்பாட்டினைக் கொண்டுள்ளமையினால் அவை, வங்கியின் வெளிப்படுத்தல் பற்றிய மீளாய்வுக்காகவும் சமர்ப்பிக்கப்படுகின்றன. பங்கேற்பாளர் உயிருடன் உள்ளவரைக்கும் ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யத்தக்கதாகும்.

தொழிலுக்குப் பின்னரான மருத்துவ நலன்கள் பற்றிய விபரங்கள் 226 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 38. (அ) 3 இல் தரப்பட்டுள்ளது.

##### 2.5.6.3.1. நிதியளிக்கப்படாத ஓய்வூதியப் பொறுப்பு – தொழிலுக்குப் பின்னரான மருத்துவ நலன்கள்

நிதியளிக்கப்படாத கடந்தகாலச் செலவு, கணிப்பீட்டு பெறுமதிமதிப்பீட்டின் மீது உடனடியாக அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளன. 2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு கணிப்பீட்டு பெறுமதி மதிப்பீடு, முழுமையாக வழங்கப்பட்ட ரூ. 3,520 மில்லியன் கொண்ட கடந்த காலச் சேவைச் செலவுப் பற்றாக்குறையை குறித்துக் காட்டியது. நிதியளிக்கப்படாத ஓய்வூதியப் பொறுப்பு பற்றிய தகவல்கள் 226ஆம் பக்கத்தில் 38(அ).3. ஆம் இலக்க குறிப்பில் தரப்பட்டுள்ளன.

#### 2.5.6.4 வரையறைசெய்யப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

வரையறை செய்யப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் பற்றிய விபரங்கள் 43 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 11 இல் தரப்பட்டுள்ளன.

### 2.5.7 ஏனைய பொறுப்புக்கள்

ஏனைய பொறுப்புக்கள் பற்றிய விபரங்கள் 230 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு 41 இல் தரப்பட்டுள்ளது.

### 2.5.8 ஏற்பாடுகள்

முன்னைய நிகழ்வொன்றின் விளைவாக நிகழ்காலத்தில் கடப்பாடொன்றை (சட்டரீதியான அல்லது ஆக்கபூர்வமான) தொகுதியானது கொண்டிருக்கையில், அத்துடன் இக்கடப்பாட்டினைத் தீர்ப்பதற்கு பொருளாதார நலன்களுடனான மூலவளங்களின் வெளிப்பாய்ச்சலொன்று நிகழக்கூடியதாகவிருக்கின்ற அத்துடன் இக்கடப்பாட்டு தொகை தொடர்பில் நம்பத்தகுந்த மதிப்பீடு ஒன்றும் மேற்கொள்ளப்படக்கூடியதாகவிருக்கின்ற போது ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. அத்தகைய ஏற்பாடுகள் தொடர்பான செலவுகளும், ஏதேனும் மீளளித்தலைக் கழித்து வருமானக் கூற்றில் எடுத்தரைக்கப்படுகின்றன.

#### 2.5.8.1 மோசடியான மீளப் பெறுதலுக்கான ஏற்பாடு

2020 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு இனங்காணப்பட்ட மோசடியான பண மீளப்பெறுதலின் மொத்த பெறுமதி ரூபா 77.8 மில். ஆகும். ரூபா 75.5 மில். கொண்ட ஏற்பாடு ஏற்கனவே கணக்கிலுள்ளது.

### 2.5.9 எதிர்பாரா பொறுப்புகளும் கடமைப்பொறுப்புகளும்

வங்கி உத்தரவாதங்கள், நாணயக் கடிதங்கள், வரையப்பபடாத கொடுகடன் வசதிகள், ஏனைய நேரடியற்ற கொடுகடன் வசதிகள் மற்றும் மூலதனக் கடமைப்பொறுப்பு என்பவற்றை இது உள்ளடக்குகின்றது. வங்கி உத்தரவாதங்கள் என்பது படுகடன் சாதனமொன்றின் நியதிகளுக்கமைவாக அது செலுத்த வேண்டியதாக ஆகின்ற போது குறித்த கடன்படுநர், கொடுப்பனவு மேற்கொள்ள தவறுவதன் காரணமாக ஏற்படுகின்ற இழப்பொன்றுக்காக வைத்திருப்பவருக்கு மீளளிப்பதற்கு குறித்த கொடுப்பனவை மேற்கொள்வதற்கு தொகுதியினை தேவைப்படுத்துகின்ற ஒப்பந்தங்களாகும். வரையப்படாத கடன் கடமைப் பொறுப்புகள் மற்றும் நாணயக் கடிதங்கள் என்பன கடமைப்பொறுப்புகளாகும். இதன் கீழ், ஏற்கனவே குறித்துரைக்கப்பட்ட நியதிகளுடன் வாடிக்கையாளருக்கு கடனொன்றை வழங்குவதற்கு வங்கி வேண்டப்படுகின்றது.

2018 சனவரி 1 முதல் செயற்படத்தக்கவாறு, இவ் ஒப்பந்தங்கள் இநிஅறி 9 இன் கீழ் சேதஇழப்பு மதிப்பீட்டுக்கு உட்படத்தப்படுகின்றன.

எதிர்பாரா பொறுப்புகளும் கடமைப்பொறுப்புகளும் பற்றிய விபரங்கள் 234 பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 48 இல் தரப்பட்டுள்ளன.

### 2.5.10 பங்கொன்றிற்கான உழைப்பு

“அடிப்படை மற்றும் குன்றிய பங்கொன்றிற்கான உழைப்பு” பற்றிய விபரங்கள் 173 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 14 இல் தரப்பட்டுள்ளன.

## 2.6 முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் - நிதியியல் சாதனங்களுக்கான வருமானத்தினையும் செலவினையும் இனங்காணல் →

வங்கிக்கு பொருளாதார நலன்கள் கிடைத்தலை நிகழக்கூடியதாகவிருத்தல் மற்றும் வருமானம் நம்பகத்தக்கதாக அளவிடக் கூடியதாகவிருத்தல் என்ற ரீதியில் வருவாய் இனங்காணப்பட்டுள்ளது. ‘வருமானம் மற்றும் செலவுகள்’ பற்றிய விபரங்கள் 161 தொடக்கம் 173 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் குறிப்புகள் 03 தொடக்கம் 14 வரை தரப்பட்டுள்ளன.

### 2.6.1 வட்டி வருமானமும் செலவுகளும்

“வட்டியும் வருமானமும் செலவுகளும்” பற்றிய விபரங்கள் 161 தொடக்கம் 163 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் குறிப்புகள் இல. 03 தொடக்கம் 04 வரை தரப்பட்டுள்ளன.

### 2.6.2 கட்டணம் மற்றும் தரகு வருமானம்

“கட்டணம் மற்றும் தரகு வருமானம்” பற்றிய விபரங்கள் 163 தொடக்கம் 164 வரை காணப்படும் குறிப்பு இல. 5 இல் தரப்பட்டுள்ளன.

### 2.6.3 தேறிய வர்த்தக வருமானம்

“வர்த்தகப்படுத்தலில் இருந்து தேறிய இலாபம்/ (நட்டம்)” பற்றிய விபரங்கள் 165 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 6 இல் தரப்பட்டுள்ளன.

### 2.6.4 பங்கிலாப வருமானம்

வருமானத்தினை பெற்றுக்கொள்வதற்கான உரிமை தாபிக்கப்படுகின்ற போது பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகின்றது. வழமையாக இது, விலைகுறிக்கப்பட்ட பிணையங்களுக்கான முந்திய பங்கிலாப திகதியாகும் பங்கிலாபம் பற்றிய விபரங்கள் 166 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 9 இல் தரப்பட்டுள்ளன.

### 2.6.5 வாடகை வருமானம்

வாடகை வருமானமானது திரளுகின்ற அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுத்துகின்றது. “வாடகை வருமானம்” பற்றிய விபரங்கள் 166 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 9 இல் தரப்பட்டுள்ளன.

## 2.7 முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் - வரிவிதிப்பு →

### 2.7.1 நடப்பு வரிவிதிப்பு

நடப்பு வரி வதிப்பு பற்றிய விபரங்கள் 171 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 13 இல் தரப்பட்டுள்ளது.

### 2.7.2 பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

பிற்போடப்பட்ட வரிவிதிப்பு பற்றிய விபரங்கள் 171 மற்றும் 211 ஆம் பக்கங்களில் முறையே குறிப்பு இல. 13 இலும் குறிப்பு 30 இலும் தரப்பட்டுள்ளன.

### 2.7.3 நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி

நிதிச்சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி, 2002இன் 14ஆம் இலக்க பெ.சே.வ. சட்டத்தின் 25(அ) பிரிவு மற்றும் அதற்கான அதனைத்தொடர்ந்த திருத்தங்களுக்கமைவாக கணிக்கப்படுகின்றது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு நிதியியல் சேவை மீதான செயற்பாட்டு இலாபத்தின் மீது 15% இல் செலுத்தப்படக் கூடியதாகும் அத்துடன் நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் பொருளாதார பெறுமானத் தேய்வுகளுக்கு சீராக்கம் செய்யப்படுகின்றது.

### 2.7.4 நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி

நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது 2014இன் 10ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (திருத்தம்) சட்டத்திற்கமைவாக கணிக்கப்படுகின்றது. நிதியியல் சேவைகள் மீதான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு உட்பட்டு அதே அடிப்படையில் 2% செலுத்தப்படக் கூடியதாகும். 2019 டிசம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும்

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

வகையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியானது அரசாங்கத்தினால் இல்லாதொழிக்கப்பட்டிருந்தது.

### 2.7.5 நிதியியல் சேவைகள் மீதான படுகடன் மீள்கொடுப்பனவு அறவீடு

2018 இன் 35 ஆம் இலக்க பதிய நிதிச் சட்டமானது "படுகடன் மீள்கொடுப்பனவு அறவீடு" என்ற பெயரில் புதிய வரியொன்றினை விதித்துள்ளது இது, 2018 வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் நிதியியல் கூற்று மீது அறவிடப்படும் தற்காலிக அறவீடொன்றாகும் (2018 ஒக்டோபர் 01 தொடக்கம் 2021 டிசம்பர் 31 வரை). படுகடன் மீள்கொடுப்பனவு அறவீடானது நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு உட்பட்டு அதே அடிப்படையில் 7% செலுத்தப்படக் கூடியதாகும். 2020 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் படுகடன் மீள்கொடுப்பனவு அறவீடானது அரசாங்கத்தினால் இல்லாதொழிக்கப்பட்டிருந்தது.

### 2.7.6 பொருளாதார சேவைக் கட்டணம்

2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டணச் சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்களின் நியதிகளுக்கமைவாக வங்கியின் கடப்பாடுடைய மொத்த புரள்வின் மீது 0.5% இல் பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தத்தக்கதாகும். ஏதேனும் கோரப்படாத பொருளாதார சேவைக் கட்டணங்கள், தொடர்கின்ற ஐந்து வருடங்களில் முன் கொண்டு செல்லப்பட்டு செலுத்த வேண்டிய வருமான வரிக்கு எதிராக எதிரீடு செய்யப்படக்கூடியது. அமைச்சரவையினால் அனுமதிக்கப்பட்டு நிதி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டவாறு 2020.01.01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பொருளாதார சேவைக் கட்டணம் இல்லாதொழிக்கப்பட்டது.

## 2.8 காசுப் பாய்ச்சல் கூற்று →

காசுப் பாய்ச்சல் கூற்றானது இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இற்கமைவாக காசுப் பாய்ச்சல் தயாரித்தலின் "நேரடி முறை" இனைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. காசும் காசுக்கு சமமானவைகளும் அறியப்பட்ட பணத் தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய அத்துடன் பெறுமதி மாற்றத்தின் முக்கியமற்ற இடர்நேர்வொன்றுக்கு உட்படுத்தப்படுகின்ற குறுகிய கால, உயர் திரவத்தன்மை கொண்ட முதலீடுகளை உள்ளடக்குகின்றன. கையிலுள்ள காசு, வங்கி நிலுவைகள், அழைப்பு மற்றும் குறுகிய அறிவித்தலில் உள்ள காசு என்பவற்றை காசும் காசுக்கு சமனானவையும் உள்ளடக்குகின்றன. காசுப் பாய்ச்சல் கூற்று 142 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## 2.9 ஒழுங்குபடுத்தல் ஏற்பாடுகள் →

### 2.9.1 வைப்புக் காப்புறுதித் திட்டம்

வங்கியின் மூலதனப் போதுமை விகிதாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஏற்புடைய நியதிச்சட்ட வீதமான 0.10% கொண்ட வீதத்தில் தகுதியான வைப்புத் தளத்தின் மீதான காப்புறுதிக் கட்டுப்பணத்தை வங்கி கணிக்கின்றது. பணிப்புரையினால் எடுத்தியம்பப்பட்டவாறு ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலிருந்தும் 15 நாட்களைக் கொண்ட காலமொன்றினுள் ஏற்புடைய கட்டுப்பணத்தை வங்கி அனுப்புகின்றது.

### 2.9.2 பயிர்க் காப்புறுதி அறவீடு

2013 இன் 12ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2013 ஏப்ரல் 01 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பயிர்க் காப்புறுதி அறவீடு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டியதாகும். நடைமுறையில் பயிர்க் காப்புறுதி அறவீடானது வரிக்குப் பிந்திய இலாபத்தின் 1% ஐக் கொடுப்பனவு செய்யப்படுகின்றது

## 2.10 அறிக்கையிடும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் →

அறிக்கையிடும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் 242 ஆம் பக்கத்தில் காணப்படும் குறிப்பு இல. 52 இல் தரப்பட்டுள்ளன.

## 2.11 வழங்கப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் ஆயினும் அறிக்கையிடும் திகதியன்று செயற்பாட்டில் அல்லாதவை →

இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் பின்வரும் புதிய கணக்கீட்டு நியமங்கள், ஏற்கனவே காணப்படுகின்ற நியமங்களுக்கு திருத்தங்கள்/ மேம்படுத்தல்கள் வழங்கப்பட்டன. நியமங்களுக்கான பல புதிய நியமங்களும் திருத்தங்களும் 2020 சனவரி 1 ஆம் திகதிக்குப் பின்னர் தொடங்குகின்ற ஆண்டு காலப்பகுதிகளுக்கு ஏற்புடையவையாகும் என்பதுடன் முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது எனினும், இத் திரட்டிய நிதியியல் கூற்றுகளை தயாரிக்கின்ற போது தொகுதி, இப் புதிய நியமங்களின்/திருத்தங்களின் முன்கூட்டிய பின்பற்றலினை பின்பற்றி இருக்கவில்லை

### 2.11.1 வட்டி வீத அளவீட்டு நியம சீர்திருத்தம் (இநிஅநி 9. இகநி 39, இநிஅநி 7 ஆகியவற்றுக்கான திருத்தங்கள்)

வட்டி வீத அளவீட்டு நியம சீர்திருத்தம் என்பது தொகுதியின் தாக்கத்திற்குள்ளான சொத்துகளின் மற்றும் பொறுப்புகளின் ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை நிர்ணயிப்பதற்கான அடிப்படையில் மாற்றமொன்றினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுவதாகும். விளைவு வட்டி வீதத்தினை இற்றைப்படுத்துவதன் மூலம் வட்டி வீத அளவீட்டு நியம சீர்திருத்தத்தின் விளைவொன்றாக ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை நிர்ணயிப்பதற்கான அடிப்படையில் மாற்றமொன்று காரணமாவதற்கு நடைமுறைரீதியாக உகந்தவற்றை இத்திருத்தங்கள் வழங்குகின்றன. அதன் நிதியியல் கூற்றுகள் மீதான புதிய நியமத்தின் தாக்கத்தை மதிப்பீடும் செயன்முறையினை தொகுதி முன்னெடுக்கின்றது.

### 2.11.2 இநிஅநி 16 இற்கான திருத்தங்கள் - கொவிட்-19 தொடர்புட்ட குத்தகைச் சலுகைகள்

இத்திருத்தங்கள், கொவிட் 19 உலகலாவிய நோய்த்தொற்று நேரடி விளைவொன்றாக தோன்றுகின்ற குத்தகைச் சலுகைகளுக்காக குத்தகைத் திருத்தக் கணக்கீட்டின் மீது இநிஅநி 16 வழிகாட்டலைப் பிரயோகிப்பதிலிருந்து குத்தகைபெறுநர்களுக்கு நிவாரணத்தை வழங்குகின்றன.

இத் திருத்தம் முன்னிருக்கின்ற எதிர்காலத்தில் தொகுதியின்/வங்கியின் நிதியியல் கூற்றுகள் மீது முக்கிய தாக்கத்தினைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படவில்லை.

## 3 மொத்த வருமானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

தொகுதிக்கு பொருளாதார நன்மைகள் கிடைக்கும் என்ற நிகழ்வொன்று காணப்படுகின்ற ரீதியிலும் அத்துடன் வருவாய் நம்பத் தகுந்தவாறு அளவிடக்கூடியது என்ற ரீதியிலும் மொத்த வருவாய் இனங்காணப்படுகின்றது. வருவாய் இனங்காண்பதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட வேண்டிய குறித்த இனங்காணுதலுக்கான மூலப்பிரமாணங்கள் தொடர்புடைய வருமானக் குறிப்புகளின் கீழ் கலந்துரையாடப்பட்டுள்ளன.

| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| வட்டி வருமானம் | **122,512,049** | 118,729,784 | **124,608,182** | 120,351,774 |
| தரகும் கட்டணமும் வருமானம் | **2,710,487** | 1,261,268 | **2,723,087** | 1,269,521 |
| வர்த்தகத்திலிருந்தான தேறிய இலாபம்/(நட்டம்) | **1,273,676** | 1,491,610 | **1,745,329** | 1,963,229 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய சீர்மதிப்பு பெறுமதி இலாபம்/(நட்டம்) | **–** | – | **–** | – |
| நிதியியல் சொத்துகளை இனங்காணாமையிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்) | **241,284** | 22,021 | **241,284** | 22,021 |
| தேறிய ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | **809,564** | 424,376 | **721,612** | 2,203,626 |
| **மொத்த வருமானம்** | **127,547,060** | 121,929,059 | **130,039,494** | 125,810,171 |

## 4 தேறிய வட்டி வருமானம்

**கணக்கீட்டுக் கொள்கை**

**வட்டி வருமானத்தினையும் வட்டி செலவுகளையும் இனங்காணல்**

கடன்தீர் செலவில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்கள், ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட வட்டியுடைய நிதியியல் சொத்துகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சாதனங்கள், வட்டி வருமானம் அல்லது செலவு ஆகிய அனைத்துக்கும் பொருத்தமானவிடத்து, நிதியியல் சொத்து அல்லது நிதியியல் பொறுப்பு கொண்டுசெல்கின்ற தேறிய தொகைக்கு நிதியியல் சாதனத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் அல்லது குறுகிய காலம் ஒன்றினூடாக மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுக் கொடுப்பனவுகளை அல்லது கிடைப்பனவுகளை சரியாக கழிப்பனவு செய்கின்ற விகிதமாக காணப்படுகின்ற விளைவு வட்டி வீதத்தை பயன்படுத்தி பதிவுசெய்யப்பட்டுள்ளன. கணிப்பீடானது அனைத்து நிதியியல் சாதன ஒப்பந்த நியதிகளையும் (உதாரணமாக முன்கொடுப்பனவுத் தெரிவுகள்) கருத்திற் கொள்வதுடன் சாதனத்திற்கு நேரடியாக சாட்டத்தக்க ஏதேனும் கட்டணங்கள் அல்லது அதிகரிக்கின்ற செலவுகளையும் உள்ளடக்குவதுடன் விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றாக காணப்படுகின்றன ஆயினும் எதிரகால கொடுகடன் இழப்புகளை உள்ளடக்கவில்லை.

தொகுதி, அதன் கொடுப்பனவுகளின் அல்லது அதன் கிடைப்பனவுகளின் மதிப்பீடுகளை திருத்தம்செய்யுமாயின் நிதியியல் சொத்து அல்லது நிதியியல் பொறுப்பு கொண்டுசெல்கின்ற தொகை சீர்செய்யப்படுகின்றது. சீர்செய்யப்பட்ட கொண்டுசெல்லும் தொகையானது மூல விளைவு வட்டி வீதத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுவதுடன் கொண்டுசெல்லும் தொகையில் காணப்படும் மாற்றம் நிதியியல் சொத்துக்கான வட்டி வருமானமாகவும் நிதியியல் பொறுப்புகளுக்கான வட்டிச் செலவாகவும் பதிவு செய்யப்படுகின்றது. எவ்வாறாயினும், அத்தகைய காசுக் கிடைப்பனவுகளின் அதிகரித்த மீளஅறவிடும் தன்மையின் விளைவொன்றாக எதிர்கால காசுப் கிடைப்பனவுகள் பற்றிய அதன் மதிப்பீடுகளை அதனைத் தொடர்ந்து வங்கி அதிகரிக்கின்ற மீள் வகைப்படுத்தப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்து ஒன்றிற்காக, அவ் அதிகரிப்பின் விளைவானது மதிப்பிடப்பட்டு மாற்றத் திகதியிலிருந்து விளைவு வட்டி வீதத்திற்கான சீராக்கலொன்றாக இனங்காணப்பட்டுள்ளது.

கொடுகடன் சேதமிழந்த சொத்துகள் தவிர நிதியியல் சாதனங்களுக்கான விளைவு வட்டி வீத்தினைக் கணிக்கின்ற போது வங்கியானது நிதியியல் சாதனத்தின் அனைத்து ஒப்பந்த நியதிகளையும் கருத்திற்கொண்டு எதிர்கால காசுப்பய்ச்சல்களை மதிப்பிடுகின்றது, ஆயினும், எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகளை கருத்திற்கொள்வதில்லை. படிமுறை 3 இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள கொடுகடன் சேதமிழந்த நிதியியல் சொத்துகளுக்காக கொடுகடன் சீர்செய்யப்பட்ட விளைவு வட்டி வீதமானது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகள் உள்ளடங்கலாக மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களை பயன்படுத்தி கணிக்கப்பட்டுள்ளது. கொடுகடன் சீர்செய்யப்பட்ட விளைவு வட்டி வீதம் என்பது மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களை (கொடுகடன் இழப்புகள் உள்ளடங்கலாக) கடன்தீர் செலவிற்கு கழிவுசெய்கின்ற மூல இனங்காணலில் உள்ள வட்டி வீதமாகும்.

நிதியியல் சொத்து ஒன்றின் அல்லது அதனையொத்த நிதியியல் சொத்துகள் தொகுதி ஒன்றின் பதிவு செய்யப்பட்ட பெறுமதியானது சேதஇழப்பு நட்டத்தின் காரணமாக குறைக்கப்பட்டால், சேதஇழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சலை கழிவுசெய்வதற்கு பயன்படுத்தப்பட்ட வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி வட்டி வருமானம் தொடர்ந்தும் இனங்காணப்படும்.

## 4. தேறிய வட்டி வருமானம் (தொடர்ச்சி)

| | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 |
| **4. (அ) வட்டி வருமானம் →** | | | | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 45,288 | 39,263 | 47,754 | 39,263 |
| மத்திய வங்கியுடனான மீதிகள் | – | – | – | – |
| வங்கிகளிலுள்ள இருப்புகள் | 670,783 | 1,416,393 | 1,014,739 | 1,530,935 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | – | – | – | – |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள் | | | | |
| – சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டவை. | 746,742 | 1,051,706 | 1,686,296 | 1,908,594 |
| – சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்டவை | – | – | – | – |
| கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் | | | | |
| – கடன்களும் முற்பணங்களும் | 50,453,489 | 58,097,923 | 50,683,407 | 58,186,998 |
| – படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 70,275,947 | 58,021,604 | 70,740,943 | 58,477,881 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகள் | 319,800 | 102,895 | 435,042 | 208,103 |
| **மொத்த வட்டி வருமானம்** | 122,512,049 | 118,729,784 | 124,608,182 | 120,351,774 |
| **4. (ஆ) வட்டிச் செலவுகள் →** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 1,500,550 | 4,482,281 | 1,745,125 | 4,655,295 |
| இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் பொறுப்புகள் | – | – | – | – |
| கடன்தீர் செலவில் நிதியியல் பொறுப்புகள் | | | | |
| – வைப்பாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | 82,272,680 | 79,645,008 | 82,207,530 | 79,615,032 |
| – படுகடன் பிணையங்களை வைத்திருப்போருக்கு செலுத்தப்படவேண்டியவை | – | – | – | – |
| – ஏனைய கடன்பெறுநர்களுக்கு செலுத்தப்படவேண்டியவை | 771,380 | 2,691,377 | 1,395,577 | 3,513,319 |
| வழங்கப்பட்ட படுகடன் பிணையங்கள் | 3,077,258 | 3,079,104 | 3,077,258 | 3,084,493 |
| **மொத்த வட்டிச் செலவுகள்** | 87,621,868 | 89,897,770 | 88,425,490 | 90,868,139 |
| **தேறிய வட்டி வருமானம்** | 34,890,181 | 28,832,014 | 36,182,692 | 29,483,635 |

### வட்டி வருமானம் எதிர் வட்டிச் செலவுகள்

வரைபடம் 40



## 4. தேறிய வட்டி வருமானம் (தொடர்ச்சி)

### 04. (இ) இலங்கை அரசாங்க பிணையங்களில் இருந்தான தேறிய வட்டி வருமானம் →

கீழே தரப்பட்ட அரசாங்க பிணையங்கள் மீதான வட்டி வருமானமும் வட்டிச் செலவுகளும் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வழிகாட்டல் மூலம் தேவைப்படுத்தப்பட்டவாறு முறையே 4(அ) மற்றும் 4(ஆ) குறிப்புகளில் தரப்பட்ட வட்டி வருமானத்திலும் வட்டிச் செலவுகளிலிருந்தும் பிரித்தெடுக்கப்பட்டுள்ளதுடன், வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 |
| **வட்டி வருமானம்** | | | | |
| **இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துக்கள்** | | | | |
| – சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்டவை | 746,742 | 1,051,706 | 1,680,925 | 1,908,595 |
| – சீர்மதிப்பு பெறுமதியில் பெயர்குறிப்பிடப்பட்டவை | – | – | – | – |
| பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் நிதியியல் சொத்துக்கள் | | | | |
| – கடன்களும் முற்பணங்களும் (மீள் விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்) | 365,666 | 249,813 | 365,666 | 249,813 |
| – படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் | 66,105,095 | 56,465,866 | 66,561,963 | 56,912,554 |
| அனைத்தினையும் உள்ளடக்கிய ஏனைய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்கள் | 319,800 | 102,895 | 435,042 | 208,103 |
| | 67,537,303 | 57,870,281 | 69,043,597 | 59,279,065 |
| **கழிக்குக: வட்டிச் செலவுகள்** | | | | |
| வங்கிகளுக்கு செலுத்த வேண்டியவை (மீள் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 1,041,680 | 3,678,530 | 1,286,255 | 3,862,403 |
| ஏனைய கடன் பெறுநர்களுக்கு செலுத்தவேண்டியவை (மீள் கொள்வனவு ஒப்பந்ததின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | 771,380 | 2,703,823 | 1,406,036 | 3,540,676 |
| | 1,813,060 | 6,382,353 | 2,692,291 | 7,403,079 |
| **இலங்கை அரசாங்க பிணையங்களிலிருந்தான தேறிய வட்டி வருமானம்** | 65,724,243 | 51,487,927 | 66,351,306 | 51,875,986 |

### 4. (ஈ) படுகடன் காலம் தாழ்த்திச் செலுத்தலும் வட்டி வருமானத்திற்கான பிற்போடப்பட்ட தாக்கமும் →

வங்கியானது படுகடன் காலம் தாழ்த்திச் செலுத்தலினை நிராகரித்த அல்லது கொடுப்பனவு பிற்போடுதல்கள் தவிர அனைத்து அதன் வாடிக்கையாளர்களுக்கும் அதன் படுகடன் காலம் தாழ்த்திச் செலுத்தலை, மற்றும் படுகடன் பிற்போடுதலை வழங்கியுள்ளது. படுகடன் காலம் தாழ்த்திச் செலுத்தல் 7% சலுகை வீதத்தில் வழங்கப்பட்டுள்ளதுடன் கடன் காலத்தின் இறுதிவரை கொடுப்பனவுகள் பிற்போடப்பட்டுள்ளன. இரண்டு மாதங்கள் தொடக்கம் ஆறு மாதங்கள் வரை காலம் தாழ்த்தல் காலப் பகுதி வேறுபட்டுள்ளதுடன் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டுள்ள சூழ்நிலையில் 06 மாதங்களுக்கு மேல் நீடிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த வீதத்தில் வட்டி சேகரிக்கப்படுமாயின் நிதியாண்டின் போது வங்கி ரூபா 4,805 மில்லியனை உழைத்திருக்கக்கூடும் எனினும் வங்கி, 7% சலுகை வீதத்தில் திரண்ட அடிப்படையில் ரூ. 2,585 மில்லியன் வட்டி வருமானத்தினை பதிவுசெய்துள்ளதுடன், கடன் காலத்தின் இறுதியில் சேகரிப்பதற்கு இணங்கியது. எனவே வங்கிக்கு வட்டி வருமானம் மீது ஏற்பட்ட முதல் நாள் நட்டம் ரூ. 1,391 மில்லியன் என்பதுடன், மொத்தத்தில் வங்கிக்கு இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட படுகடன் காலம் தாழ்த்திச் செலுத்தல் காரணமாக ரூ. 3,611 மில்லியன் மொத்த நட்டம் ஏற்பட்டது.

## 5 தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமனம் →

**கணக்கீட்டுக் கொள்கை**

வாடிக்கையாளர்களுக்கு தொகுதி வழங்குககின்ற பல்வேறு வகையான சேவைகளிலிருந்து அது கட்டணம் மற்றும் தரகு வருமானங்களை ஈட்டுகின்றது. இவை பின்வரும் இரண்டு வகைகளாக பிரிக்கப்படக் கூடியவை

(அ) குறித்த காலம் ஒன்றிற்காக வழங்கப்படும் சேவையிலிருந்து ஈட்டுகின்ற கட்டணம் மற்றும் தரகு வருமானம் காலப்பகுதியொன்றிற்கு சேவை வழங்குதலுக்காக ஈட்டப்படும் கட்டணம் மற்றும் தரகு அக்காலத்திற்காக ஒன்று திரட்டப்பட்டுள்ளவை.

(ஆ) கொடுக்கல்வாங்கல் சேவைகள் வழங்குவதிலிருந்து ஈட்டப்படும் கட்டணம் மற்றும் தரகு வருமானம்.

## 5. தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமனம் (தொடர்ச்சி)

மூன்றாம் தரப்பினர் ஒருவருக்கான கொடுக்கல்வாங்கல் பேரம்பேசுகையில் மீள்பேரம்பேசுதலிலிருந்து அல்லது பங்கேற்றலிலிருந்து தோன்றுகின்ற கட்டணம் மற்றும் தரகு வருமானம் சேவைநாடிக்கும் கடனாளிக்கும் இடையிலான கொடுக்கல்வாங்கல் நிறைவுபெறுதலின் மீது இனங்காணப்பட்டுள்ளன. ஒருசில செயலாற்றுகையுடன் இணைந்துள்ள கட்டணங்கள் அல்லது கட்டணக் கூறுகள், தொடர்புடைய சேவைகள் செயலாற்றப்படுகின்றமைக்கமைய இனங்காணப்பட்டுள்ளன.

கொடுக்கல்வாங்கல்களுடனும் சேவைக்கட்டணங்களுடனும் தொடர்புடைய கட்டணங்களும் தரகுச் செலவுகளும் சேவைகள் கிடைக்கப்பெறுகின்றவாறு செலவிடப்படுகின்றன. கட்டணமும் தரகுச்செலவுகளும் ஒன்றுதிரளுகின்ற அடிப்படையில் இனங்காணப்படுகின்றன.

| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | **2,710,487** | 1,261,268 | **2,723,087** | 1,269,521 |
| கட்டணம் மற்றும் தரகுச் செலவுகள் | **(154,486)** | (131,954) | **(160,556)** | (136,838) |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **2,556,001** | 1,129,314 | **2,562,531** | 1,132,683 |
| **ஈட்டிக் கொள்ளப்பட்ட வழிகள்** | | | | |
| கடன்கள் | **2,491,151** | 1,070,717 | **2,494,441** | 1,071,091 |
| அட்டைகள் | **5,530** | (10,320) | **5,530** | (10,320) |
| வர்த்தகம் மற்றும் பணவனுப்பல்கள் | **–** | – | **–** | – |
| முதலீட்டு வங்கிச் சேவை | **9,937** | 19,672 | **9,937** | 19,673 |
| வைப்புகள் | **27,964** | 26,743 | **27,964** | 26,752 |
| உத்தரவாதங்கள் | **7,528** | 8,778 | **7,650** | 8,778 |
| ஏனையவை | **13,891** | 13,724 | **17,009** | 16,709 |
| **தேறிய கட்டணமும் தரகு வருமானமும்** | **2,556,001** | 1,129,314 | **2,562,531** | 1,132,683 |

### கட்டணம் மற்றும் தரகு வருமானம் எதிர் கட்டணம் மற்றும் தரகுச் செலவுகள்

வரைபடம் 41



## 6 வர்த்தகப்படுத்தலில் இருந்து இலாபம்/(நட்டம்)

கணக்கீட்டுக் கொள்கை

தேறிய வர்த்தக வருமானமானது வட்டி வருமானம் தவிர “இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள்” இற்கான அனைத்து இலாபம் அல்லது நட்டங்கள் மற்றும் தொடர்புபட்ட பங்கிலாபம் என்பவற்றை உள்ளடக்குவதுடன் வெளிநாட்டு செலாவணியிலிருந்தான வருமானத்தையும் உள்ளடக்குகின்றது.

கொடுப்பனவு ஒன்றிற்கான தொகுதியின் உரிமை நிறுவப்படுகின்றபோது பங்கிலாப வருமானம் இனங்காணப்படுகின்றது.

| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| வெளிநாட்டு செலாவணிமாற்று | | | | |
| வங்கிகளிடமிருந்து | **–** | – | **–** | – |
| ஏனைய வாடிக்கையாளர்களிடமிருந்து | **211,796** | 140,567 | **211,796** | 140,567 |
| நிலையான வருமான பிணையங்கள் | **578,353** | 1,178,660 | **1,050,006** | 1,650,279 |
| பங்குமூலதன பிணையங்கள் | **445,637** | 156,797 | **445,637** | 156,797 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | **37,889** | 15,586 | **37,889** | 15,586 |
| **மொத்தம்** | **1,273,676** | 1,491,610 | **1,745,329** | 1,963,229 |

## 7 இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நியமிக்கப்பட்ட நிதியியல் சாதனங்களிலிருந்து இலாபம்/(நட்டம்)

கணக்கீட்டுக் கொள்கை

இலாபம் அல்லது நட்டம் ஊடாக இனங்காணப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் நிதியியல் பொறுப்புகளின் சீர்மதிப்பு பெறுமதி மாற்றங்களில் இருந்தான அனைத்து தேறாத இலாபங்கள் மற்றும் நட்டங்களை தேறிய சீர்மதிப்புப் பெறுமதி இலாபங்கள்/(நட்டங்கள்), உள்ளடக்குகின்றது.

| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் சொத்துகள் மீதான இலாபம் | **–** | – | **–** | – |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் சொத்துகள் மீதான நட்டம் | **–** | – | **–** | – |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் பொறுப்புகள் மீதான இலாபம் | **–** | – | **–** | – |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியிலுள்ள நிதியியல் பொறுப்புகள் மீதான நட்டம் | **–** | – | **–** | – |
| **மொத்தம்** | **–** | – | **–** | – |

## 8 நிதியியில் சொத்துகளின் இனங்காணாமையிலிருந்து தேறிய இலாபங்கள்/(நட்டங்கள்)

**கணக்கீட்டுக் கொள்கை**

நிதியியல் முதலீடுகளிலிருந்து தேறிய இலாபம்/(நட்டம்) ஆனது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளுடன் தொடர்புடைய நட்டங்களைக் கழித்து இலாபத்தினையும் கடன்தீர் செலவில் இனங்காணப்படாத சொத்தினையும் உள்ளடக்குகின்றது.

| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2020<br>ரூ. '000 | 2019<br>ரூ. '000 | 2020<br>ரூ. '000 | 2019<br>ரூ. '000 |
| **இனங்காணப்பட்டது:** | | | | |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி | – | – | – | – |
| மதிப்புக் குறைக்கப்பட்ட செலவு | – | – | – | – |
| அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதி | 241,284 | 22,021 | 241,284 | 22,021 |
| **மொத்தம்** | **241,284** | 22,021 | **241,284** | 22,021 |

## 9 ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறியது)

**கணக்கீட்டுக் கொள்கை**

### i. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் கையுதிர்த்தல் மீதான இலாபம்/(நட்டம்)

கையுதிர்கின்ற நேரத்தின்போது சொத்து கொண்டுள்ள தொகை மற்றும் கையுதிர்ப்பு விற்று வருவாய்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டின் மீது தேறிய கையுதிர்ப்புச் செலவுகளை கழித்து ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் கையுதிர்ப்பு மீதான இலாபம் அல்லது நட்டம் நிர்ணயிக்கப்படுகின்றது. சொத்தாண்மையின் குறிப்பிடத்தக்க இடர்களும் கைமாறுகளும் வாங்குபவருக்கு மாற்றப்படுகின்ற ஆண்டில் இது ஏனைய தொழிற்பாட்டு வருமானத்தில் இனங்காணப்படுகின்றது.

### ii. வெளிநாட்டு நாணயமாற்று இலாபம் அல்லது/(நட்டம்)

ஒவ்வொரு அறிக்கையிலும் திகதியிலும் வெளிநாட்டு நாணயமாற்று நிலைமைகள் மீள்மதிப்பிடப்படுகின்றன. நாணயமாற்று வீதங்களில் காணப்படுகின்ற மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற இலாபங்களும் நட்டங்களும் அவை நிகழுகின்ற காலத்தில் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

### iii. பங்கிலாப வருமானம்

கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக தொகுதிக்கு உரிமையொன்று தாபிக்கப்படும்போது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக அளவிடப்பட்ட நிதியியல் சொத்துகளில் இருந்து ஈட்டப்பட்ட பங்கிலாபம் இனங்காணப்படுகின்றது.

| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2020<br>ரூ. '000 | 2019<br>ரூ. '000 | 2020<br>ரூ. '000 | 2019<br>ரூ. '000 |
| முதலீட்டு ஆதனங்கள் மீதான இலாபம்/(நட்டம்) | – | – | 53,762 | – |
| ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணம் விற்பனை மீதான இலாபம்/(நட்டம்) | 593 | 11,432 | 593 | 11,436 |
| படிமுறை 3 | **16,941,127** | 9,138,886 | **18,489,542** | 10,668,447 |
| **மொத்தக் கடன்களும் முற்பணங்களும்** | **525,786,983** | 458,661,898 | **528,404,713** | 462,440,480 |
| **(கழிக்குக): ஒன்றுதிரட்டிய சேதஇழப்பு:** | | | | |
| படிமுறை 1 | **2,948,093** | 1,601,273 | **3,059,041** | 1,707,088 |
| படிமுறை 2 | **897,811** | 271,001 | **973,686** | 314,032 |
| படிமுறை 3 | **5,145,919** | 2,394,667 | **6,538,919** | 3,783,076 |
| **மொத்த சேதஇழப்பு** | **8,991,823** | 4,266,941 | **10,571,646** | 5,804,195 |
| **தேறிய கடன்களும் முற்பணங்களும்** | **516,795,160** | 454,394,957 | **517,833,067** | 456,636,285 |

*இது பிரதானமாக மீள் விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வைப்பு மற்றும் பிணையங்களுக்கு எதிரான கடன்களை உள்ளடக்குகின்றது.

## 21. கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் (தொடர்ச்சி)

### 21. (அ) உற்பத்தி அடிப்படையிலான பகுப்பாய்வுகள் →

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 |
| **உற்பத்தி அடிப்படையிலான** | | | | |
| வரத்தக நிதி | – | – | – | – |
| மத்திய வங்கி திறைசேரி உண்டியல்கள் | – | – | – | – |
| குத்தகை வாடகையும் கிடைக்கப்பெறத்தக்கவையும் (21 உ) | – | – | 521,293 | 472,747 |
| அடகுபிடித்தல் | 42,398,950 | 36,754,318 | 42,437,557 | 36,792,150 |
| ஊழியர் கடன்கள் | 11,330,749 | 7,565,685 | 11,479,896 | 7,689,104 |
| **தவணைக் கடன்கள்** | | | | |
| குறுகிய காலம் | 595,322 | 922,161 | 1,112,147 | 922,161 |
| நீண்டகாலம் | 462,663,155 | 408,213,779 | 465,085,825 | 411,338,726 |
| **ஏனையவைகள்** | | | | |
| இலங்கை அரசாங்க பிணையங்கள் | – | – | – | – |
| இலங்கை அரசாங்கத்திற்கான கடன்கள் | 2,075,000 | 2,075,000 | 2,075,000 | 2,075,000 |
| மீள் விற்பனை உடன்படிக்கையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | 6,723,807 | 3,130,955 | 5,692,995 | 3,150,592 |
| **கூட்டு மொத்தம்** | 525,786,983 | 458,661,898 | 528,404,713 | 462,440,480 |

### 21. (ஆ) நாணய அடிப்படையிலான பகுப்பாய்வு →

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 |
| **நாணய ரீதியிலான பகுப்பாய்வு** | | | | |
| இலங்கை ரூபா | 520,402,382 | 447,213,959 | 523,020,112 | 450,992,541 |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 5,384,601 | 11,447,939 | 5,384,601 | 11,447,939 |
| **கூட்டு மொத்தம்** | 525,786,983 | 458,661,898 | 528,404,713 | 462,440,480 |

## 21. கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் (தொடர்ச்சி)

### 21. (இ) தொழிற்றுறை அடிப்படையிலான பகுப்பாய்வு →

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 |
| **தொழிற்றுறை அடிப்படையிலான** | | | | |
| விவசாயமும் கடற்றொழிலும் | **33,067,190** | 32,854,359 | **33,728,060** | 33,543,973 |
| தயாரித்தல் | **–** | – | **767,442** | 960,704 |
| சுற்றுலாத் துறை | **63,691** | 46,264 | **162,693** | 136,981 |
| போக்குவரத்து | **1,643,128** | 1,695,189 | **1,720,111** | 1,763,130 |
| நிர்மாணம்/வீடமைப்பு | **152,457,313** | 128,128,654 | **152,905,473** | 128,361,035 |
| வர்த்தகர்கள் | **–** | – | **623,817** | 708,986 |
| புதிய பொருளாதாரம் | **–** | – | **40,889** | 13,462 |
| **ஏனையவை** | | | | |
| நிதியும் வியாபாரச் சேவைகளும் | **8,540,220** | 11,663,968 | **8,775,528** | 11,663,968 |
| உட்கட்டமைப்பு | **96,579,186** | 71,020,455 | **96,742,844** | 71,020,455 |
| மின் உற்பத்தியும் வலுவும் | **15,963,463** | 12,674,792 | **15,963,463** | 12,674,792 |
| கல்வி | **9,071,736** | 36,724,769 | **9,084,023** | 36,724,769 |
| அடகு/தனிப்பட்டவை/ஏனையவை | **208,401,056** | 163,853,448 | **207,890,370** | 164,868,223 |
| **கூட்டு மொத்தம்** | **525,786,983** | 458,661,898 | **528,404,713** | 462,440,480 |

**குறிப்பு:** 2020 மார்ச் 11 அன்று கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நிலுவைக் கடன்களின் ரூபா 26,907.85 மில்லியன் பெறுமதியினை வங்கி தொகுதிக் கடன்களாக மாற்றியது (திறைசேரி உத்தரவாதமாக மாற்றப்பட்டது). எனவே இது 2020 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு பணம் மற்றும் முற்பணங்களிலிருந்து படுகடன் மற்றும் ஏனைய சாதனங்களுக்கு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் 2021 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிலுவைக் கடன்களின் ரூபா 59,365.66 மில்லியன் பெறுமதியினை வங்கி தொகுதிக் கடன்களாக மாற்றவுள்ளது (திறைசேரி உத்தரவாதமாக மாற்றப்பட்ட).

### 21. (ஈ) ஆண்டின்போதான சேதஇழப்பு அசைவுகள் →

**கணக்கீட்டுக் கொள்கை**

**தனிப்பட்ட சேதஇழப்பு மதிப்பீடு**

கடன்தீர் செலவில் கொண்டுசெல்லப்பட்ட நிதியியல் சொத்துகளுக்காக (வங்கிகளிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகைகள், வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் அதேபோன்று கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள்- படுகடன் மற்றும் ஏனைய சாதனங்கள் போன்ற) தொகுதியானது தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமுள்ளதான நிதியியல் சொத்துகளுக்காக தனியாகவும் அல்லது தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமற்றதாகவுள்ள நிதியியல் சொத்துகளுக்காக கூட்டாகவும் சேதஇழப்பு காணப்படுகின்ற புறநிலைச் சான்று உள்ளதா என்பதனை தனிப்பட்ட ரீதியில் முதலில் மதிப்படுகின்றது. தனிப்பட்ட ரீதியில் மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்து ஒன்றுக்காக சேதஇழப்புக்கு புறநிலைச் சான்று காணப்படவில்லையென தொகுதி நிர்ணயிக்குமாயின், தொகுதி, அதையொத்த கடன் இடர்நேர்வு குணாதியசங்களுடன் கூடிய நிதியியல் சொத்துக் குழுவொன்றில் உள்ளடக்கி சேதஇழப்பிற்காக கூட்டாக அவற்றை மதிப்பீடு செய்யும்.

சேதஇழப்புக்காக தனிப்பட்ட ரீதியில் மதிப்பிடப்பட்ட சொத்துகளும் சேதஇழப்பு நட்டம் இனங்காணப்பட்டுள்ள அல்லது தொடர்ந்தும் இனங்காணப்படவுள்ளவையும் கூட்டான சேதஇழப்பு மதிப்பீட்டினுள் உள்ளடக்கப்படுவதில்லை.

## 21. கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் (தொடர்ச்சி)

### 21. (ஈ) ஆண்டின்போதான சேதஇழப்பு அசைவுகள் (தொடர்ச்சி)

சேதஇழப்பு நட்டம் ஒன்று ஏற்பட்டுள்ளது என்ற புறநிலைச் சான்றொன்று காணப்படுமாயின் நட்டத்தின் தொகையானது சொத்து கொண்டு செல்கின்ற தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சலின் தற்போதைய பெறுமதிக்கும் (இன்னும் ஏற்படாத எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால கடன் இழப்புகள் தவிர) இடையிலான வேறுபாடாக அளவிடப்படுகின்றது. ஏற்பாட்டு கணக்கொன்றினைப் பயன்படுத்துவதனூடாக சொத்தின் கொண்டுசெல்லும் தொகை குறைக்கப்படுவதுடன் நட்டத் தொகையானது வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது. சேதஇழப்பு நட்டத்தினை அளவிடும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் கழிவுக்கு பயன்படுத்தப்பட்ட வட்டி வீதத்தில் கொண்டுசெல்லும் தொகையை கழிப்பதன் மீது வட்டி வருமானம் தொடர்ந்தும் ஒன்றுதிரட்டப்படும். வட்டி வருமானமானது “வட்டி மற்றும் அதனையொத்த வருமானம்” இன் பாகமொன்றாக பதியப்படுகின்றது.

மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதியானது நிதியியல் சொத்தின் அடிப்படை வட்டி விளைவு வீதத்தில் கழிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு கடன் மாறுபடுகின்ற வட்டி வீதத்தினைக் கொண்டிருக்குமாயின் ஏதேனும் சேதஇழப்பு நட்டத்தினை மதிப்பிடுதல் நடப்பு விளைவு வட்டி வீதத்திலாகும். தொகுதியானது வர்த்தக சொத்துகளை கடன்களுக்கும் வருமதிகளுக்கும் மீள்வகைப்படுத்தியிருப்பின் ஏதேனும் சேதஇழப்பு நட்டத்தினை அளவிடுவதற்கான கழிவு வட்டி வீதமானது மீளவகைப்படுத்தல் திகதியில் நிர்ணயிக்கப்பட்ட புதிய விளைவு வட்டி வீதம் ஆகும். பிணையமாக்கப்பட்ட நிதியியல் சொத்தொன்றின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக் கணிப்பானது பிணையத்தினை பெற்றுக் கொள்வதற்கான அல்லது விற்பனை செய்வதற்கான மீட்புரிமைத்தடை செலவுகளிலிருந்து, மீட்புரிமைத்தடை நிகழுவதற்கு சாத்தியமிருப்பினும் இல்லாதிருப்பினும், தோன்றக்கூடிய காசுப்பாய்ச்சல்களை பிரதிபலிக்கின்றது.

எதிர்காலத்தில் கடன்களை மீளஅறவிடுவதற்கான நம்பகத்தன்மை காணப்படாத போது அத்துடன் அனைத்து பிணைய உறுதிகளும் தேறியுள்ள அல்லது தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ள போது கடன்கள் அவற்றுடன் இணைந்த கொடுப்பனவுகளுடன் பதிவழிப்புச் செய்யப்படுகின்றன. அதனைத் தொடர்ந்து வருகின்ற ஆண்டொன்றில் சேதஇழப்பு இனங்காணப்பட்ட பின்னர் நிகழ்வொன்று நேர்ந்தமையினால் மதிப்பிடப்பட்ட சேதஇழப்பு நட்டத் தொகை அதிகரித்திருக்குமானால் அல்லது குறைந்திருக்குமானால் முன்னர் இனங்காணப்பட்ட சேதஇழப்பு நட்டமானது ஒதுக்கீட்டுக் கணக்கினை சீராக்குவதனூடாக அதிகரிக்கப்படுகின்றது அல்லது குறைக்கப்படுகின்றது. எதிர்கால பதிவழித்தல் ஒன்று பின்னர் மீள்அறவிடப்படுமாயின், மீள் அறவீடானது “கடன் நட்ட செலவுகள்” இற்கு வரவு வைக்கப்படுகின்றது.

**கூட்டான சேதஇழப்பு மதிப்பீடு**

தனிப்பட்ட ரீதியாக மதிப்பிடப்பட்ட நிதியியல் சொத்தொன்றுக்காக சேதஇழப்பு காணப்படுகின்றமைக்கு புறநிலைச் சான்று இல்லையென தொகுதி நிர்ணயிக்குமாயின் அச்சொத்தினை அதையொத்த கடன் இடர்நேரவு குணாதியசங்களுடன் கூடிய நிதியியல் சொத்து குழுவொன்றில் உள்ளடக்கி சேதஇழப்புக்காக கூட்டாக அவற்றை மதிப்பீடு செய்யும்.

சேதஇழப்பிற்காக கூட்டாக மதிப்பிடப்பட்டுள்ள நிதியியல் சொத்துகள் குழுவொன்றின் மீதான எதிர்கால காசுப்பாய்ச்சல்கள், தொகுதியில் காணப்படும் அதற்குச் சமமான கடன் இடர் பண்புகளுடன் கூடிய சொத்துகளுக்கான எதிர்பார்க்கப்பட்ட நட்ட அனுபவங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. எதிர்பார்க்கப்பட்ட நட்ட அனுபவமானது வரலாற்று நட்ட அனுபவம் அடிப்படையாக அமைந்துள்ள நடப்பு நிலைமைகளின் தாக்கத்தினை பிரதிபலிப்பதற்கும் அனுபவமானது தற்போது நிலைத்திருக்காத வரலாற்றுக் காலத்தில் நிலைமைகளின் தாக்கத்தினை அகற்றுவதற்கும் நடைமுறையில் அவதானிக்கத்தக்க தரவுகளின் அடிப்படையில் சீர்செய்யப்பட்டுள்ளது. எதிர்கால காசுப்பாய்ச்சலிலுள்ள மாற்றங்களின் மதிப்பீடுகள், ஆண்டுக்கு ஆண்டு தொடர்புடைய அவதானிக்கத்தக்க தரவுகளில் உள்ள மாற்றங்களைப் பிரதிபலித்து, பணிப்புரைரீதியாக ஒத்துக் காணப்படுகின்றது (வேலையின்மை வீதங்கள், ஆதன விலைகள், பொருட்கள் விலைகள், கொடுப்பனவு நிலைமைகள் என்பவற்றில் மாற்றங்கள் அல்லது தொகுதியில் அத்துடன் அவற்றின் பரிமாணத்தில் ஏற்பட்ட நட்டங்களைக் குறித்துக் காட்டுகின்ற ஏனைய காரணிகள் போன்றவை). எதிர்கால காசுப்பாய்ச்சல்களை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்பட்ட முறையியலும் ஊகங்களும், நட்ட மதிப்பீடுகள் மற்றும் உண்மையான நட்ட அனுபவம் என்பவற்றிற்கிடையிலான எவையேனும் வேறுபாடுகளைக் குறைப்பதற்காக கிரமமாக மீளாயப்படுகின்றன.

**கடன்களையும் வருமதிகளையும் பதிவழிப்புச் செய்தல்**

அநிஅநி 9 இன் கீழ் பதிவழிப்புக்கான வங்கியின் கணக்கீட்டுக் கொள்கையானது இகநி 39 இன் கீழ் இருந்ததை ஒத்ததாகும். அறவிடுவதற்கு உண்மையான எதிர்பார்க்கை காணப்படாத போதும் நிலுவையினை அறவிடுவிவதில் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் சோர்வடைகின்ற போதும் கடன்கள்(மற்றும் தொடர்புடைய சேதஇழப்பு ஒதுக்கீட்டுக் கணக்குகள்) வழமையாக பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ பதிவழிப்புச் செய்யப்படுகின்றன. கடன்களுக்கு பிணையளிக்கப்பட்டுள்ளவிடத்து, இது பொதுவாக பிணையம் தேறியதிலிருந்தான ஏதேனும் கிடைப்பனவுகள் கிடைக்கப்பெற்றதன் பின்னராகும், பதிவழிக்கப்படவேண்டிய தொகை ஒன்றுதிரட்டிய இழப்பு ஒதுக்கீட்டினை விட பெரிதாகவிருப்பின், வேறுபாடானது மொத்த கொண்டு செல்லும் தொகைக்கு எதிராக அப்போது பிரயோகிக்கப்பட்ட ஒதுக்கீட்டுக்கான சேர்த்தலொன்றாக முதலில் கொள்ளப்படும். பதிவழிப்பொன்று பின்னர் அறவிடப்படுமாயின், அறவிடப்பட்ட தொகை, ”ஏனைய தொழிற்படுத்தல் வருமானத்தில்” வரவுவைக்கப்படுகின்றது.

**பிணைய உறுதிகள் விலைமதிப்பீடு**

நிதியியல் சொத்துகளின் இடரினைக் குறைப்பதற்காக இயலக்கூடிய தருணங்களில் தொகுதியானது பிணைய உறுதிகளை பயன்படுத்துகின்றது. காசு, தங்கம், அரச பிணையங்கள் ஆகிய பல்வேறு வடிவங்களில் பிணைய உறுதி ஏற்படுத்தப்படுகின்றது. பிணைய உறுதியாக வைக்கப்பட்டிருக்கும் நிதியியல் சொத்துகளை மதிப்பீடு செய்வதற்காக வங்கியானது நடப்புச் சந்தை தரவுகளை இயலக்கூடிய அளவிற்கு பயன்படுத்துகின்றது.

சேதஇழப்பு கொள்கை பற்றிய விபரங்கள் 154 ஆம் பக்கத்தில் குறிப்பு இல. 2.5.2 இல் தரப்பட்டுள்ளன.

## 21. கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் (தொடர்ச்சி)

### 21. (ஈ) ஆண்டின்போதான சேதஇழப்பு அசைவுகள் (தொடர்ச்சி)

| | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31இல் உள்ளவாறு | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **கட்டம் 1** | | | | |
| சனவரி 01 அன்று உள்ளவாறு மீதி | **1,601,273** | 1,610,731 | **1,707,088** | 1,610,731 |
| தொழில் ஒருங்கிணைப்பு ஊடான கையகப்படுத்தல் | **–** | – | **–** | 84,481 |
| வருமானக் கூற்றுக்கான விதிப்பனவு/(மீள்பதிவு) | **1,346,820** | (9,458) | **1,351,953** | 11,876 |
| ஆண்டின் போதான பதிவழிப்பு | **–** | – | **–** | – |
| ஏனைய அசைவுகள் | **–** | – | **–** | – |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு** | **2,948,093** | 1,601,273 | **3,059,041** | 1,707,088 |
| **கட்டம் 2** | | | | |
| சனவரி 01 அன்று உள்ளவாறு மீதி | **271,001** | 272,348 | **314,032** | 272,348 |
| தொழில் ஒருங்கிணைப்பு ஊடான கையகப்படுத்தல் | **–** | – | **–** | 43,159 |
| வருமானக் கூற்றுக்கான விதிப்பனவு/(மீள்பதிவு) | **626,810** | (1,347) | **659,654** | (1,476) |
| ஆண்டின் போதான பதிவழிப்பு | **–** | – | **–** | – |
| ஏனைய அசைவுகள் | **–** | – | **–** | – |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு** | **897,811** | 271,001 | **973,686** | 314,032 |
| **கட்டம் 3** | | | | |
| சனவரி 01 அன்று உள்ளவாறு மீதி | **2,394,667** | 1,963,230 | **3,783,076** | 1,963,230 |
| தொழில் ஒருங்கிணைப்பு ஊடான கையகப்படுத்தல் | **–** | – | **–** | 1,389,693 |
| வருமானக் கூற்றுக்கான விதிப்பனவு/(மீள்பதிவு) | **2,763,609** | 447,061 | **2,783,032** | 450,255 |
| ஆண்டின் போதான பதிவழிப்பு | **(12,358)** | (15,624) | **(12,358)** | (15,624) |
| ஏனைய அசைவுகள் | **–** | – | **(14,831)** | (4,478) |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு** | **5,145,919** | 2,394,667 | **6,538,919** | 3,783,076 |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு மொத்த சேதஇழப்பு ஏற்பாடு** | **8,991,823** | 4,266,941 | **10,571,646** | 5,804,195 |

### 21. (உ) குத்தகை மற்றும் தவணைக்கொடுப்பனவு திட்ட வருமதிகள் →

| | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31இல் உள்ளவாறு | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| மொத்த குத்தகை மற்றும் தவணைக்கொடுப்பனவு திட்ட வருமதிகள் | **–** | – | **521,565** | 473,018 |
| உழைக்கப்படாத வட்டி சொத்து | **–** | – | **148,555** | 133,040 |
| உழைக்கப்படாத வட்டி பொறுப்பு | **–** | – | **(148,827)** | (133,311) |
| **தேறிய குத்தகை மற்றும் தவணைக்கொடுப்பனவு திட்ட வருமதிகள்** | **–** | – | **521,293** | 472,747 |

## 21. கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் (தொடர்ச்சி)

### 21. (ஊ) கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு கொவிட்-19 இன் தாக்கமும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடும் →

### பொதுநோக்கு

2020 மார்ச் 11 அன்று கொவிட்-19 பரவல் உலக சுகாதார நிறுவனத்தினால் உலகளாவிய நோய்த்தொற்றாக உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றானது உலக பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க பாதகமான தாக்கத்தினை தொடர்ந்தும் கொண்டிருக்கின்றது. அத்தியாவசியமற்ற தொழில்களை மூடுதல் உள்ளடங்களாக வைரஸ் பரவலினை கட்டுப்படுத்துவதற்கு இரண்டாம் காலாண்டில் எடுக்கப்பட்ட வழிமுறைகள் நோய்த்தொற்று பரவலினை ஆரம்பத்தில் கட்டுப்படுத்துவதில் வெற்றியளித்து மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் இவ் வழிமுறைகளை பகுதியளவில் தளர்த்துவதற்கு இயலச்செய்தது. இதன் விளைவாக, பொருளாதாரத்தின் சில துறைகள் செயற்பாடுகளில் மீட்சி ஒன்றினை கண்ணுற்றன. எனினும், அரசாங்கத்தினால் சட்டமாக்கப்பட்ட பௌதீக ரீதியான இடைவெளி வழிமுறைகளை அண்மையில் மீண்டும் இறுக்கமாக்குகின்ற இடர்நேர்வொன்று காணப்படுவதுடன் நோய்தொற்று வீதங்கள் மீண்டும் உயர்வடைவதற்கு பதிலிறுத்தி தொழில்கள் முன்னர் எதிர்பார்க்கப்பட்ட மட்டங்களினை தாண்டி பொருளாதார நடவடிக்கையினைப் பாதிக்ககூடும்.

பொருளாதார வளர்ச்சியுடனும் தொழிலின்மையுடனும் தொடர்புடைய தொடர்ச்சியான நிச்சயமின்மையுடன் ஒட்டுமொத்த பொருளாதாரமும் தொடர்ந்தும் உலகளாவிய நோய்த்தொற்று முந்திய மட்டத்திற்கு கீழ் தொழிற்படுகின்றன, இது இறுதியாக கொவிட்- 19 இற்கான செயல்திறன்வாய்ந்த தடுப்புமருந்தொன்றினைப் பரவச்செய்வதன் மூலம் மாத்திரமே தீர்க்கப்படக்கூடியதாகவிருக்கும், இதன் விளைவாக, நாம் நிச்சயமற்ற பேரண்டப் பொருளாதார சூழல் ஒன்றில் தொடர்ந்தும் தொழிற்படுகின்றோம். இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாக திரட்டிய நிதியியல் கூற்றுகளை தயாரித்தலானது இனங்காணப்பட்ட மற்றும் அளவிடப்பட்ட சொத்துக்கள், தொகைகள், பொறுப்புகள், தேறிய வருமானம், அனைத்தைனையும் உள்ளடக்கிய வருமானம் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் என்பவற்றினை பாதிக்கின்ற மதிப்பீடுகளையும் ஊகங்களையும் ஏற்படுவதற்கு முகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. நிதியியல் சாதனங்களின் விலை மதிப்பீடு, கொடுகடன் இழப்புக்கான ஒதுக்கு, சொத்து மதிப்பிழப்பு, வருமான வரிகள், ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாராத பொறுப்புகள், தொழிலுக்கு பிந்திய மற்றும் ஏனைய நீண்டகால நலத் திட்ட ஊகங்கள் ஆகிய பரப்புகளில் முக்கிய மதிப்பீடுகளும் ஊகங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. உண்மையான மதிப்பீடுகள் இம் மதிப்பீடுகளிலிருந்தும் ஊகங்களிலிருந்தும் வேறுபடக்கூடியன. கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றானது கணக்கீட்டு மதிப்பீடுகளுடனும் ஊகங்களுடனும் தொடர்புபடுவதனால் அது நிச்சயமின்மையினை தீவிரப்படுத்துவதுடன் பொருளாதார மற்றும் சந்தை சூழலில் மதிப்பிடுவதில் தீர்மானத்தினை பிரயோகிப்பதற்கான தேவையினையும் முக்கிய மதிப்பீடுகள் மீதான அதன் தாக்கத்தினையும் அதிகரிக்கின்றது. குறிப்பாக கொடுகடன் இழப்புகள், நிதியியல் சாதனங்களின் விலை மதிப்பீடு மற்றும் சொத்து சேத இழப்பு என்பவற்றுக்கான ஒதுக்கீட்டுடன் தொடர்புடைய மதிப்பீடுகளையும் ஊகங்களையும் பாதிக்கின்றது.

### நிதியியல் சாதனங்களின் விலைமதிப்பீடு

சீர்மதிப்பு பெறுமதியினை மதிப்பிடுதல் தீர்மான பிரயோகத்தினை வேண்டுகின்றது. தீர்மானத்தின் வகையும் அளவும் கிடைக்கப்பெறுகின்ற அவதானிக்கத்தக்க சந்தை தகவல்களின் அளவிலேயே அதிகளவில் சார்ந்துள்ளது. கொவிட்-19, உலகளாவிய நோய்த்தொற்றானது சந்தைத் தளம்பலினை அதிகரித்துள்ளதுடன் சில நிதியியல் சாதனங்களின் வர்த்தகப்படுத்தல் அளவுகளை எதிர்மறையாக பாதித்துள்ளது. இதன் விளைவாகவும் நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்பு பெறுமதியினை நிர்ணயிப்பதற்கான எமது செயன்முறையின் பகுதியாகவும் உலகளாவிய நோய்த்தொற்று தொடங்கியதிலிருந்து இந் நிதியியல் சாதனங்களின் மிகவும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சீர்மதிப்பு பெறுமதியினை நிர்ணயிக்கின்ற குறிக்கோளுடன் வேறுவகையில் பொதுவாக வேண்டப்பட்டிருந்ததைவிட நிதியியல் சாதனங்களின் பரந்தளவிலான தொகுதியொன்றுக்கான தீவிரமான தீர்மான மட்டமொன்றினை பிரயோகித்துள்ளோம்.

### கொவிட்-19 இற்கு பதிலிறுத்தி அரசாங்கத்தின் கடன்வழங்கல் நிகழ்ச்சித்திட்டங்கள்

எமது பொருளாதார கண்ணோட்டத்தின் உள்ளார்ந்தமானது வைரஸின் இரண்டாம் மற்றும் அதனைத் தொடர்ந்த அலைகளுக்கு அரசாங்கம் பதிலிறுத்திய விதத்தினை ஊகமாகக் கொண்டுள்ளதுடன், செயல்திறன் வாய்ந்த, பாரியளவில் உற்பத்தி செய்யப்பட்ட தடுப்புமருந்து பரவல் 2021 காலப்பகுதியில் பொருளாதாரம் தொடர்ந்தும் மீட்சி பெறுவதற்கு வழிவகுக்கும். பொருளாதார சுருக்கத்தின் கால அளவு மற்றும் தீவிரத்தன்மை மற்றும் எதிர்கால மீட்சியின் இறுதிக் காலம் மற்றும் அளவு என்பன தொடர்பிலானவை உள்ளடங்களாக இவ் எதிர்பார்கையிலிருந்து உண்மையான அனுபவம் முக்கியமாக வேறுபடலாம். இவை அறவிடத்தக்க தொகைகளில் குறைவுகளுக்கு வழிவகுக்கக்கூடியதுடன், இதன் பயனாக சேத இழப்பு விதிப்புகளை தோற்றுவிக்கக் கூடியன. இலங்கை அரசாங்கமானது இலங்கை மத்திய வங்கி ஊடாக நிறுவனங்களினதும் தனிப்பட்டவர்களினதும் நிதியியல் இடர்களை தீர்ப்பதற்கு பல நிதியியல் ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்கியுள்ளது. படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், மீள்-நிதியிடல் நிகழ்ச்சித்திட்டங்கள், தொழிற்படு மூலதன கடன்கள், தளர்த்தப்பட்ட நாணய மற்றும் இறைக் கொள்கைகள் என்பன உள்நாட்டு பொருளாதாரத்தின் மீது குறிப்பிடத்தக்க சாதகமான மாற்றத்தினை கொண்டுள்ளதுடன் அவ் அனைத்து வழிமுறைகளும் கூட்டாக பொருளாதாரத்தினை மீட்டெடுப்பதற்கு முயற்சிக்கின்றன. படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், மற்றும் கொடுப்பனவு பிற்போடல் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற சில நடவடிக்கைகள் வங்கியின் விளைவு வட்டி வீதத்தினை எதிர்மறையாக பாதிக்கலாம். எனினும் நிலவுகின்ற குறைவான வட்டிவீத கட்டமைப்பு (வைப்புகளுக்கான), குறைவான விளைவு வட்டி வீதங்கள் மீதான எதிர்மறையான தாக்கத்தினை சில மட்டத்திற்கு தணித்துள்ளன. வங்கியானது சில துறைகளில் தவணை தவறுதல்களையும் படுகடனை செலுத்ததவறுதல்களையும் உயர்வான அளவில் அனுபவிக்கலாம் என்பதுடன் உயர்வான மட்டத்தில் நிகழக்கூடிய சேத இழப்பினையும் இத்துறைகளில் எதிர்பார்க்கலாம்.

வங்கியானது படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தலை அல்லது கொடுப்பனவு பிற்போடல்களை மறுத்தவர்கள் தவிர அதன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அதன் முதலாவது படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தலையும் கொடுப்பனவு பிற்போடல்களையும் வழங்கியுள்ளது. படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தல் 7% கொண்ட சலுகை வீதத்தில் வழங்கப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவுகள் கடன் காலத்தின் இறுதி வரை பிற்போடப்பட்டுள்ளன. படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தல் காலம், 2 மாதங்களில் இருந்து 6 மாதங்கள் வரை வேறுபடுவதுடன் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைககளில் அது 6 மாதங்களுக்கு மேல் நீடிக்கப்பட்டுள்ளது. வங்கி அதன் இரண்டாவது படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தலை கொவிட்-19 இன் இரண்டாம் அலை தோற்றத்துக்கு பதிலிறுத்தலுடன் ஒக்டோபர் மாத காலப் பகுதியில் வழங்கியது. தகைமையுடைய வாடிக்கையாளர்கள் ஆறு மாதங்களை கொண்ட உயர்ந்தபட்ச காலப் பகுதியொன்றுக்கு தமது மூலதனம் அல்லது வட்டியினை பிற்போட உரித்துடையவராவர் என்பதுடன் பிற்போடப்பட்ட காலத்தின் இறுதியில் மொத்த நிலுவை மூலதனம், திறைசேறி உண்டியலுடன் சேர்த்த வீதத்தில் திரண்ட வட்டி வீதமொன்றுடன் கடனொன்றாக மாற்றம் செய்யப்பட்டது.

## 21. கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் (தொடர்ச்சி)

### 21. (ஊ) கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு கொவிட்-19 இன் தாக்கமும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடும் (தொடர்ச்சி)

### கொடுகடன் இழப்புகளுக்கான ஒதுக்கீடு

கொவிட்-19 உலகலாவிய நோய்த் தொற்றில் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு நிகழ்ந்துள்ளதா என்பதை தீர்மானித்தலானது வெளிப்படுகின்ற பேரண்ட பொருளாதாரச் சூழல் பற்றிய மதிப்பீடு, எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் வழங்கியுள்ள பல்வேறு வாடிக்கையாளர் நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தனிப்பட்டவர்களுக்கும் வியாபாரங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்ற அரசாங்கத்தின் ஒருபோதுமில்லாத அளவிலான நிவாரணங்கள் என்பன தொடர்பிலானவை உள்ளடங்களாக பல எண்ணிக்கையான விடயப்பரப்புகளில் தீவிரமான தீர்மானப் பிரயோகம் ஒன்றினை வேண்டுகின்றது. சில்லறை மற்றும் வர்த்தக, அத்துடன் அரசாங்க வாடிக்கையாளர்கள் இரண்டிற்கும் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை அநுசரித்து வட்டி அல்லது முதன்மை தொகையினை பிற்போடுதலானது நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிற்போடுதல் வழங்கப்பட்டிருந்த காரணத்தினால் மாத்திரம் கட்டம் இரண்டிற்கு நகர்வதற்கு தூண்டுகின்ற கொடுகடன் இடர்நேர்வில் கணிசமான அதிகரிப்பினை தன்னியக்கமாக விளைவித்திருக்கவில்லை.

எனினும், கடன் ஒன்றின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட் காலத்தின் மீது நிகழுகின்ற தவணைதவறுதல் இடர்நேர்வில் மாற்றங்கள் பற்றிய எமது மதிப்பீட்டில் அமைந்த கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகிறது என நாம் நிர்ணயிப்போமாயின், நிவாரண நிகழ்ச்சித்திட்டமொன்றில் கடனொன்றை உட்சேர்த்தலானது கட்டம் 2 இற்கான அதன் இடப்பெயர்வை தடுக்காது. கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றினால் அதிகமாக பாதிக்கப்பட்ட தொழிற்துறைகளை நிர்ணயிப்பதில் நாம் தீர்ப்பினை பிரயோகித்து அரசாங்க உதவியின் நன்மையினை கருத்தில் கொண்டதன் பின்னர் இடர்நேர்வு தரப்படுத்தல் மீதான இணைந்த தாக்கத்தினை மதிப்பிட்டுள்ளோம். 12 மாத மற்றும் ஆயுட் காலம் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புகள் ஆகிய இரண்டினையும் அளவிடுவதில் தவணைதவறுதல் நிகழுந்தன்மை, நட்டம் தரப்பட்ட தவணைதவறுதல் மற்றும் தவணைதவறுதலுக்குள்ளாகும் தன்மை வழியலகுகள் என்பனவற்றை எமது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு மாதிரிகள் தூண்டுகின்றன. இ.நி.அ.நி 09 இன் கீழ் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அளவீட்டு நோக்கத்திற்காக தரப்படுத்தப்பட்ட வியாபாரம் மற்றும் அரசாங்க சொத்துப் பட்டியல்களுக்காக, கிடைக்கப்பெறுகின்ற நீண்ட போக்குடைய தவணைதவறுதல் நிகழுந்தன்மை, நட்டம் தரப்பட்ட தவணைதவறுதல் மற்றும் தவணைதவறுதலுக்குள்ளாகும் தன்மை என்பனவும் முன்னோக்கி எதிர்பார்க்கின்ற தகவல்களை கூட்டிணைப்பதன் ஊடாக அதே நேர வழியலகுகளுக்கு மாற்றம்செய்யப்பட்டுள்ளன. சொத்துப் பட்டியல்களுக்கான முன்னோக்கி எதிர்நோக்குகின்ற தகவல் மாறிலிகளுள் எவை பொருத்தமானவை என்பதனை தீர்மானிப்பதிலும் அதே நேர வழியலகுகளைத் தீர்மானிப்பதற்கான எதிர்நோக்குகின்ற தகவல்களுக்காக எச் சுழற்சி வழியலகுகளை சரிப்படுத்துவதன் ஊடாக அடிப்படையினை தீர்மானிப்பதிலும் முக்கியத்துவமிக்க தீர்மானம் ஈடுபடுத்தப்படுகின்றது. தவணைதவறுதல் நிகழுந்தன்மை, நட்டம் தரப்பட்ட தவணைதவறுதல் மற்றும் தவணைதவறுதலுக்குள்ளாகும் தன்மை சுழற்சி ஊடாக அதே நேர வழியலகுகளுக்கு மாற்றுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற எதிர்நோக்குகின்ற தகவல் மாறிலிகளில் உள்ள மாற்றங்கள் குறித்த காலப்பகுதி ஒன்றில் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டினை ஒன்றில் அதிகரிக்க அல்லது குறைக்க கூடிய அதேவேளை குறித்த சொத்துப்பட்டியல்களுக்கான எதிர்நோக்குகின்ற தகவல்களை கணிப்பதில் உள்ள மாற்றங்கள் அடிக்கடி நிகழாதிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், எமது எதிர்வுகூறல்கள் காலாண்டு அடிப்படையில் இற்றைப்படுத்தப்படுவதனால், அதே நேர வழியலகுகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்பட்டும் குறித்த எதிர்நோக்குகின்ற தகவல் வழியலகுகளில் உள்ள மாற்றங்கள் அடிக்கடி நிகழ்பவையாகும். எதிர்நோக்குகின்ற தகவல் மாறிலிகளில் உள்ள பாதகமான எண்ணப்பாங்கு மட்டங்களில் அதிகரிப்பு, எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பில் அதிகரிப்பை தோற்றுவிக்கும் அதேவேளை, எதிர்நோக்குகின்ற தகவல் மாறிலிகளில் சாதகமான எண்ணப்பாங்கு மட்டத்தில் அதிகரிப்பு, எதிர்பார்க்கின்ற கொடுகடன் இழப்புகளில் வீழ்ச்சியினை ஏற்படுத்தும். இவ் அதிகரிப்புகளும் வீழ்ச்சிகளும் குறித்த காலப்பகுதி ஒன்றில் முக்கியத்துமிக்கதாக இருக்கக் கூடும் என்பதுடன் எதிர்கால மாற்றங்களில் எமது எதிர்கால வாய்ப்புள்ள காலப்பகுதியில் இடம்பெறுவதற்கு தோன்றும்.

நிதியியல் சாதனம் ஒன்றின் ஆயுட்காலத்தை பொறுத்தவரையில், எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை அளவிடுகின்ற போது கருத்தில் கொள்ளப்படுகின்ற உயர்ந்தபட்ச காலப்பகுதியானது அதன் மீதான ஒப்பந்த காலப்பகுதியாகும் அதாவது கொடுகடன் இடர்நேர்வுக்கு நாம் உட்படுகின்ற காலப்பகுதியாகும். கொவிட்-19 உலகலாவிய நோய்த் தொற்றின் தாக்கம். கொவின் 19 உலகலாவிய நோய்த் தொற்றில் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அளவீடானது எமது மாதிரிகளில் வரலாற்று ரீதியான அனுபவத்துடன் தொடர்புடைய முன்னொருபோதுமில்லாத அரசாங்க ஆதரவின் இயல்பைக்கொண்ட நடைமுறைச் சூழலில் கொடுகடன் இழப்புகளுடன் எதிரிணையாகவிருக்கும் எதிர்நோக்குகின்ற தகவலுக்கான மட்டத்தினை கருத்தில்கொள்கின்ற எமது எதிர்பார்க்கைகள் உள்ளடங்களாக பல எண்ணிக்கையான விடயபரப்புகளில் உயர்வான தீர்மான பிரயோகத்தினை தேவைப்படுத்தியது. நாம் கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றின் மூலம் எதிர்மறையாக பாதிக்கப்பட்டிருக்கின்ற சில கைத்தொழில்கள் மற்றும் சொத்துப் பட்டியல்களின் அளவு அத்துடன் கொடுகடன் இழப்புகளை மட்டுப்படுத்துவதற்கு பல்வேறு அரசாங்க ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட அளவு தொடர்பிலும் தீர்மானத்தினை பிரயோகித்துள்ளோம். பல்வகை சூழ்நிலைகளுக்காக எதிர்நோக்குகின்ற தகவல்களை எதிர்வுகூறுவதிலும் மேலே குறித்துக் காட்டப்பட்டவாறு சூழ்நிலைகளின் நிகழ்தகவு சீராக்கத்தினை தீர்மானிப்பதிலும், நிதியியல் சொத்தொன்று தொடக்க இனங்காணல் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு பற்றிய எமது மதிப்பீடுகளில் கொடுகடன் இடர்நேர்வில் முக்கிய அதிகரிப்பொன்றினை அனுபவித்துள்ளதா என்பது பற்றிய எமது இரு வகையான மதிப்பீட்டினுள்ளும் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

முக்கிய எதிர்நோக்குகின்ற தகவல் மாறிலிகள், மொத்த உள்ளநாட்டு உற்பத்தி, தொழிலின்மை வீதம், பணவீக்க வீதம், செலாவணி வீதம், வட்டி வீதம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. எமது கடன் சொத்துப்பட்டியல்களின் பெரும்பாலானவற்றுக்கு எமது எதிர்நோக்குகின்ற தகவல் மாறிலிகளின் எதிர்வுகூறலானது “நிகழக் கூடிய தளநிலை (base case)” இலிருந்து அல்லது திட்டமிடல் மற்றும் எதிர்வுகூறல் நோக்கங்களுக்காக முகாமைத்துவத்தினால் உள்ளகரீதியாக பயன்படுத்துகின்ற மிகவும் சாத்தியமான சூழ்நிலையில் இருந்து உருவாக்கப்படுகின்றது. நிகழக்கூடிய தள நிலை சூழ்நிலைகளை உருவாக்குவதில் சர்வதேச நாணய நிதியம், இலங்கை மத்திய வங்கி அதேபோன்று தனியார்த் துறை பொருளியலாளர்கள் போன்ற சர்வதேச அமைப்புகளினதும் நாணய அதிகாரிகளினதும் எதிரவுகூறல்களை நாம் கருத்தில் கொள்கின்றோம். பின்னர் எமது நிகழக்கூடிய தளநிலைக்கும் முகாமைத்துவ தீர்மானத்தின் பிரயோகத்திற்கும் மேலும் கீழும் காணப்படுகின்ற வெளிவாரி எதிர்வுகூறல்களைப் பயன்படுத்தி நியாயமாக சாத்தியமிக்க “சார்பான சூழ்நிலை (Upside Case)" மற்றும் “எதிரான சூழ்நிலை (Downside Case)” என்பவற்றை செலுத்துகின்றோம். முகாமைத்துவ தீர்மானத்தின் அடிப்படையில் எமது நிகழக்கூடிய தளநிலை, சார்பான மற்றும் எதிரான சூழ்நிலைகளுக்கு நிகழ்தகவு ஒதுக்கீடு குறித்தொதுக்கப்படுகின்றது. பொதுவாக, ஒவ்வொரு சூழ்நிலைக்குமான எதிர்வுகூறப்பட்ட எதிர்நோக்குகின்ற தகவல் பற்றிய எமது கண்ணோட்டம் இழிவடைதல், எதிரான சூழ்நிலை நிகழுகின்ற நிகழ்தகவில் அதிகரிப்பு, அல்லது சார்பான சூழ்நிலை நிகழுகின்ற நிகழ்தகவில் குறைவு என்பன மதிப்பிடப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டை அதிகரிக்கும்.

## 21. கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் (தொடர்ச்சி)

### 21. (ஊ) கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு கொவிட்-19 இன் தாக்கமும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடும் (தொடர்ச்சி)

#### கொடுகடன் இழப்புகளுக்கான ஒதுக்கீடு (தொடர்ச்சி)

எமது எதிர்வுகூறப்பட்ட எதிர்நோக்குகின்ற தகவல் மீதான எமது கண்ணோட்டத்தில் அதிகரிப்பொன்று, நிகழ்கின்ற சாத்தியமான சாதகமான சூழ்நிலை நிலைமையில் அதிகரிப்பொன்று, அல்லது நிகழுகின்ற சாத்தியமான பாதகமான சூழ்நிலை நிலைமையில் குறைவொன்று, எதிரான தாக்கத்தினைக் கொண்டிருக்கும். குறித்த சூழ்நிலையொன்றில் உட்பொதிந்துள்ள மாறிலிகளுக்கிடையிலான இடைத்தொடர்பு, பாதகமான எண்ணப்பாங்கு மட்டத்திற்கிடையிலான இடைத்தொடர்பு ஆகிய இரண்டினதும் மற்றும் அது நிகழ்கின்ற சாத்தியம் என்பன காரணமாக குறித்தவொரு சூழ்நிலைக்கான பல்வேறு எதிர்நோக்குகின்ற தகவல் மாறிலிகளிலுள்ள மாற்றங்களின் தாக்கத்தினை ஆக்கபூர்வமாக தனிமைப்படுத்துவது சாத்தியமற்றதாகும். செயல்திறன்வாய்ந்த தடுப்புமருந்து உருவாக்கப்பட்டு பாரியளவில் மருந்தேற்றப்படக்கூடிய, அத்துடன் இடைக்கிடையேயான காலப்பகுதியில் வைரஸ் மீளத்தோன்றுவதன் நோய்த்தொற்றியல் மற்றும் பொருளாதாரத் தாக்கங்களை செயல்திறன்வாய்ந்த விதத்தில் மட்டுப்படுத்துவதற்கு அரசாங்கங்கள், தொழில்கள் மற்றும் சுகாதாரக் கவனிப்பு முறைமைகள் என்பனவற்றின் இயலுமை மீது இறுதியாக தங்கியிருக்கும். கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றின் பொருளாதாரத் தாக்கம் தொடர்பில் எமது எதிர்வுகூறல்கள், பல்வேறு ஊகங்களையும் நிச்சயமின்மைகளையும் பிரதிபலிப்பதனால் கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றின் தாக்கம், எதிர்நோக்குகின்ற தகவல் பற்றிய எதிர்வுகூறல் மற்றும் கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றின் சூழ்நிலை ஒப்பீடுகளை நிர்ணயித்தல் என்பன பல எண்ணிக்கையான விடயப்பரப்புகளில் தீவிரமிக்க தீர்மான பிரயோகத்தினை வேண்டுகின்றன. நடப்பு ஆண்டில் எமது எதிர்வுகூறல்களில் முக்கியமான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பை மதிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்ட முன்னோக்கி எதிர்நோக்குகின்ற தகவல் மாறிலிகளுக்கான நிகழக் கூடிய தளநிலை, சார்பான சூழ்நிலை மற்றும் எதிரான சூழ்நிலை நிலைமைகளை பின்வரும் அட்டவணை வழங்குகின்றது.

| | 2021 | அடுத்த 6 வருடங்களின் சராசரி |
|---|---|---|
| **நிகழக்கூடிய தளநிலை எதிர்வுகூறல் (25%)** | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி | 2.80% | 4.65% |
| பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) | 4.88% | 5.03% |
| வட்டி வீதம் | 6.56% | 6.55% |
| செலாவணி வீதம் (ஐ.அ.டொ: ரூபா) | 197.05 | 244.62 |
| தொழிலின்மை | 5.42% | 5.42% |
| **சார்பான சூழ்நிலை எதிர்வுகூறல் (25%)** | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி | 4.73% | 6.62% |
| பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) | 4.61% | 4.56% |
| வட்டி வீதம் | 6.24% | 5.77% |
| செலாவணி வீதம் (ஐ.அ.டொ: ரூபா) | 189.50 | 204.23 |
| தொழிலின்மை | 5.37% | 5.30% |
| **எதிரான சூழ்நிலை எதிர்வுகூறல் (50%)** | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி | -3.00% | -0.18% |
| பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) | 6.58% | 7.00% |
| வட்டி வீதம் | 6.91% | 7.45% |
| செலாவணி வீதம் (ஐ.அ.டொ: ரூபா) | 221.47 | 330.00 |
| தொழிலின்மை | 5.47% | 5.54% |

# 21. கடன்தீர் செலவில் நிதியியல் சொத்துகள் – கடன்களும் முற்பணங்களும் (தொடர்ச்சி)

## 21. (ஊ) கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு கொவிட்-19 இன் தாக்கமும் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஏற்பாடும் (தொடர்ச்சி)

### ஒத்திசைவுக்கான முகாமைத்துவ சிந்தனையினைப் பயன்படுத்தல்

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு ஒதுக்கீட்டுக்கான முகாமைத்துவ சிந்தனை மதிப்பீடுகள் என்பது ஏற்கனவே காணப்படுகின்ற எமது உள்ளீடுகள், ஊகங்கள் மற்றும் மாதிரி நுட்பங்கள் அனைத்து தொடர்புடைய இடர்நேர்வுக் காரணிகளையும் கருதுவதில்லை என நாம் தீர்மானிக்கின்ற சூழ்நிலைகளில் நாம் பயன்படுத்துகின்ற சரிப்படுத்தல்களாகும். எமது நடப்பு வழியலகுகள், உள்ளக இடர்நேர்வு தரப்படுத்தல் இடப்பெயர்வுகளுக்குள், அல்லது எதிரநோக்குகின்ற தகவல்களுக்குள் கூட்டிணைக்கப்படாத வழியலுகுகள், மாதிரிகள் அல்லது தரவுகளுக்கான எதிர்பார்க்கப்பட்ட மாற்றங்களுடன் சேர்த்து புதிய பேரண்டப்பொருளாதார, நுண்பாகப்பொருளாதார அல்லது அரசியல் நிகழ்வுகளின் தோற்றம் ஆகியவை அத்தகைய சூழ்நிலைகளின் உதாரணங்களாக காணப்படுகின்றன.

தற்போதைய சூழலினுள் உட்பொதிந்துள்ள நிச்சயமின்மைகளைத் தீர்ப்பதற்கான கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்றின் தாக்கம், இவ் இடர்நேர்வுகளுக்கு மிகவும் எதிர்ப்புத்திறனற்றவையென நாம் நம்புகின்ற அத்துடன் அத்தகைய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மைகளுக்கு எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பின் அளவீட்டினை உண்டுபண்ணுகின்ற சில தொழில்களின் மற்றும் அரசாங்க இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மையின் மீது கொவிட்-19 உலகலாவிய நோய்த்தொற்று கொண்டிருக்கும் தாக்கம்தொடர்பில் நாம் முகாமைத்துவ சிந்தனையை பயன்படுத்தியுள்ளோம். இம் முகாமைத்துவ சிந்தனை நிர்ணயிப்பதில் அரசாங்கத்தின் ஆதரவு வழிமுறைகளின் குறைத்தல் தாக்கமானது எமது மாதிரிகளில் ஏற்கனவே பிரதிபலிக்கவில்லை என்ற ரீதியில் கருத்தில் கொள்ளப்பட்டது. மேலதிகமாக, சில்லறை இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை மீது அராங்க ஆதரவு மற்றும் சேவைநாடி நிவாரண வழிமுறைகள் மற்றும் ஏற்படுகின்ற அத்தகைய இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மைக்கு எதிர்பார்க்கப்பட்ட கொடுடன் இழப்பு அளவீடு தொடர்பில் முகாமைத்துவ சிந்தனை பிரயோகிக்கப்பட்டுள்ளன. முகாமைத்துவ சிந்தனைகளை பிரயோகித்தலானது இனங்காணப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட கொடுடன் இழப்பு ஒதுக்கீட்டுக்கு தாக்கமேற்படுத்துகின்ற முக்கிய தீர்மானப் பிரயோகத்தினை வேண்டுகின்றது. எமது மதிப்பீடுகளில் பிரதிபலிக்கப்பட்டவற்றில் இருந்து உண்மையான கொடுடன் இழப்பு வேறுபடக்கூடியது.

வாடிக்கையாளரொருவருக்கு படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தல் அல்லது கொடுப்பனவு பிற்போடல் வழங்கப்படவில்லையாயின் (வாடிக்கையாளர் அதனைப் பெறுதற்கு நிராகரித்தல்), அத்தகைய வாடிக்கையாளர்கள் சாதாரணமானவர்களாக கொள்ளப்பட்டு வருவதுடன் சாதாரண சேத இழப்புச் செயன்முறையொன்றின் ஊடாக சென்றனர். எனினும், படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தல், மற்றும் கொடுப்பனவு பிற்போடல் பிரிவுகளில் உள்ள போதிலும், எதிர்நோக்குகின்ற நிகழத்தக்க தவணைதவறுதல்கள், அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

முடக்கல் விதிகள் அமுல்படுத்தப்பட்டதும், மார்ச் மாத இறுதியில் உடனடியாக முதலாவது கொடுப்பனவு பிற்போடல் வழங்கப்பட்டதுடன் வாடிக்கையாளர் சூழ்நிலைகள் பற்றிய தகவல்கள் சிறிதளவே கிடைக்கப்பெற்றது. மேலும் காலம் கடந்த பின்னர் நீடிப்புக்கள் வழங்கப்பட்டு வருவதுடன் கொடுப்பனவு விடுமுறைக்காலத்தை வாடிக்கையாளர்கள் பயன்படுத்திக்கொள்வது பற்றிய மேலதிக மதிப்பீட்டினை மேற்கொள்வதற்காக மேலதிக தகவல்கள் தற்போது கிடைக்கப்பெறுகின்றன. தனிப்பட்ட மட்டத்திலும் கூட்டான இடர்நேர்வுக்குள்ளகும் தன்மை மட்டத்திலும் மதிப்பீடு நடாத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தலுக்கான சேத இழப்பினை மதிப்பிடுவதற்கு கீழேயுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அ. தற்காலிக வருமானக் குறைப்பினை அல்லது நீண்ட (ஒரு ஆண்டைத் தாண்டிச்செலகின்ற) நிதியியல் இடரினை கொண்ட வாடிக்கையாளர் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட அறவீட்டு நேரம் மற்றும் நிலை.

ஆ. கடன்பெறுநர்களின் வரலாற்று ரீதியான கொடுப்பனவு விதங்கள் (அடிக்கடி தவணைதவறுபவர்கள்)

இ. கொடுப்னவு பிற்போடல்களை கோருகின்ற நேரத்தில் வாடிக்கையாளர்கிளிடமிருந்து சேர்க்கப்பட்ட தகவல்கள்

ஈ. முகாமைத்துவ தீர்மானத்தின் பிரயோகம்

கொவிட்–19 உலகலாவிய நோய்த்தொற்றின் மூலம் நேரடியாக பாதிக்கப்பட்ட சில துறைகளில் (பயணம் மற்றும் சுற்றுலா, விமான சேவைகள், உபசரணை மற்றும் ஓய்வு, போக்குவரத்து, நுகர்வோர் பயன்பாட்டுப் பொருட்கள், மோட்டார் வாகனங்கள், பொழுதுபோக்குத் துறை என்பன) இடர்நேர்வுக்குளாகும் தன்மைகளுக்கான அதிகரித்த தவணைதவறுதல் மட்டங்களினால் எதிர்பார்க்கப்பட்ட கொடுடன் இழப்பு மோசமாக பாதிக்கப்படலாம்.

கட்டம் 1இல் ஆரம்பத்தில் வகைப்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட துறைகளைச் சேர்ந்த சில்லறைக் கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டம் 2க்கு நகர்த்தப்பட்டன. விளைவாக, ரூ. 4,791.5 மில். பெறுமதி வாய்ந்த கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டம் 1இலிருந்து கட்டம் 2க்கு நகர்த்தப்பட்டதுடன் 31 டிசம்பர் 2020இல் முடிவடைந்த ஆண்டுக்கான சேதஇழப்புக்கான ஏற்பாடு ரூ. 374.4 மில்லியனால் அதிகரிக்கப்பட்டது.

| | கட்டம் 1<br>ரூ. '000 | கட்டம் 2<br>ரூ. '000 | தேறிய விளைவு<br>ரூ. '000 |
|---|---|---|---|
| இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை | (4,791,567) | 4,791,567 | – |
| சேதஇழப்புக்கான ஏற்பாடு | (53,378) | 427,770 | 374,393 |

அனைத்து நிறுவன வாடிக்கையாளர்களும் அவர்களது வரலாற்றுரீதியான கொடுப்பனவு விதங்கள், அவர்களது துறைக்கான மற்றும் புவிவியல் பிராந்தியத்திற்கான கொவிட்-19 பொருளாதாரத் தாக்கம், துறையின் எதிர்பார்க்கப்பட்ட மீட்பு, நிறுவனத்தின் நிதியியல் வலிமை, அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆதரவு, மற்றும் ஏனைய வரலாற்று ரீதியான காரணிகளின் அடிப்படையில் தனிப்பட்ட ரீதியாக மதிப்பிடப்பட்டுள்ளனர். மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு, அவர்களது கடந்தகால நிலுவை நிலைமைகளுக்கு மத்தியில் சில கடன்பெறுநர்கள் கட்டம் 1 இலிருந்து கட்டம் 2 (கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு) இற்கும் சில் கடன்பெறுநர்கள் கட்டம் 2 இலிருந்து கட்டம் 3 இற்கும் (எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல் சேதஇழப்பு காரணமாக) நகர்த்தப்பட்டனர்.

தனிப்பட்ட கடன்பெறுநர்களுக்காக சொத்துப்பட்டியல் மட்ட சேத இழப்பு மதிப்பீடுகள் ஏற்கொள்ளப்பட்டது. எனினும், சில சூழ்நிலைகளில், நீண்ட படுகடன் செலுத்தும் காலத்தை தாமதப்படுத்தல் அல்லது பிற்போடுதலுக்கான நியாயத்தன்மையினை மதிப்பிடுவதற்கு முகாமைத்துவ தீர்மானம் பயன்படுத்தப்பட்டது. அவர்களது துறை மற்றும் முகாமைத்துவ தீர்மானம் என்பவற்றின் அடிப்படையில் கடன்பெறுநர்கள் கட்டங்களுக்கிடையில் ஒதுக்கீடுசெய்யப்பட்டனர். மதிப்பீட்டின் அடிப்படையில், சில கடன்பெறுநர்கள், அவர்களது கடந்தகால நிலுவை நிலைமைகளுக்கு மத்தியில் சில கடன்பெறுநர்கள் கட்டம் 1 இலிருந்து கட்டம் 2 (கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு) இற்கும் சில கடன்பெறுநர்கள் கட்டம் 2 இலிருந்து கட்டம் 3 இற்கும் (எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சல் சேதஇழப்பு காரணமாக) நகர்த்தப்பட்டனர்.

## 22 கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள் – படுகடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள் - படுகடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் ஏன்பன முதிர்ச்சிக்காக பிடித்துவைப்பதற்கு தொகுதி நோக்கத்தினையும் இயலுமையினையும் கொண்டுள்ள நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடனும் நிலையான முதிர்ச்சிகளுடனும் கூடிய பெறுதியற்ற நிதியியல் சொத்துகளாகும். கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள் – படுகடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள், ஆரம்ப அளவீட்டின் பின்னர் அதனைத் தொடர்ந்து விளைவு வட்டி வீதத்தினைப் பயன்படுத்தி சேதஇழப்பினைக் கழித்து கடன்தீர் செலவில் அளவிடப்படுகின்றன. கடன்தீர் செலவானது விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றாக காணப்படுகின்ற கையகப்படுத்தல் மற்றும் கட்டணங்கள் மீதான ஏதேனும் கழிவு அல்லது மிகையினை கருத்தில் கொள்வதன் மூலம் கணிக்கப்படுகின்றது. கடன்தீர்த்தலானது வருமானக் கூற்றில் "வட்டி மற்றும் அதனையொத்த வருமானம்" இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்தகைய முதலீடுகளின் சேதஇழப்பில் இருந்து தோன்றுகின்ற நட்டங்கள் வருமானக் கூற்று நிரலில் "சேதஇழப்பு விதிப்பணவுகள்" இல் இனங்காணப்படுகின்றன.

| | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31இல் உள்ளவாறு | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **இலங்கை அரசாங்கப் பிணையங்கள்** | | | | |
| திறைசேரி உண்டியல்கள் | **30,153,175** | 21,007,006 | **30,153,175** | 21,007,006 |
| திறைசேரி முறிகள் | **684,825,110** | 581,623,525 | **688,509,857** | 585,301,537 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | **3,893,458** | 416,550 | **3,893,458** | 416,550 |
| நிறுவன படுகடன் சாதனங்கள் | **34,188,346** | 9,163,833 | **34,555,055** | 9,419,428 |
| நம்பிக்கைப் பொறுப்புச் சான்றிதழ் | **1,276,258** | 3,437,861 | **1,276,258** | 3,437,861 |
| வர்த்தகப் பத்திரங்கள் | **–** | – | **316,270** | 6,000 |
| ஏனைய முதலீடுகள் | **–** | – | **165,595** | 165,595 |
| **கூட்டு மொத்தம்** | **754,336,347** | 615,648,775 | **758,869,668** | 619,753,977 |
| கழிக்கு: சேதஇழப்பு | **(103,002)** | (14,454) | **(274,734)** | (186,191) |
| **தேறிய மொத்தம்** | **754,233,344** | 615,634,321 | **758,594,934** | 619,567,786 |

### 22. (அ) பகுப்பாய்வு

| | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31இல் உள்ளவாறு | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **பிணையஉறுதி அடிப்படையிலான பகுப்பாய்வு** | | | | |
| பிணையஉறுதியாக வாக்களிக்கப்பட்டவை | **13,119,100** | 48,813,600 | **16,989,266** | 52,120,996 |
| பிணையமாக வாக்களிக்கப்படாதவை | **741,217,247** | 566,835,175 | **741,880,402** | 567,632,981 |
| **கூட்டு மொத்தம்** | **754,336,347** | 615,648,775 | **758,869,668** | 619,753,977 |
| **நாயண அடிப்படையிலான பகுப்பாய்வு** | | | | |
| இலங்கை ரூபா | **750,442,889** | 615,232,225 | **754,976,210** | 619,337,427 |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | **3,893,458** | 416,550 | **3,893,458** | 416,550 |
| **கூட்டு மொத்தம்** | **754,336,347** | 615,648,775 | **758,869,668** | 619,753,977 |

## 22. கடன்தீர் செலவில் உள்ள நிதியியல் சொத்துகள் – படுகடன்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் (தொடர்ச்சி)

### 22. (ஆ) ஆண்டின்போது சேதஇழப்பில் அசைவுகள் →

| | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31இல் உள்ளவாறு | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **கட்டம் 1** | | | | |
| சனவரி 01 அன்று உள்ளவாறு மீதி | **8,601** | 9,072 | **8,745** | 9,117 |
| தொழில் ஒருங்கிணைப்பு ஊடான கையகப்படுத்தல் | **–** | – | **–** | 98 |
| வருமானக் கூற்றுக்கான விதிப்பனவு/(மீள்பதிவு) | **92,711** | (471) | **92,705** | (470) |
| ஆண்டின் போதான பதிவழிப்பு | **–** | – | **–** | – |
| ஏனைய அசைவுகள் | **–** | – | **–** | – |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு** | **101,312** | 8,601 | **101,450** | 8,745 |
| **கட்டம் 2** | | | | |
| சனவரி 01 அன்று உள்ளவாறு மீதி | **5,852** | – | **5,852** | – |
| வருமானக் கூற்றுக்கான விதிப்பனவு/(மீள்பதிவு) | **(4,162)** | 5,852 | **(4,162)** | 5,852 |
| ஆண்டின் போதான பதிவழிப்பு | **–** | – | **–** | – |
| ஏனைய அசைவுகள் | **–** | – | **–** | – |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு** | **1,690** | 5,852 | **1,690** | 5,852 |
| **கட்டம் 3** | | | | |
| சனவரி 01 அன்று உள்ளவாறு மீதி | **–** | – | **171,595** | – |
| தொழில் ஒருங்கிணைப்பு ஊடான கையகப்படுத்தல் | **–** | – | **–** | 171,595 |
| வருமானக் கூற்றுக்கான விதிப்பனவு/(மீள்பதிவு) | **–** | – | **–** | – |
| ஆண்டின் போதான பதிவழிப்பு | **–** | – | **–** | – |
| ஏனைய அசைவுகள் | **–** | – | **–** | – |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு** | **–** | – | **171,595** | 171,595 |
| **டிசம்பர் 31இல் உள்ளவாறு மொத்த சேதஇழப்பு ஏற்பாடு** | **103,002** | 14,454 | **274,734** | 186,191 |

## 23 ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள்

**கணக்கீட்டுக் கொள்கை**

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகளானவை பங்குமூலதனம் மற்றும் படுகடன் பிணையங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியாக வகைப்படுத்தப்பட்ட பங்குமூலதன முதலீடுகள், உபாய முதலீடுகளாக வைத்திருக்கப்படுபவையாகும். இவ் வகையில் காணப்படும் படுகடன் பிணையங்களானவை முடிவற்ற காலப்பகுதியொன்றிற்காக பிடித்து வைத்திருப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளவையும் திரவத்தன்மைக்கான தேவைகளுக்கு பதிலிறுத்தி அல்லது சந்தை நிபந்தனைகளிலுள்ள மாற்றங்களுக்கு பதிலிறுத்தி விற்பனை செய்யக்கூடியவையுமாகும்.

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள் அளவீட்டின் பின்னர், அதனைத் தொடர்ந்து சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படுகின்றன. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகளை பின்வருமாறு இரு வகையினுள் பிரிக்கப்பட முடியும்,

### i. ஏனைய அனைத்தையும் உளளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள பங்கு மூலதனச் சாதனங்கள்

ஆரம்ப இனங்காணல் மீது வங்கியானது இகநி 32 நிதியியல் சாதனங்கள் : எடுத்துரைத்தலின் கீழ் பங்குமூலதனம் பற்றிய வரைவிலக்கணத்தை அவை நிறைவு செய்கின்ற போது ஏனைய அனைத்தையும் உள்ளடகிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள பங்குமூலதனச் சாதனங்களாக அதன் பங்குமூலதன முதலீடுகளில் சிலவற்றை மாற்ற முடியாதவாறு வகைப்படுத்த வங்கி அவ்வப்போது தெரிவினை மேற்கொள்ளலாம் என்பதுடன் வர்த்தகப்படுத்துவதற்காக அவை வைக்கப்படுவதில்லை. அத்தகைய வகைப்படுத்தலானது சாதனத்திற்கு சாதனம் என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது.

தேறாத இலாபங்கள் மற்றும் நட்டங்கள் "ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய ஒதுக்கு" இல் பங்குமூலதனத்தில் (ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம்) நேரடியாக இனங்காணப்படுகின்றன. இப் பங்குமூலதனச் சாதனங்கள் மீதான இலாபம் அல்லது நட்டங்கள், இலாபத்திற்கு ஒருபோதும் மீள்சுழற்சி செய்யப்படுவதில்லை. சாதனத்தின் செலவின் பாகமொன்றின் அறவீடொன்றாக அத்தகைய பெறுகையில் இருந்து வங்கி நன்மையடைகின்ற போது தவிர, அத்தகைய சந்தரப்பத்தில் அத்தகைய இலாபங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் பதிவு செய்யப்படுகின்றன, பங்கிலாபமானது கொடுப்பனவிற்கான உரிமை தாபிக்கப்படுகின்ற போது ஏனைய தொழிற்பாட்டு வருமானமாக இலாபத்தில் இனங்காணப்படுகின்றன, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள பங்குமூலதனச் சாதனங்கள் சேதஇழப்பு மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுவதில்லை.

சந்தை விலை குறிக்கப்படாத அத்துடன் அவற்றில் சீர்மதிபபு பெறுமதி நம்பத்தகுந்தவாறு அளவிடப்பட முடியாத ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள பங்குமூலதன முதலீடுகள் செலவில் அளவிடப்பட வேண்டும்.

### ii. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள படுகடன் சாதனங்கள்

வங்கியானது பின்வரும் நிபந்தனைகள் இரண்டும் நிறைவு செய்யப்படும் போது ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீரமதிப்பு பெறுமதியல் அளவிடப்பட்ட படுகடன் சாதனங்கள் தொடர்பான இநிஅநி 09 இன் கீழ் புதிய வகையொன்றினை பிரயோகிக்கின்றது.

- ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களை சேகரித்தல் மற்றும் நிதியியல் சொத்துகளை விற்பனை செய்தல் ஆகிய இரண்டின் மூலமும் அடையப்பெறுகின்ற குறிக்கோளுடன் சாதனம் தொழில் மாதிரியொன்றினுள் வைக்கப்பட்டிருத்தல்
- நிதியியல் சொத்தின் ஒப்பந்த நிதிகள் தனியே முதன்மை மற்றும் வட்டி கொடுப்பனவு பரிசோதனையினை நிறைவுசெய்தல்.

ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள படுகடன் சாதனங்கள் தொடர்ந்து சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படுவதுடன், சீர்மதிப்பு பெறுமதியில் ஏற்படும் மாற்றங்களினால் உருவாகிய இலாபம்/நட்டம் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்படும். இனங்காணாமையின் போது, முன்னதாக ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் இனங்காணப்பட்ட திரண்ட இலாபம்/நட்டமானது, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்திலிருந்து இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படும்.

## 23. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள் (தொடர்ச்சி)

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **இலங்கை அரசாங்க பிணையங்கள் (குறிப்பு 23 இ)** | | | | |
| திறைசேரி உண்டியல்கள் | **1,475,952** | – | **1,475,952** | – |
| திறைசேரி முறிகள் | **11,025,922** | – | **11,673,930** | 1,009,706 |
| **பங்குமூலதன பிணையங்கள்** | | | | |
| விலைகுறிக்கப்பட்ட பங்குமூலதன பிணையங்கள் (குறிப்பு 23 ஈ) | **2,514,374** | 3,208,101 | **2,652,221** | 3,344,002 |
| விலைகுறிக்கப்படாத பங்குமூலதன பிணையங்கள் (குறிப்பு 23 உ) | **255,574** | 270,710 | **300,215** | 315,351 |
| கழிக்கு: சேதஇழப்பு | **–** | – | **(42,476)** | (42,476) |
| **ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் தேறிய நிதியியல் சொத்துகள்** | **15,271,822** | 3,478,811 | **16,059,841** | 4,626,582 |

### 23. (அ) பகுப்பாய்வு →

| டிசம்பர் 31இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **பிணையஉறுதி அடிப்படையிலான பகுப்பாய்வு** | | | | |
| பிணையஉறுதியாக வாக்களிக்கப்பட்டவை | **–** | – | **524,981** | 582,476 |
| பிணையமாக வாக்களிக்கப்படாதவை | **15,271,822** | 3,478,811 | **15,534,860** | 4,044,106 |
| **கூட்டு மொத்தம்** | **15,271,822** | 3,478,811 | **16,059,841** | 4,626,582 |
| **நாயண அடிப்படையிலான பகுப்பாய்வு** | | | | |
| இலங்கை ரூபா | **15,271,822** | 3,478,811 | **16,059,841** | 4,626,582 |
| ஐக்கிய அமெரிக்க டொலர் | **–** | – | **–** | – |
| **கூட்டு மொத்தம்** | **15,271,822** | 3,478,811 | **16,059,841** | 4,626,582 |

## 23. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள் (தொடர்ச்சி)

### 23. (ஆ) ஆண்டின்போது சேதஇழப்பில் அசைவுகள் →

ஆண்டின்போது சேதஇழப்பு எதுவும் காணப்படவில்லை.

### 23 (இ) இலங்கை அரசாங்கப் பிணையங்கள் →

| | 2020 – வங்கி | | | 2019 – வங்கி | | |
|---|---|---|---|---|---|---|
| | முகப்பெறுமதி ரூ. '000 | முதலீட்டுச் செலவு ரூ. '000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 | முகப்பெறுமதி ரூ. '000 | முதலீட்டுச் செலவு ரூ. '000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 |
| இலங்கை அரசாங்கப் பிணையங்கள் – திறைசேரி உண்டியல்கள் | 1,500,000 | 1,401,869 | 1,475,952 | – | – | – |
| இலங்கை அரசாங்கப் பிணையங்கள் – திறைசேரி முறிகள் | 10,450,000 | 10,852,162 | 11,025,922 | – | – | – |
| | | 12,254,031 | 12,501,874 | | | |

| | 2020 – தொகுதி | | | 2019 – தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | முகப்பெறுமதி ரூ. '000 | முதலீட்டுச் செலவு ரூ. '000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 | முகப்பெறுமதி ரூ. '000 | முதலீட்டுச் செலவு ரூ. '000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 |
| இலங்கை அரசாங்கப் பிணையங்கள் – திறைசேரி உண்டியல்கள் | 1,500,000 | 1,401,869 | 1,475,952 | – | – | – |
| இலங்கை அரசாங்கப் பிணையங்கள் – திறைசேரி முறிகள் | 11,016,666 | 11,482,250 | 11,673,930 | 900,000 | 1,104,773 | 1,009,706 |
| | | 12,884,119 | 13,149,882 | | 1,104,773 | 1,009,706 |

### 23. (ஈ) விலைகுறிக்கப்பட்ட முதலீடுகள் – வங்கியும் தொகுதியும் →

| | 2020 – வங்கி | | | 2019 – வங்கி | | |
|---|---|---|---|---|---|---|
| | பங்குகளின் எண்ணிக்கை | செலவு ரூ. '000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 | பங்குகளின் எண்ணிக்கை | செலவு ரூ. '000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 |
| ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி. | 11,773,268 | 1,730,274 | 1,489,318 | 11,515,728 | 1,689,969 | 1,983,008 |
| சிறிலங்கா ரெலிகொம் பி.எல்.சி. | 13,158,700 | 445,643 | 440,816 | 13,158,700 | 445,643 | 419,763 |
| பீபள்ஸ் லீசிங் பினான்ஸ் பி.எல்.சி. | 47,116,037 | 830,177 | 584,239 | 44,990,502 | 805,318 | 805,330 |
| | | 3,006,094 | 2,514,374 | | 2,940,930 | 3,208,101 |

## 23. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சொத்துகள் (தொடர்ச்சி)

### 23. (ஈ) விலைகுறிக்கப்பட்ட முதலீடுகள் – வங்கியும் தொகுதியும் →

| | 2020 – தொகுதி | | | 2019 – தொகுதி | | |
|---|---|---|---|---|---|---|
| | பங்குகளின் எண்ணிக்கை | செலவு ரூ. '000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 | பங்குகளின் எண்ணிக்கை | செலவு ரூ. '000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூ. '000 |
| ஹற்றன் நஷனல் வங்கி பி.எல்.சி. | 11,773,268 | 1,730,274 | 1,489,318 | 11,515,728 | 1,689,969 | 1,983,008 |
| சிறிலங்கா ரெலிகொம் பி.எல்.சி. | 13,158,700 | 445,643 | 440,816 | 13,158,700 | 445,643 | 419,763 |
| பீபள்ஸ் லீசிங் கம்பனி பி.எல்.சி. | 47,116,037 | 830,177 | 584,239 | 44,990,502 | 805,318 | 805,330 |
| நெஷனல் டிவெலொப்மென்ட பேங் | 16,397 | 1,283 | 1,281 | 15,634 | 971 | 1,563 |
| கொமர்ஷல் வங்கி பி.எல்.சி. | 216 | 10 | 17 | 212 | 7 | 20 |
| லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி | 200 | 1 | 27 | 200 | 1 | 36 |
| சம்பத் வங்கி பி.எல்.சி. | 3,609 | 311 | 489 | 3,609 | 83 | 586 |
| வட்டவல பிளான்டேசன் பி.எல்.சி. | 4,046 | 21 | 229 | 4,046 | 20 | 105 |
| ட்ரான்ஜ் ஏசிய ஹோடல் பி.எல்.சி. | 4,000 | 35 | 264 | 4,000 | 35 | 279 |
| லங்கா செரமிக் பி.எல்.சி. | 917 | 24 | 126 | 917 | 24 | 127 |
| லங்கா வோல்டயில் பி.எல்.சி. | 117 | 2 | 17 | 117 | 2 | 8 |
| கெளனிவெலி பிளான்டேசன் பி.எல்.சி. | 5,500 | 198 | 435 | 5,500 | 198 | 490 |
| ஹபுகஸ்தென்ன பிளான்டேசன் பி.எல்.சி. | 100 | 3 | 2 | 100 | 3 | 2 |
| எய்ட்கன் ஸ்பென்ஸ் பி.எல்.சி. | 18,000 | 160 | 1,040 | 18,000 | 160 | 837 |
| பான் ஏசியா பேங் பி.எல்.சி. | 10,298,499 | 96,012 | 133,880 | 10,298,499 | 96,012 | 131,821 |
| ஹற்றன் பிளான்டேசன் பி.எல்.சி. | 4,000 | 30 | 40 | 4,000 | – | 28 |
| | | 3,104,184 | 2,652,221 | | 3,038,446 | 3,344,002 |

### 23 (உ) விலைகுறிக்கப்படாத முதலீடுகள் – பங்குமூலதனப் பிணையங்கள் →

| | 2020 – வங்கி | | | 2019 – வங்கி | | |
வாடிக்கையாளர்களின் நிதியியல் தேவைகளை நிறைவேற்றுவதற்கு வங்கியானது பல்வேறு மாற்றமுடியாத கடமை பொறுப்புகளை ஆக்குவதுடன் சில எதிர்பாரப் பொறுப்புக்களும் எற்படுகின்றது. இவை, நிதியியல் உத்தரவாதங்கள், நாணயக் கடிதங்கள், கடன்வழங்குவதற்கான ஏனைய வரையப்படாத கடமைப் பொறுப்புகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. நாணயக் கடிதங்கள் மற்றும் உத்தரவாதங்கள் விசேட நடவடிக்கையொன்றின் நிகழ்வில், பொதுவாக பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பில் வாடிக்கையாளர் சார்பில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு வங்கியினை பொறுப்பேற்கச் செய்கின்றது. கடன் உத்தரவாதங்களும் துணைநில் கடிதங்களும் கடன்களுக்கான அதே கொடுகடன் இடர்நேர்வினைக் கொண்டனவாகும்.

நிதியியல் நிலைமைக் கூற்றில் எதிர்பாராப் பொறுப்புகள் இனம்காணப்படுவதில்லை ஆனால் அவை தூரத்தில் நிகழ்ந்தால் அன்றி வெளிப்படுத்தப்படுகின்றன.

## 48. எதிர்பாராப் பொறுப்புகளும் கடமைப்பொறுப்புகளும் (தொடர்ச்சி)

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **கடமைப்பொறுப்புகள்** | | | | |
| பயன்படுத்தப்படாத கடன் வசதிகளுக்கான கடமைப்பொறுப்புகள் | **19,047,815** | 5,108,362 | **19,070,385** | 5,120,152 |
| ஏனைய கடமைப்பொறுப்புகள் – நேரடியற்ற கடன்வசதிகள் | **712,928** | 718,367 | **712,928** | 718,367 |
| மூலதன கடமைப்பொறுப்புகள் – (குறிப்பு 48.1) | **1,782,622** | 2,298,887 | **1,811,829** | 2,614,452 |
| | **21,543,365** | 8,125,616 | **21,595,142** | 8,452,971 |
| **எதிரபாராப் பொறுப்புகள்** | | | | |
| ஆவணரீதியான கொடுகடன் | **264,341** | 277,056 | **264,341** | 286,106 |
| உத்தரவாதங்கள் | **1,979,393** | 1,952,525 | **1,990,842** | 1,952,525 |
| | **2,243,734** | 2,229,581 | **2,255,183** | 2,238,631 |
| **மொத்த கடமைப்பொறுப்புகளும் எதிர்பாராப் பொறுப்புகளும்** | **23,787,099** | 10,355,197 | **23,850,325** | 10,691,602 |

### 48.1 மூலதன கடமைப்பொறுப்புகள் →

நிதியியல் கூற்றுகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட மூலதனச் செலவினம் கீழே விவரிக்கப்பட்டுள்ளது:

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| அனுமதிக்கப்பட்டதும் ஒப்பந்தம் செய்யப்பட்டதும் | **1,782,622** | 2,292,887 | **1,811,829** | 2,608,452 |
| அனுமதிக்கப்பட்டது ஆனால் ஒப்பந்தம் செய்யப்படாதது. | **–** | 6,000 | **–** | 6,000 |
| | **1,782,622** | 2,298,887 | **1,811,829** | 2,614,452 |

## 49 தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்

**கணக்கீட்டுக் கொள்கை**

இலங்கை கணக்கீட்டு நியமம்-இகநி 24 – "தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" இற்கமைய வங்கியானது சாதாரண தொழில் நடவடிக்கையில் முக்கிய முகாமைத்தவ ஆளணி என வரையறைசெய்யப்பட்ட தரப்பினர்களுடன் அதாவது இலங்கை அரசாங்கம், துணைநிறுவனங்கள், வங்கியின் ஊழியர்களுக்கான தொழிலுக்குப் பிந்திய நலத் திட்டங்கள், வர்த்தக வீதங்களில் கைக்கெட்டிய தூர அடிப்படையில் கொடுக்கல்வாங்கல்களை வங்கி மேற்கொண்டது. இக் கொடுக்கல்வாங்கல்கள் அனைத்து அலுவலர்களுக்கும் சலுகை வீதங்களில் ஒரே சீர்மையாக ஏற்புடைய திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களைத் தவிர சாதாரண தொழில் நடவடிக்கையில் வர்த்தக வீதங்களில் கைக்கெட்டிய தூர அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களில் பயன்படுத்தப்படுகின்றன. கடன்வழங்கல் நடவடிக்கைகள், வைப்புகள், ஐந்தொகைக்கு அப்பாலான கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் வேறு வங்கித்தொழில் மற்றும் நிதியியல் சேவைகளை வழங்குதல் என்பவற்றை உள்ள்டக்குகின்றன.

## 49. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

### 49.1தாய்க் கம்பனி மற்றும் இறுதியாக கட்டுப்படுத்தும் தரப்பினர் →

தேசிய சேமிப்பு வங்கி அரசாங்கத்திற்கு உரித்தான வங்கியொன்றாகும்.

### 49.2 இலங்கை அரசாங்கத்துடனான (தாய்க்கம்பனி) மற்றும் அரசாங்க கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள் →

ஆண்டுக்கான இலங்கை அரசாங்கம் மற்றும் அரச கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நிறுவனங்கள் என்பவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

#### 49.2.1 கூட்டாக முக்கியத்துவமிக்க கொடுக்கல்வாங்கல்கள்

| | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 | 2020 ரூ. '000 | 2019 ரூ. '000 |
| **சொத்துகள்** | | | | |
| அரசாங்கத்திற்கான கடன்கள் | 2,075,000 | 2,075,000 | 2,075,000 | 2,075,000 |
| அரசாங்க பிணையங்கள் மீது மேற்கொண்ட முதலீடு | 740,919,614 | 612,724,627 | 757,344,761 | 628,082,735 |
| அரச மற்றும் அரச கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவற்றுடனான முதலீடுகள் | 174,278,175 | 151,791,144 | 178,366,937 | 154,575,616 |
| மீள் விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் வாங்கப்பட்ட பிணையங்கள் | 2,503,527 | 795,713 | 2,503,527 | 795,713 |
| பெறக் கூடிய வரி (உத்தேச வரி) | – | 2,695,348 | – | 2,695,348 |
| அஞ்சல் அதிபர் நாயகத்தின் நடைமுறைக் கணக்கு | 541,300 | 413,785 | 541,300 | 413,785 |
| அரசாங்கத்திற்கான ஏனைய முற்கொடுப்பனவு | 3,520,000 | 3,840,000 | 3,520,000 | 3,840,000 |
| அரசாங்கத்திடமிருந்து ஏனைய வருமதிகள் கடன்கள் | 11,981,394 | 20,580,561 | 12,070,334 | 20,669,501 |
| **மொத்தம்** | 935,819,010 | 794,916,178 | 956,421,858 | 813,147,697 |
| **பொறுப்புகள்** | | | | |
| மீள் கொள்வனவு ஒப்பந்தங்களின் கீழ் விற்கப்பட்ட பிணையங்கள் | 10,698,992 | 14,778,087 | 10,698,992 | 14,778,087 |
| செலுத்த வேண்டிய வரிகள் | 3,128,643 | – | 3,705,537 | 565,704 |
| **மொத்தம்** | 13,827,635 | 14,778,087 | 14,404,529 | 15,343,791 |
| **கடமைப்பொறுப்புகள்** | | | | |
| வரையப்படாத கடன் கடமைப்பொறுப்பு | 17,563,612 | 3,275,522 | 17,563,612 | 3,275,522 |
| **செலுத்தப்பட்ட வரிகள்** | | | | |
| வருமான வரி | 6,017,687 | 3,798,620 | 6,449,560 | 4,096,283 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகள் | 3,786,717 | 3,045,921 | 4,006,877 | 3,208,584 |
| தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி | – | 366,157 | – | 383,614 |
| படுகடன் மீள்கொடுப்பனவு அறவீடு | – | 1,785,171 | – | 1,803,225 |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு/பங்குலாபம் | 1,000,000 | 2,000,000 | 1,000,000 | 2,000,000 |
| **மொத்தம்** | 10,804,404 | 10,995,869 | 11,456,437 | 11,491,706 |

#### 49.2.2 தனிப்பட்ட ரீதியில் முக்கியத்துவமிக்க கொடுக்கல்வாங்கல்கள்

வங்கி, அரசாங்க உரித்து நிறுவனம் என்பதனால் தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்திற்கு அமைவாக அதன் வைப்பில் 60% இனை அரசாங்க பிணயங்களில் முதலிடுகின்றது. எனவே வங்கியானது நாளாந்த தொழிற்பாட்டில் இலங்கை அரசாங்கத்துடன் முக்கிய கொடுக்கல்வாங்கல்களை கொண்டுள்ளது. இவை மேற்குறித்தவை மீது கூட்டாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. நாளாந்த தொழிற்பாடுகள் தவிர்ந்த தனிப்பட்ட ரீதியாக முக்கியத்துவமிக்க கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:

- 2020 மார்ச் 11 அன்று வங்கி, கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் நிலுவையாக உள்ள கடன்களின் ரூபா 26,907.85 மில்லியனை தொகுதிக் கடனாக மாற்றம்செய்துள்ளது (திறைசேரி உத்தரவாதமாக மாற்றப்பட்டது). எனவே இது கடன் மற்றும் முற்பணத்திலிருந்து படுகடன் மற்றும் ஏனைய சாதனங்களுக்கு வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- வங்கி, 2020 ஆண்டு காலப்பகுதியில் சிரேஸ்ட பிரஜைகளுடன் தொடர்புபட்ட கிடைக்கத்தக்கவை சார்பில் அரசாங்கத் திறைசேரியில் இருந்து ரூபா 19,211 மில்லியன் பெறுமதியான திறைசேரி முறியினைப் பெற்றுக்கொண்டது.

# 49. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

## 49.3 துணைக் கம்பனியுடனான கொடுக்கல்வாங்கல்கள் (என்எஸ்பி நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட்) →

கம்பனியின் பங்குமூலதனத்திற்கு ரூபா 1,700 மில்லியனை வங்கி பங்களித்துள்ளது. ஆண்டின் போது கிரமமான அடிப்படையில் திறைசேரி உண்டியல்கள், திறைசேரி முறிகள் மற்றும் பரஸ்பர பரிமாற்று ஒப்பந்தங்களில் கம்பனி அதன் நிதியங்களை முதலிட்டது. வங்கியின் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் உள்ள அனைத்து முதலீடும் என்எஸ்பி நிதி முகாமைத்துவக் கம்பனி ஊடாக நடாத்தப்பட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டுக்காக இது ரூபா 42 மில்லியன் கொண்ட கட்டுக்காப்பாளர் கட்டணம் ஒன்றை ஈட்டியது (2019 இல் ரூபா 48.6 மில்லியன் சேவைக் கட்டணங்கள்).

வங்கி, அறிக்கையிடும் திகதி அன்று என்எஸ்பி நிதி முகாமைத்துவக் கம்பனியுடன் பின்வரும் மீதிகளை கொண்டுள்ளது.

| | வங்கி | |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **சொத்துக்கள்** | | |
| கம்பனிக்கிடையிலான நடைமுறைக் கணக்கு | **–** | 9 |
| மீள்விற்பனை ஒப்பந்தத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **1,043,134** | 1,300 |
| ஏனைய கிடைக்கப்பெறத்தக்கவை | **926** | 1,169 |
| **பொறுப்புகள்** | | |
| ஏனைய செலுத்தத்தக்கவை | **3,750** | 547 |
| **கடமைப்பொறுப்பு** | | |
| வரையப்படாத கடன் கடமைப்பொறுப்பு | **500,000** | – |

மேற்குறித்த செலுத்தவேண்டிய நிலுவைகள் வழமையான தொழில் நடவடிக்கையில் இருந்து தோன்றியதுடன் மூன்றாம் தரப்பு இணைத்தரப்புடனான ஒப்பிடத்தக்க கொடுக்கல்வாங்கல் தொடர்பில் வட்டி வீதங்கள் மற்றும் பிணையம் உட்பட கணிசமாக ஒரேமாதிரியான நியதிகள் மீதானவை. தொடர்புடைய தரப்பினர்களுடனான வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய குறிப்புகள் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

| | வங்கி | |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **வருமானம்** | | |
| வாடகை வருமானம் | **–** | 1,758 |
| பங்கிலாபம் | **170,000** | – |
| வட்டி வருமானம் நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | **43,175** | 10,859 |
| **மொத்தம்** | **213,175** | 12,617 |
| **செலவுகள்** | | |
| சேவைக்கட்டணம்/கட்டுக்காப்பாளர் கட்டணம் | **42,000** | 48,600 |
| அதே நேர மொத்த தீர்ப்பனவுக் கட்டணம் | **762** | 1,242 |
| நம்பிக்கைப் பொறுப்பாளர் கட்டணம் | **1,250** | 1,250 |
| மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் மீதான வட்டிச் செலவு | **2,757** | 23,521 |
| **மொத்தம்** | **46,769** | 74,613 |

## 49. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

### 49.4 துணை நிறுவனத்துடனான கொடுக்கல்வாங்கல்கள் (வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி) →

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியானது வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் 2006 ஜூலை மாதம் தாபிக்கப்பட்டதுடன் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. அரசுக்கு உரித்தான உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்நத வங்கியாக வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி 2008.03.10 அன்று தொழிலைத் தொடங்கியது. 2019.10.11 அன்று ரூபா 3.111 பில்லியன் செலுத்தி முழுமையாக உரித்தான துணைநிறுவனமாக வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியினை வங்கி கையகப்படுத்தியது. கையகப்படுத்தலுக்காக இலங்கை மத்திய வங்கி விசேட அனுமதியினை வழங்கியுள்ளது.

வங்கியானது அறிக்கையிடும் திகதியன்று வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியுடன் பின்வரும் நிலுவைகளைக் கொண்டிருந்தது.

| | வங்கி | |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **பொறுப்புகள்** | | |
| மீள் விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் | **343,156** | 264,330 |
| மீள் விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் – செலுத்தத்தக்க வட்டி | **1,571** | 1,564 |
| வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | **482,404** | 1,947,270 |
| வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை – செலுத்தத்தக்க வட்டி | **49,189** | 67,773 |
| **மொத்தம்** | **876,320** | 2,280,937 |

மேலேயுள்ள செலுத்தவேண்டிய நிலுவைகளானவை மூன்றாந்தரப்பு இணைத்தரப்பினர்களுடன் ஒப்பிடத்தக்க கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வட்டி வீதங்கள் மற்றும் பிணையம் உள்ளடங்கலாக சாதாரண தொழில் நடவடிக்கையில் அத்துடன் கணிசமாக ஒரேமாதிரியான நியதிகள் மீது தோன்றியவை. தொடர்புடைய தரப்பினர்களுடனான வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வங்கி | |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| **செலவுகள்** | | |
| மீள் விற்பனை ஒப்பந்தங்களின் கீழ் விற்பனை செய்யப்பட்ட பிணையங்கள் மீதான வட்டிச் செலவுகள் | **24,220** | 7,612 |
| வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை மீதான வட்டிச் செலவுகள் | **124,207** | 31,676 |
| **மொத்தம்** | **148,427** | 39,288 |

# 49. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

## 49.5 முக்கிய முகாமைத்துவ ஆட்களுடனான கொடுக்கல்வாங்கல்கள் →

### 49.5.1 முக்கிய முகாமைத்துவ ஆளணிக்கான ஊதியங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம்-இகநி 24- "தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்" இற்கமைய வங்கியின் நடவடிக்கைகளை திட்டமிட்டு, பணிப்புரை வழங்கி கட்டுப்படுத்துவதற்கான அதிகாரத்தினையும் பொறுப்பினையும் கொண்டுள்ளவர்களை முக்கிய முகாமைத்துவ ஆளணி உள்ளடக்குகின்றது. அதற்கமைய, முக்கிய முகாமைத்துவ ஆட்கள் என்பது வங்கியின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், துணை நிறுவனமான தேசேவ நிதி முகாமைத்துவ கம்பனி லிமிடெட்டில் பணிப்பாளர் பதவியினை வகிக்கின்ற வங்கியின் முக்கிய ஊழியர்கள், முன்னாள் தலைவர்கள், பணிப்பாளர்கள் பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர் போன்றோரை உள்ளக்குகின்றது.

| | வங்கி | |
|---|---|---|
| டிசம்பர் 31ல் முடிவுற்ற ஆண்டுக்கானது | **2020**<br>**ரூ. '000** | 2019<br>ரூ. '000 |
| **வங்கியின் முக்கிய முகாமைத்துவ ஆளணிக்கான ஊதியங்கள்** | | |
| குறுகிய கால ஊழியர் நலன்கள் | **98,238** | 99,717 |
| சேவைக்காலத்துக்குப் பிந்திய ஊழியர் நலன்கள் | **16,393** | 15,093 |
| **மொத்தம்** | **114,631** | 114,810 |

மேற்குறித்தவற்றுக்கு மேலதிகமாக, வங்கியின் அனுமதிக்கப்பட்ட நலத் திட்டங்களுக்கமைவாக முக்கிய முகாமைத்துவ ஆளணிக்கு காசல்லாத நலன்களையும் வங்கி வழங்கியுள்ளது.

(iii) தலைவர், பணிப்பாளர்கள், பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதிப் பொது முகாமையாளர்கள் ஆகியோரின் வேதனாதிகளும் கட்டணங்களும் 2020 இல் ரூபா. 98.24 மில்லியன் ஆகவிருந்தது. (2019 இல் ரூபா. 99.72 மில்லியன்)

### 49.5.2 முக்கிய முகாமைத்துவ ஆளணியினை தொடர்புபடுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்கள், ஒழுங்குகள் மற்றும் உடன்படிக்கைகள்

| | வங்கி | |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **2020**<br>**ரூ. '000** | 2019<br>ரூ. '000 |
| **சொத்துகள்** | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **55,699** | 73,494 |

### 49.5.3 தொடர்புடைய தரப்பினருக்கு வழங்கப்பட்ட தேறிய வசதி

(இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 2007 இன் 12 இலக்க ஆளகைப் பணிப்புரையின் 3 (8) (ii) (உ) ஆம் விதியின் கீழான வெளிப்படுத்தல்

| | வங்கி | |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **2020**<br>**ரூ. '000** | 2019<br>ரூ. '000 |
| **முக்கிய முகாமைத்துவ ஆட்கள்** | | |
| கடன்கள் மற்றும் முற்பணங்கள் | **55,699** | 73,494 |
| மொத்த தேறிய வசதி | **55,699** | 73,494 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் | **50,236,350** | 40,445,964 |
| வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தின் சதவீதமொன்றாக தேறிய வசதி (%) | **0.1** | 0.2 |

## 49. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

### 49.6 வங்கியின் தொழிலுக்கு பின்னரான நன்மை திட்டங்களுடனான கொடுக்கல்வாங்கல்கள் →

வங்கிக்கும், வங்கியின் தொழிலுக்கு பின்னரான நன்மைத் திட்டங்களுக்குமிடையில் ஆண்டிறுதியில் நடைபெற்ற நிதியியல் நிலைக் கொடுக்கல் வாங்கல்களின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது:

வங்கியானது அறிக்கையிடும் திகதியன்று தொழிலுக்கு பின்னரான நன்மை திட்டங்களுடன் பின்வரும் நிலுவைகளைக் கொண்டிருந்தது.

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | வங்கி 2020 ரூ. '000 | வங்கி 2019 ரூ. '000 | தொகுதி 2020 ரூ. '000 | தொகுதி 2019 ரூ. '000 |
|---|---|---|---|---|
| **பொறுப்புகள்** | | | | |
| **தேசிய சேமிப்பு வங்கி ஊழியர் சேமலாப நிதியம்** | | | | |
| நிலையான வைப்புக்கள் | **254,000** | 155,000 | **254,000** | 155,000 |
| மீள் விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **15,500** | 47,805 | **15,500** | 47,805 |
| தொகுதிக்கடன்கள் | **725,000** | 325,000 | **725,000** | 325,000 |
| **தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய திட்டம் I** | | | | |
| நிலையான வைப்புக்கள் | **996,050** | 110,000 | **996,050** | 110,000 |
| மீள் விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **243,705** | 187,017 | **243,705** | 187,017 |
| தொகுதிக்கடன்கள் | **2,000,000** | 2,000,000 | **2,000,000** | 2,000,000 |
| **தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய திட்டம் II** | | | | |
| நிலையான வைப்புக்கள் | **1,264,274** | 656,053 | **1,264,274** | 656,053 |
| மீள் விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **–** | 400 | **–** | 400 |
| **தே.சே.வங்கியின் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான மருத்துவ உதவித் திட்டம்** | | | | |
| நிலையான வைப்புக்கள் | **385,667** | 306,475 | **385,667** | 306,475 |
| மீள் விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் | **–** | 100 | **–** | 100 |
| **விதவைகள் தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியம்** | | | | |
| நிலையான வைப்புக்கள் | **156,181** | 95,711 | **156,181** | 95,711 |

வங்கிக்கும், வங்கியின் தொழிலுக்கு பின்னரான நன்மைத் திட்டங்களுக்குமிடையில் ஆண்டிறுதியில் நடைபெற்ற வருமானக்கூற்று கொடுக்கல்வாங்கல்களின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது:

| டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது | வங்கி 2020 ரூ. '000 | வங்கி 2019 ரூ. '000 | தொகுதி 2020 ரூ. '000 | தொகுதி 2019 ரூ. '000 |
|---|---|---|---|---|
| **வட்டி வருமானம்** | | | | |
| தேசிய சேமிப்பு வங்கி ஊழியர் சேமலாப நிதியம் | **18,566** | 19,680 | **18,566** | 19,680 |
| தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய திட்டம் I | **3,340** | 8,641 | **3,340** | 8,641 |
| தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய திட்டம் II | **–** | 86 | **–** | 86 |
| தே.சே.வங்கியின் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான மருத்துவ உதவித் திட்டம் | **–** | 11 | **–** | 11 |
| **வட்டிச் செலவுகள்** | | | | |
| தேசிய சேமிப்பு வங்கி ஊழியர் சேமலாப நிதியம் | **70,930** | 38,077 | **70,930** | 38,077 |
| தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய திட்டம் I | **553,434** | 271,732 | **553,434** | 271,732 |
| தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களின் ஓய்வூதிய திட்டம் II | **82,116** | 30,895 | **82,116** | 30,895 |
| தே.சே.வங்கியின் ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான மருத்துவ உதவித் திட்டம் | **34,093** | 10,586 | **34,093** | 10,586 |
| விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நிதியம் | **13,286** | 2,705 | **13,286** | 2,705 |

## 49. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி)

### 49.7 வேறு தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து நிலுவை →

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| மீள் விற்பனை உடன்படிக்கைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள்-என்ரஸ்ட் செகியுரிடி பீஎல்சி | **9,084** | 19,063 | **9,084** | 19,063 |
| என்ரஸ்ட் செகியுரிடி பீஎல்சியிடமிருந்து கிடைக்கவேண்டியது. | **859,160** | 859,160 | **859,160** | 859,160 |
| **மொத்தம்** | **868,244** | 878,223 | **868,244** | 878,223 |

### 49.8 வேறு தொடர்புடைய தரப்பினர்களுக்கான நிலுவை →

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| ஏனைய செலுத்தத்தக்கவை- என்ரஸ்ட் செகியுரிடி பீஎல்சி | **734,788** | 734,788 | **734,788** | 734,788 |
| மீள் கொள்வனவு உடன்படிக்கைகளின் கீழ் விற்பனைசெய்யப்பட்ட பிணையங்கள்-என்ரஸ்ட் செகியுரிடி பீஎல்சி | **–** | – | **351,194** | 357,755 |
| **மொத்தம்** | **734,788** | 734,788 | **1,085,982** | 1,092,543 |

## 50 சாதாரண பங்கு ஒன்றின் நிகர சொத்துப் பெறுமதி →

| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | வங்கி | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 | **2020 ரூ. '000** | 2019 ரூ. '000 |
| தொகுதி எண்ணாக பயன்படுத்திய தொகை | | | | |
| பங்குடமையாளர்களின் நிதியங்கள் | **51,897,497** | 45,925,261 | **57,449,417** | 49,382,159 |
| பகுதி எண்ணாகப் பயன்படுத்திய சாதாரணப் பங்கின் எண்ணிக்கை | | | | |
| மொத்தப் பங்குகளின் எண்ணிக்கை | **940,000** | 940,000 | **940,000** | 940,000 |
| சாதாரணப் பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூபா) | **55.21** | 48.86 | **61.12** | 52.53 |

# நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 51 வங்கிக்கும் தொகுதிக்கும் எதிரான வழக்குகள்

வழக்குகள் என்பது வங்கித் தொழிலின் சுபாவத்தைப் பொறுத்த மட்டில் தவிர்க்க முடியாத நிகழ்வாகும். அவ்வாறான சட்ட விடயங்கள் தொடர்பில் செயற்பட வங்கிக்கென உருவாக்கப்பட்ட கோவை ஒன்று உண்டு. ஏற்படக் கூடிய விளைவுகளது உறுதித்தன்மை தொடர்பாக தேவையான துறை சார் ஆலோசனைகள் பெறப்பட்ட பின்னர் நட்டங்கள் தொடர்பாக சீர்மதிப்பு மதிப்பீட்டின் அடிப்படையில் மதிப்பீடு செய்த பின்னர் குறித்த சட்ட ரீதியான உரிமைகளின் நிதி நிலைப்பாட்டுக்கு ஏற்படக் கூடிய எதிர் தாக்கங்களுக்காக வங்கி தமது கணக்குகளுக்கு சீராக்கல்களை மேற்கொள்ளும். விளைவுகளின் நிச்சயமற்ற தன்மை காரணமாக நிதிக் கூற்றுகளுக்கு எவ்வித சீராக்கங்களையும் மேற்கொள்ளாது. வருட இறுதியில் வங்கிக்கு எதிராக உள்ள இது வரையிலும் தீர்க்கப்படாத வழக்குகள் தொடர்பான விபரங்கள் வருமாறு.

| | வங்கி | |
|---|---|---|
| டிசம்பர் 31 இல் உள்ளவாறு | **2020 இல.** | 2019 இல. |
| **நியாயசபை/நீதிமன்றம்** | | |
| தொழில் நியாயசபை | **11** | 12 |
| கைத்தொழில் நீதிமன்றம் | **2** | 2 |
| நீதவான் நீதிமன்றம் | **2** | 5 |
| மாவட்ட நீதிமன்றம் | **82** | 81 |
| மேல் நீதிமன்றம்/சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம்/மாகாண மேல் நீதிமன்றம் | **3** | 3 |
| மேன்முறையீட்டு நீதிமன்றம | **3** | 2 |
| உயர் நீதிமன்றம் | **1** | 1 |

## 52 அறிக்கையிடும் திகதிக்கு பின்னரான நிகழ்வுகள்

**கணக்கீட்டுக் கொள்கை**

அறிக்கையிடும் திகதி மற்றும் நிதி கூற்றுக்கள் வெளியிடுவதற்காக அனுமதிக்கப்பட்ட திகதி என்பவற்றுக்கிடையில் நிகழுகின்ற சாதகமான மற்றும் பாதகமான இரு வகையான நிகழ்வுகளும் அறிக்கையிடும் திகதிக்கு பிந்திய நிகழ்வுகளாகும்.

அவசியமான போது அறிக்கையிடும் திகதிக்கு பிந்திய அனைத்து நிகழ்வுகளும் கருத்தில் கொள்ளப்பட்டு இகநி10 - அறிக்கையிடும் காலத்திற்கு பிந்திய நிகழ்வுகளிற்கு அமைவாக நிதியியல் கூற்றுகளில் பொருத்தமான சீராக்கங்கள்/வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**ஐ.அ.டொலர் 35 மில்லியன் தவணைக் கடன் வசதி - வங்கி**

வங்கியானது 2021 பெப்ரவரி 17 அன்று இந்தியன் வங்கியிடம் இருந்தும் இந்தியன் ஓவசீஸ் வங்கியிடம் இருந்தும் ஐ.அ.டொலர் 35 மில்லியன் தவணை கடன் வசதி ஒன்றினை பெற்றுக்கொண்டது. 2020 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கு தாக்கம் எதுவும் காணப்படவில்லை என்பதுடன் இகநி 10 அறிக்கையிடும் காலப்பகுதிக்கு பிந்திய நிகழ்வுகள் உடன் இணங்கியொழுகுவதற்கு தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| உற்பத்தி | : | ஐ.அ.டொலர் தவணை கடன் வசதி |
| நோக்கம் | : | இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலிடுவதற்கு |
| பிணை | : | கடன் வழங்குநர்களுக்கு ஐ.அ.டொலர் பெயர்குறிக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் ஈடு |
| காலம் | : | 01 வருடம் |
| வட்டி வீதம் | : | 06 மாத LIBOR + 3.50 ஆண்டுக்கு வருடத்திற்கு இருமுறை கொடுப்பனவு செய்யப்படும். |
| மூலதன மீள்கொடுப்பனவு | : | முதிர்வின்போது |

**ரூ 59,365.66 மில்லியன் கடன்களை தொகுதிக்கடன்களாக மாற்றுதல்**

மேலும் வங்கி, ரூபா 59,365.66 மில்லியன் பெறுமதியினைக் கொண்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிலுவையாகவுள்ள கடன்களை (திறைசேரி உத்தரவாதத்தின் மூலம் மாற்றம் செய்யப்பட்டது) 2021 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் தொகுதிக்கடனாக மாற்றம்செய்துள்ளது.

## 53 ஒப்பீட்டுத் தொகைகள்

சிறந்த எடுத்துரைப்பினை வழங்கும் பொருட்டு நடப்பு ஆண்டின் வகைப்படுத்தலுடன் இணங்குவதற்கு அவசியமான போதெல்லாம் ஒப்பீட்டுத் தகவல்கள் மீள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அருவச் சொத்துகள் (கணனி மென்பொருள்) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பவற்றிலிருந்து வேறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

| | குறிப்பு | 2019 கணக்காய்வுசெய்யப்பட்ட மீதிகள் ரூ. '000 | மீள்வகைப்படுத்தல் ரூ. '000 | 2019 மீள்வகைப்படுத்தப்பட்ட மீதிகள் ரூ. '000 |
|---|---|---|---|---|
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 26 | 14,163,454 | (598,876) | 13,564,578 |
| நன்மதிப்பும் அருவச் சொத்துகளும் | 29 | – | 598,876 | 598,876 |

### 53.1 வங்கியின் தொகுதியினதும் முன்னைய ஆண்டுச் சீராக்கம்

முன்னைய ஆண்டு தாக்கத்திற்கான ஓய்வுபெற்றோர் நலக் கடப்பாடுகளின் திட்டச் சொத்துகளில் பிற்போடப்பட்ட வரி மற்றும் சீர்மதிப்பு மாற்றங்கள் காரணமாக பின்வரும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கமைய, 2019.01.01 அன்று உள்ளவாறு பங்கு மூலதனத்திற்கு ரூபா 683,094,162 கொண்ட தொகை சரிசெய்யப்பட்டது.

விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

#### 53.1.1 வங்கியினது முன்னைய ஆண்டுச் சீராக்கம்

| பங்குமூலதனத்தில் மாற்றங்கள் கூற்று | 2018.12.31 அன்று உள்ளவாறு மீதிகள் ரூ. '000 | முன்னைய ஆண்டுச் சீராக்கம்: பிற்போடப்படட்ட வரி** ரூ. '000 | முன்னைய ஆண்டுச் சீராக்கம்: திட்டச் சொத்துகளில் சீர்மதிப்பு பெறுமதி மாற்றங்கள்* ரூ. '000 | முன்னைய ஆண்டுச் சீராக்கம்: மொத்தச் சீராக்கம் ரூ. '000 | 2019.01.01 அன்று உள்ளவாறு ஆரம்ப மீதி ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கு | 7,793,317 | (2,182,129) | – | (2,182,129) | 5,611,188 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான ஒதுக்கு | 528,430 | 31,979 | – | 31,979 | 560,409 |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | 3,869,070 | 1,597,000 | 1,236,244 | 2,833,244 | 6,702,314 |
| மொத்தப் பங்குமூலதனம் | 42,979,655 | (553,150) | 1,236,244 | 683,094 | 43,662,749 |

| | குறிப்பு | 2019 கணக்காய்வு செய்யப்பட்ட மீதி ரூ. '000 | சீராக்கம்: பிற்போடப்படட்ட வரி ரூ. '000 | சீராக்கம்: திட்டச் சொத்துகளில் சீர்மதிப்பு பெறுமதி மாற்றங்கள் ரூ. '000 | 2019 மீளக்குறிப்பிடப்பட்ட மீதிகள் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| **வருமானக் கூற்று** | | | | | |
| i. வருமான வரிச் செலவுகள் | 13 | 3,763,405 | 317,062 | – | 4,080,468 |
| ii. இலாபம் மீது பங்கொன்றிற்கான உழைப்புகள் (ரூபா) | 14 | 7.13 | (0.34) | – | 6.79 |
| **அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று** | | | | | |
| i. தொழிலுக்குப் பிந்திய நலக் கடப்பாடுகளின் மீள் அளவீடு | | (3,700,967) | – | 246,684 | (3,454,283) |
| ii. தொழிலுக்குப் பிந்திய நலக் கடப்பாடுகள் மீதான பிற்போடப்பட்ட வரித் தாக்கம் | | – | 967,199 | – | 967,199 |
| iii. இலாபம் மற்றும் நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படவுள்ள வகைகள் தொடர்பிலான வரிச் செலவுகள் | | – | (31,979) | – | (31,979) |
| | | (3,700,967) | 935,220 | 246,684 | (2,519,063) |

## 53. ஒப்பீட்டுத் தொகைகள் (தொடர்ச்சி)

### 53.1 வங்கியின் தொகுதியினதும் முன்னைய ஆண்டுச் சீராக்கம் (தொடர்ச்சி)

#### 53.1.1 வங்கியினது முன்னைய ஆண்டுச் சீராக்கம் (தொடர்ச்சி)

| நிதி நிலைக் கூற்று | குறிப்பு | 31.12.2019 கணக்காய்வு செய்யப்பட்ட மீதி ரூ. '000 | சீராக்கம் பிற்போடப்பட்ட வரி ரூ. '000 | சீராக்கம் திட்டச் சொத்துகளில் சீர்மதிப்பு பெறுமதி மாற்றங்கள் ரூ. '000 | 31.12.2019 மீளக்குறிப்பிடப்பட்ட மீதிகள் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| **பொறுப்புகள் மற்றும் பங்கு மூலதனம்** | | | | | |
| i. ஓய்வு நலக் கடப்பாடுகள் | 38 | 6,508,707 | – | (1,482,928) | 5,025,779 |
| ii. பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 30 | 547,250 | (65,009) | – | 482,241 |
| iii. பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | 45 | 4,464,442 | 2,247,137 | 1,482,928 | 8,194,507 |
| iv. ஏனைய ஒதுக்குகள் | 46 | 26,950,010 | (2,182,129) | – | 24,767,882 |

#### 53.1.2 தொகுதியின் முன்னைய ஆண்டுச் சீராக்கம்

| பங்குமூலதனத்தில் மாற்றங்கள் கூற்று | 2018.12.31 அன்று உள்ளவாறு மீதிகள் ரூ. '000 | முன்னைய ஆண்டுச் சீராக்கம் பிற்போடப்பட்ட வரி** ரூ. '000 | முன்னைய ஆண்டுச் சீராக்கம் திட்டச் சொத்துகளில் சீர்மதிப்பு பெறுமதி மாற்றங்கள்* ரூ. '000 | முன்னைய ஆண்டுச் சீராக்கம் மொத்தச் சீராக்கம் ரூ. '000 | 2019.01.01 அன்று உள்ளவாறு ஆரம்ப மீதி ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| மீள்விலைமதிப்பீட்டு ஒதுக்கு | 7,793,317 | (2,182,129) | – | (2,182,129) | 5,611,188 |
| ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான ஒதுக்கு | 390,210 | 31,979 | – | 31,979 | 422,189 |
| பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | 4,445,441 | 1,597,000 | 1,236,244 | 2,833,244 | 7,278,685 |
| மொத்தப் பங்குமூலதனம் | 44,002,475 | (553,150) | 1,236,244 | 683,094 | 44,685,569 |

| | குறிப்பு | 2019 கணக்காய்வு செய்யப்பட்ட மீதி ரூ. '000 | சீராக்கம் பிற்போடப்பட்ட வரி ரூ. '000 | சீராக்கம் திட்டச் சொத்துகளில் சீர்மதிப்பு பெறுமதி மாற்றங்கள் ரூ. '000 | 2019 மீளக்குறிப்பிடப்பட்ட மீதிகள் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| **வருமானக் கூற்று** | | | | | |
| i. வருமான வரிச் செலவுகள் | 13 | 4,061,569 | 317,062 | – | 4,378,631 |
| ii. இலாபம் மீது பங்கொன்றிற்கான உழைப்புகள் (ரூபா) | 14 | 9.61 | (0.34) | – | 9.27 |
| **அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்று** | | | | | |
| i. தொழிலுக்குப் பிந்திய நலக் கடப்பாடுகளின் மீள் அளவீடு | | (3,702,344) | – | 246,684 | (3,455,660) |
| ii. தொழிலுக்குப் பிந்திய நலக் கடப்பாடுகள் மீதான பிற்போடப்பட்ட வரித் தாக்கம் | | – | 967,199 | – | 967,199 |
| iii. இலாபம் மற்றும் நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்படவுள்ள வகைகள் தொடர்பிலான வரிச் செலவுகள் | | – | (31,979) | – | (31,979) |
| | | (3,702,344) | 935,220 | 246,684 | (2,520,440) |

## 53. ஒப்பீட்டுத் தொகைகள் (தொடர்ச்சி)

### 53.1 வங்கியின் தொகுதியினதும் முன்னைய ஆண்டுச் சீராக்கம் (தொடர்ச்சி)

### 53.1.2 தொகுதியின் முன்னைய ஆண்டுச் சீராக்கம் (தொடர்ச்சி)

| நிதி நிலைக் கூற்று | குறிப்பு | 31.12.2019 கணக்காய்வு செய்யப்பட்ட மீதி ரூ. '000 | சீராக்கம்: பிற்போடப்படட்ட வரி ரூ. '000 | சீராக்கம்: திட்டச் சொத்துகளில் சீர்மதிப்பு பெறுமதி மாற்றங்கள் ரூ. '000 | 31.12.2019 மீளக்குறிப்பிடப்பட்ட மீதிகள் ரூ. '000 |
|---|---|---|---|---|---|
| **பொறுப்புகள் மற்றும் பங்கு மூலதனம்** | | | | | |
| i. ஓய்வு நலக் கடப்பாடுகள் | 38 | 6,536,687 | – | (1,482,928) | 5,053,759 |
| ii. பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புகள் | 30 | 548,014 | (65,009) | – | 483,005 |
| iii. பிடித்துவைக்கப்பட்ட உழைப்பு | 45 | 7,233,981 | 2,247,137 | 1,482,928 | 10,964,046 |
| iv. ஏனைய ஒதுக்குகள் | 46 | 27,629,027 | (2,182,129) | – | 25,446,899 |

*** ஓய்வூதியச் திட்டச் சொத்துக்கள்**
ஓய்வூதிய திட்ட சொத்துக்களானவை முன்னைய ஆண்டுகளுக்காக அவற்றின் சீர்மதிப்புப் பெறுமதி நம்பத்தகுந்தவாறு உண்மையாக அளவிடப்பட முடியாத போது சீர் மதிப்புப் பெறுமதிக்கு பதிலாக செலவில் கணக்கிடப்பட்டன என்பதுடன் 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு ரூ. 1,236,243,972 மற்றும் 2019 ஆம் ஆண்டுக்காக ரூ. 246,684,251 இற்கு இது திட்ட சொத்துக்களில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது, 2019 டிசம்பர் அன்று உள்ளவாறு தேறிய ஓய்வூதிய பொறுப்பில் ரூ. 1,482,928,223 குறைவதற்கு வழிவகுத்துள்ளதுடன் மறுபுறம் பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகளில் 2018 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு ரூ. 1,236,243,972 அதிகரிப்பினையும் 2019 ஆம் ஆண்டுக்காக ரூ. 246,684,251 இனால் ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தில் அதிகரிப்பையும் தோற்றுவித்துள்ளது.

**** பிற்போடப்பட்ட வரிகள்**
ஆண்டின் போது தேச இழப்பு, நிலையான சொத்துகள் மீள் விலைமதிப்பீடு, வரையறை செய்யப்பட்ட நலத்திட்டங்கள் மற்றும் நிதியியல் சொத்துகள், ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் நிதியியல் சொத்துகள் என்பவற்றுக்கு பிற்போடப்பட்ட வரிகளை ஏற்பாடு செய்வதற்கு வங்கி தொடங்கியது. இது ரூ. 553,150,146.58 இனால் பங்கு மூலதனம் குறைவடைவதற்கு வழிவகுத்துள்ளதுடன் 2018 டிசம்பர் 31 அன்று ரூ. 553,150,146.58 இனால் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பினை அதிகரித்தது.

**2019ஆம் ஆண்டுக்கான பிற்போடப்பட்ட வரிகளின் தாக்கம்**
2019 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் போது பிற்போடப்பட்ட வரிச்சொத்து ரூ. 618,158,610.24 இனால் அதிகரித்துள்ளதுடன் பிடித்து வைக்கப்பட்ட வருவாய்கள் 650,137,503.20 இனால் அதிகரித்துள்ளன. பிடித்து வைக்கப்பட்ட வருவாய் சீராக்கமானது, ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்திலிருந்து ரூ. 967,199,222.55ஐயும் வருமானக் கூற்றிலிருந்து ரூ. 317,061,719.35ஐயும் உள்ளடக்கியிருந்தது. ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் படுகடன் சாதனங்களின் வருமானத்தின் தேறாத பிற்போடப்பட்ட வரி காரணமாக ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமான ஒதுக்கு ரூ. 31,978,892.96 இனால் குறைவடைந்தது.

## 54 நிதியியல் இடநேர்வு முகாமைத்துவம்

### பொதுநோக்கு →

தொகுதியானது அதன் தொழிற்பாடுகளில் இருந்து தோன்றுகின்ற நிதியில் இடநேர்வு, நிதியல் சாரா இடநேர்வுகள் மற்றும் உபாய இடநேர்வுகளுக்கு உள்ளாகின்றது. வியாபார தொழிற்பாட்டுச் சூழல், சிறந்த நடைமுறை அணுகுமுறைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் மற்றும் சமூக எதிர்பார்க்கை மாற்றங்களுக்கு இடமளிப்பதற்கு உருவாகின்ற அதன் இடர்நேர்வு முகாமைத்துவ சட்டகத்தினூடாக தொகுதி இவ் இடர்நேர்வுகளை முகாமைசெய்கின்றது.

### இடர்நேர்வு முகாமைத்துவச் சட்டகம் →

தேசிய சேமிப்பு வங்கியின் ஒருங்கிணைக்கப்பட்ட இடர்நேர்வு முகாமைத்துச் சட்டகமானது பல்வேறு இடர்நேர்வுகள், அத்தகைய இடர்நேர்வுகளை இனங்காண்பதற்கான பொறிமுறை மற்றும் இடர்நேர்வுகளை முகாமைசெய்து தணிப்பதற்கான செயல்திறன்மிக்க வழிமுறைகள் என்பவற்றை உள்ளடக்குகின்ற கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை உள்ளடக்குகின்றது.

வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவச் சட்டகமானது பணிப்பாளர் சபையின் மேற்பார்வையுடன் தொடங்குகின்றது. இது, இடர்நேர்வு முகாமைத்துவப் பொறுப்புகள் நிறைவேற்றுவதில் பணிப்பாளர் சபைக்கு உதவுவதற்கு அது சபை ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவினை தாபித்துள்ளது. இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவானது சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவ குழு ஊடாக பணிப்பாளர் சபைக்கு சுயாதீனமாக அறிக்கையிடுகின்றது. வங்கியின் செயலாற்றல்மிக்க மற்றும் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவத்தினை உறுதி செய்வதற்கு பொறுப்புடைய பிரிவுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவு என்பவற்றின் அறிக்கைகளை இவ் இடர்நேர்வு முகாமைத்துவக் குழு கிரமமாக மீளாய்கின்றது.

உன்னிப்பான கவனத்துடன் கூடிய ஒவ்வொரு இடர்நேர்வு முகாமைத்துவ விடயப்பரப்புகளுக்குமான இடர்நேர்வுக் கருமங்களை ஒருங்கிணைத்தலுக்கு பின்வரும் முகாமைத்துவ துணைக் குழுக்கள் பொறுப்புடையனவாகும்.

- தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு
- சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவக் குழு
- கொடுகடன் குழு
- முதலீட்டுக் குழு
- தகவல் தொழிநுட்ப வழிநாடாத்தல் குழு
- மனித வளங்கள் குழு
- கிளைத் தொழிற்பாட்டு வழிநாடாத்தல் குழு
- நிறுவன பெறுகைக் குழு
- செயலாற்றுகை மீளாய்வுக் குழு
- சந்தைப்படுத்தல் குழு
- நிறுவன முகாமைத்துவக் குழு

உள்ள கணக்காய்வுக் குழு கிரமமான அத்துடன் தேவைக்கேற்ப இடர்முகாமைத்துவ கட்டுப்பாடுகள் மீளாய்வு இரண்டிலும் ஈடுபடுபடுவதுடன் பெறுபேறுகள் சபைக் கணக்காய்வுக் குழுவிற்கு அறிக்கையிடப்படுகின்றன.

## 54. இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

### முக்கிய இடர்நேர்வுகளின் வகைகள் →

| விபரம் | ஆளுகைக் கொள்கைகள் மற்றும் முக்கிய முகாமைத்துவக் குழு | முக்கிய கட்டுப்பாடுகளும் தணித்தல் உபாயங்களும் |
|---|---|---|
| **கொடுகடன் இடர்நேர்வு**<br><br>கொடுகடன் இடர்நேர்வு என்பது தொகுதிக்கான அவர்களது ஒப்பந்த ரீதியான கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு இணைத்தரப்பினர் ஒருவரின் தவறுகையில் இருந்து தோன்றுகின்ற இழப்புக்கான சாத்தியத் தன்மையாகும். தொகுதியானது பின்வருவன ஊடாக கொடுகடன் இர்நேர்வுக்கு அடிப்படையில் உள்ளாகின்றது.<br>• வதிவிட வீட்டு கடன் வழங்கல்<br>• பிணையளிக்கப்படாத சில்லறைக் கடன் வழங்கல் (தனிப்பட்ட உத்தரவாதம்)<br>• வர்த்தகக் கடன் வழங்கல் அத்துடன்<br>• பாரியளவிலான கூட்டுநிறுவன நிறுவனசார் கடன் வழங்கல் மற்றும் சந்தைகள் இடர்நேர்வுக்கு உள்ளாகும் தன்மைகல்<br>• அரசாங்க நிறுவனங்களுக்கான பாரிய கடன்வழங்கல்<br>• இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளுக்கான கடன்வழங்கல் | **ஆளுகைக் கொள்கைகள்**<br>கொடுகடன் கொள்கைகள் மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை<br><br>**முக்கிய முகாமைத்துவ குழு**<br>கொடுகடன் குழு | i. கொடுகடன் கொள்கைகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைள் சட்டகம்<br>ii. கொடுகடன் புள்ளியிடல் முறைமை மற்றும் கொடுகடன் தரப்படுத்தல் முறைமை ஆகியவற்றைப் பயன்படுத்தி தரப்படுத்தப்பட்ட கொடுகடன் மதிப்பீடு<br>iii. கொடுகடன் அனுமதிக்காக அதிகாரத்தினை ஒப்படைத்தல்<br>iv. தரமான பிணைய உறுதியினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பெறுமதிக்கான கடனை கொள்கை மட்டங்களில் பேணுதல்<br>v. இடர்நேர்வு ஏற்புச் சட்டகம்: இடர்நேர்வு ஏற்பு வரையறைகளுக்கெதிராக முக்கிய இடர்நேர்வுக் குறிகாட்டிகளை,/முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகளை கண்காணித்தல் மற்றும் சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு மற்றும் சபைக்கு அறிக்கையிடல்<br>• சொத்துகள் தர வரையறைகள்: சில்லறைக் கொடுகடன் ஆதாயம், நிறுவனக் கொடுகடன் ஆதாயம்.<br>• சொத்துப்பட்டியல் ஆதாய வரையறைகள்: சில்லறைக் கொடுகடன் ஆதாயம், நிறவனக் கொடுகடன் ஆதாயம்.<br>vi. கொடுகடன் வரையறை கண்காணித்தல் சட்டகம்: சொத்துப்பட்டியல் மற்றும் கொடுக்கல்வாங்கல் மட்ட கண்காணித்தல் மற்றும் கடன் குழுவுக்கு/ முதலீட்டுக் குழுவுக்கு சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு/சபைக்கு அறிக்கையிடல்<br>• துறை இடர்நேர்வுக்குள்ளாகும் வரையறைகள்<br>vii. கொடுகடன் கண்காணித்தல் கட்டமைப்பு: சொத்துப்பட்டியல் மற்றும் கொடுக்கல்வாங்கல் மட்டம் கண்காணித்தல் மற்றும் கடன் குழுவுக்கு/முதலீட்டுக் குழுவுக்கு சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு/ சபைக்கு அறிக்கையிடல்<br>• சொத்துப்பட்டியல் மட்டம் கண்காணித்தல்<br>• முன்கூட்டிய எச்சரிக்கை குறிகாட்டிகளைக் கண்காணித்தல்<br>• செயற்படா கணக்குகளைக் கண்காணித்தல்<br>• கொடுகடன் புள்ளியிடல் முறைமை மற்றும் கொடுகடன் தரப்படுத்தல் முறைமைகளின் பிரயோகத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்<br>viii. கடன் மீளாய்வுப் பெறிமுறை<br>ix. தரப்படுத்தப்பட்ட அணுகுமுறையின் கீழ் மூலதன ஒதுக்கு<br>x. கொடுகடன் பிரிவிலும் கிளை மட்டத்திலும் கொடுகடன் அலுவலர்களுக்கான தொடர்ச்சியான பயிற்சி<br>xi. திரட்சி வரையறைகளை அறிமுகப்படுத்தல்<br>• துறைகளுக்கான கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை மட்டங்கள்<br>• இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்து வகுப்புகளுக்கான கொடுகடன் இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை மட்டங்கள்<br>xii. ஹேர்பின்டல் ஹிர்ஸ்ச்மன் சுட்டெண் கணிப்பும் இடர்நேர்வு ஏற்பு மட்டங்களுக்கெதிரான கண்காணித்தலும் |

## 54. இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

| விபரம் | ஆளுகைக் கொள்கைகள் மற்றும் முக்கிய முகாமைத்துவக் குழு | முக்கிய கட்டுப்பாடுகளும் தணித்தல் உபாயங்களும் |
|---|---|---|
| **சந்தை இடர்நேர்வு(பங்குமூலதன இடர்நேர்வு உள்ளடங்கலாக)** | | |
| சந்தை இடர்நேர்வு என்பது குழுமத்தின் இலாபத்தின் மீது அல்லது/ அத்துடன் தேறிய சொத்தின் மீது பாதகமான தாக்கமொன்றினை கொண்டிருக்கக் கூடிய சந்தை வீதங்கள் மற்றும் விலைகள் மாற்றமடையும் என்கின்ற இடர் நேர்வாகும். தொகுதியானது பின்வரும் இடர்நேர்வு ஊடாக சந்தை இடர்நேர்வுக்கு அடிப்படையில் உட்படுகின்றது:<br>• வர்த்தக்கப்படுத்தப்பட்ட சந்தை இடர்நேர்வு<br>• வங்கித் தொழில் ஏடுகளில் வட்டி வீத இடர்நேர்வு<br>• கட்டமைப்புசார் வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு<br>• வர்த்தகப்படுத்தபடாத பங்குமூலதன இடர்நேர்வு. | **ஆளுகைக் கொள்கைகள்**<br>சந்தை இடர்நேர்வு மற்றும் திரவத் தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை<br><br>**முக்கிய முகாமைத்துவ குழு**<br>கொடுகடன் குழு | **வட்டி வீத இடர்நேர்வு**<br>i. சந்தை இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கைச் சட்டகம்<br>ii. வட்டி வீத அசைவுகளின் தாக்கத்தினை பகுப்பாய்வு செய்தலும் தேறிய வட்டி இலாபம் மீதான தாக்கத்தினைக் குறைப்பதற்கு சொத்து மற்றும் பொறுப்புக் குழு மூலம் சீராக்க நடவடிக்கை எடுத்தலும்<br>iii. வீத உணர்வுமிக்க சொத்துகளுக்கு மற்றும் பொறுப்புகளுக்கு விலைகுறித்தல் பொறுப்பானது சொத்து மற்றும் பொறுப்புக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>iv. வீத உணர்வுமிக்க சொத்துகளின் மற்றும் பொறுப்புகளின் கலப்பினை முகாமைசெய்வதற்கான பொறுப்பு, சொத்து மற்றும் பொறுப்புக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br>v. திறைசேரி முன்னரங்கு அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் பொறுப்பு முகாமைத்துவ பிரிவின் உதவியினை குழுவிற்கு வேண்டுகின்றது.<br>vi. அரசாங்க பிணையங்களில் முதலீடுகள் மற்றும் வர்த்தகப்படுத்தல் என்பனவற்றுக்கான வரையறைகள் சட்டக கட்டமைப்பினுள் கண்காணிக்கப்படுகின்றன.<br>vii.வட்டி வீதத்திற்கு பாதிக்கப்படும் தன்மையினை, நடப்பு சந்தை விலையில் சீர்மதிப்புப் பெறுமதி கணக்கீடு, கால மற்றும் அழுத்தப் பரிசோதனை போன்ற கருவிகளைப் பயன்படுத்தி தொடர்ச்சியான அடிப்படையில் மதிப்பிடுதல், இடர்நேர்வு ஏற்பு மட்டத்தினுள் கண்காணித்தல் மற்றும் கண்காணித்தல் கட்டமைப்பினுள் மட்டுப்படுத்தல் அத்துடன் கடன் குழுவுக்கு/சொத்து மற்றும் பொறுப்பு குழுவுக்கு/சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு/ சபைக்கு அறிக்கையிடல்<br><br>**பங்குமூலதன இடர்நேர்வு**<br>i. பங்குமூலதன இடர்நேர்வானது பங்குமூலதன இடர்நேர்வில் உள்ள பெறுமதி மற்றும் அழுத்தப் பரிசோதனை என்பன ஊடாக அளவிடப்படுகின்றது.<br>ii. சொத்துப்பட்டியல் நிலை, இடர்நேர்வுக்குள்ளாகும்தன்மை, மற்றும் வணிகர் வரையறைகள் அத்துடன் வர்த்தகப்படுத்தல் செயற்பாடுகள் என்பன சட்டக வரையறைகளினுள் கண்காணிக்கப்படுகின்றன.<br>iii. இடர்நேர்வு மதிப்பீட்டுச் சட்டகத்திற்கு எதிராக பங்குமூலதன இடர்நேர்வில் உள்ள பெறுமதி, கண்காணிக்கப்படுகின்றது.<br>iv. ஆற்றல்வாய்நத சந்தை நடத்தையினை உறுதிசெய்வதற்கு வணிக அறை குரல் பதிவு நாளாந்த அடிப்படையில் கண்காணிக்கப்படுகின்றது.<br><br>**வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு**<br>i. இடர்நேர்வுக்குள்ளாகும் மட்டங்கள் சட்டக வரையறைகளினுள் கண்காணிக்கப்படுகின்றன.<br>ii. வெளிநாட்டு நாணய வணிகச் செயற்பாடு சட்டக வரையறைகளினுள் கண்காணிக்கப்படுகின்றன.<br>iii. வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வானது தேறிய திறந்த நிலை, வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வில் உள்ள பெறுமதி மற்றும் அழுத்தப் பரிசோதனை போன்ற கருவிகளைப் பயன்படுத்தி அளவிடப்படுவதுடன் சொத்து மற்றும் பொறுப்பு குழுவுக்கு/முதலீட்டுக் குழுவுக்கு/சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு/ சபைக்கு அறிக்கையிடப்படுகின்றது. |

## 54. இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

| விபரம் | ஆளுகைக் கொள்கைகள் மற்றும் முக்கிய முகாமைத்துவக் குழு | முக்கிய கட்டுப்பாடுகளும் தணித்தல் உபாயங்களும் |
|---|---|---|
| **திரவத்தன்மை மற்றும் நிதியளித்தல் இடர்நேர்வு** | | |
| திரவத்தன்மை இடர்நேர்வு என்பது நிதியியல் கடப்பாடுகள் செலுத்தவேண்டியதாகின்ற போது அவற்றை நிறைவேற்றுவதற்கு முடியாமை (நிதியளித்தல் திரவத்தன்மை இடர்நேர்வு) அத்துடன் படுகடன் பிணையங்களுக்கான சந்தை போன்ற நிதியியல் சந்தைகளில் காணப்படும் திரவத்தன்மை குறிப்பிடத்தக்களவு குறையக் கூடியமை (சந்தை திரவத்தன்மை இடர்நேர்வு) என்பவற்றின் ஒன்றிணைந்த இடர்நேர்வுகளாகும். தொகுதியானது பின்வருவன ஊடாக திரவத்தன்மை இடர்நேர்வுக்கு அடிப்படையில் உட்படுகின்றது:<br>• தொகுதியின் கடன்கள், முதலீடுகள் மற்றும் நிதியளித்தல் மூலங்கள் என்பவற்றுக்கு இடையில் நிதியளித்தல் பொருந்தாமை | **ஆளுகைக் கொள்கைகள்**<br>சந்தை இடர்நேர்வு மற்றும் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ கொள்கை<br><br>**முக்கிய முகாமைத்துவ குழு**<br>சொத்து மற்றும் பொறுப்புக் குழு | i. அரசாங்கப் பிணையங்களில் முதலீடுகளை பேணுவதற்கான (வைப்புகளின் 60%) நியதிச்சட்ட தேவைப்படுத்தல்<br>ii. திறைசேரிப் பிரிவின் மூலமான காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம்<br>iii. திரவத்தன்மை அவசர நிலைத் திட்டமிடல்<br>iv. திரவத்தன்மை சொத்து விகிதம், திரவத்தன்மை உள்ளடக்க விகிதம், தேறிய உறுதி நிதியளித்தல் விகிதம் போன்ற நியதிச்சட்ட திரவத்தன்மை விகிதத்தினை கண்காணித்தல்<br>v. இருப்பு அணுகுமுறையின் கீழ் விகிதங்களையும் பாசல் III இன் பிரகாரம் திரவத்தன்மை இடர்நேர்வு கண்காணித்தல் கருவிகளின் கீழ் திரவத்தன்மை இடர்நேர்விற்கு நிதியளித்தலுடன் சொத்து மற்றும் பொறுப்பு குழு/சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு/ சபைக்கு அறிக்கையிடல்<br>vi. இடர்நேர்வு வரையறைகளுக்கெதிராக முதிர்ச்சி இடைவெளிகளையும் நுண்ணுணர்வான இடைவெளிகளையும் கண்காணித்தல் |

| விபரம் | ஆளுகைக் கொள்கைகள் மற்றும் முக்கிய முகாமைத்துவக் குழு | முக்கிய கட்டுப்பாடுகளும் தணித்தல் உபாயங்களும் |
|---|---|---|
| **தொழிற்பாட்டு இடர்நேர்வு** | | |
| தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பது போதுமானதற்ற அல்லது தோல்வியடைந்த உள்ளகச் செயன்முறைகள், மக்கள், முறைமைகளில் இருந்து தோன்றுகின்ற அல்லது வெளிவாரி நிகழ்வுகளில் இருந்து தோன்றுகின்ற நட்ட இடர்நேர்வாகும். தொகுதியானது பின்வருவன ஊடாக தொழிற்பாட்டு இடர்நேர்வுக்கு அடிப்படையில் உட்படுகின்றது:<br>• செயன்முறை நிறைவேற்று பிழைகள்<br>• இணையப் பாதுகாப்பு நட்டங்கள்<br>• தொழிநுட்பம் செயலிழத்தல்<br>• தரவு முகாமைத்துவப் பிரச்சினைகள்<br>• மாதிரி இடர்நேர்வுகள்<br>• கணக்கீட்டு, சட்ட மற்றும் வதிவிதிப்பு இடர்நேர்வுகள்<br>• மூன்றாம் தரப்பினர்கள்<br>• மக்கள் (தொழில் நடத்தை மற்றும் தொழில் இட பாதுகாப்பு<br>• மோசடி (வெளிவாரி மற்றும் உள்ளக) மற்றும்<br>• தொழிநுட்பம் அல்லாத தொழில் இடையூறுகள் | **ஆளுகைக் கொள்கைகள்**<br>1. தொழிற்பாட்டு இடர் நேர்வு முகாமைத்துவ கொள்கை<br>2. வெளியிலிருந்து சேவைபெறும் கொள்கை<br>3. தகவல் பாதுகாப்புக் கொள்கை<br>4. தொழில் தொடர்ச்சிக் கொள்கை<br><br>**முக்கிய முகாமைத்துவ குழு**<br>தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு | **திருட்டு அல்லது மோசடி இடர்நேர்வு**<br>i. மோசடி இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தகவல் தெரிவித்தல் கொள்கைகள்/நடைமுறைகள்<br>ii. உள்ளக கட்டுப்பாட்டு கட்டமைப்பு<br>iii. நாளாந்தப் பரிசோதனைகள்/கணக்காய்வுகள்<br>iv. முக்கிய தொழிற்பாட்டு இடர்நேர்வுக் குறிகாட்டிகளைக் கண்காணித்தல்<br>v. நட்ட நிகழ்வு தரவு கண்காணித்தல்<br>vi. இடர்நேர்வுக் கட்டுப்பாட்டு சுய மதிப்பீடு<br>vii. அடிப்படைக் காரணப் பகுப்பாய்வு<br><br>**தகவல் தொழில்நுட்ப இடையூறுகளும் தரவுப் பாதுகாப்பும்**<br>i. தொழில்நுட்பரீதியான வழக்கொழிதலை குறைப்பதற்கும் முறைமைகளை தன்னியக்கமாக்கல்/தரமுயர்த்தல் தொடர்பிலான செயன்முறைகளை இனங்காண்பதற்கும் தகவல் தொழில்நுட்ப உபாயரீதியான திட்டமிடல்<br>ii. அனர்த்த மீட்பு திட்டமிடல், கொடுப்பனவு அட்டைதொழிற்துறை தரவுப் பாதுகாப்பு நியமங்களுடனான இணங்குவித்தல்<br>iii. உள்ளகக் கட்டுப்பாடு/முறைமை அணுகுவழி கட்டுப்பாடுகள்: அணுகுவழிக் கட்டுப்பாடு/கடவுச்சொல் பாதுகாப்புகள் போன்றன.<br>iv. சுயாதீன பிரதம தகவல் முறைமைப் பாதுகாப்பு முகாமையாளரின் தலைமையிலான தகவல் பாதுகாப்பு பிரிவொன்றினைத் தாபித்தல்<br>v. தகவல் பாதுகாப்பிற்கான தகவல் பாதுகாப்பு கொள்கை, தளநிலை பாதுகாப்பு நியமங்களை நடைமுறைப்படுத்துவதை தொடர்ச்சியாக கண்காணித்தல்.<br>vi. முறைமை அடிப்படையிலமைந்த நிகழ்வு அறிக்கையிடலை தாபித்தல்<br><br>**இணையப் பாதுகாப்பு இடர்நேர்வு**<br>i. இனங்காணப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகளில் இருந்தான இடர்நேர்வைக் குறைப்பதற்கு பாதிக்கப்படும் தன்மை மதிப்பீடுகளை நடாத்தி முன்கூட்டிய தடுப்பு நடவடிக்கைகளை எடுத்தல்<br>ii. இனங்காணப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகளை இல்லாதொழிப்பதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்மைப்பினை மேம்படுத்தல் மற்றும் முறையான கருவிகள் ஊடாக இயற்குமுறைவெளி/ வெளிவாரித்தாக்குதல்களை தொடர்ச்சியாக கண்காணித்தல் |

## 54. இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

| விபரம் | ஆளுகைக் கொள்கைகள் மற்றும் முக்கிய முகாமைத்துவக் குழு | முக்கிய கட்டுப்பாடுகளும் தணித்தல் உபாயங்களும் |
|---|---|---|
| **இணங்குவித்தல் இடர்நேர்வு**<br>இணங்குவித்தல் இடர்நேர்வு என்பது சட்டங்கள், ஒழுங்குவிதிகள், விதிகள், ஒழுங்குமுறைப்படுத்தல் கொள்கைக் கூற்றுகள் மற்றும் அதன் தொழில் நடவடிக்கைகளுக்கு ஏற்புடைய நடத்தை கோவைகள் என்பவற்றுடன் இணங்கியொழுகுவதற்கு தொகுதி தவறுகின்றதன் விளைவாக தொகுதி வருந்தக் கூடிய தடைகள் மற்றும் நிதியியல் நட்டங்களைக் கொண்ட இடர்நேர்வாகும். தொகுதியானது பின்வருவன ஊடாக அடிப்படையில் இணங்குவித்தல் இடர்நேர்வுக்கு உள்ளாகின்றது:<br>• அந்தரங்க மற்றும் முரண்பாட்டு நல கடப்பாடுகள் உள்ளடங்களாக ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் உரிமக் கடப்பாடுகள்.<br>• நிதியியல் குற்றம் (பணம் தூய்தாக்குதலுக்கு எதிராக, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல், இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்பு) அத்துடன்<br>• மோசமான நடத்தை (உற்பத்தி வடிவமைப்பு, பகிர்வு, சந்தை நடத்தை மற்றும் ஊழியர் துர்நடத்தை). | **ஆளுகைக் கொள்கைகள்**<br>1. இணங்குவித்தல் கொள்கை<br>2. பணம் தூய்தாக்கலுக்கு எதிரான கொள்கை<br>3. தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல்வாங்கல் கொள்கை<br><br>**முக்கிய முகாமைத்துவ குழு**<br>தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு | i. இணங்குவித்தல் அலுவலர் சபை ஒருங்கிணைத்த இடர்நேர்வு முகாமைத்துவக் குழுவுக்கு/சபைக்கு நேரடியாக அறிக்கையிடுகின்றார்<br>ii. பணம் தூயதாக்குதலுக்கு எதிரான மற்றும் உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் கண்காணித்தலுக்கான உள்ளக முறைமைகள்/ செயன்முறைகள்<br>iii. இடர்நேர்வு மதிப்பீட்டுக் கட்டமைப்பினுள் கண்காணித்தல் |

| விபரம் | ஆளுகைக் கொள்கைகள் மற்றும் முக்கிய முகாமைத்துவக் குழு | முக்கிய கட்டுப்பாடுகளும் தணித்தல் உபாயங்களும் |
|---|---|---|
| **காப்புறுதி இடர்நேர்வு**<br>காப்புறுதி இடர்நேர்வு என்பது அடிக்கடி நிகழுகின்ற அல்லது எதிர்பார்த்ததை விட பாரிய தீவிரத்தன்மையுடன் நிகழுகின்றவற்றுக்கு எதிராக தொகுதி காப்புறுதி செய்துள்ள நிகழ்வுகளுக்கான சாத்தியத்தன்மை காரணமாக இழப்பு ஏற்படுக்னிற இடர்நேர்வாகும். | **ஆளுகைக் கொள்கைகள்**<br>தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை, வங்கியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட காப்புறுதி<br>1. வங்கியாளர் நட்டோத்தரவாத காப்புறுதிக் கொள்கை<br>2. தீ மற்றும் திருட்டு காப்புறுதிக் கொள்கை<br>3. இலத்திரனியல் உபகரண காப்புறுதிக் கொள்கை<br>4. இணையத்தள பொறுப்பு காப்புறுதிக் கொள்கை<br>5. இலத்திரனியம் மற்றும் கணணிக் குற்றம் கொள்கை<br>6. பொது பொறுப்புக் கொள்கை<br>7. வாகன காப்புறுதிக் கொள்கை<br><br>**முக்கிய முகாமைத்துவக் குழு**<br>தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு | i. காப்புறுதி அறவீட்டுச் செயன்முறைகள் பொது நிர்வாக பிரிவின் கீழ் மத்தியமயப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவசியமான நடவடிக்கைகளை உரிய காலத்தில் நிறைவேற்றுவதனை உறுதிசெய்தல்<br>ii. கிளை மட்டத்திலும், வங்கி மட்டத்திலும் காப்புறுதி ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கொள்கை தானாக தொழிற்பாட்டு வரையறைகளை நிர்ணயிக்கின்றது.<br>iii. இடர்நேர்வு முகாமைத்துவ பிரிவு காப்புறுதி அறவீட்டு நிலைமைகளை மீளாய்வு செய்து தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவ குழுவிற்கு காலமுறையாக அறிக்கையிடுகின்றது.<br>iv. காப்புறுதி, உள்ள கணக்காய்வு தொழிற்பாட்டுக்கு உட்படுவதுடன் உள்ளக கணக்காய்வு பிரினால் நடாத்தப்படுகின்ற நிதியியல் கூற்று கணக்காய்வின் கீழ் நிதியியல் கூற்றுகளில் முன்மதிமிக்க ஏற்பாடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. |

## 54. இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

| விபரம் | ஆளுகைக் கொள்கைகள் மற்றும் முக்கிய முகாமைத்துவக் குழு | முக்கிய கட்டுப்பாடுகளும் தணித்தல் உபாயங்களும் |
|---|---|---|
| **உபாய இடர்நேர்வு**<br>உபாய இடர்நேர்வு என்பது முக்கிய அக்கறைதாரர் பெறுமதி அழிவு அல்லது திட்டமிடப்பட்டதை விட குறைவான பெறுமதி உருவாக்க இடர்நேர்வாகும். தொகுதியானது பின்வருவன ஊடாக அடிப்படையில் உபாய இடர்நேர்வுக்கு உள்ளாகின்றது:<br>• தொகுதியின் வெளிவாரி அத்துடன் உள்ளக தொழிற்பாட்டு சூழலில் மாற்றங்கள் (பேரண்ட பொருளாதார நிலைமைகள், போட்டிச் சக்திகள், தொழிநுட்பம், ஒழுங்குமுறைப்படுத்தல், அரசியல) மற்றும்<br>• உபாய உருவாக்கம் மற்றும் உபாய நடைமுறைப்படுத்தல் கண்காணிப்பு செயன்முறையுடன் இணைந்த இடர்நேர்வு | **ஆளுகைக் கொள்கைகள்**<br>ஒருங்கிணைந்த இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை<br><br>**முக்கிய முகாமைத்துவ குழு**<br>தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவக் குழு | i. சிரேஸ்ட முகாமைத்துவ மேற்பார்வை<br>ii. உபாயத்திட்டம் மற்றும் வரவுசெலவுத் திட்டச் செயன்முறை<br>iii. பொதுவான பொருளாதார நிலமை, போட்டியாளர் நடாத்தை என்பவற்றை கண்காணிப்பதற்கு அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி பிரிவினை நிறுவி முன்கூட்டிய தீர்மானம் எடுத்தலுக்கு உதவுவதற்காக அறிக்கையிடுதல்.<br>iv. இடர்நேர்வு மதிப்பீட்டு கட்டமைப்பினுள் கண்காணித்தல்<br>v. தொழில் தொடர்ச்சி முகாமைத்துவ முறைமையினை உறுதி செய்தல். |

### இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு →

நிதியியல் சாதனங்களிலிருந்து ஏற்படும் பின்வரும் இடர்நேர்வுகளுக்கு வங்கி உள்ளாகின்றது:

**54.1 கொடுகடன் இடர்நேர்வு**

54.1.1 கொடுகடன் தரப்பகுப்பாய்வு

54.1.1.(அ) நிதியியல் சொத்துகளின் வகுப்பு வாரியான கொடுகடன் இடர்நேர்வுக்கான தேறிய உட்படும்தன்மை

54.1.1.(ஆ) கொடுகடன் சொத்துப்பட்டியல் முகாமைத்துவம்

54.1.1.(இ) நிதியியல் சொத்துகளின் வகுப்பு வாரியாக கொடுகடன் தரம் (கடந்த கால நிலுவை)

54.1.1.(ஈ) நிதியியல் சொத்து வகுப்பு வாரியான கொடுகடன் தரம் - படிமுறை வாரியாக

54.1.1.(உ) எதிர்தரப்பு / கடமைப்பட்டவரின் தரம் வாரியாக கொடுகடன் தரம்

**54.2 திரவத் தன்மை இடர்நேர்வு**

54.2.1 திரவச் சொத்துக்களின் திரட்சி

54.2.2 எஞ்சியுள்ள முதிர்வுக்கான ஒப்பந்தக் காலம்

54.2.3 எதிர்கால நிதியளித்தலுக்கு உதவுவதற்காக கிடைக்கப்பெறுகின்ற நிதியியல் சொத்துகள்

**54.3 சந்தை இடர்நேர்வு**

54.3.1 சந்தை இடர்நேர்வு - வர்த்தகப்படுத்தல் மற்றும் வர்த்தகப்படுத்தலற்ற இடருக்குள்ளாகும்தன்மை

54.3.2 வெளிநாட்டு செலாவணி இடர்நேர்வு

54.3.3 பங்குமூலதன இடர்நேர்வு

54.3.4 வட்டி வீத இடர்நேர்வு

**54.4 தொழிற்பாட்டு இடர்நேர்வு**

# 54. இடர்நேர்வு முகாமைத்துவம் (தொடர்ச்சி)

## 54.1 கொடுகடன் இடர்நேர்வு →

